தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 59-b

திருநந்தமூர்த்தி

நாலடியார் உரைவளம்

(மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கியது)

இரண்டாம் பாகம் 201—400 பாடல்கள்.

136

தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 59-b.

நாலடியார் உரைவளம்

(மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கியது)

✲

இரண்டாம் பாகம் - 201—400 பாடல்கள்.

✲

பதிப்பாசிரியர்கள் :

ஸ்ரீ S. முத்துரத்ன முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

வித்துவான் ஸ்ரீ M. R. கந்தசாமி பிள்ளை,
தமிழாசிரியர், தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம்.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவ காரியதரிசி
ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L.,
அவர்களால் வெளியிடப்பட்டது.

பதிப்பகம் :
மகாலிங்கம் மின்சார அச்சகம், தஞ்சாவூர்.

1953.

விலை ரூ. 6-0-0.

PREFACE.

This publication entitled "NALADIAR URAI-VALAM" contains the text and three standard commentaries of "NALADIYAR", the wellknown ancient Tamil classic of four hundred stanzas dealing with Ethics, Politics and Erotics (அறம், பொருள், இன்பம்). It is needless to point out that this classic holds an equal position with "Tirukkural" in point of poetical merit and value of subject-matter.

Though several editions of this classic have appeared with some commentary or other, still there is no edition giving a faithful version of any of the three standard commentaries that now appear in this publication. The best-known among the three commentaries is that of PADUMANAR who is said to have been responsible for the classification of the four hundred verses into several sections or "Adhikaras". But his commentary has not been faithfully reproduced in any edition that has hitherto appeared, though every editor has been careful to state that his commentary is 'based' on Padumanar's. The second commentary in the present edition is by DHARUMANAR, and it sees the light of day for the first time in this edition. The commentary is found preserved only in this library and our edition is based on it. The third commentary is a judicious combination of the views of the first two commentators, expressed in clear language. The name of the author does

not find a place in the manuscript. It has therefore been named "Vilakka Urai" or the 'clear commentary' by our editors.

The work has been carefully edited by our Tamil Pandit, Sri S. Muthuratna Mudaliar, and Vidwan Sri M. R. Kandasami Pillai, Tamil Pandit, Tirthapathi High School, Ambasamudram. Parallel quotations (ஒப்புமைப்பகுதி), instances where the text is quoted as authority (மேற்கோட்பகுதி), and special notes have been added for every stanza. Lists have been appended at the end, of special usages and vocabulary occuring in the text. An alphabetical list of the beginnings of the stanzas has also been given. Sri S. Rajagopalan, Copying clerk of the Library has rendered valuable service in carefully copying the text, tracing the quotations, noting the special usages, and compiling the alphabetical list. Our thanks are due to the two Pandits and the copying clerk for their valuable services.

This publication has been issued in two volumes of convenient size. It is hoped that this edition will be found useful by scholars who have felt the need for a standard edition of the classic.

We are grateful to the Government of Madras for their timely grants that have helped us to publish this and other valuable manuscripts of our library.

Saraswathi Mahal,
Tanjore,
20—10—53.

S. GOPALAN,
Hon. Secretary.

முன்னுரை.

"நாலடியார் உரைவளம்" என்னும் இவ்வெளியீட்டில் தமிழ் இலக்கியங்களில் பிரசித்திபெற்ற 'நாலடியார்' என்னும் நானூறு பாடல்களின் மூலமும், மூன்று பழைய உரைகளும் அடங்கியிருக்கின்றன.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலைப்பற்றிப் பேசும் இவ்வரிய பழம்பெருநூல் சொற்சுவை, பொருட் சுவைகளில் தமிழகம் போற்றும் திருக்குறளுக்கு நிகரான தென்பது யாவரும் அறிந்ததே. இந்நூல் பலரால் உரை யுடன் அச்சிடப்பட்டிருப்பினும், இப்போது வெளியிடப் படும் மூன்று உரைகளும் பூராவாக இதுவரை பதிப்பிக்கப் படவில்லை. இம்மூன்று உரைகளில் அதிகமாக யாவராலும் போற்றப்படுவது பதுமனார் உரை. இவ்வுரையாசிரியரே நாலடியாரிலுள்ள நானூறு பாடல்களுக்கும் அதிகார அடைவு செய்ததாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய பெருமை உடையதாக இருந்தும், இவ்வுரை உள்ளபடி இதுவரையில் அச்சிடப்படவில்லை. ஆயினும், ஒவ்வொரு பதிப்பாளரும் தமது பதிப்பில் உள்ள உரை பதுமனார் உரையைத் தழுவியது என்று மட்டும் சொல்லத் தவறுவ தில்லை. அடுத்த உரை தருமர் என்பவரால் எழுதப்பட்ட தாகத் தெரிகிறது. இவ்வுரை முதன்முதலாக இப்போது தான் வெளிவருகிறது. மூன்றாவது உரை முதல் இரண்டு உரைகளைத் தழுவி விளக்கமான நடையில் எழுதப் பட்டிருக்கிறது. அதன் ஆசிரியர் பெயர் அவ்வுரைச் சுவடியில் காணப்படவில்லை. அதுகாரணம்பற்றி அவ் வுரைக்கு 'விளக்கவுரை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இம்மூன்று உரைகளும் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் காப்பாற்றப்பட்டுள்ள பழைய சுவடிகளிலிருந்து எடுத்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சரஸ்வதி மகால் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ S. முத்துரத்தின முதலியார் அவர்களும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளித் தமிழ்ப் பண்டிதர் வித்வான் ஸ்ரீ கந்தசாமி பிள்ளை அவர்களும் மிக்க பிரயாசையுடன் நூலின் மூலத்தையும், உரைகளையும் பதிப்பித்துள்ளனர். ஒவ்வொரு பாட்டின் உரைக்குப்பிறகு அச்செய்யுள் எடுத்தாளப்பட்ட இடங்களும், அதே பொருள் அமைந்த இதர நூல்களும் 'மேற்கோள்பகுதி' 'ஒப்புமைப்பகுதி' என்ற பெயர்களுடன் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. அநுபந்தங்களாக இந்நூலில் கண்ட பொருள்களைப்பற்றிய விசேடக் குறிப்புகளும், செய்யுட்களின் முதலடி அகராதியும் எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சரஸ்வதி மகால் எழுத்தாளர் ஸ்ரீ இராஜ கோபாலன் இந்நூல் மூலத்தையும் உரைகளையும் சுவடிகளி லிருந்து பிழையின்றி எழுதுவதிலும், மேற்கோள், ஒப்புமைப் பகுதிகளுக்கு வேண்டிய இடங்களைத் தேடிச்சேர்ப்பதிலும், விசேடக்குறிப்புகள், அகராதி இவைகளைத் தயார் செய்வதிலும் அரும்பாடுபட்டு உதவியுள்ளார். இம்மூவரும் செய்த அரிய சேவைக்கு எங்கள் நன்றி.

இவ்வரிய நூலையும், இதர நூல்களையும் வெளியிடு தற்கு உதவிபுரிந்துவரும் சென்னை அரசாங்கத்துக்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.

சரஸ்வதி மகால்,
தஞ்சாவூர்.
20—10—53.

S. கோபாலன்,
கௌரவ காரியதரிசி.

உ

நாலடியார் உரைவளம்

முகவுரை.

"தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே"

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

நாலடியார் நூற்பெருமை.

தென்மலயத்து அருந்தவன் அருளிய தமிழ் மொழிப் பரவையுள், தன்னேரில்லாச் சிறப்புடையதாகிய திருக்குற ளோடு மதித்துரைக்குந் தகுதிப்பாடு உடைய நூல் நாலடியார், என்ப.

இந்நூல் பண்டை உரை ஆசிரியருட் சிறந்தார் எனக் கருதும், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இளம் பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், பேராசிரியர், முதலிய தொல்லுரை ஆசிரியர்கள் பலராலும் எடுத்தாளப்படும் பிரமாண நூற்களில் ஒன்றாகும்.

முத்தமிழ் வளர்த்தோங்கிய சங்கங்கள் மூன்று. அவை தலை, இடை, கடைச் சங்கங்கள் என்ப. அவற்றுள், இது

கடைச் சங்கம் மருவிய நூற்களில் கீழ்க்கணக்கு நூற்றொடரில் ஒன்றென்ப.

எனவே, அதனை.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய [1]காஞ்சியோடு ஏலாதி யென்பவே
[2]கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் பாவான் உணர்க.

கீழ்க்கணக்கு நூற்களின் இலக்கணம் :—

"அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொரு ளின்ப மடுக்கி யவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்"

எனவரும் பன்னிருபாட்டியல் சூத்திரத்தானும்,

"வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவ லோடு
அம்மை தானே அடிநிமிர் பின்றே"[3]

—(தொ. செ. சூ. 236.)

பா. பேதம். [1]"காஞ்சியுட னேலாதி"
,, [2]"கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு"

[3] இதன் பொருள் :—சிலவாய மெல்லிய வாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவல் இலக்கணத்தோடும் அடிநிமிர் வில்லது அம்மையாம் என்றவாறு.

அடிநிமிரா தெனவே அம்மை யென்பது முழுவதும் ஒரு செய்யுளாதல் வேண்டும். வேண்டவே, அஃது உறுப்பன்றாகிய செல்லும், அதனை உறுப்பெனல் வேண்டுமாதலின் அடிநிமிரா தெனப்பட்ட செய்யுள் உறுப்பாக அவை பல தொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்யுளாமென்பது. சிலவாகவென்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாய்ச் சிலவாய சொற்கள், எழுத்தினான் அகன்று காட்டாது சிலவெழுத்தினான் வருவது. அடிநிமிரா என்றது ஐந்தடியின் ஏறாதென்றவாறு.

என்னும் செய்யுளியற் சூத்திரத்தானும், அதற்குப் பேராசிரியரும், நச்சினரும், உரைத்த உரையானும் உணர்க.

திருக்குறள் அமைப்புப்போல, இந்நூலும், அறப்பால், பொருட்பால், காமத்துப்பால், என மூன்று பிரிவினுள் அடங்கியதாகும்.

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, எனத் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணங் கூறுமிடத்து 'வனப்பியல்தானே' என்னும் சூத்திரவிதியால் 'அடிநிமிர் வல்லது அம்மையால்' என்றுங்கு இந்நூல் 'அம்மை' ஆமென்றுணர்க. அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையென்றாயிற்று.

அறம், பொருள், இன்பம், என்று முப்பாலில் நூல் கூறியவர் வீடு கூருரோ எனின், அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், 'வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறுர் என்று உணர்க.' என்பர். —(தொ. சிறப்பு. பா. உரையில் நச்சினர்க்கினியர்)

அஃது,

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்கு முரியவென்ப"

—தொ. செ. சூ. 106.

தாயபனுவலோடென்றது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப, வேறு இடை இடை அவையன்றியும் தாய்(தாவி)ச் செல்வதென்றவாறு. அஃதாவது பதினெண் கீழ்க்கணக்கென வுணர்க. அதனுள், இரண்டடியானும், ஐந்தடியானும், ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லியசொற்களான் வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப்பயின்று வருமாறுங் கார்நாற்பது களவழி நாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டு கொள்க. அறிந்து கொள்க என்பனவாகும்.

[1] உலகியற் பொருள் மூன்றனையுங் கூறுவான், அவற்றை மும்முதற் பொருள் என்றான். அவை இன்றி வீடு பெறுமாறு வேறு இன்மையின் வீடும் ஆண்டும் கூறினன் என்பது. அல்லாதார் வீடென்னும்

என்ற சூத்திரத்தானும், அதற்குப் பேராசிரியரும், நச்சி னார்க்கினியரும், எழுதிய உரையானும் உணர்க.

'நாலடி' என்பது, நான்காகிய அடிகளை உடையது. பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயராயமைந்து, வெண்பா யாப்பால் உற்ற இந் நூற்குக் 'கருவி ஆகுபெயராயிற்று'.

பெயர்வகை.

"முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே"

—ந. சூ. 49.

அளவினாற் பெயர் பெற்றன: பன்னிரு படலம், நாலடி நானூறு முதலாயின என்பது கொண்டு நான்கடி அளவினால் இந்நூற்கு இப்பெயர் அமைந்தது என்ப.

இனி வேறோர் வரலாறு.

பாண்டியன் அவைக்கண் வீற்றிருந்து தமிழாராய்ந்த எண்ணாயிரம் சமணமுனிவர் பஞ்சத்தால் வருந்தி, அவையை விட்டு நீங்கும்போது தாமிருந்தபீடத்தின்கீழ் ஒவ்வோர் பாடலை எழுதிவைத்துப் பாண்டியனிடம் அறிவிக்காமல் சென்றனர்.

பொருண்மை செய்யுட்கண் வாராமை அதுகூறுன் என்ப. அங்ஙனம் கருதின் அறம் முதற்பொருளும் செய்யுட்கள் வாரா என மறுக்க. —என்பர் பேராசிரியர்.

மும்முதற் பொருள், எனவே அவற்றது துணைப்பொருளாகிய அறநிலை இன்மையும், பொருள்நிலை இன்மையும், இன்பநிலை இன்மையும், அடங்கு மென்ப. உலகியற் பொருள் மூன்றனையும் இவை எனக்கூறி அவற்றை விடுமாறுங் கூறவே வீடுங் கூறிற்றாம்—என்பர். நச்சினார்க்கினியர்.

பின், அரசன் முனிபுங்கவர்களைக் காணாது வருத்தமுற்று அவர்கள் வீற்றிருந்த தவிசினை அப்புறப்படுத்த அதன்கீழ்ச் சிறுமுறியில் ஒவ்வொரு பீடத்தின் கீழும் ஒவ்வொரு 'வெண்பா' எழுதிவைத்திருப்பதைக் கண்டு, அப்புலவர்களைப் பிரிந்த வருத்தத்தினால் அவற்றை வையை ஆற்றில் எறிய ஏவினன். அவ்வாறு செய்யப்பட்டவற்றுள் நானூறு பாடல்கள் ஆற்றின் வழிச்செல்லாது எதிரேறிச் சென்றன. இத்தெய்வத் தன்மையை அரசன் உணர்ந்து பெரிதும் வியப்புற்று, அவற்றை எடுத்து ஒருநூலாக்கி 'நாலடியார்' எனப் பெயரிட்டு வழங்கினன் என்ப.

"மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
எண்ணி இருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்"

என்னும் பாவான் ஓர்க.

இந்நூலை எண்ணாயிரம் முனிவர் பாடினர் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்-

"எண்ணா யிரவ ரிசைத்த வெண்பா நானூறுங்
கண்ணாமிந் நாலடியைக் கற்றுணரத்—தண்ணார்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த
திருக்குருகூர் மாறனையே தேர்"

இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது என்பதற்கு

"நானூறும் வேதமா நானூறு நானூறு
நானூறுங் கற்றற்கு நற்றுணையா—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு"

என்னும் பாவினால் உணர்க.

பழமொழிகள்.

திருக்குறளையும், நாலடியையும், சேர்த்துக் 'கபில பாணர்'

என்பதுபோலத் தொன்றுதொட்டுக் கூறுவதுண்டு.

அவற்றுள் சில வருமாறு :—

"பாலு நெய்யு முடலுக் குறுதி
வேலு வாளு மடலுக் குறுதி
ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி"

"பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்"

"[1]நாலடி இரண்டடி கற்றவனிடத்து
வாயடி கையடி அடிக்காதே"

என்பனவாம்.

இனி,

"நாலடி வள்ளுவ ராமெயிப் பாலை நடந்த பெருங்
காலடி மேலடி மானடி யேகட் டுரலிற் பட்ட
பாலடி சில்வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகு நன்றே"

என அரங்கக் கோவைக்கண் உள்ள உடன்போக்குத்துறைச் செய்யுள். இது, அஃதாவது தலைவன் அடிச்சுவட்டின் மீது தலைவி அடிவைத்து நடக்குங்கால் நான்கு அடியும் இரண்டடியாய்த் தோன்றியதற்கு நாலடியாரையும், திருக்குறளையும், உவமமெடுத்துக் கூறிய நயம் காண்க.

இச்சிறப்புச் செய்யுள்களில் நாலடியார் முதலில் கூறப்படுவதால் அதன் அருமை திருக்குறளுக்கு ஒப்போமிக்கோ என்றுகொள்ளற்பாலது. பொருட்செறிவில் மிகச்சிறந்த திருக்குறளில் உள்ள அதே பொருள் காவியச்சுவை மிகுதி

---

[1]நாலடி, குறள், கற்றவனிடத்து வாய் பேசாதே, என்றொரு பொருளும்; நாலடி, இரண்டடி (சிலம்பப்) படைப்பயிற்சியில் நாலடி இரண்டடி கற்றவனிடத்து கையினால் அடிக்காதே என்றொரு பொருளும் தொனித்தல் காண்க.

யுடன் நாலடியில் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

அதிகார அடைவு செய்தவர்.

'வளங்கெழு' என்னும் பாயிரத்தால் பாலும், இயலும் அதிகார அடைவு செய்தவர் 'பதுமனர்' என்பதும், அவரே உரை விரித்துளார் என்பதும் புலனும்.

உரை ஆசிரியர்—தருமர் என்பவர், திருக்குறளுக்கும் உரைவிரித்து, இந்நூற்கும் உரை எழுதி இருத்தல் கூடுமென ஊகித்தற்கிடனுண்டு.

திருக்குறட் கருத்துக்களும், சொற்களும், இந்நூலகத்துப் பலவிடத்துக் காணலாம். அவ் அவ்விடங்களில் ஏற்றபெற்றி குறிக்கப்பெற்றுள்ளன.

கருத்துக்கள் வேறுபடுவன சில வருமாறு :—

"நல்கூர்ந்த மக்கட் கணிகல மாவ தடக்கம்"

—நாலடி. 241.

"எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து"

—குறள்.

"வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்—ஆங்கே
இனந்தீது எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது"

—நாலடி. 245.

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல்"

—குறள். 453.

"அற்றார்க் கொன் றாற்றாதான் செல்வமிகுநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

—குறள். 1007.

"கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்று இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்து
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்துள்
ஏதிலான் துய்க்கப் படும்"

—நாலடி. 274.

தழுவி உரைத்தவற்றுட் சில :—

"கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்"

—குறள். 1061.

"கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளஞ் சுடுமால் எவன்கொலோ
கொள்ளுங்கால் கொள்ளுங் குறிப்பு"

—நாலடி. 304.

"இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும்"

—குறள். 1069.

"கரப்பவர்க்கு யாங் கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்"

—குறள். 1070.

"ஈயாய் எனக்கொன் றிரப்பா னேல்
மாயாநோய் மாற்றி விடின்"

—நாலடி. 304.

பாக்களிலுள்ள சிறப்பான குறிப்புக்கள் ;—

சங்க காலத்துக்குமுன் வழங்கிய சொற்கள்:—

'கணக்காயர்'—

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்—மற்றதனை

நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்”

“கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோர் சூத்திரம்”

—நாலடி. 314.

“கணக்காயனார் மகனார் நக்கீரனார்”
என்பதும் ஆம்.

பாடபேதம்.

“கட்கினியாள் காதலன் காதல் வகைபு னைவாள்
உட்குடையாள் ஊராண் இயல்பினாள்”

—நாலடி. 384.

முன்பதிப்புக்களில் கொண்டபாடம் ‘ஊர் நாண் இயல்பினாள்’. இவ்வுரை ஆசிரியர்கள் மூவரும் கொண்டபாடம் ஊராண் இயல்பினாள் என்பதே ஆகும். இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொ. சொ. சூ. 57 உரையில் “உட்குடையாள் ஊராண் இயல்பினாள்” எனவெடுத்துக்காட்டிய படியே ஆகும்.

“உட்குடையாள் ஊராண் இயல்பினாள்” என்ற பாடத்தை எடுத்துக்காட்டுவர். “மயிலைநாதர்”

—நன். பொது. சூ. 4 உரை.

யாப்பமைப்பு.

தொல்காப்பியம், வீரசோழியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலவிருத்தி, ஆகிய இன்னோரன்ன நூற்களின் உரை ஆசிரியர்களால் இந்நூல் யாப்பின் அமைப்புக்கு உதாரணமாக எடுத்தாளப்படுகின்றமையால் இந்நூலின் தொன்மை விளங்காநிற்கும்.

புறத்திரட்டு.

சங்க காலமுதல் உள்ள இலக்கியங்களிலிருந்து திரட்டப்

பட்ட இந்நூலில் 1570 செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் நாலடியாரிலிருந்து இந்நூலில் 200ன் மேற்பட்ட பாக்கள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

பாராட்டிக் கூறும் புலவர்.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்"

என்னும் நாலடியார் கருத்தமைய—

இடைநிலை யாம்பொரு ளுண்டேன் முதனிலை எய்தறமும்
கடைநிலை யாமின் பமுமேவு மென்றனக் காதலரென்
றடைநிலை யாம்பதத் தெம்மான் திருவெங்கை ஆயிழைக்குத்
தொடைநிலை வார்குழற் பூங்கொடியே சென்று சொல்லுகவே

—*வெங்கைக்கோவை, சிவப்பிரகாசர்.*

குறட்பாக்களோடு அமைவனவற்றுட் சில.—

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீரப் பேதையார் நட்பு"

—*குறள்.* 782.

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு"

—*நாலடி.* 125.

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்"

—*குறள்.* 146.

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்தார நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்று
அச்சத்தோ டிந்நாற் பொருள்"

—*நாலடி.* 82.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

—குறள். 338.

"சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து"

—நாலடி. 30.

பண்டை உரை ஆசிரியர்கள் உரைகூறத் தொடங்கு மரபு :-

பரிமேலழகர்

அதிகாரப் பொருள் கூறுமிடத்து, 'அஃதாவது' என்று தொடங்குவர்.

நச்சினார்க்கினியர்

அதிகாரப்பொருள் கூறுமிடத்து; 'நிறுத்தமுறையானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின்றார் ஆதலின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' என்றும், சூத்திரப் பொருள் கூறுமுன் 'என்பது சூத்திரம்' எனவும், 'இதன் பொருள்' எனவும், கூறுவர்.

பேராசிரியர்

'இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின்', என்றும், 'என்பது சூத்திரம்' எனவும், 'இதன்பொருள்' எனவும் கூறுவர். 'அஃதியாதோ எனின்', எனவும் புகல்வர்.

இளம்பூரணர்

'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின்', என்றும், 'பொருள் என்பது யாதோ எனின்' என்றும், 'இதன் பொருள்', எனவும் தொடங்குவர்.

நக்கீரனர்

'என்பது, என்னுதலிற்றோ வெனின்' என்றும்; 'இதன் பொருள்' எனவும் தொடங்குவர்.

சேனவரையர்

'நிறுத்த முறையானே சொல்லுணர்த்திய எடுத்துக் கொண்டார்' எனவும், 'இதன்பொருள்' எனவும் தொடங்குவர்.

இனி, இந்நூல் உரை ஆசிரியர்கள் கூறுவன:—

'அஃதாவது' என்றும், 'என்பது' எனவும் 'என்றது', எனவும் தொடங்குவர். இவ்வாறு தொடங்குவதால் அவ்வுரையாசிரியர்களோடு ஒருங்குவைத்து எண்ணத்தக்கார் என்பது புலனாகின்றது.

உரை விசேடம்.

"வைகலும் வைகல் வரக்கண்டும்"

—இதன் விரிவுரை. 39.

[1]"கல்வி கரை இல கற்பவர் நாள்சில"

—இதன் விரிவுரை பதுமனர். 135.

"ஆற்றுந் துணையும்"

—இதன் உரை. 196.

---

[1] 'கரையில்லாத கல்வியாவன' எனத்தொடங்கி, அறுபத்துநான்கு கலைகளின் விரிவுரை கூறியும், 'வேறுபடுத்து ஆராய்ந்து அமைவுடைய கற்கலாவது' எனத்தொடங்கி, கவிகளாலே சோகரசம், வீரரசம், முதலியன பேதங்கள் உளவாகச் சித்திரித்துச் சொல்லப்பட்ட காவிய நாடகங்களா

[1]'பழவினை' என்பதற்கு விளக்கங்கூறுவது.

"கடல் சார்ந்தும்"

—இதன் உரை. 244.

"நன்னிலைக் கண்"

—இதன் உரை பதுமனார். 248.

இவை விரிவும், நயமும் உற்ற உரைப்பகுதிகளாகும். மற்றுமுள்ள பாடல்கள் விரிவஞ்சி விடப்பெற்றன.

நாலடியார் உரைவளம்.

திருக்குறளுக்கு உரை வரைந்த ஆசிரியர் [2]பதின்மர் என்ப. மற்றுஞ்சில ஆசிரியர்களும் உரை எழுதி இருத்தல் கூடுமென்பது அவ்வுரைப் போக்கால் விளங்குகின்றது. அஃதேபோல, நாலடியாருக்கும் உரைவகுத்த ஆசிரியர் பலர் இருத்தல்கூடும். அவருள், தருமர், பதுமனார், விளக்கவுரை காரர் என, மூன்று உரை ஆசிரியர்கள் வரைந்துதவிய உரைகளை, இங்கே தொகுத்து வெளியிடலால் இதற்கு "நாலடியார் உரைவ்ளம்" எனப் பெயரிடப்பெற்றது.

உரைச் சுவடிகளின் வரலாறு.

பேரரசர் சரபோஜி மன்னன் தொகுத்த நூற்பெரு மன்றத்துள் (சரஸ்வதி மகாலில்) நாலடியார் உரையுடன் அமைந்த ஏட்டுச்சுவடிக்ள் மூன்று உள்ளன.

லும்' எனப் பலவாகப் புதியன விரித்துக்கூறியது படித்துணரத்தக்கது.

[1]பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், உவமானம், அர்த்தாபத்தி, அபாவம், எனப் பகுத்துரைப்பன ஆராய்தற்குரியது.

[2]"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தார் இவர்"

அவற்றுள், [1] தருமர் உரையுடன் கூடிய சுவடி 1. (இது பதவுரை) முற்றும் உள்ளது

பதுமனூர் உரையுடன் அமைந்த சுவடி 1. (இது பொழிப்புரை) இது 136 பாடல்களுக்குமட்டும் உள்ள உரைப் பிரதி.

உரை ஆசிரியர் பெயர் குறிக்கப்படாமல் அமைந்த உரைப்பிரதி 1. இது 297 பாடல்களுக்குமட்டும் உரையுடன் (பதவுரை) கூடியது.

இவ்வுரை ஆசிரியர் பெயர் விளங்காமையால் விளக்க வுரை எனப் பெயரிடப்பெற்றது.

இவற்றை ஒப்புநோக்குதற்குப் பல்வேறு இடங்களில் ஆராய்ந்து கிடைத்த பிரதிகள் வருமாறு :—

(1) டாக்டர் உ. வே. சாமினதய்யர் அவர்கள் சேகரித்து வைத்தது. அடையாறு கலாக்ஷேத்திரத்தில் உள்ள பிரதி 1. (இது தருமபுர ஆதீனத்துப் பிரதி நாலடி விருத்தி என்று பெயர்)

(2) சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி (பொழிப்புரை)

(3) ஷை புத்தகசாலைப் பிரதி 1. (பதவுரை)

(4) நாலடியார் தேவருரை பிரதி 1. அண்ணமலைப் பல்

---

[1] தருமர் உரைபற்றி ஸரஸ்வதி மகால் தமிழ்ச் சுவடிகளின் விவர மடக்கிய காட்லாக்கைத் தயாரித்த பண்டிதர் L. உலகநாத பிள்ளை கூறியிருப்பது வருமாறு :— "இதில் முழுவதும் இருக்கிறது. இவ்வுரை சிறந்ததாகக் காணப்படுகிறது. 'சிலமுனிவர்' என்னும் முதற் குறிப்புடைய செய்யுளில் "கண்டான் பொருடான் பயனுரைத்தான் காதலித்துத் தண்டார்ப் பொறைத் தருமன் தான்" எனவந்திருப்பதைக் கொண்டு இவ்வுரை செய்தவர் 'தருமர்' என்பவராய் இருத்தல் வேண்டு மென்று கருதப்படுகின்றது, இவ்வுரை அச்சிடப்படவில்லை".

கலைக்கழகம்.

(5) நாலடிப் புகழ்ச்சி. பிரதி 1. இது நண்பர் ஒருவரிட மிருந்து கிடைத்தது.

இவற்றுள் 4, 5ம் பிரதிகள் ஒப்பு நோக்குதற்குரியதாக வில்லை. பதுமனார் உரை 136ஆம் பாடல்களுக்கு மேற்பட்ட பகுதியையும், விளக்க வுரை 297ஆம் பாடல்களுக்கு மேற் பட்ட பகுதியையும் அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தக சாலைப் பிரதியையுங்கொண்டு பூர்த்தி செய்துகொள்ளப் பெற்றது.

பிறமொழிப் புலவர் கூறுவது :—

Dr. G. U. Pope. இவர் தாம் எழுதிய நாலடியார் பதிப் புரையில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

"கடவுள் வாழ்த்துப் பாடலைத்தவிர வேறு இடங்களில் கடவுளைப்பற்றிக் கூறவில்லை. எனினும்; சில தெய்வங்களைப் பற்றியும், மக்களின் பொதுவான நம்பிக்கைகளைப்பற்றியும், கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் சிரிய ஒழுக்கத்தைப்பற்றிய கருத்துக்களும் மக்களாவார் நல்லொழுக்கத்தினால் ஈடுபடவேண்டிய கடமை யைப்பற்றியும், மிக்க வன்மையுடனும், திருத்தமாகவும் கூறி யுள்ளார்.

முடிவில் இத்தகைய சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார் தனிப்பட்ட பேரின்பத்தை எய்து வர்களென நான் கருதுகிறேன். அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும், நாலடியுமே ஆகும்."

நாலடியாரின் காலம்.

நாலடியாரின் காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள்

நிச்சயமான ஓர் முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை.

(1) கடைச் சங்கநூற்களைத் தொகுத்துக்கூறும் வெண் பாவில் நாலடியார் முதலில் கூறப்பட்டுப் பின் மற்றப் பதினென் கீழ்க்கணக்கு நூற்கள் கூறப்பட்டிருப்பதால், நாலடியாரும் கடைச் சங்க நூற்களில் ஒன்று என்ற முடிவுக்குப் பெரும்பான்மையோர் வந்துள்ளனர். கடைச்சங்க காலம் கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றுண்டில் முடிவடைந்தது என்று நிச்சயித்தற்குப் போதிய சான்று உள்ளது.

சீத்தலைச்சாத்தனுர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர் என்பது சங்க நூற்களாகிய எட்டுத்தொகை நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும், புறநானூற்றிலும், இவருடைய பாக்கள் இருத்தலாலும், 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' எனவும், 'நன்னூற் புலவன்' எனவும், சிலப்பதிகாரத்துச் சிறப்பித்துக் கூறப்படுதலாலும், திருவள்ளுவமாலையில் சாற்றுப்பாக்கள் தந்த புலவர் வரிசையில் இவரும் இருத்தலாலும் நிச்சயிக்கப்படுகிறது "சீத்தலைச் சாத்தனுரால் இயற்றப்பட்ட மணிமேகலை" என்று பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் கூறியிருத்தலால், 'மணிமேகலை' சங்ககாலத்தில் ஏற்பட்டதென்பது நிச்சயிக்கப்படுகிறது. சீத்தலைச்சாத்தனுரும், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும், தங்கள் நூற்களை ஒருவருக்கொருவர் உரைத்தும் கேட்டும் இருந்தனர் என்பது "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசால் அடிகள் அருளக், கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" எனச் சிலப்பதிகாரப் பதிகத்திறுதியிலும், "இளங்கோவேந்தன் அருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமேகலைதுற, வாறைம் பாட்டினுள் அறியவைத் தனன்என்" என மணிமேகலைப் பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால் தெளிவாகிறது.

இளங்கோவடிகளின் முன்னவனுகிய "செங்குட்டுவன்" பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் சமைத்து

விழாக் கொண்டாடிய காலத்து இலங்கை மன்னனாகிய 'கயவாகு' என்பவன் உடனிருந்தனன் என்று சிலப்பதிகாரம் வரந்தரு காதையால் தெரிவதால் 'கயவாகு'வின் காலமே இளங்கோவடிகள், சாத்தனார், இவர்கள் காலமாக விருத்தல் வேண்டும். 'மகாவம்சம்' என்னும் இலங்கைச் சரித்திர நூலுள் 'கயவாகு' என்ற பெயருடை அரசர் இற்றைக்கு 800 ஆண்டுகட்கு முன்பு ஒருவரும், 1800 ஆண்டுகட்கு முன்பு ஒருவரும் விளங்கினர் எனக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. சிலப்பதிகாரம் சோழர்கள் புகார் நகரத்தைத் தலை நகராகக் கொண்டு அரசியல் நடாத்திய காலத்தியதாதலால், அது 800 வருடங்கட்கு முந்தியதெனக் கொள்ளல் ஏற்புடைத்தன்று. ஆகவே, 1800 ஆண்டுகட்கு முன்பிருந்த 'கயவாகுவே' சங்கப்புலவர் சீத்தலைச் சாத்தனார் காலத்தவன் என்பது தெள்ளிதின் புலனாகும். இந்த முடிபு திரு. Dr. உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் சிலப்பதிகார முகவுரையிற் கூறப்பெற்றுள்ளது. ஆதலின், நாலடியார் கடைச்சங்ககாலமாகிய இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முந்தியகாலத்தில், ஏற்பட்ட நூல் என்பது பெரும்பாலோர் துணிபு.

(2) இதற்கு மாறாக இம்முடிவை ஒப்புக்கொள்ளாத பல அபிப்பிராயங்களும் இப்போது நிலவி வருகின்றன:

i. பதினெண் கீழ்க்கணக்குப்பற்றிய வெண்பா பிற் காலத்து ஏற்பட்டிருக்கலாம் அதை நிச்சயமான ஓர் ஆதார மாகக் கொள்ளல்கூடாது. ஆதலின், நாலடியாரின் காலத்தை வேறு ஆதாரங்களைக்கொண்டே நிச்சயித்தல் வேண்டும். நாலடியாரில் உள்ள செய்யுட்கள் சமண முனிவர்களால் இயற்றப்பட்டவை என்பதற்கு ஆதாரமான சிறப்புப்பாயிரப் பாடல்களும், அதைப்பற்றிய கர்ணபரம்பரைச் செய்திகளும், பழைய [1] சுவடிகளில் காணப்படுகின்றன.

---

[1] சரஸ்வதி மகால் நூல் நிலையச்சுவடிகளில் No. 82 நாலடியார் மூலம் மிகப் பழமை உடையதாகக் காணப்படுகிறது. ஏறக்குறைய இற்றைக்கு

சமண முனிவர்கள் பாண்டிநாட்டை விட்டுச் சென்றது சம்பந்தர் காலம் என்பது பிரசித்தம். ஆதலால், நாலடியார் சம்பந்தர் காலத்தில் ஏற்பட்டிருத்தல்கூடுமென்பர் ஒரு சாரார். தஞ்சை சரஸ்வதி மகால் சுவடிகளை ஆராய்ந்து சுவடிகளைப்பற்றிய குறிப்புகளுடன் கூடிய "சுவடித் தொகுப்பு நூல்" எழுதிய பண்டித L. உலகநாத பிள்ளை அவர்கள் 'சம்பந்தர்' காலத்தில் இந்நூல் ஏற்பட்டிருத்தல் கூடுமெனக் கருதுகிறார். ஆனால் எண்பெருங் குன்றத்துச் சமணமுனிவர் இயற்றிய இந்நூல் யாவராலும் வேளாண் வேதமெனப் போற்றப்படுதலால், தென்னாட்டில் சமணம் தழைத்தோங்கிச் சமணமுனிவர் தவவலிமை உன்னத நிலையில் இருந்தகாலத்தில் இது ஏற்பட்டதென்று கொள்வது பொருந்துமே அல்லது சமணம் குன்றிச் சமண முனிவர்கள் தோல்வியுற்று நாட்டைவிட்டு அகன்ற காலத்தில் ஏற்பட்ட தென்று கூறுதல் பொருந்தாது.

எண்பெருங்குன்றத்துச் சமணமுனிவர் பஞ்சம் வந்த வோர் காலத்தில் பாண்டியன் அவைக்கு வந்து, அவனால் உபசரிக்கப்பட்டுத் தங்கினர் என்றும், அவர்கள் பாண்டிய னிடம் விடைபெற்றுக்கொள்ளுதல் இயலாதென அஞ்சி விடைபெற்றுக் கொள்ளாமலே ஊரைவிட்டுப் போயினர் என்றும், அவர்கள் போன பின்பு ஒரு சமயம் அவர்கள் அமர்ந்திருந்த ஆசனங்களைப் புரட்டிப் பார்க்க அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஓலையில் ஓர் பாடலை எழுதிப் போந்தது தெரிந்ததென்றும், அதை அரசன் எடுத்து அவற்றின் பொருளில் உள்ள உண்மையைச் சோதிக்க எண்ணி அவற்றை வைகையாற்றிற்போட அவற்றுள் 400 பாடல்கள் கரையெதிர் ஏறியதைக்கண்டு ஆச்சரியப்பட்டு

---

400 வருடங்கட்கு முன்பு எழுதப்பட்டதென அதன் தோற்றத்தைக் கொண்டு ஊகித்தற்கிடனுண்டு. இதில் எண்பெருங் குன்றத்தின் பெயர்கள் அடங்கிய வெண்பா சிறப்புப்பாயிரத்தில் காணப்படுவதோடு முடிவில் 'எண்பெருங்குன்றத்து எண்ணாயிர முனிவரும் செய்த, 'வையை' ஆற்றிற்கு எதிராக நடந்த நாலடி நானூறும்' என்றும் எழுதப்பட்டுள்ளது.

அந்த 400 பாடல்களையும் சேகரித்தான் எனவும் கர்ண பரம்பரையும், பழைய பாட்டின் பொருளுமாகும். இப்படி நேர்ந்த காலம் சம்பந்தர் காலத்தில் நடந்திருத்தல் கூடாது. ஏனெனில் அப்போது சம்பந்தர்எழுதிய தேவாரப்பதிக ஏடே எதிர்சென்றதேயன்றி, சமணமுனிவர் இட்ட ஏடு எதிர் செல்லவில்லையென்பது பிரசித்தம். அப்போது அவர்களால் நாலடியார் எழுதப்பட்டிருந்தால் அதை மக்கள் ஆதரிக்க இடமில்லை. ஆகையால் நாலடியார் சம்பந்தர் காலத்தில் ஏற்பட்டதென்று கொள்வது சரியென்று தோன்றவில்லை.

ii. நாலடியாரில் பெருமுத்தரையர் என்னும் செல்வம் குறையாத வள்ளல்களைப்பற்றி 200-வது பாட்டிலும், 296-வது பாட்டிலும் கூறப்பட்டுள்ளது. அப்பாடல்களில் 'எக்காலத்திலும் இரவாதவர் வறியராயினும் பெருமுத்தரையருக்கு ஒப்பாவார்' என்றும், 'ஈதலிற் சிறந்த பெருமுத்தரையர் இடும் உயர்ந்த விருந்துக்குக் காத்திருப்பவரைக் காட்டிலும், இரவாதார் உண்ணும் நீரும் அமுதத்திற்கு ஒப்பாகும்' என்றும் பொருள் அடங்கியுள்ளது.

'பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறன்' என்பவனைப் பற்றிய புகழ்ச்சிப் பாடல்கள் தஞ்சைக்கு அடுத்த செந்தலைக் கோயில் கற்றூண்களில் வெட்டப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களில் இவனது வெற்றிகளும் பிறவும், பாராட்டிக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், இவனது வள்ளற்றன்மை இதில் குறிக்கப்படவில்லை. எனினும், புலவர் பலர் புகழ்ச்சிக் குரியவன் ஆதலின் இவன் கொடைக்குணம் வாய்ந்தவன் என்பது ஊகிக்கப்பெறும். இக்கல்வெட்டுகளைப்பற்றி எழுதியிருக்கும் திரு T. A. கோபிநாதராயர் அவர்கள், 'இச்சாசனத்தில் கூறப்பட்ட முத்தரையன் எக்காலத்தான் என்பது விளங்கவில்லை' என்று கூறியபோதிலும், 'எழுத்துக்களின் வடிவைக்கொண்டும், இந்தச் சாசனத்தில் "பல்லவன் வெல்லத் தென்னன் முனையைக் கெடச் சென்ற மாறன்" என்று கூறப்பட்டிருப்பதாலும் இவன் பல்லவர்கட்கு உட்

பட்ட ஓர் சிற்றரசனாகவிருத்தல் வேண்டும்' என்றும், "பெரும்பிடுகு" என்னும் பெயர் பரமேசுர வர்மப் பல்லவனுக்கு ஏற்பட்டிருக்கும் ஓர் பெயராதலானும், பேரரசர் பெயரைச் சிற்றரசர் தாங்கும் மரபிருத்தலானும், இவன் முதல் பரமேசுரவர்மன் காலத்தவன் என்று நிச்சயிக்கலாம்' என்றும் கூறியிருக்கிறார். ஆதலின், இம்முத்தரையர் கி. பி. 8வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசுபுரிந்த சிற்றரசர் என்ற முடிவுக்கு வந்துள்ளார். இவரே நாலடியாரில் கூறப்பட்டார் என்றுகொண்டு நாலடியார் 8-ம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பர் சிலர். ஆனால் நாலடியாரில் குறிப்பிடப்பட்ட 'பெருமுத்தரையர்' என்பார் செந்தலைக் கல்வெட்டில் கண்ட முத்தரையரா? என்பது நிச்சயிப்பதற்கில்லை. நாலடியாரில் முத்தரையர் என்று ஓர் மரபின் பெயர் கூறப்பட்டிருக்கிறதே யன்றி ஓர் குறிப்பிட்ட அரசன் பெயர் கூறப்படவில்லை.

மேலும், பெருமுத்தரையர் என்ற சொல்லுக்குச் சிறப்புரை கூறுமிடத்துப் [1]பதுமனார்:— 'நான்கு மரபுகளிலும் முற்பட்டிருக்கும் தலைமையுடையார் என்பாருமுளர்' என்று கூறியுள்ளார். செந்தலைக் கல்வெட்டுக்களில் முத்தரையர் வள்ளன்மை சிறப்பாகக் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டைக்கொண்டு நாலடியாரிற் கண்ட முத்தரையர் காலத்தைக்கொள்வதற்கோ அதைக் கொண்டு நாலடியாரின் தொன்மைக்கான பல ஆதாரங்களை எதிர்ப்பதற்கோ போதுமான வன்மை இல்லை. மிகப்பழைய உரை ஆசிரியர்கள் அனைவரும் சங்க காலத்திய இலக்கிய, இலக்கணங்கட்கு எடுத்துக்காட்டாக நாலடியாரின் பாக்களையே பெரிதும் எடுத்து ஆண்டிருப்பதால் அதன் தொன்மையை இலேசில் மறுத்தல் கூடா. மிக்க வன்மையான ஆதாரங்கள் இருந்தாலன்றி நாலடியார் சங்ககால இலக்கியம் என்று கொள்வதே பொருந்தும்.

---

[1] 296-பாடல் உரை.

உதவிய அன்பர்கட்கு நன்றியுரை.

நாலடியாரின் பிற்பகுதிப் பாடல்கள் 200ம் நன்முறையில் செப்பஞ்செய்து எழுதி உதவிய அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திருவாளர் M. R. கந்தசாமி பிள்ளை அவர்கட்கும், இந்நூலின் முற்பகுதியை எழுதி உதவிபுரிந்த சரஸ்வதி மகால் நூல் நிலையம் எழுத்தாளர் திருவாளர் S. இராஜகோபாலன் அவர்கட்கும் எனது நன்றி உரியதாகுக. இந்நூல் வெளியீடு காரணமாகப் பல்வகையாலும் தொன்மையாகவே உதவி புரிந்துவரும் பிர்ம்மஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரியார் B. A., அவர்களுக்கு நமது நன்றி உரித்தாகுக. இதுவும், இன்னோரன்ன நூற்கள் பலவும் வெளியிடற்குப் பணித்து உதவி புரிந்துவரும் 'சரஸ்வதி மகால் நூல் நிலையம்' கவுரவ காரியதரிசி பிர்ம்மஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்கட்கு எனது நன்றி உரித்தாகுக. இத்தகைய நூற்கள் வெளியிடற்குப் பேருதவி புரிந்துவரும் சென்னை அரசாங்கத்துக்கு நமது நன்றி என்றும் உரித்தாகுக.

சரஸ்வதி மஹால்,
தஞ்சை.
20—10—53.

S. முத்துரத்ன முதலியார்,
பதிப்பாசிரியர்.

[illegible]

[illegible]

[illegible]

நாலடியார் அதிகார அட்டவணை.

[பிற்பகுதி]

(21 முதல் 40.)

தொடர் எண். பக்க எண்.

பொருட்பால்

2. நட்பியல்.

21. சுற்றந்தழால் 1
22. நட்பாராய்தல் 22
23. நட்பிற் பிழைபொறுத்தல் 46
24. கூடாநட்பு 67

இன்பவியல்

3. தலையின்பவியல்.

25. அறிவுடைமை 86
26. அறிவின்மை 113
27. நன்றியில் செல்வம் 135

4. துன்பவியல்.

28. ஈயாமை 157
29. இன்மை 179

30. மானம் 200
31. இரவச்சம் 219

5. பொதுவியல்.

32. அவை அறிதல் 239

6. பகையியல்

33. புல்லறிவாண்மை 260
34. பேதைமை 278
35. கீழ்மை 297
36. கயமை 315

7. பன்னெறி.

37. பன்னெறி 337

3. காமத்துப்பால்.

1. இன்ப துன்ப இயல்.

38. பொதுமகளிர் 356

இன்ப இயல்.

39. கற்புடை மகளிர் 377
40. காமநுதலியல் 401

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள், நூலுறுப்புக்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா, அகம்—அகநானூறு.
அசை—அசையோத்து.
அடியார்க்—அடியார்க்குநல்லார்.
அதி—அதிகாரம், அதிகரணம்.
அம்பிகாபதி—அம்பிகாபதிக் கோவை.
அயோத்தி—அயோத்தியா காண்டம்.
அரசு—அரசாட்சிச் சருக்கம்.
அரசி, அரசாட்சி—அரசாட்சிப் படலம்.
அரும்—அரும்பதவுரையாசிரியர். (சிலப்)
அலங்கார—அலங்காரப்படலம்.
(கலிங்) அவதாரம்—
அவி—அவிரோதவுந்தியார்.
(கந்த) அவைபுகு—
அறநெறி—அறநெறிச்சாரம்.
(தாயு) ஆகார—
ஆசிரிய—ஆசிரியமாலை.
ஆசீவக—ஆசீவகவாதச் சருக்கம்.
ஆத்தி—ஆத்திசூடி.
ஆரணிய—ஆரணியகாண்டம்.
திருப்பாட்டு சுந்தரர்) ஆரூர்—
ஆற்றுப்—ஆற்றுப்படலம்.
இ. கொ.—இலக்கணக் கொத்து.
இடைச்—இடைச்சொல்லியல்.
(விநாய) இந்திரசாப—
இந். வதை—இந்திரசித்து வதைப் படலம்.
இரத—இரதநூபுர சக்கரவாளச் சருக்கம்.
இராமாவதாரம்.
இ. வி.—இலக்கணவிளக்கம்,
இளம்—இளம்பூரணர்.
இன்—இன்னிலை.
இன்னா—இன்னாநாற்பது.
இனிய, இனியவை—இனியவை நாற்பது.
இறை—இறையனாரகப் பொருள்.
உஞ்சை—உஞ்சைக்காண்டம்.
உதய—உதயகுமாரன் அம்பலம் புக்ககாதை.
உபகாரப்—உபகாரப் படலம்.
உபதேச ரத்தின மாலை.
உவம—உவமவியல்.
உரி—உரியியல், உரிச்சொல்லியல்.
உலக—உலகவறவி புக்ககாதை.
உறுப்—உறுப்பியல்.
ஊர்சூழ்—ஊர்சூழ் வரி.
எச்ச—எச்சவியல்.
எழுத்—எழுத்ததிகாரம்.
ஏலாதி.
ஐங்குறு—ஐங்குறுநூறு.
ஒழி—ஒழிபியல்.
ஔவை—ஔவையார் தனிக்கவி.
கச்சி—கச்சிமாநகர் புக்ககாதை.

கடைதிறப்பு.
கந்த—கந்தபுராணம்.
கம்ப—கம்பராமாயணம்.
கம்பன்.
கல்லா—கல்லாடம், கல்லாடர்.
கலிங்க—கலிங்கத்துப்பரணி.
கலித்—கலித்தொகை.
களவு—களவியல்.
கற்பு—கற்பியல்.
காஞ்சி—காஞ்சிப் புராணம்.
காசி காண்டம்.
கார் நாற்பது.
கால்கோட்—கால்கோட்காதை.
காளிங்—காளிங்கர்.
கிட்கிந்தை—கிட்கிந்தைப்படலம்.
கிருட்—கிருட்டினன் தூதச் சருக்கம்.
கிளவி—கிளவியாக்கம்.
கிளைகண்டு—கிளைகண்டுநீங்கு படலம்.
குசேலோபாக்கியானம்.
குண்டலகேசி.
குமரேசசதகம்.
குற்றிய—குற்றியலுகரப்புணரியல்.
குறள்—திருக்குறள்.
குறிஞ்சி—குறிஞ்சிப்பாட்டு.
குறுந்திரட்டு.
குறுந்—குறுந்தொகை.
(அயோ) கைகேயி—கைகேயி சூழ்வினைப்படலம்.
கொலைமறுத்தல்.
கொன்றைவேந்தன்.
கோயில்நான்மணி—கோயில் நான்மணிமாலை.
சங்கர—சங்கரநமச்சிவாயர்.
சந்தவிருத்தம்—திருச்சந்த விருத்தம்.
சமயதிவாகரமுனிவர்.
393 சி. சி. உ.—
சிதம்பரப்—சிதம்பரப்பாட்டியல்.
சிந்தா—சீவகசிந்தாமணி.
சி. போ.—சிவஞானபோதம்.
சிவஞானசரிதை.
சிவஞானதீப வார்த்திகம்.
சிவஞான நிலயம்.
சிவஞான போதமா—சிவஞான போதமாபாடியம்
சிவப்பிரகாசர்.
சிலப்—சிலப்பதிகாரம்.
சிறுபஞ்ச—சிறுபஞ்சமூலம்
சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை.
சிறை—சிறைசெய்காதை, சிறை விடுகாதை.
சீவக—சீவகசிந்தாமணி.
சுந்தரர்—சுந்தரர்தேவாரம்.
சுப்பிர—சுப்பிரமணியதீட்சிதர்.
(சூளா) சுயம்—
சூ—சூத்திரம்.
சூ. நிகண்டு—சூடாமணிநிகண்டு.
சூர்ப்—சூர்ப்பநகைப் படலம்
சூளா—சூளாமணி.
செய்-செய்யுளியல்,செய்யுளோத்து
சேதுபு—சேதுபுராணம்.
சேனா—சேனாவரையர்.
சொல்—சொல்லதிகாரம்.
சோணசைல—சோணசைல மாலை.
ஞானவாசிட்டம்.
ஞானாமிர்தம்.
தக்கயாகப்—தக்கயாகப்பரணி.
தஞ்சைவா—தஞ்சைவாணன் கோவை.

(திருவிளை) தடா. அவதா—தடாதகைப்பிராட்டியார் அவதாரச் சருக்கம்.
தண்டலை—தண்டலையார்சதகம்
தண்டி—தண்டியலங்காரம்.
(சேதுபு) தனுக்—
தாயுமானவர்—தாயுமானவர் பாடல்,
திணைமாலைநூற்றைம்பது.
திணைமொழியைம்பது.
திருஉலா—திருக்கைலாய ஞானஉலா.
திருச்சிற்—திருச்சிற்றம்பலக் கோவையார்
திருநூற்—திருநூற்றந்தாதி.
திருமுரு—திருமுருகாற்றுப்படை
திருப்பாட்டு.
(சுந்தரர்) திருப்புறம்—
திருமந்—திருமந்திரம்.
திருமுருகு—திருமுருகாற்றுப் படை.
திருவடி—திருவடிசூட்டுப்படலம்.
திருவா—திருவாசகம்.
திருவாத—திருவாதவூர்ப்புராணம்
திருவாய்—திருவாய்மொழி.
திருவாலவாயு—திருவாலவாயுடையார் புராணம்.
திருவிளை—திருவிளையாடற் புராணம்.
திருவேங்—திருவேங்கடமாலை.
திவா—திவாகரம்.
தின்ப—தின்பமாலை.
துறவு—துறவுச்சருக்கம்.
தெய்வச்—தெய்வச்சிலையார்.
தேவா—தேவாரம்.
தொடை—தொடையோத்து.
தொல்—தொல்காப்பியம்.
நச்—நச்சினர்க்கினியர்.
நரிவிருத்—நரிவிருத்தம்.
நல்வழி.
நற்—நற்றிணை.
நறுந்—நறுந்தொகை.
நன்—நன்னூல்.
நன். வி.—நன்னூல்விருத்தி.
நன்னெறி.
நாகபாச—நாகபாசப்படலம்
(திருவிளை) நாட்டுச்—நாட்டுச் சருக்கம்.
நாட்டுப்—நாட்டுப்படலம்
நாடவிட்ட—நாடவிட்டபடலம்.
நாலடி—நாலடியார்.
நான்மணி—நான்மணிக்கடிகை.
நீத்தார்—நீத்தார்பெருமை.
நீதி—நீதிவெண்பா.
நீதிநெறி—நீதிநெறிவிளக்கம்.
நீல—நீலகேசித்தெருட்டு.
நெடுநல்—நெடுநல்வாடை.
நேமி—நேமிநாதம்.
நைடதம்.
பட்டினத்தார்—பட்டினத்தார் பாடல்.
(காஞ்சி) பணுத—
பதி—பதிகம்.
பதிற்றுப்—பதிற்றுப்பத்து.
பரிதி—பரிதியார்.
பரிப்—பரிப்பெருமாள்.
பரிபா—பரிபாடல்.
பரிமே—பரிமேலழகர்.
பழம்பாடல்.
பழமொழி.
பழ—பழமொழிநானூறு.
பழியஞ்சின்—பழியஞ்சின திருவிளையாடல்.
பள்ளியடை—பள்ளியடைப்படலம்.

பளிக்—பளிக்கறைபுக்ககாதை.
பாகவதம்.
(திருவிளை) பாண்டி. சுரங்—
பாத்திர—பாத்திரம்பெற்றகாதை, பாத்திரங் கொண்டு பிச்சை புக்ககாதை.
பாத்திர மரபு—பாத்திரமரபு கூறியகாதை.
பாரத வெண்பா.
பா-ம்—பாடபேதம்.
பால—பாலகாண்டம்.
பிங்—பிங்கலம்
பிரபுலிங்—பிரபுலிங்கலீலை.
பிரயோக—பிரயோகவிவேகம்.
புண—புணரியல்.
புறத்—புறத்திணையியல்.
புறத்திரட்டு.
புறம், புறநா—புறநானூறு.
பு. வெ—புறப்பொருள் வெண்பா மாலை.
பெரியதிரு, பெ. திரு—பெரிய திருமொழி.
பெருங்—பெருங்கதை.
பெரும்பாண்—பெரும்பாணாற்றுப் படை.
பேரா—பேராசிரியர்.
பொருள்—பொருளதிகாரம்.
போர்—போர்ச்சருக்கம்.
மணக்—மணக்குடவர்.
மணி—மணிமேகலை.
மதுரைக்காஞ்சி.
மந்திரப்—மந்திரப்படலம்.
மந்திரமாலை—திருமந்திரமாலை.
மந்தரைசூழ்ச்சி—மந்தரை சூழ்ச்சிப்படலம்.
(திருவாத) மந்தி—
மயிலை—மயிலைநாதர்.

மரபு—மரபியல்.
மலைபடுகடாம்.
(திருவிளை) மாணிக்க—
(கந்த) மாயை, மாயையுப—
(பிரபு) மாயை-பூசை—
மாரீசன்—மாரீசன் வதைப்படலம்.
முத்—முத்தியிலம்பகம்.
முதுமொழிக்காஞ்சி.
முருகு—திருமுருகாற்றுப்படை.
மூதுரை.
மெய்ப்பாடு—மெய்ப்பாட்டியல்.
மேரு—மேருமந்தரபுராணம்.
மேற்—மேற்கோள்.
(நீலகேசி) மொக்கல—
மோகவதைப்பரணி.
(தாயுமான) மௌன—
யசோத—யசோதரகாவியம்.
யா. கா.—யாப்பருங்கலக்காரிகை.
யாப்பு—யாப்புப்படலம்.
யா. வி.—யாப்பருங்கல விருத்தி.
யுத்த—யுத்தகாண்டம்.
(பிரபு)—பிரபுலிங்கலீலை.
வஞ்சி—வஞ்சிமாநகர் புக்ககாதை,
வத்த—வத்தவகாண்டம்.
வரந்தரு—வரந்தருகாதை.
வளையாபதி.
வன—வனம்போக்குப் படலம்,
வாக்கு—வாக்குண்டாம்.
விநா, விநாயக—விநாயக புராணம்.
(திருவிளை) விருத்—
வில்லி—வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.
விவேகசிந்தாமணி.
விழாவறை—விழாவறைகாதை.
வினை—வினையியல்.
வீர, வீரசோ—வீரசோழியம்.

வெங்கைக்கோவை.

வெற்றி—வெற்றிவேற்கை.

(பு. வெ.) வென்றிப்

வேதா—

வேள்வி—வேள்விப்படலம்.

வேற்—வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல்.

(மேரு) வைசயந்த—

வைத்திய—வைத்தியநாததேசிகர்.

வைரா, வைராக்கிய—வைராக்கிய சதகம்.

[illegible]
[illegible]
[illegible]
([illegible]) [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]—
([illegible]) [illegible]
[illegible]
[illegible]

நாலடியார் உரைவளம்.

இரண்டாவது
பொருட்பால்.

2. [1]நட்பியல்.

21. சுற்றந்[2]தழால்.

தருமர்:—அஃதாவது பகைவரால் [3]அடர்ப்புண்டும், வறுமையுற்றும், பிணிப்பட்டும், [4]க்ஷாமகாலங்களால் மெலிந்தும் இவ்வகைத்தாய துன்பங்களால் ஒருசெயலுமற்றுத் தம்மை வந்தடைந்தவர்கள் [5]விதனம் நீக்கி அவர்கள் தம்மைவிட்டு நீங்காதபடி பண்ணிக்கொளலும், தம்முடைய உறவின்முறை யாற்கு ஓர் இடும்பைவரில் துன்பந் தனக்கு வந்ததுபோல விரைவில் தவிர்த்து, அவர்பாரந் தமதாகக்கொண்டு தழுவி வேறுபாடின்றி யிருத்தலுமாம்.

பதுமனார்:—அஃதாவது வறுமையுற்றும், வியாதிப் பட்டும், பகைவரால் அடர்ப்புண்டும், க்ஷாம காலத்தினாலும் படும் இடும்பைக்கு உதவிசெய்து தாமும் அவ்விடும்பைதனை அனுபவிக்குஞ் சுற்றமாயுள்ளவரும், இவ்வகைப்பட்ட இடும்பை களுக்கு அஞ்சி வந்தடைந்தவர்களும், அறிவினாலும் சீலத்தி

---

[1]நண்பாது தன்மையைக் கூறும் பகுதி.

[2]தழால்—தழுவுதல்.

[3]நெருக்குண்டும்.

[4]பஞ்சம்.

[5]வருத்தம்.

னும் மிக்குத் தேர்ந்தோருடன் எண்ணப்படுமெனின் எவரும் தன்னைச் சுற்றும்படி உறவுசெய்துதான் அணைத்தல் என்றவாறு.

குறிப்பு :—

'சுற்றந் தழால்' :—

பரிமே :—அஃதாவது அரசன் தன் கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். வினைசெய்வாரைக்கூறி வினைச்சுற்றம் கூறுகின்றாராகலின், இதுதெரிந்து வினையாடலின்பின் வைக்கப் பட்டது.

மணக் :—சுற்றந்தழாலாவது அரசன் தன் கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். மேல் அமாத்தியர்மாட்டு அரசன் ஒழுகுந்திறம் கூறினாராதலின், அதன்பின் வைக்கப் பட்டது.

பரிதி :—சுற்றந் தழாலாவது அரசன் தன் சுற்றத்தைப் பாதுகாப்பான் எ-று.

—குறள். அதி. 53.

201. வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்(கு)
அசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

தருமர் :—எ-து. வயாவும்—கருக்கொள்ளுங் காலத் துண்டாகிய மசக்கையாகிய நோயும்; வருத்தமும்—கருவாகிய பாரம் பொறுத்துத் திரியும் நோவும்; ஈன்றக்கால் நோவும்—ஈனுங் காலத் துண்டாகிய நோவும் இத்துன்பமெல்லாம்; கவாஅன் மகன் கண்டு—[1]குறங்கின் கீழ்க் கிடந்த பிள்ளையைக் கண்டு; தாய் மறந்தா அங்கு—தாய் மறந்தாற் போல; அசாஅந் தான் உற்ற வருத்தம்—தனிமையாகித் தான்உற்ற துன்ப

[1] குறங்கு—தொடை.

மெல்லாம்; உசாஅத்தன் கேளிரைக் காணக் கெடும்—கலத்த லுடையதான தன் உறவின் முறையாரைக் கண்டவுடனே நீங்கும் என்றவாறு.

அசாதல்—தனிமை. [1]உசாஅதல்—கலப்பு. ஆதலால் தமது கிளைஞர், அடைந்தோர் இவர்களைக் கைவிடாது தன்னில் ஒன்றாகத் தழுவுதல் வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கருக்கொண்டால் வருவதொரு பிணியும், பின் கருவைப் பொறுத்தலால் வருவதொரு மெய் வருத்தமும், அதனை யீனுங்காலத்து வருவதொரு நோயும் இம் மூன்றும் குறங்கின்கட் கிடந்த குழவியைக் கண்டு தாய் மறந் தாற்போலத் தளர்ச்சியாற் றானுற்ற வருத்தந் தன்னொடு சூழுஞ் சூழ்ச்சியையுடைய கேளிரைக் காணவே கெடும் என்றவாறு.

அசா—தளர்ச்சி. உசா—சூழ்ச்சி.

விளக்க உரை:—எ-து. வயாவும் வருத்தமும் ஈன்றக் கால் நோவும்—கருக்கொள்ளுங் காலத்து வருவதொரு நோவு [மசக்கை], கருவைப் பொறுத்துத் திரியுங்காலத்து வருவதொரு நோவு, ஈனுங்காலத்து வருவதொரு நோவு என்று சொல்லப் பட்ட துன்பங்களெல்லாம்; கவான் மகற்கண்டு தாய் மறந் தாங்கு—குறங்கின் கீழ்க் கிடந்த பிள்ளையைக் கண்டு தாய் மறந்தாற்போல; அசாத்தான் உற்ற வருத்தம்—அசாவுதலாகிய தனிமையுற அத்தால் வருந்திய வருத்தமெல்லாம்; உசாத்தன் கேளிரைக் காணக்கெடும்—உசாவாகிய கலப்புடைய தன்னுற வின் முறையாரைக் காணவே முன்பு தான் தனிமையுற்ற துயர மெல்லாம் நீங்கிவிடும் எ-று.

அசா—தனிமை. உசாவுதல்—கலப்பு.

---

[1]உசாதல்—கலம்பற்றி வினவல் என்றும் சொல்லலாம்.

கருத்து:—சுற்றந் தழுவல் தன் வருத்தமெல்லாம் நீங்குதற்குக் காரணமாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"பொருகடற் பரிதி போலப் பொன்னனுன் பிறந்த போதே
மருவரடை மாத ரூற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே.
—சீவக. 304.

(க).

202. அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் —பழுமரம்போற்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

தருமர்:—எ-து. அழல் மண்டு போழ்தின்—ஆதித்த கிரணம் முதிர்ந்த காலத்து; அடைந்தவர்கட்கு எல்லாம்—தன்னைச் சேர்ந்தவர்கட்கெல்லாம்; நிழல் மரம் போல்—நிழலுண்டான மரம் போல; நேர் ஒப்பத்தாங்கி—வேற்றுமையின்றித் தன்னிடத்து அழல் ஆற்றுவது போல் அவரைத் தான் தாங்கி; [1]பழுமரம் போல்—பழுத்த மரத்தின் பயனைப் பலரும் புசிப்பது போல; பல்லார் பயன் துய்ப்ப—தன் பயனைத் தன்னையடைந்தார் பலரும் நுகர; தான் வருந்தி வாழ்வதே—தான் வருத்தமுற்று வாழ்வதே; நல்லாண் மகற்கு கடன்—நல்ல (ஆண்) தகைமையுடையவனுக்கு முறைமை என்றவாறு.

[2]தான் வருந்துவது ஏதெனில் அவர் துன்பத்துக்கு

---

[1] பழுமரம்—ஆலமரம் என்றுங் கூறலாம்.

[2] தான் வருந்தவதாவது தனது இலை, பூ, காய், பழம், ஆகியவற்றை வேண்டுவார் பெறத் தான் இடங்கொடுத்துப் பொறுத்திருத்தலாம்.

இரங்குதல் தனக்கு வருத்தம். மரமானது தான் வெயிலிலே நின்றுந் தன்னைச் சேர்ந்தவர்க்கு நிழலைக் கொடுப்பது போலத் தன்னுடம்பு வருந்தியாகிலும் அவரைத் தாங்கவேண்டும் என்பதாம்.

பதுமனர் :—என்பது. வெம்மை மிக்க கோடைக் காலத்துத் தம்மை அடைந்தார்க் கெல்லாம் நிழலையுடைய மரம் போலச் சுற்றத்தார்க்கெல்லாம் நேரொப்பத் தாங்கிப் பழுத்த மரம் போலப் பல்லாரும் பயனை நுகரத் தாம் வருந்தி வாழ்வது நல்ல ஆண்மையையுடைய மகற்குக் கடன் என்றவாறு.

பழுமரம் போல் பல்லார் பயன் துய்ப்பத் தாம் வருந்தி வாழ்வது—பழுத்த மரத்தில் ஏறி முறிக்கவும் எறியவும் அது வருத்தப்பட்டாற் போல, இவனும் வந்தார்க்கு இட்டும், மேல் வருவார்க்கு உலை ஏற்றிவரக் கண்டோமில்லை என்றும் வருந்தி வாழ்வது.

விளக்க உரை :—என்பது. அழல் மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கு எல்லாம்—ஆதித்த கிரணம் முதிர்ந்த காலத்துத் தன்னைச் சேர்ந்தவர்கட்கெல்லாம்; நிழல் மரம் போல் நேர் ஒப்பத்தாங்கி—நிழலுடைய மரம்போல வேற்றுமையின்றித் தரிப்பித்துக்கொண்டு; பழு மரம் போல்—பழுத்த மரம் போல; பல்லார் பயன் துய்ப்ப—பலரும் தன் பயன் நுகர; தான் வருந்தி வாழ்வதே—(துன்பமுற்றவர் வருத்தத்துக்குத்) தான் இரங்கி வாழ்தலே; நல்லாண் மகற்குக் கடன்—நல்ல ஆண்டகையுடைய மகனுக்கு முறைமை என்றவாறு.

கருத்து :—சுற்றந் தழுவல் இல்வாழ்வானது கடமையாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

—குறள். 216.

"நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்"

—நாலடி. 96.

"துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கண் சென்றார்க்கு ஒருங்கு".

—நாலடி. 167.

"நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னூடே"

—புறம். 119 : 5-7.

"முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே என்மகன்
வளனும் செம்மலும் எமக்கு"

—புறம். 254 : 7-9.

"உதவுமாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்

—கம்ப. அயோத்தி. மந்திரப். 82.

"அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க்களித்தல்
அவற்கியல்பு"

—சீவக. 3-நச். உரை.

"கற்றையஞ் சுடர்மணிக் கனகம் ஏனைய
பிற்றையென் றுதருள் பெரியவர் வண்மைபோல்
மற்றவண் உள்ளபன் மரமும் தம்பயன்
எற்றையும் உலப்புறு நீகை சான்றவே"

—கந்தபுரா.

'பழுமரம்' :—

"பழுமரந் தேண்டிய பறவையின்"

—மணி. 14-26.

"பழுமர முள்ளிய பறவையின்"

—பொருந. 64.

"பழுமரந் தேரும் பறவைபோல"

—பெரும்பாண். 20.

"பழுமரம் புள்ளமிழ்ந் தன்ன"

—புறம். 173:3.

"பார்கெழு பழுமரப் பறவை யொத்தவே"

—சீவக. 828-4.

(உ).

203. அடுக்கல் மலைநாட! தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்—அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

தருமர்:—என்பது. [1]அடுக்கல் மலைநாட!—கல்லால் உயர்வு பெற்ற மலையினையுடைய நாடனே!; தன் சேர்ந்த வரை—தம்மை யடைந்தவரை; எடுக்கலம் என்னார் பெரியோர்—தாங்குதற்கு மறுப்பது பெரியோரிடத்தில்லை; [அதென் போல வென்னில்] அடுத்து அடுத்து—மேன்மேலும்; வன் காய்—பெரிதாகிய காய்கள்; பல பல காய்ப்பினும்—பலவாகக் காய்த்த தாயினும்; தன் காய் பொறுக்கலாக் கொம்பு இல்லையே—தன் காயைத் தாங்கமாட்டாத கொம்பில்லை அதுபோல் என்றவாறு.

அறிவுடையார் தம்மை யடைந்தவரைக் காக்குந் தன்மை கூறியது.

பதுமனார்:—என்றது. அடுக்கலையுடைய மலைநாடனே! தம்மை யடைந்தாரைத் தாங்கமாட்டோம் என்னார் பெரியோர்:

---

[1] அடுக்கல் மலை—ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்துள்ள மலை.

(அதென்போல வென்னில்) மேன்மேலும் செறியச்செறிய வன்காய் பல காய்த்ததாயினும் தன் காயைத் தாங்கமாட்டாத கொம்பில்லை யதுபோல் என்றவாறு.

எடுக்கலம்—தாங்கலம்.

விளக்க உரை :—எ-து. அடுக்கல் மலை நாட!—அடுக்கிய கல்லையுடைய மலைநாடனே!; தற்சேர்ந்தவரை—தம்மைச் சேர்ந்தவரை; எடுக்கலம் என்னார் பெரியோர்—தாங்கமாட்டோம் என்னார் பெரியோர்; (அதன்போல வென்னில்) அடுத்தடுத்து வன்காய் பல பல காய்ப்பினும்—மேன் மேலும் பல பலவாகிய காயைப் பெரிதாகக் காய்த்ததாயினும்; இல்லையே தன்காய் பொறுக்கலாக் கொம்பு—தன் காய் பொறுக்கமாட்டாத கொம்பு இல்லை என்றவாறு.

கருத்து :—சுற்றத்தாரைத் தழுவி உயர்த்துதல் பெரியோரது இயல்பாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"கொடிக்குக் காய் பளுவோ ?"

—பழமொழி.

(௩).

204. உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா
சிலபகலாம் சிற்றினத்தார் கேண்மை-நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்க மிலாளர் தொடர்பு.

தருமர் :—என்பது, உலகு அறியத் [1]தீரக் கலப்பினும்—உலகிலுள்ளோர் அறிய மிகுதியாக உறவு கொள்ளினும்; சிற்

---

[1] தீர—நிரம்ப, உறுதியாக.

றினத்தார் கேண்மை—சிற்றினத்தாருடன் கொண்ட உறவு; நில்லா சில பகல் ஆம்—(நில்லாவாய்) சில நாளன்றிப் பலநாளும் உறவாகுவதல்ல; ஒற்கம் இலாளர் தொடர்பு—தளர்ச்சி யில்லாதாருடன் கொண்ட உறவு; நிலை திரியா நிற்கும் பெரியோர்—தவஞ்செய்யுங் காலத்து அதற்கு இடையூறுவரில் தளராது நிற்கும் பெரியோர்; நெறி அடைய நின்றனைத்து—வீட்டு நெறியடைய நிற்பதுபோல நிலை திரியாமல் நிற்கும் என்றவாறு.

[ஆல்—அசை]

நிலைதிரியாதது—முற்கண் டுறவு கொண்டதுபோல எப்போதும் ஒரு நன்மையாய் நிற்பது. ஆதலால் சுற்றந்தழால் அறிவுடைய பெரியோர்க் கல்லதில்லை என்பதாயிற்று.

பருமனர்:—என்பது. உலகமெல்லாம் அறிய மிக நட்புக்கொள்ளினும் நிலையாவாய், சிற்றினத்தார் கேண்மை சில நாள் அளவேயாம். மனத்தில் தளர்ச்சியில்லாத பெரியோர் கேண்மை நின்ற நிலையில் திரியாது நிற்கும்; அருந்தவர் தாம் குறித்த நெறியடையுமளவும் நின்றாற் போல என்றவாறு.

சிலபகல்—முற்பகல். ஒற்கமிலாளர்—குற்றமிலாளர்.

விளக்க உரை:—எ-து. உலகறியத் தீரக் கலப்பினும்—உலகத்தார் அறிய நிரம்ப வுறவு கொள்ளினும்; நில்லா சில பகல் ஆம் சிற்றினத்தார் கேண்மை—சிற்றினத்தாருடன் கொண்ட கெழுமுதல் (நிலையாவாய்ச்) சில நாள் அளவேயாம்; நிலைதிரியா நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்து—தாங்கொண்ட தவமாகிய மேற்கோளுக்கு இடையூறுவரில் அதற்குத் தளராது நிற்கும் பெரியோர் (தாம் குறித்த நெறியடையுமளவும் நின்றாற் போலும்); ஒற்கமிலாளர் தொடர்பு—தளர்ச்சி யில்லாதாருடன் கொண்ட வுறவு என்றவாறு.

இப்படி ஒத்தாரைச் சுற்றமாக நட்புக் கொள்ளுதல் பெரியோர்க்கு முறைமை என்பதாம்.

கருத்து :— அறிவும் குணமும் உடைய பெரியோரே சுற்ற மாகத் தழுவத் தக்கவராவர்.

ஒப்புமைப் பகுதி :—

"நாகுலண்டு பழகினு மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

—நறுந்தொகை. 33-34.

(ச).

205. இன்னர் இனையர் எமர்பிறர் என்னுஞ்சொல்
என்னும் இலராம் இயல்பினால்—துன்னித்
தொலைமக்கள் துன்பந்தீர்ப் பாரேயார் மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்.

தருமர் :— எ-து. [1]இன்னர் இனையர்—நல்லார், தீயார், சேர்க்குமவர், சேர்க்கலாதவர்; எமர்—இவர் உறவின் முறையார்; பிறர்—இவர் அன்னியர்; என்னும் சொல்—என்று வேறு படுத்திச் சொல்லுஞ் சொற்கள்; [2]என்னும் இலர் ஆம்—ஏதும் இல்லாதவராகிய; இயல்பினால்—இயல்பினையுடையராய்; [3]தொலை மக்கள் துன்னி—தளர்வெய்தியவரைக் கிட்டி; துன்பம் தீர்ப் பாரே—அவர் துன்பத்தை நீக்குவாரே; யார் மாட்டும்—யாவ ரிடத்தும்; தலைமக்கள் ஆகல் பாலார்—தலைமையான தன்மையை யுடையவர் என்றவாறு.

தம்மை யடைந்தவரை இவர் இத்தன்மையர் என்று நோக்குவது பெருமைக்கு இயல்பன்று; நோக்கியபோதே

---

[1] இன்னர்—இவர் என்றே பொருள் கொள்ளலாம்.
[2] என்னும்—ஒரு சிறிதும்.
[3] தொலை மக்கள்—துன்பத்தால் தளர்ந்த மக்கள்; (உறவினர்).

அவற்குப் பெருமையில்லை. ஆதலால் தம்மை அடைய வருவார் யாவராயினும் அவரைத் தாங்கி, அவர் துன்பந் தீர்க்கவேண்டும் என்பதாம். அத்தன்மையாரே யாவரினுந் தலைமையானவர் என்று சுற்றந் தழுவுதற்கு வற்புறுத்தியது.

பதுமனர்:—என்றது. இன்னார் நல்லார், இனையவர் பரிக்கலாகா அளவினர், கேளிர், கேளிரல்லாதார் என்னும் இப் பெற்றியால் வேறுபடுத்திச் சொல்லுஞ் சொல் யாதும் இலராம் இயல்பினால், தளர்ந்த மக்கள் துன்பத்தை மேவித் தீர்ப்பாரே யாவர் மாட்டுந் தலைமக்களாகுந் தன்மையுடையார் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. இன்னர் இனையர் எமர் பிறர் என்னும் சொல்—நல்லார், தீயார், பரிக்கலாகா அளவினர், பரிக்கலாம் அளவினர், உறவின் முறையார் இவர், அன்னியர் இவர் என்று வேறுபடுத்திச் சொல்லுஞ் சொற்கள்; என்னும் இலராம் இயல்பினால்—என்னத்தக்கவை யில்லாத இயல்பை யுடையராய்; தொலைமக்கள் துன்பம் துன்னித் தீர்ப்பாரே—தளர்ந்த மக்கள் துன்பங்களை ஆராய்ந்து அவரைச்சென்று கிட்டி அத்துன்பங்களை நீக்குவாரே; யார் மாட்டும் தலைமக்கள் ஆகற்பாலார்—எல்லாரினும் வைத்துத் தலைமையான தன்மையுடையவர் என்றவாறு.

கருத்து:—சுற்றந் தழுவுதலில் வேறுபாடின்றி யாவரையும் தழுவுதலே தலையாய அறம். (ரு).

206\. பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ(டு) அமரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை உயிர்போற் கிளைஞர் மாட்(டு)
எக்கலத் தானும் இனிது.

தருமர் :—என்பது. பொன் கலத்துப் பெய்த—பொற் கலத்திலே இட்ட; புலி உகிர் [1]வால் புழுக்கல்—புலிநகம் போன்று வெண்மையான சோற்றை; [2]அக்காரம் பாலோடு—அக்காரத்துடனே பாலுங்கூட்டி; [3]அமரார் கைத்து உண்டலின்—சேராதாராகிய அன்னியரிடத்து உண்பதினும்; உப்பு இலி [4]புற்கை—உப்பில்லாத புற்கை நீரை; உயிர் போல் கிளைஞர் மாட்டு—தம்மைச் சேர்ந்த உயிர்போலுங் கிளைஞரிடத்திலே; எக்கலத்தானும்—மண்கலத்திலே வார்த்ததாயினும்; இனிது—உண்பதினிது என்றவாறு.

உயிர்போல் எனவே தாமுண்ணுமளவும் உபசரித்து அன்னியரிடத் துண்டல் மனப்பரி(வில்லாதாயி)ற்று, ஆதலால் கிளைஞரைத் தன்னுயிர் போன்றாராகத் தழுவியிருத்தல் யாவ(ர்க்கும்) வேண்டும் என்பதாயிற்று.

பதுமனார் :—என்றது. பொற்கலத்தின்கட் பெய்த புலியுகிர் போன்ற வெண்சோற்றையும், அக்கார(த்தையும்), பாலோடுகூட விரும்பாதார் கையால் உண்டலினும் உப்பிலியாகிய புற்கை உயிர்போலுங் கிளைஞர் மாட்டு யாதானுமொரு கலத்திற் பெறினும் அது இனிது என்றவாறு.

பெய்தது—இட்டது. வான் புழுக்கல்—அழகிய சோறு. அமரார்—தன் நெஞ்சுக்குப் பொருந்தாதார்.

விளக்க உரை :—என்பது. பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான் புழுக்கல்—பொன்னின் கலத்திலே இட்ட புலியுகிர் போலும் வெள்ளிய சோற்றினை; அக்காரம் பாலோடு

---

[1]வான்புழுக்கல்—சிறந்த சோறு எனினுமாம்.

[2]அக்காரம்—வெல்லக்கட்டி.

[3]அமரார் கைத்த—விரும்பாதார் கையால் பெற்றதனை.

[4]புற்கை—புல்லரிசிக் கூழ்; இழிந்த உணவு

அமரார் கைத்து உண்டலின்—அக்காரம் பாலுடனே கூடி அன்னியரிடத்திலே உண்கிறதிலும்; உப்பிலிப் புற்கை—உப்பில்லாத புற்கை நீரை; உயிர் போற் கிளைஞர் மாட்டு—தன்னுயிர் போலும் உறவின்முறையாரிடத்து; எக்கலத்தாலும் இனிது—யாதொரு கலத்தே வார்த்துண்டாலும் இனிதாம் எ-று.

சோறு புலியுகிர் போறலாவது—இடைமுறிந்து மாறாது அங்கவீனப்படாது இருமருங்கும் நேரிதாய் நின்று தண்டற வெந்து உத்தம இலக்கணத்தோடும் பிலி முருந்து என்றும், முசியா அரிசி என்றும் சொல்லப்பட்டுப் புலியுகிர் போலப் பிடித்தால் உள்ளடங்கி, விட்டால் தனித்தனியாதல்.

கைத்து—கையிலுள்ளதான பொருள்.

கருத்து:—சுற்றத்தாரின் இழிந்த வுணவும் இனிதாகலின் அவரைத் தம்முயிர்போல் தழுவவேண்டும்.

ஒப்புமைப் பகுதி:—

'புற்கை':—

"தயங்குநீர்த் தண்புற்கை"

—நாலடி. 210.

"நெடுப்நீர்ப் புற்கை"

—புறம். 64.

"தெண்ணீரடு புற்கை"

—குறள். 1065.

(சு)

207. நாள்வாய்ப் பெறினுந்தம் நள்ளாதார் இல்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்-கேளாய்!
அபராணப் போழ்தின் அடகிடுவ ரேனும்
தமராயார் மாட்டே யினிது.

தருமர் :—எ-து. நாள் வாய் பெறினும்—வேளை தப்பாமல் உதவிய [1]அசனமாயினும்; தம் நள்ளாதார் இல்லத்து—தமக்கு நட்பில்லாதார் மனையில்; [2]வேளாண்மை—அவர் முயற்சியால் வந்த; [3]வெம் கருனை—வெம்மையோடுங் கூடிய பொரிக் கறியும் அசனமும்; வேம்பாகும்—வேம்புக்கு நிகராகும்; [4]கேளாய்!—கேட்பாயாக!; [5]அபராணப் போழ்தின்—நேரந் தாழ்த்தின வேளையிலேயானாலும்; அடகு இடுவரேனும்—இலைக் கறி இடுகினும் அது; தமர் ஆயார் மாட்டே—தமக்கு உறவானவரிடத்தே; இனிது—மிகவும் இனிமையாம் என்றவாறு.

வேம்பாகும் எனவே நட்பில்லாதார் பரிவோடு கூடிச் செய்வதல்ல; தமக்காங் கருமத்தின் பொருட்டு இடும் அசனமாதலின் அதனை நஞ்சென்றார். அபராணப் போழ்தின் என்றது பசிக்கு ஏற்ற காலந்தப்பி அப்பசி அடங்கித் [6]தம்பித்த வேளையாக. நேரந் தாழ்த்த வேளையிலேயானாலும் உறவின் முறையார் பரிவோடு இட்ட இலைக்கறியாயினும் அப்பொரிக் கறியோடு கூடிய அசனத்திலும் இனிமை பெற்ற அமுதமாம் என்றார்; பரிவு அத்தன்மையாயிற்று ஆதலால் சுற்றமாயினாரை வழுக்காது தழுவி ஒழுகல் வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார் :—என்றது. சிறுகாலையே பெற்றாராயினுந் தம்மை நள்ளாதார் மனையின்கண் உபகாரத்தால் வந்த வெய்ய கருனைக் கறியும் வேப்பே போலாகும். கேளாய் நெஞ்சமே! அந்தியம் பொழுது இலைக்கறியினை இடுவராயினும் கிளைஞர் மாட்டு இனிது என்றவாறு.

---

[1] அசனம்—சோறு.

[2] வேளாண்மை—உதவியாகக் கொடுத்த.

[3] வெம் கருனை—விரும்பத்தக்க கறியமுது.

[4] கேளாய் என்றது—நெஞ்சை நோக்கியது.

[5] அபராணப் போழ்து—பிற்பகற் பொழுது.

[6] தம்பித்த வேளை—நின்ற சமயம்.

வேளாண்மை வெங் கருனை—முதன்மையாகச் சமைத்த பணியாரப் பொரியல்.

என்றது மருத்துவ நூலாற் சொல்லப்பட்ட நாளிடத்திலே தன்னெஞ்சத்துப் பொருந்தாதார் இல்லத்து உபகாரமான வெவ்விய கருனைச்சோறு வேம்பாகும். அத்தன்மைத்து கேளர்ய் அந்நூலாற் சொல்லப்பட்ட அபராணப் பொழுதின் கண் அடகிடுவராயினும் தமராயினரிடத்தினிது என்றவாறு.

†நாள் வாய் என்றது—பின்னே அபராணப் பொழுது என்று உளதாகலின் சிலேத்தும கோப காலமாகிய வாம காலத்திற்கும், வாத கோப காலமான அபராண காலத்திற்கும், நடுவு பித்த கோப காலமான மத்தியானத்திற்கும் உட்பட்ட காலத்தினை; அப்போது ஆதித்தன் உயர்ந்து வந்து மத்தியானத் திலே உள் தணிக்கவும் உதராக்கினி எழுந்து மத்தகத் தளவுஞ் செல்லவும், இருதயத் துளதாகிய தாமரை முகிழ் திறந்து இவ் வுட்டணங்களாலே மிகவு மலர்ந்து மிதன் நாளத்தினுலும், நாடிகளானும் உட்டணங்கள் ஓடிப் புறம்பும் உள்ளும் காய்ச்சல் பிறந்து சிலேஷம் உள்ளது திறப்பித்து விழுந்து முன்பே சரீர சுத்தி பிறந்து வெளிப்பட்ட குடர் காயும்படி நின்ற இரத்த தாதுவைப்பற்றி எரியா நின்ற அக்கினிக்கு இந்தனமான இரத்த தாதுக்கே ஏற எரியவும் வாத கோபம் பிறந்து இவ் வக்கினியை அவிக்கும் அபராணத்துக்கு முன்பாகவும் நுகரப்படுதலான் அந் நாள்வாய்ப் பெறினும் என்றூர்.

விளக்க உரை :—எ-து. நாள் வாய்ப் பெறினும்—சிறுகாலையே பெற்ருராயினும்; தன் நள்ளாதார் இல்லத்து—தன் பகைவர் இல்லத்தில்; வேளாண்மை வெங்கருனை வேம் பாகும்—உபகாரத்தால் வந்த செவ்விய கருனைக் கறியும் வேம்பு போலே இருக்கும்; கேளாய்!-(கேட்பாயாக!); அபராணப் போழ் தின் அடகிடுவரேனும்—அந்திக் காலத்திலே இலைக்கறியை

---

†மருத்துவநூற் கருத்து ஆராய்தற்குரியது.

இட்டாராயினும்; தமராயார் மாட்டே இனிது—உறவின் முறையாரிடத்திலே உண்கிறதினிது என்றவாறு.

கருத்து:—இதுவும் முற்செய்யுளின் கருத்தே கொண்டது.

ஒப்புமைப் பகுதி :—

"விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
என்போ டியைந்த வமிழ்து".

—நாலடி. 210.

(எ).

208. முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டியுண் பாரும் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல எரியும் புகுவரே
நட்டார் எனப்படு வார்.

தருமர்:—எ-து. முட்டிகை போல—இரும்பு கொட்டுவதற்கு [1]முட்டிகை யில்லாது ஆவதல்ல அதுபோல் ஒருவற்கு வேண்டியவராய் இருந்து; முனியாது—வெறுப்பில்லாது; வைகலும்—நாள் தோறும்; [2]கொட்டி—கூடா நட்பாகவே அவர் மனம்பெற ஒழுகி; உண்பாரும்—அவரிடத் துண்டாகிய உணவை உண்டு வாழ்பவரும்; குறடு போல் கைவிடுவர்—குறடானது தான் பற்றியிருந்த இரும்பை எரிக்குள் விட்டுத் தான் நீங்கினாற்போல அவற்கொரு துன்பம் வந்த வேளையிலே கைவிடுவர்; நட்டார் எனப்படுவார்—தம்மிடத்து நட்புண்டானவர் என்னப்பட்டார்; சுட்டுக்கோல் போல எரியும் புகுவர்—இரும்பு வேம்பொழுது உலையாணிக் கோலானது

---

[1] முட்டிகை—சம்மட்டி.

[2] கொட்டி—பொருளை அடித்துப் பதஞ்செய்து.

தானும் எரியுட் புகுந்து வேமது போல நட்பாளர்க்கு வந்த துன்பத்தைக்கூட அனுபவிப்பர் என்றவாறு.

கூடாநட்பாயினர் தங்கருமம் முற்றுந் துணையும் இவரில்லாது நமக்கு ஒரு காரியமும் ஆகாது என்னும் வகையாக, அவர் மனம் வரும்படி ஒழுகி அவர்க் கிடர் வந்த வேளையிலே கைவிட்டுப் போவர். தமக்கு உற்றாராகிய நட்பாளர் அவர்க்குள்ள காலத்துப் பகுத்துண்டும், இல்லாது துன்பமுற்ற காலத்தும் அத் துன்பந் தமக்கு வந்ததாகக்கூட அனுபவிப்பர். ஆதலால் அத் தன்மையாளரைத் தழுவுதல் வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது, கொல்லனுடைய சுத்தியல்போல நாடோறும் தம்முடைய நட்டாரைப் பதஞ்செய்து உண்டாரும், மற்று அவர்க்குத் துன்பம் வந்தகாலத்துக் கொல்லன் †கொடிறு போலக் கைவிடுவர். அவன் சுட்டுக்கோல்போல எரியின் கண்ணும் புகுவர் நட்டார் என்று சிறப்பிக்கப்படுவார் என்ற வாறு.

சுட்டுக் கோல்—உலையாணிக் கோல்.

விளக்க உரை:—ஈ-து. முட்டிகைபோல முனியாது —கொல்லனுடைய சுத்தியல்போல வெருதே; வைகலுங்கொட்டி உண்பாரும்—நாள்தோறும் பதஞ்செய்து உண்பாரும்; குறடு போற் கைவிடுவர்—நெருப்பிலே இரும்பைப் போகட்டு மீளுங் குறடுபோலக் கைவிட்டுப் போவார்; சுட்டுக்கோல் போல— கொல்லன் உலையாணிக் கோல் போல; எரியும் புகுவர்—தம் உறவின் முறையார் புக்க எரியின்கண்ணும் முழுகுவர்; நட்டார் எனப்படுவார்—நட்புக்கொள்ளப் பட்டார் என்று சொல்லத் தக்கவர் என்றவாறு.

பதஞ்செய்து உண்கையாவது—இதமும் இட்டமும் சொல்லி உண்கை.

---

†கொடிறு—பற்றக்குறடு.

கருத்து :—இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்வாரையே சுற்றமாகத் தழுவ வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

“அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

—மூதுரை. 17.

குறிப்பு :—

இச்செய்யுளில் சொல்லனது சம்மட்டி, குறடு, உலையாணிக் கோல் ஆகிய கருவிகளே உவமையாயினவாறுணர்க.

(அ).

209\. நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ?-இறுமளவும்
இன்புறுவ இன்புற்(று) எழீஇ அவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

தருமர் :—என்பது. நறுமலர்—நறுமிய மலரினாற் கட்டிய; தண்கோதாய் !—குளிர்ந்த மாலையினை உடையவளே !; நட்டார்க்கு—உறவு செய்தார்க்கு; நட்டார்—உறவின் முறையார்; இறும் அளவும்—சாகுமளவும்; இன்புறுவ இன்புற்று—இன்பமுறுங் கால் தாமும் இன்பமுற்று; எழீஇ—நடந்து; அவரோடு—அவரோடு கூடி; துன்புறுவ துன்புறாக்கால்—துன்பமுறுங்கால் துன்பத்தைத் தாமும் உறாராகில்; மறுமையும் செய்வது ஒன்று உண்டோ?—இறந்துபோய்ப் பிறக்கும் மறுபிறப்பிலே செய்யும் உபசாரம் உண்டோ? என்றவாறு.

உறவின் முறையாரானவர் தம்உற்றார்க்கு ஒரு செல்வம்

உறும்பொழுதுகூட அனுபவித்து, வறுமையாகத் துன்புறுங் காலத்தும் அத்தன்மையாகவே ஒழுகார் ஆகில், அவர் மறுபிறப் பிலே வந்து உதவுவது உண்டோ? என்று அவரை இழிவாக்கி, அத்தன்மையார் உறவினும் அன்னியரிடத்து நட்புச் செய்வது நன்றென்பதாயிற்று.

பதுமனர்:—என்றது, நறுமலர்த் தண்கோதாய்! உற்ருர்க்கு உற்ருர் மறுபிறப்பின் கண்ணும் நன்மைசெய்வ தொன்று உண்டோ? சாமளவும் இன்புறுவனவற்றை அவ ரோடே தாம் இன்புற்று ஒழுகி, அவர் துன்புறுவனவற்றை அவரோடே துன்புருவிடில் என்றவாறு.

இறுமளவும்—மரிக்கு மளவும். எழீஇ—அவருடன் ஒழுகி.

விளக்க உரை:—எ-து. நறுமலர்த் தண்கோதாய்!—நறுவிய மலராற் கட்டப்பட்ட குளிர்ந்த மாலையினையுடையாய்!; நட்டார்க்கு நட்டார்—உறவின் முறையார்க்கு உறவின் முறை யார்; மறுமையும் செய்வது ஒன்று உண்டோ—இந்தக் காலத் திலும் மறுமையும் போய்ச் சிலவுதவிகளைச் செய்வதுண்டோ?; இறுமளவும் இன்புறுவ இன்புற்று எழீஇ—சாமளவும் அவர் இன்புறுவனவற்றைத் தாமும் இன்புற்று நடந்து; அவரோடு துன்புறுவ துன்புருக்கால்—அவர் துன்புறுவனவற்றைத் தாமும் அவரோடு கூடியிருந்து துன்புருமல் இருப்பாராயின் என்றவாறு.

கருத்து:—இன்ப துன்பங்களில் பங்குகொள்ளாத உறவினரைத் தழுவலினும் அன்னியரைத் தழுவல் நன்று.

ஒப்புமைப் பகுதி:—

[1]"பாம்புக் கொடியாற்குப் [2]பான்மேனி யான்போலத்
நாக்கி யமருள் தலைப்பெய்யார்—போக்கி

---

[1] பாம்புக்கொடியான்—துரியோதனன்.
[2] பான்மேனியான்—பலராமன்.

வழியராய் நட்டார்க்கு மாதவம்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்."

—பழ. 13,
(சு).

210. விருப்பிலார் இல்லத்து வேறிருந்(து) உண்ணும்
வெருக்குக்கண் [1]வெங்கருனை வேம்பாகும்
—விருப்புடைத்
தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை
என்போ(டு) இயைந்த அமிழ்து.

தருமர்:—என்பது. விருப்பு இலார் இல்லத்து—தம்மை விரும்பாதார் இல்லிடத்து; வேறு இருந்து உண்ணும்—வேறே யிருந்துண்டும்; [2]வெருகு கண்—(பூனைக்)கண் போன்ற; வெம் கருனை—வெம்மையுடைய பொரிக்கறியுஞ் சோறும்; வேம்பு ஆகும்—வேம்புக்கு இணையாம்; விருப்பு உடை—தம்மிடத்து விருப்ப முடைத்தாய்; தன்போல்வார் இல்லுள்—வேறன்றித் தன்போல் ஒன்றாய் ஒழுகுமவர் மனையிடத்து; தயங்கு நீர்—[உண்கிற] தெளிந்த நீர் போலும்; தண் புற்கை—குளிர்ச்சி யுடைய புற்கையாகிலும்; என்போடு இயைந்த—என்பினளவுஞ் சென்று பொருந்திய; அமிழ்து—அமுதத்துக்குச் சரியாக விருக்கும் என்றவாறு.

விருப்பில்லாது கூடாநட்பாய் ஒழுகுவார் தன்மையை இழிவு கூறுவார், அவரில்லத்து உண்ணும் பொரிக்கறியுஞ் சோறும் நஞ்சென்பதாக்கி; விருப்பமுடைய தன் போல்வார் தன் உற்றாரிற் சேர்ந்தொழுகுதலை அறிவுறுத்தும் பொருட்டு அவரிடத் துண்ணும் புற்கையும் அமுதம் என்று வியந்து

---

[1]'வெங்கருனை வேம்பாகும்' என்ற உவமை இவ்வதிகாரத்தின் 10-ஆம் செய்யுளிலும் வந்துள்ளது.

[2]வெருகு + கண் : வெருக்குக்கண்; பூனைக்கண்போல் நிறமுள்ள பொரிக் கறி என்க.

வற்புறுத்தியது.

பரிமேலழகர் :—என்றது. காதலில்லாதார் மனைக்கண் அளவளாவுதலின்றி வேறு இருந்துண்ணும் வெருகின்கண்போன்ற நிறத்தையுடைய வெய்ய கருனைக்கறியும் வேம்புபோலும்; தன் மேற் காதலையுடைய தன்னைப்போல்வார் [1]இல்லினுள் பெறுந் தெளிந்த நீரில் குளிர்ந்த புற்கை என்பளவும் சென்று பொருந்திய அமிழ்து போலும் என்றவாறு.

விருப்பில்லார் இல்லம்—தன் நெஞ்சிற்குப் பொருந்தாதார் இல்லம். [2]வெருக்குக் கண் வெங்கருனை—வெருகுப் பூனையதன் கண்போல வெந்த பணியாரப் பொரியல்.

விளக்க உரை :—எ-ன். விருப்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்—தம்மை விரும்பாதார் மனையிடத்து வேறேயிருந்து உண்ணுகிற; வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாகும்—பூனைக்கண் போன்ற வெம்மையுடைய பொரிஞ்ச கறியும் வேம்புபோலேயிருக்கும்; விருப்புடைத் தன் போல்வார் இல்லுள்—தம்மேல் விருப்பமுடைய தம்மைப் போல்வார் மனையிடத்தில்; தயங்குநீர்த் தண்புற்கை—தெளிந்த நீரிற் குளிர்ந்த புற்கையை உண்கிறது; என்போடு இயைந்த அமிழ்து—என்பளவுஞ் சென்று பொருந்திய அமிர்தாய் இருக்கும் என்றவாறு.

கருத்து :—இதன் கருத்து இவ்வதிகாரத்து 6, 7-ஆம் செய்யுட்களோடு ஒத்தது.

மேற்கோள் பகுதி :—

மயிலை சங்கர } :—உயிர்த் தொடர்க் குற்றுகர மொழிகளுள், டற ஒற்று இரட்டுதலன்றி சிறுபான்மை பிற

---

[1] இல்லினுள்—மனையில்.

[2] 'வெங்கருனை வேம்பாகும்' என்ற உவமை முன் 207-ஆம் செய்யுளினும் வந்துள்ளது.

வொற்றும் வேற்றுமையில் இரட்டுதற்கு 'வெருக்குக்கண் வெங் கருனே' என்பதனை மேற்கோள் காட்டுவர்.

—நன். சூ. 182.
—நன். வி. சூ. 183.
(ய).

---

22. நட்பாராய்தல்.

தருமர்:—அஃதாவது ஒருவர் குணங்களை ஆராயாமல் விரைந்து நட்புக் கொண்டால், பிறகு ஒரு குற்றங் கருதி விடுகின்றது குற்றமாதலால், நட்புக் கொள்ளுமிடத்துக் குடியும், ஒழுக்கமும், நலனும் உறுதிப்பாடும், சத்தியமும் (பழுதுசெய்யாத் தன்மையும்) நீட்டிக்க ஆராய்ந்து நட்புக்கொள்ளக் கடவன் என்பதாம்.

பதுமனர்:—அஃதாவது நட்புச் செய்த பின்பு குடிப் பிறப்பும், ஒழுக்கமும், அறிவும், குணத்தினது நலங் தீங்குகளினும், சத்திய தன்மங்களினும், உலோக யாத்திரை களினும் இவனுக்குள வாசனைகளும் ஆராய்தலும்; பின்பு போற் றுதல் ஒழிதலும் இயல்பல்ல; ஆதலின் நட்பாவதற்கு முன்னே ஆராய்ந்து கொள்ளல் என்றவாறு.

குறிப்பு:—

'நட்பாராய்தல்':—

பரிமே:—அஃதாவது. மேற்சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்கவேண்டுதலின், அவரை ஆராயுந்திறம், அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:—நட்பாராய்தலாவது நட்பிற்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல், நட்குங்கால் ஆராய்ந்து நட்கவேண்டு

மாதலின்; [1] அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி :—நட்பாராய்தலாவது ஆராய்ந்து நட்புப்பெற வேண்டும் எ-று.

—குறள். அதி. 80.

211. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.

தருமர் :—என்பது. †கருத்து உணர்ந்து—[ஒருவருடன் நட்புக் கொள்ளுமிடத்து அவருடைய கல்வி முதலானவற்றை அவர்] மனத்தினால் நீட்டிக்க ஆராய்ந்து; கற்று அறிந்தார் கேண்மை—அறிவுடையாருடன் கொண்ட உறவு; எஞ்ஞான்றும் —எப்பொழுதும்; குருத்தின் கரும்பு தின்று அற்று—கரும்பைக் கொழுந்தாடை தொடங்கித் தின்று வந்தாற் போலாம்; என்றும் —எல்லா நாளும்; மதுரம் இலாளர் தொடர்பு—நன்மையில்லாதாருடன் கொண்ட உறவு; குருத்திற்கு எதிர்செல தின்று அன்ன தகைத்து—கரும்பை அடியே தொடங்கிக் கொழுந்தாடைக்கு எதிராகத் தின்று வந்தாற் போலும் தகைமையுடைத்து என்றவாறு. [அரோ—அசை]

மனநயம் இல்லாதாருடன் கொண்டஉறவு, அப்போதைக்கு இனிமையாய் நாளடைவில் வேறுபடும்; அதனால் அவர் தன்மையை நீட்டிக்க ஆராய்ந்து அத்தகைமையாரிடத்து நட்புக் கொள்ளவேண்டும் என்பதாம்.

---

[1] நட்புபின்.

†கருத்துணர்ந்து என்பதற்குத் தன் கருத்தினால் கற்கத்தகும் நூலை உணர்ந்து என்ற பொருளே சிறக்கும். நூல்களின் உட்பொருளை உணர்ந்து என்பாரும் உளர்.

பதுமனுர் :—என்றது. தன் கருத்தினுற் கற்கத்தகும் நூலேயுணர்ந்து கற்றறிந்தாரோடு கொண்ட கேண்மை, கரும்பைக் குருத்தே தொடங்கித் தின்ருற் போலும். தன் குருத்திற்கு எதிராகச் செல்லத் தூரே தொடங்கித் தின்ருற் போலும் தன்மை யுடைத்து எஞ்ஞான்றும் இனிமையில்லாத குணங்களே யுடையா ரோடு கொண்ட கேண்மை என்றவாறு.

கேண்மை—தொடர்ச்சி.

விளக்க உரை :—எ-து. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை—கருத்தினுற் கற்கத்தகும் நூல்களேயுணர்ந்து கற்றறிந் தாருடன் கொண்ட உறவு; எஞ்ஞான்றும் குருத்திற் கரும்பு தின்றற்றே—எல்லா நாளுங் கரும்பைக் குருத்தே தொடங்கித் தின்று வந்தாற்போலும்; குருத்திற்கு எதிர் செலத்தின்றன்ன தகைத்து—குருத்திற்கு எதிராக அடியேதொடங்கித் தின்று வந்தாற் போலுந் தகுதியுடைத்து; என்றும் மதுரம் இலாளர் தொடர்பு—எப்பொழுதும் மனநய மில்லாதாருடன் கொண்ட உறவு என்றவாறு.

கருத்து :—அறிஞர் நட்பு இனிமை மிகுவதால் அத்தை உணர்ந்து நட்புக் கொள்ளவேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

"கனைகடல் தண்சேர்ப்ப ! கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு".

—நாலடி. 138.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு".

—குறள். 782.

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்

வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு".

—நாலடி. 125.

"நளிகடல் தண்சேர்ப்ப! நாள்நிழற் போல
விளியும் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு."

—நாலடி. 166.

குறிப்பு.—

கரும்பை நுனியிலிருந்து அடிவரை தின்னுங்கால் சுவை மிகும்; அடியிலிருந்து நுனிவரை தின்னுங்கால் சுவை குறையும்; இது அறிஞர் நட்பு வரவரப் பெருகுதற்கும், அறிவிலார் நட்பு வரவரச் சிறுகுதற்கும் உவமையாம்.

(க).

212. இற்பிறப்(பு) எண்ணி இடைதிரியார் என்பதோர்
[1]நட்புடைக் கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனல்ஒழுகப் புள்இரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன்(று) அன்று.

தருமர்:—என்பது. [2]பொன்கேழ் புனல்ஒழுக—பொன் னைக் கொழித்து விழுகின்ற அருவியின் ஆரவாரத்தினாலே; [3]புள் இரியும்—புள்ளுகள் இரிந்தோடும்; பூ குன்றம் நாட!—பொலிவு பெற்ற மலைநாடனே!; இல் பிறப்பு எண்ணி—ஒருவர் குடிப் பிறப்பைக் கருதி; இடைதிரியார்—இவர் நடுவே வேறுபடுமவ ரல்லர்; என்பது ஓர் நட்புடை—என்று ஒருதலையாக நட்புடைமை

[1]'நற்புடை' என்பது பதுமனார் பாடம்.
[2]'பொன் கேழ் புனல்—பொன்கொழிக்கும் நல்ல நிறமுள்ள அருவிநீர்.
[3]புள் இரியும்—பறவைகள் அஞ்சி ஓடும்.

யாக; கொண்டமை அல்லது—கொண்டதல்லாமல்; மனம் அறியப் பட்டது ஒன்று அன்று—அவர் மனத்தினால் அளவிடப்பட்ட தன்று என்றவாறு.

எனவே, ஒருவரை நட்புக்கொள்ளுமிடத்து அவர் குடிப் பிறப்பு ஒன்றினையும் கொண்டு நட்புறாமல், அவர் மனத்தினையுந் தெர ஆராய்ந்து நட்புக்கொள்ளவேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. குடிப்பிறப்புடையார் (என்று கருதி, இவர் நடுவு) வேறுபடார் என்று ஒரு(தலையாக) [1]நன் மருங்கு கொண்ட அத்துணையல்லது அவர், மனத்தினை அளவிடப் பட்டது ஒன்றன்று பொற்கேழ் புனல் ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாடனே! என்றவாறு.

இடைதிரியார்—உறவு கொண்டால் நடுவே விட்டு நீங்கார். பொன் கேழ் புனல்—பொன்மை நிறத்தையும், கொழுமுதலையு முடைய புனல். பூங் குன்றம்—பல [2]போதுகளையும் உயர்ச்சியை யும் உடைய மலை. மனம் அறியப்பட்டது ஒன்றன்று— ஒழுக்கத்தையும், உபகாரத்தையும் அறிந்து உறவு கொள்ளுமதன்றி ஒருவர் மனத்தைப் புகுந்தறியலாமே என்பாருமுளர்.

விளக்க உரை:—எ-து. இற்பிறப்பு எண்ணி—குடிப் பிறப்பைக் கருதி; இடைதிரியார் என்பதோர் நற்புடை கொண்டமை அல்லது—இவர் நடுவு வேறுபடும்வரல்லர் என்று ஒருதலையாக நன்மருங்கு கொண்டதல்லது; பொற்கேழ் புனல் ஒழுகப் புள் இரியும் பூங்குன்ற நாட!—பொன்னைக் கொழித்து விழுகிற அருவியினாற் புள்ளுகள் இரிந்தோடும் பூக்களையுடைய மலைநாடனே!; மனம் அறியப்பட்டதொன்று அன்று—அவர் மனத்தினை அளவிடப்பட்டதொன்றன்று என்றவாறு.

---

[1] நற்புடை—நன்மருக்கு; நல்ல தன்மை.

[2] போது—பூக்கள்.

கருத்து:—ஒருவரது குடிப்பிறப்பேயன்றி அவர் மனத்தையும் தீர ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்.

(உ).

213. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த
மெய்யதா வால்குழைக்கும் நாய். [வேல்

கருமர்:—என்பது. யானை அனையவர்—யானை போலும் பெருமை யுடையாரிடத்து; நண்பு—கொள்ளும் நட்பை; ஓரீஇ—ஒழித்து; நாய் அனையார் கேண்மை—நாய்போன்ற இழிவுத் தன்மையுடையராயினும் அவரிடத்து நட்பினை; தழீஇக் கொளல்—விரும்பிக் கொள்ளல்; வேண்டும்—வேண்டுமாயிருக்கும்; [அஃது என்னெனில்] யானை—[1]ஆனை; அறிந்து அறிந்தும்—[தனக் கேற்ற உணவுகளைக் கொடுத்து வளர்க்கும் பாகனை] அறிந் திருந்தும்; பாகனையே கொல்லும்—அப்பாகனை ஒருவேளையிலே கொன்றுவிடும்; நாய்—நாயானது; எறிந்த வேல்—[தன்னையுடையவன்]எறிந்தவேல்; [2]மெய்யது ஆ—தன்மெய்யினில் பட்டுருவி நிற்க; வால் குழைக்கும்—தன்வாலைக் குழைத்து அவனருகே செல்லாநிற்கும்.

ஆதலால், குடிகுல வுயர்ச்சி நோக்கி நட்புக்கொள்ளாமல் ஒருவர் மனத்தூய்மையை ஆராய்ந்து, மனந்தூயரானூர் குடி குலத்தில் தாழ்ந்தவராயினும் அவருடன் நட்புக்கொள்ளக் கடவன் என்றவாறு.

ஆனைபோலும் பெரியோர் என்பது அரசர் முதலாயினோரை.

---

[1] 'ஆனையாய்க் கோடமாய்'—திருவா. 8. 14.

[2] மெய்—உடம்பு.

பதுமனார் :— என்றது. யானை அனையவரோடு கொள்ளும் நட்பைத்தவிர்ந்து செய்ந்நன்றி யறியும் நாயனையரோடு கொள்ளும் நட்பை மருவிக் கொளல்வேண்டும். யானை, பாகன் செய்யும் நன்றிகளை அறிந்தறிந்தும் அவனைக் கொல்லும். தன்னை வளர்த்து நன்மை செய்தவன் எறிந்தவேல் மேலெடுத்து உருவி நிற்கையிலும் தன்வாலைக் குழைக்கும் அவன்முன் நாய் என்றவாறு.

யானை அனையவர் நண்பு ஒரீஇ—யானை உயர்ச்சியும், சீர்த்தியும், [1]சவுரியமும் உடைத்தாம்; அதுபோல உயர்ச்சியை யுடையார் உறவை விட்டுநீங்குக. யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்—தனக்குக் கவளமும், புல்லுந் தழையும் பல வுதவிகளும் செய்வதறிந்தும் ஒரு குற்றத்திலே முன்செய்த நன்மையை மறந்து பாகனைக் கொல்லும் அதுபோல என்றவாறு.

விளக்க உரை :— எ-று. யானை அனையவர் நண்பு ஒரீஇ—யானைபோலே இருக்கும் பெரியோருடனே கொள்ளும் நட்பை ஒழிந்து; நாய் அனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்—நாயைப் போல்பவர் நட்பினை விரும்பிக் கொள்ளக் கடவன்; (அஃதெப்படி யென்னில்) யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்—அந்த யானை (பழகியிருந்தும்) கவளமிட்டு வளர்க்கும் பாகனை [2]ஒருபடியாற் கொன்றுவிடும்; எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்—தன்னை யுடையவன் வேல் மெய்யிற் பட்டுருவி நிற்கவும் நாய் தன் வாலைக் குழைக்கும் என்றவாறு.

ஆதலாற் குடியும் குலமும் உண்டென்று நட்புக்கொள்ளாமல் அவரவர் மனத்தினை ஆராய்ந்து, துய்யராயிருந்தார் பால் குடியும் குலமும் இல்லையாயினும் அப்படி யொத்தாரை நட்புக் கொள்ளக்கடவன்.

கருத்து :— குடிப்பிறப்பில்லார் மனந்தூயராயின் அவருடனேயே

---

[1] சவுரியம்—வலிமை, சூரத்தனம்.

[2] ஒரு பகையால். படி—பகை; 'படிமதஞ் சாம்ப வொதுக்கி' —பரிபா. 4.18.

நட்புக் கொள்ளவேண்டும்.

மேற்கோள் பகுதி :—

பேரா :-உவமத்திற்கு ஆவதோர் இலக்கண முணர்த்துவார், "யானை யனையவர்...............கொளல் வேண்டும்—" என்பதும் அது. இவையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற்றீராக் குறிப்பின் வந்த வழக்காதல் அமைந்தன வென்பது" என்பர்.

—தொல். பொருள். சூ. 285.

குறிப்பு :—

சிறியோர் பலநாள் உதவி பெற்றாலும், ஒரு சிறு பிழைக்காக அவற்றை மறந்து நமக்குத் தீங்கு செய்வர்; பெரியோர் தமக்குப் பலபிழை நேர்ந்தாலும் ஒரு நன்றியை மட்டும் எண்ணி அப்பிழைகளை மறப்பர்; ஆகவே, யானை-நாய் இவை சிறியார்க்கும் பெரியார்க்கும் முறையே நன்றி மறத்தற்கும், நினைத்தற்கும் மட்டுமே உவமையாம்.

(௩).

214. பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சிற்
சிலநாளும் †ஒட்டாரோ டொட்டார்—பலநாளும்
நீத்தார் எனக்கை விடலுண்டோ? தன்னெஞ்
சியாத்தாரோ(டு) யாத்த தொடர்பு. [சத்(து)

தருமர் :—என்பது. பலநாளும்—; பக்கத்தார் ஆயினும்—தம் அருகு இருந்தாராயினும்; நெஞ்சில்—; சிலநாளும்—சிறிது பொழுதும்; ஒட்டாரோ—பொருத்தமில்லார்; ஒட்டார்—எவ்வகையும் உறவல்லர்; தம் நெஞ்சத்து—தமது நெஞ்சினாலே; யாத்தாரோடு—பிணிக்கப்பட்டாருடன்; யாத்த—பிணிப்பாகக் கொண்ட; தொடர்பு—உறவினை; பலநாளும்—; நீத்தார் என

---

†'நட்டாரோடு ஒட்டார்' என்பது பதுமனார் பாடம்.

—தம்மைவிட்டு நீங்கி யிருந்தார் என்று; கைவிடல் உண்டோ?—(அவரைக்) கைநெகிழவிடல் தக்கதோ? என்றவாறு.

கூடாநட்பாய் ஒழுகுவார் பலநாளும் தம்மிடத்திருந்து அவர் காரியம் முடியுமளவும், இனிமையாக நடப்பினும் அது நட்பு அன்று. நெஞ்சிற் பிணிப்புண்டானவர் தம்மைவிட்டு நீங்கி யிருந்தாலும் அவரே நட்பிற்குரியார். ஆதலால் ஒருவர் குணங்களை நீட்டிக்க ஆராய்ந்து நட்புச் செய்ய வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. நெஞ்சிற் கலப்பில்லாதார் தம்முடனே, நாள்தோறும் அருகுவிடாமல் பழகினும் சில(நாளும்) நட்பாகக் கொள்ளார்; பலநாளும் நீங்கினர் என்று கருதிக் கைவிடல் உண்டோ? தம் மனத்தின்கண் பிணிக்கப்பட்டாருடனே பிணித்த நட்பினை என்றவாறு.

விளக்க உரை:—எ-து. பலநாளும் பக்கத்தார் ஆயினும்—பல நாளும் தம் மருங்கிருந்தாராயினும்; நெஞ்சிற் சிலநாளும் ஒட்டாரோ ஒட்டார்—நெஞ்சிற் சிறிது பொழுதும் பொருத்தமில்லாதவர் எப்படியும் உறவல்லர்; பலநாளும் நீத்தார் எனக் கைவிடல் உண்டோ?—பலநாளும் நீங்கினர் என்று அவரைக் கைவிடத்தக்கதோ?; தம்நெஞ்சத்து யாத்தாரோடு யாத்த தொடர்பு—தமது நெஞ்சிலே பிணிக்கப்பட்டாருடன் கொண்ட பிணிப்புள்ள நட்பினை என்றவாறு.

கருத்து:-மனக்கலப்புடையாரையே நட்பிற்குரியராகக்கொள்ள வேண்டும்.

ஒப்புமைப் பகுதி:—

"செல்வுழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் தோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட! சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி". —நாலடி. 154.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்".

—குறள். 785.

"தூர்ந்தொழுகிக் கண்ணுந் துணைகள் துணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணுஞ் [1]சலவர் சலவரே"

—திரிக. 51.

"கேட்டன் மாத்திரை யல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகல்என்று
ஐயம் கொள்ளன்மின் ஆறறி வாளீர்"

—புறம். 216 : 1—5.

"நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்"

—முதுமொழிக். 5—5.

"காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெரும் கேண்மையினர்
பூண்டபெருங் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅரசு அமுதுசெயத் திருவமுதாம் படிஅமைத்து".

—பெரிய. திருநாவுக். 203.

குறிப்பு :—

நட்பிற்கும் நட்பில்லாமைக்கும் என்றும் சேர்ந்திருப்பதும் பிரிந்திருப்பதும் காரணம் ஆகா; மனக்கலப்பே நட்பிற்குக் காரணமாகும்.

(ச).

215. [2]கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி—தோட்ட

---

[1] பகைவர்.

[2] கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, புதற்பூ எனப் பூவகை ஐந்தாம்.

கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்.

தருமர் :—என்பது. கோடு பூ போல—கொம்பிலே அலர்ந்த பூப்போல; மலர்ந்து—முன் மலர்ந்து; பின் கூம்பாது—பின்பு குவியாமல்; வேட்டதே—தலைநாளிலே விரும்பி உடன் கொண்ட கோட்பாடே; வேட்டது—விருப்பமாகக் கொண்டு செலுத்துவது; நட்பு ஆட்சி ஆம்—நட்புக்கு இயல்பாவதாம்; தோட்ட—தோண்டின; [1]கயம் பூ போல்—கயத்திலுண்டாகிய பூவைப்போல; முன் மலர்ந்து—; பின் கூம்புவாரை—பிறகு கூம்புந்தன்மை யுடையவரை; நயப்பாரும்—விரும்புவாரும்; நட்பாரும்—நட்புச் செய்வாரும்; இல்—இல்லை என்றவாறு.

கொம்பிலே அலரும் பூக்கள் அலர்ந்த பிறகு குவியாது. கயத்திற்பூ முதலே அலர்ந்து பிறகு குவியும்; நட்பிற் குரியார் கொம்பிற்பூப் போலுந் தன்மையராய் இருப்பர். கயத்திற் பூ அன்னார் நட்பு, பின்னாளிலே தேய்ந்து வேறுபடும். அதனால் நட்பிற் குரியாரைத் தன்னறிவினால் ஆராய்ந்து கொள்க என்பதாயிற்று.

பதுமனார் :—என்றது. மரத்தினது கோட்டின் பூவே போல விரிந்து, பின் குவியாதே ஒருவனைக் காதலித்து நட்புக் கொண்டால், அந்த நட்பினை விடாது அன்புபடுவது நட்புக் கோடலாவது. தோண்டிய பொய்கையிற்(பூவே)போல முற்பட விரிந்து, பின்பு குவியும் நட்புடையாரைக் (காதலி)ப்பாரும் நட்பாரும் இல்லை என்றவாறு.

தோட்ட கயம்—வெட்டி எடுத்த(பொய்கை). தோட்ட கயப்பூப் போல—கயத்தின்கண்ணே தோய்ந்து நின்ற தோடாகிய இதழையுடைய பூ என்றுமாம்.

---

[1] கயம்—குளம்.

விளக்க உரை :—எ-து. கோட்டுப் பூ போல மலர்ந்து பின் கூம்பாது—கொம்பிற் பூப்போல மலர்ந்து பிறகு கூம்பாது; வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி—தலைநாளில் விரும்பி யுட்கொண்ட கோட்பாடே விருப்பமாகக் கொண்டு நட்புச் செய்தலாம்; தோட்ட கயப்பூப் போல் முன்மலர்ந்து பின்கூம்புவாரை —தோண்டின கயத்திற் பூப்போல முன்மலர்ந்தும் பின்பு குவிந்தும் இப்படி ஒழுகுவாரை; நயப்பாரும் நட்பாரும் இல் —விரும்புவாரும் இல்லை அவருடன் நட்புக் கொள்வாருமில்லை என்றவாறு.

கருத்து :—என்றும் முகமலர்ச்சியுடன் விரும்புவாரே நட்பிற்குரியராவர்.

மேற்கோள் பகுதி :—

பரிமே :—உயர்ந்தோர் நட்பிடத்து, 'கயப்பூப் போல வேறுபடாது கோட்டுப்பூப் போல ஒருநிலையே நட்பாயினன் எல்லாவின்பமும் எய்தும்' என இச்செய்யுளின் கருத்தை மேற்கோள் காட்டுவர்.

—குறள். 425.

ஒப்புமைப் பகுதி :-

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு".

—குறள். 425.

"நலமிக உயர்ந்தோர் தன்மை நண்புறத் தழுவிக்கொள்க
நிலவிய கயத்துப் பூவைநிகர்தரா துயர்ந்த கோட்டின்
அலரென அவர்பால் நிற்க ஆக்கமிக் கடுத்தகாலை
மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலும் ஒழிக மைந்தா".

—விசா. அரசி. 51.

(௫).

216. கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்(று) இட்டஞான்
தொன்மை யுடையார் தொடர்பு. [றிட்டதே

தருமர்:—என்பது. கடையாயார் நட்பில் கமுகு அனையர்—கடையாயினருடன் கொண்ட நட்புக் கமுகோடு ஒக்கும் [கமுகுக்கு [1]நித்தலும் [2]பரிகாரஞ் செய்வது போலச் செய்யில் நட்பாம்]; ஏனை இடையாயார் தெங்கின் அனையர்—மற்றை இடையாயாருடன் கொண்ட நட்புத் தெங்கோடு ஒக்கும் [தென்னை மரத்துக்குப் பரிகாரஞ் செய்வது போலச் செய்யில் நட்பாம்]; தலையாயார் எண் அரு பெண்ணை போன்று (அனையர்)—தலையாயாருடன் கொண்ட நட்பு எண்ணுதற்கரிய பனைபோலும்; இட்ட ஞான்று இட்டதே—அது வைக்கும் நாளையிலே வார்த்த தண்ணீரன்றிப் பிறகு பரிகாரஞ் செய்யாமலே பயனைக் கொடுப்பதுபோல் நட்பாம்; தொன்மை உடையார் தொடர்பு—பழைய முறைமையினையுடைய சான்றோர்களாற் சொல்லப் பட்ட நூலின் முறைமை இது என்றவாறு.

தொடர்பு என்பது செய்யுட்கள். உத்தம மத்திமம் அதமம் என்பதைக் கடை இடைதலை எனக்கூறினாராதலால், ஒருவருடன் நட்புக் கொள்ளுமிடத்து அவர் தன்மையை நீட்டிக்க ஆராய்ந்து நட்பிற் குரியாருடன் நட்புச் செய்ய வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கடையாயார் நட்பின்கண் கமுகனையர்; அதனை ஒழிய இடையாயார் நட்பின்கண் தெங்கின் அனையர்; இட்டஞான்று இட்டசெய்தி யுடைத்தாய்ப் பிறிதொன்றினோடு ஒக்கும் என்று, எண்ணுதற் கரிதாயுள்ள பெண்ணை போன்றனையர் நட்பின்கண் தலையாயினர் என்று, இப்பெற்றியால் தொன்மையுடையார் கூறுபடுத்திச் சொன்னார் என்க

[1] நித்தலும்—நாள்தோறும்.
[2] பரிகாரம்—பராமரிப்பு.

நட்பினை என்றவாறு.

கடையாயார் நட்பில் கமுகனையர்—கமுகும் ஒருதழும்பு பட்டால் அது விழுந்து போமளவுந் தழும்பு கிடப்பது போலக் கடையாயினர்க்கும் ஒரு குற்றஞ் செய்தால், அக்குற்றத்தைச் சாமளவும் மறவார். ஆதலால் அவருறவைக்கொள்ளாது ஒழிக. கமுகுக்கு நாள்தோறும் இறைக்கவும் மேற்றலையில் குற்றமாய புழுக்கடியும் பார்த்துப் பேணினற்போல இவனுக்கு நாள் தோறும் [1]செய்யும் ...அருஷதஞ் செய்யவேண்டும். அது ஒழிந்தால் கமுகு தலைகெட்டு விழுந்தாற்போல இவனும் விழு மளவும் [2]தீனகு விசாரிப்பான் என்றவாறு.

இடையாயார் தெங்கின் அனையர்—தெங்கிற்குத் தலையாலே தண்ணீர் சுமந்து அடியிலே வார்க்கப் பின் தலையாலே நீரைத் தருதலால் இவர்க்கும் முன்பு நன்மைசெய்தால் பின்பு வரும்.

எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே தொன்மையுடையார் தொடர்பு—எண்ணுதற்கரிய பனையும் ஒரு நாள் விதையிட்டாற் பின்பு பாதுகாக்க வேண்டாம். பின்பு பயன்பட்ட காலத்திலே சென்று பயன் கொண்டாற் போல அறிவும், ஒழுக்கமும், பெருமையும், முயற்சியும், ஒழியாமல் தொன்றுதொட்டு வரும் பழைமையை யுடையார் உறவை விடாது கொள்ளுதல் நன்று என்று உரைப்பாரு முளர்.

விளக்க உரை :—எ-து. கடையாயார் நட்பில் கமுகு அனையர்—கடையாயினருடன் கொண்ட நட்புக் கமுகோ டொக்கும்; எனை இடை ஆயார் தெங்கின் அனையர்—மற்றை இடையாயினருடன் கொண்டநட்பு தெங்கோ டொக்கும்; தலையாயார்—தலையாயினருடன் கொண்ட நட்பு, எண்ணரும் பெண்ணை போன்று இட்ட ஞான்று இட்டதே—எண்ணுதற் கரிய பனைபோல் இட்டநாளிலே இட்டாற்போலும் [பின்னர்

1, 2 இவ்விடங்களில் சில எழுத்துக்கள் விடுபட்டுள்ளன. ஆதலின் கருத்து விளங்கவில்லை.

ஒரு பரிகாரமுஞ் செய்யவேண்டா]; தொன்மையுடையார் தொடர்பு—பழைய முறைமையினை யுடைய சான்றோர் செய்யுட்களிலே இப்படிக் கூறுபடுத்திச் சொன்னார் என்றவாறு.

ஆதலால் நட்பினை ஆராய்ந்து கொள்ள வேண்டும். தொடர்பு என்பது செய்யுட்களை.

கருத்து:—எப்போதும் உதவி பெறுவிடினும், ஒருபடித்தாய்ப் பயன்படும் உத்தமரிடமே நட்புக்கொள்ள வேண்டும்.

மேற்கோள் பகுதி:—

யா. வி.:—நேரிசை வெண்பா மூரணாய் இருவிகற்பத்தான் வந்ததற்கு இச்செய்யுளை எடுத்துக்காட்டுவர்.

—செய். சூ. 60.

பேரா:—"கடையாயார் நட்பிற் கமுகனையர்—என இதனுள் ஓரினத்தவாகிய புல்லே கூறி ஒழிந்த மரங்களொப்பன உளவாயினும் உடன் கூறாராயினர். இன்னோரன்னவுஞ் செய்யுட்கு மரபெனப் படுமென்பது" என்று இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர்.

—தொல். செய். சூ. 392.

மாறனலங்:—இவரும் மரபுவமைக்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—சூ. 105.

ஒப்புமைப் பகுதி:—

"உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமரவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து.

—நீதிவெண்பா.

குறிப்பு :—

கமுகுக்கு நாள் தோறும் பராமரித்தலும், தென்னைக்கு இடையிடையே பராமரித்தலும், செய்தால் அவை பயன்படும்; ஆனால் பனைக்கு முதலில் நட்டதே யன்றிப் பின் பராமரிப்பு வேண்டாது என்றும் பயன்படும். இவைபோன்ற தன்மையினை யுடையார் கடை, இடை, தலையாயினர் என்றவாறு.

(௬).

217. கழுநீருட் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்—விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே ஆயினும்
கைத்துண்டல் காஞ்சிரங் காய். [மேவாதார்

தருமர் :—என்பது. கழுநீருள் கார் அடகு எனும்—[1]கழு நீரிலே வெந்த பசிய இலைக்கறியானாலும்; ஒருவன்—; [2]விழுமிது ஆ கொள்ளின்—அதனைச் சீரிதாக மனத்தில் விரும்பிக் கொண் டால்; அமிழ்து ஆம்—அது அமுதமாகவிருக்கும்; விழுமிய —சீரிய, [3]குய் துவை ஆர் வெள் சோறே ஆயினும்—நறைப் புகையோடுங் கூடிய வெள்ளிய சோறாயினும்; மேவாதார் கைத்து உண்டல்—அன்னியரிடத் துண்பது; காஞ்சிரம் காய்— எட்டிக்காய்க்கு இணை என்றவாறு.

காரடகு—உப்பும் இன்றி வெந்தது; நன்றாய் வேகாதது. எனவே மனந்தூயவரன்றிக் கூடாநட்பாக ஒழுகுவாரை ஆராய்ந்து நட்புச்செய்க என்பதாம்.

---

[1]கழுநீர்—அரிசி கழுவின நீர்.

[2]விழுமிது ஆ கொள்ளின்—சிறந்த அன்புடையதாகக் கொடுக்கப் பெற்றால்.

[3]குய்—தாளித்த கறி, நறும் புகையுமாம். துவை—துவையல். ஆர்— நிறைந்த.

பதுமனுர் :—என்றது. கழுநீருள் பெய்து அட்ட பச்சட காயினும், ஒருவனோடு கொண்ட நட்பை விழுமிதாகக் கொள்ளின் அமிழ்து போலாகும். விழுமிய குய்த்துவை ஆர்ந்த வெண் சோறே ஆயினும், கொண்ட நட்பினை விரும்பாதார் கையுள் அதனை உண்டல் காஞ்சிரங்காய் போலும் என்றவாறு.

பெய்தல்—இடுதல். அடகு—இலைக்கறி. குய்த்துவை—மறுப் பொறுக்கின சோறுமாம்; கொள்ளுத் துவையோடு கூடிய சோறுமாம். மேவாதார்—நட்பை விரும்பாதார். 'ஒவ்வாதார் கைத்துண்டல்' என்று பாடமோதித் தன் மனத்துக்குப் பொருந் தாதார் மனை என்று பொருளுரைப்பாரு முளர்.

விளக்க உரை :—எ-து. கழுநீருள் காரடகேனும்—கழுநீரிலே வெந்த பச்சடகாயினும்; ஒருவன் விழுமிது ஆக்கொள் ளின் அமிழ்தாம்—அதனை ஒருவன் மனத்தினுற் சீரிதாகக் கொள்ளுவனுகில் அமிழ்தமாம்; விழுமிய குய்த் துவை ஆர் வெண் சோறே ஆயினும்—சீரிய நறைப் புகையினையுடைய வெள்ளிய சோறே யாயினும்; மேவாதார் கைத்துண்டல்—அன்னியர் கைப் பொருளாகிய வுணவை யுண்டல்; காஞ்சிரங்காய்—எட்டிக்காயோ டொக்கும் என்றவாறு.

காரடகு என்றுர் உப்பில்லாமல் வெந்த இலைக் கறியை.

கருத்து :—உள்ளன்புடன் உதவுபவரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

'விழுமிய, குய்த்துவை' :—

"குய்க்கொள் கொழுந்துவை"

—புறம். 160 : 7.

குறிப்பு :-

அட்டகு விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாவதற்கு ஔவை

யார் பாரிமகளைக் குறித்துப் பாராட்டிப் பாடிய பாடல் எடுத்துக் காட்டாகும். அது வருமாறு :—

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறியாதோ கைக்கு"

(எ).

218. நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணியர் ஆயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னும்?
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்
வாய்க்கால் அனையார் தொடர்பு. [விளக்கும்

தருமர் :—என்பது. நாய்க்கால் சிறுவிரல் போல்—நாயின் காலில் இருக்கும் சிறுவிரல் போல; நன்கு அணியர் ஆயினும்—மிகவும் அடுத்திருப்பாராயினும்; [1]ஈ கால் துணையும்—ஈயின் காலளவு ஆயினும்; உதவாதார் நட்பு —உதவி செய்யாதவர் நட்பு; என் ஆம்?—என்ன பயனுக்காம்?; [2]செய் விளக்கும் வாய்க்கால் அனையார்—[செய்யைக் கொண்டு தனக்கொரு பயனும் இல்லையாயினும், தூரத்திலே(யுள்ள) நீர் கொண்டுவந்து] செய்யை விளைவிக்கும் வாய்க்கால் போலும் அத்தன்மை யுடையாரது; தொடர்பு—நட்பினை; சேய்த்தானும் சென்று—தூரத்திலே ஆனாலும் அவ்விடத்திற் சென்று; கொளல் வேண்டும்—கொள்ளக் கடவன் என்றவாறு.

நட்பினால் பயன் கூறுதற் பொருட்டுத் தூரத்திலே சென்றாகிலும் வாய்க்கால் போலுந் தன்மையாரை நட்புக் கொள்ள வேண்டும் என்றார். அருகே இருந்தாலும் நாய்க்காற் சிறுவிரலினாலே பயன் ஒன்றுமில்லை. ஆதலால் மறு தேசங்களிலே

---

[1] ஈக்கால்—உதவியின் சிறுமைக்கு எடுத்துக் காட்டியதோர் அளவு.
[2] செய்—வயல்.

சென்று தேடியாகிலும் நட்பிற் குரியாரிடத்து நட்புச் செய்ய வேண்டும் என்பது கருத்து.

பதுமனர்:—என்றது. நாய்க்குத் தன் காலிற் சிறுவிரல் அணித்தாயினாற் போலத் தம்முடன் நட்புக் கொண்டார் மிக அணியராயினும், ஈயினது காலளவும் பயன் படாதாரோடு கொண்ட நட்பு என்ன பயன் செய்யும்? சேய்த்தாயினும் சென்று கொளல் வேண்டும் செய்யை விளைக்கும் வாய்க்காலை அனையார் நட்பினை என்றவாறு.

சேய்த்தானும்—தூர இருந்தாராயினும்; வாய்க்கால் அனையார் (தொடர்பு கொளல் வேண்டும்)—குளத்திற்குச் [1]செறு தூரத்ததே ஆயினும், குளத்தின் நீரைக் கொண்டு சென்று அச் செறுவை விளைத்துப் பயனைத் தந்(தாற் போலவும்), வெட்டி எறவும் குத்திப் போடவும் பொறுத்துச் செறுவுக்குக் குளத்தின் நீரைக் கொடுத்தாற் போலவும்; செய்த குற்றத்தைப் பொறுத்துப் பயனைக் கொடுக்கும் பெரியோரைச் சென்று நட்புக் கொள்க என்பாருமுளர்.

விளக்க உரை:—எ-று. நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கு அணியராயினும்—நாயின் காலிற் சிறுவிரல் போல மிகவும் அணியாராயினும்; ஈக்கால் துணையும் உதவாதார் நட்பு என்னும்?—ஈயின் காலளவும் உதவிசெய்யாதவர் நட்பால் என்னபயன் உண்டாம்?; சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும்—தூரத்திலே ஆயினும் அவ்விடத்துச் சென்று நட்புக் கொள்ளக் கடவன்; செய்விளைக்கும் வாய்க்கால் அனையார் தொடர்பு—[வாய்க்கால் தனக்குச் செய்யைக் கொண்டு ஒரு பயனில்லையாயினும் தூரத்து நீரைக் கொண்டு வந்து] செய்யை விளைக்கும் வாய்க்கால் போலும் பண்புடையாரது நட்பு என்றவாறு.

கருத்து:—உதவும் பண்பினரை ஆராய்ந்து தேடி நட்புப் பெற

---

[1]செறு—வயல்.

வேண்டும்.

(அ).

219. தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயின் நன்றால்—அளிய
இகழ்தலிற் கோறல் இனிதே; மற்றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

தருமர் :—என்பது. [1]தெளிவு இலார் நட்பின்—மனத் (தூய்மை)இல்லாதார் நட்பினும்; பகை நன்று—(மனந் தூயா ருடன் கொண்ட) பகை நன்மை; [2]விளியா அருநோயின்—மருந்தினால் தீராத நோயினும்; சாதல் நன்று—சாதல் நன்மை; அளிய இகழ்தலின்—(ஒருவனை நெஞ்சு) நோக வைகின்றதினும்; கோறல்—அவனைக் கொல்வது; இனிது—நன்று; இல்ல புகழ் தலின்—ஒருவனுக்கு இல்லாதது ஒன்றை உண்டாக்கிப் புகழ் வதினும்; வைதலே நன்று—அவனை வைதல் நன்று என்றவாறு.

ஆல், மற்று—அசை. ஆதலால் மருந்தில் தீராத நோயும், இல்லாதது சொல்லிப் புகழ்தலும், ஒருவனை நெஞ்சு நோகப் புண்படுத்துவதும் கூடா நட்பினது தன்மையாயிற்று. அத் தன்மையாரன்றி மனந் தூயாரிடத்து நட்புக்கொள்ள வேண்டும் என்பதாம்.

பதுமனார் :—என்றது. தேறப் படுந்தன்மை யில்லாதவ ரோடு (கொள்ளும்) நட்பில் பகை நன்று; செய்த மருந்தில் தீராமல் நீட்டிக்கும் நோயில் சாதல் நன்றாம்; ஒருவனை மிக இகழ்ந்துரைத்தலில் கொல்லுதல் நன்று; ஒருவனுக்கு இல்லாத குணத்தைச் சொல்லிப் புகழ்தலில் அவனை வைதலே நன்று என்றவாறு.

---

[1]தெளிவு—அறிவுத் தெளிவு என்றும் நம்பிக்கை என்றும் கொள்ளலாம்.
[2]விளியா வரும் நோய் எனப் பிரித்து நீங்காது வருகின்ற நோய் என்பாரும் உளர்.

விளக்க உரை :—எ-து. தெளிவிலா நட்பிற் பகைநன்று—உள்ளீர மில்லாத உறவிற் பகை நன்று; சாதல் விளியா அரு நோயின் நன்று—மருந்தில் தீராத நோயிற் சாதல் நன்று; அளிய இகழ்தலின் கோறல் இனிது—ஒருவனை நெஞ்சு நோவ வைகிறதினும் அவனைக் கொல்லுகிறது நன்று; இல்ல புகழ்தலின் வைதலே நன்று—ஒருவனுக்கு இல்லாத தொன்றினைச் சொல்லிப் புகழ்தலின் அவனை வைதலே நன்று என்றவாறு.

மற்றும் ஆலும் அசை.

கருத்து :—மனத் தூய்மை இல்லாதாருடன் நட்புச் செய்தல் கூடாது.

குறிப்பு :—

உடம்பைவிட்டு உயிர் போயதும் அதற்குத் துன்பமில்லை யாதலின் 'சாதல் நன்று' என்றார்.

தெளிவிலார் நட்பில் பகைநன்று என்பதற்கு, நோயிற் சாதலும், இகழ்தலிற் கோறலும், புகழ்தலின் வைதலும் உவமைகளாம்.

(க).

220. மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

தருமர் :—என்பது. பலரோடு—பலருடனும்; பல்நாள் முயங்கி மரீஇ—பலநாளுங் கலந்து மருவி; [1]பொரீஇ—பலர் குணங்களையும் ஒப்பிட்டு அறிந்து; பொருள் தக்கார்-பொருளாகத்

---

[1]பொரீஇ—ஒத்து.

தக்காரை; கோடலே வேண்டும்—நட்புச் செய்தல் வேண்டும்; [1]பரீஇ—பல்லினால் வடுப்படுத்தி; உயிர் செகுக்கும்—உயிரை நீக்கும்; பாம்பொடும்—பாம்புடனும்; மரீஇப் பின்னை பிரிவு—நட்புக்கொண்டபின் நீங்குதல்; [2]இன்னா—பொல்லாது என்றவாறு.

அசேதனமாகிய பாம்புடனும் கலந்து பிரிதல் ஆகாது எனவே, சேதனமாகிய மக்களுடன்கலந்து பிரிதல் தீங்கு என்பது சொல்ல வேண்டாவே. ஆதலால் நட்புக்கொள்வதன் முன்பே அவர் குணங்களை நாளிலே ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும் என்பதாயிற்று.

பதுமனார்:—என்றது. பலரோடு பன்னாளும் பழகிக் கலந்து ஒப்பித்துப் பொருளாக மதிக்கத் தக்காரைத் தமக்கு நட்பாகக் கொள்ள வேண்டும். [3]எயிற்றாலே வடுப்படுத்து உயிரைக் கொல்லும் பாம்போடும் இன்னா, நட்புக்கொண்ட பின்னைப் பிரிதல் என்றவாறு.

மரீஇ—முயங்கி, கலந்து. பரீஇ—இரங்கும்படி. பொரீஇ பொருள் தக்கார்—தம்முடன் ஒப்பித்துப் பொருளாகத்தக்காரை. 'பொரீஇப் பொருதக்கால் கோடலே வேண்டும்' (என்று பாடம் கொண்டு) மாறுபட்டுச் சம(ர்)பூமியிலே பொரும்படியான குற்றத்தைச் செய்தாராயினும், அதனைப் பொறுத்து அவர் உறவை விடாது கொள்க (என்று கூறுவாரும் உளர்).

விளக்க உரை:—எ-து. மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப் பொரீஇ—பலரோடு மருவிப் பலநாளுங் கலந்து ஒப்பித்து; பொருள் தக்கார்க் கோடலே வேண்டும்—பொருளாகத்தக்காரை நட்புக் கொள்ளுவதே ஒருவர்க்கு உறுதியாவது;

---

[1]பரீஇ—கடித்து.

[2]இன்னாது என்பது இன்னா எனத் தொக்கு நின்றது.

[3]எயிறு—பல்.

பரீஇ உயிர் செகுக்கும் பாம்பொடும் இன்னா—பல்லினால் வடுப் படுத்தி உயிரை நீக்கும் பாம்புடனும் பொல்லாது; மரீஇப் பின்னர்ப் பிரிவு—நட்புக் கொண்ட பின்னும் ஒருவரை விட்டு நீங்குதல் என்றவாறு.

மரீஇ என்றது மருவி. முயங்கி என்றது கலந்து. பொரீஇ என்றது ஒப்பு நோக்கி.

கருத்து:—கூடிப் பிரிதல் கூடாமையால் முன்பே ஒருவரது குணங்களை ஆராய்ந்து நட்புக்கொள்க.

மேற்கோள் பகுதி :—

நச் :—உயிரளபெடை நான்கு மாத்திரை பெற்று நிற்பதற்கு "மரீஇப் பின்னைப் பிரிவு" என்பதனை மேற்கோளாகக் காட்டினர்.

—தொல். நூல். சூ. 6.

மயிலை சங்கர } :—'செய்து' என்னும் வாய்பாட்டெச்சம் வினை முதல் கொண்டதற்கு 'பரீஇ யுயிர் செகுக்கும்' என்பதனை மேற்கோள் காட்டுவர்.

—நன். சூ. 343.
—நன். சூ. 344.

ஒப்புமைப் பகுதி :—

"இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவின் அல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட !
விலங்கிற்கும் விள்ளல் அரிது".

—நாலடி. 76.

"விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியும் மலைநாட ! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு".

—பழ. 122.

"பிரிவு செய்தாலரிதே கொள்க போயொடும் என்னும் பெற்றி"

—திருச்சிற். 144.

"பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்"

—திருப்பாட்டு. சுந்தர். ஊர்.

—தெரியக்

கண்ணிற் காணார் ஆயினுங் கனவின்

நண்ணுங் காலை நல்லுயிர் செருக்கும்

பேயே ஆயினும் பிரியின் இன்பம்

வாயாது என்று மதியோர் அறைப

மரீஇ நாளுநின் நன்றி யாரும்

அறிய வார பெரும்"

—ஞானமிர்தம். 46.

"—மருவியப்

பேயின்திறத்துப் பிரிதல் இன்னாவென்று பேசுவரே"

—அம்பிகாபதி. 517.

"பேயோடு பழகுறினும் பிரிவதரிது அரிதென்று தூயோரு மொழிவரால்"

—குசேலோபாக்கியானம்.

"நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்

வீடில்லை நட்பாள் பவர்க்கு".

—குறள். 791.

"நாடி நட்பின் அல்லது

நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே".

—நற். 32 : 8—9.

"மயரிகள் அல்லராய் மாண்புடையார்ச் சேருந்

திருவுந் தீர்வின்றேல் இனிது".

—இனியவை. 18.

"இணக்கம் அறிந்து இணங்கு".

—ஆத்திசூடி. 19.

"கூடிப் பிரியேல்"

—ஆத்திசூடி. 37.

"காணுதல் ஒழிக நல்லார் காணினங் கவர்பால் நட்புப்
பேணுதல் ஒழிக பேணின் பிரிவுறல் ஒழிக".

—பிரபுலிங்.

---

23. நட்பிற் பிழை பொறுத்தல்.

தருமர் :— அஃதாவது தம்மால் நட்புக்கொள்ளப் பட்டவர் தம்முடைய மனதுக்கு வாராத குற்றஞ் செய்தாராயின், அது அறியாமற் செய்தார் என்றுதல் உள்ளுரிமையாற் செய்தார் என்றுதல் அவர் செய்த பிழையைப் பொறுத்தலாம்.

பதுமனார் :— அஃதாவது நட்பாயினர் ஒருவர்க்கு ஒருவர் தம்மிற் செய்வன பிழைக்கச் செய்யார். ஆதலின் ஒருவர் செய்த பிழை அறியாமை என்றுதல் (உரிமை) என்றுதல் பொறுத்தல் என்றவாறு.

குறிப்பு :—

வள்ளுவரும் 'பழைமை' என ஓரதிகாரம் வகுத்திருத்தல் காண்க.

'பழைமை' :—

பரிமே :— அஃதாவது நட்டாரது பழையராந் தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப் பெயர் காரியத்திற்கும் ஆயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டார் எனினும் பொறுக்கப் படும் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார் மாட்டுப் பிழையுளதாம் என்பது அறிவித்தற்கு, இது நட்பாராய் தலின்பின் வைக்கப்பட்டது.

மணக் :—பழைமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவருரிமையால் செய்தனவற்றிற்குப் பொறுக்க வேண்டும் என்று அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:—பழைமையாவது பழைமையை அறிந்துகொள்க என்றவாறு.

—குறள். அதி. 81.

221. நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்(கு) உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

தருமர்:—என்பது. நல்லார் என தாம் நனிவிரும்பிக் கொண்டாரை—இவர் நல்லவர் என்று தாம் மிகவும் விரும்பி நட்புகொண்டவரை; அல்லார் எனினும்—அவரிடத்து ஒரு நட்புப்பண்பு இல்லாமை உண்டாயினும்; [1]அடக்கிக் கொளல் வேண்டும்—அதனைப் பிறர் அறியாமல் தன் மனத்திலே அடக்கிக் கொள்ளக் கடவர்; (ஏன் எனில்) நெல்லுக்கு உமி உண்டு—(யாவர்க்கும் பயன் படும்) நெல்லினிடத்திலேயும் உமியாகிய குற்றம் உண்டு; நீர்க்கு நுரை உண்டு—நீரினிடத்திலேயும் நுரையாகிய குற்றம் உண்டு; பூவிற்கும் [2]புல் இதழ் உண்டு—பூவினிடத்திலேயும் புல்லிதழாகிய குற்றம் உண்டு ஆதலால் என்றவாறு.

புல்லிதழ்—பூவின் புறத்து இருக்கும் இதழ். யாவர்க்கும் பயன்படும் நெல்லு முதலானவை யிடத்தும் குற்றம் உண்டாவது போல நல்லவரிடத்தும் அவர் வினைவலியால் குற்றமுண்டாயினும் அதனைப் பொறுப்பது நட்பிற்கு உரிமை என்பதாம்.

பதுமனார்:—என்றது. நல்லார் என்று மிகவும் விரும்பிக்

---

[1] அடக்கிக் கொளல்—மறைவில் அவர்க்கு அறிவு கூறி அவர்களை அடக்கி வைத்துக்கொள்ளல் என்றும், குற்றத்தை மறைத்து நட்பாகக் கொள்ளல் என்றும் பொருள் கூறுவார் உளர்.

[2] புல் இதழ்—இழிந்த புற விதழ்.

கொண்டாரை (நல்லார்) அல்லார் எனினும் தம் மனத்தின்கண் மறைத்துவைத்து நட்பாகக் கொள்ளல் வேண்டும். நெல்லுக்கு உமி உண்டு. நீருக்கு நுரை உண்டு. புல்லி(ய புறவி)தழ் பூவுக்கும் உண்டு ஆதலால் என்றவாறு.

விளக்க உரை :— எ-து. நல்லார் எனத் தாம் நனி விரும்பிக் கொண்டாரை—இவர் நல்லார் என்று தாம் மிகவும் விரும்பி நட்புக் கொள்ளப்பட்டாரை; அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்—அவரிடத்தொரு நட்புப் பண்பும் இல்லையாயினும் அதனைப் பிறரறியாமல் அடக்கிக்கொண்டு போகக்கடவர்; (அதென் போல வென்னில்), நெல்லுக்கு உமி யுண்டு, நீர்க்கு நுரை உண்டு, புல்லிதழ் பூவிற்கும் உண்டு—நெல்லுக்கு உமியும் உண்டு, நீருக்கு நுரையும் உண்டு, புல்லிய புறவிதழ் பூவிற்கும் உண்டு ஆதலால் என்றவாறு.

கருத்து :— நண்பரது குணத்தைக் கருதிக் குற்றத்தைப் பொறுத்தல் வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

"தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்".

—நாலடி. 229

"ஆண்டீண்டு எனவொன்றோ வேண்டா அடைந்தாரை
மாண்டிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங்கு இளமுலைப் பொற்றொடி! பூண்ட
பறையறையார் ஆயினார் இல்".

—பழ. 112.

நெல்லும், நீரும், பூவும் சிறப்புடையனவாமாறு:—
"உயிரை ஆக்கும் நெல்லும் நீரும்"

—புறம். 186. உரை.

"நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர்"

—சீவக. 2908.

"முங்கலமாகி யின்றியமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே"

—நன். சூ. 29.

குறிப்பு.—

நல்லோரிடத்தும் குற்றம் காணப்படும் என்பதற்கு மூன்று பொருள்களை உவமையாக எடுத்தாண்டுள்ளார்.

(க).

222. செறுத்தோ(று) உடைப்பினும் செம்புனலோ(டு)
ஊடார்
மறுத்தும் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

தருமர்:—என்பது. [1]செறு தோறு உடைப்பினும்—(தண்ணீர்) அடைக்குந் தோறும் உடைத்ததாயினும்; செம் புனலோடு [2]ஊடார்—அந்த நல்ல நீருடனே ஊடுதல் செய்யார்; நீர் நசைஇ வாழ்நர்—நீரை நச்சி வாழ்பவர்; மறுத்தும் சிறை செய்வர்—மீண்டும் அந்த நீரை (அணை கோலுவர்); (அதுபோல) [3]வெறுப்ப வெறுப்பச் செயினும்—தம்மை நட்டவரும் தம் மனம் வெறுக்கும்படி பிழைகளைச் செய்தாராயினும்; தாம் வேண்டி தொடர்பு கொண்டார்—தாம் விரும்பிக் கொண்ட நட்பாளர்;

---

[1]செறு தோறு—அடைக்குந் தோறும்; வயல்கள் தோறும் என்றுமாம்.

[2]ஊடார்—கோபியார்.

[3]வெறுப்ப வெறுப்ப—வெறுப்பனவற்றை வெறுக்குமாறு; மிக வெறுக்கும்படி என்றுமாம்.

பொறுப்பர்—(செய்த பிழையைப்) பொறுக்கக் கடவர் என்றவாறு.

அவர் செய்த குற்றங்களைக் கருதாமல் தாம் விரும்பிய நட்பினைக் கருத வேண்டும் என்பதாம்.

பதுமனார் :— என்றது. ஒரு [1]கழனிக்கு இறைத்த நீர் பல கழனிதோறும் உடைத்தது ஆயினும் செம்புனலோடு [2]கலாயாது பின்னையும் அணைகோலுவர், நீரால் பிரயோசனம் கொள்ளுவார். அதுபோலத் தாம் விரும்பித் தொடர்பு கொள்ளப்பட்டார் வெறுப்பனவற்றை மிகச் செய்தாராயினும் பொறுப்பர் என்றவாறு.

செம்புனல்—அழகிய புனல். நசை—ஆசை. வாழ்நர்—உழவர்.

விளக்க உரை :— எ-து. செறுதோறு உடைப்பினும்—அடைக்குந்தோறும் உடைத்ததாயினும்; செம்புனலோடு ஊடார்—நல்ல புனலொடு வெறார்; மறுத்தும் சிறை செய்வர்—மீண்டும் அந்த நீரை அணைத்துக் கொள்ளுவர்; நீர் நசைஇ வாழ்நர்—அந்த நீரை நச்சி வாழ்பவர்; (அதுபோல) வெறுப்ப வெறுப்பச் செயினும்—தாம் வெறுப்ப வெறுப்பவே நட்டார் ஏது பிழை செய்தாராயினும்; பொறுப்பரே தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு—தாம் விரும்பிக் கொண்டார் நட்பினைப் பொறுக்கக் கடவர் என்றவாறு.

கருத்து :— நட்பினர் செய்த குற்றங்களைக் கருதாது நட்பினைக் கருதவேண்டும்.

மேற்கோள் பகுதி :—

மயிலை :—'வெறுப்ப வெறுப்பச் செயினும்' என்பதனை

---

[1] கழனி—வயல்.

[2] கலாயாது—கோபிக்காமல்.

உடம்பொடு உயிர்க்குணத்துக்கு எடுத்துக்காட்டுவர்.

நன். சூ. 451.

ஒப்புமைப் பகுதி :—

"நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ?
தங்கன்று சாக்கறப் பார்".

—பழ. 16.

(உ).

223. இறப்பவே தீய செயினுந்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன்(று) அன்றோ?—நிறக்
கோங்(கு)
உருவவண்(டு) ஆர்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

தருமர் :—என்பது. நிறம் கோங்கு—நிறத்த பூவினை யுடைய [1]கோங்கின்மேல்; உருவம் வண்டு—அழகிய வண்டுகள்; ஆர்க்கும்-ஆரவாரிக்கும்; உயர்வரை நாட!-உயர்ந்த மலைநாடனே!; தன் நட்டார்—தான் நட்புக் கொண்டவர்; இறப்பவே—மிகவும்; தீய செயினும்—தீயவற்றைச் செய்யினும்; பொறுத்தல்—பொறுப்பது; தகுவது ஒன்று அன்றோ?—தகுதிப் பாடல்லவோ? (என் எனில்); ஒருவர் பொறை இருவர் நட்பு—ஒருவர் பொறுப்பதே இருவர்க்கும் நட்பாம் (ஆதலால்) என்றவாறு.

பொறுக்குந் தன்மையில்லாதார் ஒருவருடன் நட்புக் கொள்ளலாகாது என்பதாம்.

பதுமனார் :—என்றது. மிகவுந் தீயனவற்றைச் செய்தா

---

[1] ஒருவகை மரம்.

ராயினும் தமது நட்டாரைப் பொறுத்தல் (தமக்குத்) தகுவ தன்றோ? (பொன்)நிறத்தையுடைய கோங்குமலர்த் தாதோடும் ஒளியை யுடைய வண்டுகள் ஆர்க்கும் உயர்வரை நாடனே! ஒருவர் பொறுக்கும் பொறை இருவர்க்கும் நட்பாம் ஆதலால் என்றவாறு.

நிறக் கோங்கு—பொன்போன்ற தாதை வீசும் பூவை யுடைய கோங்கு. உருவ வண்டு ஆர்க்கும்—அப்பூவினது மதுச் சிதறுகையால் கோங்குமரந் தெரியாமல் அழகிய வண்டுகள் ஆர்க்கும் என்றும், உருவினையுடைய வண்டு என்றுமாம்.

விளக்க உரை:—எ-து. இறப்பவே தீய செயினும் தன் நட்டார்—மிகவுந் தீயனவற்றை (தன்) நட்டார் செய்யினும்; பொறுத்தல் தகுவது ஒன்றன்றோ?—பொறுத்தல் தகுவதொன்றல்லவோ?; நிறக் கோங்கு உருவ வண்டு ஆர்க்கும் உயர் வரை நாட!—பொன்னிறத்தையுடைய கோங்கம் பூவிலே (ஒளியை யுடைய) வண்டுகள் ஆரவாரிக்கும் உயர்ந்த மலைநாடனே!; ஒருவர் பொறை இருவர் நட்பு—ஒருவர் பொறுக்கவே இருவர்க்கும் நட்பாகும் எ-று.

கருத்து:—நட்பினர் பிழையைப் பொறுத்தலே நட்பு வளர்ச்சிக்கு ஏதுவாகும்.

ஒப்புமைப் பகுதி:—

“தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு.”

—பழ 247.

“பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்”.

—குறள் 805.

"பழமையில் திரியார் பயன்தெரி மாக்கள்
கிழமையில் செய்தனன் கெழுதகை தரும்".
—பெருங். 4 : 8 : 75—76.

"பேதைமைப் பாலினுதல் பெருங்கிழ மையினு னுதல்
மேதக நட்டோர் மாட்டு விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால அல்ல........".
—தணிகை. வீரட்ட. 105.

"கெடுதியில் உதவ வல்லவர் நட்பால்
கிளர்ந்திடா தொன்றனைச் செயினும்
கெடும்வகை செய்தல் வேண்டினதாமே
கெழுவுதல் பணிவச்சம் இன்மை
படுதரும் ஊழில் புரியினும் அவற்றைப்
பழைமைஎன் றறிந்துளம் உவப்பின்
நெடுநில முழுதும் கேண்மையாம் மைந்தா!
நேரலார் தாமும்கே ளாவர்".
—விநா. அரசி. 127.

"தொன்மை மறவேல்".
—ஆத்திசூடி. 64.
(ரு).

குறிப்பு :-

கோங்கின் நிறம் பொன்னிறம் என்பது :—
"கோங்கின் காலுறக் கழன்ற கண்கமழ் பனிமலர்
கைவிடு சுடரிற் றோன்றும்"
—அகம். 153.

224. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையிலைக்கும் சேர்ப்ப!
விடுதற்(கு) அரியார் இயல்பிலரேல் நெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

தருமர் :—என்பது. மடி திரை தந்திட்ட—மறிகின்ற

திரை கொண்டு வந்து போகட்ட; வான்கதிர் முத்தம்—வெள்ளிய கிரணங்களையுடைய முத்துக்களை; கடுவிசை நாவாய்—கடிய விசையினையுடைய நாவாயானது; கரை அலைக்கும்—கரையுடன் மோதும்; [1]சேர்ப்ப!—வளப்பத்தையுடைய கடற் சேர்ப்பனே; விடுதற்கு அரியார்—விடுவதற்கு அரியவராகத் தாம் நட்புக் கொண்டவர்; இயல்பு இலரேல்—இயல்பு அல்லாதவற்றைச் செய்வராயில் (அது); நெஞ்சம் சுடுதற்கு மூட்டிய தீ—தம் நெஞ்சினைச் சுடுதற்கு மூட்டிய தீப்போலாம் என்றவாறு.

எனவே அவர் அறியாது தீயவற்றைச் செய்யில் அது அறிவுடைய தமது நெஞ்சிற்குச் சுடுவது போலாம்; அத் தீங்கு நோக்குவாராயில் கூடா நட்பாயிற்று. அதனால் அத் தன்மை யாகிய தீங்குகள் உண்டாயினும் தாம் ஆராய்ந்து நட்புக்கொண்ட விடத்துக் கருதுதல் தீங்கு என்பதாயிற்று.

பதுமனார்:—என்றது. மடிதிரை தந்திட்ட வெண் கதிரையுடைய முத்தமுங் கடுவிசை நாவாயும் கரையின்கண் வந்து அலைக்கும் சேர்ப்பனே! விடுதற்கு அரியார் பண்பிலராயின் அவரை நட்பாகக்கொண்டார் நெஞ்சினைச் சுடுதற்கே மூட்டிய தீயாவர் என்றவாறு.

மடிதிரை—எழுந்து மடியும் அலை. வான் கதிர்—வான்மை நீர்மை, கதிரொளி. நாவாய்—மரக்கலம்.

விளக்க உரை:—எ-து. மடி திரை தந்திட்ட வான் கதிர் முத்தம்—மடிகின்ற திரை கொண்டுவந்து போகட்ட வெள்ளிய கிரணங்களையுடைய முத்தமும்; கடுவிசை நாவாய் கரை அலைக்கும் சேர்ப்ப!—கடிய விசையை யுடைய நாவாயும் கரையிலே வந்து அலைக்கும் கடற் சேர்ப்பை யுடையவனே!; விடுதற்கு அரியார் இயல்பிலரேல்—விடுதற் கரியாராகிய நட்டார் இயல் பிலராயில்; நெஞ்சம் சுடுதற்கே மூட்டிய தீ—நெஞ்சினைச்

---

[1]சேர்ப்ப—நீர்த் துறையை உடையவனே.

சுடுதற்கு மூட்டிய தீயாவர் அவர் என்றவாறு.

கருத்து:—ஆராய்ந்து நட்புக் கொண்டபின் நண்பரது தீங்கைக் கருதுவது தீதாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொறாஅர் அவரென்னின் பொத்தித்தம் நெஞ்சத்து
அறாஅச் சுடுவதோர் தீ".

—நாலடி. 310.

குறிப்பு :—

இச்செய்யுளின் பின்னிரண்டடிகட்குத் தருமர் கண்ட கருத்து, பதுமனார் கண்ட கருத்துடன் மாறுபடுவது. ஆனால் பதுமனார் கருத்தும் விளக்கவுரைகாரர் கருத்தும் வரும் செய்யுளுடன் தொடர்பு கொள்வதாகும்.

(௪).

225. இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
[1]பொன்னன்னாய்! போற்றிக்கொளல் வேண்டும்
—பொன்னோடு
நல்லில் சிதைத்ததீ நாடோறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்.

தருமர்:—என்பது. இன்னா செயினும்—(தாம் நட்புக் கொண்டவர்). இன்னாதவற்றைச் செய்தாராயினும்; விடற் பாலர் அல்லாரை—விடுதற்பகுதி யல்லாதவரை; பொன் அன்னாய்!

---

[1]'பொன்னாக' என்றும் பாடம்; அப்பாடத்திற்குப் பொன்போல் சிறந்ததாக எனப் பொருள் கொள்க.

—பொன்னை ஒப்பாய்!; போற்றிக் கொளல் வேண்டும்—பாது காத்து அவர் நட்பை விடாது கொள்ளவேண்டும் (அஃது என்னவில்); பொன்னோடு—பொன் முதலாகிய பல பொருள்களுடனே கூட; நல் [1]இல் சிதைத்த தீ—நல்ல இல்லத்தைக் கெடுத்த தீயை; நாள் தோறும் நாடி—நாள் தோறும் நெருப்புள்ள வீடுகளில் ஆராய்ந்து கொண்டுவந்து; தம் இல்லத்தில் ஆக்குதலால்—தம் மனையகத்து ஆக்கிக் கொள்ளலால் என்றவாறு.

தம்முடைய மனையையும் பொருளையுங் கெடுத்திருந்தும் அந்நெ(ருப்பின்)மேல் மாறுபாடின்றி, மற்றுந் தேடிக்கொண்டு வருதல் தங்கருமத்தின் பொருட்டல்லாது ஒன்றல்லவே. அது போலத் தாம் விரும்பி நட்புக் கொண்டாரிடத் துண்டாகிய பிழைகளை நோக்குவது (நன்)றன்று என்பதாம்.

பதுமனார்:—என்றது. (நட்டார்) இன்னாதனவற்றைச் செய்தாராயினும், விடும்பகுதி யல்லாதாரைப் பொன்னன்னாய்! பின்னையும் நட்பாகவே பாதுகாத்து விரும்பிக் கொள்ள வேண்டும்; பொன்னுடனே நல்ல மனையை அழித்த தீயை நாடோறும் தேடித் தம் மனையகத்து உண்டாக்குதலால் என்றவாறு.

பொன் அன்னாய்—பொன்போலும் நிறத்தையுடைய தோழி.

விளக்க உரை:—எ-து. இன்னா செயினும்—இன்னாதனவற்றை நட்டார் செய்தாராயினும்; விடுதற்கரியாரை—விடற்பாலரல்லாரை; பொன்னன்னாய்! போற்றிக் கொளல் வேண்டும்—பொன்னை யொப்பாய்! பாதுகாத்து அவர்நட்பை விடாமற் கொள்ள வேண்டும்; பொன்னோடு நல்லில் சிதைத்த தீ—பொன்னுடனே நல்ல [2]இல்லையுங் கெடுத்த தீயை; நாடோறும் நாடித் தம் இல்லத்தில் ஆக்குதலால்—நாள்தோறும் நெருப்புள்ள

---

[1] இல்—மனை.
[2] வீட்டையும்.

வீட்டை ஆராய்ந்து தேடிக்கொண்டுவந்து தம் மனையிலே ஆக்கிக் கொள்ளுதலால் என்றவாறு.

கருத்து:—கைவிடத்தகாத நண்பர் எவ்வளவு துன்பஞ் செய்யினும் அதனைக் கருதுதல் நன்றன்று.

ஒப்புமைப் பகுதி :—

"இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ?"

—நாலடி. 226.

'நல்லில் சிதைத்த தீ..........ஆக்குதலால்' :—

"—நல்லில் வெவ்வெரி யினைப்பக்
கனையெரி புரறிய மருங்கு"

—புறம். 23 : 10—11.

'பொன்னோடு நல்லில்' :—

"அல்குபத மிகுந்த கடியுடை வியனகர்"

—அகம். 49.

"கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பு"

—அகம். 145.

குறிப்பு :—

தீமைசெய்த தீயையும் நன்மை கருதிச் சேர்த்தல்போல துன்பஞ் செய்த நண்பரையும் பின்னைய இன்பங் கருதிச் சேர்த்தல் வேண்டும்.

(ரு).

226. இன்னா செயினும் விடுதற்(கு) அரியாரைத்
துன்னாத் †துறத்தற்(கு) உறுவதோ ?—
துன்னருஞ்சீர்

---

†'துறத்தல் தகுவதோ' என்றும் பாடம்.

விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ?
கண்குத்திற் றென்றுதம் கை.

தருமர் :—என்பது. துன் அரு சீர்—கிட்டுதற் கரிய நன்மையினையுடைய; விண்குத்து நீள்[1]வரை—விண்ணைப் பொருந்திய நீண்ட சாரல் சேர்ந்த; [2]வெற்ப!—வெற்பை யுடையவனே!; கண்குத்திற்று என்று—கண்ணைக் குத்திற்று என்று; தம் கை களைபவோ?—தமது கையினைத் தறிக்கக் கடவதோ? (கடவதன்று; அதுபோல); இன்னா செயினும்—(தாம் நட்புக் கொண்டவர்) இன்னாதவற்றைச் செய்யினும்; விடுதற்கு அரியாரை—(கைவிடத்தகாத நட்டாரை) [3]துன்னா—பொருந்தாமல்; துறந்தற்கு உறுவதோ?—கைவிடத் தகுவதோ? (தகுவதன்று) என்றவாறு.

கையானது குத்தவேண்டும் என்று அறிந்து செய்தது அல்லவே. அதுபோலத் தம்மை நட்டவரும் அறியாமற் செய்த குற்றங்களைக் கருதுவது நன்றன்று என்பதாயிற்று.

பதுமனார் :—என்றது. தமக்கு இன்னாதவற்றைச் செய்தாராயினும் விடுதற்கரிய நட்டாரை நட்பாக மருவாதே நீக்குவது தகுவதன்று. துன்னருஞ் சீர் விண்குத்து நீள்வரை வெற்பனே! தம் கண்ணைக் குத்திற்றென்று தம் கையைக் குறையார் ஆதலால் என்றவாறு.

துன்னரும் சீர் விண்குத்து நீள் வரை—தேவர்களாற் செறிந்து, பெறுதற்கரிய தன்மையும் உடைத்தாய் இருந்துள்ள ஆகாசத்தை மலையின் உயர்ச்சியால் முட்டின்று என்பாரும் உளர்.

விளக்க உரை :—எ-து. இன்னா செயினும்—இன்னா

---

[1] வரை—மூங்கில் என்றுமாம்.

[2] வெற்ப—மலைநாடனே!

[3] துன்னா—துன்னாது என்பதன் ஈறு தொக்கது.

தனவற்றைச் செய்தாராயினும்; விடுதற்கு அரியாரை—விடுதற்கரிய நட்டாரை; துன்னுத் துறத்தல் தகுவதோ?—அவரைப் பொருத்தாமல் கைவிடத் தக்கதோ?; துன்னரும் சீர் விண் குத்து நீள் வரை வெற்ப!—கிட்டுதற்கரிய தன்மையினையுடைய விண்ணைப் பொருந்திய நீண்ட சாரலையுடைய வெற்பனே!; களைபவோ? கண் குத்திற்று என்று தம்கை—கண்ணைக் குத்திற்று என்று தம்முடைய கையைத் தறிக்கக் கடவரோ? என்றவாறு.

கருத்து:—நட்டார், அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தலே அறிவுடைமையாகும்.

மேற்கோள் பகுதி:—

நச்:—'விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்..........
........வருகாலே' என்ற சூத்திரத்தின் கண், 'விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ' என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல். எழுத். சூ. 305.

குறிப்பு:—

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற திருக்குறளிலும்,

"மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது"

என்ற நன்னெறியிலும் கையானது நட்பிற்கு உவமையாயினமை காண்க.

(சு).

227. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னு செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
தீமை எடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை.

தருமர் :—என்பது. இலங்கு நீர் தண் சேர்ப்ப!—தெளிந்த நீரை யுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; இன்னா செயினும்—நட்டவர் இன்னாதவற்றைச் செய்யினும்; சான்றோர்—அமைந்தோர்; கலந்து பழி காணார்—அவருடன் நட்புக் கொண்ட பின்பு அவர்செய்த பிழையை மனத்திற் கருதார்; கலந்த பின்—நட்பு கொண்ட பின்பு; தீமை எடுத்து உரைக்கும்—அவர் தீமையைப் பலர்க்கும் அறிவிக்கும்; திண் அறிவு இல்லாதார்—திண்ணிய அறிவில்லாதார்; தாமும் [1]அவரின் கடை—அத்தீங்கு செய்தாரினும் கடையானவர் தாமே என்றவாறு.

அறிவில்லாமையால் தீங்கு செய்வதன்றி அறிந்து செய்வதல்லவே. அதனால் அவருடன் நட்புச் செய்த பின்னும் அவர் தீங்குகளைக் கருதின் அவர், அவ்வறிவில்லாதவரினும் கீழாயினார் என்பதாம்.

எனவே நட்புச் செய்வதும் அறிவுடைய பெரியோருக் கல்லது மற்றோர்க்கில்லை என்பதாயிற்று.

பதுமனார் :—என்றது (விளங்குகின்ற) குளிர்ந்த கடற் சேர்ப்பை உடையவனே! நட்டார் இன்னாதவற்றைச் செய்தாராயினும் கலந்து வைத்து அந்(நட்டார் செய்த) பிழையைக் காணார் அமைந்தோர்; நட்புக் கொண்ட பின்பு அவர் செய்த (தீங்குகளைப் பிறர்க்கு உரைக்கும்) திண்ணறிவில்லாதார் தாமும் பிழை செய்த நட்டாரினுங் கடையராவர் என்றவாறு.

பழி—குற்றம்.

விளக்க உரை :—எ-து. இலங்குநீர்த் தண்சேர்ப்ப!—தெளிந்த நீரையும் குளிர்ந்த கடற்சேர்ப்பையும் உடையவனே!; இன்னா செயினும்—நட்டார் இன்னாதனவற்றைச் செய்தாராயினும்; கலந்து பழி காணார் சான்றோர்—நட்புக் கொண்ட

---

[1] அவரின்—(பிழைசெய்த) அந்நட்டாரைப் போல என்றுமாம்.

பின் அவர் செய்த பிழையைக் காணார் அமைந்தோர்; கலந்தபின் பிழை எடுத்துரைக்கும் திண்ணறிவில்லாதார் தாமும் அவரிற் கடை—நட்புச் செய்துகொண்டு அவர் செய்த குற்றங்களைப் பார்க்கும் அறிவில்லாதார் தாமும் அவரிற் கடையாவர் என்றவாறு.

கருத்து:—நட்பினரது குற்றங்கருதி அதனைப் பிறர்க்கு அறிவித்தல் இழிவாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார்—என்கொல்?
விழித்தலரும் நெய்தற் றுறைவா! உரையார்
இழித்தக்க காணிற் கனா".

—பழ. 182.

(எ).

228. ஏதிலார் செய்த(து) இறப்பவே தீதெனினும்
நோதக்க(து) என்னுண்டாம்? நோக்குங்கால்—
கழுமியார் செய்த கறங்கருவி நாட! [காதல்
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று.

தருமர்:—என்பது கறங்கு அருவி நாட!—ஓசைவுடைத்தாக விழும் அருவியினையுடைய மலைநாடனே!; ஏதிலார் செய்தது—அன்னியர் செய்த தீங்கு; இறப்பவே தீது எனினும்—மிகவும் கொடியது ஆயினும்; நோக்குங்கால்—பார்க்குமிடத்து; நோதக்கது என் உண்டாம்?—நோவத்தக்கது என்னவுண்டாம்? (ஒன்றுமில்லை; ஆதலின்); காதல் கழுமியார் செய்த—தம் மேற் காதலைப் பொருந்தியிருக்கின்றவர் செய்த குற்றங்கள்; நெஞ்சத்துள் நின்று—தம் நெஞ்சத்துள்ளே நின்று; விழுமிது ஆம்—சீரியதாகாதோ?; என்றவாறு.

தம்மிடத்துக் காதலைப் பொருந்தினவர் செய்த குற்றம்

அன்னியர் செய்யுந் தீங்குகளினும் மிக்கதாயினும் பார்க்குமிடத்து அதற்கு நோவத் தக்கது ஒன்றுமில்லை. அதை மனத்திலே சீரிதாகக் கொள்ளக் கடவது பெரியோர்க்கு இயல்பு என்பதாயிற்று.

பதுமனார்:—என்றது. அயலார் செய்தது மிகத் தீது எனினும் நோவத் தக்கது என்னுண்டாம்? இஃது ஊழான் வந்தது என்று நோக்குங்கால், காதல் கழுமியார் செய்த (குற்றம்) கறங்கருவி நாடனே! நன்மையாம் நெஞ்சத்துள் நின்று என்றவாறு.

நன்மையாமாறு கெழுதகைமையாற் செய்தது என்றுணர்தலால். விழுமிதாதல் உரிமையாற் செய்தது என்று அதனை நினைத்துப் பொறுத்தலால்.

விளக்க உரை:—எ-து. ஏதிலார் செய்தது இறப்பவே தீது எனினும்—அன்னியர் செய்த தீங்கு மிகவுங் கொடியதாயினும்; நோதக்கது என்னுண்டாம்? நோக்குங்கால்—நோகத் தக்கது என்னவுண்டாம்? நோக்குங் காலத்து; காதல் கழுமியார் செய்த—தம் மேற் காதலைப் பொருந்தினவர் செய்த குற்றங்கள்; கறங்கருவி நாட!—ஓசையுண்டாக விழும் அருவியையுடைய மலைநாடனே!; விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று—நெஞ்சத்துள்ளே நின்று சீரிதாகாதோ? என்றவாறு.

கருத்து:—நண்பர் செய்த தீங்கு மிக்கதாயினும் அதனை ஆராய்ந்தால் உயர்ந்ததே ஆகும்.

மேற்கோள் பகுதி:—

மயிலை:—'ஏதில்' என்பது அயலென்னும் பொருள் குறித்து வரும் என்பார் அதற்கு, 'ஏதிலான் செய்த திறப்பவே' என்பதனை யெடுத்துக்காட்டுவர்.

—நன். சூ. 420.

ஒப்புமைப் பகுதி :—

"பண்ணிய யாழொக்கும் நட்டார் கழறுஞ்சொல்"

—நான்மணி. 100.

(அ).

229\. தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்.

தருமர் :—என்பது. தமர் என்று தாம் கொள்ளப் பட்டவர் தம்மை—உறவு என்று தாம் நட்புக் கொள்ளப் பட்டவரை; தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின்—அவரிடத்து ஓர் உறவல்லாமையைத் தாம் கண்டாராயின்; அவரை தமரினும் நன்கு மதித்து—அவரை முன்பு தமக்குள்ள உறவின் முறை யாரினும் [1]காட்டில்நன்றாகப் புத்திபண்ணி; தமர் அன்மை—அவர் தமரல்லாமை செய்ததனை; தம் உள் அடக்கி கொளல்—தம்மனத்துள்ளே அடக்கிக் கொள்ள வேண்டும் என்றவாறு.

தாம் விரும்பி நட்புக் கொண்டவர் தம்முடைய மனம் பொருததொரு குற்றஞ் செய்தாராயினும், அவரை இகழ்தல் குற்றமாம். அதனால் அவர்செய்த குற்றத்தைப் பிறரறியப் பண்ணாமல் அதனைப் பொறுத்து, முன்பு நட்புக்கொண்ட நாளி லும் விருப்பமுற்று ஒழுகுதல் செய்ய வேண்டும் என்பதாம்.

பதுமனார் :—என்றது. தமக்கு நட்பாவர் என்று தாம் கொள்ளப்பட்டாரை, அவர் செய்த தமரன்மையைத் தாம் அறிந்தாராயின் அவரைப் பிழை செய்யாத தமரினும் மிகவும் மதித்து, மற்று அவர்செய்த தமரன்மையை நமக்கு அவர் தமராக நாம் ஒழுக மாட்டாமையான் வந்ததென்று, தம்முள்ளே அடக்கிக் கொள்க என்றவாறு.

---

[1] காட்டிலும்; பெருத்த உறுப்புக்களிற் காட்டில் பெரிய அழகையுடைய (சீவக. 1461—உரை).

விளக்க உரை :—எ-து. தமர் என்று தாம் கொள்ளப் பட்டவர் தம்மை—உற்ருர் என்று தம்மாற் கொள்ளப்பட்டவரை; தமர் அன்மை தாம் அறிந்தாராயின்—அவரிடத்து ஓர் உற வல்லாமையைத் தாம் காணில்; அவரைத் தமரினும் நன்கு மதித்து—அவரை முன்பு தமக்கு உறவின்முறையாரினும் காட்டில் நன்ருகப் புத்தி பண்ணி; தமர் அன்மை தம்முள் அடக்கிக் கொளல்—அவர் தமரல்லாதன செய்ததனைத் தம்முள்ளே அடக்கிக்கொள்ள வேண்டும் என்றவாறு.

கருத்து :—நண்பரது குற்றத்தைப் பொறுத்து அவரை நன்கு மதித்து ஒழுக வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

"ஆண்டுண்டு என வொன்ருே வேண்டா அடைந்தாரை
மாண்டிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங்கு இளமுலைப் பொற்ருெடி!—பூண்ட
பறையறையார் ஆயினர் இல்".

—பழ. 112.

"நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளவேண்டும்"

—நாலடி. 221.

குறிப்பு :—

"இன்னுசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்றபடி நன்குமதித்தால் அவர் தம் பிழையுணர்ந்து வருந்துவர்; அதன்மேலுங் குற்றஞ் செய்ய முற்படார்.

(கூ).

230. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல்—நட்டான்

மறைகாவா விட்டவன் [1]செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக.

தருமர்:—என்பது. ஒருவனை நட்டபின்—ஒருவனை விரும்பி நட்புக் கொண்டபிறகு; குற்றமும் ஏனைக் குணமும்—அவன் குற்றத்தையும் அவன் நற்குணத்தையும்; நாடித் திரிவேனேல்—ஆராய்ந்து பார்த்துத் திரிவேனாகில்; நட்டான் மறை—நட்புச் செய்தவன் மறைத்துச் சொன்ன காரியத்தை; காவா விட்டவன்—மனத்துள் அடக்காது வெளிப்படத் தூற்றினவன்; செல்வுழி செல்க—புகுந்த நரகத்திலே புகக் கடவேன்; அறை கடல் சூழ் [2]வையம் நக—ஆரவாரத்தை யுடைய கடல் சூழ்ந்த வையகத்துள்ளார் என்னைச் சிரிப்பதாக என்றவாறு.

தாம் விரும்பி நட்புக் கொண்டவன் குற்றஞ் செய்தானாகில் அதனை எவ்வகைத் 'தாயினும் பொறுக்க வேண்டும் என்று திட்டப் படுத்துவார்; "நட்டவன் மறையை வெளிப் படுத்தினவன் போன நரகத்திலே புகக் கடவேன்" என்று பிறர் கூறுவது போலக் கூறியவாறு.

பதுமனார்:—என்றது. (ஒருவனை) நட்புக் கொண்டபின், (அவன்) செய்த குற்றத்தையும் மற்றைக் குணத்தையும் ஆராய்ந்து ஒழுகுவேனாகில், நட்டாரது மறைக்கப்பட்ட காரியத்தைப் பிறர்க்கு வெளிப்படத் தூற்றியான் செல்லும் உலகம் புகுவேனாக; அறைகடல் சூழ் வையகத்தார் சிரிக்க என்றவாறு.

நாடித் திரிவேனே என்று பாடம் ஓதி ஆராய்ந்துவிட்டு நீங்கேன் என்று **பொருளுரைப்பாரும் உள்.** மறைப்பொருள்—செவி மந்திரம். உலகம்—நரகம் என்றுமாம்.

---

[1]செல்வுழி. (காலடி. 8).

[2]வையம் நக என்பதனை உலகத்தார் சிரிக்கும்படி என வினையெச்சமாக்கி, செல்வுழிச் செல்க என்பதனோடு முடித்துப் பொருள் கூறுவாரும் உளர்.

விளக்க உரை :—எ-து. குற்றமும் ஏனைக் குணனும்—ஒருவன் குற்றத்தினையும் ஒழிந்த குணத்தினையும்; ஒருவனை நட்டபின் நாடித் திரிவேனேல்—ஒருவனை உறவு கொண்டபின்பு இது குற்றம் இது குணம் என்று பார்த்துத் திரிவனாகில்; நட்டான் மறை காவா விட்டவன் செல்வழிச் செல்க—நட்புச் செய்தவன் மறைத்துச் சொன்ன காரியத்தை வெளிப்படத் தூற்றினவன் புகுந்த நரகத்தே புகக் கடவேன்; அறைகடல் சூழ் வையம் நக—ஆரவாரத்தையுடைய கடல் சூழ்ந்த வையகத்தார் என்னைச் சிரிப்பதாக என்றவாறு.

கருத்து :—நண்பரது குண குற்றங்களை முன்பே ஆராய வேண்டுமன்றி நட்டபின் ஆராய்தல் அறமாகாது.

ஒப்புமைப் பகுதி :—

"அருமறை காவாத நட்பும்"

—திரிகடுகம். 55.

"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு".

—குறள். 793.

"நன்மதி உடைமை குடிகுணம் குற்றம்
நல்வினைத் தானும்எத் திறத்தும்
பன்முறை யாய்ந்து நட்பினைக் கொள்க,
பாம்பொடு பழகினும் பிரிதல்
இன்மையாம் அதனால் ஆய்ந்தலால் ஒருவர்
இடத்துநட் புறேல்உறின் அவர்செய்
புன்மையும் பழியும் புணர்ந்திரு பயனும்
போக்குவ துண்மைபுத் திரனே".

—விநா. அரசி. 126.

(௰).

24. கூடா நட்பு.

தருமர் :—அஃதாவது குடிமையாலும் குணத்தாலும் ஒழுக்கத்தாலும், மனவுறுதியாலும் தம்முடைய [1]நெஞ்சுக்கு வாராதவரை நட்புக் கொள்ளலாகாது என்பதாம்.

பருமனர் :—அஃதாவது நட்புச் செய்தலாவது ஒரு காரணத்தைக் குறித்தன்றி நெஞ்சு ஒப்புமைகளால் கூடுவ ரன்றே. அதுவன்றித் தங்கருமம் முடித்துக்கொள்ளுதல் காரண மாக வந்து நட்பாகுங் காலத்து, அக்கருமம் மனத்துள்ளே நின்று ஒன்றுபட ஒழுக வொட்டாது, நடுவே [2]தகையப்பட்டுக் கூடா நட்பாய் ஒழுகிக் கருமம் கைகூடின பின்பு, அந்நட்புக் கால் தூர்ந்து விடுதல் என்றவாறு.

குறிப்பு :—

'கூடாநட்பு' :—.

பரிமே :—அஃதாவது பகைமையான் அகத்தால் கூடா திருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையும் புறத்தால் கூடி ஒழுகுவார் நட்பு.

மணக் :—கூடாநட்பாவது சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தினால் நள்ளாது நட்டாரைப்போல ஒழுகுவாரது இயல்பும் அவர்மாட்டு ஒழுகுந்திறமும் கூறுதல். தமக்கு இனம் அன்றிக் கருமம் காரணமாக நட்பாரும், பகைவராய் நட்பாரும், என அவ்விருவகையாரையும் தீ நட்புபோலக் கடியவேண்டுமாதலின் அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி :—கூடாநட்பாவது புரையறக் கூடியும் பிரிவான் எ-று.

—குறள். அதி. 83.

---

[1]நெஞ்சுக்கு வாராதவர்—மனத்திற்குப் பொருந்தாதவர்.

[2]தகையப்பட்டு—தடுக்கப்பட்டு.

231. செறிப்பில் பழங்கூரை சே(று)அணை யாக
இறைத்தும்நீர் ஏற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!
தங்கருமம் முற்றுந் துணை.

தருமர்:—என்பது. [1]கறை குன்றம் பொங்கு அருவி [2]தாழும் புனல் வரை நல் நாட!—மஞ்சுகள் சூழப்பட்ட கரிய நிறத்தினையும் கடிதாகிப் பொங்கி விழுகின்ற அருவிப் புனலையும் உடைய மலைநாடனே!; செறிப்பு இல் பழங்கூரை—கட்டுகள் அற்றுப் பிரிந்த கூரையினையுடைய இல்லிலே; சேறு அணை ஆக—(ஒழுகின நீருக்குச்) சேற்றை அணையாகக் கோலி; (நீர்) இறைத்தும்— அந்த அணைக்குள் விழுந்த நீரை இறைத்தும்; நீர் ஏற்றும்—(மேல்) விழுகின்ற நீரை ஏற்றும்; தம் கருமம் முற்றும்துணை—தம் மனத்தெண்ணிய கருமம் முடியுந் துணையும்; கிடப்பர்—அப்படிக் கிடப்பர் என்றவாறு.

தமது கருமத்தின் பொருட்டு இவ்வகைத்தாயவர் மனம் வரும்படி ஒழுகித் தமது கருமம் ஆனபின், அவரிடத்து நட்புப் பண்பு விட்டு மாறுவார் உளர். ஆதலால் அத்தன்மையாரோடு நட்பு ஆகாது என்பதாம்.

பதுமனார்:—என்றது. மரம் முதலாயினவற்றால் செறிப்பிலாப் பழங்கூரையையுடைய மனைக்கண், சேற்றை அணையாகக் கோலிப் புகுந்தநீரை இறைத்தும்மேல் ஒழுகுகின்றநீரை ஏற்றும் கிடப்பர்; கறைக்குன்றம் பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாடனே! (அதுபோல) கூடாத நட்புடையாரும் தம் கருமம் முற்றுந்துணையும் (இருப்பர்) என்றவாறு.

கறைக்குன்றம்—தூரத்தில் தோன்றும்பொழுது கருமை பொருந்துதலால். பொங்கருவி—ஆரவாரத்தைத் தாழும் அருவி;

---

[1] கறைக்குன்றம்—மேகம்படிதலாற் கரிதாகிய மலைச் சிகரத்திலிருந்து.
[2] தாழும்—பெருகும்.

மிகுதியான அருவி என்றுமாம்

விளக்க உரை:—எ-து. செறிப்பில் பழங்கூரை சேறு அணையாக—பிணிப்புக்கள் அற்றுப் பிரிந்த பழைய கூரையை யுடைய இல்லிலே ஒழுகின நீருக்குச் சேற்றை அணையாகக் கோலி; இறைத்தும் நீர் ஏற்றும் கிடப்பர்—அந்த அணைக்குள், விழுந்த நீரை இறைத்தும் விழுகிற நீரை ஏற்றும் இப்படிக் கிடப்பர்; கறைக்குன்றம் பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!—கரிய குன்றம் மிக்க அருவியினைத் தாழும் கடும்புனலை யுடைய மலைநாடனே!; தங்கருமம் முற்றும் துணை—தம்முடைய காரியம் முற்றும் அளவும் என்றவாறு.

கருத்து:—தமது கருமம் முடியும் வரை கூடிப் பின் கூடா தாரது நட்பைக் கொள்ளலாகாது.

ஒப்புமைப் பகுதி:-

"கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்
எண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரால்
எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்
உண்ணுந் துணைக்காக்கும் கூற்று."

—பழ. 89.

(க).

232. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம்—மாரி
[1]வறங்கூர்ந்தாற் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

தருமர்:—என்பது. வால் அருவி நாட—தெளிந்த

---

[1] வறந்தக்கால் என்றும் பாடம்.

அருவியாற் சிறப்பெய்திய மலைநாடனே!; சீரியார் கேண்மை—நற்குண முடையவருடன் கொண்ட உறவு; சிறந்த சிறப்பிற்று ஆய்—மிக்க சிறப்பினை யுடைத்தாய்; [1]மாரிபோல் மாண்ட பயத்தது ஆம்—மாரிபோல மாட்சிமைப்பட்ட பயனை யுடைத்தாகும்; சீர் இலார் நட்பு—சீர்மையில்லாதாருடன் கொண்ட உறவு; சிறந்தக்கால்—(மிகுந்தால்); மாரி வறம் கூர்ந்தால் போலுமே—மாரியானது பெய்யுமாப்போலத் தோன்றி வறண்ட தன்மையை உடைத்தாம் (அதுபோல); நட்புக்கொண்டகாலத்துப் பயன் படுமாப்போலத் தோன்றிப் பிறகு வறந்த தன்மையாம் என்றவாறு.

ஆதலால் இத்தன்மையாரோடு உறவு கொள்ளுதலைத் தவிர்க என்பதாம்.

பதுமனார்:—என்றது. விழுமியாரோடு ஒருவன் கொண்ட நட்பு, மிக்க பெருந்தன்மையை யுடைத்தாய் மழைபோல மாட்சிமைப் பட்ட பயனை உடைத்தாகும்; சீரில்லாதாரோடு கொண்ட நட்பு சிறந்தக்கால், வாலருவி நாடனே! அம் மாரி வறந்தக்காற் போலும் என்றவாறு.

வால் அருவி நாட—தூய அருவி சூழ்ந்த நாடனே. மாரி வறந்தக்காற் போலும் என்றது, பெய்வதுபோல் எழுந்து பெய்யா முகில்போலப் பண்டுள்ள பயனையும்கூட நின்று கெடுத்தல் சிறந்தக்கால்—நட்பு மிக்காலும்.

விளக்க உரை:—எ-து. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்—சீரியவர்களுடனே கொண்டவுறவு மிக்க சிறப்பினை யுடையதாய்; மாரிபோல் மாண்ட பயத்ததாம்—நட்புக்கொண்ட காலத்து மாரியாலே விளைவுப் பலன் உண்டானாற்போல மாட்சிமைப்பட்ட பயனைத் தருவதாம்; மாரி வறந்தக்கால் போலுமே—மழை பெய்யாமல் மறுத்த காலத்துக்கு ஒக்கும்;

---

[1]மாரி -பெய்யும் மழை.

வாலருவி நாட!—மிகவும் வெள்ளிதாகிய அருவியையுடைய நாடனே!; சிறந்தக்கால் சீரிலார் நட்பு—சிறந்த காலத்துஞ் சீரிலாதாருடனே கொண்ட நட்பு என்றவாறு.

கருத்து :—கூடாநட்பு பின் பயனற்றுப் போவதால் அத்தகைய நட்பினைத் தவிர்க.

ஒப்புமைப் பகுதி :—

"மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே".

—புறம்.

"மாரியன்ன வண்மையிற் சொரிந்து"

—புறம். 397 : 16.

(உ).

233. நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்-நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று.

தருமர் :—என்பது. நுண் உணர்வினாரோடு—நுண்ணிய அறிவினை உடையாரோடு; கூடி—நட்புச் செய்து; நுகர்வு உடைமை—அதிலுண்டாகிய பயனை அனுபவித்தல்; [1]விழைவிற்றால்—விருப்பத்தினாலே; விண் உலகே ஒக்கும்—தேவருலகத்தை ஒக்கும்; நுண் நூல் உணர்வு இலர் ஆகிய—நுண்ணிய நூலினை உணர்ந்து அதன் பயனைத் தெரிய மாட்டாத; [2]ஊதியம் இல்லார் புணர்தல்—நட்புப் பண்பாகிய [3]பலிப்பில்லாதாருடன்

---

[1]விண் உலகே ஒக்கும் விழைவிற்று—என்று பதச்சேதம் செய்து சுவர்க்க இன்பம் போல விரும்பப்படுந் தன்மையுடையது என்று பொருளுரைப்பாரும் உளர்.

[2]ஊதியம்—பயன்.

[3]பலிப்பு—பயன்.

கொண்ட உறவு; நிரயத்துள் ஒன்று—நரகத்திலே வைத்து எண்ணப்பட்டதொரு நரகமாம் என்றவாறு.

அறிவுடையாருடன் உறவுகொள்ளின் அவர் வி(ருப்)பத்தினாற் செய்வது தேவருலகம் ஒக்கும் என அவரைவியந்து கூறி, அறிவில்லாதாருடன் உறவு கொள்வது நரகத்திலே அநுபவிக்கும் தன்மையாம் என இழிவாக்கியது; கூடாநட்பாய் ஒழுகுமவரை நட்பாகக் கொள்ளாது உறுதி கூறியதாம்.

பதுமனார் :—என்றது. நுண்ணியவறிவினையுடையாரோடு பொருந்தி, நுகருங் காலத்து அது உடைமை [1] துறக்கத்தையே ஒக்கும் பயனை உடைத்தாம். அந் நுண்நூலை உணரும் உணர்வ இல்லாதாராகிய பயனில்லாதாரை நட்பாகப் பொருந்துதல் நரகங்களுக்குள்ளே வைத்து எண்ணப்படுவதோர் நரகம் என்றவாறு.

விளக்க உரை :—எ-து. நுண்ணுணர்வினாரோடு—நுண்ணிய அறிவினையுடையாரோடு; கூடி நுகர்வுடைமை—நட்புச் செய்த அதிலுண்டான பயனை அநுபவித்தல்; விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்—விருப்பினால் தேவருலகத்தையே ஒக்கும்; நுண்நூல் உணர்வு இலராகிய—நுண்ணிய நூலை உணரமாட்டாத; ஊதியம் இல்லார்ப் புணர்தல்—நட்புப் பண்பாகிய பலிப்பில்லாதாருடன் கொண்டஉறவு; நிரயத்துள் ஒன்று—நரகத்திலே வைத்து எண்ணப் பட்டதொன்று என்றவாறு.

கருத்து :—அறிவிலார்நட்பு நரகத்துன்பந் தருவதால் அவருடன் உறவு கொள்ளலாகாது.

ஒப்புமைப் பகுதி :—

“தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ

---

[1] துறக்கம்—சுவர்க்கம்.

நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி".

—நாலடி. 137.

"தேவ ரனையர் புலவர்"

—நான்மணிக்கடிகை. 75.

"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு".

—குறள். 835.

குறிப்பு:—

அறிவுக்கு நுட்பம் ஆழ்ந்த கருத்துக்களை அழுந்தி அறிதலும், நூலுக்கு நுட்பம் அரிய பொருள்களை அறிவித்தலும் ஆம்.

(௩).

234. பெருகு வதுபோலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதும் செல்லாதே நந்தும்-அருகெல்லாம்
சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட!
பந்தம் இலாளர் தொடர்பு.

தருமர்:—என்பது. அருகு எல்லாம்—அருகு தோறும்; நீள் சந்தனச் சோலை—நீண்ட சந்தனச் சோலையை உடைய; [1]சாரல் மலைநாட!—சாரலால் சிறந்த மலைநாடனே!; பந்தம் இலாளர் தொடர்பு—மனப் பிணிப்பு இல்லாதாருடன் கொண்ட உறவு; பெருகுவது போலத் தோன்றி—பெருகுவது போல எழுந்து; வை தீ போல்—வைக்கோலில் (பற்றிய) தீயைப்போல; ஒருபொழுதும் செல்லாதே நந்தும்—ஒருபொழு(தாயி)னும் நில்லாது கெடும் அத்தன்மையாம் என்றவாறு.

---

[1] சாரல்—மலைப்பக்கம்.

வைக்கோலில் (பற்றிய) தீ, உடனே அவிந்து போவதுபோல் அறிவாகிய மனப்பிணிப்பு இல்லாதாருடன் கொண்ட நட்பும் உடனே மாறுபடும். ஆதலால் அத்தன்மையாரை உறவாகக் கொள்வது ஆகாது என்பதாம்.

பதுமனர்:—என்றது. முற்படப் பெருகுவது போலத் தோன்றிப் பின்னை வைக்கோல் தீப்போல ஒருபொழுதும் செல்லாதே கெடும்; மருங்கெல்லாம் சந்தன நீள் சோலைச் சாரல் மலைநாடனே! மனத்தின்கண் பிணிப்பு இல்லாதாரோடு நட்பு என்றவாறு.

ஒரு பொழுதும் செல்லாதே நந்தும்—கணப் பொழுதில் தோன்றிக் கெடும். அருகு—மருங்கு. சந்தன நீள் சோலை—வேறொரு மரமின்றிச் சந்தனமரத்தாற் செறிந்த சோலை.

விளக்க உரை:—எ-து. பெருகுவது போலத் தோன்றி—வளர்வது போலத் தோன்றி; வை தீ போல் ஒருபொழுதும் செல்லாதே நந்தும்—வைக்கோல் தீப்போல ஒரு பொழுதின் கண்ணும் நில்லாமல் கெட்டுவிடும்; அருகெல்லாம் சந்தன நீள் சோலைச் சாரல் மலைநாட!—அருகு தோறும் நீண்ட சந்தனச் சோலையையுடைய சாரலாற் சிறந்த மலைநாடனே!; பந்தம் இலாளர் தொடர்பு—பிணிப்பில்லாதாருடன் கொண்டவுறவு என்றவாறு.

கருத்து:—மனப்பிணிப்பில்லார் உறவு மாறுபட்டழிவதால் அவருடன் நட்புக் கொள்ளலாகாது.

(௪).

235. செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்தவனைச்
செய்யாது தாழ்த்துக்கொண்(டு) ஓட்டலும்—
மெய்யாக

இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும்
துன்புறூஉம் பெற்றி தரும். [அந்நிலையே

தருமர்:—என்பது. செய்யாத—(செய்யத்)தகாத காரியத்தை; நாம் செய்தும் என்றலும்—(தாம்) செய்வதாகத் துணிதலும்; செய்வதனைச் செய்யாது தாழ்த்துக்கொண்டு ஒட்டலும்—விரைந்து செய்ய வேண்டுங் காரியத்தைச் செய்யாமல் நீட்டிக்க விட்டு வைத்தலும்; மெய்யாக—உண்மையாக; இன்பு உறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும்—இன்புறத்தக்க தன்மைகளைத் துறந்தவர்க்கும்; [1]அந்நிலையே—அப்பொழுதே; துன்பு உறூஉம் பெற்றி தரும்—துன்பமுறத் தக்க தன்மைகளைக் கொடுக்கும் என்றவாறு.

எனவே, நட்புச் செய்யத் தகாதவருடன் நட்புக்கொள்வது ஆகாது என்பதற்குச் செய்யத்தகும் காரியங்களையும் உடன்கூறி அறிவுறுத்தியதாம்.

பதுமனார்:—என்றது. தாம் செய்யாதனவற்றைச் செய்தும் என்று உரைத்தலும், செய்யக் கடவதனைச் செய்யாதே நீட்டித்துக்கொண்டு [2]சேறலும், இவ்விரண்டும் மெய்மையாகவே மனை வாழ்க்கையில் நின்று இன்புறூஉந் தன்மையைக் கடந்த அருந்தவர்க்கும், அப்பொழுதே துன்புறூஉம் பெற்றியைத் தரும் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. செய்யாத செய்தும் நாம் என்றலும்—(தாம்) செய்யத்தகாத காரியத்தைத் (தாம்) செய்தும் என்றுரைத்தலும்; செய்வதனைச் செய்யாது தாழ்த்துக்கொண்டு ஓட்டலும்—விரைந்து செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாதே நீட்டித்துக் கொண்டு சேறலும் இவ்விரண்டும்; மெய்யாக—உண்மையாக; இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும்—மனை

---

[1] அம்மனப்பாங்கு என்றுரைப்பாரும் உளர்.
[2] செல்லுதலும்.

வாழ்க்கையினின்று இன்புறாஉம் தன்மையைக் கடந்த அருந் தவர்க்கும்; அங்கிலேயே துன்புறாஉம் பெற்றி தரும்—அப்பொழுதே துன்பமுறத்தக்க தன்மையைக் கொடுக்கும் என்றவாறு.

கருத்து :—வீண் ஆரவாரமும், நம்பிக்கை மோசமும் உடையா ரது நட்பு ஆகாது.

ஒப்புமைப் பகுதி :—

"ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்".

—குறள். 818.

"செயக்கடவ அல்லனவுஞ் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும்?"

—நீதிநெறிவிளக்கம். 71.

குறிப்பு .—

செய்யாதன செய்வோம் என்பது ஆரவார மொழியாகும். செய்வதைச் செய்யாது தாமதிப்பது நம்பிக்கைமோசமாகும். இவ்விரண்டும் கூடாநட்பினர் செயல்கள் என்றறிக.

(ரு).

236. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை ஆம்பல்ஒக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினும்நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும்.

தருமர் :—என்பது. ஒருநீர் பிறந்து—ஒரு தடாகத்திலே தோன்றி; ஒருங்கு நீண்டக் கடைத்தும்—ஒருவழிப்பட வளர்ந்த விடத்தும்; விரிநீர் குவளையை—விரிந்த நீர்மையுடைத்தாகிய குவளைக்கு; ஆம்பல் ஒக்கல்லா—ஆம்பல் சரியாக(மாட்டாது); (அதுபோல) பெருநீரார் கேண்மை கொளினும்—மிக்க நீர்மை

யுடையாருடனே உறவு கொள்ளினும்; நீர் அல்லார் கருமங்கள்—நற்குணம் இல்லாதார் காரியங்கள்; வேறுபடும்—வேறுபட்டிருக்கும் என்றவாறு.

எனவே நற்குண நற்செய்கை யில்லாதாரை நட்பாகக் கொள்ளலாகாது என்பதாயிற்று.

பதுமனார் :—என்றது. ஒரு பொய்கை நீருள் தோன்றி ஒக்க வளர்ந்தவிடத்தும் மலர்ந்த நீர்மையையுடைய செங்கழுநீரை ஆம்பல் ஒக்கமாட்டாது; அதுபோலப் பெரியநீர்மையை உடையாரோடு நட்புக்கொளினும் அந்நீர்மை யில்லாதார் செய்யுங் கருமங்கள் பொருந்தியிரா என்றவாறு.

விரிநீர்க்குவளை—விரிந்த பெருமையையுடைய செங்கழுநீர்

விளக்க உரை :-எ-து. ஒரு நீர் பிறந்து ஒருங்கு நீண்டக் கடைத்தும்-ஒரு தடாகத்திலே தோன்றி ஒருவழிப்பட வளர்ந்தவிடத்தும்; விரிநீர்க் குவளையை ஆம்பல் ஒக்கல்லா—விரிந்த நீர்மையையுடைய குவளையை ஆம்பல் ஒக்கமாட்டாது; (அதுபோல) பெருநீரார் கேண்மை கொளினும்—மிக்க நீர்மை யுடையாருடனே உறவு பண்ணினும்; நீரல்லார் கருமங்கள் வேறுபடும்—நீர்மை யல்லாதார் காரியங்கள் வேறுபட்டிருக்கும் என்றவாறு.

கருத்து :—நல்லோருடன் பழகினும் தமது தீக்குணத்தை விடாதவரோடு நட்புக்கொள்ளலாகாது.

குறிப்பு :-

“நிறை நீர நீரவர் கேண்மை” என்ற திருக்குறளில் ‘நீரவர்’ என்பதற்கு, ‘நீரவர் என்றார் இனிமைபற்றி’ என்றார் பரிமேலழகர். ஆகவே, நீரவர்—இனிய தன்மையுடையவர் என்க. குவளை என்றது இங்கே மணங்கமழும் செங்கழுநீர்மலரை. “கார்த்திகை விளக்கிட்டன்ன கடிகமழ் குவளை” என்றார்

சிந்தாமணியாரும்.

குவளையின் சிறப்புடைமையும் ஆம்பலின் சிறப்பல்லாமையும் கீழ்க்கண்ட நூல்களில் வரும் செய்யுட்களால் அறிக:—

"பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்"

—புறம். 42 : 15—17.

"அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுது [மறுத்து
இன்னா வைக லுண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே".

—புறம். 248.

"சிறுவெள் ளாம்பல் அல்லி யுண்ணுங்
கழிகல மகளிர் போல"

—புறம். 280 : 13—14.

"செழுஞ்செப் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாளாம்பன் மலரொடு கூட்டி............
இடூஉக் கடந்து வாளமருழக்கி...........
வேந்த ரோட்டிய..............பாரி".

—அகம். 78.

(சு).

237. முற்றல் சிறுமந்தி முற்பட்ட [1]தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

தருமர்:—என்பது. முற்று அல் சிறு மந்தி—இளைய சிறு

---

[1] தன் கையை என்பது பதுமனார் பாடம்.

மந்தியானது; முன் பட்ட தந்தையை—(தனக்கு) முற்படப் போய்க் கனி முதலானவற்றைக் கொண்ட தந்தையை; நெற்று கண்டு அன்ன விரலால்—பயற்ற நெற்றுப்போன்ற விரலாலே; ஞெமிர்த்திட்டுக் குற்றி—அழுந்திடக் குத்தி; பறிக்கும்—பறித்துக் கொள்ளும் வளப்பமுடைய; மலைநாட!—மலைநாடனே!; ஒற்றுமை கொள்ளாதார் நட்பு—மனவுறுதியாகிய ஒருமைப்பாடில்லாதாருடன் உறவுகொள்ளுதல்; இன்னாது—பொல்லாது என்றவாறு.

முற்றல் சிறுமந்தி—முற்றாத சிறிய குரங்கு. அறிவில்லார்க்கு மனத்து ஒருமைப்பாடில்லை. அதனால் அத்தன்மையார் நட்பு ஆகாது என்பார், அதன் தந்தை தனக்கெனக் கொடுவருங் கனி முதலியவற்றைச் சிறுமந்தி அறிவில்லாமையினால் இடர்ப்படுத்திப் பறித்த மலைநாட! என்று கொளக் கூறியதுமாம்.

பதுமனார்:—என்றது. முற்றல் சிறுமந்தி தனக்கு முற்பட்டது என்று தன் கையாக்கிக் கனி முதலாயினவற்றைக் கொண்டு உண்ணுமிடத்து நெற்றுக் கண்டன்ன விரலால் அழுத்திக் [1]குற்றிப் பறிக்கும் மலைநாடனே! மனத்தால் ஒரு தன்மைப் படாரோடு கொண்ட நட்பு இன்னாது என்றவாறு.

முற்றல் சிறுமந்தி—வயது புகுந்து விளைந்த மந்தி; என்றும் இளையாதிருக்(கும் மந்தி); செய்தொழிலால் முற்றிய மந்தி என்றுமாம். முற்பட்டது—முன்னே சென்றது. நெற்று—பயற்ற நெற்று.

விளக்க உரை:—எ-து. முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை—இளைய சிறுமந்தி முற்பட்டுப் போய்க் கனி முதலானவற்றைக் கொண்ட தந்தையை; நெற்றுக் கண்டன்ன விரலால்

---

[1] குற்றி—குத்தி, மரக்கட்டை என்றுமாம். சிறுமந்தி, மரக்கட்டையைப் பெயர்த்து எடுக்கமாட்டாத முது மந்தியைத் தள்ளித் தான்பெயர்த்து எடுக்கக் கூடிய மலை என்று பொருள் கொள்வாரும் உளர்.

—பயற்ற நெற்றைக் கண்டாற் போலும் விரலாலே; ஞெமிர்த் திட்டுக் குற்றிப் பறிக்கும் மலைநாட!—முறுக்கிக் குத்திப் பறிக்கிற மலைநாடனே!; இன்னாதே ஒற்றுமை கொள்ளாதார் நட்பு—மனத்தால் ஒருமைப்படாதாரோடு கொண்ட வுறவு பொல்லாது என்றவாறு.

முற்றல் சிறுமந்தி—முதுமையில்லாத சிறிய குரங்கு.

கருத்து:—மன வொற்றுமையில்லாதாருடன் நட்புக்கொள்ளல் துன்பந் தருவதாம்.

ஒப்புமைப் பகுதி:—

"உட்பகை அஞ்சித்தன் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்".

—குறள். 883.

"புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து".

—நீதிநெறி, 56.

"ஒன்னாரைத் தேறேல்".

—ஆத்திசூடி. 108.

(எ).

238. †ஆன்படு நெய்பெய் கலனுள் அதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேம்படு
நல்வரை நாட! நயனுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரோடு நட்பு.

---

†இது முதல் மூன்று செய்யுட்களின் முறைவைப்பு சிலபிரதிகளில் மாறபட்டுள்ளது.

தருமர்:—என்பது. தேம்படு நல்வரை நாட!—தேன் முதலிய இனிமைகளால் பொலிவுபெற்ற மலைநாடனே!; நயன் உணர்வார் நண்பு ஓரீஇ—நய குணமாகிய அறிவுடையாருடைய நட்பைவிட்டு; புல் அறிவினரோடு நட்பு—புல்லறிவுடையாருடன் கொண்ட நட்பு; ஆன் படு நெய் பெய் கலனுள்—பசுவின் நெய் வார்க்கும் பானையில்; அது களைந்து—அந்த நெய்யை நீக்கி; வேம்பு அடு நெய் பெய்து அனைத்து—வேப்பெண்ணெயை வார்த்து வைத்தது ஒக்கும் என்றவாறு. அரோ—அசை.

புல்லிய அறிவினர்க்கு வேப்பெண்ணெய் (உவமை)யாயினும் அந்த வேப்பெண்ணெய் பிணிக்கு மருந்தாகிப் பயன்படும்; புல்லிய அறிவினரது நட்பால் அதுவுமில்லை. ஆதலால் நல்லறிவினர் நட்பல்லது புல்லறிவினரோடு உறவு ஆகாது என்பதாம்.

பதுமனார்:—என்றது. ஆவினாலுண்டான நெய் பெய்த கலசத்தினுள்ளே அந்த நெய்யை நீக்கி, வேம்பின் நெய்யைப் பெய்தது போலும் தேம்படு நல்வரை நாடனே! நன்மையை அறிவாரோடு கொண்ட நட்பை நீக்கிப் புல்லறிவினை யுடையாரோடு கொண்ட நட்பு என்றவாறு.

பெய்கை—இடுகையும் வார்த்தலை வைத்தலுமாம். கலன்—கலசம். [1]தேம்படு—மணம் பொருந்தல். படு—மிகுதி.

விளக்க உரை:—எ-து. ஆன்படு நெய் பெய் கலனுள் அது களைந்து—பசுவின் நெய் வார்க்கப்பட்ட கலசத்தில் அந்த நெய்யை நீக்கி; வேம்பு அடு நெய் பெய்தனைத்தரோ—வேப்பெண்ணெயை வார்த்து வைத்ததற்கு ஒக்கும்; தேம்படு நல் வரை நாட!—தேம் படுகிற நல்ல மலைநாடனே!; நயனுணர்வார் நண்பு ஓரீஇ—நயமுள்ளவர் உறவைவிட்டு; புல்லறிவினரோடு நட்பு—புல்லிய அறிவினை யுடையாரோடு கொண்ட நட்பு என்றவாறு.

---

[1]தேம்படு—தேன் கூடுகள் மிக்க என்றுமாம்.

கருத்து:—புல்லறிவினர் நட்பால் ஒருபயனும் இல்லையாதலின் அவருடன் நட்புக் கொள்ளலாகாது.

(அ).

239. உருவிற்(கு) அமைந்தான்கண் ஊராண்மை
யின்மை
பருகற்(கு) அமைந்தபால் நீரளாய் அற்றே
தெரிவுடையார் தீயினத்தர் ஆகுதல் நாகம்
விரிபெடையோ(டு) ஆடிவிட் டற்று.

தருமர்:—என்பது. [1]உருவிற்கு அமைந்தான் கண்—வடிவிற்கு அமைந்தவனிடத்து; ஊர் ஆண்மை இன்மை—ஒப்புரவில்லாமை; பருகற்கு அமைந்த பால்—பருகுதற்கு அமைவாகக் காய்ந்திருக்கிற பாலிலே; நீர் அளாய் அற்று—நீரைக் கலந்ததனோடு ஒக்கும்; தெரிவு உடையார்—அறிவுடையார்; தீ இனத்தர் ஆகுதல்—தீய இனத்தைச் சேர்ந்து கெடுதல்; நாகம் விரி பெடையோடு ஆடி விட்டு அற்று—நாகமானது விரியன் பெடையுடனே கூடிப் புணர்ந்து கெட்டதனோடு ஒக்கும் என்றவாறு.

விரியன் பெடையோடு நாகம் புணரில் அந்த விரியன் வயிற்றில் கர்ப்பம் உற்பவிக்க, நாகத்துக்கு ஆயுசு குன்றுமாதலால் அத்தீய குணத்தாரோடு உறவு ஆகாது என்பதாம்.

பதுமனார்:—என்பது. வடிவிற்கு அமைவுடையான் மாட்டு ஒப்புரவில்லாமை †பருகற்கு அமைந்த பாலின்கண் நீரைப் பெய்தாற் போலும்; மனத்தின்கண் ஆராய்ச்சியுடையார் தீய இனத்தையுடையராதல், படத்தையுடைய நாகம் மயிற்பெடையின் முன்னே படத்தை விரித்தாடினாற் போலும்

---

[1] உருவிற்கு அமைந்தான்—பெருமைக்குரிய குணங்களையுடையான் என்பாரும் உளர்.

† பாலில் நீர் கலந்தாற் சுவைகெடுமாறு போலக் குணசாலியிடம் ஒப்புரவின்மை கலந்தாற் குணங்கெடும் என்க.

என்றவாறு.

பொழிப்புரை:—என்றது. வடிவிற்கு அமைவுடையார் மாட்டு ஒப்புரவில்லாமை பருகற்கமைந்த பாலின்கண் நீரைப்பெய்தாற் போலும்; மனத்தின்கண் ஆராய்தலையுடையார் தீய இனத்தராதல் பட நாகம் விரியன் பெடையொடு புணர்ந்தாற் போல இடும்பையைத் தரும் என்றவாறு.

ஊராண்மை—ஒப்புரவு. நாகம் விரியன் பெடையொடு புணர்ந்து உயிரைவிட்ட அத்தன்மைத்து; மயிற் பெடை(யொடு) என்றுமாம்.

விளக்க உரை:—எ-து. உருவிற்கு அமைந்தான்கண் ஊராண்மையின்மை-வடிவிற்கு அமைதியுடையவனிடத்து ஒப்புரவில்லாமை; பருகற்கமைந்த பால் நீர் அளாயற்றே—காய்ந்த பாலிலே நீரைக் கலந்ததனோடொக்கும்; தெரிவுடையார் தீயினத்தர் ஆகுதல்-அறிவுடையவர் தீய இனத்தைச் சேர்ந்து கெடுதல்; நாகம் விரி பெடையோடாடி விட்டற்று-நாகம் விரியன் பெடையோடு கூடிப் புணர்ந்ததனோ டொக்கும். எ-று.

†.................

கருத்து:—நற்குண முடையார் தீக்குணத்தாருடன் உறவு கொள்ளலாகாது.

(கூ).

240. முட்டுற்ற போழ்தின் முடுகியென் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வையம் நக.

---

†தருமர் உரையிற் காண்க.

தருமர் :—என்பது. முட்டு உற்ற போழ்நின் †[(நட்டான் தனக்கு) ஒரு துன்பம் வந்த காலத்து; முடுகி—விரைந்து; என் ஆர் உயிரை—எனது அரிய உயிரை; நட்டான் ஒருவன் கை நீட்டேனேல்—நட்புச் செய்தவனது கையிலே கொடுத்தேனில்லையாகில்; (யான்)] நட்டான் கடிமனை கட்டு அழித்தான்—நட்புச் செய்தவனுடைய காவல் மனையாளைக் கட்டழித்தவன்; செல் உழி செல்க—புகுந்த நரகத்திலே புகக் கடவேன்; நெடு மொழி வையம் நக—பெரிய புகழையுடைய பூமியிலுள்ளார் என்னைச் சிரிப்பதாக என்றவாறு.

நட்புச் செய்த விடத்துத் தான் அவன் என இரண்டாக்கி, அவனுக்கு ஒரு துன்பம் வந்தால் யான் இன்னபடி செய்யக் கடவேன் என்று சொல்லிக் காட்டியபோதே நட்புக்குப் பொருந்தாது. ஆதலால் இது கூடா நட்பில் சேர்க்கப்பட்டது.

பதுமனார் :—என்றது. என்னோடு நட்டான் ஒருவன், தனக்குச் [1]செல்லாமை வந்துற்ற போழ்து, விரைந்து என் அரிய உயிரை அந்நட்டான் கையின்கண் கொடேனாயின், தன்னோடு நட்டான் காவல் மனையைக் காவல் அழித்தான் செல்லும் உலகத்தின்கட் செல்வேனாக; நெடும் புகழையுடைய உலகத்து உயர்ந்தார் இகழ என்றவாறு.

முட்டுற்ற போழ்தே—கிலேசத்தை(க்கொண்ட பொழுதே). செல்வழி—நரகம். நெடுமொழி—விடாமொழி.

பொழிப்புரை :—எ-து. என்னொடு நட்டானொருவனுக்குச் செல்லாமை வந்துற்ற பொழுது, விரைந்தெனது அரியவுயிரை நட்டான்றன் கையிற் கொடேனாயின், தன்னொடு நட்டான் காவல்மனையாளைக் காவலழித்தான் செல்லுமுலகத்திற் செல்வேனாகநெடும் புகழையுடைய உயர்ந்தார் இகழ என்றவாறு.

---

†பிறையுள் இருப்பவை பிறசுவடியிலிருந்து பெற்றவை.

[1]செல்லாமை—வறுமை.

கடி—காவல். நட்பிடத்துச் செய்யும் நற்செயல். சொல்லாது செய்தல் ஒற்றுமை; சொல்லுதல் வேற்றுமை. [1]"இன்னம் யாம் என்று, புனையினும் புல்லென்னும் நட்பு". நெடுமொழி—நெடும்புகழ்.

விளக்க உரை :—எ-து. மூட்டுற்ற போழ்தின் முடுகி என் ஆருயிரை—யான் நட்புச் செய்யப்பட்டவன் தனக்கு ஒரு துன்பம் வந்தகாலத்து விரைந்து (எனது)யிரை; நட்டான் ஒருவன் கை நீட்டேனேல்—நட்புச் செய்தவன் கையிலே கொடுத்தேனில்லையாகில்; நட்டான் கடிமனை கட்டழித்தான் செல்வழிச் செல்க—நட்புச் செய்தவனது காவல் மனையாளைக் காவலழித்தவன் புக்க நரகத்திலே புகக்கடவேன்; நெடுமொழி வையம் நக—பெரிய புகழையுடைய பூமியிலுள்ளார் என்னைச் சிரிப்பதாக என்றவாறு.

இது கூடாநட்புக்குப் பொருந்தினபடி யென்னென்னில் இருவரும் புரையறக் கலந்து நட்புச் செய்தலால், இவன் இன்னபடி மிடிப்பட்டால் யான் இன்னபடி செய்யக்கடவேன் என்று சொல்லிக் காட்டுதல், நட்புக்குப் போதாதாகையால் கூடா நட்பிலே சேர்க்கப்பட்டதாம்.

[2]"இனையர் இவர்நமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு"

(—என்ற திருக்குறளையும் காண்க.)

கருத்து :—தன் உயிரைக் கொடுத்தாவது நண்பனுயிரைக் காப்பதே சிறந்த நட்பாகும்.

(ய).

நட்பியல் முற்றிற்று.

---

[1] குறள். 790.

[2] பரிமே:—"இவர் எமக்கு இத்துணை அன்பினர் யாம் இவர்க்கு இத் தன்மையம் என்று ஒருவரை ஒருவர் புனைந்து சொல்லினும், நட்புப் புல்லியதாய்த் தோன்றும்". —குறள். 790—உரை.

3. *இன்பவியல்.

†1. தலையின்ப வியல்.

25. அறிவுடைமை.

தருமர் :— அஃதாவது இயற்கை அறிவினாலும் செயற்கை அறிவினாலும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினை ᵉயும் நூல் சொன்ன முறைமையிலே அறிந்து மறுமைக்கும், இம்மைக்கும் உறுதியான காரியங்களைத் துணிந்[தறிதலும், உலகியற்கை அறிந்து உலகத்துக்குத் தக்கவாறு ஒழுகலுமாம்].

பதுமனார் :— அஃதாவது இயற்கை செயற்கை ஆகிய இரண்(டறிவி)னாலும் யாதொரு பொருளையும் [1] தூல ரூபமாகக் கண்டு விடாது அப்பொருளின் உண்மையினை மனத்திலே [2] சூக்குமமாக நிரூபித்து உணர்ந்தறிதலும், அவ்வாறு அறிந்த பின்பு, இவ்வுலகமானது அப்போது எவ்வாறு ஒழுகுகின்றது அவ்வாறு தானும் ஒழுகுதலுமாம் என்றவாறு.

குறிப்பு :—

'அறிவுடைமை' :—

பரிமே :—அஃதாவது, கல்வி கேள்விகளானாய அறிவோடு உண்மையறிவுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

---

*மக்களது மகிழ்ச்சியைக் கூறும் பகுதி.

†இன்பவியல்; தலையின்பம், கடையின்பம் என இருவகைப்படும். அவற்றுள் முதற்கண் தலையின்பம் உணர்த்துதலுதலிற்று.

[1] தூலரூபம்—பரு வடிவம்.

[2] சூக்குமம்—நுண்மை.

மணக்:—அறிவுடைமையாவது, அறிவாவது இன்னது என்பதும், அதனாலாகிய பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியும் உடையராயினும் கேட்டபொருளை உள்ளவாறு உணர்ந்தறிதல் வேண்டுமாகலின் அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:—அறிவுடைமையாவது கல்வியினும் கேள்வியினும் பெரிது எ-று.

—குறள். அதி. 43.

241. †நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்(கு)
அணிகலம் ஆவ(து) அடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை இன்றி நடக்குமேல் வாழூர்
கோத்திரம் கூறப் படும்.

தருமர்:—என்பது. [1]நளிகடல் தண் சேர்ப்ப!—(பெரிய) குளிர்ந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; நல் கூர்ந்த மக்கட்கு—மிடித்த மனிதர்க்கு; அணிகலம் ஆவது—பூணும் பணியாவது; அடக்கம்—அடக்க முடைமை; (ஒருவன்) பணிவு இல்‡சீர்—ஒழுபொழுதாயினும் அடக்க மில்லாத சீர்மை யுடையனாக; [2]மாத்திரை இன்றி நடக்கும் ஏல்—(வரம்பு கடந்து) நடப்பானாகில்; வாழும் ஊர்—தான் வாழும் ஊரிலுள்ளார் தாமே; [3]கோத்திரம்—தன் குடியை; §கூறப்படும்—(பழித்துக்) கூறப் படுவன் என்றவாறு.

தான் மிடித்த காலத்தினும் அறிவினாலே அடக்கமுண்டாய்

---

†இது முதல் ஐந்து செய்யுட்களின் முறைவைப்பு சில பிரதிகளில் வேறுபட்டுள்ளது.

[1] நளி—பெரிய.

‡சீர் என்றது ஈண்டு உயர்வினை.

[2] மாத்திரை—வரம்பு, அளவு.

[3] கோத்திரம்—பிறப்பு.

§கூறப்படும்—ஐயமுற்றுப் பழிக்கப்படும் என்க.

ஒழுகுவதல்லது, மிடியினாலே இருமைக்கும் உறுதியில்லாத காரியங்களைச் செய்வனாகில், இம்மை மறுமை இரண்டினையும் கெடுக்கப்படுவன். ஆகலால் அத்தன்மையாய் ஒழுகுதலைத் தன் அறிவினாலே அடக்கி நன்னெறியாய் ஒழுக வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. பெருங்கடல் தண் சேர்ப்பனே! வறுமையுடைய மக்கட்கு அணிகலமாவது அடக்கமுடைமை. தாழ்வு இல்லாத சீர்மையுடைய அளவினைக் கடந்து ஒழுகுவாராயின், தாம் வாழும் ஊரானே தன்னைப் பிறர்க்குக் குற்றஞ் சொல்லப்படும் என்றவாறு.

[நளி—பெருமை. நல்கூர்தல்—வறுமை யடைதல். கோத்திரம்—பிறப்பு.]

விளக்க உரை:—எ-து. நளிகடற் றண் சேர்ப்ப!—குளிர்ந்த கடற் சேர்ப்பை யுடையவனே!; நல்கூர்ந்த மக்கட்கு—மிடித்த மனிதர்க்கு; அணிகலமாவது அடக்கம்—அணியுங் கலமாவது அடக்கமுடைமை; பணிவில் சீர்மாத்திரையின்றி நடக்குமேல்—ஒரு பொழுதின் கண்ணும் அடக்கமில்லாத சீர்மையுடைய அளவினைக் கடந்து நடப்பானாகில்; வாழும் ஊர் கோத்திரம் கூறப்படும்—தாம் வாழும் ஊரிலுள்ளோர் தாமே தன் குடியைப் பழிக்கப்படுவன் என்றவாறு.

கருத்து:—வறுமையிலும் அடங்கி ஒழுகுவதே ஒருவனுக்கு அறிவுடைமையாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்".

—குறள். 958.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு".

—குறள். 963.

"வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை".
—நறுந்தொகை. 15.
(௧).

242. எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றான் ஆகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

தருமர்:—என்பது. எந்நிலத்து வித்து இடினும்—(எந்த) நல்ல நிலத்திலே விதைப்பினும்; காஞ்சிரம் காழ் தெங்கு ஆகா—எட்டிவிதை தென்னமரம் ஆகாது; [1]தென் நாட்டவரும்—தெற்குத்திசையிலே பிறந்தவரும்; சுவர்க்கம் புகுதலால்—அறத்தைச் செய்து சுவர்க்க லோகத்தை அடைதலாலே; [2]தன்னால் தான் ஆகும் மறுமை—தன்னுடைய அறிவினாலேயே மறுமைக்கு உறுதிகளைப் (பெறலாகும்); வடதிசையும் [3]கொன் ஆளர் சாலப்பலர்—வடக்குத் திக்கிலே பிறந்தவரு(ள்ளு)ம் [மறுமைக்கு உறுதியான அறத்தைச் செய்யாது] (வீணிலேயே) காலங்கழித்து நரகத்திலே புகுவார் மிகவும் பலர் என்றவாறு.

இயமன் இருக்குந் திசைக்கு அருகாமையான தென்திசையிலே பிறந்தவர், அந்த இயம லோகத்தைப் புகவேண்டு மன்றித் தூரத்திலேயான சுவர்க்கலோகம் புகுவது தன்மையோ? அது வன்றிச் சுவர்க்க லோகத்துக்கு அருகாமையான வடதிசையிலே பிறந்தவர், கிட்டின உலகம் விட்டுத் தூரத்திலேயான இயம லோகத்துக்குப் போவது தன்மையோ? அல்லவே? ஆதலால் பிறந்த உலகத்தைக் கொண்டு காரியமில்லை. எந்தத் திசையிலே

---

[1]தென்னாட்டவர்—தென் திசையிலுள்ள நரக லோகத்தவர். வடதிசை—வடதிசையிலுள்ள புண்ணிய பூமி என்றுமாம்.

[2]தன் ஆற்றான் என்று பிரித்துத் தான் செல்லும் ஒழுக்க நெறியால் என்றுங் கொள்ளலாம்.

[3]கொன்னாளர்—வீண்காலங் கழிப்பவர்.

பிறந்தாலும் அறத்தைச் செய்வார்க்கு அன்றிச் சுவர்க்கம் எய்துதல் ஆகாது. அதனால் பல நூல்களையும் ஆராய்ந்து அந் நூல்கள் மொழிந்தபடி அறத்தின் முயலும்படிக்கு அறிவுடையனாக வேண்டும் என்பது கருத்து.

நற்றிசையிலே பிறந்தாராயினும் அறம் செய்யாதார்க்கு மறுமை இல்லை என்பது தோன்றக் காஞ்சிரம் விதையை உவமையாக்கிக் கூறினர். "ஆரியா வர்த்தப் புண்ணிய பூமி" என்று வடமொழியாளரும் வடதிசையை வியந்து கூறினர்.

பதுமனார்:—என்றது. எல்லா நல்ல நிலத்து வித்து இடினும், காஞ்சிரம் விதை தெங்காக முளையா; தென்திசைப் பிறந்தாரும் சிலர் நல் அறஞ் செய்து சொர்க்கம் புகுவர். வட திசைப் பிறந்தாரும் தமக்கு நன்மை செய்து பயன் கொள்ளா(து போவா)ரும் பலர் உளர். ஆதலால் தமது அறிவினது நெறியானே ஆம் அத்துணை (மறுமை) என்றவாறு.

[கொன்னளர்-பயன் கொள்ளாதவர்; தன்னாற்றான் ஆகும் மறுமை— தன்னறிவினது நெறியாலே ஆகும் அத்துணை மறு பிறப்பு. நில நலந்தீங்குகளானன்று; அறிவின் நலந்தீங்கு களானும் மறுமை என்பதாம்].

விளக்க உரை:—எ-து. எந்நிலத்து வித்திடினும்— எந்த நிலத்திலே விதைப்பினும்; காஞ்சிரங்காழ் தெங்காகா— எட்டிவிதை தெங்காகாது; தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலால்—தெற்கின் கண்ணே பிறந்தவரும் அறத்தைச் செய்து சுவர்க்கம் புகுவர் ஆதலால்; தன்னாற்றான் ஆகும் மறுமை— தன்னுடைய அறிவினது நன்மை(யான்) ஒருவர்க்கு மறுமைக்கு உறுதியாவதாம்; வடதிசையும் கொன்னளர் சாலப் பலர்— வடக்கின் கண்ணே பிறந்தும் மறுமைக்குறுதியாகிய பயனைச் செய்யாமல் நரகத்திலே விழுவாரும் மிகவும் பலர் என்றவாறு.

கருத்து:—நற்கதி பெறுதற்குத் திசை காரணம் அன்று; அறிவுடைமையே காரணமாகும்.

ஒப்புமைப் பகுதி:—
"திரையொன்று போட்டாற் சுரையொன்று முளைக்குமா"?
—பழமொழி.
(உ)

243. பகைவர் பணிவிடம் நோக்கித் தகவுடையார்
தாமேயும் நாணித் தலைச்செல்லார்—காணாய்
இளம்பிறை ஆயக்கால் திங்களைச் சேரா(து)
அணங்கருந் துப்பின் அரா.

தருமர்:—என்பது. பகைவர் பணிவு இடம் நோக்கி—பகைவர் தளர்ந்த வழியதனை நோக்கி; தகவு உடையார்—தகுதியை உடையார்; தாமேயும் நாணி—தாம் செல்வதற்கு நாணி; தலைச் செல்லார்—அவரை அழிப்பதற்கு ஒருப்பட்டுச் செல்லார்; காணாய்—காண்பாயாக; அணங்கு அரும் துப்பின் அரா—வருத்தஞ் செய்வதற்(கரிய) வலியினையுடைய பாம்பு; இளம் பிறை ஆயக்கால்—திங்கள் இளம்பிறையான காலத்து; திங்களைச் சேராது—அத்திங்களைச் சேராது (அதுபோல) என்றவாறு.

நல்லறிவினையுடைய அரைசர் முதலானோர் தன்மையை வியந்து கூறியதிது.

பதுமனார்:—என்றது. முன்பு தமக்கு [1]சாதவமொத்த பகைவர் பின்பு தளர்ந்து வரத் தக்க இடம் நோக்கித் [2]தகைமையுடையார் தாமேயும் நாணிப் பகைவர் மேற் செல்லார்; பாராய் திங்கள் இளம் பிறை ஆய காலத்துச் சென்று [3]அடர்க்கச் சேராது; பிறிதொன்றால் வருந்துதற்கரிய வலியையுடைய நாகம்

---

[1] எழுத்துப்பிழை சேர்ந்திருக்கக்கூடும். ஆதலின் விளக்கவில்லை.
[2] தகையுடையார்—தக்க அறிவுடையார் என்க.
[3] அடர்க்க—நெருக்கி வருத்த.

அதுபோல என்றவாறு.

அணங்கருந் துப்பின் அரா—அணங்கு—தெய்வத் தன்மை. துப்பு—[1]சமத்து. இவ்விரண்டையும் உடைய இராகு என்பாரும் உளர்.

விளக்க உரை :—எ-து. பகைவர் பணிவிடம் நோக்கி—பகைவர் தளர்ந்தவிடம் நோக்கி; தகவுடையார் தாமேயும் நாணித் தலைச் செல்லார்—தகுதியுடையார் தாமே அதற்கு நாணி அவரை அழிப்பதாகப் படையெடுத்துச் செல்லார்; இளம் பிறை ஆயக்கால்—இளம் பிறையான காலத்து; திங்களைச் சேராது அணங்கரும் துப்பின் அரா—அந்தப் பிறையைச்சேராது வருத்தத்தைச் செய்யும் மிக்க வலியினையுடைய பாம்பு ஆதலால் என்றவாறு. காணாய்—அசை.

கருத்து :—பகைவர் தளர்ந்தபோது அவரை வெல்ல நினையாது, அவரது நிலைக்கு இரங்குதலே அறிவுடைமையாகும்.

ஒப்புமைப் பகுதி :—

'பகைவர் பணிவிடம்........செல்லார்':—

"அறுகுளத்து உகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
[2]கொடைமடம் படுத லல்லது
[3]படைமடம் படான்பிறர் படைமயக்குறினே".

—புறம். 142.

---

[1]சமத்து—வல்லமை,

கருத்து—பகைவர் தளர்ந்த போது அவரை வெல்ல நினைத்தல் அறிவுடைமையன்று.

[2]கொடை மடம்—அகாரணத்தாற் கொடை கொடுத்தல்.

(ஞானா. 17—உரை.)

[3]படைமடம் என்றது வீரரல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், மூத்தார், இளையார்மேலும் செல்லுதல்.

"உடையிட்டார் புன்மேய்வா ரோடுநீர் புக்கார்
படையிட்டார் பற்றேது மின்றி—நடையிட்டார்
இவ்வகை ஐவரையும் என்றும் அணுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று".

—சிறபஞ்ச. 41.

"சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பிடிகைப் பூலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்துவாள் ஒழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தரக்
கச்சை யானைக் காவலர் நடுங்கக்
கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
வாளழி வாங்கி யதரி திரித்த
வாளே ருழவன்"

—சிலப். 26 : 225—34.

குறிப்பு :—

பரிமேலழகர், [1]'பேராண்மை என்ப' என்ற குறளில் "ஊராண்மை—உபகாரியாந்தன்மை; அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்தானைமுழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை மேற் செல்லாது "இன்று போய் நாளை நின் தானையோடு வா" என விட்டாற் போல்வது" என்றுரைத்த பகுதி இங்கே நினைத்தற் குரியது.

(ந)

244. ‡கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீன்(டு) உவரி பிறத்தலால் தத்தம்

[1] குறள். 773.

இனத்தனையர் அல்லர் எறிகடல்தண் சேர்ப்ப!
மனத்தனையர் மக்களென் பார்.

தருமர் :—என்பது. எறிகடல் தண் சேர்ப்ப!—கரையை எறியும் திரைகளையுடைய கடற் சேர்ப்பை உடையவனே!; கடல் சார்ந்தும்—உவர் நீரையுடைய கடல் அடுத்த நிலத்திலேயும்; இன்னீர் பிறக்கும்—இனிய நீர் உண்டாம்; மலை சார்ந்தும்—மலையை அடுத்த நன்னிலத்திலேயும்; உப்பு ஈண்டு உவரி பிறத்தலால்—உப்பு மிகுந்த உவர் நீர் தோன்றும் [ஆதலால்], மக்கள் என்பார்—அறிவுடைய மனிதர் என்னப்பட்டவர்; தம் தம் இனத்து அனையர் அல்லர்—தாம் தாம் இணங்கிய இனத்தின் அளவாகார்; மனத்து அனையர்—தம் மனத்தறிவு எப்பொழுதும் குன்றுதல் இலர் என்றவாறு.

இது [1]"மனத்தால் மறுவிலரேனும்" என்ற [2]தொடர்புக்கு மாறுபாடாகாதோ எனில், மாறுபாடு ஆகமநூலிற்கன்றி, அறம் பொருள் இன்பம் சொல்லி வீடுபேற்றை அறிவிக்கும் பொருட்டுக் கூறிய, நாலடி, திருவள்ளுவப் பயன் முதலான உலக நூலுக்கு மாறுபாடாகாது. அதிகாரத்துக்கு இயன்றபடி கூறியதாயிற்று.

பதுமனார் :—என்றது. கடல் சார்ந்த இடத்தும் இனிய நீர் தோன்றும்; மலைசார்ந்த இடத்தும் உப்புமிக்க உவர்நீர் பிறக்கும்; ஆதலால் மக்களாவார் தந்தம் இனத்தின் தன்மையர் அல்லர்; [3]மனத்தின் தன்மையர் ஆவர் எறிகடல் தண் சேர்ப்பனே! என்றவாறு.

எறிகடல் என்றது கரையைப் [4]பொருதலால்.

---

[1]நாலடி. 180.

[2]தொடர்பு—செய்யுள்.

[3]மனம் என்றது ஈண்டு அதிகாரத்துக்கு ஏற்ப அறிவைக் குறிக்கிறது.

[4]பொருதலால்—மோதுதலால்.

விளக்க உரை :—எ-து. கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் கடலைச் சார்ந்த இடத்தும் இனிய நீருண்டாம்; மலை சார்ந்தும் உப்பு ஈண்டு உவரி பிறத்தலால்—மலையைச் சார்விடத்தும் உப்பு மிக்க உவர்(நீர்) தோன்றும் [ஆதலால்]; தத்தம் இனத் தனையர் அல்லர்—தாந்தாம் இணங்கிய இணக்கத்தின் அளவாகார்; எறிகடல் தண் சேர்ப்ப!—கரைகளை எறியுந் திரைகளையுடைய குளிர்ந்த கடற் சேர்ப்பனே!; மனத் தனையர் மக்கள் என்பார்—அறிவுடைய மனிதர் தமதறிவு எப்பொழுதுங் குன்றுதலிலர் என்றவாறு.

இது 'மனத்தால் மறுவில ரேனும்' என்ற பாட்டுக்கு மலைவாகாதோ என்னில், மலைவாகாது. ஆகமநூலுக்காயிருக்கும் இது. உலகநூலான நாலடி, திருவள்ளுவப்பயன் முதலான நூல்கள் அறம் பொருள் இன்பம் மூன்றினையுந் திருந்தச் சொல்லி வீடுபேற்றை அறிவிப்பிக்க வேண்டுகையால், உலகத்துக்கு இயற்கையான ஏதுக்களுங் குணங்களும் அறிவும் அறியாமையும் ஆதலில் குற்றங்களையும் குணங்களையும் ஒரே அதிகாரமாக விட்டு விரித்துரைத்து நல்வழிப்படுத்த வேண்டுதலில் அது நல்லினஞ் சேர்தலுக்குத் தக்கதாகச் சொல்லித் தீயினத்தைச் சேர்தலால் வரும் துன்பத்தை அறிவித்து இப்பொழுது அறிவுடைமைக்குத் தகச் சொன்னார் என்பதாம்.

கருத்து :—தம் இயற்கையறிவு சேர்க்கையால் மாறுபடாதவரே மக்கள் என்று சிறப்பிக்கப்படுவர்.

ஒப்புமைப் பகுதி :—

"வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்—ஆங்கே
இனந்தீது எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது".

—நாலடி. 245.

"மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க

"நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு".

—குறள். 452

"இனத்தியல் பாம்அறி வென்ப துண்மையே
மனத்துயர் செயும்மயல் மாற்று நீறுதான்
அளிச்சமெல் அடியினர் நுதல்அு டுத்தலும்
பனித்துடல் வெதும்புமால் படுத்த லால்என்பார்".

—பிரபு. மயைபூசை. 34.

"பையலோடு இணங்கேல்"

—ஆத்தி. 85.

"பன்றியோடு கூடினல் கன்றும் மலம் தின்னும்"

—பழமொழி.

"சோரரோடு சேராதே சேம்பு புளியிட்டுக் கடையாதே".

—பழமொழி.

இனநலம் நன்குடைய வாயினும்
மனநலம் ஆகாவாம் கீழ்".

—பழ. 11.

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல்".

—குறள். 453.

"தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவார்—தக்க
இனத்தினன் ஆகும் பழியும் புகழும்
மனத்தினன் ஆகும் மதி".

—சிறுபஞ்ச. 81.

இச்செய்யுளிற்கு மாறுபடுவன:—

"மனத்தான் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தான் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்".

—நாலடி. 180.

"முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்பது இனத்தால் அறிக
கயலியலுண் கண்ணாய்! கரியரோ வேண்டா
அயலறியா அட்டூணோ இல்".

—பழ. 237.

'கடல்சார்ந்தும்............பிறந்தலால்' :—

"திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்குந்
தின்னீர் வினவுவர் மாந்தர் அதுபோல்".

—புறம். 154 : 1—3.

"—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்".

—மூதுரை. 12.

(௪).

245. வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்—ஆங்கே

திருத்தம் :—

96-ஆம் பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'நிலத்தியல்பான்' என்று தொடங்கும் குறளிலிருந்து 'புளியிட்டுக் கடையாதே' என்று முடியும் பழமொழி வரையுள்ள செய்யுட்களை 'இச் செய்யுளிற்கு மாறுபடுவன' என்ற இப்பகுதியுடன் சேர்த்துக் கொள்க.

95-ஆம் பக்கத்தில் உள்ள 'மிக்குப் பெருகி' என்ற பழமொழியின் ஈற்றடிகள் 'புளியிட்டுக் கடையாதே, என்பதன் கீழ் உள்ளது.

இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வாசித்துக் கொள்க.

இனந்தீ(து) எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது.

தருமர் :—என்பது. வேம்பின் இலையுள் கனியினும்—திரண்ட வேம்பின் நடுவே நின்று பழுத்ததாயினும்; வாழை—வாழையானது; தன் தீம் சுவை யாதும் திரியாது ஆம்—தன்னுடைய இனிய சுவை சற்றும் வேறுபடாது; ஆங்கே—அதுபோலவே; இனம் தீது எனினும்—தாம் சேர்ந்த இனம் தீதாயினும்; இயல்பு உடையார் கேண்மை—பண்புடையார் கேண்மை; மனம் தீது ஆம் பக்கம் அரிது—மனம் தீதாகும் திறம் இல்லை என்றவாறு.

அறிவாகிய மனத்திடம் உடையவர் தீய குணம் உடையாருடன் கூடி யிருந்தாலும் தம் அறிவு குன்றுதல் இலர் என்பதாம்.

பதுமனர் :—என்றது. வேம்பினது இலையின்கண் கனிந்ததாயினும் வாழைக்கனி தன் தீஞ்சுவை யாதும் வேறுபடாது; அதுபோலத் தம்மைச் சேர்ந்த இனம் தீதாயினும் அறிவுடையார் மனம் தீதாம் திறம் அரிது என்றவாறு.

இன்சுவை—இனிய சுவையும், அழகிய சுவையுமாம். பக்கம்—திறம்.

விளக்க உரை :—எ-து. வேம்பின் இலையுள் கனியினும் வாழை—வேம்பின் இலையிலே வாழை பழுப்பினும்; தன் தீஞ்சுவை யாதும் திரியாதாம்—தன்னுடைய இனிய சுவை சற்றும் வேறுபடாது; ஆங்கே—அதுபோல; இனந் தீது எனினும்—இணக்கந் தீதாயினும்; இயல்புடையார் கேண்மை—பண்புடையார் கெழுமுதல்; மனந்தீதாம் பக்கம் அரிது—மனந்தீதாகும் திறமில்லை என்றவாறு.

கருத்து:—திடமான அறிவுடையார் தீயோர் சேர்க்கையால் தம் குணங்கெடார்.

(ரு).

246. பராஅரைப் புன்னை படுகடல்தண் சேர்ப்ப!
ஓராஅலும் ஒட்டலும் செய்பவோ? நல்ல
‡மரூஉச்செய்(து) யார்மாட்டும் தங்கும் மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று.

தருமர்:—என்பது. பரு அரைப் புன்னை—பெரிய அரையினையுடைய புன்னை (மரங்)களால்; படுகடல் தண் சேர்ப்ப!—பொலிவு பெற்ற குளிர்ந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; யார் மாட்டும் நல்ல மரூஉ செய்து தங்கும் மனத்தார்—யாவரிடத்தும் மருவிய நல்ல அன்பினைக் (கொள்ளும் மனத்தை) யுடையவர்; ஓராலும் ஒட்டலும்—ஒருவருடன் நட்புக்கொண்டு அவரை விட்டு நீங்குதலும் கூடுதலும்; செய்பவோ?–செய்யக்கடவரோ? (செய்யார்; இதனினும்); [1]விராய் செய்யாமை—ஒருவருடனும் கலந்து நட்புச் செய்யாமை; நன்று—; என்றவாறு.

ஒருவருடன் நட்புச்செய்து பிரியும்போது அறிவுடையார்க்கு மிக்க வருத்தம் எய்தும். அதனாலே ஒருவருடனும் நட்புச் செய்யலாகாது என்று அவர் அறிவுடைமையை வியந்து கூறியது. யாவரிடத்தும் மருவிய நல்ல அன்பு உண்டாவது அறிவுடைமையால் வந்ததாம்.

பதுமனார்:—என்றது. பரிய அரையினையுடைய புன்னைப் படுகடல் தண்சேர்ப்பனே! மிக்க இனிய செய்கையுடையார் மாட்டுக் கொண்ட நட்பினை ஒருகால் நீங்குதலும் ஒருகாற்

---

‡'மரூஉச் செய்தி யார் மாட்டும்' என்றும் பாடம்; இது பொழிப்புரைகாரர் மேற்கொண்டது.

[1] ஒன்று கூடியிருக்க வேண்டும்; அல்லது பிரிந்தே யிருக்கவேண்டும். கூடிப்பிரிதல் கூடாது என்பதாம்.

புணர்தலும் செய்வார் உளரோ? நிலைபெற்று ஒரு பெற்றியே நின்ற மனத்தார், புணர்தலையும் நீங்குதலையும் மனங்[1] கலந்து செய்யாமை நன்று ஆதலால் என்றவாறு.

பராவரைப் புன்னை என்று பாடம் ஓதி, முத்து நிறத்தாலும், பொன்னிறத்தாலும் மிக்க அரையையுடைய புன்னை என்று **உரைப்பாரும் உளர்.** படு கடல்—பெருங்கடல்.

ஓராலும் ஒட்டலும் செய்பவே என்று பாடம் ஓதி, ஒரு பெற்றியின் நில்லாது பிரிதலும் புணர்தலும் செய்வர். ஆதலால் மிக்க இனிய செய்நிலை யுடையார் மாட்டுந் தம் மனந் தாங்கும்படி கலத்தலைச் செய்யாமை நன்று என்றுமாம். எனவே அறிவுடையாரைப் பிரிதல் துன்பம் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. பராஅரைப் புன்னைப் படுகடல் தண்சேர்ப்ப!—பருத்த அரையை யுடைய புன்னை மரத்தாற் சிறப்புப் பெற்ற மிக்க குளிர்ந்த கடற்சேர்ப்பையுடையவனே!; ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ?—ஒருகால் விட்டு நீங்குதலும் ஒருகால் கூடுதலும் செய்யக்கடவரோ?; நல்ல மரூஉச் செய்தியார் மாட்டும்—நல்ல மருவிய செய்கை யுடையார் மாட்டும்; தங்கும் மனத்தார்—தங்கப்பட்ட மனத்தினையுடையவர்; விராய்ச் செய்யாமை நன்று—(அதனினும்) ஒருவருடனே விரவி நட்புச் செய்யாமை நன்று என்றவாறு.

கருத்து:—அறிவுடையார் ஒருவருடன் கூடிப்பிரிதலையும், மீண்டு கூடுதலையுஞ் செய்யார்.

ஒப்புமைப் பகுதி :—

"தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய

உலவா இருங்கழிச் சேர்ப்ப! யார் மாட்டும்
கலவாமை கோடி யுறும்".

—நாலடி. 168.

"விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியு மலைநாட! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு".

—நாலடி 122.

'ஓரால்' :—
"வேந்தர் தாரழிந் தொராலின்"

—பதிற்றுப். 23. 17.

குறிப்பு.—

'நல்ல மரூஉச் செய்தியார் மாட்டும் ஓராலும் ஒட்டலும் செய்பவோ? தங்கும் மனத்தார் விராய்ச் செய்யாமை நன்று' எனப் பதப்பிரிவு செய்து பதுமனார் உரைவகுத்துள்ளார். (சு).

247. உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்—புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்.

தருமர்:—என்பது. உணர உணரும் உணர்வு உடையாரை—ஒருவர் உணர்த்த அறியும் அறிவுடையவரை; புணர இன்பம் புணரும்—நட்புச் செய்ய இன்பம் பொருந்தும்; புணரின்—நட்புச் செய்தால் பின், தெரிய தெரியும் தெரிவு இலாதாரை—விசாரித்து அறியப்பட்ட அறிவில்லாதாரை; பிரிய—விட்டு நீங்கவே; நோய் பிரியும்—(அவரால் வரும்) துன்பம் நீங்கும் என்றவாறு. [ஆம் இரண்டும் அசை]

நட்புச் செய்வதும் அறிவில்லாரிடத்து ஆகாது என்பதனால்,

நன்னூல்நெறிகளை ஆராய்ந்து அதன்நெறி ஒழுகும் அறிவுடையன் ஆதல் வேண்டும் என வற்புறுத்தியது.

பதுமனர்:—என்றது. பிறர் அறியும்படி அறியும் அறிவினையுடையாரைப் பொருந்தப் பொருந்துமாம் இன்பம்; பிறரறிய அறியும் அறிவில்லாதாரைப் பிரியக்கூடின் துன்பமும் பிரியுமாம் என்றவாறு.

உணர உணரும் உணர்வுடையார்—ஒருவர் மனத்தில் நினைத்த காரியத்தை அவர் சொல்லுங் காட்டில் அறிந்து சொல்லுவார். தெரியத் தெரியும் தெரிவிலாதார்—ஒருவர் நினைக்குங் காரியத்தை அறியமாட்டாதார்.

விளக்க உரை:—என்பது. உணர உணரும் உணர் வுடையாரை—ஒருவர் அறிவிக்க அறியும் அறிவுடையாரை; புணரப் புணருமாம் இன்பம்—அவருடன் நட்புச் செய்யவே இன்பங்களும் பொருந்தும்; புணரின் தெரியத் தெரியும் தெரி விலாதாரை—நட்புச் செய்த பின்பு விளங்க ஆராயும் ஆராய்ச்சி இல்லாதாரை; பிரியப் பிரியுமாம் நோய்—அவரைவிட்டு நீங்கவே அதனல் வரும் துன்பங்களும் நீங்கும் என்றவாறு.

கருத்து:—அறிவுடையாரைக் கூடுதலும் அறிவிலாதாரைப் பிரிதலும் அறிவுடைமையாகும்.

ஒப்புமைப் பகுதி :-

"நல்லினத்தி னூங்கும் துணையில்லை தீஇனத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்".

—குறள். 460.

"நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரினவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலகீழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்".

—நீதிவெண்பா. 79.

"சிலமுற் றுயர்ந்தவர்ச் சேரின் வீடுறும்
மாலையுற் றறிவிலார் மருங்க டைந்திடின்
வேலையுற் றலைதரும் பென்ன வெம்பவக்
கோலமுற் றிறந்திறந் துழலல் கூடுமால்".

—பாக.

"தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது".

—வாக்கு 9.

குறிப்பு :-

இந் நாலடிச் செய்யுள் கூடிப்பிரிதல் கூடாது என முன் கூறிவந்த செய்யுட்களுடன் மாறுபடுவதே யெனினும் பலசமண முனிவர் தனித்தனி கூறியதாகலின் மாறுபடாதென்க. "குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள், யாது கொடுத்துங் கொளல்" என்பது வள்ளுவர் வாய்மொழி ஆதலின் "உணர உணரும் உணர்வுடையாரைப் புணரப் புணருமாம் 'இன்பம்" என்றார்.

(எ).

248. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழ்இடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

கருமர் :—என்பது. நல் நிலைக் கண் தன்னை நிறுப்பானும்—நல்ல நிலைமையிலே தன்னை நிறுத்திக் கொள்ளுமவனும்; தன்னை நிலை கலக்கி கீழ் இடுவானும்—தன்னை அந்த நிலைமையிலே நின்றும் கலைத்துக் கீழ்மையாக்கிக் கொள்ளுமவனும்; நிலையினும்

—முன் நின்ற நிலைமையினும்; மேல்மேல் [1]உயர்த்து நிறுப்பானும்—மேன்மேலும் உயர்வு பண்ணிக் கொள்ளுமவனும்; தன்னை தலையாக செய்வானும்—தன்னைத் தலைமையுடையனாகச் செய்துகொள்ளுமவனும்; தான்—தானே(யாவன்) என்றவாறு.

அறிவில்லாத காலத்தில், தாம் நல்ல நிலையிலே நிற்பினும் அதனைக் கீழ்மையாக்கிக் கொள்ளுந் தொழிலைச் செய்து கீழாவர். அறிவுற்றபோது அவ்வறிவினாலே நன்னெறியின் ஒழுகி யாவர்க்கும் முதன்மையாவர். ஆதலால் யாவரும் அறிவுடையராக வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. நல்ல நிலையின்கண் தன்னை நிறுத்துவானும் தன்னை, அந்நிலைமையைக் கலக்கிக் கீழ்மையின்கண் இடுவானும், அந்நிலையினும் மேலாக மேலாக உயர்வித்து நிறுத்துவானும், தன்னைத் தலையாகச் செய்வானும் தான் என்றவாறு.

†**நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும்**— உயர்குலமும், செல்வமும், வலியும், முதலான பெருமையுடையனாகப் பெற்றுந் தீயவை செய்தாரை உலகங் கைக்கொள்ளாதவாறு கண்டு அஞ்சியும், நல்லவை செய்தாரைச் சான்றோர் பலரும் உட்கொள்ளுதலும் கண்டு, அதற்கு ஏற்ற நிலைகளைக் கருதி நன்றான ஒழுக்கமும் கல்வியும் நற்குணங்களும் நன்முயற்சியும் [2]ஒப்புரவும் நிலையும் சத்தியமும் தன்மமும் உடையவனாய், மனோவாக்குக் காயங்களால் பிராணிகளுக்கு இதமானவை செய்து, சான்றோர் நின்ற நிலையிடத்துத் தன்னை நிறுத்துவானும்;

தன்னை நிலைகலக்கிக் கீழ் இடுவானும்—நால்வகை வருணத்துட்படப் பிறந்து கல்வியும், வலியும், திருவும் முதலான பெருமை

---

[1]உயர்த்துவானும் என்னாது உயர்த்து நிறுப்பானும் என்றது உயர் நிலையை ஆக்கிக் கொள்வதுடன், அந்நிலையில் நிலைநிறுத்துதலும் வேண்டும் என்பதற்கு.

†இவ்விரிவுரை உணர்ந்து இன்புறுவதற்கு உரியது.

[2]ஒப்புரவு—உபகாரம்.

களை முன்னைத் தவவினையாலே பெற்று வைத்து, அதற்குத் தக்க நிலை நில்லாது அந்நிலையைக் கலக்கிப் பயனற்ற சுருக்கமான பொல்லாத ஒழுக்கமும், நல்லோர் விரும்பாத கல்வியும், ஆசையும், கோபமும் உடையனாய்க் கொலைத் தொழிலாலும் பொய்யாலும் களவாலும் பொருள் செய்து, கொலையும் அவ்வூன் தின்கையுமே அறம் என்றும், கள்ளுண்டு மயங்குதலே முத்தி என்றும் இப்படி மாறுபட்ட அறிவினனாய் எல்லாராலும் இகழப்பட்டு, மறுமைகள் தோறும் இழியப் பிறந்து வறுமையாலும் பிணிகளாலும் துன்ப முற்று நரகங்களாலே விழும்படி தன்னைக் கீழ்விடுவானும்;

நிலையினும் மேன்மேல் உயர்த்து நிறுப்பானும்—அந்நிலையிடத்தே நின்று மிகவும் உயர்ந்த மனத்தையுடையனாகி அறம், பொருள், இன்பம், வீடு என்றவற்றின் தகுதிகளை ஆராய்ந்து தத்தமக் கமைத்தபடியே பலவாகிய கேள்வி, கல்வி, வீரம், சூழ்ச்சி, பொருள், முயற்சி, புகழ், கொடை என்பன யாதோரளவு செலுத்தும் அளவிற்கு ஏற்ற பெற்றி செலுத்தும் வரிசைகளும் பெருமைகளும் ஒன்றுக்கொன்று உயரப் பெறுமதன்றி, இல்லறம் விட்டு வனமடைவாரும், இல்லொழுக்கப் பொல்லாங்கு கண்டு துறவறத்தை யடைவாருமாகத் துறந்திருந்து, சத்திய [1]சௌச சாந்தி காம வெகுளி மயக்கங்களைப் போக்குதலாகச் சொல்லப் பட்ட போசனநியதி, செபம், ஓம மாதிகளான பாவனைகளை நன்றான விரதங்களுடனே கூடின தவங்களைப் பண்ணிப் பெரிய நூல்களை ஓதியும் ஓதுவித்தும், [2]தேசுடையராய்த் [3]திரிகால ஞானம் உடையாரும், [4]பரசித்தம் அறிவாரும், [5]சாபானுக்கிரகம் உடையாருமாய் மகத்தான நாமங்களும் பெருமைகளும் உடையாராய்த் தாம் குறித்த படிகளை அறிவாரும், செய்த நன்மைக்கு ஈடாகச் சுவர்க்கங்கள் தோறும் ஒன்றுக்கு ஒன்று உயர்ந்த பதங்களிலே

---

[1]சௌசம்—தப்புரவு.

[2]தேசு—ஒளி; பெருமை.

[3]திரிகால ஞானம்—சென்றகால, நிகழ்கால, வருங்கால் நிகழ்ச்சிகளை அறியும் அறிவு.

[4]பரசித்தம்—பிறரது எண்ணம்.

[5]சாபானுக்கிரகம்—அழித்தலும், ஆக்கலும்.

தங்களை மேன்மேல் உயர்த்தி நிறுத்துவாரும்;

தன்னைத் தலையாகச் செய்வானும் தான்—முன் சொன்ன நன்றான நிலைகள் இரண்டிலும் நின்று செய்த தன்மங்களாலும் தவத்தினாலும் பிறந்த [1]வாசனையால், எல்லாப்பிராணிகள் மேலும் அன்பு செய்தும் அவை துன்பமுறக் காணில் அவற்றினுக்குத் தாமும் துன்பமுற்றும், இன்புறக் காணில் இன்பமுற்றும் வாழ்த்தினார் வைதார் என்னும் [2]வாசியற்றும் சாந்தனும் போந்த பெருந்தன்மைகளாலும், [3]முற்பந்த ஞானம் பிறந்து பிறப்புத் துக்கம் என்னும் உணர்ச்சி தோன்றி இதற்கு முன்பு வருந்தித் தேடின பொருள்களாற் செய்த தன்மங்களாலும், உடம்பை ஒறுத்து நின்று செய்த தவத்தினாலும் சுவர்க்கத்தோடும் பூமியோடும் சுகதுக்கம் அநுபவித்துத் திரிந்தது இத்தனை இந்தப் பிறப்பறுவது இந்தப் பிறப்பு வந்தவழி யறிந்து போகவிடின் போம் இதனை என்று பார்க்கத் தன் மனதிலே முற்படவே எழுந்த ஆசை காரணமாக எழுந்திருந்து காயத்தாற் செய்யப் பட்ட நலந்தீங்குகள் புண்ணிய பாவங்களாய்ப் பிறப்புக்கு ஏது என்று சாத்திரங்கள் சொன்னபடியே கருப்பக் குடரிலே சுருண்டு கிருமி மல மூத்திரங்களாலே நெருக்குண்டு நெடுநாட் கிடந்து விதனப்பட்டு விழுந்து பசி பிணி மூப்பு மரணங்களை அநுபவித்து வருகிற இதற்கு பத்தியும் ஆகாரமுமாகக் கண்டது தாலுண்ணப்பட்ட உணவாய் இவ்வுணவு தாம் மேலெழப் பக்குவப் பட்டு மலமாகிக் கழியப் பிற்பட்டது தோலும் நரம்பும் உதிரமும் தசையும் எலும்புமாய்ப் பக்குவப் படுகிற(வி)து விட்ட வாயில்கள் தோறும் பொசிந்து பொசிந்து நின்ற மலங்கள் புறப்படத் துர்கந்தித்துப் பொழியும் இதுகண்டு அருவருத்து இதன் ஆசையற்று இதற்குத் தொடர்ச்சிக்கு இசைந்த பொருளும் சுற்றமும் இதனோடொக்க அநித்தமாயும்

---

[1]வாசனை—பழக்கம்.

[2]வாசி—வேறுபாடு.

[3]முற்பந்த ஞானம்—முற்பிறவி பற்றிய அறிவு.

தன்னைத் தலையாகச் செய்வானுந்தான்—என்பதற்குரிய விரிவுரையில் சில இடங்களில் பிழைகள் சேர்ந்துள்ளன. ஆதலின் இவ்வடியின் கருத்து ஆராய்வதற்கு உரியது.

இதில் வைத்த பற்றும் பிறப்பாய் முடியும் என்று கண்டு இவை யிற்றைப் பகைசயறவிட்டுப் பின்பு பற்றறுகையே முத்தி என்றார்கள்; பற்றினன் ஒருவனும் பற்றுவிடுவான் ஒருவனும் உளனாயின் பற்றற்ற பொழுதே முத்தியானபடி எனவும், முத்திதான் எப்பெற்றிப் பட்டது? பற்றற்று முத்தி பெறுமவன் எப்பெற்றிப் பட்டவன்? என்று விசாரித்து இவ்வுண்மையை அறிந்தவன் முத்திபெறும் என்றும் நூல்களிற் சொன்னபடி களிலே பார்க்க இருளற்றுத் தெளிந்த மனத்தைப் பின்பு வேறு வேறு சலியாதபடி உபாயங்களாலே ஒருவழிப் படுத்தித் தொண்ணூற்றாறுஞ் சொல்லப்பட்ட சமயங்களினுள்ளும் நல்லோ னொருவன் கண்டபடி ஒருவன் காணாது ஒருவனையன்றி ஒரு வனுக்கு அரியாமையாகிய வெவ்வேறுபடச் சொல்லும் பொருண்மை தன்னையே கொண்டு தான் பொதுப்பட நின்று தனித்தனியே நிரூபித்து இவை எல்லா இலக்கணமும் சொல்ல உண்மையாய் இருப்பது யாது அதனை அப்படியே உணர்ந்து மரண பயமறக் கண்டு ஐயந் தீர்ந்தும் பின்புங் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியும் புலன்களுடனே இம் மனத்தைப் பார்த்து இது ஒரு பொருளைப் பற்றி எழுதலின்றித் தானே தனித்து எழ மாட்டாது முன்னே பற்றற்ற பொருள் கள் மேல் இனிச் செல்லாதாயினும் முன்னுற்ற பொருள்கள் மேலே தாக்கி எழுதல் இதற்கு இயல்பு ஆகலின் இது ஒன்றினல் தாக்கி விகற்பியாதபடியும் அசையாதபடியும் நிறுத்தல், இது [1]முகிழ்த்து எழுகிற விடத்தே முகிழாதபடி அமைக்கில் ஐயம் பிறப்பித்தல், [2]அட்டாங்க யோகத்தாலே அம் மனோலயம் பிறப் பித்தல் செய்து அவ்வனுபவத்தினலே உணர்ந்து உணர்ந்து அப்படியே போய் முத்தியைத் தரிசித்து தரிசித்தபடியே [3]நித்தியத்துவம் அடைந்து இந்தச் சரீரத்துடனே மனித்தரில் [4]சேட்டராலும் தேவர்களிற் பெரியராலும் இவன் தலைவன்

---

[1] முகிழ்த்து—தோன்றி.

[2] அட்டாங்க யோகம்—எட்டுத் தவநிலை. அவையாவன :—இமயம், நியமம், ஆதனம், தியானம், பிரத்தியாகாரம், பிராணாயாமம், தாரணை, சமாதி என்பன

[3] நித்தியத்துவம்—அழியாதநிலை.

[4] சேட்டர்—அறிவில் மூத்தோர்.

என்று சொல்லுப்படி தன்னைத் தலையாகச் செய்வானும் தான் என்றவாறு.

†"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து".

விளக்க உரை:—எ-து. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும்:—நல்ல நிலையிலே தன்னை நிறுத்திக் கொள்வானும்; தன்னை நிலைகலக்கிக் கீழ் இடுவானும்:—தன்னை அந்த நிலையினின்றுங் கலக்கிக் கீழாக்கிக் கொள்ளுமவனும்; நிலையினும் மேன்மேல் உயர்த்து நிறுப்பானும்:—முன்பு நின்ற நிலையினும் தன்னை மேன் மேலும் உயர்ச்சி பண்ணிக் கொள்ளுமவனும்; தன்னைத் தலையாகச் செய்வானும் தான்—தன்னைத் தலைமையுண்டாம்படி செய்துகொள்ளுமவனுந்தான் என்றவாறு.

கருத்து:—ஒருவனது உயர்வு தாழ்வுகட்கு அவனது அறிவு நிலையே காரணமாகும்.

மேற்கோள் பகுதி :-

சங்கர:—"தன்னைத்தானே வேற்றுமை செய்தல், 'நன்னிலைக்கட்.................தான்' என்பதனானு முணர்க" என்பர்.

—நன். சூ. 295.

ஒப்புமைப் பகுதி :—

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்".

—குறள் 505

---

†பரிமே:—ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு, எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக் கடவதாய வீட்டுலகம் அணித்தாதல் உடைத்து.

மணக்:—மெய்ப்பொருளை ஐயப்படுதலினின்று நீங்கித் தெளிந்தவர்க்கு, இவ்வுலகத்தினும் மேலுலகம் அணித்தாம் தன்மை உடைத்து என்றவாறு.

—குறள். 353. (மெய்யுணர்தல்).

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி".

—அறநெறி. 151.

—"தன்னை
இறைவனுச் செய்வானும் தானேதான் தன்னைச்
சிறுவனுச் செய்வானுந் தான்".

—அறநெறி. 77.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு".

—குறள் 974.

"பீடுபெற நில்".

—ஆத்திசூடி. 80.

"தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ"

—கம்ப. அரசியற். 16.

"பெருமை சிறுமை அளந்துகொளப் பேணும் கருவி தத்தமது
கருமம் அதுபோல் பிறகருவி கழியச் சிறந்த வலஅறிக".

—விநா. அரசி. 78.

"பெருமையும் சிறுமையும் தான்தர வருமே".

—பழமொழி.

"தத்தம் கருமமே கட்டளைக் கல்".

—பழமொழி.

(அ).

249. கரும வரிசையால் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேறல்—அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடல்தண் சேர்ப்ப!
பேதைமை அன்ற தறிவு.

தருமர் :—என்பது. அருமரபின் ஓதம் அரற்றும்—மிக்க சிறப்பினையுடைய திரைகள் ஆரவாரிக்கும்; ஒலிகடல் தண் சேர்ப்ப!—ஒலியை உடைய குளிர்ந்த கடற்சேர்ப்பனே!; [1] கருமம் வரிசையால்—தமக்கொரு கருமம் செய்து கொள்ளுகை காரணமாக; பெருமை உடையாரும் கல்லாதார் பின்னும் சேறல்—பெருமை உடையாரும் அறிவில்லாதாரைப் பின் செல்வது; பேதைமை அன்று—அறிவின்மை யன்று; அது அறிவு—(அது) அறிவுதானே என்றவாறு.

அருமரபு என்றதை பெறுதற்கரிய குடிமையை உடைய் பெரியோர் எனலுமாம். கல்லாதாரைப் பின் செல்வது பெரியோர்க்கு இயற்கை யறிவல்லவே; கருமத்தின் பொருட்டு அல்லாது அறிவில்லாரைப் (பெரி)யோர் நட்புச் செய்யார் என்பது, கல்லாதார் பின்னும் என்னும் உம்மையாற் கொள்க.

பதுமனர் :—என்றது. தம்முடைய கருமத்தைச் செய்து முடிக்கும் முறைமையால் அறிவில்லாதார் பின்னேயும் பெரிய அறிவினையுடையாரும் செல்லுதல், அரிய மரபினையுடைய ஓதம் அரற்றும் ஒலி கடல் தண் சேர்ப்பனே! அறிவில்லாமை அன்று; அஃதறிவு என்றவாறு.

(வரிசை—முறைமை); அருமரபு—இலக்குமி பிறத்தலானும், மாயன் உறங்குதலானும், மரக்கலம் ஓடுதலானுமாம். ஒலி கடல்—கரையை மோதுங் (கடல்).

விளக்க உரை :—எ-து. கரும வரிசையால்—தமக்கொரு கருமம் செய்து கொள்ளுகை காரணமாக; கல்லாதார் பின்னும் பெருமையுடையாருஞ் சேறல்—அறிவில்லாதார் பின்பேயும் பெருமைக்குண முடையாருஞ் செல்லுகின்றது; அருமரபின் ஓதம் அரற்றும் ஒலிகடல் தண் சேர்ப்ப!—பெறுதற்கரிய மரபினையுடைய திரைகள் ஆரவாரிக்கும் ஆரவாரத்தினை

---

[1] கருமவரிசையால்—ஊழ்வினை வகையால் என்றுமாம்.

யுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; பேதைமை யன்று அது அறிவு—அஃது அறியாமை யன்று; அறிவுடைமை என்றவாறு.

கருத்து:—கல்லாதாருடன் காரிய நிமித்தங் கலந்து வாழ்தலும் அறிவுடைமையாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"நிலைஇய பண்பிலார் நேரல்ல ரென்றொன்று
உளைய உரையாது உறுதியே கொள்க
வளையொலி ஐம்பாலாய்! வாங்கி யிருந்து
தொளையெண்ணார் அப்பந்தின் பார்".

—பழ: 253.

"பெரிய குடிப்பிறந் தாருந் தமக்குச்
சிறியா ரினமாய் ஒழுகுதல்—எறியிலை
வேலொடு நேரொக்குங் கண்ணாய்! அஃதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு".

—பழ. 356.

(கூ).

250. கருமமும் உள்படாப் போகமும் துவ்வாத்
தருமமும் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்றும் முடியுமேல் †அஃதொருவன்
பட்டினம் பெற்ற கலம்.

தருமர்:—என்பது. கருமமும் உள்படா—பொருள் வருவாயாகிய காரியங்களும் [1]உள்பட்டு; போகமும் துவ்வா—போக போக்கியங்களையும் அனுபவித்து; தருமமும் தக்கார்க்கே

---

†அஃதென்ப என்றும் பாடம்.

[1]உள்பட்டு—உடன்பட்டுச் செய்து.

[2]முட்டு—தடை.

செய்யா—தருமங்களையும் தகுதியுடையாருக்கே செய்து; ஒரு நிலையே—ஒருபிறப்பின் கண்ணே; மூன்றும் முட்டு இன்றி—இவை மூன்றும் [2]முட்டுப்படாமல்; முடியும் எல்—ஒருவற்கு வந்தெய்துமாகில்; அஃது—அதுவல்லவோ; ஒருவன் பட்டினம் பெற்ற கலம்—(தான் வேண்டிய தீவில் சென்று வியாபாரப் பலிப்புண்டாய் மீளுங்கால் இடையூறின்றி வந்து தன்) பட்டினத் தருகு சேர்ந்த மரக்கல முடையவன் மனம்போல அமைதி யுடையது என்றவாறு.

இது அறிவுடைமையானது எப்படி என்னில், மூன்று காரியமும் ஒருவற்கு வாய்க்குமாகில் என்னும் ஐயத்தினால் இவை மூன்று காரியமும் மறுபிறப்புக்கு வாய்க்கும் பொழுது, இப்பிறப்பிலே அறத்தினைச் செய்புங்கால் அதற்கோர் இடையூறு வரில், அதற்குத் தளராது நின்று நிறைவேறச் செய்வதற்கு அறிவே கருவி யாதலால், அவ்வளவைக் கொண்டு இப்பாட்டு அறிவுடைமையிற் சேர்க்கப்பட்டது.

பதுமனார்:—என்றது. பொருட்கு வாயிலாங் கருமத்தை யும் உள்படச் செய்து போகத்தையும் நுகர்ந்து, அறத்தையும் தகுதியுடையார்க்கே செய்து இம்மூன்றும் ஒருபிறப்பின்கண்ணே ஒருவன் மாட்டு உளவாய் முடியின் அம்முடிவு, பட்டினம் சேர்ந்த மரக்கலம் போலத் தனக்குப் பயன்படும் என்றவாறு.

பட்டினம் பெற்ற கலம்—தனக்கு உரித்தான துறையிலே நின்று நிறைந்த சரக்கேற்றி இடையில் தாழ்வு படாமல் மறு துறையிலே சென்று மறு சரக்கேற்றி மீண்டும் வழியில் தாழ்வு படாமல் வருதலால் பட்டினம் பெற்ற கலம் என்பாரும் உளர்.

விளக்க உரை:—எ-து. கருமமும் உள்படா—கருதப் படா நின்ற பொருள்களும் உள்பட்டு; போகமுந் துவ்வா—போக போக்கியங்களையும் அநுபவித்து; தருமமுந் தக்கார்க்கே செய்யா—தருமத்தினையும் தகுதியுடையார்க்கே செய்து; ஒரு நிலையே முட்டின்றி மூன்றும் முடியுமேல்—ஒரு பிறப்பின் கண்ணே முட்டுப்படாமல் இவைமூன்று காரியமும் ஒருவற்கு

வந்தெய்துமாகில்; அஃதென்ப பட்டினம்பெற்ற கலம்—அது வல்லோர் சிறந்த யாத்திரையாகப் போய்த்தான் கருதின தீவிலே பலிப்புண்டாக வியாபாரம் பண்ணி, இடையூறின்றியே வந்து தன் பட்டினத்தைச் சேர விட்டிருந்த மரக்கல முடையவனது மனம்போல அமைதியுடையது என்றவாறு.

கருத்து:—முயற்சி, போகம், அறம் இவற்றைப் பெற்று வாழ்வதே அறிவுடைமையாகும்.

மேற்கோள் பகுதி :—

யா. கா:—முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையான் ஆசிட்டு இரண்டுவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர்.

—சூ. 23.

பரிமேல்:—"நிற்றலாவது இல்வாழ்வுழிக் 'கருமமும் உள்படாப் போகமுந் துவ்வாத், தருமமும் தக்கார்க்கே செய்தலினும் துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும் வழுவாமை" என்றவிடத்து இச்செய்யுளின் முற்பாதியை எடுத்து ஆளுவர்.

—குறள். 391.

குறிப்பு :—

பட்டினம் பெற்ற கலம் என்ற உவமையால் முயற்சி முதலிய மூன்றும் தடையின்றி வாய்த்த பிறப்பே பயனுடைய பிறப்பாகும் என்பதாம்.

(ம).

---

26. அறிவின்மை.

தருமர்:—அஃதாவது அறிவில்லாமையினால் தனக்குச்

---

[1] அரசன், உபாத்தியான், தாய், தந்தை, தமையன் ஆகிய பெரியோர்.

சிறந்த [1]ஐங்குரவர் முதலாயினர் அறிவுறுத்தியதையும் உட்கொள்ளாமல் [1]உதாசீனம் பண்ணி, நூலோர் மொழிகளையும் ஐயமாக்கி (அதனை இகழ்ந்த), உலகத்து இயற்கையான முறைமை விட்டுத் தன் அறிவின்மைக்கு ஏற்ற ஒழுக்கத்தின் ஒழுகி, யாவராலும் இகழப்படுதலும், மறுமைக்கு உறுதியல்லாதன செய்தலுமாம்.

பதுமனார் :—அஃதாவது எல்லாப் பொருள்களினும் தூலமானதை அறிந்து, சூக்குமமாய் உள்ளன அறியமாட்டாமையும், காம வெகுளி, மயக்கம் மிக்கிருத்தலும், தன்ம, தானங்களும் மறுமையும் உண்டென்பன பலபடியுங் கற்பித்தாலும் அறியாமையுமாம் என்றவாறு.

குறிப்பு :—

'அறிவின்மை' :—

அஃதாவது கல்வி, கேள்விகளினுய அறிவு இல்லாமை. அறிவுடைமையின் சிறப்பு வலியுறுத்துவான்வேண்டி அதற்கு எதிர்முகத்தாலும் ஓரதிகாரம் வகுத்தார். கல்லாமையினாலும், கேள்விநலம் பெருமையினாலும் தோன்றுவது அறிவின்மை.

திருக்குறளின் கண்ணும் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என அதிகாரவடைவு படுத்தியிருத்தல் காண்க. கல்லாமை, கேள்வி என இரு அதிகாரம் வகுத்தமையின் 'அறிவின்மை' என ஓரதிகாரம் குறளின்கண் வகுக்க வேண்டுதலில்லையாயிற்று.

1. 'கல்லாமை' :—

பரிமே :—அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்றது, அதனினுய இழிபினை. கல்விச் சிறப்பு மேல்விதி முகத்தால் கூறியதுணையான் முற்றுப் பெருமை நோக்கி, எதிர்மறை முகத்தாலும் கூறுகின்றது ஆதலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

---

[1] உதாசீனம்பண்ணி—பழித்து.

மணக் :—கல்லாமையாவது கல்வியில்லாமையால் உளதாகும் குற்றம் கூறுதல், மேல்கல்வி வேண்டும் என்றார், 'அஃது இலாதார்க்கு உளதாகும் குற்றம் என்னை?' என்றார்க்குக் கூறியது ஆதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி :—கல்லாமையாவது கல்வியை விடவொண்ணாது என்றவாறு.

—குறள். அதி. 41.

2. 'கேள்வி' :—

பரிமே :—அஃதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனானாய அறிவை வலியுறுத்தலானும், கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

மணக் :—கேள்வியாவது கேள்வியாமாறும் அதனானாகிய பயனும் கூறுதல். நூல்களைக் கற்கமாட்டாதார் அவற்றைக் கற்றார்மாட்டுக்கேட்டலும் அறிவுக்குக் காரணமாம் என்பதனால் அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி :—கேள்வியாவது கல்வி இல்லாதபோது கேள்வி வேண்டும் என்றவாறு.

—குறள். அதி. 42.

251. நுண்ணுணர்வு இன்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—
எண்ணுங்கால்
பெண்ணவாய் ஆணிழந்த †பேடியும் பூணாளோ?
கண்ணவாத் தக்க கலம்.

தருமர் :—என்பது. (ஒருவனுக்கு) நுண் உணர்வு இன்மை—கூரிய அறிவில்லாமையே; வறுமை—வறுமையாவது; அஃது

† பேடி அணியாளோ என்றும் பாடம்.

உடைமை—அந்த அறிவுடைமையே; [1]பண்ண பணைத்த பெரு செல்வம்—வளம்மிகுந்த செல்வமாவது; எண்ணுங்கால்—விசாரிக்குங் காலத்து; [2]பெண் அவாய்—பெண்மையை விரும்பி; ஆண் இழந்த—ஆண்மைத்தன்மை யிழந்த; [3]பேடியும்—பேடியானவளும்; கண்[4] அவா தக்க கலம்—கண்ணுக்கினிய ஆபரணங்களை; பூணுமோ?-(அணியமாட்டாளோ)? [அணிவள்]என்றவாறு.

பெண்ணும் அன்றி, ஆணும் அன்றி எதுக்குமல்லாத பேடி ஆபரணம் பூண்டிருக்கவில்லையோ? அதுபோல அறிவில்லார் செல்வம் பெற்றதனால் பயன் ஏது? அறிவே செல்வம் அல்லாது அறிவில்லார் பெற்ற செல்வம் செல்வமல்ல; எனவே அச்செல்வமானது அறிவுபோலச் சுவர்க்க மோட்சங்களைக் கொடாது என்பதாயிற்று.

பதுமனார்:—என்றது. வறுமையாவது நுண்ணிய அறிவில்லாமை; மிகப் பணைத்த பெருஞ்செல்வமாவது நுண்ணிய அறிவுடைமை. ஆராயுங்கால் பெண்மையை அவாவும் அவாவாலே ஆண் தகைமையை இழந்தபேடி அணியாளோ கண்ணால் அவாவத்தக்க அணிகலங்கள்? என்றவாறு.

பெண்ணை அவாவி ஆண் இழந்தபேடி—முற்பிறப்பின் கண்ணே பிறர் மனையாளை அவாவி இப்பிறப்பின்கண்ணே ஆண் தகைமையை இழந்த பேடி என்றும், கூத்தாடி என்றுமாம். பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்—கொடுக்க வளர்ந்த பெருஞ் செல்வம் என்றுமாம்,

---

[1]சின்னஞ்சிறிய என்றாற்போலப் பண்ணப் பணைத்த எனநின்றது; மிக வளர்ந்த என்பது பொருள்.

[2]பெண் அவாய்—பெண் தன்மை மிக்கு என்றுமாம்.

[3]பெண் தன்மை மிகுந்து ஆண்தன்மை குறைந்தவள்.

[4]அவாவத்தக்க என்பது அவாத்தக்க என நின்றது.

பெண்ணுக்குரிய அணிகளைப் பேடி அணிந்தால் அழகும் இன்பமும் உண்டாகாமை போல, அறிவுடையார் பெற்றுப் பயனடைதற்குரிய செல்வத்தை அறிவிலார் பெற்றால் பெருமையும் பயனும் உண்டாகா என்க.

விளக்க உரை :—எ-து. நுண்ணுணர்வின்மை வறுமை —கூரிய அறிவில்லாமையே ஒருவர்க்கு வறுமையாவது; அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்—கூரிய அறிவுடைமையே வளமிக்க செல்வமாவது; எண்ணுங்கால் பெண்ணவாய் ஆண் இழந்த பேடி அணியாளோ?—விசாரிக்குங்காலத்துப் பெண்மையினை அவாவி ஆண்மைத் தன்மையை யிழந்த பேடியும் பூணுளோ?; கண் அவாத்தக்க கலம்—கண்ணுக் கினிதாகிய ஆபரணங்களை என்றவாறு.

செல்வமானது அறிவுபோற் சுவர்க்க மோட்சங்களைக் கொடாது என்பதாம்.

கருத்து :—நுண்ணறிவில்லாதார்க்கு எவ்வளவு செல்வங்கள் இருப்பினும் பயனில்லை.

மேற்கோள் பகுதி :—

நச் :—"பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் பேடியென்றது ஆண்மை திரிந்த என்றார். "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" என்பதனாற் பெண்ணவாய் நிற்றல் கொள்க."

—தொல். சொல். கிளவி. சூ. 4.

தெய்வச் :—பேடியென்னும் பெயர்க்கண் நிற்கும்சொல் ஆண்மை யறிசொற்கு ஆகும் இடன் இலது என்பதற்கு "பெண்ணவா யாணிழந்த பேடியணியாளோ, கண்ணவாத் தக்கலம்" என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். சொல். கிளவி. சூ. 12

சங்கர :—"பெண்ணிலக்கணஞ் சிறந்தமையிற் பெண்பாற் பட்டதற்கு, 'பெண்ணவாய் ஆணிழந்த பேடி யணியாளோ' என்ற பகுதியை எடுத்துக் காட்டுவர். —நன். சூ. 264.

பரிமேல் :—'செல்வம் நல்குர வென்பன ஈண்டறிவினது உண்மையின்மைகளையும் குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர்வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த

பெருஞ் செல்வம்" என்றாராகலின்' என்றார்.

—குறள். 270.

ஒப்புமைப் பகுதி :—

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

—குறள். 430.

"அறிவின்மை இன்மையுள் இன்மை"

—குறள். 841.

"அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்".

—பழ. 26.

குறிப்பு :—

பெண்ணுக்குரிய அணிகளைப் பேடி அணிந்தால், அழகும் இன்பமும் உண்டாகாமை போல அறிவுடையார் பெற்றுப் பயனடைதற்குரிய செல்வத்தை, அறிவிலார் பெற்றால் பெருமையும் பயனும் உண்டாகா என்க.

(க).

252. பல்லான்ற கேள்விப் பயன்உணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழப்ப(து) அறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

தருமர் :—என்பது. பல்ஆன்ற கேள்விப் பயன் உணர்வார்—பலநூல்களையும் கற்றுயர்ந்த கேள்வியால் வரும் பயனை உணருமவர்; பாடு அழிந்து—தம்பெருமை அழிந்து; அல்லல் உழப்பது அறிதிரேல்—துன்பமுறுதற்குக் காரணம் அறிந்தீ

ரில்லையோ!; தொல்சிறப்பின்—பழையதாய சிறப்பினையுடைய; [1]நாவின் கிழத்தி உறைதலால்—நாமகள் அவரிடத்து உறைதலாலே; [2]பூவின் கிழத்தி—பூமகள்; புலந்து சேராள்—ஊடிச் சேராள் [என்பதேயாம்] என்றவாறு.

இஃது அறிவின்மைக்குப் பொருந்தியது எப்படி என்னில், முற்பிறப்பில் இவர் கல்விக்குத் தவம் பண்ணிச் செல்வத்துக்குத் தவம் பண்ணினரில்லை; அஃது அறிவின்மையாலல்லவோ? ஆதலால் இப்பொழுது அவர் அறிவின்மையைக் [3]கழறி அவையிரண்டிற்கும் புண்ணியஞ் செய்ய வேண்டும்; அறிவுண்டாக வேண்டும் என்பது தோன்ற அறிவின்மையிற் சேர்க்கப்பட்டது.

பதுமனார்:—என்றது. பலவாய் அமைந்த கேள்வியால் வரும் பயனை உணர்வார் தம் பெருமை அழிந்து அல்லல் உழப்பதற்குக் காரணம் யாதெனில், தொல் சிறப்பினையுடைய நாமகள் உறைதலாலே பூமகள் ஊடிச் சேராள் ஆதலால் என்றவாறு.

[ஆன்ற—அமைந்த. அல்லல்—மிடி. புலந்து—கலாய்த்து. கல்வியாற்(பயன்) பிறப்பியல்பை உணர்தலும்; இன்ப துன்பம் என்றவற்றில் விழைவும்வெறுப்பும் அற்று இருத்தலும். ஆகலினால் தொல்லை நல்வினைச் சிறப்பால் நாமகள் சேரப் பெற்றோம்; பூமகள் சேரா(த)து முற்பிறப்பின் அறஞ்செய்யாமையேயென்று கருதிக் கல்வியினாலாய பலன்களை நுகர்ந்து, அமைந்து ஒழுகாது தம் பெருமை அழிந்த அல்லல் உழப்பதனால் கற்றோர் தமக்கு இயற்கையான அறிவான் ஞானமுண்டாகாது அறிவின்மையே வேறு காரணஞ் சொல்லுதற்கு ஒண்ணாது என்பதாம்.]

விளக்க உரை:—எ-து. பல்லான்ற கேள்விப் பயவுணர்வார்—பல நூல்களையுங் கற்றறிந்த கேள்வியால் வரும்

---

[1]நாவில் வீற்றிருக்கும் மகள்; சரசுவதி.

[2]பூவில் வீற்றிருக்கும் மகள்; இலக்குமி.

[3]கழறி—இடித்துக்கூறி.

பயனை உணருமவர்; புடைழிந்து அல்லல் உழப்பது அறிதிரேல்—பெருமை யழிந்து துன்புறுதற்குக் காரணம் அறிந்திரில்லையோ?; தொல்சிறப்பின் நாவின் கிழத்தி உறைதலால்—பழைய சிறப்பினை யுடைய நாமகள் உறைதலாலே; சேராளே பூவின் கிழத்தி புலந்து— பூமகள் ஊடிச் சேராள் என்றவாறு.

இஃதறிவின்மையானது எப்படியென்னில், முற்செனனத்திலே இவர் கல்விக்குத் தவம் பண்ணிச் செல்வத்துக்குத் தவம் பண்ணினரில்லை யாதலின் இப்பொழுது இவர் அறிவின்மையைக் கழறி இவையிரண்டுக்கும் புண்ணியஞ் செய்யத்தக்க அறிவுடைமை வேண்டுமென்பது தோன்ற அறிவின்மையிலே சேர்க்கப்பட்டது.

கருத்து:—அறிஞர், வறிஞராவதற்குக் காரணம் ஊழ்வினையே; அதுபற்றி அவரைக் குறை கூறுதல் அறிவின்மையாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வது அறிதிரேல்"

—நாலடி. 106.

குறிப்பு:—

இச்செய்யுள் 'நுண்ணுணர்வின்மை வறுமை அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்' என்ற கருத்தின்மேல் எழுந்ததான 'அறிஞர் செல்வம் பெறாது வருந்துவது ஏன்?' என்ற தடைக்கு விடைகூறுவது போன்று அமைந்துள்ளது.

அறிஞர் செல்வர் ஆகாமைக்கு உண்மையான காரணம் ஊழ் வினையே; அவ்வாறாகவும் ஈண்டு வேறு காரணம் கற்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஒருவனிடம் ஒரு பெண் கூடியிருக்கும் போது வேறொரு பெண் வந்து கூடாது ஊடுதல் உலகியல்பு. அங்ஙனமே இங்கு நாமகள் கூடின இடத்தைப் பூமகள் கூடாது ஊடுவள் என்றது கற்பனை. அன்றி மருகியான நாமகள் இருக்குமிடத்தில் மாமியான பூமகள் ஒன்றுபட்டு இராள்

என்று கற்பித்தலும் ஒன்று.

(உ).

253. கல்என்று தந்தை கழற அதனையோர்
சொல்என்று கொள்ளாது இகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

தருமர்:—என்பது. தந்தை—பிதாவானவன்; கல் என்று கழற—கற்கவேண்டும் என்று அதட்டிச் சொல்ல; ஓர் சொல் என்று அதனை கொள்ளாது இகழ்ந்தவன்—நமக்கு உறுதியான சொல் என்று அதனை உட்கொள்ளாது இகழ்ந்தவன்; (பின்பு) பல்லார் முன்—பலர் முன் அவன் இருக்கும்போது; மெல்ல எழுத்து ஓலை நீட்ட—(ஒருவன்) மெல்லச் சென்று இவ்வெழுதின ஓலையை வாசித்துக் காண் என்று கையில் கொடுக்க; விளியா—அதற்கு [1]விளிந்து; வழு கோலை—[பலர் முன்பே என் கல்வி யில்லாமையை அறிவித்து என்னை இகழ்ந்தாய் என்று அவனை அடித்தலாகிய] குற்றஞ் செய்யக்கூடிய ஒரு கோலை; கொண்டு விடும்—எடுத்துக் கொள்ளுவன் என்றவாறு.

குற்றத்தைச் செய்யுங் கோல் ஆதலால் அதனை [2]வழுக் கோல் என்றார். எனவே அறிவில்லாதவன் இப்படிப் பலர் முன்னும் இகழ்ச்சி எய்துவன் என்பதாயிற்று.

பதுமனார்:—என்றது. தன் தந்தை நூல்களைக் கற்பாயாக

---

[1] விளிந்து—சினங்கொண்டு.

[2] வழுக்கோலை கொண்டுவிடும் என்பதற்கு ஓர் ஏட்டுப் பிரதியில், ஒலிக்கும் வழுக்கினைக் கொண்டுவிடும் என்றும், எழுதாத ஓலையாகக் கொண்டுவிடும் என்றும் உரை கொள்ளப்பட்டுள்ளது. இனி, ஓல்—ஒலி யாதலின் வழுக்கு ஓலை கொண்டுவிடும் என்று பிரித்து அவ்விடம் விட்டுத் தப்புதற்குக்காரணமான ஒலியை மேற்கொள்வான் என்றும் கொள்ளலாம்.

என்று இடித்துச்சொல்ல, அதனை உறுதியாவதொரு சொல் என்று கொள்ளாது இளமைக் காலத்து இகழ்ந்தவன், பலர் முன்னே ஒருவன் எழுத்தோலையை மெல்ல நீட்ட, அவன் வெகுண்டு தவற்றினைச்செய்யும் கோலைக் கொண்டு மற்றவன் தன்னை இகழ்ந்தான் என்று கருதித் துயர் செய்துவிடும் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. கல் என்று தந்தை கழற— கற்கவேணும் என்று பிதாவானவன் அதட்டிச்சொல்ல; அதனை ஓர் சொல் என்று கொள்ளாது இகழ்ந்தவன்—இது நமக்கு உறுதியான சொல்அல்லவோ என்று அதனை உட்கொள்ளாமல் இகழ்ந்தவன்; மெல்ல எழுத்தோலை பல்லார் முன் நீட்ட— (மெல்ல) எழுதின வோலையை வாசித்துக்காணும் என்று பலர் முன்பே கொடுக்க; விளியா வழுக் கோலைக் கொண்டுவிடும்— அதற்கு விளிந்து [பலர் முன்பே என் கல்வி இல்லாமையை அறிவித்து என்னை இகழ்ந்தாய் என்று] அவனைஅடிக்க ஒருகோலை எடுத்துக் கொள்ளுவன் என்றவாறு.

வழுக்கோல் என்பது குற்றத்தைச் செய்கிற கோல்.

கருத்து:—கல்லாதவன் பலர் முன்னே தான் இகழப்படுவதற்குப் பிறரை நோவது அறிவின்மையாகும்.

குறிப்பு:—

"சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"; "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து, முந்தி யிருப்பச்செயல்" என்ப ஆகலின், 'கல் என்று தந்தை கழற' என்றும், 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' ஆதலின் அதனை 'ஓர் சொல்' என்றும் கூறினர்.

(ௐ).

254. கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே; இராஅது
உரைப்பினும் நாய்குரைத் தற்று.

தருமர்:—என்பது. உலகத்து—உலகத்தின் கண்ணே; கல்லாது—கல்வியில்லாது; நீண்ட ஒருவன்—வளர்ந்தான் ஒருவன்; நல் அறிவாளர் இடை—நல்லறிவினையுடையவர் நடுவே; மெல்ல புக்கு இருப்பினும்—மெல்லப் புகுந்து இருந்தானாயினும்; நாய் இருந்து அற்றே—(அவர்கள் கண்ணுக்கு இவனிருப்பது) நாய் இருந்ததனோடு ஒக்கும்; இராது—(தன் அறிவின்மை கருதி) [1]வெறு(விதாக) இராது; உரைப்பினும்—என்ன சொன்னானாயினும்; நாய் குரைத்து அற்று—நாய் குரைத்ததனோடு ஒக்கும் என்றவாறு.

இருப்பினும் என்னும் உம்மையால் அறிவுடையார் அவையில் அறிவில்லாதான் செல்வது இயல்பன்று; செல்லுவனாகில் இத்தன்மையான இழிவை எய்துவன் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கல்லாது உடம்பு நீண்ட ஒருவன், உலகத்து நல்லறிவாளர் நடுவே புக்கு மெல்ல இருந்தானாகினும், நாய் புக்கு இருந்தாற்போலும்; இருந்தே (ஒழியாது) உரைத்தானாயினும் நாய் குரைத்தாற்போலும் என்றவாறு.

கல்லாது நீண்ட ஒருவன்—ஐசுவரியத்தால் நீண்டு கல்லாத ஒருவன் என்றுமாம்.

விளக்க உரை:—எ-து. கல்லாது நீண்ட ஒருவன்—கல்வியில்லாமல் வளர்ந்த ஒருவன்; உலகத்து நல்லறிவாளர் இடைப் புக்கு—உலகத்தில் நல்ல அறிவுடையார் நடுவே புகுந்து;

---

[1]வெறுவிதாக இராது—சும்மா இராது.

மெல்ல இருப்பினும் நாய் இருந்தற்றே—மெல்ல இருந்தா னாகிலும் அவர்கள் கண்ணுக்கு இவன் நாய் இருந்ததனே டொக்கும்; இராது உரைப்பினும் நாய் குரைத்தற்று—இருந்து ஒன்றினைச் சொன்னானாயினும் நாய் குரைத்ததனேடொக்கும் என்றவாறு.

கருத்து:—கல்வியறிவில்லாதவர் நாய்போல் இழிவாகக் கருதப் படுவர்.

ஒப்புமைப் பகுதி:—

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்".

—குறள். 401.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்".

—குறள் 840.

"மானமும் நாணும் அறியார் மதிமயங்கி
ஞானம் அறிவார் இடைப்புக்குத் தாமிருந்து
ஞானம் வினாஅய் உரைத்தல் நகையாகும்
யானைப்பல் காண்பான் பகல்".

—பழ. 298.

(௪).

255. புல்லாப்புன் கோட்டிப் புலவர் இடைப்புக்குக்
கல்லாத சொல்லும் கடையெலாம்—கற்ற
கடாஅயினும் சான்றவர் சொல்லார் பொருள்மேல்
படாஅ விடுபாக் கறிந்து.

தருமர் :—என்பது. புல்லா—[1](இலக்கணத்தோடு) பொருந்தாத; புல் கோட்டிக்கடை—[2]புல்லிய கோட்டியிலே பயின்ற கடையாய தன்மையுடையா னொருவன்; புலவர் இடைப் புக்கு—அறிவுடைய சான்றோர் நடுவே புகுந்து; கல்லாத எலாம் சொல்லும்—தான் கல்லாதவற்றை (எல்லாம்) சொல்லிக் காட்டுவன்; சான்றவர்—அமைந்தோர்கள்; கற்ற—தாம் கற்ற வற்றை; கடாயினும்—ஒருவர் [3]கடாவிக் கேட்பினும்; சொல்லார் —; (அஃதேன் எனில்) பொருள் மேல் படா [4]விடுபாக்கு அறிந்து —பொருள்மேல் சாராமல்விடும் என்பதனை அறிந்து என்றவாறு.

(அறிவுடையோர்) தாம் கற்றதனை ஒருவற்குச் சொல்லும் போது பொருளுக்கு இயலுமோ இயலாதோ என்று பின் எண்ணி அமைந்திருப்பர்; அறிவில்லாதவனுக்கு அதன் தன்மை தெரியாது ஆகலின் தனக்குத் தோன்றியது ஒன்றினைப் பின் எண்ணாது சொல்லி இழிவெய்துவன். அறிவுடையோர் தலைமை யாதலின் அறிவில்லாதானைக் கடையென்(றார்).

பதுமனார் :—என்றது. பொருந்தாத புல்லிய புன் கோட்டியைக் கொண்டிருக்கும் (புன்) புலவரிடைப் புக்குக் கல்லாதவற்றைச் சொல்லும் கடையெல்லாம்; தாம் கற்றவற் றைக் கடாவினாராயினும் அமைந்தார் சொல்லார் பொருள்மேற் படாது விடுவதனை அறிந்து என்றவாறு.

---

[1]இலக்கணத்தோடு பொருந்தாமையாவது:— "புகழும் தரும நெறி நின்றோர் பொய், காமம்—இகழுஞ் சினம்செற்றம் இல்லோர்—நிகழ்கலைகள் எல்லாம் உணர்ந்தோர் இருந்த இடமன்றே—நல்லார் அவைக்கு நலம்" என்றபடி நல்லவையின் இலக்கணம் இல்லாமை.

[2]புல்லிய கோட்டி—இழிவான சபை.

[3]கடாவி—வினவி.

[4]விடுபாக்கு—தொழிற்பெயர்; விட்டுப்போதல் என்னும் பொருளது; அஃதாவது நன்பொருள்மீது அவர் அறிவு நுழைந்து செல்லாது விட்டுப் போதல்.

புல்லாப் புன்கோட்டிப் புலவரிடைப் புக்குக் கல்லாத சொல்லும் கடையெலாம்—புன்கோட்டியைக் கொண்டிருக்கும் புலவர்க்கு நடுவு [1]புல்லிக் கல்லாதனவற்றைச் சொல்லுவர் கடையாயினர் என்பாரும் உளர். படா விடுபாக் கறிந்து—பொருள்மேற்[2]சார்வழி அறிந்து என்றுமாம்.

விளக்க உரை :—எ-று. புல்லாப் புன்கோட்டி புலவரிடைப் புக்குக் கல்லாத சொல்லும் கடையெலாம்—இலக்கணத்தோடு பொருந்தாத புல்லிய கோட்டியிலே பயின்ற கடையானவன் அறிஞரான சான்றோர் நடுவே புகுந்து தான் கல்லாதனவற்றைச் சொல்லிக்காட்டுவன்; கற்ற கடாயினும் சான்றவர் சொல்லார்—கற்றவற்றைப் பிறர் கடாவிக் கேட்பினும் தலையானவர் சொல்லார்; பொருள்மேல் படாஅ விடுபாக்கறிந்து—பொருள்மேற் சாராமை விடும் என்பதனை அறிந்து என்றவாறு.

கருத்து :—அறிவில்லாதவர் அறிஞர்போல் அடங்கியிருக்க மாட்டார்.

256. கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர்—பனையின்மேல்
வற்றிய ஓலை †கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி.

தருமர் :—என்பது. கற்று அறிந்த நாவினர்—கற்றறிந்த நாவையுடையவர்; தம் சோர்வு அஞ்சி—தமது [3]சொல் சோர்வு

---

[1] புல்லி—கலந்து.
[2] இங்கே எழுத்துப் பிழை நேர்ந்திருக்கக்கூடும் எனத்தெரிகிறது.
† கா காக்கும் என்றும் பாடம்.
[3] சொற்சோர்வு—சொல்லில் தோன்றும் குற்றம்; அவையாவன :- பொய், கோள், கடுஞ்சொல், பயனில் சொல் என்பன.
காய்ந்த ஓலை ஒலிப்பதுபோல அறிவற்றவர் கல கலவென்று பேசுவர்; பச்சை ஓலை ஒலியாதவாறுபோல அறிவுள்ளவர் அடங்கியிருப்பர்.

படப்போகிறதே என்று அஞ்சி; சொல்லார்—விரைந்து ஒன்றினை யுஞ் சொல்லார்; மற்றையர் ஆவார்—மற்றைச் சொற் சோர் வுக்கு அஞ்சாதவர்; பகர்வர்—விரைந்து தாமறிந்த தொன்றினைச் சொல்வர்; பனையின் மேல் வற்றிய ஓலை—பனையின் மேல் உலர்ந்த ஓலையானது; கல கலக்கும்—கல கல என்னும் ஓசை யுடனே ஆரவாரிக்கும்; எஞ்ஞான்றும்—எப்போதும்; பசு ஓலைக்கு ஒலி இல்லை—பச்சை ஓலைக்கு ஒலியில்லை அதுபோல என்றவாறு.

ஆதலால் அறிவில்லாதார் யாதொன்றினையும் பின்எண்ணாமல் சொல்லி இழிவுபடுவர் என்பதாம்.

பதுமனார் :—என்றது. (நல்ல) நூலைக் கற்றுணர்ந்த நாவினர் ஆராய்ந்து அல்லது சோர்வுபடுதலை அஞ்சிச் சொல்லார் ஒன்றினையும்; கற்றறியாத மற்றையவர் ஆராயாது சொல்லுவர். பனையின் மேல் உலர்ந்த ஓலை கர கர என்று ஒலிக்கும்; பச் சோலைக்கு எஞ்ஞான்றும் ஒலி இல்லை ஆதலால் என்றவாறு.

வற்றிய ஓலை—உடம்பு விட்ட ஓலை.

விளக்க உரை :—எ-து. கற்றறிந்த நாவினர் சொல் லார் தம் சோர்வு அஞ்சி—கற்றறிந்த நாவையுடையவர் விரைந்து சொல்லார் ஒன்றினையும், சொற்சோர்வு பிறக்குமதோ என்று அதற்கஞ்சி; மற்றையராவார் பகர்வர்—மற்றைச்சோர்வுகளுக்கு அஞ்சாதவர் சொல்லுவர்; பனையின்மேல் வற்றிய ஓலை கர கரக்கும்—பனையின்மேல் உலர்ந்து நின்றசைகின்ற ஓலை கர கர வென்னும் ஓசையுடனே ஆரவாரிக்கும்; எஞ்ஞான்றும் பச்சோலைக்கில்லை ஒலி—எப்போதும் பச்சை ஓலைக்கு ஒலியில்லை என்றவாறு.

கருத்து :—அறிவற்றவர் எப்பொழுதும் அடக்கமின்றி ஆரவார மாக இருப்பர்.

மேற்கோள் பகுதி :-

மயிலை :—"இரட்டித்து நிற்குஞ் சொற்கள் அவ்விரட்டிப்பிற் பிரிக்கப்பெறு என்றவாறு. ...."வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும், பச்சோலைக்கில்லை யொலி"........எ-ம் வரும். இரட்டைக்கிளவி என்றமையான், இவை இரண்டின் இறவா வெனக் கொள்க; இறந்து நின்று ஒரு சொற்பொருள்படின் இவையாகாவென்க.

—நன். சூ. 395.

சங்க :—இவரும் இரட்டைச் சொற்கள் அவ்விரட்டிற்பிரிந்து தனித்து ஒலியா என்பதற்கு 'வற்றிய வோலை கலகலக்கும்' என்பதனை யெடுத்துக்காட்டுவர்.

—நன். சூ. 396.

ஒப்புமைப் பகுதி :—

"சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் நன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறு
வெண்கலத்தின் ஓசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி?"

—நீதிவெண்பா.

(கூ).

257. பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க்(கு) அறத்தா(று) உரைக்குங்
[கால்
குன்றின்மேல் கொட்டுந் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு.

தருமர்:—என்பது. [1]நன்று அறியா—நன்மையை அறியாத; மாந்தர்க்கு—மனிதர்க்கு; அறத்து ஆறு—அறத்ினது வழியை; உரைக்குங்கால்—சொல்லுங் காலத்து; (அது) பன்றி கூழ் [2]பத்தரில்—பன்றிக்குக் கூழ் வார்க்கிற தோணியிலே; தேமாவடித்தற்று—தேமாங்கனியைப் பிழிந்ததனோடு ஒக்கும்; (அன்றியும்) குன்றின் மேல் கொட்டும்—குன்றின்மேலே [3]புடைக்கின்ற; [4]தறிபோல்—தறிபோல; தலைதகர்ந்து—தலைசிதறி; செவிக்கு—செவியில்; சென்று இசையா ஆகும்—சென்று ஏறுதாகும் என்றவாறு.

எனவே, அறிவில்லாதார்க்கு எவ்வகைத்தாய்ச் சொல்லினும் அதுகொள்வதன்றி, இளமைக்கேற்ற பழியையே உட்கொள்வர். அதனால் அவரது நினைவைப் பன்றிக்குக் கூழ்வார்க்கும் கோணி என்று இழிவாகக் கூறினர்.

பதுமனார்:—என்றது. பன்றிக்குக் கூழ் வார்க்கும் பத்தரின் கண்ணே, தேமாங்கனியை வடித்தாற் போல நன்றறியா மாந்தர்க்கு அறநெறியை உரைக்கும் பொழுது, மலைமேற் கொட்டுந் தறி, தலைதகர்ந்தாற்போல அறத்தாறு தலைதகர்ந்து செவிக்குட் சென்று பொருந்தாவாகும் என்றவாறு.

பன்றிக்குக் கூழ் வார்க்கிற பத்தலிலே தேமாவை வடித்தல்—அறநெறி நூலறியா மாந்தர்க்கு அறநெறி நூல் உரைத்தலுக்கு உவமை.

---

[1]நன்று—அறம் என்றுமாம்.

[2]பத்தர்—பத்தல் என்பதன் போலி, குழிந்த இடத்தையுடையது; அஃதாவது நீர்த்தொட்டி.

[3]புடைக்கிற—அடிக்கிற.

[4]தறி—முளைக்குச்சி. தறிபோல் தலைதகர்தலாவது :- முளைக்குச்சி நுனி சிதைந்து கல்லில் இறங்காமைபோல, அறவழிகள் சிதறிச் செவிக்குள் நுழையா என்க.

விளக்க உரை :—எ-து. பன்றிக் கூழ் பத்தரில்—பன்றிக்குக் கூழ்வார்க்கின்ற தோணியிலே; தேமா வடித்தற்ருல்—தேமாங்கனியைப் பிழிந்ததனேடொக்கும்; நன்றறியா மாந்தர்க்கு அறத்தாறு உரைக்குங்கால்—நன்மை யறியாத மனிதர்க்கு அறத்தினது நெறியைச் சொல்லுங்காலத்து; குன்றின் மேல் கொட்டுந் தறிபோல் தலை தகர்ந்து-குன்றின்மேல் புடைக்கிற தறிபோல் தலைசிதறி; சென்றிசையா வாகும் செவிக்கு—செவியிற் சென்று ஏருவாகும் என்றவாறு.

கருத்து :—அறிவற்றவர்க்குச் செய்யும் அறவுபதேசம் பயனற்றது.

ஒப்புமைப் பகுதி :—

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்ருல் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்".

—குறள். 720.

"நடலை யிலராகி நன்றுணரா ராய
முடலை முழுமக்கள் மெய்கொள் அவையுள்
உடலா வொருவற் குறுதி யுரைத்தல்
கடலுளால் மாவடித் தற்று".

—பழ. 72.

"கல்வியா னய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம்—எல்லாம்
இவர்வரை நாட! தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றுங்கு"

—பழ. 3.

"வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்—அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு".

அறநெறிச்சாரம், 31.

"நுனையன் அறிவானு ரத்தினத்தின் பெருமையை".

—பழமொழி.

குறிப்பு :—

பன்றிக்குக் கூழின் சுவையே யன்றித் தேமாவின் சுவை தெரியாமைபோல அறிவற்றவர்க்கு மறநெறியின் தன்மையே யன்றி அறநெறியின் தன்மை தெரியாது என்க.

(எ).

258. பாலாற் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக்(கு) இருந்தன்று;
கோலாற் கடாஅய்க் குறினும் புகல்ஒல்லா
நோலா வுடம்பிற்(கு) அறிவு.

தருமர் :—என்பது. பலநாள்—பலநாளும்; பாலால் கழீஇ—பாலினலே (கரியைக்) கழுவி; உணக்கினும்—உலர்த்தினும்; இருந்தைக்கு—கரிக்கு; வாலிது ஆம் பக்கம்—வெண்மை யாகுந் திறம்; இருந்தன்று—உண்டாகாது [அதுபோல]; கோலால் கடாஅய்—கோல்கொண்டு அதட்டி; குறினும்—அடிப்பினும்; நோலா உடம்பிற்கு—புண்ணியம் இல்லாதவனுக்கு; அறிவு புகல் [1] ஒல்லா—அறிவு புகமாட்டாது என்றவாறு.

அறிவு வரும்படிக்கு முற்பிறப்பிற் புண்ணியஞ் செய்திலன் என வற்புறுத்தியது.

பதுமனர் :—என்றது. பலநாளும் பாலாலே கழுவி, உணர்த்தினும் வெண்ணிறமாகுந் திறம் கரிக்கு இருந்ததில்லை. அதுபோலக் கோலாற் கடாவிக் [2] குற்றின லொப்ப அறிவைக் கொளுத்தினும் நோலா வுடம்புக்கு அறிவுகள் புகமாட்டா

---

[1] ஒல்லா—ஒல்லாது என்பதன் விகாரம்.
[2] குற்றினல்—குத்தினல்.

என்றவாறு.

வாலிதாம் பக்கம்—வெள்ளிதாம் தன்மை. இருந்தைக்கு—கரிக்கு. நோலா வுடம்பு—முன்னைச் செனனத்தில் தவத்தைப் பொருந்தா உடம்பு.

விளக்க உரை:—எ-து. பாலாற் கழுவிப் பலநாள் உணக்கினும்—பாலை வார்த்துக் கழுவிப் பலநாள் உணர்த்தினும்; வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று—வெள்ளியாகிய நிறம் கரிக்குண்டாகாது; [அதுபோல], கோலால் கடாஅய்க் குறினும்—கோல் கொண்டு அதட்டி அடிப்பினும்; புகல் ஒல்லா நோலா உடம்பிற்கு அறிவு—புண்ணியம் இல்லாதவனுக்கு அறிவு புக மாட்டாது எ-று.

கருத்து:—முன்னைத் தவமில்லாதவரை அறிவு கூறித் திருத்த முடியாது.

ஒப்புமைப் பகுதி :-

"இருந்தை யிலங்க வெளிறு படாது"

—திருவரங்கத்தந்தாதி. 36.

குறிப்பு :-

இச்செய்யுளால் அறிவில்லாதாரை அன்புடன் திருத்துதலும் அடித்துத் திருத்துதலும் பெறப்பட்டன.

(அ).

259. பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லாது
இழிந்தவை காமுறூஉம் ஈப்போல்—இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க்(கு) என்னாகும்? தக்கார்
தேன்கலந்த தேற்றச்சொல் தேர்வு. [வாய்த்

தருமர் :—என்பது. பொழிந்து—தேன் [1]பொழிந்து; இனிது—இனிதாக; நாறினும்—மணப்பினும்; [2]பூ மிசைதல் செல்லாது—பூவில் தேனை நுகரச்செல்லாமல்; இழிந்தவை—இழிவான துர்க்கந்தங்களை; காமுறூஉம்—விரும்பிச் செல்லும்; ஈ போல்—ஈயைப்போல; இழிந்தவை தாம் கலந்த நெஞ்சினார்க்கு—இழிவான குணங்களையுடைய நெஞ்சினார்க்கு; தக்கார் வாய் தகுதியுடையார் வாயிற்(பிறக்கிற); [3]தேன் கலந்த தேற்றம் சொல் தேர்வு—தேன்போலும் இனிய தெளிவுடைய சொல் தெரிவுகள்; என் ஆகும்? ஏதாம் என்றவாறு.

ஈயானது துர்க்கந்தங்களை விரும்புவது போல, அறிவில்லாரும் தம் அறிவின்மைக்கு ஏற்றபடி ஒழுகுவதன்றித் தெரிந்து ஒருவர் கூறியது கொண்டு, நன்னெறியின் ஒழுகும்படிக்கு அறிவுறார் என்பதாம்.

பதுமனார் :—என்றது. தேனைப் பொழிந்து இனிதாக நாறினும் பூவினை நுகர்தல் செல்லாது இழிந்தனவற்றைக் காதலிக்கும் ஈயேபோல, இழிந்த செய்கைக்கண் தாம் கலந்த உள்ளத்தார்க்கு எப்பயனைச் செய்யும்? தக்கார் வாயிற் சொல்லிய தேன் கலந்தாற் போலும் துணிவை யுடைய சொல்லாராய்ச்சி என்றவாறு.

மிசைதல்—நுகர்தல். என்னாகும்—என்னபயனைச் செய்யும். தேற்றச் சொல் தேர்வு—தெளிவுடைய சொல்லின் ஆராய்ச்சி.

விளக்க உரை :—எ-து. பொழிந்தினிது நாறினும் பூ மிசைதல் செல்லாது—தேன்கலந்து இனிது மணப்பினும் பூவில்

---

[1]பொழிந்து—சொரிந்து.

[2]பூ—பூவில் தேனுக்கு ஆவதால் ஆகுபெயர்.

[3]தேம் கலந்த என்பது பாடமாயின் இனிமை கலந்த எனப் பொருள் கொள்க.

தேன் நுகரச் செல்லாது; இழிந்தவை காமுறூஉம் ஈப்போல்— இழிவானதற்கே ஆசைப்பட்டுச் செல்லும் ஈயே போல; இழிந்தவை தாம் கலந்த நெஞ்சினர்க்கு என் ஆகும்—இழிவான குணங்களைக் கலந்த நெஞ்சினையுடையார்க்கு உளவாகா; தக்கார் வாய்த் தேன்கலந்த தேற்றச் சொல் தேர்வு—தகுதியுடையார் வாயில் தேன் கலந்தாற்போலுந் தெளிவையுடைய சொற் செறிவுகள் என்றவாறு.

கருத்து:—அறிவில்லாதவர் தாமும் அறியாது, பிறர் கூறவுங் கொள்ளாது இழிந்த பொருள்களையே விரும்புவர்.

(கூ).

260. கற்றார் உரைக்கும் கசடற்று நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ்(சு) உதைத்தலான்
—மற்றுமோர்
தன்போல் ஒருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாம் கீழ்.

தருமர்:—என்பது. கற்றார் உரைக்கும்—கற்றறிந்தோரால் சொல்லப்பட்ட; கசடு அறு—[1]குற்றமற்ற; நுண் கேள்வி—நுண்ணிய கேள்வியானது; தன் நெஞ்சு பற்றாது [2]உதைத்தலால்—தனது நெஞ்சிற் பற்றாது உதைத்துப் போதலால்; கீழ்—கீழாயினான்; மற்றும் தன்போல் ஒருவன்—மற்றும் தன்னைப் போல்வான் ஒருவனை; முகம் நோக்கி—முகம் பார்த்து; தானும் ஓர் புன்கோட்டி கொள்ளும்—தானும் ஒரு புல்லிய கோட்டியினைக் கொண்டு அதனாலே பரவசனாயிருப்பன் என்றவாறு.

---

[1] குற்றம்—ஐயம் திரிபுகள்.

[2] உதைத்தலாவது—இகழ்ந்து ஒதுக்கிவிடுதல்.

அறிவிலான் புன் கோட்டி கொள்ளுதல் அறிஞரிடத்துள்ள பொறாமை பற்றி. அறிவிலான் சொல்லைக்கேட்கப் பலர் கூடாமையின் 'ஒருவன் முகம் நோக்கி' என்றார். 'ஓர்', 'ஆம்' இரண்டும் அசைகள்.

அறிவில்லாதார் இவ்வகைத்தாய பழிப்புரைப் படுவர் என்பதாம்.

பதுமனார் :—என்றது. நூல்களைக் கற்றவர்கள் சொல்லும் குற்றமற்ற நுண்ணிய சொற்களைக் கொள்ளாமல் தன் நெஞ்சு உதைத்துப் போதலால், மற்றுந் தன்னைப் போல்வானொருவன் முகத்தைப் பார்த்துத் தானும் ஒரு புல்லிய கோட்டியினைக் கொள்ளுமாம் கீழ் என்றவாறு.

கசடு—குற்றம்.

விளக்க உரை :—எ-து. கற்றார் உரைக்கும் கசடறு நுண் கேள்வி—கற்றுணர்ந்தோரால் கூறப்பட்ட குற்றமற்ற நுண்ணிய கேள்வியினை; பற்றாது தன்நெஞ்சு உதைத்தலால்—தன் நெஞ்சிற் கொள்ளாமல் உதைத்துப் போதலால்; மற்றுமோர் தன் போல் ஒருவன் முகம் நோக்கி—மற்றுந் தன்னைப் போல்வானொருவன் முகத்தைப் பார்த்து; தானுமோர் புன் கோட்டி கொள்ளுமாம் கீழ்—தானும் ஒருவழி புல்லிய கோட்டியினைக் கொண்டு அதிலே பரவசனாயிருப்பன் கீழாயினான் என்றவாறு.

புன்கோட்டி கோடல், அழுக்காற்று மிகுதியால்.

கருத்து :—அறிவற்றவர் அறிவற்றவருடன் கலந்து இகழ்ச்சி எய்துவர்.

(௰).

---

27. *நன்றியில் செல்வம்.

தருமர் :—அஃதாவது. செல்வத்தான் உள்ள அனுபவங்

---

*நன்றியில் செல்வம்—தமக்கும் பிறர்க்கும் நன்மை பயவாத செல்வம்.

களை அறியாதாரிடத்தும், தன் உறவின் முறையார் துன்பமுறுவ தனைக் கண்டுங் [1]கண்ணேடா திருப்பாரிடத்தும், ஒன்றினை வேண்டி இரந்தார்க்குக் கொடாது [2]துன்முகரா யிருப்பா ரிடத்தும், செல்வத்தைக் கொண்டு பிறர்க்குக் கேடு செய்வா ரிடத்தும், நிற்குஞ் செல்வம்.

பதுமனர்:—அஃதாவது தன்னுளுள்ள அனுபவங்களை அறியாது இட்டுவைத்துத் துன்புறுவாரிடத்தும், தானும் உளதா யிருக்க ஒருபடியாலும் செவ்விபடாது துன்முகராயிருப்பா ரிடத்தும், தன்னைக் கொண்டு பிறர்க்குக் கேடு செய்வாரிடத்தும் நிற்குஞ் செல்வம்.

குறிப்பு:—

'நன்றியில் செல்வம்':—

பரிமே:—அஃதாவது ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன் படுதல் இல்லாத செல்வத்தினது இயல்பு. உடையானது குற்றம் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகார முறைமை மேல் தோற்றுவாய் செய்தவதனல் பெறும்.

மணக்:—நன்றியில் செல்வமாவது அறத்தையும், இன்பத் தையும் பயவாத செல்வத்தின் இயல்பு கூறுதல். இது பண்பிலா தார்க்கு உளதாவது ஒன்ருதலின், அதன் பின் கூறப்பட்டது.

பரிதி:—நன்றியில் செல்வமாவது தானும் புசியான் பிறருக்கும் ஈயான் செல்வம் நிலையில்லை எ-று.

—குறள். அதி. 101.

261. அருகல(து) ஆகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா

---

[1] கண்ணேடா திருப்பார்—இரக்கங் கொள்ளா திருப்பார்.

[2] துன்முகர்—கடுகடுத்த முகம்.

பெரிதணியர் ஆயினும் பீடிலார் செல்வம்
கருதுங் கடப்பாட்ட(து) அன்று.

தருமர் :—என்பது. [1]அருகலது ஆகி—(தான் உறைகின்ற) மரத்துக்கு) அருகாகவே நின்று; பல பழுத்தக் கண்ணும்—பலவாகப் பழங்களைப் பழுத்த விடத்தும்; [2]பொரிதாள்—பொரிந்த காலையுடைய; விளவினை—விளாமரத்தை; வாவல்—வௌவால்; குறுகா—சேராது; (அதுபோல) பெரிது அணியர் ஆயினும்—மிகவும் அருகாக இருந்தாராயினும்; பீடு இலார் செல்வம்—பெருமை யில்லாதார் செல்வம்; கருதும் கடப்பாட்டது அன்று—(அவர் தருவர் என்று) நினைக்கத்தக்க (தன்மையது) ஒன்றுமில்லை என்றவாறு.

ஆதலால் அறிவில்லாதாருடைய செல்வம் ஒன்றுக்கும் பயன்படாமல் அவனுக்கும், மறுமைக்கும் இம்மைக்கும் ஆகாது கெடும் என்பதாயிற்று.

பதுமனர் :—என்றது. (வாவலுறையும் இடத்திற்கு) அயலது ஆகி, பல பழங்களைப் பழுத்தவிடத்தும் பொரிந்த காலையுடைய விளவினைப் பயன் கோடற் பொருட்டு [3]வாவல் சென்று அணுகா; அதுபோலத் தாம் இருந்த இடத்துக்கு மிகவும் அணியராயினும் பெருமை யில்லாதார் செல்வம், பிறரால் நச்சப்படுந் தன்மை யுடைத்தன்று என்றவாறு.

---

[1]அருகலது—அருகல் என்னும் தொழிற்பெயரின் அடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். இனி எதிர்மறை வினையாலணையும் பெயராக்கிக் குறையாததாய் என்றும் பொருள் கூறலாம்.

[2]பொரிதாள்—பொருக்குள்ள அரை: பொரியரை, பொகுட்டரை, கோழரை, முள்ளரை என்ற நால்வகையரையுள் 'விளாமரம்' பொரியரை யினையுடையது.

[3]வாவல் விளாமரத்தைக் குறுகாமைக்குக் காரணம் ஒடும் முள்ளும் இருப்பதால் பயன்படாமை நோக்கி.

பீடு இலர்—பிறர்க்குப் பயன்படும் பெருமை இல்லாதவர்.

விளக்க உரை :—எ-து. அருகலதாகிப் பல பழுத்தக் கண்ணும்—தானிருந்த மரத்துக்கு அருகே நின்று விளவு பல பழங்களைப் பழுத்த விடத்தும்; பொரிதாள் விளவினை வாவல் குறுகா—பொரிந்த தாளையுடைய விளவை வாவல் சென்று சேராது; (அதுபோல) பெரிது அணியராயினும்—மிகவும் அண்ணியராயினும்; பீடிலார் செல்வம்—பெருமை யில்லாதார் செல்வம்; கருதும் கடப் பாட்டதன்று—அவர்தருவ ரென்று நினைக்கத் தக்கது யாதானும் இல்லை என்றவாறு.

கருத்து :—பெருந்தன்மையில்லாதவரது செல்வம் எளியவர்க்குப் பயன்படாது.

ஒப்புமைப் பகுதி :—

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று".

—குறள். 1008.

குறிப்பு :-

எளியவர் பீடிலரார் செல்வத்தை விட்டுப் பலவிடத்துஞ் சென்று பலன் கொள்வர் ஆதலின் அன்னார்க்கு வெளவாலை உவமை ஆக்கினர்.

(க).

262. அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ ஆயினும்
கள்ளிமேல் கைந்நீட்டார் சூடும்பூ அன்மையால்
செல்வம் பெரிதுடையர் ஆயினும் கீழ்களை
நள்ளார் அறிவுடை யார்.

தருமர்:—என்பது. [1]அள்ளிக் கொள்வ அன்ன—அள்ளி எடுக்கலாய் இருக்கின்ற; குறு [2]முகிழ ஆயினும்—குறிய முகை களையுடைய வாயினும்; சூடும்பூ அன்மையால்—(அவை) சூடு கின்ற பூ அல்லாமையாலே; கள்ளிமேல் கை நீட்டார்—(யாரும்) கள்ளிமேலே கையைச் செலவிடார்; (அதுபோல) செல்வம் பெரிது உடையர் ஆயினும்—மிகுந்த செல்வத்தை உடையா ராயினும்; [3]கீழ்களை—கீழ் மக்களை; அறிவுடையார் நள்ளார்—அறிவுடையார் நட்புக் கொண்டிரார் என்றவாறு.

கீழ் மக்களுக்கு மிகுதியான செல்வம் உண்டாயினும் தமக்குப் பின்னுக்கு உதவும்படி, அச் செல்வத்தை விடும் இட மறிந்து விட்டு இருமையும் பெருமற் கெடுவர்; அதனால் அவர் செல்வத்தைக் கள்ளிப்பூவாக இகழ்ந்து கூறினர்.

பதுமனர்:—என்றது. அள்ளிக் கொள்ளலாம்படி செறிந்த மொட்டுக்களை யுடையவாயினும், கள்ளிப்பூ மேற் கை நீட்டார் சூடத்தகும் பூவன்மையான்; அதுபோலச் செல்வம் பெரிதுடையராயினும், பிறர்க்குதவாக் கீழ்களைச் சென்று சேரார் அறிவுடையார் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. அள்ளிக் கொள்வன்ன—அள்ளிக்கொள்ளுமாப் போல; குறு முகிழ ஆயினும்—குறிய முகைகளை யுடையவாயினும்; கள்ளிமேல் கைநீட்டார் சூடும்பூ அன்மையால்—முடிக்கத் தக்கது அல்லாமையாற் கள்ளிப்பூவைக் கைநீட்டிப் பறியார்; (அதுபோல) செல்வம் பெரிது உடைய ராயினும்—செல்வம் மிகவுடையராயினும்; கீழ்களை நள்ளார் அறிவுடையார்—கீழ் மக்களைச் சென்று சேரார் அறிவுடையார்

---

[1] அழகாகவும் அதிகமாகவும் அரும்பியிருத்தலின் 'அள்ளிக் கொள்வன்ன' என்றார்.

[2] முகிழ்—அரும்பு.

[3] கீழ்கள்—பெற்ற செல்வம் பிறர்க்கு உதவாத கீழ் மக்கள்.

என்றவாறு.

கருத்து:—கீழோர் பெற்ற செல்வம் பயன்படாச் செல்வமாகும். (உ).

263. மல்கு திரைய கடற்கோட்டு இருப்பினும்
வல்லூற்(று) உவரில் கிணற்றின்கீழ்ச்
சென்றுண்பர்;
செல்வம் பெரிதுடையர் ஆயினும், சேட்சென்றும்
நல்குவார் கட்டே நகை.

தருமர்:—என்பது. மல்கு [1]திரைய—மிகுந்த திரைகளையுடைய; கடல் கோடு இருப்பினும்—கடற் கரையின் மேலே இருந்தாராயினும்; [2]வல் ஊற்று—வலிதாகத் தோண்டின (நீரூற்றை யுடைய); உவர் இல்—(உப்பில்லாத); கிணற்றின் கீழ் சென்று—கிணற்றின்கண் சென்று; உண்பர்—நீரை உண்பர்; (அதுபோல) செல்வம் பெரிது உடையர் ஆயினும்—மிகுந்த செல்வத்தையுடையராயினும்; (அவரை நீங்கி) சேண் சென்றும்—தூரத்திலே சென்றாயினும்; நல்குவார் கட்டே நகை—நன்கு உடன் உதவுபவர் கண்ணே [3]நகை உண்டாகப் பெறுவர் என்றவாறு.

அறிவின்றி யாவராலும் நச்சப்படாதார், தமக்கு அருகாமையாக மிக்க செல்வத்துடனே இருப்பினும், அவரது லோபமாகிய அறிவின்மை நோக்கி அவரிடத்து இரவாது, நன்கு உடன் கொடுப்பார் தூர தேசத்திலே இருப்பினும் அவரை நச்சிச் செல்வர். எனவே நன்றியில்லார் செல்வத்துக்கு உவர்க்கடலை

---

[1] திரை—அலை.

[2] தோண்டத் தோண்ட நீர் ஊறுதலின் 'வல்லூற்று' எனப்பட்டது; விரைவில் நீர் ஊறும் ஊற்று என்றுமாம்.

[3] நகை—விருப்பம்.

உவமையாக்கி இழிவு கூறியது.

பருமனர்:—என்றது. மிக்க திரைகளையுடைய கடலின் மருங்கே இருந்தாராயினும், வல்லூற்றை யுடைத்தாய் உவரின்றி யிருந்த கிணற்றின்கட் சென்றுண்பர். அதுபோலத் தமக்கு அயலிருந்தார் செல்வம் பெரிதுடையாராயினும் நச்சாது, சேய்த் தாகச் சென்று நல்குவார்கண்ணே நசை யுண்டாகப் பெறுவர் என்றவாறு.

கிணற்றின் கரையிற் சென்று எட்டிப் பார்த்தால், நீர் கண்ணுக்குத் தெரியாததே ஆயினும் அதனை ஓர் உபாயத் தால் முகந்துண்பர். அதுபோலத் தமக்கு அணித்தாயிருந்தா ராயினும் செல்வத்தைச் சேய்த்தாக விட்டுவைத்து இருந்தார், செல்வத்தை அணித்தாகக்கொண்டு சென்றார்க்கு வறுமையைக் களைவராயின் அவரிடத்து நன்றி யாதாம் என்று **உரைப்பாரும் உளர்.**

விளக்க உரை :—எ-து. மல்கு திரைய கடற் கோட்டு இருப்பினும்—மிக்க திரைகளையுடைய கடற்கரையிலே இருந்தா ராயினும்; வல்லூற்று உவரில் கிணற்றின் கீழ்ச் சென்றுண்பர்— வலிதாகத் தோண்டின கிணற்றில் ஊறும் உவரிலா நீரைச் சென்றுண்பர்; (அதுபோல) செல்வம் பெரிதுடையர் ஆயினும் —செல்வம் மிக வுடையாராயினும்; சேட் சென்றும் நல்குவார் கட்டே நசை—தூரத்திலே சென்றாயினும் கொடுக்கிறவ னிடத்திலே நச்சி வேண்டக் கடவர் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி :-

"உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே".

—புறம்.

"கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்".

—மூதுரை. 12.

குறிப்பு :—

நசை நல்குவார் கட்டே எனக்கொண்டு கூட்டித் தக்கோர் விருப்பம் நன்கு உதவுவார் கண்ணதே ஆகும் என்று உரை கூறலும் ஒன்று. உப்பாயிருத்தலால் கடல்நீர் பயன்படாமை போல உலோபஞ் செய்தலால் கீழோர் செல்வம் பயன்படா தொழிகின்றது என்க.

அறிவிலார் செல்வம் அவரது உலோபத்தால் தக்கோர்க்குப் பயன்படுவதாகாது.

(௩).

264. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ(து) உடையார் இருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் †வாழ்பவே
பட்டுந் துகிலும் உடுத்து.

தருமர் :—என்பது. புணர் கடல்சூழ் வையத்து—பொருந்திய கடலாற் சூழப்பட்ட வையகத்திலே; [1]புண்ணியமோ வேறு—புண்ணியமானது வேறுபட்டிருக்கும்; (அஃது எப்படியெனில்) உணர்வது உடையார்—(நல்லன உணரும்) அறிவுடையார்; இருப்ப—மிடித்திருக்க; உணர்வு இலா—அறிவில்லாத; [2]வட்டும் வழுதுணையும் போல்வாரும்—உருக்கு வட்டுப்போலும் வழுதணங்காய் போலும் இருப்பாரும்; பட்டும் [3]துகிலும்

---

†வாழ்வரே என்றும் பாடம். வாழ்பவே—வாழ்வுடையராவர் என்றுமாம்.

[1]புண்ணியம்—முன்னை நல்வினைப் பயன்.

[2]வட்டு—கழிமுள்ளிச் செடி என்பாருமுளர். வழுதுணை—கத்தரிச்செடி.

[3]துகில்—நூலாடை.

உடுத்து—பட்டு முதலானவை உடுத்துப் (பணிகளைப் பூண்டு'; வாழ்பவே—வாழக் கடவரோ? என்றவாறு.

உருக்கு வட்டு அடித்து நீட்டினார்க்கன்றிப் பயன்படாது. வழுதுணங்காய் மிகுந்திருப்பினும் அது கொள்வாரை முள்ளால் ஊறு(செய்யும்). அந்தத் தன்மையார் தம்மைப் [1]பிடித்தார்க் கன்றித் தமக்கு மறுமைக்கு உதவுவதாகத் தமது செல்வத்தை அறநெறிகளிற் செலுத்தார்; அஃது அறியாமை ஆதலால் அவர் செல்வம் பயன்படுவதல்ல. யாவர்க்கும் உதவவல்ல அறிவுடையார் மிடித்திருக்க அறிவில்லாதார் வாழக்கடவரோ? ஆகையால் புண்ணியமானது வேறுபாடாயிருக்கும் என்றார்.

புண்ணியம் வேறுபாடாவது:—நன்றியில் செல்வமுடையார் முற்பிறப்பிலே செல்வத்துக்குத் தவம் பண்ணி அதனை ஈண்டும் செலுத்தி மறுமைக்கு உறுதிதேடும் அறிவிற்குத் தவஞ்செய்தா அறநெறியிற்றில்லை. அதனால் அவர்க்கு அச்செல்வத்தால் எய்தும் பயன் ஒன்றுமில்லை என்று இழிவாகக் கூறியது.

பதுமனார்:—என்றது. பொருந்திய கடல்சூழ்ந்துள்ள வையகத்துள்ளாரது புண்ணியம், அறிவு முதலாயவற்றோடு பொருந்தாதிருக்கும்; அஃது என்னை யெனின் உணர்ச்சியுடையார் [2]ஒழிய, உணர்வில்லாராய வட்டும் வழுதுணையும் போலச் சிறியாரும் பட்டுந் துகிலும் உடுத்து வாழ்வார் (ஆதலின்) என்றவாறு.

வட்டும் வழுதுணையும்—இரும்பிற் கழிந்த [3]கிட்டமும், வழியிற்பொருந்திய பருக்கைக் கல்லும்.

விளக்க உரை:—எ-து. புணர் கடல் சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே—பொருந்தின கடல் சூழ்ந்த வையகத்துப்

---

[1]பிடித்தார்—தன்வசப்படுத்தியவர்.

[2]ஒழிய—வளம் இல்லாதவராய் ஒழிய.

[3]கிட்டம்—தரு.

புண்ணியம் வேறுபட்டிருக்கும்; (அஃதெப்படி யென்னில்) உணர்வது உடையார் இருப்ப—அறிவுடையார் மிடித்திருக்க; உணர்விலா வட்டும் வழுதுணையும் போல்வாரும்—அறிவில்லாத வட்டுப் போலும் வழுதுணங்காய் போலுங் காலுங் கையும் உடையராய் இருப்பாரெல்லாம்; வாழ்பவே பட்டுந் துகிலும் உடுத்து—தாம் பட்டும் துகிலும் உடுத்துவாழ்வர் (ஆதலின்) என்றவாறு.

வட்டென்றார் அடியும் தலையும் இல்லாததுகொண்டு. வழுதுணங்காய் என்றார் இலைமறை காயுங் *கொத்துமாய் இருப்பது கொண்டு.

கருத்து:—அறிவிலார் நல்வினையாற் செல்வம் பெற்று வாழினும் அவர்க்கு அச் செல்வத்தாலாகிய பயன்(ஈகை)யாதுமில்லை.

ஒப்புமைப் பகுதி :—

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு".

—குறள். 374.

"உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதாழ் இலங்கருவி வெற்ப ! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு"

—பழ. 125.

[1]'துகில்' :—

"பூந்துகில்"

—நெடுநல். 145.

"புடைவீழந் துகில்"

—நெடுநல். 181.

---

[1] ஆடை வகையுள் உயர்ந்ததனைத் 'துகில்' என்பர்.

*'கொத்தையும்' உரைப்பாடம்.

குறிப்பு :—

அறிவுடையார் வறியராகவும் அறிவிலார் செல்வராகவும் இருத்தற்கு அவரவர் ஊழ்வினையே காரணமாகும்.

"செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன் கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற்கு ஆகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது. செல்வமுடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதாயிற்று" என்ற பரிமேலழகர் உரை ஈண்டு நினைத்தற்குரியது.

(ச).

265. நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணம்—தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்!
நினைப்ப வருவதொன்(று) இல்.

தருமர் :—என்பது. [1]வேல் நெடு கண்ணாய் !—வேல் போலும் நீண்ட கண்ணினையுடையாய் !; நல்லார் நயவர்—(அறிவால்) நல்லராய் நயகுணங்களையுடையவர்; இருப்ப—(வறுமையராய்) இருப்ப; நயம் இலா கல்லார்க்கு—நயகுணமுங் கல்வியும் இல்லாதார்க்கு; ஒன்று ஆகிய காரணம்—ஒரு செல்வம் ஆகைக்குக் காரணம் (யாதோ என்னில்); தொல்லை வினை பயன் அல்லது—பழவினைப் பயனல்லாமல்; [2]நினைப்ப வருவது ஒன்று இல்—நினைக்கத் தக்க காரியம் வேறொன்றுமில்லை என்றவாறு.

நல்லாருமாய் நயத்தினையும் உணரத்தக்கவர் வறுமையாய் இருப்பது, முற்பிறப்பிற் கல்விக்குத் தவம் பண்ணிச்

---

[1]இச்செய்யுள் பெண்ணை முன்னிலைப் படுத்திக் கூறியதால் மகடூஉ முன்னிலை.

[2]நினைப்ப வருவது ஒன்று இல்—ஆராய்ந்த காணவல்ல பெரிய காரணம் ஒன்றுமில்லை.

செல்வத்துக்குத் தவம் பண்ணினாரில்லை; அதனால் 'வினைப்பயன்' என்றார். கல்வியும் நயகுணமும் இல்லார் முற்பிறப்பில் செல்வத்துக்கு மாத்திரம் தவம் பண்ணி, இப்பிறப்பிற் செல்வம் பெற்றதன்றி அதனால் அவர்க்கு வரும் பயன் ஒன்றுமில்லை என்பதாம்.

பதுமனார்:—என்றது. அறிவால் நல்லாரும் நயமுடையாருமாய் இருப்பார் ஒழிய, [1]ஈரம் இல்லாராய் அறிவும் இல்லார் ஆயினார்க்குச் செல்வம் ஆகிய காரணம் என்னெனில், முன் செய்த நல்வினைப் பயனல்லது ஆராயுங்கால் வேல் நெடுங் கண்ணாய்! மற்று நினைப்ப வருவதொரு காரணம் இல்லை என்றவாறு.

விளக்க உரை:—எ-து. நல்லார் நயவர் இருப்ப—நல்லவருமாய் நயத்தினையும் உணரத்தக்கார் வறியராய் இருக்க; நயம் இலாக் கல்லார்க்கு ஒன்று ஆகிய காரணம்—நயமிலராய்க் கல்வியும் இலராயிருப்பார்க்கு ஒருசெல்வம் ஆகைக்குக்காரணம்; தொல்லை வினைப்பயன் அல்லது—பழைய வினைப்பயன் அல்லது; வேல் நெடுங்கண்ணாய்!—வேல் போலும் நெடிய கண்களையுடையவளே!; நினைப்பவருவது ஒன்றில்—நினைக்கத்தக்க காரியம் வேறொன்றுமில்லை எ-று.

கருத்து:—அறிவொழுக்கம் இல்லாதவர் செல்வம் பெறக் காரணம் நல்வினை என்று கருதி அறிஞர் அதனை மதியார்.

ஒப்புமைப் பகுதி:—

"வழங்கார் வலியிலார் வாய்ச்சொல்லும் பொல்லார்
உழந்தொருவர்க் குற்றால் உதவலு மில்லார்
இழந்ததில் செல்வம் பெறுதலும் இன்னார்
பழஞ்செய்போர் பின்று விடல்".

—பழ. 292.

(ரு).

---

[1] ஈரம்—அன்பு.

266. நாருத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்
நீருய் நிலத்து விளியரோ—வேருய [பாவாய்!
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து.

தருமர் :—என்பது. [1]நாரு தகடே போல்—பொன் தகடு போலும் இதழினையுடையாய்; நல் மலர் மேல்—நல்ல தாமரை மலர்மேல் இருக்கும்; [2]பொன் பாவாய்!—பொலிவினையுடைய பாவாய்! நீ—; பொன் போலும்—பொன்னைப்போல; நல் மக்கள் பக்கம் துறந்து—குற்றமற்ற அறிவினையுடையார் இடத்தைவிட்டு; வேறு ஆய—குணம் வேறுபட்ட; புல்மக்கள் பக்கம் புகுவாய்—புல்லிய மனிதரிடத்திலே சென்று புகுவை; [ஆதலால்] நிலத்து நீறு ஆய் [3]விளியரோ—நிலத்தின்கண்ணே விழுந்து பொடியாகக் கெட வேண்டாமோ? என்றவாறு.

அரோ—அசை. நாருத் தக(டேபோல் நன்மலர்)—பொற்றாமரைப் பூ; அல்லதூஉம் நாருத [4]புல்லிதழ்போல் ஒருவர்க்கும் பயன்படாதாரிடத்து விடாமல் நின்றுயே நல்லமலர்மேற்பாவாய்! என்றுமாம். எனவே பூமகளை இகழுமாப்போல நன்றியில்லாதார் செல்வத்தை இகழ்ந்தவாறு.

பதுமனுர் :—என்றது. நாருத இதழே போல் நன்மலர் மேற் பொற்பாவாய்! பிறர்க்குப் பயன்படாது நீருய் நிலத்தின்

---

[1]நாருத்தகடு—மணம் வீசாத பொன் தகடு.

[2]பொன்பாவாய் என்றது திருமகளை; செல்வமாகிய பாவை போல்வாள் என்றுமாம். இப்பொருளுக்கு நன்மலர்மேல் நாருத்தகடேபோல் எனக் கூட்டிப் பொருள் கொள்க. பொன் பாவை என்பது யாவரும் விழையும் பொலிவினைப் பெற்றும் அதற்கு ஏற்ற குணஞ்செயல் திருமகட்கு இல்லை என்பதைச் சுட்டி நின்றது.

[3]விளியரோ—விளியியர் என்பது இடை குறைந்து நின்றது எனினுமாம்.

[4]புல்லிதழ்—புறவிதழ்.

கண் விளிவாயாக!; நீ பொன்போலும் நன்மக்கள் பக்கத்தை விட்டு வேருய் புன்மக்கள் பக்கம் புகுவாய் ஆதலால் என்றவாறு.

நாருத்தகடு—பொற்றகடு. நன்மலர்மேல் பொற்பாவாய்—பொற்ருமரையின்மேல் இலக்குமி என்றுமாம். வேருய புன் மக்கள்—தன்மத்தின் வேறுபட்ட அறிவுடைய கீழ்மக்கள். அரோ—அசை.

விளக்க உரை :—எ-து. நாருத் தகடேபோல் நன் மலர்மேல் பொற்பாவாய்!—நாருத இதழ்போலும் நல்ல மலரின் மேல் இருக்கும் பொலிவினையுடைய பாவாய்!; நீருய் நிலத்து விளியரோ—நிலத்தின்கண்ணே நீ பொடியாய் விழுந்து கெட்டுப் போக வேணுமே; வேருய புன்மக்கள் பக்கம் புகுவாய்—குணம் வேறுபட்டு ஒருவர்க்கும் பயன்படாத புல்லிய மனிதரிடத்திலே புகுதுகின்ருய்; நீ பொன்போலும் நன்மக்கள் பக்கம் துறந்து—நீ பொன்னைப்போலும் நல்ல மனிதரிடத்தை விட்டு எ-று.

நாருத்தகடு—பொற்றகடு.

கருத்து :—நன்றியில்லார் செல்வம் பயன்படாமையால் மதித் தற்குரியதன்று.

குறிப்பு :—

நாருத்தகடேபோல் என்ற உவமை 'நன்மலரோடு இயைவ தன்றி 'விளி' என்பதனேடும், 'புகுவாய்' என்பதனேடும் இயையுமாறு நயம்பெற அமைந்துள்ளது காண்க.

(சு).

267. நயவார்கண் நல்குரவு நாணின்று கொல்லோ?
பயவார்கட் செல்வம் பரம்பப்—பயின்கொல்?
வியவாய்காண் வேற்கண்ணுய்! இவ்விரண்டும்
நயவாது நிற்கும் நிலே. [ஆங்கே

தருமர்:—என்பது. வேல் கண்ணாய்!—வேல்போலும் கண்ணினை உடையவளே!; [1] நயவார்கண் நல்குரவு — நய முடையவரிடத்து நிற்கும் வறுமைக்கு; நாண் இன்று கொல்லோ?—[2] நாணம் இல்லையோ?; பயவார்கண் செல்வம்— பயன்படாதாரிடத்து நிற்குஞ்செல்வமானது; பரம்ப [3] பயின் கொல்?–(பரவுதற்குரிய) உரைகாரர் கையிற்பிசினோ?; இரண்டும்— (நல்குரவு செல்வம் ஆகிய) இவ்விரண்டும்; ஆங்கே—[4] அவ் விருவரிடத்தும்; நயவாது நிற்கும் நிலை—ஆராயாது நிற்கும் நிலையை; [5] வியவாய் காண்—வியக்கின்றாய் இல்லைகாண் என்ற வாறு.

இது நன்றியில்லாதார் செல்வத்தை இகழ்வார், நன்றி யுடையார் வறுமையையும் உடன்கூறி அறிவுறுத்தியது.

பதுமனார்:—என்றது. ஈரத்தை யுடையார் மாட்டுச் சென்ற வறுமை நாணின்று கொல்லோ? ஒருவர்க்கு ஒன்றை உதவாதார் மாட்டுச் செல்வம், உரைகாரனாற் பிணிக்கப்பட்ட பயின்கொல்லோ? இவ்விரண்டும் ஆங்கே ஆராயாது நிற்கும் நிலையை வேற்கண்ணாய்! வியக்கின்றிலைகாண் என்றவாறு.

கொல்—அசை. ஓ — என்றது சான்றோர் நொந்து சொல்லுதல். பரம்பப் பயின்—உரைகாரனாற் பிணிக்கப்படும்

---

1 நயவார்—நயமுள்ளவர். அஃதாவது உதவுங்குணம் உள்ளவர். இனி, நயவார் என்பதற்கு பிறரிடம் தாழ்ந்து இரவாத நன்மக்கள் என்றும், செல்வத்தை ஒரு பொருளாக விரும்பாதவர் என்றும் பொருள் கொள்ளலாம்.

2 நாணம்—தகாதன செய்தலில் மனம் ஒடுக்குதல்; இங்கே நல்குரவு, தான் சேரத்தகாத நல்லோரிடம் நிலையாகச் சேர்ந்து துன்புறுத்துதலால் அதனை 'நாணின்று கொல்' என்றார்.

3 பயின்—பிசினுதலை. "சிறு காரோடன் பயினொடு சேர்த்திய, கற்போற் பிரியலம்" என்ற அகநானூற்றிலும் காண்க.

4 பயன்படும் நன்மக்கள், பயன்படாத கீழ்மக்கள்.

5 வியவாய்—வியப்பாயாக என்றுமாம்.

பிசின். வேற்கண்ணாய்—வேல்போன்ற கண்ணையுடைய தோழி; இலக்குமி என்றுமாம். நயவாது—தன்னை விரும்பாது. இவ் விரண்டும் ஆங்கே நயவாது நிற்கும் நிலை — நல்குரவும் செல்வமும் ஆகிய இவ்விரண்டும் ஆங்கே விரும்பாது நிற்கும் நிலை.

விளக்க உரை:—எ-து. நயவார்கண் நல்குரவுநாணின்று கொல்லோ?—நயமுடையவரிடத்து நிற்கும் நல்குரவுக்கு நாண மில்லையோ?; பயவார்கண் செல்வம் பரம்பப் பயின்கொல்?—பயன்படாதாரிடத்து நிற்குஞ் செல்வமானது, உரைகாரருடைய பிசினோ?; வியவாய்காண் வேற்கண்ணாய்!—வியக்கின்றாயில்லை வேல் போலுங் கண்ணையுடையவளே!; இவ்விரண்டும் ஆங்கே நயவாது நிற்கும் நிலை—இவர்கள் இருவரையும் ஆராயாதே நிற்கும் நிலையை வியக்கின்றாய் இல்லையோ? என்றவாறு.

விசாரியாமல் நிற்கையாவது ஏற்கிறவரது துன்பங்கண்டு நிற்றல்.

கருத்து:—நன்றி யில்லாதாரிடத்தமைந்த செல்வம் இனிமை பெறாது.

மேற்கோள் பகுதி :—

கச் :—மேற்கதுவாய் மோனைக்கு 'பயவார்கட் செல்வம் பரம்பப் பயின்கொல்' என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 92.

ஒப்புமைப் பகுதி :—

"நயனுடையான் நல்கூர்ந்தா னாதல்"

—குறள். 219.

(எ).

268. வலவைகள் அல்லாதார் காலாறு சென்று
கலவைகள் உண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருனையால் துய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

தருமர்:—என்பது. ‡வலவைகள் அல்லாதார்—நாணிலிகள் அல்லாதார்; கால் ஆறு சென்று—(தம் கால்களால்) தூரங்களிலே சென்று; *கலவைகள் உண்டு—(பெற்ற பெற்ற இடங்களிலே) சோறாகிலும் கூழாகிலும் உண்டு; கழிப்பர்—நாளைக் கழிப்பர்; வலவைகள்—நாணமில்லாதார்; [1]கால் ஆறும் செல்லார்—(காலால்) தூரத்திலும் செல்லாராய்; இருந்து—(தம் இல்லத்துள்ளே அடைத்து) இருந்து; [2]மேல் ஆறு பாய—புழுக்கத்தினால் [உடல்மேல் ஆறுபோல்] வேர்வு நீர் மிகுதியாய் வடிய; கருனையான் துய்ப்ப—பொரிக்கறியுடனே கூடிய சோற்றை உண்பர் என்றவாறு.

இது நன்றியில் செல்வத்திற்குப் பொருந்துவது எப்படி என்னில், நாணமுடையவர் வறுமையுற்றால் ஏற்கிறவன் முகத்துக்கு அஞ்சித் தமதுயிரை வலிதிற் போக்காமல், தூரதேசங்களிலேபோய் இரந்து உண்டாயினும் ஒழுக்கமுடன் வாழ்நாளைக் கழித்துவிடுவர். நாணமில்லாதார் தம்முடைய செல்வத்தைப் பிறர்க்குப் பயன்படாமல் அடைத்துவைத்து, வேர்ப்பு வடிய இருந்து உண்டு தமது வயிறு ஒன்றினையும் வளர்ப்பதனால், அவர் செல்வத்தை இழிவாக்கி நன்றியில் செல்வத்திற் சேர்க்கப் பட்டது.

---

‡வலவை—பேய்த்தன்மை என்றுமாம்.

* பலரிடத்தும் இரந்து பெற்ற பலவகைச் சோறுங் கறியும் விரவப் பெற்றது ஆதலின் அதனைக் 'கலவை' என்றார்.

[1] காலால் வழி நடவார் எனவே, ஊர்திகளில் இவர்ந்து பெருமிதத்துடன் செல்வர் என்பது பெறப்படும்.

[2] மேல் ஆறு பாய கருனையான் விருந்து துய்ப்ப—எனப் பதம் பிரித்து மேன்மேலும் நெய்யாறு, பாலாறு, தயிராறு பெருகச் சுறிகளுடன் விருந்துண்டு மகிழ்வர் என்று பொருளுரைத்தலும் ஒன்று.

பதுமனர்:—என்றது. நாணிலிகள் அல்லாதார் வறுமை யுற்றால் பல நாடுகளிலும் சேய்த்தாகச் சென்று, இரந்து பெற்ற கலவைகளை உண்டு பொழுதுபோக்குவர். நாணிலிகள் காலாறுஞ் சென்று முயன்று உண்ணாதே செல்வராயினாரை அடைந்து கருணைக் கறியொடு கூட வுண்பர்; தம் உடம்பின்மேல் ஆறு போல வேர்ப்புநீர் [1]வார இருந்து என்றவாறு.

வலவை—குற்றம். கலவை—பல இடங்களினும் இரந்து பெற்ற கலவை. தாம் முன்னைச் செனனத்திலே செய்த நல் வினையாலே ஐசுவரியம் பெற்றால், ஓரிடத்திருந்து முதன்மைக் குறிபுடனே உண்பர் மேலாறு வார இருந்து என்றுமாம்.

விளக்க உரை:—என்பது. வலவைகள் அல்லாதார் காலாறுசென்று—நாணிலிகள் அல்லாதார் தூரதேசத்திலுஞ் சென்று; கலவைகள் உண்டு கழிப்பர்—கலவனான அடகாயினும் அருந்தி நாளைக்கழித்து வருந்தியிருப்பர்; வலவைகள்—நாண மில்லார்; காலாறும் செல்லார்—தூர தேசத்திலும் போகாராய்; மேலாறு பாய விருந்து—விருந்துவாராமைக்குத் தம் வாய்தலை யும் அடைத்து வைத்து புழுக்கத்தினாற் றம் முடம்பின்மேல் ஆறுபோல வேர்ப்பு நீர் வாரா இருந்தே; கருணையால் துய்ப் பவே—கருணைக்கறியோடும் உண்பர் என்றவாறு.

(நன்றியில்) செல்வத்துடனே சேர்க்கப்பட்டது என் னெனில் அடைந்திருந்துண்பவன் விருந்துக்கஞ்சி என்பது கொண்டு.

கருத்து:—நாணமில்லாத கீழோர் செல்வம், அவர் பொருட்டே விளைகச் செலவாகும்.

(அ).

---

[1]வார—வழிய.

269. பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வம் எய்தியக்
வண்மையும் அன்ன தகைத்து. [கால்

தருமர்:—என்பது. பொன் நிறம்—பொன்போலும் நிறத்தையுடைய; [1]செந்நெல்—செந்நெற் பயிரானது; [2]பொதியொடு பீள்வாட—(மேல் பொதிந்த தாளுடனே) கருவும் பஞ்சடைந்துவாட; மின் ஒளிர் வானம்—மின்னை விட்டு விளங்குகின்ற மேகமானது; [3]கடலுள்ளும் கான்று உகுக்கும்—கடலுக்குள்ளேயும் (நீரை வெளிப்படுத்திப்) பெய்து விடும்; வெண்மை உடையார்—[4]வெளிறான மனிதர்; விழுச்செல்வம் எய்தியக்கால்—மிகச் செல்வத்தைப் பெற்றகாலத்து; வண்மையும்—அவருடைய ஒப்புரவும்; [5]அன்ன தகைத்து—அத்தன்மையாய் இருக்கும் என்றவாறு.

பயிர் வாடுகையிலே கடலிலே பெய்த மேகம்போல அறிவில்லாதார் பெற்ற செல்வத்தின் ஒப்புரவு நன்னெறிக்கட் சென்று பயன்படாது என்பதாம்.

பதுமனார்:—என்றது. பொன்போலும் நிறத்தினையுடைய செந்நெல்லின் கதிர்கள் கருவொடு வாடாநிற்ப, மின்

---

[1] செந்நெல்—ஒருவகை உயர்ந்த நெல்.

[2] பொதி—கதிர் என்றுமாம்.

[3] கடலுள்ளும் என்றது களர் நிலத்தைக் குறித்தபடி. மேகம், மழை வேண்டும் செந்நெல் நிலத்திலே பெய்யாது, அதனைவிட்டுக் கடலிலும் களரிலும் நீரை வெடுப்படுத்தி வீணே சொரிதலால் 'கான்று உகுக்கும்' என்றார்.

[4] வெளிறு—அறிவின்மை.

[5] தக்க இடத்தில் சொரியாமல் தகாத இடத்தில் மேகம் நீரைச்சொரிதல் போல, தகுதியுடையாருக்கு உதவாமல் தகுதியில்லார்க்கே அறிவிலார் தம் செல்வத்தைத் தொலைப்பர் ஆதலால் 'அன்னதகைத்து' என்றார்.

ளுளிர்வானம், பயனின்றியே கடலுள்ளே நிறைய நீரைப் பெய்து உகுக்கும்; அறிவில்லாதார் சீரிய செல்வம் பெற்ருல் அவர் வரிசையும் அப்பெற்றித்தே என்றவாறு.

பீள்—கரு. வெண்மை—அறியாமை. வரிசை–கொடை

விளக்க உரை :—எ-று. பொன்னிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட—பொன்போலும் நிறத்தையுடைய செந் நெல் பஞ்சடைந்து கருவுடனே பட்டுவாட; மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்று உகுக்கும்—மின்னை விட்டு விளங்குகிற மேகமானது கடலுள்ளும் பெய்துவிடும்; வெண்மை யுடையார் விழுச் செல்வம் எய்தியக்கால்—வெளிருன மனிதர் விழுமிய செல்வத்தைப் பெற்ற காலத்து; வண்மையும் அன்ன தகைத்து—அவருடைய ஒப்புரவும் அப்படி ஒத்த தகுதியுடைய தாம் என்றவாறு.

கருத்து :—அறிவிலார் தாம்பெற்ற செல்வத்தாற் செய்யும் உதவி நல்வழியிற் பயன்படாது.

ஒப்புமைப் பகுதி :-

"எதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை".

—குறள். 837.

"விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்
இரும்பணையில் வென்ற புருவத்தாய்! ஆற்றக்
கரும்பனை யன்ன துடைத்து".

—பழ. 286.

"கழிப.கிழ்வுடையார் கெடுதிகொண்டாக்கம் கைவிடுவார் செல்வமுறினும்
கொழிபயன் எய்தார் பிறர்க்கலால் தமர்க்கும் கொடாரிவர் பேதையர் ஒழிக".

—விநா. அரசி. 130.

"கதிர்க்குலம் செந்நெல் வாடக் கார்க்குலம் கைக்கொண் [டோடிக்
கொதிதிரைக் கடலிற் பெய்யும் கொள்கை போல்....
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிதியிலார்க் கீய மாட்டார்".

—விவேகசிந்தாமணி.

(கூ).

270. ஓதியும் ஓதார் உணர்விலார் ஓதாதும்
ஓதி அனையார் உணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார் செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்.

தருமர் :—என்பது. [1]உணர்வு இலார்—[உலகநடை அறியும்] அறிவில்லாதவர்; ஓதியும்—கற்றவராயினும்; உணர்வு இலார்—(அனையர்) கல்லாதவரோடு ஒப்பர்; உணர்வு உடையார் [உலகநடை அறியும்] அறிவுண்டானவர்; ஓதாதும்—கற்றாரில்லை யாயினும்; [2]ஓதி அனையார்—கற்றவரோடு ஒப்பர்; இரவாதார்—; [3]தூய்தாக நல்கூர்ந்தும்—மிகவும் மிடித்தாராயினும்; செல்வர் —செல்வரோடு ஒப்பர்; செல்வரும்—செல்வமுடையாரும்; ஈயார் எனின்—ஒருவர் வேண்டினது கொடாராயின்; நல் கூர்ந்தார்—மிடியரோடு ஒப்பர் என்றவாறு.

ஒருவர்க்கும் பயன்படாத செல்வம் படைத்தவன்,வறியான் அன்றிச் செல்வமுடையவன் அல்லன் என்று அவன் செல்வத்தை இகழ்ந்து கூறுவார், அறிவுடையோர் வறுமையும் உடன்கூறி வற்புறுத்தியது இது.

---

[1] உணர்வு—உலகநடையை அறியும் இயற்கை அறிவு.

[2] ஓதி—பெயர். ஓதுபவர் என்பது பொருள். ஓதினால் என எச்ச மாக்கினும் அமையும்.

[3] தூய்தாக என்பதற்கு வறுமையிலும் மனம் செம்மையுடையதாக எனப் பொருளுரைத்தலுமாம்.

பதுமனார்:—என்றது. பலநூல்களை ஓதினாராயினும் ஓதாதாரோடு ஒப்பர் அறிவில்லாதார்; ஓதிற்றிலரே ஆயினும் ஓதினரோடு ஒப்பர் அறிவுடையார்; ஒருபொருளும் இன்றி வறியரே ஆயினும் பிறரைச் சென்று இரவாதார் செல்வரோடொப்பர்; செல்வரும் பிறர்க்கு ஒன்றை ஈயமாட்டாராயின் வறியரோடு ஒப்பர் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. ஓதியும் ஓதார் உணர்விலார்—ஓதினாராகிலும் ஓதாதாரோடொப்பர் அறிவிலாதார்; ஓதாதும் ஓதியனையார் உணர்வுடையார்—ஓதினாரில்லை யாயினும் ஓதினவர்க்கு ஒப்பர் அறிவுடையார்; தூய்தாக நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார்—மிகவும் மிடித்தாராயினும் ஒருவர் பக்கற் சென்று இரவார் செல்வரோ டொப்பர்; செல்வரும் நல்கூர்ந்தார் ஈயார் எனின்—அந்தச் செல்வரும் மிடித்தவரோ டொப்பர் ஒருவர்க் கொன்றைக் கொடாராயின் என்றவாறு.

கருத்து:—உலக அறிவும், கொடைக்குணமும் இல்லையேல் செல்வம் சிறப்படையாது.

மேற்கோள் பகுதி:—

பேரா:—மரபுபற்றிய சூத்திரத்தில், ஒரு செய்யுள் வழக்கிற் றாகவுஞ் சொல்லப் படுதற்கு **"ஓதியும் ஓதார் உணர்விலார்"** என்ற செய்யுளை மேற்கோள்காட்டுவர்.

—தொல். செய். சூ. 392.

நச்:—இதற்கே இருவரும் இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 80.

(ம).

4. *துன்பவியல்.

28. [1]ஈயாமை.

தருமர்:—அஃதாவது ஒரு பொருளைக்கண்டு அதன்மேல் ஆசை செல்லுதலும் பொருள்வருவாய் காரணமாகக் கோபம் பிறத்தலும் பொருள் மிக எய்தினும் அதனால் அமைதி பிறவாமையும் ஒருவர்க்கு ஒன்றைக்கொடுக்கில் அதனால் பொருள் குறையும் என்னும் உலோபத்தால் ஒருவர்க்கு ஒன்றைக் கொடாமையுமாம்.

நன்றியில் செல்வத்தில் கொடாமையால் வரும் இழிவு தானே போதாதோ இந்த அதிகாரமும் வேண்டுமோ என்னில், மறுமைக்கும் இவனுக்கு உறுதியில்லை என்பது காட்ட(வேண்டி) இட்டுச்சொன்னார் என்பதாம்.

பதுமனார்:—அஃதாவது ஒரு பொருளைக்கண்டு அதன் மேலே முற்றிய ஆசை செல்லுகையும், பொருளின் வருவாய் காரணமாகக் கோபம் பிறத்தலும், பெற்ற பொருளின் அடங்காது மேற்பெற ஆசைசென்று இச்சிக்கிற அளவெல்லாம் பெற்றாலும் அமைதி பிறவாது மோகஞ்செல்லுகையும், அதனாலே [1]மத மாற்சரியமும் பொய்யுங் கொலையும் பிறத்தலுமாய் அப் பொருள் சிறிது குறையும் என்னும் உலோபத்தாலே தானும் உண்ணாது பிறர்க்கும் கொடாது இருத்தலாம் என்றவாறு.

271. நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்—அட்டது

---

* துன்பம் உண்டாதலைப்பற்றிக் கூறும் பிரிவு.

1 மதம்—செருக்கு, மாற்சரியம்—பொறாமை. இவை காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் என்ற உட்பகை ஆறனுள் அடங்குவனவாம்.

அடைத்திருந் துண்டொழுகும் ஆவதின் [மாக்கட்கு
†அடைத்தவாம் ஆண்டைக் கதவு.

தருமர்:—என்பது, [1]நட்டார்க்கும்—தம்முடன் நட்புக் கொண்டவர்க்கும், [2]நள்ளாதவர்க்கும்—நட்புக் கொள்ளாதவருக்கும், உளவரையால்—(தமக்குள்ள மரியாதையால்), [3]அட்டது பாத்து—அட்டதனைப் பகுத்து, உண்டல்—(தாம்) உண்பதே, [4]அட்டு உண்டல்—அட்டு உண்டலாவதாம்; (அவ்வாறன்றி) அட்டது—அட்டதனை, அடைத்து இருந்து உண்டு—(கதவு) அடைத்து உள்ளிருந்து உண்டு, ஒழுகும்—உயிர் வாழ்ந்து திரியும், [5]ஆவது இல் மாக்கட்கு—ஆக்கமில்லா மனிதர்க்கு, ஆண்டை கதவு—அவ்விடத்திற் கதவுகள், அடைத்தவாம்—அடைத்தனவாம் என்றவாறு.

அவ்விடத்திற் கதவு—சுவர்க்க லோகத்திற் கதவு. எனவே, உண்டான அளவில் எம்மாத்திரமாகிலும் பகுத்து உண்ணுதார், நரகம் புகுவர் என்பது தோன்ற அவர்க்குச் சுவர்க்கத்திலே கதவடைக்கும் என்ருர்.

பதுமனர்:—என்றது. தம்மொடு நட்டார்க்கும் நள்ளா

---

† அடைக்குமாம் என்றும் பாடம்.

[1] நட்டார்—உறவினர்

[2] நள்ளாதவர்—விருந்தினர் என்றமாம்.

[3] அட்டது—சமைக்கப்பட்ட உணவு.

[4] அட்டு உண்டல் என்றது இல்லறம் செய்தலைக்குறிக்கும். இல்விருந்து அட்டுண்டு வாழ்வதாவது பகுத்து உண்பதேயாம். 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத்தவர்க்கு' என்றபடி, இம்மையில் விருந்து உபசரித்தவனை மறுமையில் தேவர்கள் எதிர் கொள்வர் ஆதலின், அவ்வாறில்லாதவனுக்குச் சொர்க்கத்திலே கதவு மூடப்படும் என்ருர்.

[5] ஆவது—செல்வத்தால் ஆகும் பயன்; ஈகை. செல்வத்தின் பயனை அறியாதவர் அறிவிலிகள் ஆதலின், அன்னுரை மக்கள் என்னுது 'மாக்கள்' என்ருர்.

தவர்க்கும் தமக்குள்ள அளவினுல் அட்டதனைப் பகுத்துண்டல் அட்டு உண்டு வாழ்வதாம். அட்டதனைப் பிறர்க்கு இடாது அடைத்திருந்து உண்டு ஒழுகும் ஆக்கமில்லாத மக்கட்கு மறுமை யுலகத்துக் கதவுகள் அடைத்தவாம் என்றவாறு.

இதனுள் **ஆவலின் மாக்கள்** என்று பாடமோதி ஆசை யுடைய மக்கள் என்று **பொருளுரைப்பாருமுளர்.**

விளக்க உரை :—எ-து. நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும்—தம்முடன் நட்புக்கொண்டார்க்கும் நட்புக்கொள்ளா தார்க்கும்; உளவரையால் அட்டது பாத்துண்டல் அட்டு உண்டல்—தமக்குள்ள அளவினுல் அட்டதனைப் பகுத்து உண்டல் அட்டுண்டு வாழ்தலாவது; அட்டது அடைத்து இருந்து உண்டு ஒழுகும் ஆவதில் மாக்கட்கு—அட்டதனைப் பிறர்க்கிடாது அடைத்திருந்து உண்டொழுகும் ஆக்கமில்லாத மாக்கட்கு; அடைத்தவாம் ஆண்டைக் கதவு—மறுமையில் கதவுகள் அடைத்தவாம் என்றவாறு.

கருத்து :—இம்மையில் பகுத்துண்ணுதவனுக்கு மறுமையின்பம் இல்லை.

ஒப்புமைப் பகுதி :—

" இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை அஃதன்றி
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு ணுயின்
நசைகொன்றுன் செல்லுலக மில்."

—பழ. 24.

குறிப்பு :—

" கொடையொடுபட்ட குணனுடை மாந்தர்க்கு—அடையாவாம் ஆண்டைக் கதவு" என்ற நாலடிச் செய்யுள் (91) இங்கே நினைத்தற்குரியது.

(௬).

272. எத்துணை யானும் ‡இயன்ற அளவினால்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால் பின்னறிதும் [என்பார்
அழிந்தார் பழிகடலத் துள்.

தருமர் :—என்பது, எ துணை [1]ஆனும்—எவ்வளவாயினும், இயன்ற அளவினால்—பொருந்திய அளவினால், சிறு அறம் செய்தார்—(சிறிதாயினும் இது சிறிது என்றிராமல் இடைவிடாமல் நாளடைவிலே) பிச்சைமாத்திரமாயினும் அறஞ்செய்து வந்தவர், [2]தலைப்படுவர்—(சொர்க்கத்தினைத்) தலைப்படுவர்; மற்றை பெருஞ்செல்வம் எய்தியக்கால்—மற்றுப் பெரிய செல்வம் எய்திய காலத்து, பின் அறிதும் என்பார்—'இன்னமும் நமக்கு வயதுண்டு பின்பே அறஞ்செய்கிறோம்' என்று அதனை இகழ்ந்து இருந்தவர், [3]அழிந்தார் பழிகடலத்துள்—கடல்சூழ்ந்த பூமியி னுள்ளே கடிதின் இறந்து பழி படைத்தாருமாவர் என்றவாறு.

ஆதலால் தன் வாழ்நாள் [4]உலவாமுன்விரைந்து தனக்குள்ள மரியாதை பிறர்க்குங்கொடுத்துத் தனக்கு இம்மை மறுமையைத் தேடிக்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது, எவ்வளவாயினும் தமக்குக்கூடிய அளவினால் சிறிய அறத்தையாயினும் நாடோறும் செய்தார் தலையான கதியிலே பிறந்துள்ளாராவர். அப்பெற்றித்தன்றித் தமக்குப் பெருஞ்செல்வம் வந்தெய்தியக்கால் பின்னைச் செய்வோம் என்று கருதியிருப்பார் அழிந்தாரும் ஆவர், நிலத்தின்கண் பழி படைத்தாரும் ஆவர் என்றவாறு.

---

‡ இயைந்த என்றும் பாடம்.

1 ஆனும்—ஆயினும் என்பதன் மரூஉ மொழி.

2 தலைப்படுவர்—முதன்மைப்படுவர் என்றுமாம்.

3 அழிந்தார் பழிகடலத்துள் என்பதற்கு உலகோரது பழியாகிய கடலுள் வீழ்ந்து அழிந்தவராவர் என்றுரைத்தலுமாம்.

4 உலவாமுன்—முடியாததன் முன்பு.

பழிகடலம்—நரகம் என்பாரும் உளர்.

விளக்க உரை:—எ-து. எத்துணையானும் இயைந்த அளவினால்—எவ்வளவாயினும் தமக்குக் கூடிய அளவினால்; சிற்றறம் செய்தார் தலைப்படுவர்—சில அறத்தை யாயினும் நாடோறும் செய்தார் தலைமையான கதிகளிலே பிறந்துளராவர்; மற்றைப் பெருஞ்செல்வம் எய்தியக்கால்—அப்பெற்றி யன்றித் தமக்குப் பெருஞ்செல்வம் எய்தினால்; பின் அறிதும் என்பார்—பின்னைச் செய்வாம் என்று கருதியிருப்பவர்; அழிந்தார் பழி கடலத்துள்—அழிந்தாருமாவர்; நிலத்தின்கண் பழி படைத்தாரும் ஆவர்.

சிற்றறம்—நாடோறும் இடப்பட்டவை; பழிக்கடலத்தை நிரயம் என்பாருமுளர்.

கருத்து:—உள்ளபோதே அறஞ்செய்யாதவர் உலகோரால் அழித்தற்குரியர்.

ஒப்புமைப் பகுதி:—

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்".

—குறள். 33.

"மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்மின்.

—நாலடி. 19.

"அன்றறிவாம் என்னா தறஞ் செய்க"

—குறள். 36.

"ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே

—இனியவை. நா. 7.

குறிப்பு:—

எத்துணையானும், இயன்ற அளவினால், சிற்றறம் என்

றெல்லாம் கூறியது அறத்தின் சிற்றளவை நன்கு புலப்படுத்தற்கு என்க.

(உ).

273. துய்த்துக் கழியான் துறவோர்க்கொன்(று) [ஈகலான்
வைத்துக் கழியும் மடவோனை-வைத்த
பொருளும் அவனை நகுமே உலகத்து
அருளும் அவனை நகும்.

தருமர்:—என்பது. துய்த்து [1]கழியான்—(தான் தேடிய பொருளை) உண்டு இறந்திலன்; [2]துறவோர்க்கு ஒன்று ஈகலான்—துறந்தோர்க்கு (ஒருபொருளைக்) கொடுப்பதுஞ் செய்திலன்; வைத்து கழியும் மடவோனை—பொருளைவைத்துப் பயன் கொள்ளாதே இறந்துபோம் அறிவில்லாதானை; வைத்த பொருளும்—(அவன்) தேடிவைத்த பொருளும்; அவனை [3]நகும்—(அவனைச் சிரிக்கும்); உலகத்து—உலகத்தில்; [4]அருளும்—அருளுடையோரும்; அவனை நகும்—அவனைச் சிரிப்பர் என்றவாறு.

அருளுடைய பெரியோருக்கு நட்புப் பகை இல்லை. அதனால் அவரும் நகுவர் என்று இப் பொருளுடையாரது அறிவின்மையை மிகவும் இழிவாகக் கூறியது.

பதுமனார்:—என்றது. நுகர்ந்து கழியாதும் அப்பொருளை விட வல்லார்க்கும் ஈயமாட்டாதும் வைத்து இறந்துபோம் அறிவில்லாதானை அவன் வைத்த பொருளும் அவனை இகழ்ந்து என்னாலுள்ள பயன் கொண்டிலன் என்று நகும்; இவ்வுலகில்

---

[1] கழியான்—காலங் கழியான் என்றுமாம்.

[2] துறவோர்—(ஆதரிப்போரால்) துறக்கப்பட்டவர் என்றுமாம்.

[3] நகும்—இகழ்ந்து சிரிக்கும்

[4] அருளும்—கருணைக்குணமும் எனலுமாம்.

தான்தேடிய பொருளான், அறஞ்செய்து கொண்டிலன் என்று அருளுடையோரும் நகுவர் என்றவாறு.

கழியான்—அழிப்பதுஞ் செய்யான்.

விளக்க உரை:—எ-து. துய்த்துக் கழியான்—தான் தேடின பொருளை இனிதாக வுண் டிறந்திலன்; துறவோர்க்கு ஒன்று ஈகலான்—துறந்தோர்க்குக் கொடுப்பதுஞ் செய்திலன்; வைத்துக் கழியும் மடவோனை—பொருள் வைத்துப் பயன் கொள்ளாமல் இறந்துபோம் அறியாதவனை; வைத்த பொருளும் அவனை நகுமே—தேடி வைத்த பொருளும் அவனைச் சிரிக்கும்; உலகத்து அருளும் அவனை நகும்—உலகத்து அருளுடையோரும் அவனைச் சிரிப்பர் எ-று.

நகுதல்—பயன் கொள்ளாமை நோக்கி.

கருத்து:—ஈகை இல்லாதார் பொருட்பயனையும் அருட்பயனையும் ஒருங்கிழப்பர்.

குறிப்பு :—

துறவோர்க் கீதல் இல்வாழ்வான் கடமை என்பதனை, "இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்—நல்லாற்றின் நின்ற துணை" என்ற திருக்குறளானும். "துறவோர்க் கெதிர் தலும் தொல்லோர் சிறப்பின்—விருந்தெதிர் கோடலும்" என்ற சிலப்பதிகாரத்தானும் அறிக.

பொருளும் அருளும் நகுதற்குக் காரணம் முறையே செல்வத்துப் பயன் ஈகை என்று உணராது தானும் நுகராது காலங் கழித்தமையும், அறஞ்செய்து நற்கதி பெறுதற்குக் காரணமான அருளின்றிப் பொருளை வீணாக்கினமையும் பற்றி என்க.

(௩).

274. கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்ரு இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்து
உருவுடைக் கன்னியரைப் போலப் †பருவத்துள்
ஏதிலான் துய்க்கப் படும்.

தருமர் :—என்பது. கொடுத்தலும்—ஒருவர்க்கு ஒன்றைக் கொடுத்தலும்; துய்த்தலும்—[தான் நுகர்தலும்]; தேற்ரு—தேர்ந்து செய்யாத; [1]இடுக்கு உடை உள்ளத்தான்—(அறத்தினது திறம் தெளிய இடமில்லாத) இருட்டிய நெஞ்சினை உடையவன்; பெற்ற பெருஞ் செல்வம்—பெற்ற பெருஞ் செல்வமானது; இல்லத்து உரு உடை கன்னியரை போல; குடியிற் பிறந்த வடிவழகினல் மிகுந்துள்ள கன்னியரைப் போல; பருவத்துள்—அநுபவிக்கத் தக்க காலத்து; ஏதிலான் துய்க்கப் படும்—அயலான் ஒருவனல் நுகரப்படும் என்றவாறு.

ஒருவர் கன்னிகையை வளர்த்து அயலார்க்குக் கொடுத்தபடியன்றி (தேடிய) அவனல் அப்பொருள் பயன்(படுத்தப்)படாதது அவன் அறிவின்மை யன்றி ஒன்றன்று; ஆதலால் தான் தேடிய பொருளை மற்ருெருவர் கொண்டுபோமுன்னே தான் உயிரோடிருக்கும் பொழுதே இருக்கும் பொருளைக் கொண்டு இம்மை மறுமையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதாம்.

பதுமனர் :—என்றது. பிறர்க்குக் கொடுத்தலும் தான் நுகர்தலும் மாட்டாத சிறிய உள்ளத்தான் பெற்ற பெருஞ் செல்வம் மனையின்கண் உருவுடைய கன்னியரைப் போல நுகருங் காலம் வந்தால் அயலான் நுகரப்படும் என்றவாறு.

இடுக்கு—உலோபம்.

---

†பருவத்தால் என்றும் பாடம்.

[1]இடுக்கு உடை உள்ளம்—பொருளைத் தக்க இடத்து விடாது பற்றுண்டாக்கும் உள்ளம்; அஃதாவது உலோபம்; இதனை பற்றுள்ளம் 'என்னும் இவறன்மை' என்ருர் திருவள்ளுவரும்.

விளக்க உரை :—எ-து. கொடுத்தலும் துய்த்தலும்—ஒருவர்க்கு ஒன்றைக் கொடுத்தலும் தான் உண்டலும்; தேற்று இடுக்குடை உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்—தெளியாத இருட்டிய நெஞ்சினையுடையவன் பெற்ற பெரிய செல்வமானது; இல்லத்து உருவுடைக் கன்னியரைப் போல; பருவத்தால் ஏதிலான் துய்க்கப்படும்—தன்னை அனுபவிக்கத் தக்கான் ஒருவன் வந்தெய்திய காலத்து அவனால் நுகரப்படும் எ-று.

கருத்து :—உலோபியின் செல்வம் அயலார் அனுபவத்திற்கே பயன்படும்.

மேற்கோள் பகுதி :—

யா. வி :—பலவிகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பாவிற்கு இச்செய்யுள் மேற்கோளாக வரும்.

—செய். சூ. 8.

ஒப்புமைப் பகுதி :—

"வழங்கலும் துய்த்தலும் தேற்றுதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம்".

—பழ. 151.

"படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடருந்தம் பற்றினல் வைத்திறப் பாரே
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்".

—பழ. 379.

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்".

—குறள். 1001.

"அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்".

—குறள். 1009.

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்".

—கொன்றை. 4.

"பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு".

—நன்னெறி. 4.

"வைத்தப் பொருளைத் தான்நுகரான் வழங்கான்
இருந்தும் செத்தானே
செத்த பின்னர் என்செய்வான் தீயார் கொள்வர்
ஈட்டுதலான்
மெத்தம் வருத்தமேயன்றி வேறொன் றில்லை யாதலினால்
பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசித்து வழங்கலேயாகும்"

—விரா. அரசி. 148.

குறிப்பு :—

தனது மனையிற் பிறந்த மணமாகாத மகளிர்—உலோபியின் செல்வத்திற்கு உவமையாம்; பெற்றவனுக்குத் துய்க்குந் தொடர்பு இல்லாமையின் அத்தொடர்பினையுடைய அயலாரால் துய்க்கப்படும் என்க. இதனை, "வலம்புரி யீன்ற முத்தம் மண் மிசை யவர்கட்கல்லால்—வலம்புரி பயத்தை எய்தாது" என்ற சிந்தாமணியானும், "சீர்கெழு வெண் முத்தம் அணிபவர்க் கல்லதை—நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும் தேருங்கால் நும் மகள் நுமக்குமாங் கனையளே" என்ற கலித் தொகையானும் அறிக.

275. எறிநீர்ப் பெருங்கடல் எய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற்(று) ஊறல்பார்த்(து) உண்பர்
மறுமை அறியாதான் ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

தருமர் :—என்பது. எறிநீர் பெருங்கடல்—கரையைப் [1]பொருந்திரையினையும் மிகுதியான நீரையும் உடைத்தான கடலை; எய்தி இருந்தும்—சேர்ந்திருந்தும்; அறுநீர் [2]சிறு கிணற்று ஊறல்—நீர் அற்ற கிணற்றில் சிறுக ஊறின நீரை; [3]பார்த்து உண்பர்—அஃது ஊறுமளவும் பார்த்திருந்து உண்பர்; (அதுபோல) மறுமை அறியாதான் ஆக்கத்தின்—மறுமைக்கு உறுதியான வற்றை அறியாதான் வாழ்வினும்; சான்றோர்—அமைந்தோருடைய; கழிநல்குரவே—மிக்க மிடியே; தலை—தலைமையுடைத்து என்றவாறு.

தனக்குப் பின்னுக்கு உதவும் வகை விசாரியாத உலோபத்தை யுடையவனுக்கு மிகுந்த செல்வம் ஆயினும் அதனை, அக்கடல்நீரை விரும்பாதவாறு போல விரும்பாத அறிவுடையோர் மிக மிடித்திருப்பினும் அவரிடத்திற் சென்று இசைந்த மாத்திரம் பெறுவர்; அதனல் அவர் மிடியே தலை என்றார். எனவே மிகவும் மிடித்திருந்தாராயினும் இயன்ற அளவு அன்போடு கொடுப்பர் என்பது கருத்து.

பதுமனர் :—என்றது. கரையை வந்து எரியும் நீரையுடைய பெருங்கடலை அடைந்திருந்தும், அற்ற நீரையுடைய சிறுகிணற்று ஊறலைப் பார்த்து இருந்து உண்பர்; அதுபோல மறுமை அறியாதார் செல்வத்தினும் அமைந்தாரது மிக்க நல்குரவே தலைமையுடைத்து என்றவாறு.

---

[1]பொரும்—மோதும்.

[2]சிறு கிணற்று ஊறல்—என்பதில் சிறுமை கிணற்றுக்கு ஆக்கினுமாம்; ஊறல்—ஊறும் நீருக்கு ஆயிற்று.

[3]பார்த்து—தேடிக் கண்டு எனினுமாம்.

அறுநீர்—சிறிய நீர். மறுமை அறியாதார்—மறுமைக்கு வேண்டும் அறஞ் செய்யாதார். ஆக்கம்—செல்வம். கழி நல்குரவு—மிக்கமிடி.

விளக்க உரை :—எ-து. எறிநீர்ப் பெருங்கடல் எய்தியிருந்தும்—எறிகிற நீருடைய பெருங்கடலைச் சார்ந்திருந்தும்; அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல் பார்த்து உண்பர்—நீரற்ற கிணற்றிலே சிறிதாக ஊறும் ஊறலைப் பார்த்து அதனையுண்பர்; (அதுபோல) மறுமை அறியாதான் ஆக்கத்தின்—மறுமைக்கு உறுதி அறியாதான் வாழ்வினும்; சான்றோர் கழி நல்குரவே தலை—அமைந்தோருடைய மிக்க மிடியே தலைமையுடைத்து என்றவாறு.

மிடித்தும் மறுமை எய்தலால் தலைமை யுடைத்து என்றார்.

கருத்து :—உலோபிகள் செல்வம் பெறினும் வறிஞரான சான்றோரளவுகூட உதவமாட்டார்.

ஒப்புமைப் பகுதி :—

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு".

—குறள். 408.

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின்
முதுநெய்தீ தாகலோ இல்".

—பழ. 89.

"மிகப்பே ரெவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளோம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெரும! யாம் உவந்துநனி பெரிதே".

—புறம். 197 : 15—18.

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திருக் கண்டாயே"

—தமிழ். 194.

"மெய்ந்நெறி உணர்கிலார் வெறுக்கை பெற்றது
துன்னிய கிளைக்கொரு துன்ப மாதல்போல்"

—கந்த.

"கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்".

—மூதுரை. 12.

"மல்கு திரைய கடற் கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்"

—நாலடி. 263.

(௫).

276. எனதெனது என்றிருக்கும் ஏழை பொருளை
எனதெனது என்றிருப்பன் யானும்—தனதாகில்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
யானும் அதனை அது.

தருமர் :—என்பது. [1]எனது எனது என்று இருக்கும்—என்பொருள் என்றுதேடி [2]ஏமஞ் செய்திருக்கும்; [3]ஏழை பொருளை—அறிவில்லாதான் பொருளை; யானும் எனது எனது என்று இருப்பன்—யானும் என் பொருள் என்று கருதி யிருப்பேன்; (என் எனில்) தனது ஆகில்—அப்பொருள் அவனது ஆகில்; அதனைவழங்கான்—அதனை ஒருவர்க்குக் கொடுத்தலும் செய்யான்; தானும் பயன் துவ்வான்—தானாகிலும் அதன் பயன்

---

[1]எனது என்ற அடுக்கு, பொருள் மீதுள்ள பற்றுதலை விளக்குவது.

[2]ஏமம்—பாதுகாப்பு.

[3]செல்வம் பெற்றும் ஈத்து உவக்கும் இன்பம் பெறுமையால் அவன் வறியனே ஆவன்; அதுபற்றி 'ஏழை' என்றார் எனினுமாம்.

நுகர்கிலான்; யானும் அதனை [1]அது—யானும் அப்பொருளை அப்படிச் செய்திலேன் அதனால் என்றவாறு.

தன் பொருளாயின் தான் வழங்கான்; என் பொருளாயின் யானும் வழங்கேன் ஆகலால் அவன் தன் பொருள் என்று எண்ணியிருப்பதும் யான் என் பொருள் என்று எண்ணியிருப்பதும் ஒக்கும் அன்றி வேறில்லை. யாவர்க்கும் பயன் படாத பொருளை யாவர் தமது என்று இருந்தால் என்ன என்று ஒருவர் உலோபத்தை இழிவாகக் கூறியது.

பதுமனார்:—என்றது. எனது எனது என்று கருதிப் பிறர்க்குக் கொடாதே இருக்கும் அறிவில்லாதான் பொருளை, யானும் எனது என்று கருதி இருப்பன்; அதற்கு என்னை காரணம் என்னில், பொருள் தன்னதாயினும் அவ்வேழை தானும் அப்பொருளைப் பிறர்க்கு வழங்கான்; அப்பொருளானாய நுகர்ச்சியையும் நுகரான்; யானும் அப்பொருளை வழங்கேன்; பயன் நுகரேன் ஆகலால் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. எனது எனது என்றிருக்கும் ஏழை பொருளை—எனது எனது என்றிருக்கும் அறியாதவன் தேடி வைத்த பொருளை; எனது எனது என்றிருப்பன் யானும்—யானும் என்னுடையது என்னுடையது என்று இருப்பேன்; அஃது ஏனெனில், தனது ஆயின் தானும் அதனை வழங்கான் பயன் துவ்வான்—தனதாகில் தான் ஒருவர்க்குக் கொடுத்தல்; அதன் பயன் நுகர்தல் இவையிரண்டினையுஞ் செய்கின்றிலன்; யானும் அதனை அது—யானும்அப்பொருளை அப்படியே செய்கின்றிலேன் (ஆதலால்) என்றவாறு.

கருத்து:—எளியவர்க்கு ஈயாத செல்வம் அதனைப் பெற்ற

---

[1]அது என்றது வழங்கல் நுகரல் இவ்விரண்டுஞ் செய்யாமையை இச் செய்யுள் பிறிதொருவன் கூற்றாக நகைச் சுவை தோன்றக் கூறப் பட்டுள்ளது.

வனுக்கும் உதவுவதில்லை.

(கூ).

277. வழங்காத செல்வரின் நல்கூர்ந்தார் உய்ந்தார்
இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்—உழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலும் உய்ந்தார்தம் கைநோவ
யாப்புய்ந்தார் உய்ந்த பல.

தருமர் :—என்பது. வழங்காத செல்வரின்—ஒருவர்க்கு ஒன்றைக் கொடாத செல்வரினும்; நல்கூர்ந்தார்—வறுமை யானவர்; உய்ந்தார்—பிழைத்தார்; (அஃது எப்படி யெனில்) இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்—(பொருளைப் புதைத்துவைத்த இடத்து எடுப்புண்டு போய்ப் பொருள்) இழந்தார் என்று பலருஞ் சொல்லுங் கொடிய சொல்லையுந் தப்பினர்; உழந்து அதனைக் காப்பு உய்ந்தார்—வருந்தி அப்பொருளைக் காத்திருக்க வேண்டும் எண்ணும் எண்ணத்தையும் தப்பினர்; [1]கல்லுதலும் உய்ந்தார்—பலகாலும் கல்லிப் பார்ப்பதும் வைப்பதுமாய் இருக் கின்ற மனத்துக்கத்தையுந் தப்பினர்; [2]தம் கை நோவ யாப்பு உய்ந்தார்—பொருளுடையார் இவர் என்று வலியோரால் (தம் கை நோகப்) பிணிக்கப்படும் பிணிப்பினையும் தப்பினர்; [3]உய்ந்த பல—(தேடிய பொருளை நன்னெறியின் உய்த்து வறுமை யானவர்) இப்படிப்பல முறையானும் பிழைத்தனர் என்றவாறு.

தேடிய பொருளை வழங்கின தன்மையால் அவரை நல் கூர்ந்தார் என்றும், அவர் இவ்வகைத்தாய துன்பங்களை எல்லாம் தப்பி இருமையும் பெற்றார் என்றும், வழங்காதார்

---

[1]கல்லுதல்—தோண்டுதல்.

[2]தம் கை நோவ யாப்பு உய்ந்தார்—என்பதற்கு தமது கை வலிக்கும்படி அப்பொருளை இறுகப் பற்றுதலினின்று தப்பினர் என்றுமாம்.

[3]உயர்ந்த பல—பின்னும் அன்னார் தப்பின பல எனினும் அமையும்; என்றது அருளிலன் அன்பிலன், கண்ணறையன், கஞ்சன் எனப் பலவாறு இகழப்படுதலினின்று தப்புதல் நோக்கி என்க.

இத்துன்பங்களும் பெற்று மறுமையையும் கொடுத்துக் கொண்டார் என்றும் அவர் அறிவின்மையை இழிவாக்கிக் கூறினர்.

பதுமனார்:—என்றது. பிறர்க்குக் கொடாத செல்வரின் நல்கூர்ந்தார் துன்பத்தைத் தப்பினர்; அஃது என்னையெனின், செல்வத்தைப் பிறர்க்குக் கொடாதே இழந்தார் என்று பிறரால் சொல்லப்படும் பழியைத் தப்பினர்; அதனைவருந்திக் காக்குங் காவலான் வருந் துன்பத்தைத் தப்பினர்; கல்வி அதனைப் புதைக்குந் துன்பத்தையுந் தப்பினர்; பொருளுடையார் என்று வலியரால் தம் கைநோகப் [1]பிணிக்கப்படும் பிணிப்பையுந் தப்பினர்; பின்னுந் தப்பின பல ஆகலான் என்றவாறு.

உய்ந்தார்—தப்பினர். கல்லுதல்—புதைக்கக் கல்லுதல்.

விளக்க உரை:—எ-து. வழங்காத செல்வரின் நல்கூர்ந்தார் உய்ந்தார்—ஒருவர்க்கு ஒன்றைக் கொடாத செல்வரிலும் நல்கூர்ந்தார் பிழைத்தார்; அஃதெப்படி என்னில், இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்—பொருளைப் புதைத்துவைத்து வைத்தவிடத்திலே எனப்புண்டு போக அதனை இழந்தார் என்னுஞ் சொல்லினையுந் தப்பினர்; உழந்து அதனைக்காப்பு உய்ந்தார்—வருந்தி அந்தப் பொருளைக் காக்கிற காவலையுந் தப்பினர்; கல்லுதலும் உய்ந்தார்—பலகாலுங் கல்லுவது பார்ப்பது வைப்பதாகிற நெஞ்சத் துக்கத்தினையுந் தப்பினர்; தம் கை நோவ யாப்பு உய்ந்தார்—தமது கை நோவ இவர் பொருளுடையவரென்று வலியோரால் பிணிக்கப்படுகிற பிணிப்பினையுந் தப்பினர்; உய்ந்தார் பல—இப்படிப் பல முறையாலும் பிழைத்தார்கள் அந்தச் செல்வம் இல்லாதவர்கள் என்றவாறு.

கருத்து:—ஈயாத செல்வர்க்கு வருந்துன்பங்கள் பலவாகும்.

[1] பிணிக்கப்படும்—கட்டப்படும்.

ஒப்புமைப் பகுதி :—

"வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்".

—நீதிநெறிவிளக்கம்.

(எ).

278. தனதாகத் தான்கொண்டான்; தாயத் தவரும்
தம்தாய போழ்தே கொடாஅர்;—தனதாக
முன்னே கொடுப்பின் அவர்கடியார், தான்கடி
பின்னை அவர்கொடுக்கும் போழ்து. [யான்

தருமர் :—என்பது. தனது ஆக தான் கொடான்—தான் தேடிய பொருள் தனதாகிய பொழுதே வழங்கிலன்; [1]தாயத்தவரும்—[தனக்குப்பின்] தன்னுடைய தாயத்தாரும்; தமது ஆய போழ்தே—பொருள் தமக்கு உரித்தான போதே; கொடார்—கொடுப்பவரல்லர்; முன்னே—தான் இறக்குமுன்னே [2]தனது ஆக—பொருள் [தனதாக இருக்கையில்] கொடுப்பின்—வழங்குவானுகில்; அவர் [3]கடியார்—அத்தாயத்தார் கொடுக்க வேண்டாம் என்னர்; பின்னை—தான் இறந்தபின்; அவர் கொடுக்கும் போழ்து—அவர் பொருளைச் செலவழிக்கும் பொழுது; தான் கடியான்—தான் வந்து அவரைக் கொடுக்க வேண்டாம் எனவும் வல்லவன் அல்லன் என்றவாறு.

அப்பொருளது தன்மை இவ்வாறு என்பது அறிந்துங் கொடாமைக்குக் காரணம் யாதோ என்று அறிவோர் இரக்க

---

[1] தாயத்தவர்—தந்தை வழியாக வந்த பொருள் பெறுதற்குரிய சுற்றத்தார்.

[2] தனதாகக் கொடுப்பின் என்பதற்கு—தனக்குப் புகழும் புண்ணியமும் உண்டாகும் வண்ணம் அறஞ்செய்தால் எனினுமாம்.

[3] கடியார்—விலக்கமாட்டார்.

முற்றுக் கூறியது.

'பதுமனர்:—என்றது. தான் தேடிய பொருள் தனதாகிய பொழுதே ஈயான்; தான் இறந்த பின்பு தன் பொருட்கு உரியராகிய தன் தாயத்தவரும் தமக்குரித்தாகிய பொழுதே ஈயார்; தமக்கு உரித்தாகிய பொருளைத் தாம் இறப்பதற்கு முன்னே கொடுப்பின் அத்தாயத்தாரும் விலக்கமாட்டார்; தான் இறந்த பின்பு தன் பொருட்கு உரிய தாயத்தார் தாம் கொடுப்பின் இறந்தான் வந்து விலக்கமாட்டான்; (ஆதலால் யாதோ இவர் கொடாமைக்குக் காரணம்) என்றவாறு.

விளக்க உரை:—எ-து. தனதாகத் தான் கொடான்—தான் தேடிய பொருள் தனக்குரித்தாகிய பொழுதே கொடுத்திலன்; தாயத்தவரும் தமதாய போழ்தே கொடாஅர்—தன்னுடைய தாயத்தவரும் அப்பொருள் தமக்குரித்தாய பொழுது கொடுக்கின்றிலர்; தனதாக முன்னே கொடுப்பின் அவர் கடியார்—தான் இறப்பதன் முன்னே கொடுக்கும் பொழுது அந்தத் தாயத்தார் வேண்டாம் என்னர்; தான் கடியான் பின்னை அவர் கொடுக்கும் போது—தான் இறந்த பின்பு அவர்கள் செலவழிக்கும் போது தான்வந்து அவரை வேண்டாம் என்னன் (ஆதலால் யாதோ) கொடாமைக்குக் காரணம் என்றவாறு.

கருத்து:—செல்வம் தனக்குரித்தாய் இருக்கும் போதே பிறர்க்கு ஈந்து பயன்பெற வேண்டும்.

(அ).

279. இரவலர் கன்றாக ஈவார்[1]ஆ வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவர் ஊன்ற வடி[1]ஆபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

---

[1] ஆக—ஒப்ப; உவமையுருபு.

தருமர் :—என்பது. இரவலர் கன்று [1] ஆக—இரவலர் கன்றாகவும்; ஈவார் ஆ ஆக—கொடுக்குமவர் பசுவின் தன்மை யாகவும்; [இருப்ப] [1] விரகின் சுரப்பது ஆம் வண்மை—இப்படி உபாயத்தாற் கொடுப்பதாய் இருக்கும் ஒருவர்க்கு வண்மை யாவது; விரகு இன்றி—அந்த உபாயத்தை ஒழிந்து; வல்லவர் ஊன்ற – கறக்க வல்லவர் [2] அடர்த்து வலியினால் [3] உந்தி வருத்தஞ் செய்து கறக்கும் பொழுது; [4] வடி ஆ போல்–(பாலைச்) சுரக்கும் பசுப்போல; [5] வாய்—தன் உறுப்பிடங்களிலே; வைத்துகொல்ல —கருவிகளைக்கொண்டு நோவுபண்ண; சுரப்பது ஆம் கீழ்—கொடுப்பது கீழ்—கொடுப்பது கீழ் மக்கள் இயல்பு ஆம் என்ற என்றவாறு.

அறிவில்லார் பொருளைத்தேடி வைத்துத் தம்மை அடர்க்கும் வலியோர்க்குக் கொடுத்து இம்மையில் இழிவும் பெற்று மறுமைக்கு உறுதியும் பெறார் என்பது தோன்ற அமைந்தோர் கொடுக்குந் தன்மையும் உடன்கூறி அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. இரவலரே கன்றாக, ஈவாரே ஆவாக, விரகினாற் பொழிவதாம் ஈகையாவது அவ்விரகின்றி, அடர்க்க வல்லவர் அடர்க்க வடிக்கும் ஆப்போல உறுப்பிடங் களிற் கருவிகளை வைத்து நோவு பண்ணச் சுரப்பது கீழாவது என்றவாறு.

இரவலர்—இரப்பவரும் புலவரும். விரகினால்—அறிவால். அடர்க்க வல்லவர்—வெகுண்டு வாங்குபவர் [சுரப்பதாம் கீழ் —சுரப்பர் கீழாயினர் என்றுமாம்].

---

[1] விரகு—உற்சாகம் என்றுமாம்.

[2] அடர்த்து—அழுத்தி.

[3] உந்தி—தெறித்து.

[4] வடி—ஊற்றும்; அஃதாவது பால் சுரக்கும்.

[5] வாய் வைத்துக் கொல்ல என்பதற்கு—பல சூழ்ச்சி செய்து வருத்த என்றும், வாய்த்த இடத்து இகழ்ச்சி செய்து வருத்த என்றும் உரைப்பினும் அமையும்.

விளக்க உரை :—எ-து. இரவலர் நன்றாக—இரக்கு மவர் நன்றாகவும்; ஈவார் ஆவாக—கொடுக்குமவர் பசுவின் தன்மையார் ஆகவும்; (இப்படியே) விரகிற் சுரப்பதாம் வண்மை —உபாயத்தாற் கொடுப்பதாயிருக்கும் ஒருவர்க்கு வண்மை யாவது; விரகு இன்றி—அந்த வுபாயத்தை யொழிந்து; வல்லவர் ஊன்ற வடி ஆ போல் வாய் வைத்துக் கொல்லச் சுரப்பதாம் கீழ்—பசுவைக் கறக்க வல்லவர்கள் கோலினைக் கொண்டு அடித் தடித்துக் கறக்கும் பொழுது சுரக்கும் பசுப்போல உறுப்பிடங் களிலே கருவிகளைக் கொண்டு நோவு பண்ணக் கொடுப்பது கீழ்மக்கள் இயல்பு என்றவாறு.

கருத்து :—ஒருவன் மகிழ்ச்சியின்றி வெறுப்புடன் கொடுப்பது கொடையன்று.

மேற்கோள் பகுதி :—

பரிவேல் :—'தன்னையே கொல்லுஞ் சினம்' என்பதன் விளக்கத்தில், "**கொல்லச் சுரப்பதாங் கீழ்**" என்புழிப் போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது" என்பர்.

—குறள். 305.

ஒப்புமைப் பகுதி :—

"சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்".

—குறள். 1078.

"இட்டக் கடைத்தரார் ஈண்டும் பசிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார்—நட்ட
சுரிகையாற் காணும் சலாக்கோலாற் காணும்
சொரிவதாம் ஆபோற் சுரந்து".

—அறநெறி. 183.

குறிப்பு :-

கன்றைக் கண்டதும் மகிழ்வுடன் பாலைப் பொழியும் பசுப் போல இரவலரைக்கண்டதும்மகிழ்வுடன் கொடுப்பதேகொடை; கன்று வாயால் முட்டவும் கறப்போர் அழுத்தவும் பாலைச் சுரப்பதுபோல இரவலர் இகழ்ந்து கூறி வருத்தவும் வல்லவர் வலுக்கட்டாயப் படுத்தவும் கொடுப்பது கொடையன்று என்க.

(கூ).

280. ஈட்டலுந் துன்பம்;மற்று ஈட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்;—காத்தல்
குறைபடில் துன்பம்; கெடில்துன்பம் துன்புக்கு
உறைபதி †மற்றைப் பொருள்..

தருமர் :—என்பது. ஈட்டலும் துன்பம்—பொருளைத் தேடுவதும் துன்பம்; ஈட்டிய [1]ஒள் பொருளை—தேடிய [சிறந்த] பொருளை; காத்தலும்—கெடாதபடி காப்பதும்; [ஆங்கே—அவ்வாறே] கடு துன்பம்—மிகவும் துன்பம்; [2]காத்தல் குறை படில் துன்பம்—காத்த அப்பொருளில் சிறிது குறையினும் துன்பம்; கெடில் துன்பம்—அப்பொருள் நேராகக் கெடுமாயின் அதினும் மிகுந்த துன்பம்; பொருள்—ஆதலால் அந்தப்பொருள்; துன்புக்கு உறைபதி—துன்பத்துக் கெல்லாம் இருப்பிடமா யிருக்கும் என்றவாறு.

தேடிய பொருள் பயன்படாது இருமையும் இழக்கும் உலோபம் உடையார்க்குப் பொருளால் வரும் துன்பங்களைக் கூறி வற்புறுத்தியது.

---

†மற்றை—அசை.

[1]ஒண் பொருள்—சிறந்த பொருள்; சிறப்பாவது இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியத்தையும் ஆக்கி அறத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாயிருப்பது.

[2]காத்தல் குறைபடின்—பாதுகாக்கும் முறையில் குறைவு நேரின் எனினுமாம்.

பதுமனார்:—என்றது. பொருளினை முன் தேடலும் துன்பம்; அவ்வீட்டிய ஒள்ளிய பொருளைக் காத்தலும் அது போல மிக்க துன்பமாம்; காத்த பொருளிற் சில குறைபடினுந் துன்பமாம்; [1]அடையக் கெடினும் மிக்க துன்பம்; ஆதலால் அப்பொருளே துன்பத்துக்கு உறை பதியாம் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. ஈட்டலுந் துன்பம்—பொருள் தேடுதலுந் துன்பம்; மற்று ஈட்டிய ஒண்பொருளை—மற்றுந் தான் தேடிய பொருளை; காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்—களவு போகாமற் காக்கிறதும் அதுபோல மிகவுந் துன்பம்; காத்தல் குறைபடின் துன்பம்—அப்படிக் காத்த பொருள் சிறிது குறையுமாயினும் துன்பம்; கெடில் துன்பம்—அது நேராகக் கெடினுந் துன்பமாம்; ஆதலால், துன்புக்கு உறைபதி மற்றைப் பொருள்—துன்பத்துக் கெல்லாம் இருப்பிடமா யிருக்கும் இந்தப் பொருள் என்றவாறு.

இப்படித் துன்பத்துக்குக் காரணமாகிய பொருளைப் புதைத்து வையாமற் கொடுக்க வேணும் என்பதாம்.

கருத்து:—பொருள் துன்பத்திற் கிடமாவதை அறிந்து அதனை இன்பத்திற்கு உரியதாகச் செய்தல் வேண்டும்.

மேற்கோள் பகுதி :-

பரிமேல்:—"ஈட்டிய ஒண் பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்" ஆகலின் 'பரிந்தோம்பி' என்றார்" என்பர்.

—குறள். 88.

ஒப்புமைப் பகுதி :-

"ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈதல் இயல்பிலா தான்".

—குறள். 1006.

---

[1] அடைய—ஒரு சேர.

"ஒண்பொருள்
செய்வம் என்பார்க்குந் துயிலில்லை; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்".

—நான்மணி 9.

"இன்னல் தரும்பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்னது
அழித்தலுந் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்".

—நீதிவெண்பா. 46.

குறிப்பு :-

பொருளை இரவலர்க்கு ஈந்தால் இத்துன்பம் தோன்றாது ஒழிந்து இன்பமுண்டாகும் ஆதலின் ஈதலே செயற்பாலது என்க.

(ம)

---

29. இன்மை.

தருமர் :— அஃதாவது உலகத்து மக்களுள்ளாரால் சங்கேதித்துக் கொண்டு நடக்கப்பட்ட பொருள் உளதாவதற்கு அறஞ்செய்து பிறவாமையால் வரும் பசிப்பிணியும் இன்பங்களை அனுபவிக்கப் பெறாத துன்பங்களும் பிறரால் இகழப்படும் இளிவரவும் உடைத்தாகிய வறுமை என்றவாறு.

பதுமனார் :— அஃதாவது உலகத்து மக்களா யுள்ளா(ரால்) [1]சங்கேதித்துக்கொண்டு வழங்கப்பட்ட பொருள் உளதாவதற்கு அறஞ்செய்து பிறவாமையால் வரும் பசியும், பிணியும், இன்பங்களை அனுபவிக்கப் பெறாத துன்பங்களும், பிறரால்

---

[1] சங்கேதித்த—குறியீடு செய்த.

இகழப்படும் [1]இளிவரவும் உடைத்தான இல்லாமையின் இயல்பு என்றவாறு.

குறிப்பு.—

'நல்குரவு':—

பரிமே:—அஃதாவது நுகரப்படுவன இல்லாமை.

மணக்:—நல்குரவாவது பொருளில்லாதார்க்கு உளதாகும் குற்றம் கூறுதல்.

—குறள். அதி 105.

281. அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட்டு உடைமை பலருள்ளும் பாடெய்தும்;
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்ஒன்று இல்லாதார்
செத்த பிணத்திற் கடை.

தருமர்:—என்பது. [2]அத்து இட்ட கூறை—துவர் ஊட்டிய புடவையினை; அரை சுற்றி வாழினும்—(அரையிலே) உடுத்துக்கொண்டு திரிந்தாராயினும்; பத்து எட்டு உடைமை—அவர் பத்தாதல் எட்டாதல் (பொருளை) உடைத்தாயிருப்பாராகில்; [3]பலருள்ளும்—யாவருள்ளும்; பாடு எய்துப்—அவர்க்கு அதுவும் ஒரு சிறப்பாக வைத்து எண்ணப்படுந் தன்மையாம்; ஒத்த குடி பிறந்தக்கண்ணும்—(ஏற்ற) உயர்ந்த குடியிலே பிறந்தாராயினும்; ஒன்று இல்லாதார்—வறுமையானவர்; [4]செத்த பிணத்தின் கடை

---

[1]இளிவரவு—இகழ்ச்சி.

[2]அத்து இட்ட கூறை—துவர் ஊட்டின புடவை; அஃதாவது சிவப்பு நிறம் ஏற்றிய காவி ஆடை; தையல் பொருந்திய ஆடை எனினுமாம்.

[3]பலர் உள்ளும் பாடு எய்தும் எனப் பிரித்து பலர் நன்குமதிக்கும் மதிப்பினை அடையும் என்றுங்கூறலாம்.

[4]பிணத்தைக்கூட அலங்காரம் முதலியன செய்து மதிப்பர்; அவ்வளவு கூடப் பொருளில்லாதானை உலகோர் மதியார் ஆதலின் 'செத்த பிணத்திற் கடை' என்றார்.

—உடம்பு (கட்டு)விட்டு நாறின பிணத்தினும் கடையாக எண்ணப்படுவர் என்றவாறு.

ஆதலால் இவ்வறுமை முன் கொடாததால் எய்தியது என்று அறிதற் பொருட்டுச் செத்த பிணத்திற் கடை என்றார்.

பதுமனார் :—என்றது. (கீழாயினருக்குத்) துவர் ஊட்டிய ஆடையை அரையின்கண் சுற்றி ஒழுகினராயினும் பத்தாக எட்டாகப் பொருளை உடையாராயின் அவ்வுடைமை யால் பலருள்ளும் வைத்து அவர்க்குப் பெருமை எய்தும்; ஒத்த ஒருகுடியுள்ளே பிறந்தாராயினும் பொருளில்லார் ஆயின் (தம்மோடு ஒக்கப் பிறந்தும் பொருளுடையாரோடு எண்ணப் படாது) செத்த பிணத்திற் கடையாவர் என்றவாறு.

அத்து இட்ட கூறை—செய்கிற அன்றே இட்ட சிவப் பொழிய செய்தவிட்ட பின்பு ஊட்டிய சிவப்பு என்றுமாம் [செத்த பிணம்—உயிர் போயின பிணம்; என்றது நடைப் பிணமும் உண்டாம் ஆதலின்] எடுப்பாரின்றிக் கிடந்து கழிந்து போன பிணம் என்றுமாம்.

விளக்க உரை :—எ-து. அத்திட்ட கூறை அரைச் சுற்றி வாழினும்—துவரூட்டிய புடவைகளை உடுத்திக்கொண்டு திரிந்தாராயினும்; பத்தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும்— அவர் பத்தாதல் எட்டாதல் உடைமை யுடையரா யிருப்பாராகில் எல்லாருள்ளும் வைத்து அவர்க்கு அதுவுமொரு பெருமையா யிருக்கும்; ஒத்தகுடிப் பிறந்தக் கண்ணும் ஒன்றில்லாதார்— ஒத்த குடியிலே பிறப்பினும் வறுமையார் ஒன்றுமற்று இருப்பா ராகில்; செத்த பிணத்திற் கடை—செத்த பிணத்தினுங் கடை யாவர் என்றவாறு.

செத்த பிணம் என்பது உடம்பு கட்டு விட்டு நாறின பிணம்.

கருத்து :—நறவுக் கோலமும் உயர்குடிப் பிறப்பும் உடைய

ராயினும் இல்லாமை சிறுமையைத் தரும்.

ஒப்புமைப் பகுதி :-

"பொருளில்லார்க்கு, இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

—குறள். 247.

"இல்லாரை யெல்லாரும் எள்ளுவர், செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு".

—குறள். 752.

"அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதா ரில்லை
பொருபடைக் கண்ணாய்! அதுவே திருவுடையார்
பண்டம் இருவர் கொளல்".

—பழ. 269.

"மட்டார்பூம் பிண்டி வளங்கெழு முக்குடைக்கீழ்
மாலேகண்டீர்
முட்டாத இன்பப் புதாத்திறக்குந் தாளுடைய மூர்த்திபாதம்
எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு இவ்வுலகில்
இன்பமேபோல்
ஒட்டாவே கண்டீர் வினையவனைத் தேருதார்க்கு உணர்ந்தீர்
அன்றே!".

—சீவக. 1549.

(க).

282. நீரினும் நுண்ணிது நெய்யென்பர்; நெய்யினும்
ஆரும் அறிவார் புகைநுட்பம்—தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

கருமம் :—என்பது. நீரினும்—நீரினுங் காட்டில்; நெய் நுண்ணிது என்பர்—நெய் மிகவும் நொய்து என்று சொல்லுவர்;

நெய்யினும்—அந்த நெய்யினும் புகை நுட்பம்—புகை [1]நொய்து என்பதனை; ஆரும் அறிவர்—யாவரும் அறிவார்கள்; தேரின்—ஆராய்ந்து பார்க்கும் போது; [2]இரப்பு இடும்பையாளன்—இரப்பு என்னும் துன்பமுடையான்; புகையும் புகற்கு அரிய [3]பூழை—புகையுஞ் செல்லற்கு அரிதாகிய பூழை வாசலில், நுழைந்து புகும்—நுழைந்து சென்று புகுவன் என்றவாறு.

இல்லாமையால் தன் மானம் எண்ணாது யாவரும் செல்லுதற்கரிய வாயில்களினுஞ் செல்வன் என்பது தோன்ற புகையும் புகுதப்படாத வாயில் என்று அவ்வாயிற்காவல் மிகுதியைக் கூறினார்.

வறுமை கண்டுழி யாவரும் அவனைக் குன்ற மதிப்பர்; அதனால் அவனை நீரினும் நெய்யினும் புகையினும் நொய்தானவன் என்று அவ்விரப்பினது இழிவு கூறியதாம்.

பதுமனார்:—என்றது. நீரினும் நெய் நுண்ணிது என்று சொல்லுவர்; அந்த நெய்யினும் புகை நுண்ணிது ஆதலை எல்லாரும் அறிவர்; ஆராய்ந்து பார்க்கில் புகையும் புகற்கரிய பூழையினை நுழைந்து, [4]கெடுதலால் வரும் இடும்பையுடையான் புகும் என்றவாறு.

நீரினும் நுண்ணிது நெய்—நெய்யையும் நீரையும் தனித் தனியே இலையிற் கட்டி வைத்தால் அந்நீர் இருக்க நெய் உருவிப் புறமாகப் படுதலால் நீரினும் நெய் நுண்ணியமை காணலாயிற்று

---

[1]நொய்து—நுண்மையானது.

[2]இரப்பு இடும்பையாளன்—எனப்பிரித்து வறுமைத் துன்பம் உடையான் எனப் பொருள் கொண்டார் பொழிப்புரைகாரர். இப்பொருளே சிறப்புடையது.

[3]பூழை—புழை என்பதன் விகாரம்; துளை என்று பொருள்.

[4]கெடுதல்—வறுமை நெய்யினும் புகைநுட்பமாதல் பலர் அறியாதது ஆனால் நீரினும் நெய் நுட்பமாதல் பலர் அறியாதது ஆதலின் 'என்பர்' என்று கூறினர்,

அந்நெய்யினும் ஆரும் அறிவர் புகை நுட்பம் என்பது எங்ஙனே என்னில் ஒரு குடம் நெய்யை வீட்டின்மேலே சொரிந்தாலும் உள் விழாமல் புறமாகப் படும். வீட்டின் உள்ளே எரித்த நெருப்பிற் புகைமேல் ஏகுதலால் அந்நெய்யினும் புகை நுட்பமாயிற்று. ஆதலால் அந்நீரினும், நெய்யினும் புகையினும் இடும்பை கூர்ந்திருப்பார் நுண்ணியர் என்க.

விளக்க உரை :—எ-து. நீரினும் நுண்ணிது நெய் என்பர்—நீரினுங் காட்டின் நெய் நுண்ணிது என்பர்; நெய்யினும் ஆரும் அறிவர் புகை நுட்பம்—நெய்யினுங் காட்டிற் புகை நுண்ணிது என்னுமது யாவரும் அறிவர்; தேரின்—ஆராயுங் காலத்து; இரப்பிடும்பையாளன் புகுமே—இரப் பென்னுந் துன்பமுடையவன் சென்று புகுவன்; புகையும் புகற்கரிய பூழை நுழைந்து—புகையும் புகுதற்கரிய வாசலில் நுழைந்து சென்று எ-று.

இரக்கின்றவன் மிகவும் நொய்யன் என்பதாம்.

கருத்து:—வறுமையால் யாசிப்பவன் மிகவும் மெல்லிய தன்மையுடையவனாவான்.

ஒப்புமைப் பகுதி :—

'நீரினும் நுண்ணிது நெய்' :—

"தண்ணென் நுண்[1] இழுது"

—மலைபடு. 442.

(௨).

283. கல்லோங்கு உயர்வரைமேற் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்—கொல்லைக்

---

[1] நெய்.

கலாஅல் கிளிகடியும் கானக நாட!
இலாஅஅர்க் கில்லை தமர்.

தருமர்:—என்பது. [1]கலால் கிளி கடியும்—கல்லாலே கிளிகளைக் கடியப்பட்ட; [2]கொல்லை—கொல்லைகள் சூழ்ந்த; கானகம் நாட—கானக நாடனே! கல்[3]ஓங்கு உயர் வரைமேல்—மிகுந்த கல்லுகளால் உயர்வு பெற்ற மலையின் மேலே; காந்தள் மலராக்கால்—[4]காந்தட்பூ மலராத காலத்து; செம்[5]பொறி வண்டு இனம்—சிவந்த பொறியினையுடைய வண்டினங்களானவை; செல்லா ஆம்—செல்லாவாகும்; (அதுபோல) இலார்க்கு தமர் இல்லை—வறுமையரானவர்க்கு உறவு இல்லை என்றவாறு.

(மலர் உண்டா)கிய காலத்தில் உயர்ந்த மலையிலேயாகினுஞ் செல்லும் வண்டு. அது இல்லாதபோது அவ்விடம் நோக்காது அதுபோல வறுமையான காலத்து அவரை உறவின் முறையாருங் கண்ணு(ற்று) நோக்கார் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கல் ஓங்கி உயர்ந்த மலைமேற் காந்தள் மலராதபொழுது செம்பொறி வண்டினங்கள் அம்மலை மேற் செல்லவாகும் அதுபோலத் (தினைக்)கொல்லையிற் கிளிகளைக் கல்லினாலே கடியுங் கானக நாடனே: பொருளில்லாதார்க்குத் தமர் இல்லை என்றவாறு.

விளக்க உரை:—என்பது. கல்லோங்குயர் வரைமேல் காந்தள் மலராக்கால்—ஓங்கிய கல்லையுடைய மலையின்மேற் காந்தட்பூ மலராத காலத்து; செல்லாவாம் செம்பொறி

---

[1]கலால்—கல்லால் என்பதன் விகாரம்;—கல் என்றது கவண் கல்லினை.
[2]கொல்லை—தினைப்புனம்.
[3]ஓங்கு உயர்—ஒரு பொருட் பன்மொழி.
[4]காந்தட்பூ—கைபோன்று மலரும் செந்நிறமுள்ள ஒருவகைப்பூ.
[5]பொறி—புள்ளி.

வண்டினம்—சிவந்த பொறிகளையுடைய வண்டினங்கள் செல்லா வாகும் (அதுபோல) கொல்லை கலா அல் கிளி கடியும் கானக நாட—கொல்லைப் புனத்திற் கிளியைக் கல்லினைக் கொண்டு ஓட்டும் காட்டையுடைய நாடனே!: இலாஅர்க்கு இல்லை தமர்—வறுமையவர்க்கு உறவின் முறையாரில்லை என்றவாறு.

கருத்து:—செல்வமில்லாதவரிடம் யாரும் நெருங்கமாட்டார்.

மேற்கோள் பகுதி:—

பேரா:—"முச்சீரடியின் முதற்சீர்க்குத் தளை கூறுரோ வெனின், ஆண்டுத் தளை வகையின்றியும் வருதலின், வரைந்து கூறுர் என்பது" என்றுகூறி அதற்கு, "கலாஅற் கிளிகடியும் கானக நாட இலாஅர்க் கில்லை தமர்" என்பதனை மேற்கோள் காட்டுவர்.

—தொல். செய். சூ. 74.

ஒப்புமைப் பகுதி:—

"ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்—நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பின் தண்குன்ற நன்னுட!
வாழாதார்க் கில்லை தமர்"

—நாலடி. 290.

"அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்".

—குறள். 1047.

"இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன் வாயிற் சொல்".

—நல்வழி. 34.

"பெண்டிரும் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப

வெண்டறை நின்று வெறுக்கை இலசாயின்
மண்டினர் போலர்தம் மக்களும் ஒட்டார்"

—வளை.

"கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை"

—பழமொழி.

284. உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம் [போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரும் இவ்வுலகத் தில்.

தருமர்:—என்பது. உண்டு ஆய போழ்தின்—செல்வம் உள்ள காலத்து; உடைந்த உழி—யாக்கை [1]உடைந்த இடத்து; காகம் போல்—காகம் வந்து திரண்டாற்போல; [2]தொண்டாய்—அடிமைத்தன்மையாக; இரவர் தொகுப—இரக்குமவர் வந்து சேர்வர், வண்டு ஆய் திரிதரும் காலத்து—வண்டு போல; (அவர் அந்தச் செல்வங்கெட்டுப் பல திக்குஞ்சென்று பெற்ற பெற்ற உணவுகளை உண்டு) திரியுங் காலத்து; [3]தீது இலிரோ என்பார்-இப்படி மிடியால் துன்பமுற்றீரோ என்று வினவுவார். ஒருவரும் இ உலகத்து இல்—யாரும் இவ்வுலகத்துள் இல்லை என்றவாறு.

உள்ள காலத்தில் காகந் திரண்டாற்போல (இரவலர் சேர்தற்கு) பயன்பட்டவர் மிடியானபோது தாம் கொடுத்தில ராயின் இப்படித். துன்பப்படுகிறீரோ என்று வினவவுஞ்

---

[1]உடைதல்—உடல் உயிர் நீக்கிப் பிணமாய்ச் சிதைதல்.

[2]தொண்டு—என்பது. ஆகவே தொண்டு ஆயிரவர் எனப் பிரித்து என்பதினுயிரவர் என்றும், அடிமையாய் ஆயிரவர் என்றும் பொருள் கூறிலும் ஆம்.

[3]தீது இலிரோ—துன்பமில்லாதிருக்கின்றீரோ என்பதே பொருள். இப்பொருள் ஆய்தற்குரியது.

செய்யார் ஆகலால் அவ்வறுமை மிகப்பொல்லாது. முற்பிறப்பிற் கொடாதார் இவ்வகைத்தாய துன்பமுறுவர் என்று அறிவுறுத்தியது.

பதுமனார்:—என்பது. பொருள் உண்டாய பொழுதின் கண், யாக்கை உடைந்த இடத்துக் காக்கை போலத் தொழும்பர் ஆயிரவர் வந்து திரள்வர். வண்டு போலப் பெற்றது நுகர்ந்து ஒருநிலையின்றியே திரியுங் காலத்து நீர் தீது இலிரோ என்று வினவுவார் உலகத்தில் ஒருவருமில்லை என்றவாறு.

வண்டு ஒரு பூவின்றிப் பலபூவுஞ்சென்று மதுவை நுகரும் அதுபோல இவரும் ஓரிடம் போலே பல இடமும் சென்று ஏற்குங்காலத்து ஐயகோ என்று நோவார் ஒருவருமில்லை.

விளக்க உரை:—என்பது. உண்டாய போழ்தின்—செல்வமுண்டான காலத்து; உடைந்துழிக் காகம் போல்—யாக்கை உடைந்தவிடத்துக் காகம் வந்து திரண்டாற்போல; தொண்டாய் இரவர் தொகுபவே—அடிமைத்தன்மையாக இரக்குமவர் வந்து சேர்வர்; வண்டாய்த் திரிதருங் காலத்து—பின்பு அந்தச் செல்வங்கெட்டு மிடித்து வண்டுபோலப் பல திக்குகளிலும் சென்று பெற்ற பெற்ற வுணவுகளை உண்டு திரியுங்காலத்து; தீதிலிரோ என்பார் ஒருவரும் இவ்வுலகத்து இல்—இப்படி மிடியாலே துன்பமுற்றீரோ என்று வினவுவார் இவ்வுலகத்து யாவரும் இல்லை என்றவாறு.

கருத்து:—செல்வமில்லாத காலத்து இரங்குவார் இன்மையால் வறுமை பொல்லாது.

ஒப்புமைப் பகுதி:—

“சாலாறு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் எற்றக்கால் ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்”.

—நாலடி, 113.

"முட்டின் றொருவர் முயன்ற பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்".

—பழமொழி. 134.

"கல்லானே யானாலுங் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்"

—நல்வழி. 34.

குறிப்பு:—

செல்வரைச் சூழுங் கீழ்மக்கட்குப் பிணத்தைச் சூழும் காக்கை உவமையாம்.

285. பிறந்த குலமாயும்; பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும்;—கறங்கருவி
கன்மேற் ‡கழூஉங் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு.

தருமர்:—என்பது. கறங்கு அருவி—ஓசையுடைத்தாய் விழுகின்ற அருவிகள்; கல்மேல்—கல்லின்மேல் (விழுந்து); கழூஉம்–(அதன் மாசுபோலக்) கழுவப்பட்ட சிறப்பினையுடைய; கணம் மலை நாட—திரண்ட மலை சூழ்ந்த நல்ல நாட்டையுடையவனே! இன்மை தழுவப்பட்டார்க்கு—வறுமை சூழப்பட்டவர்க்கு; பிறந்த [1]குலம் மாயும்—தாம் பிறந்த குலம் (கெடும்); சிறந்த தம் [2]கல்வியும் மாயும்–சிறப்புடைத்தாகிய தமது கல்வியும் கெடும் என்றவாறு.

---

‡கழுவும் என்பது விகாரப்பட்டு நின்றது. 'தழூஉம் என்றும் பாடம்.
[1]குலம் என்றது—குலப் பெருமையை.
[2]கல்வி என்றது கல்வித் திறமையினை.

இரப்பு என்னும் இளிவரவினாலே தமது குடி உயர்வும் ஆண்மையும் கல்வியும் கெட்டு யாவராலும் குன்றமதிக்கப்படுவர் ஆதலால் வறுமை பொல்லாது என்பதுகூறி முற்கொடாமையால் இத்தன்மையர் ஆவர் என அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. தாம் பிறந்த குலத்தில் நன்மையுங் கெடும்; பெரிய ஆண் தகைமையும் கெடும்; மிகுந்த தம் கல்வியறிவுங்கெடும். கறங்கருவி கன்மேற் கழுவுங்கனமலை நன்னாடனே! வறுமை [1]கூரப்பட்டார்க்கு என்றவாறு.

கறங்கருவி கன்மேல் தழூஉம் கணமலை நன்னாடனே—திரண்ட மலையின்மேல் நின்று கிடந்த கல்லின்மேல் ஆரவாரத்துடனே குதிக்கும் அருவியையுடைய குறிஞ்சி நிலத்தை யுடையவனே என்பாருமுளர்.

விளக்க உரை :—என்றது. பிறந்த குலம் மாயும்—பிறந்த குலம் கெடும்; பேராண்மை மாயும்—பெரிய ஆண் தகைமையும் கெடும்; சிறந்த தம் கல்வியும் மாயும்—சிறப்புடைத்தான (தமது); கல்வியுங் கெடும்; கறங்கருவி கல் மேற் கழூஉம் கனமலை நன்னாட!—ஓசையுடைத்தாய் விழுகிற அருவி கல்லின்மேல் விழுந்து அதன்மாசுபோகக் கழுவுந்திரண்ட மலை நாடனே!; இன்மை தழுவப்பட்டார்க்கு—வறுமை சூழப் பட்டவர்க்கு என்றவாறு.

கருத்து :—செல்வமில்லாதவர் குலம் ஆண்மை கல்வி இவற்றால் மேன்மை பெறினும் சிறப்படையார்.

ஒப்புமைப் பகுதி :—

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை"

—குறள். 1043.

---

[1] கூர—மிக.

"நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்"

—நான்மணிக்கடிகை. 82.

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்".

—நல்வழி. 26.

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி"

—மணிமேகலை. 11 : 76-80.

286. *இட்டாற்றுப் பட்டொன்(று) இரந்தவர்க்கு [ஆற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
நெட்டாற்றுச் சென்று ‡நிரைமனையிற் [கைந்நீட்டும்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

தருமர் :—என்பது. [1]இட்டு ஆறு பட்டு—வறுமையால் இட்டிதான வழியின்கட்பட்டு, ஒன்று இரந்தவர்க்கு—ஒன்றினை இரந்தவருக்கு; ஆற்றாது—கொடுக்கமாட்டாமல்; முயன்று முட்டு ஆறு பட்டு—முயற்சியினும் ஒன்று ஆகாமல் [2]முட்டு நெறிப்பட்டு; உள் ஊர் வாழ்தலின்—உள்ளூரில் வாழ்வதினும்; நெடு ஆறு சென்று—தூர தேசங்களிற் சென்று; நிரை மனையில்—

‡நிறைமனை என்றும் பாடம்.

[1] இட்டு ஆறு—சிறுமையான வழி.

[2] முட்டு—துன்பம்.

*இது முதல் 2 செய்யுட்களின் முறைவைப்பு சில பிரதிகளில் மாறு பட்டுள்ளது.

நிரை நிரையான வாயில்கள்தோறும் (புக்கு); கை நீட்டும்—பிச்சை ஏற்கின்ற; [1]கெடு ஆறு வாழ்க்கையே—கெடுவழியான வாழ்க்கையே; நன்று—நன்றும் என்றவாறு.

ஏற்பார்க்குக் கொடுக்கமாட்டாமல் வறுமையுற்ற காலத்து அவரை அறியாத தேசங்களிற் சென்று இரப்பதன்றி உள்ளூரி லிருந்து இழிவுபடுதல் நன்றன்று என்று அவர் முற்கோடாமை இழிவு கூறியது.

பதுமனார் :—என்றது. [2]இட்டிதாகிய நெறியின்கட்பட்டு இரந்தவர்க்கு ஒன்றை ஆற்றமாட்டாது [3]முட்டு நெறிப்பட்டு முயன்று உள்ளூரிலிருந்து வாழ்தலின் நெடியவழிபோய் [4]நிறைவு பட்ட மனையின்கட் சென்று கைநீட்டும் கெட்டாற்று வாழ்க்கையே நன்று என்றவாறு.

இட்டாற்றுப்பட்டு—ஐசுவரிய வருவாய் இட்டிதாய்; கெட்டாற்று வாழ்க்கை—வேடம் பூண்டு பல இடங்தோறும் ஏற்கை.

விளக்க உரை :—எ-து. இட்டாற்றுப்பட்டு ஒன்று இரந்தவர்க்கு ஆற்றாது—இட்டிய வழிப்பட்டு ஒன்றினை இரந்தவர்க்குங் கொடுக்கையில்லாமல்; முட்டாற்றுப்பட்டு முயன்று உள்ளூர் வாழ்தலின்—முட்டு நெறிப்பட்டு முயற்சியினும் ஒன்றும் ஆகாமல் உள்ளூரில் வாழ்வதினும்; கெட்டாற்றுச் சென்று—தூரதேசங்களிலே போய்; நிரைமனையிற் கை நீட்டும்—நிரை நிரையான வீடுகள் தோறும் புகுந்து பிச்சைக்குக் கை ஏற்கின்ற; கெட்டாற்று வாழ்க்கையே நன்று—அக்கெடு வழியான வாழ்க்கையே நன்று என்றவாறு.

---

[1]கெட்ட ஆறு என்பது கெட்டாறு என்றாயிற்று.
[2]இட்டிதாகிய நெறி—இரப்பவர்க்குரியது.
[3]முட்டு நெறி—இரக்கப்படுவர்க்குரியது.
[4]நிறைவு—பொருள் நிறைவு.

கருத்து:— இரந்தோர்க்கு உதவ இயலாத வறுமை நிலையினும் இரந்துண்டு வாழும் நிலை நல்லது.

ஒப்புமைப் பகுதி:—

"உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்கு
உள்ளூர் இருந்தொன் றுற்றாதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று".

—நாலடி. 288.

(சு).

287. கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண்(டு) அட்டு—குடைகலனா
உப்பிலி வெந்தைதின்(று) உள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

பதவுரை:— என்பது. [1]துப்புரவு—தாம் முன்பு செல்வத்துக்குப் பண்ணின தவம்; சென்று உலந்தக் கால்—மாண்ட காலத்து, [2]கடகம் செறிந்த தம் கைகளால்—பொற்கடகஞ் சேர்த்திருந்த தமது கைகளினால்; வாங்கி—தூற்றினை வளைத்து; அடகு பறித்து கொண்டு—இலைக் கறியைப் பறித்துக்கொண்டு; அட்டு—வேக வைத்து; [3]குடை கலன் ஆ—குழிந்த ஒடு கலமாக (அதில் இட்டு) உப்பு இலி வெந்தை—உப்பில்லாது வெந்த அந்த இலைக்கறியை; தின்று—; உள் அற்று வாழ்ப—மனஞ் சுருங்கி வாழ்வர் என்றவாறு.

---

[1] துப்புரவு—நுகர்ச்சிக்கு ஏற்ற சிறந்த பொருள்.

[2] கடகம்—கைவளை; கடகம் செறிந்த தம் கைகளால் வாங்கி என்றதனால் அன்னார் முன் செல்வராயினமை விளக்கும்.

[3] குடைகலன் ஆ—குடையப்பட்ட பனங்காய், தேங்காய் ஓடு இவற்றை உண்ணும் கலமாக.

முற்பிறப்பிற் சிறிதுநாள் கொடுத்ததன்றித் தாம் உள்ளளவும் ஒருமையுற்று அறஞ் செய்யாதார் இக்காலத்து இப்படி வறுவிய ராவர் என்பதாம்.

பதுமனார் :—என்றது. பொற்கடகஞ் செறிந்த தம் கைகளாலே அடகு வாங்கிப் பறித்துக் கொண்டு அட்டுப் (பனை நுங்காற்) செய்யப்பட்ட குடையே கலனாக உப்பின்றியே வெந்ததனைத் தின்று மனங் குறைந்து வாழ்வர்; செல்வஞ் சென்று கழிந்த இடத்து என்றவாறு.

(மனங்குறைந்து) வாழ்வது—ஐம்புலன்களும் கெட்டு ஞான மற்று வாழ்வது துப்புரவு சென்று உலந்தக்கால்—ஐசுவரியத்தைக் கொடுக்கும் நல்வினை (முடிந்த விடத்து) என்றும், சமத்துக் கெட்டவிடத்து என்றும் (ஆம்) சமத்து—உற்சாகமும் வீரியமும் உலத்தல்—முடிதல்.

விளக்க உரை :—எ-து. கடகஞ் செறிந்த தம் கைகளால் வாங்கி அடகு பறித்துக்கொண்டு அட்டு—கடகஞ் செறிக்கப்பட்ட கையினால் இலைக்கறி பறிக்குந் தூற்றினை வளைத்து அந்த இலைக்கறியைப் பறித்துக் கொண்டு வந்து வேக வைத்து; குடை கலனா—பனை நுங்கும் பெய்கல மாகக்கொண்டு; உப்பிலி வெந்தை தின்று—உப்பில்லாமல் வெந்த இலைக்கறியைத் தின்று; உள்ளற்று வாழ்பவே—மனங்குறைந்து வாழ்வர்; துப்புரவு சென்று உலந்தக்கால்—முன்பு தாம் செல்வத்துக்கு மாண்டகாலத்து எ-று.

கருத்து :—செல்வநிலை மாறிய வறுமை வாழ்வுமிக்க துன்பந் தரும்.

ஒப்புமைப் பகுதி :—

"பாலுடை யமிர்தம் பைப்பொற் கலத்திடைப் பாவை யன்ன
நூலடு நுசுப்பி னல்லார் ஏந்தவும் நேர்ந்து நோக்காச்

சேலடு கண்ணி காந்தள் திருமணித் துடுப்பு முன்கை
வாலட கருளிச் செய்ய வளத்துறை தெய்வ மானுள்".

—சீவக சிந்தாமணி.

(எ).

288. உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்கு
உள்ளூர் இருந்தும்மொன்று ஆற்றாதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று.

தருமர் :—என்பது. [1]உள்கூர் பசியால்—[வயிற்றின்] உள்ளே மிகுந்த பசியினாலே (துன்பமெய்தி) உழை—தம்மாட்டு; நசை இ சென்றார்கட்கு—[2]நச்சி வந்தார்க்கு; உள் ஊர் இருந்தும்—உள்ளூரிலே இருந்தும்; ஒன்று ஆற்றாதான்—ஒன்றினைக் கொடுக்க இடமில்லாதவன்; உள் ஊர் இருந்து—உள்ளூரிலே இருந்து; [3]கொன்னே [4]உயிர்கழியாது—ஒருபயனும் இன்றியே தன் வாழ்நாளைக் கழியாமல்; தான் போய்—தான் தூரதேசங் களிற் சென்று; [5]விருந்தினன் ஆதல்—புதியவனாகத் திரிந்து உயிர் வாழ்தல்; நன்று—நன்றாம் என்றவாறு.

தன் வயிறு வளர்க்கும் மாத்திரம் அன்றி, தன்னை நச்சி வந்தவர்க்குப் பகிர்விடம் இல்லாமல் உள்ளூரிலே உயிர் வாழ்வ தினும் தன்னையறியாத தேசத்திற் சென்று இரப்பது நன்று என அவர் கொடாமையின் இழிவு கூறியதாம்.

---

[1]உள்—என்றது வயிற்றின் உள்ளிடத்தை; மனத்தின்கண் என்ற பொருள் சிறவாது.

[2]நச்சி—விரும்பி.

[3]விருந்தினன் ஆவதால் விருந்து புரந்தவலுக்குப் புண்ணியம் விளைத் தலின் உயிர்வாழ்வு பயன்படும் என்றற்கு, 'கொன்னே கழியாது' என்றார்.

[4]உயிர் என்றது உயிர்வாழ்வினை.

[5]விருந்தினன் ஆதல் நன்று—இரத்தல் நன்று என்பதை இங்ஙனம் கூறியது இகழ்ச்சி.

பதுமனார்:—என்றது. மனத்தின்கண் மிக்க பசி நோயால் தன் மாட்டு ஒன்றினை நச்சிச் சென்றார்கட்குத் தன் ஊரிலிருந்து ஒன்றினை ஈயமாட்டாதான் தன்னூரிலிருந்து வாழ்நாளைப் பயனின்றியே போக்காது தான் போய்ப் பலவூரினும் விருந்தாய்ச் சேறல் நன்று என்றவாறு.

விளக்க உரை:—எ-து. உள் கூர் பசியால்—உள்ளுமிக்க பசியாலே; உழை நசைஇச் சென்றார்கட்கு—தம்மிடத்தின் நச்சி வந்தவர்க்கு; உள்ளூர் இருந்தும் ஒன்று ஆற்றாதான்—உள்ளூரிலே இருந்தும் ஒன்றினை உதவ மாட்டாதவன்; உள்ளூர் இருந்து உயிர் கொன்னே கழியாது—உள்ளூரிலே இருந்து ஒரு பயனுமின்றித் தன் வாணாளைக் கழியாமல்; தான் போய் விருந்தினனாதலே நன்று—தான் தூர தேசங்களிலே போய் ஊர்தோறும் புதுமையாகத் திரிந்து உயிர்வாழ்தலே நன்று என்றவாறு.

கருத்து:—பசித்தவர்க்கு உதவமாட்டாத வறியவன் வாழ்வு பயனற்றது.

ஒப்புமைப் பகுதி:-

"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்".

—குறள். 229.

(அ).

289. நீர்மையே யன்றி நிரம்ப எழுந்ததங்
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய்! †இரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார்.

தருமர்:—என்பது. கூர்மையின் முல்லை அலைக்கும்

---

†நிரப்பென்னும் என்றும் பாடம்.

எயிற்ருய்—கூரிய முல்லை [1]முகையை வருத்தும் [2]எயிற்றினை யுடையவளே!; இரப்பு என்னும் அல்லல்—இரப்பென்னுந் துன்பம்; அடையப்பட்டார்-சேரப்பட்டவர்; நீர்மையே அன்றி—(தமது) நய குணமுடைமையே அல்லதும்; நிரம்ப எழுந்த தம் கூர்மையும்—[3] அமைதியுடைய மிக்க அறிவும்; [எல்லாம்—மற்றுள்ளன யாவும்]; ஒருங்கு இழப்பர்—ஒரு சேர இழந்து விடுவர் என்றவாறு.

வறுமையுற்ற காலத்து நாம் இத்தன்மையவாய குணமுடையோம் அல்லோ என்பது நோக்காமல், விடாது இரத்தலாலே அறிவும் இழந்தார் என்று அவர் முற்காலத்துக் கொடாமையை இகழ்ந் துரைத்தவாறு.

பதுமனுர்:—என்றது. தம்மாட்டுள்ள நற்குணங்களை யன்றி, நிறைய உளவாய கூரிய அறிவும் (மற்று)முள்ளன வெல்லாம் கூட இழப்பர்; கூர்மையினுலே முல்லை அலைக்கும் எயிற்ருய்! கெடுதல் என்னும் இடும்பையால் அடையப்பட்டார் என்றவாறு.

முல்லை அலைக்கும் எயிற்ருய்—எயிற்றின் கூர்மைக்கு முல்லை ஒவ்வாமல் ஓடுதல்.

விளக்க உரை:—எ-து. நீர்மையே அன்றி—தம்முடைய நயமுடைமையே யல்லது; நிரம்ப எழுந்த தம் கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்—அமைதியுடைய மிக்க அறிவும் சேர இழந்து விடுவர்; கூர்மையின் முல்லை அலைக்கும் எயிற்ருய்!—கூரிய முல்லை முகையை வருத்தும் எயிற்றினையுடையாய்!;

---

[1] முகை—அரும்பு.

[2] எயிற்றினை—பற்களை.

[3] அறிவு நிரம்பி மலர்ந்தபோது அமைதி பிறத்தலின் இங்ஙனம் கூறினர்.

நிரப் பென்னும் அல்லல் அடையப் பட்டார்—நிரப்பென்னும் துன்பஞ் சேரப்பட்டவர் என்றவாறு.

நிரப்பென்றது நாள் தோறும் தன்னுடைய நடைக்கு வேண்டுவன இரந்து கொண்டு வந்து நிரப்புதல்.

கருத்து:—செல்வ மில்லாதவரது குணமும் அறிவும் விளக்கம் பெற மாட்டா.

(கூ).

290. ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்—
நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட!
வாழாதார்க்கு இல்லை தமர்.

தருமர்:—என்பது. [1]நீர்த்து அருவி—நீர்மையினையுடைய அருவிகள்; தாழா—ஒரு காலத்திலும் மாறாமல்; உயர்சிறப்பின்—விழுஞ் சிறப்பினையுடைய தண் குன்றம் நல் நாட!—குளிர்ச்சி (பொருந்திய நல்ல) மலை நாடனே!; [2]ஆர்த்த பொறிய—[3]பொறிகளை ஆர்ந்த; அணிகிளர் வண்டு இனம்—அழகு மிக்க வண்டினங்கள்; [4]பூத்து ஒழி கொம்பின் மேல்—பூத்து உதிர்ந்த கொம்பின்மேல்; செல்லா ஆம்—பின்பு செல்லாவாகும் (அது போல) வாழாதார்க்கு தமர் இல்லை—(செல்வராய்) வாழாதாருக்கு உறவின் முறையார் இல்லை என்றவாறு.

---

[1]நீர்த்து—நீரையுடைய என்றுமாம்.

[2]ஆர்த்த—ஒலியுடைய எனினும் ஆம்.

[3]பொறி—புள்ளி.

பூத்தொழி கொம்பு என்றது முன்பூத்துப் பின் பூத்தல் நீங்கின மாக் கொம்பு. இது முன் செல்வராயிருந்து உதவிப் பின் செல்வம் அற்றுள்ள வறியவருக்கு உவமை.

பூவுள்ள காலத்து வண்டு சேருவதுபோல ஒருவனுக்கு வாழ்வுள்ள காலத்து யாவரும் உறவு ஆவர். வறுமியரான காலத்து உறவின் முறையாரும் தமக்கு உறவு என நோக்கார். இவ்வகைத்தாய இழிவு முற்காலத்துக் கொடாமையால் வருவது என அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. யாப்புற்ற பொறிகளையுடைய அழகு மிக்க வண்டினம் பூத்தொழி கொம்பின்மேற் செல்லா வாகும்; (அதுபோல) நீர்த்தருவி தாழா உயர்சிறப்பின் தண் குன்ற நன்னாடனே! வாழாதார்க்குத் தமர் இல்லை என்றவாறு.

ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்—நிறைந்த பொறியை அணியாக வுடைய கிளர்ந்த வண்டினம். நீர்த்து அருவி தாழா உயர் சிறப்பின் தண்குன்ற நன்னாட—மிகவும் அருவி விடாமல் ஒழுகுங் குளிர்ச்சி பொருந்திய குறிஞ்சி நிலத் தோழனே என்பாரும் உளர்.

விளக்க உரை :—எ-து. ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்—பொறிகளை ஆர்த்துக் கொண்டிருக்கிற அழகுமிக்க வண்டினங்கள்; பூத்தொழி கொம்பின் மேற் செல்லாவாம்—பூத்து உதிர்ந்துபோன கொம்பின்மேற் பின்பு செல்லா வாகும் அதுபோல, நீர்த்து அருவி தாழா உயர்சிறப்பின் தண் குன்ற நன்னாட!—நீர்மையினையுடைய அருவிகள் ஒருகாலத்தும் மாறாமல் விழுகின்ற சிறப்பினையுடைய நல்ல மலைநாடனே!; வாழாதார்க்கு இல்லை தமர்—வாழாதார்க்கு உறவின் முறையாரில்லை எ-று.

கருத்து :—செல்வமில்லாதவரை உறவினர் தேடிச் செல்ல மாட்டார்.

ஒப்புமைப் பகுதி :—

"கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்—கொல்லைக்

கலர்அற் கிளிகடியும் கான்க நாட!
இலாஅஅற் கில்லைத் தமர்".

—நாலடி. 283.
(ய).

---

30. மானம்.

தருமர்:—அஃதாவது எவ்விடத்தும் மானஞ் சிதையாது ஒழுகுதலும், அந்த மானத்துக்கு அழிவு வருங்காலத்துத் தன்னுயிரைத் துறந்தாயினும் மானத்தைப் பரிகரிக்கக் கடவன் என்பதுமாம்.

பதுமனார்:—அஃதாவது எவ்விடத்தும் மானம் சிதையாமற் காத்தொழுகுதலும், யாதொரு வகையினாலும் காக்க முடியாது சிதையும்படி வரில் தம் பிராணனை விட்டு மானத்தைக் காப்பதூஉம் ஆகிய இயல்பு என்றவாறு.

குறிப்பு:—

'மானம்':—

பரிமே:—இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் தொடங்கி, முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம். இஃது அக்குடிப் பிறப்பினை நிறுத்துதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

மணக்:—மானமாவது எக்காலத்தினும் தமது நிலைமையில் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது. இது மூன்று வகைப்படும்; தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார்மாட்டுச் செய்யாமையும், இளிவரவு பொறாமையும் என.

—குறள். அதி. 97.

291\. திருமதுகை யாகத் [1]திறனல்லார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்தும்—எரிமண்டிக்
கானந் [2]தலைக்கொண்ட தீப்போற் கனலுமே
மானம் உடையார் மனம்.

தருமர் :—என்பது. திறன் அல்லார்—திறப் பாடாகிய அறிவில்லாதார்; திரு மதுகை ஆக—தமது செல்வ வலியினலே; செய்யும்—செய்கின்ற; பெருமிதம் கண்டக் கடைத்தும்—[3]பெருமிதத்தைக் கண்டவிடத்தும்; மானம் உடையார் மனம்—மானத்தை யுடையவரது மனம்; எரி மண்டி—(எரிதல் மிகுந்து) கானம் தலைக்கொண்ட தீ போல்—காட்டிலே பற்றிப் படர்ந்து எரியும் தீப் போல; கனலும்—வேகா நிற்கும் என்றவாறு.

பெருமிதம்—மிகுதி. அயலார் செய்யும் மிகுதிக்கு மனம் பொறுதவர் மானபங்கம் வரில் உயிர் தரியார் என்பதாம்.

பதுமனர் :—என்றது. செல்வமே வலியாகத் [4]திறப் பாடில்லாதார் செய்யும் மிகுதியைக்கண்ட பொழுதே; எரிதலிலே மன்டிக் கானத்தை எல்லாம் கைக்கொண்டு சுடுகின்ற தீப் போல் கொதியா நிற்கும் மானம் உடையாரது மனம் என்றவாறு.

திரு மதுகை ஆகத் திறன் இல்லார்-இடையிட்டு இலக்குமி பொருந்துகையில், அடிப்பட்ட ஐசுவரியம் என்று இத் திறப்பா டில்லாதார். கானம் தலைக் கொண்ட தீ—வெட்டி அடைந்த காட்டைச் சூழ்ந்த தீ.

விளக்க உரை :—எ-து. திரு மதுகையாகத் திறனிலார்

---

[1] திறனிலார் என்றும் பாடம்.
[2] தலைப்பட்ட என்றும் பாடம்.
[3] பெருமிதம்—வரம்பு கடந்த செய்கை.
[4] திறப்பாடில்லாதார்—நற்குணமில்லாதவர்.

செய்யும்—தமது செல்வ வலியினைக் கொண்டு திறப்பாடில்லர் தவர் செய்கின்ற; பெருமிதங் கண்டக் கடைத்தும்—மிகுதியைக் கண்டவிடத்தும்; எரிமண்டிக் கானந் தலைக் கொண்ட தீப்போற் கனலுமே—எரிந்து மண்டிக் காடு தீப்பட்டாற் போல வேகா நிற்கும்; மானம் உடையார் மனம்—மான முடையாரது மனம் என்றவாறு.

தமக்கொரு மானபங்கம் வரின், தம்முடைய பிராணனை விட்டு மானத்தைப் பரிகரிப்பர் என்பதாம்.

கருத்து:—மானமுள்ளவர், கயவரது வரம்பு மீறிய செயலைக் கண்டால் மனங்கொதிப்பர்.

மேற்கோள் பகுதி :—

மயிலை :—உடம்பொடு கூடிய உயிர்க்குணத்துக்கு 'மான முடையார் மனம்" என்பதனை எடுத்துக்காட்டுவர்.

—நன். சூ 451.

(க).

292. என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று
தம்பாடு உரைப்பரோ தம்உடையார்—தம்பாடு
[1]உரையாமல் முன்னுணரும் ஒண்மை உடை-
உரையாரோ தாமுற்ற நோய். [யார்க்கு

பதவுரை:—என்பது. [2]தம் உடையார்—தமது நெஞ்சினைத் தமது வசமாகப் பெற்றவர்; என்பு ஆய் உகினும்—(பசியாகிய நோயால்) எலும்பு தோன்ற உடம்பு கெடினும்; இயல்பு இலார் பின்சென்று; தம்பாடு உரைப்பரோ—தமது வறுமையினைத்

---

[1]உரையாமை என்றும் பாடம்.

[2]தம் உடையார்—தம் மானத்தைக் காக்கும் குணமுடையார் என்றுமாம்.

தோன்றச் சொல்லுவரோ (சொல்லார்); தம் பாடு—தமது வறுமையை; உரையாமல் முன் உணரும்—தாம் சொல்லுவதன் முன்னமே அறிந்து அந்த வறுமையைத் தீர்க்கவல்ல; ஒண்மை உடையார்க்கு—ஒள்ளிய அறிவினை யுடையார்க்கும்; தாம் உற்ற நோய் உரையார்—(தாம் அடைந்த துன்பத்தைச்) சொல்லாதவர் என்றவாறு.

உரையார்—தமது வறுமையைத் தாம் சொல்லுமுன்பே அறிந்து தீர்க்க வல்லவர்க்குஞ் சொல்லார்; ஓ என்பது மான முடையவர் தன்மை இதுவாக இருந்தது என்று அறிஞர் அதிசயித்து இரங்கியது.

பதுமனர் :—என்றது. பசிநோயால் தம் உடம்பு [1]புலர்ந்து எலும்பாய் அழியினும் குணமில்லாதார் பின் சென்று தாம் பட்ட இடர்ப்பாட்டினை அறியச் சொல்லுவரோ? தம் மானத்தைத் தமக்கென வுடையார்; தம் இடர்ப்பாட்டைத் தாம் உரைப்பதற்கு முன்னே உணர்ந்து தம் வறுமையைக் கெடுக்கும் அறிவினை யுடையார்க்கும் தாம் உற்ற நோயைச் சொல்லார் என்றவாறு.

தம் பாடு—தம்முடைய [2]சளப்பாடு; ஆதலால் மானம் உடையார் ஓரிடத்துஞ் சொல்லார் என்பதாம். ஓ என்றது மானத்தால் வந்த நோவு.

விளக்க உரை :—எ-து. என்பாய் உகினும்—பசி நோயால் எலும்பு தோன்றி ஊன் கெடினும்; இயல்பிலார் பின் சென்று—தகுதி யில்லாதார் பின் சென்று; தம்பாடு உரைப்பரோ தம் உடையார்—தமது வறுமை தோன்றச் சொல்லுவரோ தமது நெஞ்சே தமக்குரித்தாகப் பெற்றவர்; தம்பாடு உரையாமை முன் உணரும் ஒண்மை உடையார்க்கு—தம்முடைய வறுமை

[1] புலர்ந்து—வாடி.
[2] சளப்பாடு—துன்பம்.

யினைச் சொல்லுவதன் முன்னமே அறிந்து அந்த வறுமையைத் தீர்க்கவல்ல ஒள்ளிய இயல்பை யுடையார்க்கு; உரையாரோ தாம் உற்ற நோய்—தாமுற்ற நோயைச் சொல்லாத மான முடையவர் என்றவாறு.

ஆதலால் இருவர்க்குஞ் சொல்லார் என்பதாம். ஓ—அசை.

கருத்து:—மானிகள் மிகத் தாழ்ந்த நிலையினும் தமது துன்பங் களைப் பண்பிலாரிடம் கூறார்.

ஒப்புமைப் பகுதி:—

"வற்றிமற் றூற்றப் பசிப்பினும் பண்பிலார்க்கு
அற்றம் அறிய வுரையற்க—அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்".

—நாலடி. 78.

"தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்கு
உற்ற குறையை உரைப்பதாம்—தெற்ற
அறையார் அணிவளையாய்! தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்".

—பழ. 88.

"புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை".

—குறள். 966.

குறிப்பு:—

இரண்டு எதிர்மறை ஓர் உடன்பாட்டை உணர்த்துமாகலின், உரையாரோ என்பதற்கு உரைப்பர் என்று பொருள் கூறலும் ஒன்று. அஃதாவது மானிகள் பண்பிலார்க்குத் தம் குறை கூறார்; கூறுவராயின், தம் குறையைக் குறிப்பாலுணர்ந்து அகற்றும் பண்புடையார்க்குக் கூறுவர் என்பதாம்.

(உ).

293. யாமாயின் எம்மில்லம் காட்டுதும் தாமாயின்
காணவே கற்பழியும் என்பார்போல்—நாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறும் அதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

தருமர் :—என்பது. யாம் ஆயின் எம் இல்லம் காட்டுதும் —யாமாயின் [விருந்தினரை] எம்மனையிலே கொண்டு புகுந்து எம்முடைய உபசாரங் காட்டுவோம்; தாம் ஆயின்—செல்வம் உடையவர் தாமாகில்; காணவே —(தம்முடைய மனையுள்ளே யாம் புகின் தமது மனையாள் எம்மைக்) காணும் அளவில்; கற்பு அழியும் என்பார் போல்—அவள் கற்பு அழியும் என்பவர் போல; நாணி—(மனங்கூசி); புறங்கடை வைத்து—மனையகத்துப் புறவாயிலிலே வைத்து; சோறும் ஈவர் —சோற்றினையும் இடுவர்; அதனால்—ஆதலால்; செல்வர் தொடர்பு—செல்வமுடையாருடன் கொள்ளும் தொடர்ச்சியினை; மறந்திடுக — மறந்துவிட வேண்டும் என்றவாறு.

செல்வமுடையவர் தம்மைப் புறங்கடை வைத்துச் சோறிடு தலால், தமக்கு அது மானபங்கம் என்பது தோன்ற அவருடன் நட்பு மறந்துவிடவேண்டும் என்றது தமக்குச் சொல்வதுபோல யாவர்க்கும் அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. யாமாயின் எம் இல்லத்தைக் காட்டுதும்; தாமாயின் தம் இல்லத்தைப் பிறர் காணவே கற்பழியும் என்று கருதினாரைப் போல நாணி, எம்மைப் புறங் கடையிலே வைத்துச் சோற்றையும் இடுவர் செல்வராயினர், ஆதலால் அவர் நட்பை மறக்க என்றவாறு.

காணவே கற்பழியும் என்பார் போல் நாணி—நானு சாதி யிலேயும் *உட்பட்ட....றபப் போலத் தானும் பாவித்து நாணினாற் போல என்றவாறு. மறந்திடுக செல்வர் தொடர்பு—அடிப்

---

*இங்கே சில எழுத்துக்கள் சிதைந்துள்ளன.

பட்ட செல்வமின்றி நடுவே பெருத்திருப்பார் உறவு கொடிது என்று அவர் உறவைக் கடுக விடுக என்றுரைப்பாரும் உளர்.

விளக்க உரை:—எ-து. யாமாயின் எம்மில்லம் காட்டுதும்—யாமாயின் எம் மனையுள்ளே கொண்டு புகுந்து எம்முடைய வுபசாரம் காட்டுவேம்; தாமாயின் காணவே கற்பழியும் என்பார்போல் நாணி—அந்தச் செல்வமுடையோர் தாமாகிற் றம்முடைய மனையுள்ளேயும் புகில் தம்முடைய மனையாள் காணில் அவள் கற்பழியும் என்பார் போல நாணி; புறங்கடை வைத்து ஈவர் சோறும் அதனுல்—புறங்கடையிலே வைத்துச் சோற்றினையும் இடுவர் ஆதலால்; மறந்திடுக செல்வர் தொடர்பு—செல்வருடன் தொடர்ச்சியினை மறந்துவிடுக என்றவாறு.

கருத்து:—மானிகள் தம்மை மதியாத செல்வரது நட்பை மறந்துவிட வேண்டும்.

(ரு).

294. இம்மையும் †நன்றால் இசைநெறியும் கைவிடாது
உம்மையும் நல்ல பயத்தலால்—செம்மையின்
நாணங் கமழும் கதுப்பினாய்! நன்றேகாண்
மானம் உடையார் மதிப்பு.

தருமர்:—என்பது. செம்மையின் நாணம் கமழும்—வேறொரு மணங் கமழாமல் எப்போதும் புகுமணமே கமழா நிற்கும்; கதுப்பினாய்—குழலினை யுடையாய்!; இம்மையும் நன்று—இப்பிறப்பிலும் நன்மை யுண்டாகும்; [1] இசை நெறியும் கை (இறந்த பின்பு பூமியிற்) புகழ் நீங்காது நிற்கும்; உம்மையும்—

---

†நன்றும் இயல் நெறியும் என்றும் பாடம்.

[1] இயல் நெறியும் என்ற பாடத்துக்கு இயல்பாகிய ஒழுக்கநெறி எனப் பொருள் கொள்க.

மறுமைக்கும்; நல்ல பயத்தலால்—நன்மையை விளைக்கும் ஆதலால்; [1]மானம் உடையார் மதிப்பு—மானம் உடையாரால் மதிக்கும் மதிப்பு; நன்றேகாண்—ஒருவற்கு நன்றுகாண் என்றவாறு.

எனவே, தான் மானம் உடைத்தாய் ஒழுகுதல் மிகவும் நன்று என்பதாயிற்று. ஆல்—அசை.

பதுமனார் :—என்றது. இப்பிறப்பிற்கும் நன்மையுண்டாம்; இயல்பாகிய ஒழுக்கநெறியும் கைவிடாது நிற்கும்; மறுபிறப்பிற்கும் நல்ல இன்பங்களை உண்டாக்கும்; ஆதலால் எல்லார்க்கும் கட்புலனாகி வாச நெய் முதலாகிய நானம் நாறும் கதுப்பினாய்! நன்றே காண் மானமுடைய மக்கள் கருதும் கருத்து என்றவாறு.

நானம்—பனிநீர். கதுப்பு—மயிர். செம்மை-புலனாகை.

விளக்க உரை :—எ-து. இம்மையும் நன்றால்—இப்பிறப்பினும் நன்மையினை யுண்டாக்கும்; இசை நெறியும் கைவிடாது—இறந்த பின்பும் பூமியில் புகழும் நீங்காது; உம்மையும் நல்ல பயத்தலால்—மறுமைக்கும் நன்மையினை விளைப்பிக்கும் ஆதலால்; செம்மையின் நானங் கமழும் கதுப்பினாய்—வேறொரு மணங் கமழாமற் புழுகு மணமே கமழாநின்ற மயிரினையுடையாய்!; நன்றே காண் மானமுடையார் மதிப்பு—மானமுடையோரால் மதிக்கும் மதிப்பு ஒருவற்கு மிகவும் நன்று காண் என்றவாறு.

கருத்து :-மானமுடையோரால் மதிக்கப் பெறுதல் இருமைக்கும் இன்பந் தருவதாம்.

---

[1] மானமுடையார் மதிப்பு என்பதற்கு மானம் உடையவரது பெருமை அல்லது கடத்தை என்று பொருளுரைப்பாருமுளர்.

ஒப்புமைப் பகுதி :—

"புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை".

—குறள். 966.

"ஆங்கினிதே
மானமுடையார் மதிப்பு".

—இனியவை. 5.

(௪).

295. பாவமும் ஏனைப் பழியும் படவருவ
சாயினும் சான்றவர் செய்கலார்; சாதல்
ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம் அவைபோல்
அருநவை ஆற்றுதல் இன்று.

தருமர் :—என்பது. பாவமும் ஏனை பழியும்—பாவங்களும் மற்றொழிந்த பழிப்புரையும்; பட வருவ—உண்டாகத் தக்க (காரியங்களை) [1]சாயினும்—தாம் சாய வரினும்; சான்றவர்—அமைவுடையார்; செய்கலார்—செய்யார்; சாதல்—சாவு; ஒருநாள் ஒருபொழுதை துன்பம்—ஒருவற்கு ஒருநாளையிலே ஒரு மாத்திரைப் பொழுதையில் துன்பமே யுள்ளது; அவை போல்—அப்பாவமும் பழிப்புரையும் போல; அருநவை—(நுகர்தற்கு) அரிதாகிய குற்றங்களை; ஆற்றுதல் இன்று—செய்யமாட்டாது என்றவாறு.

சாவு ஒரு மாத்திரைத் துன்பமாதலால், எப்பொழுதும் நிற்கும் மானபங்கமாகிய குற்றங்கள் நேருவதாகிய காரியம் வருமிடத்து, ஒரு மாத்திரைத் துன்பமாகி உயிரைத் துறந்தாகிலும் மானத்தைப் பரிகரிக்க வேண்டும் என்பதாம்.

பதுமனார் :—என்றது. மறுமைக்குப் பாவமும் இம்மைக்குப் பழியும் பட வருவனவற்றைத் தாம் சாவ வரினும், அமைந்தார் செய்யார்; சாதல் ஒருநாள் ஒருபொழுதின்கண்.

வரும் துன்பமே தருவது; அப்பாவமும் பழியும் போல நுகர்தற்கு அரிய துன்பத்தை நெடுநாள் தருதல் இலது என்ற வாறு.

விளக்க உரை:—எ-து. பாவமும் ஏனைப் பழியும் பட வருவ—பாவங்களும் மற்றெழுந்த பழிப்புரையும் உண்டாகத் தக்க காரியம்; சாயினும் சான்றவர் செய்கலார்—தாம் சாவ ரினும் (அப்படி பொத்த காரியங்களைச்) செய்யார் அமைவுடை யோர்; சாதல் ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம்—சாவுதான் ஒருவர்க்கு ஒருமாத்திரைப் பொழுதில் துன்பமே யுள்ளது; அவை போல் அருநவை ஆற்றுதல் இன்று—அந்தப் பாவமும் பழியும் போல எப்பொழுதும் உளதாய் குற்றங்களைச் செய்ய மாட்டாது எ-று.

ஆதலால் பிராணனை விட்டும் மானத்தைப் பரிகரிக்கவேணும் என்பதாம்.

கருத்து:—மானிகள் பழிபாவங்கட்குப் பயந்து, உயிரை விட்டாவது மானத்தைப் பாதுகாக்க வேண்டும்.

ஒப்புமைப் பகுதி:—

"கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்".

—குறள் 116.

"கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீ ராழி வரையகத் தீண்டிய
கற்றேயும்; தேயாது சொல்".

—பழ. 394.

"காலம்போம் வார்த்தை நிற்கும்".

—பழமொழி.

"கப்பல்போம் துறை நிற்கும்".

—பழமொழி.

"வார்த்தை இருந்துபோம், வழிதூர்ந்துபோம்".

—பழமொழி.

(ரு).

296. மல்லல்மா ஞாலத்து வாழ்பவருள் எல்லாம்
செல்வர் எனினும் கொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

தருமர்:—என்பது. மல்லல் மா ஞாலத்து—வளப்பத்தை யுடைய பெரிய பூமியிலே; வாழ்பவருள் எல்லாம்—உயிர் வாழ்வார் எல்லாரினும்; செல்வர் எனினும்—மிகுந்த செல்வத்தை உடையராயினும்; கொடாதவர்—ஒருவற்கு ஒன்றினைக் கொடாதவர்; நல்கூர்ந்தார்—வறியரோடு ஒப்பர்; நல்கூர்ந்தக் கண்ணும்—வறுமையுற்ற விடத்தும்; செல்வரை சென்று இரவாதார்—செல்வரிடத்துச் சென்று இரவாதவர்; †பெருமுத்தரையரே—பெருமுத்தரையரோடு ஒப்பாவர் என்றவாறு.

பெருமுத்தரையர்—மிகுந்த செல்வத்தை யுடையவர்; மான முடையவர் வறியராயினும் மானத்துக்கு இயன்று அவர் ஒழுகுவ தன்றித் தம்மைக் குன்ற மதிக்கும் செல்வரிடத்துச் சென்று இரவார் என்பது தோன்ற அவர், செல்வரைச் சென்று இரவா ராகில் பெருமுத்தரையரோடு ஒப்பர் என வியந்து கூறியது.

பதுமனார்:—என்றது. வளமையுடைய (பெரிய) ஞாலத் தின் கண் வாழ்பவருள் மிக்க செல்வரே யாயினும், நல்கூர்ந்தா

---

†பெருமுத்தரையர் என்பார் இச்செய்யுள் இயற்றிய ஆசிரியர் காலத்தில் விளங்கிய பெருஞ் செல்வராய் இருத்தல் வேண்டும். இப்பெயர் இந் நூலின் 200-ஆம் செய்யுளிலும் வந்துள்ளமை காண்க.

ரோடு ஒப்பர் கொடாதவர்; அவ்வறுமையுற்ற காலத்துப் பெருமுத்தரையரோடு ஒப்பர் செல்வ முடையாரைச் சென்று இரவாதார் என்றவாறு.

வாழ்பவர்—செல்வத்திற் குறைவு படாமல் வாழ்பவர். பெருமுத்தரையர்—நாலும் நிறைந்து நாலுமரபாகிய வங்கிசத்தும் முற்பட்டிருக்குந் தலைமை யுடையார் என்பாரும் உளர்.

விளக்க உரை:—எ-து. மல்லல் மா ஞாலத்து வாழ்பவருள் எல்லாம்—வளப்பத்தையுடைய பெரிய பூமியில் உயிர் வாழ்பவர் எல்லாருள்ளும் வைத்து; செல்வர் எனினும் கொடாதவர் நல்கூர்ந்தார்—செல்வராயினும் ஒன்றைக் கொடாராகில் வறுவியரோடொப்பர்; நல் கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே—வறுமையுற்ற விடத்தும் பெருமுத்தரையரோ டொப்பர்; செல்வரைச் சென்று இரவாதார்—செல்வரிடஞ் சென்று இரவாதவர் என்றவாறு.

கருத்து:—வறுமையினும் பிறரிடஞ் சென்று இரவாத மானிகள் செல்வராக மதிக்கப் படுவர்.

(கூ).

297. கடையெலாம் காய்பசி அஞ்சுமற் றேனை
இடையெலாம் இன்னுமை அஞ்சும்-*புடையுலாம்
விற்புருவ வேல்நெடுங் கண்ணுய் ! தலையெலாம்
சொற்பழி அஞ்சி விடும்.

தருமர்:—என்பது. வில் புருவம் புடை உலாம்—வில்லைப்போல வளைந்த புருவத்தின் கீழே உலாவி வாராநின்ற; வேல் நெடு கண்ணுய்—வேல் போலும் நீண்ட கண்ணினையுடையாய் !; கடை எலாம்—கடையாய குணமுடையவர்

---

*புடை பரந்த என்றும் பாடம். இப்பாடத்துக்குப் பக்கங்களில் நசை பரவிய என்று பொருள் கொள்க.

எல்லாம்; காய் புசி அஞ்சும்—தம்மை வருத்துவதாய பசிக்கு அஞ்சுவர்; மற்று ஏனை இடை எலாம்—அவரன்றி மற்று ஒழிந்த இடையாய குணமுடையவ ரெல்லாம்; [1]இன்னுமை அஞ்சும்—சாவுக்கு அஞ்சுவர்; தலை எலாம்—தலையாய குணமுடையவ ரெல்லாம்; சொல் பழி அஞ்சி விடும்—பழிப்புரைக்கு அஞ்சுவர்; என்றவாறு.

அஞ்சி விடுவர் எனவே தமக்கு மானபங்கமாகப் பழிப்புரை வருமிடத்துச் சொற்களைத் தம்மேல் ஏற்றுக் கொள்ளாது உயிரை நீக்கி விடுவரன்றி அதற்கு அஞ்சுவாரல்லர் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கடையாயினர் எல்லாம் காய் பசியை அஞ்சுவர்; இடையாயினர் எல்லாரும் [2]தண்டத்தால் வரும் இன்னுமையை அஞ்சுவர்; வில் புருவ வேல் நெடுங் கண்ணாய்! தலையாயினர் எல்லாம் சொற்பழியை அஞ்சுவர் என்றவாறு.

மற்று—அசை. புடை சேர்ந்த—ஒரு மருங்கு சேர்ந்த; வில் புருவ வேல் நெடுங்கண்—வில்போன்ற புருவம்; வேல் போலும் நீண்டகண்.

விளக்க உரை:—எ-து. கடை எலாம் காய் பசி அஞ்சும்—கடையானவர் எல்லாம் மிக்க பசிக்கு அஞ்சுவர்; மற்று ஏனை இடை எலாம் இன்னுத அஞ்சும்—மற்றொழிந்த இடையாயினு ரெல்லாம் சாதலுக் கஞ்சுவர்; புடை உலாம் விற்புருவ வேல் நெடுங் கண்ணாய்—வில்லைப் போலும் வளைந்த புருவத்தின் கீழ் வேல்போலும் உலாவி வருகின்ற நெடிய கண்ணை யுடையாய்!; தலை எலாம் சொற் பழி அஞ்சி விடும்—தலையாயினோ ரெல்லாம் பழிப்புரைக் கஞ்சி விடுவர் என்றவாறு.

---

[1] 'சாதலின் இன்னாத தில்லை' என்பதலின் இன்னுமை சாவைக் குறித்தது.
[2] தண்டம்—அரச தண்டனை.

கருத்து :—பழிக்கஞ்சி மானங் காத்து வாழ்பவரே தலைமை யானவர் ஆவர்.

(எ).

298. நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தார் என்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—கொல்லன்
உலையூதுந் *தீயேபோல் உள்கனலும் கொல்லோ,
தலையாய சான்றோர் மனம்.

தருமர் :—என்பது. நல்லர்—முன்பு இவர் நல்லவர்; பெரிது அளியர்—மிகவும் அருளுடையர்; நல்கூர்ந்தார்—இவர் இப்போது மிடித்தார்; என்று எள்ளி—என்று இகழ்ந்து; செல்வர்—செல்வமுடையார்; சிறுநோக்கு நோக்குங்கால்—[1]அருக்கின பார்வையாகப் பார்க்கும் பொழுது; தலையாய சன்றோர் மனம்—சான்றாண்மைக்குத் தலைமையாயவர் மனம்; கொல்லன் உலை ஊதும் [2]தீயே போல்—கொல்லன் உலைக் களத்தில் ஊதி எழுப்புத் தீயைப் போல; உள் கனலும்—உள்ளே கனலா நிற்கும் என்றவாறு.

கொல்லோ என்பது மானமுடையவர் இத்தன்மை யுடைய வரோ என்றதிசயித்துச் சொல்லியது.

பதுமனார் :—[என்றது. இவர் நன்மையுடையர், நம்மால் [3]அளிக்கத்தகுவர்; வறுமையுற்றார் என்று இழித்துச் சொல்லிச் சிறியராயினர் சிறுநோக்குநோக்குங்கால், கொல்லன் உலையூதுந் தீப்போல தலையாய சான்றோர் மனம் உள்ளே கொதிக்குங் கொல்லோ என்றவாறு.

---

*இவ்வுவமை இவ்வதிகாரத்து முதற் செய்யுளிலும் வந்துள்ளது.

[1]அருக்கின பார்வை—சிறுமையான பார்வை.

[2]சினம் அடக்குதல் சான்றோர் இயல்பாதலின் 'உள்கனலும்' என்றார்.

[3]அளிக்கத்தகுவர்—கருணைசெய்யத்தக்கவர்.

சிறுநோக்கு—சிறியராக நினைத்துப் பார்க்கும் கீழ் நோக்கு.

விளக்க உரை:—எ-து. நல்லர் பெரிதளியர் நல் கூர்ந்தார் என்று எள்ளி—முன்பிவர் நல்லவர் மிகவும் கொண்டாடத் தக்கவர் இப்பொழுது மிடித்தார் என்று இகழ்ந்து, செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—செல்வராயினர் அருக்குகின்ற பார்வை கொண்டு பார்க்குங் காலத்து, கொல்லன் உலை ஊதும் தீயே போல்—கொல்லன் உலையை ஊதும் தீயைப் போல; உள் கனலும் கொல்லோ—உள்ளே கனலா நிற்கும் தலைபாய சான்றோர் மனம்—தலைமையுடைய சான்றோர் மனம் என்றவாறு.

கொல்லன் உலையூதுந் தீ என்றார் மேற் சொரிந்த பதரை மேற் புறப்படாமல் உள்ளே எரிந்து மண்டுதல்.

கருத்து:—தம்மை மதியாது இகழும் செல்வர் செயலுக்கு மானிகள் மனம் கொதிக்கும்.

(அ)

299. நச்சியார்க்(கு) ஈயாமை நாணன்று! நாணும்
அச்சத்தால் நாணுதல் *நாணன்று—மெய்ச்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது [சத்தின்
சொல்லா திருப்பது நாண்.

தருமர்:—என்பது. நச்சியார்க்கு—தம்மை விரும்பி வந்தவர்க்கு; ஈயாமை—ஒன்றினைக் கொடாதது; நாண் அன்று

*'நாணன்றும் எச்சத்தின்' என்றும் பாடம். இப்பாடமே ஏற்பதாகும். எச்சத்தின் மெல்லியராகி என்பதற்கு, செல்வத்தில் எளியராயிருக்கையில் எனப் பொருள் கூறுவர். இனி, தமது மரபில் தாம் எளியராயிருந்து தம் முன்னோர் செயலைத் தமது பெருமையாகக் கருதியிருப்பது நாணமாகும் எனப் பொருள் கூறலும் ஒன்று.

—நாணமன்று; நாள் நாளும்—எல்லா நாளும்; [1]அச்சத்தால்—போருக்கு அஞ்சிவந்த அச்சத்தினுலே; நாணுதல் நாண் அன்று—நாணுவதும் நாணமன்று; மெய் சத்தின்—மெய்யாகவே; மெல்லியர் ஆகி—தம்மை எளியராக வைத்து; தம் மேலயார் செய்தது—(குடிப்பிறப்பாலும் ஒழுக்கத்தாலும் தம்மினும்) மேலானவர் செய்த மிகுதிகளை; சொல்லாது இருப்பது [2]நாண்—சொல்லாதிருப்பதே நாணமுடைமை என்றவாறு.

மானத்துக்கு இயல்புடைத்தாக அம்மிகுதிகளைப் பலரறியச் சொல்லாதிருப்பது நாணமுடைமை என்றார். மேலாயவர் மிகுதிகளைச் செய்வது இயல்பன்று; அவர், தம்மை மெலியராக வைத்து இயல்பல்லாத மிகுதிகளைச் செய்வதனைப் பிறரறியப் புலப்படுத்துவது மானபங்கம் என்பதாம்.

பதுமனர்:—என்றது. தம்மை இரந்து வந்தார்க்கு ஒன்றை உதவப் பெருமையான் வரும் நாணும் நாண் அன்று; [3]செருவில் புக்கு அஞ்சும் அச்சம் காரணமாக வரும் நாணும் நாணன்று; மெய்யாகவே பிறப்பினுலும் ஒழுக்கத்தினுலும் எளியராக வைத்துத் தம்மேல் வந்து ‡மாருயினர் செய்யுந் தகுதி அல்லாததனைப் பிறர்க்குச் சொல்லாதிருப்பதே நாணுவது என்றவாறு.

விளக்க உரை:—எ-து. நச்சியார்க்கு ஈயாமை நாணன்று—தம்மை விரும்பி வந்தவர்க்கு ஒன்றனைக் கொடாதிருப்பது நாணன்று; நாணும் அச்சத்தால் நாணுதல் நாணன்றும்—எல்லா நாளும் போருக்கு அஞ்சிவந்த அச்சத்தினுல்

---

[1] அச்சத்தால்—அஞ்சவேண்டுவனவற்றிற்கு அஞ்சுதலால் என்றும் கூறலாம்.

[2] நாண் என்றதனை இங்கே நற்குணமாகக் கொள்க.

[3] செரு—போர்.

‡சுவடியில் மாருயினர் என்றே யுள்ளது. மேலாயினர் என்றிருத்தல் கூடும்.

நாணுதலும் நாணமன்று; எச்சத்தின் மெல்லியராகித் தம் மேலா யார் செய்தது—மெய்யாகவே தம்மை எளியராக வைத்துக் குடிப் பிறப்பாலும் ஒழுக்கத்தாலும் தம்மில் மேலாயினோர் செய்த மிகுதிகளை; சொல்லாதிருப்பது நாண்—பிறர்க்குச் சொல்லாதிருப்பதுவே நாண முடைமை என்றவாறு.

கருத்து :—மேலார் தமக்குச் செய்த அவமதிப்பைப் பிறரறியச் சொல்லாமையே மானிகட்கு அழகாம்.

(கூ).

300. *கடமான் தொலைச்சியர் கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த(து) உண்ணா(து) இறக்கும்—
இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்.

தருமர் :—என்பது. [1]கடம் மான் தொலைச்சியர்—கடமானைக் கொன்ற; கான் உறை வேங்கை—காட்டிலே உறையும் வேங்கைப் புலியானது; [2]இடம் வீழ்ந்தது—அக் கடமான் இடப்பக்கம் கீழாக வீழ்ந்ததாகில்; உண்ணாது—அதன் இறைச்சியைத் தின்னாமல்; [3]இறக்கும்—போய் விடும்; (அது போல) விழுமியோர்—சீரியோர்; [4]இடம் உடைய வான் அகம்—வானால் கவிக்கப்பட்ட பெரிய உலகமெல்லாம்; கை உறினும்—பெறுவராயினும்; மானம் அழுங்க வரின்—தமக்கு மானம் அழுங்க வரின்—தமக்கு மானம் கெடுவதாக அவ்வுலகம் பெற்றாராயின்; வேண்டார்—அவ்வுலகத்தை விரும்பார்.

*கடமா தொலைச்சிய என்றும் பாடம்.

[1]கடம் மான்—மதத்தையுடைய யானை; காட்டு விலங்கு எனினுமாம்.

[3]இறக்கும்—உயிர் விடும் என்றுமாம்.

[4]இடமுடைய வானகம்—செல்வத்தினையுடைய சுவர்க்க லோகத்தை என்பாரும் உளர்.

தாம் வறுமையராயினும் மானத்தையே பரிகரிப்பதன்றி மிக்க செல்வம் பெறுவோமென்று, மானத்துக்கு இயலாத காரியத்துக்கு உடன்படார் சீரியோர் என்பதாம்.

பதுமனார்:—என்றது. கடமாவினைக் கொன்ற கானுறையும் புலியும் அக்கொன்ற கடமா இடமருங்குற வீழ்ந்ததாயின், அதனை உண்ணாதுபோம்; அதுபோல இடத்தை யுடைத்தான வானுலக மெல்லாம் தமக்கு வந்தெய்தினும் அதனைக் காதலியார் சீரியார்; மானங்கெடவரின் என்றவாறு.

விளக்க உரை:—எ-து. கடமா தொலைச்சியர் கானுறை வேங்கை—கடமானைக் கொன்ற காட்டிலே உறைகின்ற வேங்கையானது; இடம் வீழ்ந்தது உண்ணாது இறக்கும்—அந்தக் கடமான் இடப்பக்கம் கீழாக விழுந்ததாகில் அதனைத் தின்னாமற்போம்; [அதுபோல] இடமுடைய வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்—சீரியோர் வானாற் கவிக்கப்பட்டவுலகம் பெறினும் அதனை விரும்பார்; மானம் அழுங்க வரின்—மானங் கெடத்தக்க காரியமாகில் (அதனை விரும்பார்) என்றவாறு.

கருத்து:—மானக்கேடு நேருவதாயின் மிகச் சிறந்த பொருளையும் சீரியோர் விரும்பார்.

ஒப்புமைப் பகுதி:—

"இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்".

—குறள். 961.

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து".

—குறள். 968.

"ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ—யானை

வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்".

—நாலடி. 198.

"கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலி".

—அகம். 29.

"கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உர னுடை யாளர் கேண்மையோடு
இயைந்த வைகல் உளவாகியரோ".

—புறம். 190.

"பறைபட வாழா அசுணமா உள்ளம்
குறைபட வாழார் உரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தமக்கொல்லாச்
சொற்பட்டால் சாவுமாம் சால்பு".

—நான்மணிக். 3.

"இறந்திட வரினும் அல்லால் இடுக்கணொன் றுறினும் தம்பால்
பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ரானோர்
சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை சூரனென் றொருபேர்
பெற்றேன்".

—கந்த. பானு. வதை. 27.

"வாய்வ தாகிய பொருளினை வல்விரைந் தன்றே
வாய்வ தாய்வில ராக்குவான் புகுந்தழிப் பார்போற்
சாய்வதாகிய திறத்தினுற் கதழ்ந்துதா யிடத்து
வீழ்வ தாக்கியுண் ணாதுபோதுவ விளவேங்கை".

—தணிகை புராணம். நாடு. 43.

(ய).

31. இரவச்சம்.

தருமர் :— அஃதாவது ஒருவர் வறுமையுற்ற காலத்து அவ்வறுமைதானே அவரைத் தள்ளிக் கொண்டுபோய் இரப்பிக்கும் பொழுது, தமது ஒளி அடங்கிப் பொலிவழிந்து, [1]கடுக வுரை கூடாது நின்று, தம் வறுமையை ஒருவற்குப் பலகாலும் மதுரமாகச் சொல்லில் அது அவர் செவியில் ஏறாது சொல்லிய வரை எளியராக நினைந்து, கடைக் கணித்துப் பார்க்கும் பார்வையையும், கொடுப்பார் போலிருந்து பின்பு அவர் இல்லை என்றுவிட மனந்தடுமாறிச் செயலற்றுப் போம் போக்கையும் கண்டு, அவ்விரப்பினை அஞ்சுதலாம்.

பதுமனார் :— அஃதாவது வறுமையுற்றோரை அவ்வறுமை தானே தள்ளிக் கொண்டுபோய் இரப்பிக்கும் பொழுது, தமக்குள்ள ஒளி அடங்கலும் மழுங்கிக் கண்கள் குழிந்து, தன் பொலிவழிந்து கடுக வுரை கூடாது நின்று, நன்றான தன்மங்களுடனே மதுரமாகத் தன் வறுமையைப் பலகாலுஞ் சொல்லில் இரக்கப்பட்டவர் செவியிற் றாக்காது, பின்பவரை எளியராக நினைத்துக் கடைக் கணித்துப் பார்க்கும் கண்களையும், அவர் கொடுப்பாரைப் போலிருந்து பின்பு ஒன்றுமில்லை என்றுவிட மூச்செறிந்து செயலற்றுப் போம் போக்கையும் கண்டு, அவ்விரப்பினை அஞ்சுதல் என்றவாறு.

குறிப்பு :—

'இரவச்சம்' :—

பரிமே :—அஃதாவது மானந்தீர வரும் இரவினை அஞ்சுதல்.

மணக் :— இரவச்சமாவது இரத்தலைத் தவிரவேண்டும் என்று கூறுதல். மேல் நல்கூர்ந்தார் கவார்மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினாராயினும், மேலாயினார்க்கு அது தகுதி யன்று என்பது குறித்த இவ்வதிகாரம் கூறப்பட்டது.

—குறள். அதி. 107.

---

[1] கடுக உரை கூடாது நின்று—விரைந்த பேச்சில்லாமல் நின்று.

301. நம்மாலே ஆவரிந் நல்கூர்ந்தார் எஞ்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இலரென்று—தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ? தாமும்
தெருண்ட அறிவி னவர்.

தருமர் :—என்பது. இ நல் கூர்ந்தார்—இந்த வறியவர்; நம்மாலே ஆவர்—நம்மாலேயே ஆக்கமுடையராவதன்றி; எஞ் ஞான்றும்—எல்லா நாளும்; தம்மால் ஆம் ஆக்கம் இலர் என்று—தமக்கென ஓர் ஆக்கம் இல்லாதவர் என்று; தம்மை மருண்ட மனத்தார் பின்—தம்மைத் தாமே (மேலானவராக) மயங்கிய அறிவுடைய நெஞ்சினை யுடையார் பின்னே; தெருண்ட அறிவினர் தாமும்—தெளிந்த அறிவினையுடையார் தாம்; செல்பவோ?—(இரத்தற்குச்) செல்லக் கடவதோ? என்றவாறு.

தன்னால் ஆற்றாத வறுமை வந்த விடத்து, இரக்க வேண்டினும் அறிவுடையாரிடத் தல்லது, அறிவில்லார் பக்கம் சென் றிரப்பதை அஞ்சவேண்டும் என்பதாம்.

பதுமனார் :—என்றது, இந்த வறியவர் நம்மாலே ஆகிறவர் அல்லது எல்லா நாளும் தமக்கென ஓர் ஆக்கம் இல்லை என்று, இப்படித் தம்மை மயக்கும்படி நினைத்த மனத்தை யுடையார் பின் இரந்து செல்லக் கடவதோ? தெளிந்த அறிவினையுடையார் தாம் என்றவாறு.

விளக்க உரை :—எ-து. நம்மாலே ஆவர் இந்நல்கூர்ந் தார்—இந்த வறியர் நம்மாலாகின்றவர் அல்லது; எஞ்ஞான்றும் தம்மால் ஆம் ஆக்கம் இலரென்று—எல்லா நாளும் தமக்கென ஓராக்கம் இல்லை என்று; தம்மை மருண்ட மனத்தார் பின்—இப்படித் தம்மை மயக்கும்படி நினைத்த மனத்தினையுடையார் பின்னே; செல்பவோ தாமும் தெருண்ட அறிவினவர்—தெளிந்த அறிவினையுடையார் தாமும் செல்லக் கடவதோ? என்றவாறு.

கருத்து :—இரப்பாரை இகழ்ந்து தம்மையே மதிக்கும் அற்ப

ரிடம் அறிஞர் யாசித்தற்கு அஞ்சவேண்டும்.

மேற்கோள் பகுதி :—

பரிமே :—ஆறாஎன வருகின்றமையின் அழிவினைத் தருமவை என்றெழிந்தார். அழிவினவை என்னுமிடத்து "நெருவ்ட அறிவினவர்" என்புழிப் போல இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது.

—குறள். 787.

ஒப்புமைப் பகுதி :-

"இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து".

—குறள். பய. 1057.

"எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது".

—இனியவை. 30.

(க)

302. இழித்தக்க செய்தொருவன் ஆர வுணவின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ?
விழித்திமைக்கும் மாத்திரை அன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு.

தருமர் :—என்பது. இழித்தக்க செய்து—இழிவான காரியத்தினைச் செய்து; ஒருவன் ஆர உணவின்—ஒருவன் தன் (மனம்) அமைதி பிறக்க இனிதாக வுண்பதினும்; பழித் தக்க—பிறர் பழிக்கத்தக்க காரியங்களை; செய்யான்—செய்யானாய்; பசித்தல் தவறோ?—பசித்திருப்பது குற்றமோ? (இல்லை) [என் எனில்] ஒருவன் [1] அழித்து பிறக்கும் பிறப்பு—ஒருவன் இறந்து

---

[1] அழிந்து என்பது எதுகை நோக்கி அழித்து என விகாரம் பெற்றது.

(பின்) பிறப்பது; [1]விழித்து இமைக்கும் மாத்திரை அன்றோ— விழித்து இமைக்கும் பொழுதளவல்லவோ என்றவாறு.

பிறர் பழிக்கும்படி இழிவான காரியஞ் செய்து இனிதாக வுண்ணினும் அவ்வியாக்கை நெடுங்காலம் நிற்பதன்றே! மாத்திரைப் பொழுதிற் போவதும் வருவதுமாய் இருக்கும் யாக்கையைப் பரிகரிக்க வேண்டி, ஈனத் தொழிலாம் இரவிற்குத் துணிவது தகைமையன்று என உயர்ந்தோர் இரக்க முற்றுரைப்பது போன்று அறிவுறுத்தியது.

பதுமனார்:—என்றது. இழிதக்க இரப்பினைச் செய்து வயிறார வுண்பதினும் பழிக்கத்தக்க காரியங்களைச் செய்யாமல் பசித்திருத்தல் ஒருவற்குக் குற்றமோ? விழித்திமைக்கும் மாத்திரை அளவன்றோ ஒருவன் மரித்துப் பிறக்கும் பிறப்பு என்றவாறு.

விளக்க உரை:—எ-து. இழித்தக்க செய்து ஒருவன் ஆர உணலின்—இழிவான காரியங்களைச் செய்து தன் மனம் அமைதி பிறக்க இனிதாக வுண்பதினும்; பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ?—பழிக்கத்தக்க காரியங்களைச் செய்யாமற் பசித்தல் ஒருவற்குக் குற்றமோ?; விழித்திமைக்கும் மாத்திரை அன்றோ—இமைத்து விழிக்கிற பொழுதாயிருக்கும் அவ்வளவல்லோ; ஒருவன் அழித்துப் பிறக்கும் பிறப்பு—ஒருவன் இறந்த பின்பு பிறக்கின்ற பிறப்பு என்றவாறு.

கருத்து:—நிலையாத உடலைக் காக்கவேண்டி மானங் கெடும் வண்ணம் இரத்தல் கூடாது.

---

[1]விழித்து இமைக்கும் மாத்திரை அன்றோ என்பதனை இமைத்து விழிக்கும் அளவன்றோ என விகுதி பிரித்துக் கூட்டிடலும் ஆம்.

ஒப்புமைப் பகுதி :—

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து"

—குறள். 339.

"பறைபட வாழா அசுணமா உள்ளம்
குறைபட வாழார் உறவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந்த மக்கொல்லாச்
சொற்பட்டால் சாவுமாம் சால்பு".

—நான்மணி. 2.

"மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன விளிவினல் வாழ்வேன்மன்".

—நாலடி. 40.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்".

—நாலடி. 300.

"தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றல்
உணற்கு விரும்புங் குடரை—வனப்பற
ஆம்பற்றுள் வாடலே போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ தறிவு"

—அறநெறி. 88.

விழித்திமைக்கும்........பிறப்பு':—

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு".

—குறள். 339.

"கட்டுயில் அனந்தர் போலக் கதிகளுள் தோன்றுமாறும்
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயரு மாறும்
உட்பட உணர்ந்தயானே உள்குழைந் துருகல் செல்லேன்
எட்பக வனைத்து மார்வம் ஏதமே இரங்கல் வேண்டா".

—சீவக. 1097.

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்"
—மணி. 16. 86—87.

"உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி".
—சுந்தரர். கேல்வாயில், 46.
(௨).

303. இல்லாமை கந்தா இரவு துணிந்தொருவர்
செல்லாரும் அல்லர் சிறுநெறி;—புல்லா
அகம்புகுமின் உண்ணுமின் என்பவர்மாட்
முகம்புகுதல் ஆற்றுமோ மேல்? [டல்லான்

தருமர்:—என்பது. இல்லாமை [1]கந்து ஆ—வறுமையே பற்றுக் கோடாக; இரவு துணிந்து—இரவினுக்குத் துணிந்து; ஒருவர்—; சிறுநெறி—தமக்கு இழிவாம் சிறிய வழியில்; [2]செல்லாரும் அல்லர்—செல்லாதிருப்பாரு மில்லை; (அப்படித் தாம் செல்லினும்) புல்லா—(தாம் வறுமையுற்றுச் செல்லும் போது எதிர் வந்து) தழுவிக்கொண்டு; [3]அகம் புகுமின்—அகமே வாரும்; உண்ணுமின்—உண்ணும்; என்பவர் மாட்டு அல்லால்—என்றுகூடக் கொண்டுபோய் உபசரிப்பாரிடத் தல்லாது; [(பிற ரிடம்) மேல்—மேலாயார்; முகம் புகுதல் ஆற்றுமோ?—முன் சென்று சொல்ல வல்லராவரோ? என்றவாறு].

இரக்கத் துணியின் இவ்வகைத்தாய அறிவுடையாரிடத் தல்லது அறிவில்லாரிடத் திரப்பதை அஞ்சவேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. வறுமையே பற்றுக் கோடாக

[1]கந்து—காரணமாக எனப் பொருளுரைப்பினும் அமையும்.

[2]செல்லாரும் அல்லர்—செல்லவுஞ் செய்வர்; இரண்டு எதிர் மறை ஓர் உடன்பாட்டை உணர்த்தியது.

[3]அகம் புகுமின்—வீட்டிற்கு வாருங்கள்.

இரப்பினைத் துணிந்து ஒருவர் சிறுநெறிக் கண் செல்லாரும் அல்லர்; அப்படியே செலினும், புல்லிக் கொண்டு எம் இல்லம் புகுமின்; உண்ணுமின் என்று ஏற்றுக் கொள்பவர் மாட்டல்லது மற்றையார் முன்பு செல்லவல்லர் ஆவரோ மேலாயார் என்றவாறு.

விளக்க உரை :—எ-து. இல்லாமை கந்தா இரவு துணிந்து—வறுமையே பற்றுக்கோடாக இரப்பதாகத் துணிந்து; ஒருவர் செல்லாரும் அல்லர் சிறு நெறி—ஒருவர் அதீதிய வழியிற் செல்லாதிருப்பாருமில்லை; (அப்படிச் செலினும்) புல்லா அகம் புகுதும் உண்ணுமின் என்பவர் மாட்டு அல்லால்—எதிரே வந்து தழுவிக்கொண்டு தம்மை வாரும் என்று கூட்டிக் கொண்டுபோய் உபசரித்தாரிடத்தல்லது; முகம் புகுதல் ஆற்றுமோ மேல்—ஊணுக்குச் சம்மதிப்பாரோ மேலாயினர் என்றவாறு.

இந்த உலகத்தில் இப்படிச் செய்வாரில்லாமையால் இரப்பினை அஞ்சக் கடவதாம்.

கருத்து :–தம்மை அன்புடன் ஏற்று உபசரியாதவரிடம் வறுமையால் இரத்தற்கு அஞ்சுவர்.

(ரு).

301. *கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் †உள்ளஞ் சுடுமால், எவன்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு.

பதுமனார் :—என்பது. [1]கரவாத—இரப்பவர் வேண்டியது

---

*இச்செய்யுள் முதல் 309ஆம் செய்யுள் வரை முறைவைப்பு மாறியுள்ளது.

†உள்ளம் உருகுமால் என்கொலோ என்றும்-பாடம்.

ஒன்றினை இல்லை என்னாது கொடுக்கிற; திண் அன்பின்—திடம் உடைத்தாகிய அன்பினையுடைய; கண் அன்னார் கண்ணும்—தமது கண்போல்வாரிடத்தும்; இரவாது வாழ்வது—இரவாமல் உயிர் வாழ்தலே; வாழ்க்கை ஆம்—ஒருவர்க்கு வாழ்க்கையாவதாம்; இரவினை உள்ளும் கால்—இரக்கக் கடவோம் என்று நினைப்பினும்; உள்ளம் சுடுமால்—நெஞ்சு வெந்து உருகா நிற்கும் ஆதலால்; [அவ்வாறிருக்க] [1]கொள்ளும் கால்—ஒருவரிடத்து ஒன்றைப் பெறும்படியான அக்காலத்து; கொள்வார் குறிப்பு—அதற்கியைந்த வேடத்தினைக் கொள்பவர் மனம்; என் கொலோ—என்ன வகையாய் இருக்குமோ? என்றவாறு.

தம் கண்(ணன்னார் கண்ணும்) என்றது இனியாரிடத்து இரப்பதற்கு நினைக்கும்போது நெஞ்சு வேகா நிற்கும் என்றால், அறியாதாரிடத்துப் போய் இரப்பதற்கு எவ்வகையாகக் குறிப்புக் கொள்வாரோ என்று இரவினை அஞ்சினான் ஒருவன் கூறியதாக யாவர்க்கும் அறிவுறுத்தியதாம். எனவே, தம்மால் தரிக்கப் படாத வறுமை வந்து இரக்க வேண்டும் எனின், இவ்வகைத்தாய அன்புடையாரிடத்தல்லது பிறர்பாற் செல்வது ஆகாது என்பது கருத்து.

பதுமனார் :—என்றது. தம்முடைய பொருளை ஒளியாத திண்ணிய அன்பினையுடைய தம் கண்ணனையாரிடத்தும் சென்று இரவாமல் உயிர்வாழ்வதே ஒருவற்கு வாழ்க்கையாவது; இரக்கக் கடவோம் என்று நினைக்கும் பொழுதே நெஞ்சு வெந்து உருகா நிற்கும்; ஆதலால் எப்படி இருக்குமதோ இரந்து ஒன்றினைக் கொள்ளும் பொழுது ஏற்றுக்கொள்பவர் மனம் என்றவாறு.

விளக்க உரை :—எ-து. கரவாத திண்ணன்பிற் கண்ணனார்க் கண்ணும்—(தமக்குள்ள பொருளை) ஒளியாத திண்ணிய

---

[1]கொள்ளுங் கால் கொள்வார் குறிப்பு என்கொலோ—என்பதற்குப் பிறர் தேடிய பொருளை இரந்து பெறுங்கால் ஏற்பவரது எண்ணம் எத்தகையதோ என்றுரைப்பினும் அமையும்.

அன்பினையுடைய கண்போல்வாரிடத்தும்; இரவாது வாழ்வதாம் வாழ்க்கை— இரவாமல் உயிர் வாழ்வதே ஒருவற்கு வாழ்க்கை யாவது; இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்—இரக்கக் கடவோம் என்று நினைப்பினும் நெஞ்சு வெந்து உருகா நிற்கும் ஆதலால்; எவன்கொலோ கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு —இரக்கப்பட்டவரிடத்து ஏற்றுக் கொள்வார் மனம் எப்படி இருக்குமோ என்றவாறு.

கருத்து:—கண்போன்ற நண்பரிடத்தும் இரப்பதற்கு அஞ்சி வாழ்வதே நல்வாழ்க்கையாம்.

மேற்கோள் பகுதி:—

பரிமேல்:—இரவுள்ள வுள்ளம் உருகும் என்பதற்கு "இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ,— கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு" என்றூர் பிறரும் என்பர்.

—குறள். 1069.

ஒப்புமைப் பகுதி:—

"கரவாது உவந்தீயும் கண்ணன்னூர் கண்ணும்
இரவாமை கோடி உறும்".

—குறள். 1061.

"இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்".

—குறள். 1069.

"கண்ணிற் சிறந்தார் தம்மிடத்தும் காழ்த்தமானங் கெடாவால்
பண்ணற்குரிய அறங்குறித்தும் படார்ந்தொன் றிரவார்
பெருமையினுல்".

—விநாயக பு. அரசி. 154.

(௬).

305\. இன்னா இயைக இனிய ஒழிகென்று
தன்னையே தான்இரப்பத் தீர்வதற்(கு)—
என்னைகொல்
காதல் கவற்றும் மனத்தினாற் கண்பாழ்பட்(டு)
ஏதி லவரை இரவு.

தருமர்:—என்பது. [1]இன்னா இயைக—நமக்கு இன்னாமையே பொருந்தக் கடவது; இனிய இயைக—இனிய வாயின நம்மைத் தவிரக் கடவன; என்று—என்று சொல்லி; தன்னையே [2]தான் இரப்ப—தன் நெஞ்சினைத் தான் இப்படி யிரந்து கொள்ளவே; தீர்வதற்கு—நீங்கி விடுவது ஒன்றினுக்கு; [வறுமைக்கு] காதல் [3]கவற்றும் மனத்தினால்—பொருள்(மேற்) காதல் செய்யும் மனத்தினால்; [4]கண் பாழ்பட்டு—துன்பம் மிக்குக் கண்ணுங் குழி விழுந்து பொலிவு கெட்டு; ஏதிலவரை இரவு—அன்னியர் பக்கற் சென்று இரக்கும் இரவு; என்னை கொல்—யாது காண் என்றவாறு.

வறுமையுற்ற காலத்தில் தம் பகிமை அறியாதாரிடத்துச் சென்று இரப்பதிற் றுன்பப் படுவதே நல்லது என்று தம் மனம் அன்னியரிடஞ் செல்ல எழாதபடி அதனை வேண்டித் தாம் அடங்கி இருக்குங் காரியம் ஒன்றிருக்க, அதனைத் தவிர்ந்து பொருள்மேற் காதலித்துப் பிறர்பாற் சென்றவிடத்து அவர் இல்லை என்றுவிட மிக்க வருத்தம் எய்திக் கண்ணும் பொலிவழிய வேண்டியது என்னையோ என இரவினை அஞ்சினான் கூறியதாம்.

பதுமனார்:—என்றது. நமக்கு இன்னாத வறுமைகள்

---

[1] இன்னா—வறுமைத் துன்பம்; உலகத் துன்பம் எனினுமாம்.

[2] தான் நிரப்ப—எனப் பிரித்து தானே மன நிறைவு செய்தலால் எனப் பொருள் கூறலும் ஒன்று

[3] கவற்றும்—கவல் என்பதன் பிறவினை; வருத்துகின்ற என்பது பொருள்.

[4] கண் பாழ்பட்டு—அறிவு பாழாகி என்றுரைப்பிலும் அமையும்.

வந்து பொருந்துக, இனிய செல்வங்கள் வாராதொழிக என்று கருதித் தன் நெஞ்சினைத் தான் இரந்து கொள்ளவே நீங்கும் வறுமையால் வருந் துன்பத்திற்கு என்னை கொல்லோ ஆசை யாற் கவலை செய்த மனத்தாற்கண் பொலிவழிந்து பிறரைச் சென்று இரக்கின்றது என்றவாறு.

தன்னையே தான் இரப்பத் தீர்வதற்கு—செல்வமில்லாதவரும் யாதேனும் ஒரு படியால் ஒன்றை நுகர்ந்து பசி தீர்வமென்று இரந்தபடி ஆராய்ந்து ஆசையிற் போகாதொழிக என்று தம் மனத்தை மீட்கத் தீர்வதற்கு.

விளக்க உரை:—எ-து. இன்னா இயைக இனிய ஒழிக என்று—நமக்கு இன்னாமையே பொருந்தக் கடவது இனிய வாயின நம்மைத் தவிரக் கடவது என்று சொல்லி; தன்னையே தான் இரப்பத் தீர்வதற்கு—தன்னெஞ்சினைத் தான் இரந்து கொள்ள நீங்கிவிடுவ தொன்றினுக்கு; என்னைகொல்—யாது தான்; காதல் கவற்றும் மனத்தினாற் கண் பாழ்பட்டு—பொருள் மேற் காதல் செய்யும் மனத்தினாலே துன்பமிக்குக் கண்ணும் பொலிவழிந்து; ஏதிலவரை இரவு—அன்னியர் பக்கற் சென்று இரக்கும் இரப்பு என்றவாறு.

கருத்து:—தமது வறுமையைத் தம் அறிவால் போக்காமல் பொருளாசையால் பிறரிடம் இரத்தல் கூடாது.

(ரு).

306. என்றும் புதியார் பிறப்பினும் இவ்வுலகத்து
என்றும் அவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெல்லாம் பொன்னொழுகும் பாயருவிநாட!
இரப்பாரை எள்ளா மகன்.

பதுமனார்:—என்பது. குன்றின் பரப்பு எல்லாம்—மலையின்

தலைப்பரப்பு முழுதும்; பொன் [1]ஒழுகும்—பொன்னைக் கொழித்து விழுகிற; [2]பாயருவி நாட !—(பரந்த) அருவியினையுடைய (மலை) நாடனே !; இ உலகத்து—இந்த உலகத்திலே; என்றும்—எல்லா நாளும் புதியார் பிறப்பினும்—முன்பு பிறந்தவர் வடி[3]வன்றியிலே பலரும் வேறு வடிவாகப் பிறந்தாலும்; இரப்பாரை எள்ளா மகன் அவனே—இரக்குமரை இகழாத மனிதனே; என்றும்—எல்லா நாளினும்; [4]பிறக்கலான்—பிறக்கக் கண்டோமில்லை என்றவாறு.

இஃது இரவச்சமானது எப்படி என்னில், இரக்குமவரை இகழாதார் ஒருவருமில்லை; யாவரும் இகழ்தலினால் நிலையாத வுடம்பினை விரும்பி இகழ்ச்சிக்கு இடங் கொடாமல் அவ்விரப்பினை அஞ்சி (அதனைத் தவிர்க) என அறிவுறுத்தும் பொருட்டு இப்பாட்டு இரவச்சத்திற் சேர்க்கப்பட்டது.

பதுமனார் :—என்றது. ஒருவரோ டொருவர் ஒவ்வாத வாற்றால் வேறுபட்டுப் புதியரே என்றும் பிறப்பினும், இவ் வுலகத்து என்றும் பிறவா தொழிகின்றான். இரப்பாரை இகழாத மகனே குன்றின் பரப்பெல்லாம் பொன்ஒழுகும் பாயருவி நாடனே ! என்றவாறு.

இரந்ததற் கிரங்கித் தான் இரவாதொழிதல் அச்சம் இரப் பாரை எளளா மகன்—கொடுத்து இகழா மகன் இரப்பினை இகழாது நன்று என்னும் மகன் என்றவாறு.

---

[1]ஒழுகும் என்ற தன்வினையை ஒழுக்கும் எனப் பிறவினை யாக்கிப் பொருள் உரைக்கப்பட்டது. ஒழுகுதற்குக் காரணமான என்றலைப் பினுமாம்.

[2]பாயருவி—பாய்ந்து வீழும் அருவி என்பாரும் உளர்.

[3]அன்றியில்—'விவேகிக்கு ஓர் உபாதை அன்றியில்'.

(சிவ-சித். 4, 8, சிவாக்கிர.)

[4]பிறக்கலான் என்பதில் அல் தொழிற் பெயீறு என்றாக்கி உண்மையிற் பிறத்தலுடையவனாவான் என்பாரும் உளர்.

விளக்க உரை:—எ-து. என்றும் புதியார் பிறப்பினும்—எல்லா நாளும் முன்பு பிறந்தவர்கள் வடிவன்றியிலே பலரும் புதியோராகப் பிறந்து வரவும் (இவர்களில்) இவ்வுலகத்து என்றும் அவனே பிறக்கலான்—இந்த உலகின் அப்படி ஒத்தவன் பிறக்கிற்றிலன்; குன்றின் பரப் பெல்லாம் பொன் ஒழுகும் பாயருவி நாட!—மலையில் தலை முழுதும் பொன்னைக்கொழித்து விழுகின்ற பரந்த அருவியினையுடைய மலைநாடனே!; இரப்பாரை எள்ளா மகன்—இரக்குமவரை இகழாத மனிதனைப் (பிறக்கக் காண்கிலோம்) என்றவாறு.

இஃது இரவச்சமானது எப்படியென்னில் இந்த வுலகத்தில் இரக்குமவனை இகழாதவர் யாவரும் இல்லை; ஆதலால் நிலையாத வுடம்பினை விரும்பி இகழ்ச்சிக்கு இடம் கொடாமல் அவ் விரப்பினை அஞ்சி அதனைத் தவிர வேணும் என்பதாம்.

கருத்து:—தான் இரத்தற்கு அஞ்சித் தன்னிடம் இரப்பவரை இகழாதவனே பிறவா நெறியைப் பெறுவான்.

(௬).

307. புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
பின்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயாய் எனக்கென் றிரப்பானேல் அந்நிலையே
*மாயாநோய் மாற்றி விடின்.

தருமர்:—என்பது. தன் இன்மை—தன்னுடைய வறுமையானது; புறத்து நலிய—புறமாகிய தன் மேனியைப் பொலிவழிக்க; [அதற்காக] அகத்து தன் நல் ஞானம் நீக்கி—தன் நெஞ்சினுள்ளே யுள்ள நல்லறிவினைக் கெடுத்து; நிறீஇ—அறியாமையை நிறுத்திக் கொண்டு; ஒருவனை—(செல்வன்) ஒருவன் பக்கற் சென்று (அவனை); எனக்கு ஈயாய் என்று—(எனக்கு) யாதானும் ஒன்றினைத் தரவேண்டும் என்று; இரப்பானேல்—

---

*மாயானே மாற்றி விடின் என்றும் பாடம்.

இரப்பனாகில்; அங்நிலையே—அவ்விரப்பினால் (வறுமையை) மாற்றுவது போலவே; [1]மாயாநோய் மாற்றிவிடின்—சாவாகிய நோயை மாற்றி விடுவனாகில் [இரக்கக் கடவன்] என்றவாறு.

இரப்பினால் வரும் இழிவு எப்போதைக்கும் நிலையாய் நிற்கும்; அதுபோலத் தன் யாக்கையும் நிலையாய் நிற்குமானால் இரக்கக் கடவேன் என்றார். எனவே, நிலையாத யாக்கையைக் கருதித் தனக்கு எப்போதும் நிலையாகிய இழிவினை மேற் கொள்ளாது அவ்விரப்பினுக்கு அஞ்ச வேண்டும் என்பதாம்.

பதுமனார் :—என்றது. புறம்புள்ள வறுமை நலிவதால் தன் நெஞ்சிலுள்ள நல்லறிவினைக் கெடுத்து அறியாமையை நிறுத்திப் பிறன் ஒருவனை எனக்கு ஈயாய் என்று இரப்பானாகில் தான் இரந்ததனை அவன் மாற்றினால் அப்பொழுதே மாய வேண்டாவோ தான் என்றவாறு.

மாற்றிவிடின்— இரந்ததனை இல்லையென்று விடின்.

விளக்க உரை :—எ-து. புறத்துத் தன் இன்மை நலிய —தன்னுடைய வறுமை என்பது புறம்பாகிய தன் மேனியைப் பொலிவழிக்க; அகத்துத் தன் நன்ஞானம் நீக்கி நிறீஇ—தன் நெஞ்சிலுள்ள நல்லறிவினைக் கெடுத்து அறியாமையை நிறுத்திக் கொண்டு; ஒருவனை ஈயாய் எனக்கு என்று இரப்பானேல்— ஒருவன் பக்கற் சென்று எனக்கு யாதாலும் ஒன்றினைத் தர வேணும் என்று இரப்பானாகில்; அங்நிலையே மாயானோ மாற்றி விடின்—தான் இரக்கப்பட்டவன் இல்லையென்று மறுப்பானாகில் இறவாமல் இருப்பனோ என்றவாறு.

---

[1]மாயானோ மாற்றிவிடின் என்ற பாடத்துக்கு மாற்றிவிடின் அந்நிலையே மாயானோ எனப் பதப்பிரிவு செய்து செல்லமுடையவன் இல்லையென மறுத்துவிடின் அப்போதே இரப்பவன் உயிர்விடமாட்டானோ எனப் பொருளுரைக்க. பதுமனார் கொண்ட பாடமும் பொருளும் இதுவே. இனி, இரக்கக் கருதுவானானால் அப்போதே உயிர்விடின் அவ்வறுமை நீங்கப் பெறானோ என்றுரைத்தலும் ஒன்று.

கருத்து :—வறுமையால் யாசித்து வருந்துவதைவிட இறப்பதே மேலாகும்.

மேற்கோள் பகுதி :—

பரிமேல் :—"உயிர் போகலாவது இனி யாம் என்செய்தும் என்று ஏங்கிச் செயலற்று நிற்றல்"; அந்நிலையே மாயானோ மாற்றிவிடின்" என்றார் பிறரும்" என்பர்.

—குறள். 1070.

ஒப்புமைப் பகுதி :—

"இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்".

—குறள். 1070.

(எ).

308. ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றி
வழிபடுதல் வல்லுதல் அல்லால்—பரிசழிந்து
செய்யீரோ என்னுனும் என்னுஞ்சொற்
பையத்தாஞ் செல்லும் நெறி. [கின்னுதே

கருமர் :—என்பது. ஒருவர் ஒருவரைச் சார்ந்து—ஒருவர் மற்றொருவரிடத்துச் சென்று, சேர்ந்து; ஒழுகல் ஆற்றி—அவர் நினைவின்படி ஒழுக வல்லராய்; [1]வழிபடுதல் வல்லுதல் அல்லால் —அவர் மனங் கொள்ளும்படி நடத்தல் (கூடுவத)ல்லாமல்; [2]பரிசு அழிந்து—தம்முறைமை ஒழிந்து; என்னுனும் செய்யீரோ என்னும்—எமக்கு யாதானும் சில தந்து உதவி செய்ய மாட்டீரோ என்று [இரந்து] சொல்லுகிற; சொற்கு-சொல்லினுங் காட்டில்;

---

[1]வழிபடுதல் வல்லுதல் அல்லால்—வணக்கத்துடனிருத்தலை வல்லரா யிருத்தல் அல்லாமல் என்றுரைப்பாருமுளர்.

[2]பரிசழிந்து—பெருமை கெட்டு எனினுமாம்.

தாம்[1]பைய செல்லும் நெறி—தாம் மெள்ளத் துறந்து போய்த் தவம் பண்ணும் நல்ல வழியானது; (இன்னாதே-பொல்லாததோ?) [நன்று என்றபடி] என்றவாறு.

இவ்வகைத்தாய் ஒருவரைப் பின் சென்றிரக்கும் இரவினால் வரும் இழிவைத் தாம் மேற் கொள்ளாது மிக்க வறுமை எய்திய காலத்துத் துறத்தல் நன்று என்பதாம் முற்கூறிய பாட்டும் இவ்வகைத்தாய்க் கண்டு கொள்க.

பருமனார் :—என்றது, ஒருவர் மற்றொருவரைச் சார்ந்து ஒழுகுதலைச் செய்து, வழிபடுதலை வல்லராம் அத்துணையல்லது, தம் மானம் அழிந்து எமக்கு யாதானும் ஒன்றினைச் செய்யீரோ என்று இரந்து சொல்லும் சொல்லைப் பார்க்க இன்னாதே? மெள்ளத் தாம் துறந்து போம் நெறி என்றவாறு.

இன்னாதே என்பது மாறுகொள் ஏகாரம். ஆற்றிச் செலுத்தி வழிபடுதல்—அவர் நினைவின் வழிப்படுதல்.

விளக்க உரை :—ஏ-து. ஒருவர் ஒருவரைச் சார்ந்து ஒழுகல் ஆற்றி—ஒருவர் ஒருவரைச் சேர்ந்து அவர் நினைவின்படி ஒழுக வல்லராய்; வழிபடுதல் வல்லுதல் அல்லால்—அவர் மனங் கொள்ள நடந்து போவதல்லது; பரிசழிந்து—அந்த முறைமையை ஒழிந்து; செய்யீரோ என்னும் என்னும் சொற்கு—எமக்கு யாதாயினுஞ் சில தந்து உதவி செய்ய மாட்டீரோ என்று சொல்லுஞ் சொல்லினுங் காட்டில்; இன்னாதே பையத் தான் செல்லும் நெறி—மெள்ளத்தான் துறந்து போய்த் தவம் பண்ணும் நல்வழி மிக நன்று என்றவாறு.

---

[1]பையத் தாம் செல்லும் நெறி என்பதற்கு 'இவ்வுரை தவத்தை இழிவுபடுத்துவதாயிருத்தலின் சிறவாமை காண்க; இனி, மெல்லத் தாம் அடங்கி ஒழுகும் அம் முறை தீதாகுமோ? என்றோ தாம் தன்பழுறச் செல்லும் வழி தீதாகுமோ என்றோ உறவது ஏற்கும்.

கருத்து:—பிறரைப் பணிந்து அவரைப் பின்பற்றி வாழ்தலினும் இரந்து வாழ்தற்கு அஞ்சுக.

மேற்கோள் பகுதி:—

நச்:—"ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுக லாற்றின்— என்றவழிச் சொல்லுவாளுேடு கேட்டான் ஆடூஉ ஒருமை குறித்தா னென்பது விளங்கும்".

—தொல். சொல். பெயரி சூ. 39.

மயிலை:—சொல்லெச்சமாயினவற்றுக்கு "செய்யீரோ.... செல்லு நெறி" என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ 359.

(அ).

309. திருத்தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோ(டு) உயர்வுள்ளின் அல்லால்
அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின்சென்(று)
எருத்திறைஞ்சி நில்லாதாம் மேல்.

தருமர்:—என்பது. தன்னை திரு நீப்பினும்—தன்னைத் திருமகள் விட்டு நீங்கினும்; [1]தெய்வம் செறினும்—தெய்வமானது [2]செறுத்ததாயினும்; [3]உருத்த மனத்தோடு—உயர்ந்த தோற்றமுடைய மனத்தினுல்; உயர்வு உள்ளின் அல்லால்— இரவாமையாகிய உயர்ந்த தம் தகுதியை நினைப்ப தல்லது; மேல் —மேலாயினர்; [4]அருத்தம் செறிக்கும் அறிவிலார்—பொருளைக்

---

[1]தெய்வம் என்றது ஊழ்வினையை.

[2]செறுத்ததாயினும்—சினந்து வருத்தினும்.

[3]உருத்த மனத்தோடு—ஊக்கங்கொண்ட மனத்துடன் என்றுரைப்பாரும் உளர்.

[4]அருத்தம் செறிக்கும் அறிவிலார்—பொருளைப் புதைத்து வைக்கும் அறிவிலிகள் என்பது பதுமனுர் கொண்ட பொருளாகும்.

கியைந்த அறிவில்லாதவரை; பின் சென்று—பின்பற்றிச் சென்று; [I]எருத்து இறைஞ்சி நில்லாது—(எமக்கு இல்லை என்று அவர் முகம் பார்க்க நாணிக்) கழுத்தினைத் தாழப்போட்டு இப்படி நில்லார் என்றவாறு.

அறிவுடையார் தம்மால் தரிக்கப்படாத வறுமை யுற்ற காலத்துத் துறப்பதே யன்றி அறிவில்லாதாரைப் பின் பற்றிச் சென்று இரவார் என வற்புறுத்தியதாம்,

பதுமனர் :—என்றது. தன்னைத் திருமடந்தை நீப்பினும், தெய்வம் செறினும், எழுந்த மனத்தினால் உயர்வே நினைப்பி னல்லது, தாம்தேடிய பொருளினைப் புதைத்து வைக்கும் அறி வில்லாதார் பின்பே சென்று எருத்து இறைஞ்சி நில்லார் மேலாயினர்.

அருத்தம் செறிக்கும்—தேடிய பொருளைப் புதைக்கும் எருத்திறைஞ்சி—தலையிறக்கிட்டு.

விளக்க உரை :—எ-து. திருத்தன்னை நீப்பினும்—திருமகள் தன்னைவிட்டு நீங்கினும்; தெய்வம் செறினும்–தெய்வம் செற்றதாயினும்; உருத்த மனத்தோடு உயர்வு உள்ளின் அல்லால்—உயர்ந்த தோற்றமுடைய மனத்தினால் இரவாமையாகிய வுயர்ந்த தகுதியை நினைப்பதல்லது; அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின் சென்று—பொருளினைப் புதைத்து வைக்கும் அறிவிலார் பின்னே சென்று; எருத்து இறைஞ்சி நில்லாதாம் மேல் - எமக்கில்லை என்று அவர் முகம் பார்க்க நாணிக் கழுத் தினை வளைத்துக் கொண்டு நில்லார் மேலாயினர் என்றவாறு.

கருத்து :—மேலோர் வறுமையால் வாடினும் உலோபிகளிடம் சென்று இரத்தற்கு அஞ்சுவர்.

[I]எருத்து இறைஞ்சி—தலைவணங்கி என்றுமாம்.

ஒப்புமைப் பகுதி :—

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே"

—நல்வழி. 22.

(கூ).

310. பழமைகந் த்ராகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொருஅர் அவரென்னின் பொத்தித்தம்
அருஅச் சுடுவதோர் தீ. [நெஞ்சத்(து)

தருமர் :—என்பது. [1]பழமை கந்து ஆக—பழமையே பற்றுக்கோடாக; பசைந்த வழியே—தாமும் அவரும் முன்) கலந்திருந்த முறைமையை நினைத்து; [2]கிழமை தான்—அவர்க்குத் தாம் செய்யும் [3]உரிமையினை; யாதானும் செய்க—எவ்வளவாயினுஞ் செய்யக் கடவர்; கிழமை—அப்படிச் செய்யும் உரிமையினை; அவர் பொருர் என்னின்—பழமை பற்றுகச் சென்றவர் [4]மேற்கொள்ளப் பட்டிலராயின்; (அது) தம் நெஞ்சத்து [5]பொத்தி—சென்றவர் நெஞ்சிற் பொதிந்துகொண்டு; அரு—விடாமல்; சுடுவது—கனலுகின்ற; ஓர் தீ—ஒரு தீ அல்லவோ? என்றவாறு.

இரவஞ்சினன் ஒருவன், தன்னை யறியாதாரிடத்துச் சென்று இரப்பதற்கு அஞ்சித் தனக்கு முன்னறிக்கையாய் இருந்தவனிடத்துச் செல்லக் கருதி, அவனிடத்துச் செல்வதற்கு மன

---

[1]பழமை கந்தாக—பழைய நட்பே காரணமாக.

[2]கிழமையான் யாதானும் செய்க என்று பாடங் கொண்டு உரிமையால் நண்பரை வினவாது ஏதேனும் ஒன்றைச் செய்க என்பது பொழிப்புரைகாரர் பொருளாகும்.

[3]உரிமை என்றது உள்ளுரிமையாற் செய்யும் உதவியை.

[4]மேற்கொள்ளப் பட்டிலராயின்—அடையப் பெற்றூர் இல்லை எனின்.

[5]பொத்தி—மூளப்பட்டு எனினுமாம்.

மழுங்கி மற்றுந் தன் பசிக் கொடுமையால் அவனுந் தானும் முன் காலத்திருந்த பழைமையைத் தனக்கு ஓர் ஊற்று கோலாகக் கொண்டு அவனிடத்திற் செல்ல, அவன் இவன் வறுமையாய் வந்தது விசாரித்துத் தான் முன் இவனுடன் கலந்திருந்த முறைமையை நினைத்து, ஏதாகிலுங் கொடுத்தனுப்பினுன் இல்லையாயின் அது இரக்கச் சென்றவன் நெஞ்சில் அரும்விருந்து சுடுந் தீயல்லவோ ஆதலால் அவரிடத்தும் இரப்பதை அஞ்சித் துறக்கக் கடவன் என்பதாம்.

பதுமனுர் :—என்றது. பழமையே பற்றுக்கோடாகக் கொண்டு தொடர்ந்த தொடர்ச்சி காரணமாக யாதானு மொன்றை உரிமை செய்து வேண்டுக. அவ்வுரிமையினை அவர் பொருராகில் மூண்டு தன் நெஞ்சத்தின்கண் அடுவதோர் ஆறுத் தீயல்லவோ என்றவாறு.

கந்தாக—பற்றுக்கோடாக. பசைந்த வழியே—மேவின வழியே. கிழமையால்—உரிமையால். யாதானும் செய்க—யாதானும் செய்து வேண்டுக.

பொழிப்புரை :—எ-து. பழமையே பற்றுக்கோடாகத் தாமும் அவருங் கலந்த முறைமையினைக் கொண்டு உள்ளுரிமையாலே அவரை வினவாமல் ஒன்றினைச் செய்யில் அப்படிச் செய்த அருமையினை அவர் பொருராகில் தன் நெஞ்சிலே பொதிந்து கொண்டு ஆறுமல் தன்னைச் சுடுவதொரு தீயல்லோ என்றவாறு.

இது கூடாநட்பிற்குப் பொருந்தின பாட்டு; இரவச்ச மானபடி ஏது என்னில், கலந்து நட்புச் செய்தாரிடத்தும் உடைமையை விரும்பிப் பெறுதற்கரிய நட்பினை வேறுபடுத்துவாராதலால் பிறரொருவருக்கு அப்படிக் கொத்த உடைமையினைக் கொடார் என்று கொண்டு அவ்விரப்பினைத் தவிரக் கடவர் என்பதாம்.

விளக்க உரை :—பொழிப்புரையிற் கண்டபடியே.

கருத்து:—பழகியவரும் இல்லையென மறுப்பாராயின், அது தீப்போற் சுடுவதாதலின் மானிகள் அவரிடம் இரத்தற்கும் அஞ்சுவர்.

(ம).

துன்பவியல் முற்றிற்று.

---

5. *பொதுவியல்.

32. அவையறிதல்.

தருமர்:—அஃதாவது. கற்றறிவினை யுடையார் [1]திரட்சியை அறிதல்; அறிகையாவது உலகத்துப் பொதுப்பட வழங்கும் நூல்களைக் கற்றவர்களும்; தத்தஞ் சமய நூல்களைக் கற்றவர்களும், இவ்விருநிறத்தையும் நுண்ணிதாக அறிந்திருப்பாரும், அதனைப் பார்க்கக் கற்று மிகவும் அறிந்திருப்பாரும், நுண்ணியதாக எல்லா நூல்களினுள்ளும் புகுந்து உண்மையான பொருள்களை உணர்ந்து ஒன்றினையுஞ் சொல்லாமல் அமைதி பிறந்திருப்பாரும் ஆகிய(வரது) இந்தத் திரட்சியினை அறிந்து அதற்குத் தக்கதாய் நிற்பதாம்.

பதுமனார்:—அஃதாவது அவை என்றது ஈண்டுக் கற்றறிவினை யுடையார் திரட்சியினை; அறிகையாவது உலகத்துப் பொதுப்பட வழங்கும் நூல்களைக் கற்றவரும், அதனால் தத்தம் சமய நூல்களைக் கற்றவரும் இவ்விருதிறத்துக் கற்ற நூல்களையும் நுண்ணிதாக அறிந்திருப்பாரும், பாக்களைக் கற்றுந் தூலமாக அறிந்திருப்பாரும், மண்ணில் ஊன்ற இலச்சினையை இலச்சினை

---

*அரசியல் முதலியவற்றன் சேராமல் பொதுவான செய்திகளைப் பற்றிக் கூறும் பிரிவு.

[1] திரட்சி—கூட்டம்.

தான் எனவும் அன்றெனவும் ஒண்ணாமை போல் இருந்துள்ள சமயங்களையும் மற்றுமுள்ள சாத்திரங்களாற்பெறும் பயன்களையும் அறிந்து [2]பரமார்த்தத்தினை உணர்ந்து இது கற்கில் அகப்படுவ தொன்றன்று என்றும் ஈது ஒருவர்க்கு அறிவித்தலாவது [3]அந்தக னுக்குச் சிறப்பு வெளுப்பாம் நிறத்தைக் காட்டுந் தன்மை என்றும் ஒன்றுஞ் சொல்லாதிருப்பாரும் ஆகிய இத் திரட்சி யதனை அறிந்து தாம் கற்றவள்வையும் இது சொன்னல் வெல்லும் இது சொன்னல் தோற்கும் என்று அறிதலும், அறியாதார் முன் ஒன்றும் சொல்லாதிருத்தலுமாம்.

குறிப்பு:—

பரிமே:—அஃதாவது அரசனேடு இருந்த அவையினது இயல்பை அறிதல். காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப் பறிதலே அன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:—அவையறிதலாவது இருந்த அவையறிந்து அதற்குத்தகச் சொல்லுதல். அரசன் குறிப்பறிந்தாலும் அவை யறிந்து சொல்லவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப் பட்டது.

பரிதி:—அவையறிதலாவது ஆஸ்தானம் அறிதல் (எ-று).

—குறள். அதி. 72.

311. மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்டாங்கோர்
அஞ்ஞானந் தந்திட்(டு) அதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்
சொன்ஞானம் சோர விடல். [முன்

---

[2]பரமார்த்தம்—மெய்ப் பொருள்.

[3]அந்தகன்—குருடன்.

தருமர் :—என்பது. [1]மெய் ஞானக் கோட்டி—மெய்யான ஞானநூல்களை யுடைய சபையிலே; உறழ் வழி விட்டு—கலந்திருப்பதனைத் தவிர்ந்து; ஆங்கு—அவ்விடத்து; ஓர் அஞ்ஞானம் தந்திட்டு—ஒரு ஞானமில்லாததனைச் சொல்லிக் காட்டி; அது ஆங்கு அற துழாய்—அதனை அவ்விடத்தே மிகவும் பரப்பி; [2]கை ஞானம் கொண்டு ஒழுகும்—கைகளாலே குத்தித் தாம் சொன்ன புல்லிய பொருளைப் [3]பொறுப்பிக்கும்; [4]கார் அறிவாளர் முன்—மயங்கிய அறிவை யுடையார் முன்னே; சொல் ஞானம் [5]சோர விடல்—(புகழ்ச்சிக்குரிய) தம்முடைய நல்லறிவினைப் [6]பாராட்டாது மறந்துவிடுக என்றவாறு.

எனவே, புல்லிய அறிவுடையார் முன் தாம் மிகுந்த அறிவினைப் பாராட்டும் போது அவர் அறிவில்லாமையினால் அதனை மாறுபாடாகக் கருதுவதன்றி உட்கொள்ளார் ஆதலால் அப்படி ஒத்தார் அவையிற் சேரில் தமது மிகுந்த அறிவுங் குன்றிவிடும் அதனால் ‘சொன்ஞானஞ் சோரவிடல்’ என்றார்.

பருமனார் :—என்றது. மெய்ஞ்ஞானக் கோட்டியுள் கருந்திருக்கும் வழியை விட்டு அவ்விடத்து, மெய்ஞ்ஞானம் இல்லாததொன்றைச் சொல்லி அம்மெய்ஞ்ஞானம் என்னும்படி அஞ்ஞானத்தைப் பரப்பக் [7]கையினால் இடர்செய்து உடம்படுவிக்கும் பொல்லா அறிவினையுடையார் முன்பு சொல்லும் ஞானத்தைச் சோரவிடுக என்றவாறு.

உற்ழ்வழி—பொருந்தும் வழி. அது ஆங்கு அறத் துழாய்

---

[1] அவையிலுள்ளாரது மெய்ப்பொருளறிவு அவையின்மேல் ஏற்றப்பட்டது

[2] கைஞானம் கொண்டு ஒழுகும்—தமது சிற்றறிவையே கொண்டு நடக்கின்ற என்றுமாம்.

[3] பொறுப்பிக்கும்—உடன்படுவிக்கும்.

[4] கார் அறிவாளர்—பழிக்கப் படும் அறிவினர் என்பதுமாம்.

[5] சோரவிடல்—தளரவிடுக என்றுரைப்பாருமுளர்.

[6] பாராட்டாது—விரித்துரையாது.

[7] கையினால் இடர்செய்து—கையாற்குத்தி.

—அம் மெய்ஞ்ஞான மாம்படி மெய்ஞ்ஞானம் அல்லாததனைப் பரப்பி. கைஞானம்—கையினல் இடர் செய்து.

விளக்க உரை:—எ-து. மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்டு—மெய்ஞ்ஞான நூல்களையுடைய சபையிலே கலந்திருப்பதனைத் தவிர்ந்து; ஆங்கு ஓர் அஞ்ஞானந் தந்திட்டு—அவ்விடத் தொரு ஞானமில்லாதவையிற்றைச் சொல்லிக் காட்டி; அது ஆங்கு அறத் துழாய்—அதனை அவ்விடத்தே மிகவும் பரப்பி; கைஞ்ஞானம் கொண் டொழுகும் காரறிவாளர் முன்—கைகளாலே குத்தித் தாஞ் சொன்ன புல்லிய பொருளைப் பொறுப்பிக்கும் மயங்கிய அறிவுடையார் முன்; சொல் ஞானம் சோரவிடல்—தம்முடைய நல்ல அறிவினை அறிவியாமல் மறந்து விடுக என்றவாறு.

கருத்து:—அறிவிலிகள் கூடிய அவையில் அறிஞர் தமது அறிவு நுட்பத்தை வெளிப்படுத்தலாகாது.

ஒப்புமைப் பகுதி:—

"புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க: நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்".

—குறள் 719.

"கல்வியா னாய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவுந் தீயவாம்—எல்லாம்
இவர்வரை நாட! தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றாங்கு".

—பழ. நா. 41.

(க).

312. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்
செறிக்கும்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்;—தீப்புலவன்

கோட்டியுள் *குன்றக் குடிபழிக்கும் அல்லாக்கால்
தோட்புடைக் கொள்ளா எழும்..

தருமர் :—என்பது. நா பாடம் சொல்லி—தன்னுடைய நாவிற்கு இசைந்த பாடங்களைச் சொல்லி; [1]நயம் உணர்வார் போல்—நல்ல நூற் பொருளை அறிந்திருப்பார் போலே; [2]செறிக்கும்—பொருள் படுத்தும்; தீப் புலவன்—தீயவான அறிவுடையானை; செறிவுடையார் சேரார்—அடக்க முடையோர் சேரார்; அஃது ஏனெனில்; தீப்புலவன்—அத்தீய அறிவுடையவன் கோட்டியுள்—சபை நடுவே யிருந்து; குடி குன்ற பழிக்கும்—குடிப் பழுதுகளைத் தொடுத்து அறிவுடையார் மனங் குன்றும் படி சொல்லுவன்; அல்லாக் கால்—அல்லது; தோள் புடைக் கொள்ளா எழும்—தோளைத் தட்டிக் கொண்டு; மற்போருக்கு உடன்பட்டு எழுந்திருப்பன் என்றவாறு.

ஆதலால் அவ்வகைத் தாயவர் இருக்கும் சபையிற் செல்லா திருத்தல் அறிவு என்பதாம்.

நாப்பாடம் என்பது செவிக்கு ஏருது கற்றவை.

பதுமனூர் :—என்றது. [3]நாப்பாடத்தையே நடுவே பொருளறிவார் போலே அந் நாப் பாடத்தையே நடுவே மடுக்கும் தீப் புலவனைச் சென்று கூடார் அடக்க முடையார்; [4]தீப்புலவன் அவையுள் தோற்று, வென்றவன் குடியைப் பழிக்கும்; பழித் திலனாயின் பிறிதொன்றினை மேற்கொண்டு தோளைக் கையால்

---

*குன்றிக் குடிப்பழிக்கும் என்றும் பாடம்.

[1]நயம்—பொருள் நயம் எனினுமாம்.

[2]செறிக்கும்—கூட்டஞ் சேர்க்கும் என்றோ, போலிக் கருத்தைப் புகுத்தும் என்றோ கூறினும் அமையும்.

[3]நாப்பாடம்—நெட்டுருச் செய்த பாட்டுகள்.

[4]இப்பொருள் பதுமனூர் கொண்ட மூல பாடத்திற்கு ஏற்ப உரைக்கப் பெற்றுள்ளது.

புடைத்தெழும் என்றவாறு.

நயம்—பொருள். செறிவுடையார்—அடக்கமுடையார். குன்றி-தோற்று. பழிக்கும்—வென்றவன் குடியைப் பழிக்கும் தோள் புடைக்கொள்ளா எழும்—தோளைக் கையால் புடைத்து எழும்.

விளக்க உரை :—எ-து. நாப்பாடஞ் சொல்லி—தன்னுடைய நாவுக்கிசைந்த பாடங்களைச் சொல்லி; நயம் உணர்வார் போற் செறிக்கும்—நூல்களை அறிந்திருப்பாரைப் போலே பொருளைப் படுத்தும்; தீப்புலவர்ச் சேரார் செறிவுடையார்—திங்கான அறிவினையுடையாரைச் சேரார் அடக்கமுடையார்; அஃது ஏன் எனில், தீப்புலவன் கோட்டியுள் குன்றக்குடி பழிக்கும்—அந்தத் தீய வார்த்தையை யுடையவன் சபைக்கு நடுவே குடிப் பழுதுகளைத் தொடுத்துக் கேட்கச் சொல்லுவன்; அல்லாக்கால் தோட்புடைக் கொள்ளா எழும்—அதுவல்லது தோளைக் கொட்டி மற்பொருகைக்கு உடன்பட்டு எழுந்திருப்பன்.

ஆகலால் அப்படி யொத்த சபையினை அமைதியுடையார் சேரார் என்றவாறு.

நாப்பாடம் என்றது செவியேறக் கற்றவை.

கருத்து :—நற்புலவர் போலிப் புலவருடன் கூடினால் தமது பெருமை குன்றப் பெறுவர்.

ஒப்புமைப் பகுதி :—

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை".

—பழ. எா. 15.

(உ).

313. சொற்ருற்றுக் கொண்டு *துனைந்தெழுதல் காமுறு
கற்ருற்றல் வன்மையுந் தாந்தேருர்,—கற்ற [வர்,
செலவுரைக்கும் ஆறறியார், தோற்ப(து) அறியார்
பலவுரைக்கும் மாந்தர் பலர்.

தருமர் :—என்பது. [1]சொல் தாற்று கொண்டு—சொற் கொழிப்பினைக்கொண்டு; துனைந்து எழுதல் காமுறுவர்—விரைந்து சொல்லுதலை ஆசைப்படுவர்; கற்ற ஆற்றல் வண்மையும்—கல்வி மிகுதியுடையோர் வன்மையினையும்; தேருர்—தெளியார்; கற்ற —(தாம்) கற்றவற்றை; செல உரைக்கும் ஆறு அறியார்— ஏற்கச் சொல்லும் வழியையும் அறியார்; தோற்பது அறியார் —தாம் பின்பு அச்சபையில் தோற்பதனையும் அறியார்; பல உரைக்கும் மாந்தர் பலர்—தம்முடைய நாவுக்கு இயைந்த சொற்கள் பலவற்றையுஞ் சொல்லி முறிந்து போமவர் பலர் என்றவாறு.

எனவே இவ்வகைத்தாயவர் எய்திய சபையில் சேர்தல் அறிவுடைமைக்குப் பொருந்திய தன்று என்பதாம்.

பதுமனர் :—என்பது. [2]சொற்கொழிப்பைக் கொண்டு நாத் தினவினல் பிறருடன் வாது செய்யத் தொடங்குதலைக் காதலிப்பர்; அதற்கு எதிர்வாதியானவன் நூலைக் கோதறக் கற்று அறிதல் வன்மையுக் தாமறியார்; தாம் கற்றனவற்றைப் பிறர்க்கு உணரச் சொல்லுமாறும் அறியார்; தாம் தோற்பதனையும் அறியார்; பின்னையும் பலவற்றையும் உரைக்கும் மாந்தர் பலருளர் என்றவாறு.

[3]சுனைத் தெழுதல்—நாத்தினவினல் பிறருடன் வாது

---

*சுனைத் தெழுதல் என்றும் பாடம்.

[1]சொல் தாறுகொண்டு எனப் பிரித்து சொல்லாகிய தாற்றுக்கோல் கொண்டு என்றுரைத்தலும் ஒன்று.

[2]சொற்கொழிப்பு—சொற்பெருக்கு.

[3]சுனைத் தெழுதல் என்பது பதுமனர் கொண்ட பாடமாகும்.

செய்ய எழுதல்.

விளக்க உரை:—எ-து. சொற்றூற்றுக் கொண்டு—தான் சொல்லுதலே மேலாகக் கொண்டு; துனைந் தெழுதல் காமுறுவர்—விரைந்து செல்லுதலை ஆசைப்படுவர்; கற்றூற்றல் வன்மையும் தாம் தேறார்—கல்விமிகுதி யுடையோர் வன்மையை யும் தெளியார்; கற்ற செலவுரைக்குமாறு அறியார்—கற்றவை இற்றை ஏறச் சொல்லும் வழியையும் அறியார்; தோற்பது அறியார்—தாம் பின்பு தோற்பதனையும் அறியார்; பல உரைக்கும் மாந்தர் பலர்—தம்முடைய நாவுக்குப் பொருந்தின சொற்கள் பலவுஞ் சொல்லி முறிந்துபோமவர் பலர் என்றவாறு.

கருத்து:—பயனில்லாத சொற்களைக் கூறுஞ் சிற்றறிவினர் அவைக் குரியராகார்.

ஒப்புமைப் பகுதி :-

"கற்றூற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொற்றூற்றுக் கொண்டு சுனைத்தெழுதல்—எற்றெனின்
தானும் கடவான் முடவன் பிடிப்பூணி
யானையோ டாடல் உறவு.

—பழ. 16.

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சில் சொல்லல் தேற்றா தவர்".

—குறள். 649.

(௩).

314. கற்றதூஉம் இன்றிக் கனக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதை,ஓர் சூத்திரம்—மற்றதனை
நல்லார் இடைப்புக்கு நாணாது சொல்லித்தம்
புல்லறிவு காட்டி விடும்.

தருமர்:—என்பது. கற்றதும் இன்றி—(தான்) ஆசிரிய னிடத்திற் பொருள் விளங்க அறிந்த பாடமல்லது; [1]கணக்காயர் பாடத்தால்—பள்ளிப் பாடத்தால்; ஓர் சூத்திரம்—ஒரு பாட்டினை; பேதை—பேதையானவன்; [2]பெற்றது ஆம்—கற்(றவனுவான்); மற்று அதனை—மற்று அந்தப் பாட்டினை; நல்லார் இடைபுக்கு —நல்லறிவுடையார் முன் புகுந்து; நாணது சொல்லி—கூசாதே சொல்லி; தன் புல் அறிவு—தன்னுடைய புல்லிய அறிவினை; காட்டிவிடும்—விளக்கி விடுவன் என்றவாறு.

நல்லறிவுடையோர் சபையில் அறிவில்லாதான் செல்லில் இவ்வகைத்தாய இழிவு எய்துவன்; அதுவன்றி அவ்வகை அறி வுடையார் இருக்கும் சபையில் நல்ல அறிவுடையார் சேருவதும் இயல்பன்று என்பதாம்.

பதுமனுர்:—என்றது. திருந்தக் கற்றதும் ஒன்று இன்றி, கணக்காயரது பாடத்தாற் பேதை பெற்றதாம் ஒரு [3]சூத்திரம் மற்று அதனை அறிவினுல் நல்லாரிடைப் புக்கு நாணது சொல்லித் தன் புல்லறிவினைக் காட்டி விடும் என்றவாறு.

கணக்காயர் பாடம்—பள்ளிப் பாடம்.

விளக்க உரை:—எ-து. கற்றதூஉம் இன்றிக் கணக் காயர் பாடத்தால் பெற்றதாம் பேதை ஓர் சூத்திரம்—ஆசாரிய னுடன் பொருள் விளங்க அறிந்த பாடமல்லது பள்ளிப் பாடத்தாற் சிலபாட்டினைப் பேதையாயினுன் கற்று; மற்றதனை நால்லாரிடைப் புக்கு நாணது சொல்லி—மற்றந்தப் பாட்டினை நற்செறிவினை யுடையோர் நடுவே புகுந்து கூசாதே சில கற்ற தனைச் சொல்லித்; தம் புல்லறிவு காட்டி விடும்—தம்முடைய

---

[1] ஆசிரியர் கற்பிக்கின்ற பாடத்தால் என்றுரைப்பினுமாம்.

[2] பெற்றதாம் என்பதனைப் பெற்றதாகிய எனப் பெயரெச்சமாக்கிச் சூத்திரம் என்பதனேடு கூட்டி உரைப்பினும் அமையும்.

[3] சூத்திரம்—நூற்பா.

புல்லிய அறிவினை விளக்குவித்து விடுவர் எ-று.

சில சொல்லுதல்—தாம் கற்ற பாட்டுக்குப் பொருள் சொல்லுதல்.

கருத்து:—நற்புலவர் அவையில் போலிப் புலவர் சென்றால் நாவடக்கம் உடையவரா யிருக்க வேண்டும்.

மேற்கோள் பகுதி:-

மயிலை } :—கண் முதலாக எண்ணப்பட்ட இருபத்
சங்கர. } தெட்டும் இடப்பொருளைக் காட்டும் உருபுகள் என்பதற்கு 'நல்லாரிடைப் புக்கு' என்பதனை மேற்கோளாக் காட்டுவர்.

—நன். சூ. 301.
—நன். சூ. 302.

ஒப்புமைப் பகுதி:—

"கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்(கு)
ஒற்கமின் றாத்தைவாய் அங்காத்தல்—மற்றுத்தம்
வல்லரு வஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்".

—நீதிநெறி. வி. 23.

(௪).

315. வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்
கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து †காய்பவரோ(டு)—ஒன்றி
உரைவித் தகம்எழுவார் *காண்பரே கையில்
சுரைவித்துப் போலத்தம் பல்.

---

†காய்வாரோடு என்றும் பாடம்.

*காண்பவே கையுள் என்றும் பாடம்.

தருமர்:—என்பது. வென்றிப் பொருட்டால்—தாம் வெல்லுவது காரணமாக; [1]விலங்கு ஒத்து—நாய் முதலாகிய மிருகங்களைப் போல; மெய் கொள்ளார்—உண்மைப் பொருளை அறியாராய்; கன்றி—மனம் புழுங்கி; கறுத்து எழுந்து—சினம் மிகுந்து; காய்பவரோடு—கோபிக்கு மவருடனே; ஒன்றி—தாமும் (பொருந்தி) எதிரெழுந்து; உரை [2]வித்தகம் எழுவார்—சொல் என்னும் [3]வித்தாரங்களைக் காட்டத் தொடங்குமவர்; தம்பல் -(அவனால் குத்தி முறிக்கப்பட்ட) தம் பல்லினை; சுரை வித்து போல—சுரை விதை போல; கையில் காண்பார்—தம் முடைய கையிலே காண்பர் என்றவாறு.

தம்மோடு ஒத்த அறிவுடையார் அல்லாதவரிடத்தில் சேர்ந்து ஒன்றிச் சொல்லும் போது அவ் வறிவில்லாதவன் தான் சொல்வி யதே மேலாகக் கருதுவன் அல்லாது அவர் சொல்வதை உட் கொண்டு அதற்கு இயையும்படி சொல்ல அறியாமையினால் நம் அறிவு கீழ்ப்படத் தாம் மேலாகக் கூறுவது என்னை என்று தன் வலி காட்டுவன்; அவனுடன் எதிர்ந்து கை கலக்கச் செல்வது அறிவுடையோர்க்கு இயல்பு அல்லவே; ஆதலால் அவையறிந்து சேர வேண்டும் என்பதாம்.

பதுமனார்:—என்றது. வென்றிப் பொருட்டாக விலங்கினை ஒத்து மெய்ப் பொருளைக் கொள்ளாது மனம் புழுங்கிச் சினந்து எழுந்து வெகுள்வாரோடு கூடித் தம் சொல்வன்மை காட்டத் தொடங்குவார் [4]சுரைவித்துப் போலும் தம் பல்லினைத் தம் [5]கையுள்ளே காண்பர் என்றவாறு.

---

[1]பகுத்தறிவின்மையால் விலங்கொத்து என்றார்.

[2]வித்தகம்—சொல்வன்மை எனினுமாம்.

[3]வித்தாரம்—விரிவு.

[4]பல் சுரைவித்துப் போல்வதை "நிரைமுத் தனைய நகையுங் காணாய் சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்த வேறுபின" என்ற மணிமேகலை யுள்ளும் காண்க

[5]கையிற் காண்பதாவது—மூடர்கள், அறிஞரைக் கன்னத்தில் அறைந்து பற்களை உதிர்த்துக் கையிற் கொடுத்தலாற் காணப்பெறுதல்.

விலங்கு ஒத்து—மிருகம் ஒத்து. கன்றிக் கறுத்து எழுந்து காய்வார்—நெஞ்சு கன்றிச் சினந் தெழுந்து வெகுள்வார். உரை வித்தகம் எழுவார்—சொல் லறிவு காட்ட எழுவார். விலங் கோர்த்து என்று பாட மோதி விலங்க ஓர்ந்து என்று பொரு ளுரைப்பாரு முளர்.

விளக்க உரை:—எ-து. வென்றிப் பொருட்டால்—தாம் வெல்லுவது காரணமாக; விலங்கொத்து மெய்கொள்ளார்—உண்மைப் பொருளை அறியாராய் நாய் முதலாகிய மிருகங் களைப் போலே; கன்றிக் கருத் தெழுந்து காய்வாரோடு—மனம் புழுங்கிச் சினமிக்குக் கோபிக்குமவருடனே; ஒன்றி உரை வித்தகம் எழுவார்—பொருந்தியிருந்து அவருடனே தாமும் எதிரெழுந்து சொல்லென்னும் வித்தாரங் காட்டுவார்; காண்பரே கையில் சுரைவித்துப் போலுந் தம் பல்—அவர் தம்மால் குத்தி முறிக்கப்பட்ட பல்லினைத் தம்முடைய கையிலே சுரை விரை போலக் காண்பர் என்றவாறு.

கருத்து:—அறிவிலிகள் முன் அறிஞர் தமது சொல்வன்மை காட்டி அவமான மடைதல் ஆகாது.

ஒப்புமைப் பகுதி :—

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்".

—குறள். 410.

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச் சொல்லுவார்".

—குறள். 719.

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்!
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு".

—பழ. 64.

'சுரைப்பழத்தின் விதை பல்லுக்கு உவமையாதலுக்கு' :—
"நிரைமுத் தனைய நகையுங் காணாய்
சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின".
—மணி. 20. 49—50.
(ரு).

316. பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
ஈன்றாட்(கு) இறப்பப் பரிந்து.

தருமர் :—என்பது. பாடமே ஓதி—(மூல)பாடத்தினையே கற்று; பயன் தெரிதல் தேற்றாத—அதன் பொருளை ஆராய்ந்தறிய மாட்டாத; மூடர்—அறிவில்லாதார்; முனிதக்க—வெறுக்கத்தக்க சொற்களை; சொல்லுங்கால்—சபையிலே சொல்லுங் காலத்து; கேடு அரும் சீர்—கெடுதற்கரிய சீர்மையினையுடைய; சான்றோர்—அமைதியுடையோர்; மற்று அவரை—மற்றந்த அறிவில்லாதாரை; [1]ஈன்றாட்கு—பெற்றவளுக்கு; இறப்ப பரிந்து—(இப்படி ஒத்தவனைப் பெற்றவளிவள் முன் சென்மத்தில் என்ன பாவத்தைச் செய்தாளோ என்று) மிகவும் இரக்கமுற்று; [2]சமழ்த்தனர் நிற்ப—(நாணி) ஒளி மழுங்கி நிற்பர் என்றவாறு.

†'பரிவதூஉஞ் சான்றோர் கடன்' என்றாற் போலத் தாம் ஒளி மழுங்கி நிற்ப வருமிடத்தும் அவர்க்கே பரிவர் என்று

---

[1]'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்—சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ப ஆதலின், தன்மகனை மூடன் எனக் கேட்ட தாய் ஈன்ற பொழுதிற் பெரிதும் வருந்துவள் என்று கருதிச் சான்றோர் மிக இரங்குதலின் 'ஈன்றாட்கு இறப்பப் பரிந்து' என்றார்.

[2]சமழ்த்தனர் நிற்ப—நாணி நிற்பர்; சான்றோர் நாணிப் பெருமையுடன் இருத்தற்குக் காரணம் அவன்தாய் வருந்துவதற்கு இரங்கினமை பற்றி என்க.

†நாலடியார் 58-வது செய்யுள்.

அவரறிவு மிகுதி கூறி, அவையறிந்து சேரார்க்கு வரும் இழிவு புலப்படுத்தியது.

பதுமனார்:—என்றது மூல பாடத்தினையே ஓதி அதன் பயனாகிய பொருளை ஆராய மாட்டாத அறிவில்லாதார் நல்லோர் வெறுக்கத்தக்கனவற்றைச் சொல்லும் பொழுது, கெடுதற்கரிய சீர்மையையுடைய சான்றோர் நாணி ஒளி மழுங்கி நிற்பர்; மற்று இவ்வறிவில்லாதான் தாய் இவனை ஈன்றதனாற் பயன் பெற்றிலன் என்று மிகவும் அவட்கு இரங்கி என்றவாறு.

முனிதக்க—நல்லார் முனியத் தக்கன. பொருள் அல்லாதன பொருளாகச் சொல்லுங்கால் இவனை மதியாராய்த் தம் ஒளி மழுங்கி நிற்பர் இவனை ஈன்றதாய் இவனைப் பெற்றது என் என்று மிகவும் இரங்கி என்பதாம்.

விளக்க உரை:—எ-து. பாடமே ஓதி—பாடத்தினைக் கற்று; பயன் தெரிதல் தேற்றாத—அதன் பொருளை ஆராய மாட்டாத; மூடர் முனிதக்க சொல்லுங்கால்—அறியாதவர் வெறுக்கத்தக்க சொற்களைச் சபையிலே சொல்லுங்காலத்து; கேடருஞ்சீர்—கெடுதற்கரிய சீர்மையினையுடைய; சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே—சான்றோர் ஒளி மழுங்கி நிற்பர்; மற்றவனை ஈன்றாட்கு—மற்று அவனைப் பெற்றவளுக்கு; இறப்பப் பரிந்து—இப்படி ஒத்தவனைப் பெற்றவள் என்ன பாவஞ் செய்தாளோ என்று அவளுக்கு மிகவும் இரங்கி என்றவாறு.

கருத்து:—தமது அவையில் அறிவிலிகள் தவறாகக் கூறியன கேட்ட சான்றோர் அமைதியுடனிருப்பர்.

மேற்கோள் பகுதி:—

நச்:—"சட்டி, சள்ளை, சமை எனவும் "சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே"........எனவுஞ் சகரம் மொழிக்கு முதலாய் வந்தவாறு காண்க. இவை "சகரக்கிளவியு மவற்றோரற்றே,

அ ஐ ஔ வெனு மூன்றலங்கடையே" என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம் பிற்காலத்து வழங்கியதாயிற்று.

—தொல். சொல். எச்ச. சூ, 56.

ஒப்புமைப் பகுதி :—

"புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா ஒருவன் உரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து".

—நாலடி 155.

(சு).

317. பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல் மற்றம்
முறிபுரை மேனியர் உள்ளம்போல் யார்க்கும்
அறிதற் கரிய பொருள்.

தருமர் :—என்பது. பெறுவது கொள்பவர்—தாம் பெறுகின்ற பயனைக் கருதி அதற்கு இயைய ஒழுகும் பரத்தையரது; தோள் போல்—தோள்கள் போல; நூல்—நூல்கள்; *நெறிபட்டு—வழிபட்டு; கற்பவர்க்கு எல்லாம்—கற்பவர்கட்கு எல்லாம்; எளிய – எளிதாய்க் கற்கலாயிருக்கும்; மற்று அ [1]முறி புரை மேனியர்—மற்று அந்தத் தளிர் போலும் மேனியினையுடையாரது; உள்ளம் போல்—நெஞ்சு போல; பொருள்—அந்நூல்களின் [2]பொருள்களோ; யார்க்கும் அறிதற்கு அரிய—யாவர்க்கும்

---

*நெறிபட்டு—கற்கும் வழியில் இறங்கி. 'நெறிப்பட்டு' எனின்—ஒரு தொடர்பு பெற்ற என்க.

[1] மாந்தளிர்—இது மேனியின் செம்மை, மென்மை, அழகு இவற்றிற்கு உவமை.

[2]பொருள் என்றது நூலின் ஆழ்ந்த உட்கருத்துக்களை.

அறிவதற்கரியன என்றவாறு.

பொதுமகளிர் ஆகையால் அவர்தோள் சேர்வது; எளிதிற் சேருமாப் போல நூலைக் கற்பதும் எளிதாயிருக்கும். அவர் மனம் யாவராலும் அளவிடலாகாதது போல நூலின் பொருளும் அளவிட்டறிய(லாகாதது) என்பதாயிற்று.

நூல்களைக் கற்றுராயினும் அவர் அறிவுடையரல்லர். அத் தன்மையார் இருக்கும் சபையிற் சேருதல் (நன்றன்று) என அறிவுறுத்தியதாம்.

பதுமனர் :— என்றது. தாம் பெறுகிற பயன்களைக் கருதி அதற்குத் தக்கதாக ஒழுகும் பரத்தையர் தோள் போல வழிப்பட்டுக் கற்பவர்க் கெல்லாம் நூல்கள் எளியவாம்; மற்றந்தத் தளிர்ப்போலும் மேனியை யுடையார் நெஞ்சுபோல யாவர்க்கும் நூலின் கருத்து அறிதற் கரியவாம் என்றவாறு.

விளக்க உரை :— எ-து. பெறுவது கொள்பவர் தோள் போல்—தாம் பெறுகின்ற பயன்களைக் கருதி அதற்குத் தக ஒழுகும் பரத்தையர் தோள் போல; நெறிபட்டுக் கற்பவர்க் கெல்லாம் எளிய நூல்—வழிபட்டுக் கற்பவர்க்கெல்லாம் நூலும் எளிய வாகும்; மற்று அம் முறி புரை மேனியர் உள்ளம்போன்று —மற்றந்தத் தளிர்போலும் மேனியை யுடையார் நெஞ்சுபோல; யார்க்கும் அறிதற்கரிது என்றவாறு.

கருத்து :— நூல்களின் நுண் பொருளையும் அறியவல்லவரே அவைக் குரியராவர்.

ஒப்புமைப் பகுதி :—

"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்".

—குறள். 813.

(எ).

318. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்-மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே, பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

தருமர்:—என்பது. புத்தகமே சாலத் தொகுத்தும்— புத்தகங்களையே மிகவும் தொகுத்து வைத்தும்; பொருள் தெரியார்—அதன் பொருளை அறியாராய்; உய்த்து—மற்றும் பல நூல்களையும் தேடிக் கொண்டு வந்து; அகம் எல்லாம் நிறைப்பினும்- [1]அகமெல்லாம் நிறைத்து வைப்பினும்; மற்று அவற்றை மற்றந்தப் புத்தகங்களை; [2]போற்றும் புலவரும் வேறே-[3]பரிகரிக்கின்ற புலவரும் வேறே; பொருள் தெரிந்து—அவற்றின் பொருளை ஆராய்ந்து; தேற்றும் புலவரும் வேறு—பிறர்க்கு அறியச் செலுத்தும் புலவரும் வேறு என்றவாறு.

அகம் நிறையப் புத்தகத்தை யுடையராயினும், அதனால் அவர் அறிவுடையர் அல்லர்; அதன் பொருளை அறியுமவரே அறிவுடையர்; ஆதலால் அவையறிந்து சேரவேண்டும் என்பதற்குப் புத்தகந் தொகுத்தாரை இழிவாக்கி அறிவுறுத்தியதாம்.

பதுமனார்:—என்றது. புத்தகத்தினை நிறையத் தொகுத்தும், அதன் உட்கொண்ட பொருளை அறியாராய்ப் போற்றி அகங்கள் எல்லாம் நிறைத்து வைப்பினும் என்னை மற்று அவற்றைப் போற்றும் புலவரும் வேறு; அவற்றின் பொருளை ஆராய்ந்து பிறர்க்குத் தேற்றும் புலவரும் வேறு என்றவாறு.

உய்த்து—பொருளல்லாதவற்றைக் கொண்டுவந்து.

---

[1] அகம்—வீடு.

[2]புத்தகந் தொகுத்தலாற் புலவராகார்; புத்தகம் தொகுத்தவருக்குப் பயன்படாது கற்பார்க்கே பயன் படுவதாயிருத்தலின் போற்றும் புலவரும் வேறு என்றார்

[3]பரிகரிக்கிற—இது பரிகரிக்கிற என்றிருத்தல் கூடும்; அதாவது கெடாமல் வைத்துக்கொள்கிற.

விளக்க உரை:—எ-து. புத்தகமே சாலத் தொகுத்தும்—புத்தகத்தினையே மிகவுந் தொகுத்து வைத்தும்; பொருள் தெரியார்—அதன் பொருளை அறியாராய்; உய்த்து அகமெல்லாம் நிறைப்பினும்—நூல்களைத் தேடிக் கொண்டுவந்து அகத்தினை நிறைத்து வைப்பினும்; மற்றவற்றைப் போற்றும் புலவரும் வேறு—மற்றவற்றைப் பரிகரித்துக் கற்கிற புலவரும் வேறு; பொருள் தெரிந்து தேற்றும் புலவரும் வேறு—அதன் பொருளை ஆராய்ந்து பிறர்க்கறியச் செலுத்தும் புலவரும் வேறு என்றவாறு.

கருத்து:—நூல்களைத் தொகுத்தலோடு அவற்றின் பொருளையும் உணர்ந்து உரைக்கவல்லவரே புலவராவர்.

(அ).

319\. பொழிப்பகலம் நுட்பநூல் †எச்சமென்(று) ஆற்றக்
கொழித்தகலம் காட்டாதார் சொற்கள்—பழிப்பில்
நிரையாமா சேக்கும் நெடுங்குன்ற நாட!
உரையாமோ? நூலிற்கு நன்று?

தருமர்:—என்பது. [1]நிரை ஆமா சேக்கும்—நிரை நிரையாகக் காட்டுப்பசுக்கள் தங்கும்; நெடு குன்றம் நாட!—உயர்ந்த மலை நாடனே!; பொழிப்பு—நூலின் பொருளைத் திரட்டிச் சுருங்கச் சொல்லலும்; அகலம்—அப்பொருளை விரித்துரைத்தலும்; நுட்பம்—(வினாவிடையால்) அப்பொருளை உள்ளபடி அறிவித்தலும்; [2]நூல் எச்சம்—நூலிற் புகுதாமல் நீங்கி நின்ற பொருளை வருவித்துரைத்தலும்; என்று ஆற்ற—என்று இப்படி மிகவும்; கொழித்து—ஆராய்ந்து; அகலம்

---

†'எச்சமிந் நான்கின்'—என்றும் பாடம்.

[1]நிரை—கூட்டம்.

[2]நூலெச்சம் என்பதனை இரண்டாகப் பிரித்து நூல் என்பதற்கு இலேசாலே பொருளை உரைத்தல் என்பதும், எச்சம் என்பதற்கு எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தல் என்பதும் பழையவுரை.

காட்டாதார்—இப்படி அப்பொருள் விரிவெல்லாம் விளங்க அறிவியாதவரது; சொற்கள்—; நூலிற்கு—ஒரு நூலுக்கு; [1]பழிப்பு இல்—பிறரால் பழிப்பு எய்தாத; நன்கு உரையாமோ—நல்ல உரை ஆகுமோ! [ஆகாது] என்றவாறு.

இவ்வகைத்தாய அறிவுடையாரே சபைக்குப் பொருந்தியவர்; அத்தன்மையர் இல்லாச் சபையிற் செல்வதும் அறிவன்று என்பதாம்.

பதுமனர்:—என்றது. திரண்ட பொருளைச் சொல்லலும், விரித்துரைத்தலும், கடாவும் விடையுமாகச் சொல்லுதலும், இலேசானே பொருளை உரைத்தலும், எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தலும் ஆகிய இந்நான்கு வகையாலும் ஆராய்ந்து விரிவான பொருளைக் காட்டமாட்டாதார் சொற்கள், காட்டுப் பசுக்கள் நிரை நிரையாகத் தங்கும் உயர்ந்த மலை நாடனே! நூலிற்குப் பழிப்பில்லாத நல்ல உரையாமோ என்றவாறு.

விளக்க உரை:—எ-து. பொழிப்பு-சுருங்க வைத்துச் சொல்லுதல்; அகலம்—விரித்துரைத்தல்; நுட்பம்—அதிற் பொருளை உள்ளபடி அறிவித்தல்; நூல் எச்சம்—நூலிற் புகுதாமல் ஒழிந்த பொருளை அமைத்துச் சொல்லுதல்; என்று ஆற்ற—என்று இப்படி மிகவும்; கொழித்து அகலம் காட்டாதார் சொற்கள்—ஆராய்ந்து இப்படியாக (விரிவான பொருளை) அறிவியாதவர் சொற்கள்; நிரையாமா சேக்கும் நெடுங் குன்ற நாட!—காட்டுப் பசுக்கள் நிரை நிரையாகத் தங்கும் உயர்ந்த மலை நாடனே!; பழிப்பில் உரையாமோ நூலிற்கு நன்கு—நூலிற்குப் பழிப்பில்லாத நல்ல உரை யாகுமோ என்றவாறு.

இப்படி அறியுமவர் யாதொரு சபைக்கும் உத்தாரங் கொடுக்க வல்லர் என்பதாம்.

கருத்து:—நூற் பொருளைப் பலவகையிலும் விரிவாக விளக்கிக்

---

[1]பழிப்பில் என்பதனை ஆமாவுடன் கூட்டிப் பொருளுரைப்பாரும் உளர்.

கூற வல்லவரே அவைக்குரியராவர்.

(கூ).

320. இற்பிறப்(பு) இல்லார் எனைத்துநூல் கற்பினும்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ?—இற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூல் தேற்றுதார்
புல்லறிவு தாமறிவ(து) இல்.

தருமர்:—என்பது. இல் பிறப்பு இல்லார்—(உயர்) குடிப் பிறப்பு இல்லாதவர்; எனைத்து நூல் கற்பினும்—எல்லா நூல்களையும் கற்றாராயினும்; [1]பிறர் சொல்லை காக்கும் [2]கருவியரோ—பிறர் சொல்லாற்றும் போது ஏற்படுங் குற்றத்தைப் †பரிகரித்து அடங்கும் அறிவுடையராக வல்லரோ?; இல் பிறந்த நல் அறிவாளர்—(உயர்) குடிப் பிறந்த நல்லறிவுடையார்; [3]நவின்ற நூல் தேற்றுதார்—(பெரியோர்) சொல்லிய நூலின் பயனைத் தெரியாதாராது; புல் அறிவு—புல்லிய அறிவை; [தாம் அறிவது இல்—தாம் அறியாதவர் போலிருப்பர்] என்றவாறு.

குடிப் பிறப்பாளர் சிறிது நூலைக் கற்றாராயினும், எல்லா நூல்களையும் கற்று ராயினும் அவர்க்கு இயற்கையாகவே அறிவுண்டாம். குடிப்பிறப்பில்லார் எல்லா நூலையும் கற்றுலும் தங்குணமன்றி அறிவு, அவரைப் போல் உண்டாகாது. அதனுல் பெரியோர் நூலின் பயன் அறியார் கருத்து இது, அறிந்தோர் கருத்து இது என்ன அறியவும் மாட்டாராய், அவையிற் சென்று சொல்லுவதில் தம்மேல் வருங் குற்றமுங் காணமாட்டார்

[1]'சொல் பிறரைக் காக்கும்' என்பதில் உருபு பிரித்துக் கூட்டப் பெற்றது.

[2]கருவி—சாதனம்; ஆவது அறிவினை.

†பரிகரித்து—நீக்கி.

[3]நவின்ற—கற்ற என்பது பதமஞர் கொண்ட பொருளாகும்.

என்பதனால் இது அவையறிதலில் சேர்க்கப்பட்டது.

பதுமனார் :—என்றது. குடிப்பிறப்பு இல்லாதார் எல்லா நூல்களையும் கற்று நிரம்ப அறிவுடையராயினும், பிறர் சொல்லின் கண் வருங் குற்றத்தைப் பாதுகாத்து அடக்குங் கருவியினை யுடையவராவரோ? குடிப்பிறந்த நல்லறிவாளர், கற்ற நூலின் பொருளைத் தெரிய வுணர்ந்திலாதாரது புல்லிய அறிவினைத் தாம் உணர்ந்தாராயினும் அறிந்திலாதார் போல் இருப்பர் என்றவாறு.

விளக்க உரை :—எ-து. இற் பிறப் பில்லார் எனைத்து நூல் கற்பினும்—குடிப்பிறப் பில்லாதார் எல்லா நூலினையுங் கற்பினும்; சொல் பிறரைக் காக்கும் கருவியரோ—பிறர் சொல்லினால் வருங் குற்றத்தினைக் காத்து அடங்கும் அறிவுடையராக வல்லரோ?; இற்பிறந்த நல்லறிவாளர் நவின்ற நூல் தேற்றுதார் புல்லறிவு தாம் அறிவதில்—குடியிலே பிறந்த நல்லறிவினை உடையார் சொன்ன நூலின் பயனைத் தெளியாராயினும்; புல்லிய அறிவினை உடையாருடைய அறிவைத் தாம் அறியாதது போலிருப்பர் என்றவாறு.

இது குடிப்பிறப்பின் தன்மை கூறல்; அவையறிதல் ஆமோ என்னில், அவையறியாதார் புல்லிய சொல் தவறிச் சொல்லில் அவையிலிருந்த அறிவுடையார் மனத்தினை இப்படி மிகவும் நோகுவிப்பர் என்பனால் (சேர்க்கப் பட்டது).

கருத்து :—பிறர் சொற்சோர்வு கண்டு இகழாது அடங்கிய உயர்குடிப் பிறப்பாளரே அவைக்குரிய ராவர்.

(ல).

பொதுவியல் முற்றிற்று.

---

6. *பகை யியல்.

33. புல்லறிவாண்மை.

தருமர் :—அஃதாவது, புல்லிய அறிவை ஆளும் ஆட்சி; அஃது ஆமாறு யாதாலுஞ் சிறிது அறிந்தது கொண்டு, எல்லாம் அறிந்தவரைப் போலத் தன்னைத்தானே மதித்துக் கொண்டு தன்னை வியந்து கூறலும், பிறர் பெருமை அறியாமல் அவரை இகழ்ந்து கூறலுமாம்.

பதுமனர் :—அஃதாவது, புல்லிதான அறிவை ஆளும் ஆட்சி; ஏதேனுஞ் சிறிது அறிந்தது கொண்டு எல்லாம் அறிந்தானாகவும், எல்லாரினுந் தான் பெரியனாகவும் தன்னைத் தானே மதித்து வியந்து கூறலும், பிறர் பெருமைகளை அறியாது தான் இகழ்ந்து கூறலுமாம்.

குறிப்பு :—

'புல்லறிவாண்மை' :—

பரிமே :—அது புல்லிய அறிவினை ஆடல் தன்மை என விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல் கொள்ளாமை.

மணக் :—புல்லறிவாண்மையாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வருங்குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோடு ஒத்த இயல்பிற்றாதலான், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி :– புல்லறிவாண்மையாவது புல்லறிவை ஆளுதல்; பேரறிவைப் பற்ற வேணும். எ-று.

—குறள். அதி. 85.

---

*மக்கட்குப் பகையாய் நின்று கெடுக்கும் இழிகுணங்களைப் பற்றிக் கூறும் பிரிவு.

321. அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்;—பொருளில்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

தருமர்:—என்பது. [1]அருளின்—தமது அருளினாலே; அறம் உரைக்கும்—அறநெறியை உரைக்கும்; [2]அன்பு உடையார் [3]வாய்ச் சொல்—அன்பினை யுடையார் சொல்லிய சொற்களை; புலவர்—பெரியோரானவர்; [4]பொருள் ஆக கொள்வர்—உண்மை யாகக் கொள்ளுவர்; பொருள் இல்லா ஏழை—ஒரு பொரு ளினுங் கூட்டத்தகாத அறிவில்லாதவன்; அதனை—அச் சொற் களை; இகழ்ந்து உரைக்கும்—இகழ்ந்து விடுவன்; (அஃது என் போல என்னில்) [5]பால் கூழை—கூழ் போலக் காய்ந்த பாலை; மூழை—(அத் துழாவிய) அகப்பையானது; சுவை உணராது ஆங்கு—சுவை அறியாதது போல என்றவாறு.

பாலின் சுவை உண்பார்க்கு அன்றித் தெரியாதது போல அறிவுடையார் சொல் அறிவுடையார்க்கே பொருந்துவது அன்றிப் புல்லிய அறிவினை யுடையார்க்குப் பொருந்தா(மையால், இகழ்ந்து விடுவர் என்று அவர் அறிவின்மையை இகழ்ந்து கூறியதாம்.

பதுமனார்:—என்றது. அருளுடைமையான் அற

---

[1] அருள்—எல்லா வுயிர்களிடத்தும் காட்டும் கருணை.

[2] அன்பு—உறவின் முறையாரிடத்துக் காட்டும் இரக்கம். 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்றபடி அன்பின்றி அருள் பிறவாமையால் இரண்டையும் கூறினர்.

[3] 'வாய்' என வேண்டா கூறினார் அவர் வாய் பயனில் சொற்களைப் பழகி யறியாது என்றற்கு எனினுமாம்.

[4] பொருள் ஆகக் கொள்வர்—பயனுடையதாக மதித்து ஏற்பர்.

[5] பாற் கூழ்—பாற்சோறு என்பாரு முளர்.

நெறியை உரைக்கும் ஆர்வமுடையார் வாய்ச்சொற்களைப் பொருளாகவே (பொதிந்து) கொள்வர் அறிவுடையார்; ஒரு பொருளாக மதிக்கப்படாத பேதை, அவர் சொல்லிய அறத்தை இகழ்ந்து (ஏற்றுக்) கொள்ளார்; பாற் கூழினை [1]மூழை சுவை உணராததுபோல என்றவாறு.

அருளின்.—அருளுடைமையாலே.

விளக்க உரை:—என்பது. அருளின் அறம் உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்—அருளினாலே அறத்தினை உரைக்கும் அன்புடையார் வாயிற்சொற்களை; பொருளாகக்கொள்வர் புலவர்—பொருள் போல மனத்திலே பொதிந்துகொள்ளுவர் அறிவுடையார்; பொருள் அல்லா ஏழை அதனை இகழ்ந்து உரைக்கும்—ஒரு பொருளினுங் கூட்டத்தகாத ஏழையானவன் அதனை இகழ்ந்து விடுவன்; பாற் கூழை மூழை சுவை உணராது ஆங்கு—கூழ் போலவே காய்ந்த பாலினை அது துழாவின பாலின் சுவையறியாது அது போலும் என்றவாறு.

கருத்து:—புல்லறிவுடையார் அறிஞர் கூறும் பொருளுரையை மதித்து ஒழுக மாட்டார்.

ஒப்புமைப் பகுதி:—

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச் சொல்லு வார்".

—குறள். 719.

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை" ஒருவர்க்கு".

—பழ. 64.

---

[1]மூழை, பாலின் சுவைப் பயன் அறியாமைபோல ஏழை அன்புடையார் சொற்பயன் அறியான் என்க.

"கல்லா ஒருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றென்றும் அறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைபுழுக்கல் உய்ப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரும் ஆறு".

—அறநெறிச்சாரம், 30.

"பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா".

—இன்னா. நாற்பது. 11.

(க).

322. அவ்வியம் இல்லார் அறத்தா(று) உரைக்குங்கால்
செவ்வியர் அல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோல் தின்னுங் †குணுங்குநாய் பாற்
சோற்றின் செவ்வி கொளல்தேற்ரு(து) ஆங்கு.

தருமர்:—என்பது. [1]அவ்வியம் இல்லார்—மனக் கோட்டம் இல்லாதவர்; அறத்து ஆறு—அறத்தினது வழியை; உரைக்கும் கால்—சொல்லுங் காலத்து; (அவற்றை) செவ்வியர் அல்லார்—மனக் கோட்டம் உடையவர்; செவி கொடுத்தும் கேட்கலார்—செவி தாழ்த்துக் கேட்கவும் மாட்டார்; (அஃது என்போல எனின்) தோல் கவ்வி தின்னும்—தோலைக் கவ்வித் தின்னுகிற; [2]குணுங்கு நாய்—பறைச்சேரியில் நாயானது; பால் சோற்றின் [3]செவ்வி கொளல்—பாற் சோற்றினை நுகர்ந்து அதன் சுவையைக் (கொள்ளுதலை) தேற்ருது ஆங்கு—அறியமாட்டாதது போல என்றவாறு.

---

†குணுக்கர் நாய் என்றும் பாடம்.

குணுக்கு—"வெண்ணெய் அளைந்த குணுக்கும்". (திவ். பெ. 2–41).

[1] அவ்வியம்—பொருமை; பிற மனக் குற்றங்களையுங் கொள்க.

[2]செல்வாத நாயானுஞ் சிறந்த பாற்சோறுண்ணலுங் கூடும்; சேரி நாய் இழிந்த தோலையே தின்னும் இயல்பினது என்றுணர்த்த 'குணுங்கு நாய்' என்ருர். 'குணுக்கர் நாய்' என்ற பாடத்திற்குச் சக்கிலியாது நாய் எனப் பொருள் உரைக்க.

[3]செவ்வி—பாற்சோற்றின் நன்மை; என்றது சுவையை.

மனக்கோட்டம் அறிவின்மையால் உண்டாகியது. அறிவுடையாரே அறத்தினது நெறியை உட்கொள்வார் அன்றிப் புல்லறிவாளர் அச்சொற்குச் செவிதாழ்க்கவுஞ் செய்யார் என அவரிழிவு கூறப்பட்டது.

பதுமனார்:—என்றது. மனக்கோட்டம் இல்லார், அறநெறியைத் தமக்குச் சொல்லுங்கால், செவ்விய மனத்தர் அல்லாதார் மற்றொரு பொருளைக் கொடுக்க வேண்டா வாயினும் செவி கொடுத்துக் கேட்கவும் மாட்டார். பொல்லா நாற்றத்தினையுடைய தோலைக் கவ்வித் தின்னும் கீழாய குணுங்கர் நாய், பாற் சோற்றின் செவ்வியைக் கொளமாட்டாது விட்டாற் போல என்றவாறு.

அவ்வியம் இல்லார்—மனக் கோட்டமில்லாதார், செவி கொடுத்தும்—மற்றொரு பொருளைக் கொடுக்க மாட்டாராயினும் செவியைக் கொடுத்தும் குணுங்கர்—செருப்புச் [1]சமைப்பார்.

விளக்க உரை:—என்பது. அவ்வியம் இல்லார் அறத்தாறு உரைக்குங்கால்—மனக்கோட்ட மில்லாதவர் அறத்தினது நெறியைச் சொல்லுங் காலத்து; செவ்விய ரல்லார் செவி கொடுத்தும் கேட்கலார்—மனக்கோட்ட முடையார் செவி தாழ்த்துங் கேட்க மாட்டார்; (அஃதென் போல வென்னில்) கவ்வித் தோல் தின்னும் குணங்கர் நாய்—தோலைக் கவ்வித் தின்னும் பறையர் நாயானது; பாற் சோற்றின் செவ்வி கொளல் தேற்றாது ஆங்கு—பாற் சோற்றின் செவ்வியினை நுகர்ந்து தெளியமாட்டாது (அது போல) என்றவாறு.

கருத்து:—புல்லறிவுடையார் பெரியோர் கூறும் அறநெறிகளைக் கேட்க மாட்டார்.

(உ).

---

[1] சமைப்பார்—செய்வார்.

323. இமைக்கும் அளவில்தம் இன்னுயிர்போம் †ஆற்றை
எனைத்தானும் தாங்கண் டிருந்தும்—தினைத் [துணையும்
நன்றி புரிகல்லா நாணில் மடமாக்கள்
பொன்றிலென்? பொன்றாக்கால் என்?

தருமர்:—என்பது. இமைக்கும் அளவில்—(கண்) இமைக்கும் அளவினுள்; தம் இன் [1]உயிர்போம் ஆற்றை—தமது இனிய உயிர்போகின்ற முறைமையை; எனைத்தானும்—எவ்வழியானும்; தாம் கண்டு இருந்தும்—தாம் அறிந்திருந்தும்; தினை துணையும்—தினை அளவாகிலும்; நன்றி புரிகல்லா—நன்றியைச் செய்ய மாட்டாத; [2]நாண் இல் [3]மடமாக்கள்—நாணமும் அறிவும் இல்லாத மனித்தர்; பொன்றில் என்?—சாகிலென்ன?; பொன்றாக்கால் என்?—சாகாதிருக்கில் என்ன? என்றவாறு.

உயிர்போவது அறிந்தும் எனவே புல்லிய அறிவு என்பதாயிற்று. அது விலங்கினதறிவு போல்வதன்றி ஞான அறிவல்லாமையால் அத்தன்மையார் இருப்பதினும் போவதினும் பயனில்லை என்று இழிவாக்கி அறிவுறுத்தியது.

பதுமனார்:—என்றது. இமைக்கும் அளவில் தமது இனியவுயிர் போம் நெறியை, எல்லாவகையானுந் தாம் கண்டிருந்தும், தினையளவாயினும் மறுமைக்கு உறுதியாய அறமதனைச் செய்யாத நாணில்லாத [4]அறிவு கெட்ட மக்கள்

---

†மார்க்கம் என்றும் பாடம்.

[1]உயிர் போமாறு அறிதலாவது, மற்றவர் உயிர் பிரிந்து போம் வழிகளைக் கண்டு, தம்முயிரும் இவ்வாறே பிரியும் என்று உணர்தல்.

[2]உலகிற்குப் பயனின்றித் தம் உயிரைக் காக்கும் செயலுக்கு உள்ளம் 'ஒடுங்காமையால்' 'நாணில் மாக்கள்' என்றார்.

[3]நாணின்மையை அகற்றும் நல்லறிவு இல்லாமையால் 'மடமாக்கள்' என்றார்.

[4]பகுத்தறி வில்லாமையால் 'மக்கள்' என்னாது 'மாக்கள்' என்றார்.

செத்தால் என்ன? வாழ்ந்தால் என்ன? என்றவாறு.

மார்க்கம்—நெறி. புரிகை—விரும்புகை.

விளக்க உரை :—என்பது. இமைக்கும் அளவில் தம் இன்னுயிர்போம் ஆற்றை—இமைக்குமளவில் தமதினிய வுயிர் போகிற முறைமையினை; எனைத்தானும் தாம் கண்டிருந்தும்—எல்லாவழியாலுந் தாங்கண்டிருந்தும்; தினைத்துணையும் நன்றி புரிகல்லா நாணில் மடமாக்கள்—தினையளவும் நன்றாகிய அறநெறி புரியமாட்டாத நாணமில்லா அறிவில்லாத மனித்தர்; பொன்றில் என்? பொன்றுக்கால் என்?—சாகில் என்? சாவாதிருந்தால் என்? என்றவாறு.

கருத்து :—புல்லறிவினர் தமது வாழ்வைப் பயனுடையதாகக் கழிக்கமாட்டார்.

ஒப்புமைப் பகுதி :—

"தினைத்துணை நன்றி"

—திருக்குறள். 11:4.

ரு).)

324. உளநாள் சிலவால் உயிர்க்கேமம் இன்றால்
பலர்மன்னுந் தூற்றும் பழியால் பலருள்ளும்
கண்டாரோ டெல்லாம் நகாஅ(து) எவனொருவன்
தண்டித் தனிப்பகை கோள்.

தருமர் :—என்பது. உளநாள்—தான் வாழும் நாளும்; சில—சிறிது நாளே யுள்ளன; உயிர்க்கு ஏமம் இன்று—உயிர் போகாது(நிற்கக்) காவல் உண்டோ எனில் அதுவுமில்லை; பலர் தூற்றும் பழி—உலகில் பலரும் நிலைபெறச் சொல்லும் பழிப்புரை

ரும்; மன்னும்—உண்டாகும்; (இப்படியிருக்க) பலருள்ளும்—பலருடனும் வைத்து; கண்டாரோடு எல்லாம்—கண்டாருடனெல்லாம்; நகாது—மகிழ்ச்சி யுடையவனாய் இராமல்; ஒருவன்—; [1]தண்டி—ஒருகாரணமுமின்றி விரோதித்து; [2]தனி—தனியனாய்; பகைகோள்—மாறுபட்டுத் திரிதல்; எவன்?—யாதோ? என்றவாறு. [ஆல் அசை]

தான் ஒருவனாயிருந்தும் பலருடன் விரோதிப்பது புல்லறிவின் தன்மையாம்.

பருமனார்:—என்றது. தான் வாழும் நாட்கள் சிலவாம்; தன் உயிர்க்கு [3]ஏமமும் இன்று; பலருந் தூற்றும் பழிப்புரையாம். பலருள்ளும் வைத்துத் தான் தலைப்பட்டார் எல்லாருடனும் மகிழாது ஒருவன் விலகித் தனியனாய்ப் பிறரோடு பகைகோடல் என்னை கொல்லோ? என்றவாறு.

விளக்க உரை:—என்பது. உளநாள் சிலவால்—தான் வாழுநாள் சிறிதால்; உயிர்க்கு ஏமம் இன்றால்—உயிருக்கு ஓர் அரண் இல்லை; பலர் மன்னும் தூற்றும் பழியால்—பலரும் நிலைபெறத் தூற்றத்தக்க பழிப்புரையாம்; பலருள்ளும்—பலருள்ளும் வைத்து; கண்டாரோடு எல்லாம் நகாது—கண்டவர்களுடனெல்லாம் மகிழ்ச்சியுடையவனாயிராமல்; எவன்? ஒருவன் தண்டித் தனிப்பகை கோள்—தான் ஒருவனாயிருந்து பலருடனும் ஒரு காரணமும் இன்றியிலே விரோதமே செய்து கொண்டு மாறுபட்டுத் திரிதல் யாதோ? என்றவாறு.

கருத்து:—எல்லாருடனும் கலந்து மகிழாது விலகிப் பகைமை

---

[1] தண்டுதல்—விலகுதல்.

[2] தனி என்ற பகுதியே வினையெச்சமாயிற்று; 'வரிப்புனைபந்து' என்புழிப் போல.

[3] ஏமம்—பாதுகாப்பு.

பாராட்டுவது புல்லறிவாகும்.

(ச).

325. எய்தி யிருந்த அவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதான் ஒருவன் ஒருவனை—வைய
வயப்பட்டான் வாளா இருப்பானேல், வைதான்
வியத்தக்கான் வாழும் எனின்.

தருமர்:—என்பது. [1]எய்தி இருந்த—(பலர்) திரண்டிருந்த; அவை முன்னர் சென்று—சபைக்கு நடுவே சென்று; ஒருவனை ஒருவன் எள்ளி—ஒருவனை ஒருவன் இகழ்ந்து; வைதான்—வைதானாக; [2]வைய வயப்பட்டான்—வசவுண்டவன்; [3]வாளா இருப்பானேல்—அதற்கு ஒன்றினையுஞ் சொல்லாமற் பொறுத்திருந்தானாகில்; வைதான்—வைதவன்; வாழும் எனின்—(வசவுண்டவன் பொறுத்த பின்) உயிர் வாழ்வானாகில்; [4]வியத் தக்கான்—அதிசயிக்கத் தக்கவன் ஆவான் என்றவாறு.

தன் புல்லறிவினாலே பெரியோர் தன்மை அறியாமல் இகழ்ச்சி செய்யில் அவர் பொறுப்பது அவர்க்கு இயல்பு; தம் இயல்பாற் பொறுத்திருக்கவே இவன் வாழ்நாள் குன்றிவிடும் என்பார், அவர் பொறுத்த பின் உயிர் வாழின் அதிசயிக்கத் தக்கான் என வியப்பது போல [5]ஏதங் கூறியது.

---

[1](ஒருவன்) கலந்திருந்த என்று உரைப்பினும் அமையும்.

[2]வைய வயப்பட்டான்—வைதற்கு உடன்பட்டவன் என்க. இனி ஏசுகையில் ஏசப்பட்டவன் என்றுரைத்தலும் ஒன்று. இப்பொருளுக்கு வயப்பட்டான் என்பதனை வையப்பட்டான் என்பதன் போலியாகக் கொள்க.

[3]வாளா இருத்தல் அவன் அறியாமையையும், தன் வினை வசத்தையும் எண்ணி என்க.

[4]வியத்தக்கான் என்றது எளியவன் உயிர் வாழ்தல் அரிது என்றபடி.

[5]ஏதம்—தீங்கு.

பதுமனார்:—என்றது. பலர் திரண்டிருந்த சபைக்கு நடுவே சென்று ஒருவனை இகழ்ந்து வைதான் ஒருவன்; அவன் வைவதற்கு அவன் உடன்பட்டு எதிராமல் இருந்தானாகில், வைதான் அவன் பொறுத்தபின் உயிர் வாழ்வானாகில் அதிசயிக்கத் தக்கவன் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. எய்தி யிருந்த அவை முன்னர்ச் சென்று—திரண்டிருந்த அவைக்கு நடுவே சென்று; எள்ளி வைதான் ஒருவன் ஒருவனை—ஒருவனை இகழ்ந்து வைதான் ஒருவன்; வைய வயப்பட்டான் வாளா இருப்பானேல்—அவன் வசவை உண்டவன் அதற்கு ஒன்றினையுஞ் சொல்லாமற் பொறுத்திருப்பானாகில்; வைதான் வியத்தக்கான் வாழும் எனின்—வைதவன் அவன் பொறுத்தபின்னும் உயிர் வாழ்வானாகில் அதிசயிக்கத் தக்கான் ஆவன் என்றவாறு.

கருத்து:—பெரியோரை இகழ்ந்து பேசி வாழ்நாள் குன்றப் பெறுதல் புல்லறிவினர் தன்மையாம்.

(ரு).

326. மூப்புமேல் வாராமை முன்னே அறவினையை
ஊக்கி அதன்கண் முயலாதான்—நூக்கிப்
புறத்திரு போகென்னும் இன்னாச்சொல் இல்லில்
தொழுத்தையாற் †காணப் படும்.

தருமர்:—என்பது. மூப்பு—மூப்பினை; மேல் வாராமை முன்னே—தான் மேற்கொள்ளா முன்னே; அறவினையை—அறத்தினது நெறியை; ஊக்கி—மேற்கொண்டு; அதன்கண் முயலாதான்—அதனை முயன்று செய்யாதவன்; இல்லில்—தன் வீட்டில்; நூக்கி—(உள்ளினின்று புறம்பாகத்)தள்ளி; புறத்து இரு—வெளிப் புறத்திலே இரு; போகு—(இவ்விடம்விட்டுப்) போ;

---

†கூறப்படும் என்றும் பாடம்.

என்னும்—என்று சொல்லும்; இன்னாச் சொல்—பொல்லாச் சொல்லை; [I]தொழுத்தையால்—வெள்ளாட்டியாலே; காணப் படும்—கேட்கப் படுவான் என்றவாறு.

மூப்பு வந்தால் யாவராலும் இகழப் படுவான் ஆதலால், இளமைப் பருவத்திலே துறந்து மறுமைக்கு உறுதியினைக் காணக் கடவன் என்பதாம். நல்லறிவுடையார்க் கல்லது புல்லறி வாளர்க்கு இவை தோன்றாமையால், தொழுத்தையாற் காணப் படுவன் என வற்புறுத்தியது.

பதுமனார்:—என்றது. மூப்பு வருவதன் முன்னமே அறத்தினது நெறியை மேற்கொண்டு செய்யானாகில், (தன் மனையில்)உள்ளினின்று தள்ளிப் புறம்பே இரு, போ, என்று, கையைப் பிடித்துவிட்டு வெள்ளாட்டி இகழ்ந்துவிடத் தக்கதாய் இருக்கும் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. மூப்புமேல் வாராமை முன்னே—மூப்புமேல் வருவதற்கு முன்னம்; அறவினையை ஊக்கி அதன்கண் முயலாதான்—அதற்கு முன்னே அறத்தினது நெறியை மேற்கொண்டு அதனை முயன்று செய்யாதவன்; நூக்கிப் புறத்து இருபோகென்னும் இன்னாச் சொல்—தன்னைத் தள்ளி உண்ணின்றும் புறம்பே போயிரு என்கிற பொல்லாத சொல்லை; இல்லுள் தொழுத்தையால் கூறப்படும்—தன் வீட்டில் வெள்ளாட்டியாற் சொல்லத் தகுவன் என்றவாறு.

மூப்பு வந்தால் பின்பு யாவராலும் இகழ்ப்படுவார் ஆதலின், இளமைப் பருவத்திலே துறந்து மறுமைக்கு உறுதியை யுடையராக வேணும் என்பதாம்.

கருத்து:—புல்லறிவாளர் இளமையிலேயே அறஞ் செய்ய அறியாராய்ப் பின் ஏவலாளராலும் இகழப்படுவர்.

[I]தொழுத்தை—தொழும்பன் என்பதன் பெண்பாற் சொல்.

ஒப்புமைப் பகுதி :-

"திறைமன்ன ருய்ப்பத் திருநிற்பச் செங்கோ னடப்பக்
குறைவின்றிக் கொற்ற முயரத் தெவ்வர்தேர் பணிய
உறைகின்ற காலத் தறங்கேட் டுருமுற்ற பாம்பின்
அறிவன் னடிக்கீழ் அரசஞ்சித் துறந்த வாறும்".

—சீவக. பதி. 27.

(சு)

327. தாமேயும் இன்புறார் தக்கார்க்கும் *நன்காற்றார்
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

கருமர் :—என்பது. புல் அறிவினர்—புல்லிய அறிவினை யுடையார்; தாமேயும்—தாமாகிலும்; இன்பு உறார்—(நல்ல நுகர்ச்சிகளை நுகர்ந்து) இனிமை யுற்றிரார்; [1]தக்கார்க்கும்—தகுதியுடையார்க்கும்; நன்கு ஆற்றார்—நன்மைகளைச் செய்யார்; ஏமம் சார்—தமக்கு அரணாகிய; நல்நெறியும்—அறநெறியையும்; [2]சேர்கலார்—அறிந்து செய்யமாட்டார்; தாம் மயங்கி—தமக்கு மறுமைக்கு உறுதியானவற்றை மறந்து; [3]ஆக்கத்துள் தூங்கி—தமது ஆக்கத்திலே தங்கி; அவத்தமே—பயனின்றியே; வாழ்நாளை போக்குவார்—வாழ்நாளைக் கழிப்பர் என்றவாறு.

நல்லறிவுடையார்க் கல்லது புல்லறி வாளர்க்கு இந்நெறி தெரியாமையால் வாழ்நாளை வீணே கழிப்பர் என வற்புறுத்தியது.

---

*நன்றாற்றார் என்றும் பாடம்.

[1]'தக்கார்க்கும்' என்றார் தானம் பெறுதற்கு உரியார் அவராகலின்.

[2]சேர்கலார்—அடையமாட்டார் எனினுமாம்.

[3]ஆக்கத்துள் தூங்குதலாவது—தமது செல்வத்தில் திளைத்து மகிழ்ந்திருத்தல்.

பதுமனார் :—என்றது. தாமும் நல்ல நுகர்ச்சியினை நுகர்ந்து இனிமையுடன் இரார்; தகுதியுடையவர்க்கும் நன்மையான தானஞ் செய்யார்; தமக்கு அரணாக அமைந்த துறவுநெறியிலும் நில்லார்; தாம் அறிவு கெட்டுச் செல்வம்பெற வேண்டி ஒழுகிப் பயனின்றியே வாணாளைக் கழிப்பர் புல்லறிவினை யுடையார் என்றவாறு.

விளக்க உரை :—என்பது. தாமேயும் இன்புறார்—தாமோ என்னில் நல்ல நுகர்ச்சிகளை நுகர்ந்து இனிமையுற்றிரார்; தக்கார்க்கு நன்றாற்றார்—தகுதியுடையார்க்கு நன்மைகளைச் செய்யார்; ஏமம் சார் நன்னெறியும் சேர்கலார்—தமக்கு அரணாகி அமைந்த நல்ல அறத்தினது நெறிகளையும் செய்யமாட்டார்; தாம் மயங்கி—தாம் மறுமைக்கு உறுதியை மறந்து; ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப் போக்குவார் புல்லறிவினார்—ஆக்கத்திலே தங்கிப் பயனின்றியே வாழ்நாளைக் கழிப்பர் புல்லிய அறிவினை யுடையார் என்றவாறு.

ஆக்கத்துள் தூங்குதல்—இறவாமல் இருப்போம் என்று செல்வத்தில் மகிழ்ந்திருத்தல்.

கருத்து :—புல்லறிவாளர் செல்வத்தைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படவொட்டாமற் செய்து வீண் காலங் கழிப்பர்.

(எ).

328. சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்-இறுகிறுகிப்
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார்
பொன்னும் புளிவிளங்காய் ஆம். [கைகாட்டும்

தருமர் :—என்பது. சிறுகாலையே—இளமைப் பருவத்திலே தொடங்கி; [1]தமக்கு செல்வுழி வல்சி—தாம் இறந்து

---

[1] தம்செல்வுழிக்கு வல்சிஎன உருபு பிரித்துக் கூட்டுக.

செல்லுமிடத்துக்கு அறமாகிய உணவினை; இறுக இறுக—சிக்கென; [1]தோள் கோப்பு கொள்ளார்—கட்டுச் சோறாகக் கட்டிக் கொள்ளாராய்; இறுக இறுகி—பொருளைக் கைவிடாது இறுக்கி; பின் அறிவாம் என்று இருக்கும்—அறத்தைப் பின்பே செய்வோம் என்று சேமஞ் செய்திருக்கும்; பேதையார்—அறிவில்லாதவர்; கைகாட்டும் பொன்னும்—(தான் இறக்குங் காலத்து நாவெழுந்து பேச வொண்ணாமையால், தாம் வைத்த பொன்னை [அறஞ்செய்க எனத்]தன் உரிமையார் அறியக்) கைக்குறிப்பாகக் காட்டும் பொழுது அப்பொன்னும்; புளி விளங்காய் ஆம்—([2]அதன் நிலை அறிந்தாள்) புளித்த விளங்காய் கேட்கிறார் என்று உரிமையார்க்கு உரைத்தவாறும் என்றவாறு.

இதற்கு உதாரணச் செய்யுள் :—

*"கையாற் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே என்கின்றீர் ஆங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோவெனச் சிறந்தாள்போல் சிறவாக் கட்டுரையால் குறித்தல் எல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்".

பதுமனார்:—என்றது. முற்காலத்தே தொடங்கித் தமக்குச் செல்லும் மறுபிறப்பிற்கு வேண்டும் அறம் என்னும் உணவினை,

---

[1]வழிப் பயணத்திற்கு வேண்டும் பொதிசோறு தோளிற் கோக்கப் படுவதால் 'தோட் கோப்பு' என்றார்.

[2]மனைவியாவாள்; பேதை, 'பொன்னை அறஞ் செய்க' என்று காட்டிய கைக் குறிப்பினை அறிந்த மனைவி, தான் அறஞ் செய்தற்கு ஒருப்படாமையால் 'புளிவிளங்காய் உண்பதற்கு இது பருவமன்று' என்று கூறி மறுத்தவாறும்.

*சீவக சிந்தாமணி, 6 : 142 ஆம் செய்யுள்.

யாப்புறத் தோட்கோப்பாகக் கொள்ளாது மிகப்[1] பற்றுள்ளம் செய்து, மறுமைக் குதவும் உணவினைச் சாம்பொழுது செய்வோம் என்று கருதி இருக்கும் பேதையார், தாம் சாம் காலத்துப் பேசமாட்டாமையாற் பிறர்க்குக் கொடுத்தற்குத் தருக என்று காட்டும் பொற் கட்டியும், சுற்றத்தார் சொல்லும் வகையால் புளி விளங்காயாம் என்றவாறு.

சிறுகாலை—முற்காலம். வல்சி—பொதிசோறு. இறுக இறுகி—மிகப் பற்றுள்ளம் செய்து. பின்னறிவாம் என்றிருக்கும்—அறத்தைப் பின் அறிந்து செய்வேம் என்றிருக்கும். பேதை—அறிவில்லாதவன். பேசமாட்டாத காலத் தறஞ்செய்தற்குக் கைகாய் என்பர்.

விளக்க உரை :—என்பது. சிறு காலையே தமக்குச் செல்வுழி வல்சி—முற்காலத்திலே தொடங்கித் தாம் இறந்து செல்லுமிடத்துக்கு அறமாகிய உணவினை; இறுகிறுகத் தோட் கோப்புக் கொள்ளார்—சிக்கெனவே தோட்கோப்பாகிய ஆற்றுணவினைக் கொண்டு போகின்றிலர்; இறுக இறுகிப் பின் அறிவாம் என்றிருக்கும் பேதையார்—பொருளைக் கைவிடாமல் இறுக்கிப் பின்பே அறத்தைச் செய்கிறேம் என்றிருக்கும் அறியாதவர்; கைகாட்டும் பொன்னும் புளிவிளங்காயாம்—தாம் இறக்குங் காலத்து நாவிழந்து பேச வொண்ணாமையால் அவர் கைகாட்டின பொன்னும் புளித்த விளங்காயாம் என்றவாறு.

கருத்து :—தேடிய செல்வத்தால் இளமையிலேயே அறஞ் செய்யாது பின் வருந்துவது புல்லறிவாளர் இயல்பாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து

---

[1] பற்றுள்ளஞ் செய்தலாவது—பொருள் மீதுள்ள பற்றுதலால் அதனைச் செலவிடாது செட்டுச் செய்தல்.

நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை
நாய்காணிற் கற்காணு வாறு".

—பழ. 361.

(அ).

329. வெறுமை யிடத்தும் *விழுப்பிணிக் கண்ணும்
‡வறுமை மனத்தாரே ஆகி—மறுமையை
ஐந்தை அனைத்தானும் ஆற்றிய காலத்தும்
சிந்தியார் சிற்றறிவி னர்.

தருமர் :—என்பது. சிறு அறிவினர்—புல்லிய அறிவுடையார்; [1]வெறுமை இடத்தும்—தாம் வறுமையுற்ற விடத்தும்; [2]விழு பிணிக்கண்ணும்—விழுமிதான பிணியுற்ற காலத்தும்; வறுமை மனத்தாரே ஆகி—வறுமையுற்ற மனத்தராய்; மறுமையை—மறுமைக்கு உறுதியான காரியங்களை; ஆற்றிய காலத்தும்—தாம் செல்வ முடையராய் முயலுங் காலத்திலும்; [3]ஐந்தை அனைத்தானும்—ஒரு சிறு வெண்கடுகு அளவாயினும்; சிந்தியார்—நினையார் என்றவாறு.

அறிவுடையார் செல்வ மில்லாது வறுமையுற்ற காலத்தும் அறத்தோடு இயைந்து ஒழுகுவர்; அறிவில்லாத புல்லறிவாளர் தாம் செல்வமுடைய காலத்தும், அதனைச் சிறு கடுகளவாயினும் நினைக்கவுஞ் செய்யார் என்று அவர் அறிவின்மையாகிய

---

*'விழுப் பிணிப் போழ்தும்' என்றும் பாடம்.

‡'மறுமை மனத்தரே ஆகி' என்றும் பாடம்; இப்பாடத்திற்கு மறுமைக்கு உரிய அறநினைவினராய் எனப் பொருள்கொள்க.

[1]வெறுமையாவது; நுகர்ச்சிக்குரிய பொருள் எதுவும் இல்லாமை; ஆவது வறுமை.

[2]விழுப்பிணியாவது மிக்க நோய்; துன்பந்தரும் நோய் எனினுமாம்.

[3]ஐந்தை—வெண்சிறு கடுகு; இது சிறுமைக்கு எடுத்துக்காட்டப்படும் உவமை.

கொடுமை கூறியதாம்.

பதுமனார் :—என்றது. வறுமையுற்ற விடத்தும், சீரிய பிணி வந்துற்ற காலத்தும் மறுமையுற்ற மனத்தினராய் மறுமைக்கு உறுதியான தருமத்தை, ஒரு சிறுவெண்கடுகு அளவாயினும் செல்வ முண்டான காலத்தும் நினையார் புல்லிய அறிவினையுடையார் என்றவாறு.

வெறுமை—வறுமை. விழுப்பிணி—சீரிய பிணி. ஆற்றிய காலத்து—செல்வ முண்டான காலத்து.

விளக்க உரை :—என்பது. வெறுமை யிடத்தும் விழுப் பிணிப் போழ்தும்—வறுமையுற்ற விடத்தும் சீரிய பிணி வந்துற்ற காலத்தும்; மறுமை மனத்தரே ஆகி—தன்மம் இட்டாராய் மறுமையுற்ற மனத்தினராய்; மறுமையை—மறுமைக்கு உறுதி யான தருமத்தினை; ஐந்தை அனைத்தானும்—ஒரு சிறு வெண் கடுகு அளவாயினும்; ஆற்றிய காலத்தும்—செல்வ முடையராய் முயன்று திரியுங் காலத்தும்; சிந்தியார் சிற்றறிவினர்—அந்தச் சிறு வெண்கடுகள வாயினும் நினையார் புல்லிய அறிவினை யுடை யார் என்றவாறு.

கருத்து :—புல்லறிவாளர்க்கு அறநினைவு, துன்பக் காலத்தே யன்றி இன்பக்காலத்தும் தோன்றாது.

(கூ).

330. என்னேமற் றிவ்வுடம்பு பெற்றும் அறம்நினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—அன்னோ!
அளவிறந்த காதற்றம் ஆருயி ரன்னார்க்
கொளஇழைக்குங் கூற்றமுங் கண்டு.

தருமர்:—என்பது. அன்னோ!—ஐயோ!; [1] அளவு இறந்த காதல்—எண்ணிறந்த காதலையுடைய; தம் ஆர் உயிர் அன்னார்—தமது பெறுதற்கரிய உயிர் போல்வாரை; கொள இழைக்கும்—உயிர் கொள்ளக் கருதும்; [2] கூற்றம் கண்டும்—கூற்றுவனைக் கண்டு வைத்தும்; என்னே—யாது தான்; இ உடம்பு பெற்றும்—இப் பெறுதற்கரிய [மக்கள்] உடம்பைப் பெற்றும்; அறம் நினையார்—அறஞ் செய்தற்கு நினைக்கின்றிலர்; தம் வாழ்நாளை கொன்னே கழிப்பர்—தம்முடைய வாழ்நாளை ஒருபயனு மின்றியே கழியா நிற்பர் [[3] புல்லறிவாளர்] என்றவாறு. [மற்று—அசை].

தமது காதலாளரைக் கூற்றங் கொண்டேகுவது கண்டிருந்தும், தமது நிலைமையும் இவ்வளவு என வுணர்ந்தும் மறுமைக்கு உறுதியாகிய அறநெறியிற் செல்லாதது இவர் அறிவின்மை யன்றோ; இவர் எவ்வகைத்தாய் உய்யக் கடவர் என உயர்ந்தோர் இரக்கமுற்றுக் கூறியதாம்.

பதுமனார்:—என்றது. மிக்க மக்கள் யாக்கையைப் பெற்று வைத்தும் அறஞ்செய்தலை நினையாது பயனின்றியே தம் வாணாளைப் போக்குவர்; ஐயோ! அளவினைக் கடந்த அன்பினையுடைய தம் அரிய உயிரைப் போன்றோரது சீரிய உயிரைக் கொள்ளச் சூழும் கூற்றத்தையுங் கண்டு என்றவாறு.

உலகத்துத் தோற்றப்பட்ட உயிர்கள் எல்லாம் எண்ணில. கற்பாந்தரஞ் செய்த பழவினைகளாலே ஒரு பிறப்பிலே எழுபடியாக எழுபிறப்பும் ஊர்ந்தும், தத்தியும், பறந்தும், நடந்தும், நரகங்களிற் கிடந்தும் இப்படிச் சுழலப் பிறந்து இறந்து திரிவன; நூற்றுக் கொருக்காலும் யாதோர் யாக்கையேயாயினும், பிறப்புப் பொல்லாது என்று பிறப்பறும் ஒழுக்கமாகிய ஞானம் பிறவாது. அப்பெற்றிப்பட ஞான முள்ளது மானிட யாக்கை. (அது)

---

[1] அளவிறந்த காதல்—அளவு கடந்த அன்பு.

[2] கூற்றம்—வாழ்நாளைக் கூறு படுத்துவது அல்லது உடலையும் உயிரையும் கூறுபடுத்துவது.

[3] புல்லறிவாளர் என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க.

பெற்றாரிலும் சிலர் காதலால் என்னே மற்றிப் பெறுதற்கரிய யாக்கையைப் பெற்றும், அளவிறந்த காதல் தம் ஆருயிரன்னாராகிய தாம் பெற்ற மக்களும்,............... ஆகியோருயிரையும் கொள இழைக்குங் கூற்றத்தையும் கண்டுவைத்தும், தமக்கு மரணம் உண்டென்று கருதித் தறவற முதலிய அறங்கள் செய்ய நினையார்; பயன்கொள்ளுதற்குரிய வாணாளைப் பயன் கொள்ளாது கழிப்பார் ஐயோ இப்புல்லறிவாளர் என்றவாறு.

என்னே, அன்னோ என்பன அருளின்கட் குறிப்பு.

விளக்க உரை:—என்பது. என்னே மற்றிவ் வுடம்பு பெற்றும் அறம் நினையார்—என்னே மற்றிந்தப் பெறுதற் கரிய உடம்பினைப் பெற்றும் அறஞ் செய்தற்கு நினையார்; கொன்னே கழிப்பர் தம் வாழ்நாளை—ஒரு பயனின்றியே கழிப்பர் தம்முடைய வாழ்கின்ற நாளை; அன்னோ அளவிறந்த காதல் தம் ஆருயிர் அன்னார்—ஐயோ எண்ணிறந்த காதலையுடைய தமது பெறுதற்கரிய உயிர் போல்வாரை; கொள இழைக்கும் கூற்றமும் கண்டு—உயிரைக் கொள்ளுதற்குக் கருதும் கூற்றத்தினையும் கண்டு வைத்தும் அறஞ்செய்கின்றிலர் என்றவாறு.

கருத்து:—யாக்கை நிலையாமையை அறிந்தும் அறஞ் செய்யாது நற்கதியை இழப்பர்.

(ம).

---

34. *பேதைமை.

தருமர்:—அஃதாவது [1]இந்திரியங்களின் வழியே ஓடி அந்தந்த அநுபோகங்களை உண்மையாகக் கருதி, அந்தப்

---

*ஒன்றும் அறியாமை.

[1]இந்திரியம்—ஐம்பொறிகள்.

[1]பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றினையுமே துணிந்து நின்று; [2]அநுமான சாத்திரம் முதலாகிய பிரமாணங்களை இல்லை என்று மயங்கி, மறுமைக்கு உறுதியையும் இழந்து, இந்தப் பிறப்புத் தன்னிலும் உலகத்துக்கு இயற்கையாகிய முறைமைகளைத் தனக்குச் சிறந்தவர்கள் அறிந்தவர்கள் சொல்லவும் உட்கொள்ளாமல் இகழ்ந்து, தீய இனத்தாருடனே இணங்கி, யாவராலும் இகழப்பட்டு, இம்மைப் பயனையும் இழப்பது என்பதாம்.

பதுமனார் :— அஃதாவது கண்டும், கேட்டும், உண்டும், மோந்தும், உற்றும், அறிவனவும் இவற்றைப் பற்றி இயலுந் தொழில்களால் வருவனவும், இந்திரியங்களால் மருவி அறிந்து சொல்லுமவை செவிகளாற் கேட்டறிவதல்லது, மற்றோர் [3]அதிட்டங்களாகச் சொல்லுமவை கேளாதாதலும், [4]ஒரு........தொடங்கில் தன்னால் முடியாதனவும், பிரயோசனப் படாதனவும் ஆகி விடுதலும், பயனில்லாத சொற்களைப் பரக்கச் சொல்லுதலும், [5]சாரியாய்த் திரியுமாம்.

குறிப்பு :—

'பேதைமை' :—

பரிமே :—இனி, அங்கட்பினை எதிர்மறுத்துப் பகை முகத்தால் கூறிய தொடங்கினார். அப்பகைதான் முற்றக்கடியும் குற்றமன்மையின் உளவாய வெகுளியானும், காமத்தானும் வருவதாம். அவற்றுள், வெகுளியான் வருவன ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப் படுத்து,

---

[1]பிரத்தியட்சப் பிரமாணம்—காட்சியளவை.

[2]அநுமானப் பிரமாணம்—கருதலளவை.

[3]அதிட்டம்—நல்லூழ்போகம்.

[4]சில எழுத்துக்கள் சிதைந்திருக்க வேண்டும்; ஆதலின் கருத்துப் புலப்படவில்லை.

[5]சாரியாய்த் திரிதல்—சுழன்று திரிதல்.

இரண்டதிகாரத்தால் கூறுவான் தொடங்கி முதற்கண் பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதும் அறியாமை.

மணக்:—பேதைமையாவது கேட்டிற்குக் காரணமாகிய வற்றை அறியாதாரியல்பு கூறுதல். இறைமாட்சி முதலாக கூடாநட்பு ஈருகப் பொருட்பகுதியாகிய...........ஆறு உறுப்பும் கூறினர். இனி அவ்வரசர்க்கும் அவராலாக்கப்பட்ட பொருட் கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்குமாறு கூறவேண்டு மாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:—பேதைமையாவது அறிவின்மையான குணம் அதனை விடுக.

—குறள். அதி. 84.

331. கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியா(து) அந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் *கொடுங்கூற்றம் கோள்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

தருமர்:—என்பது. கொலை வல்—தம்மைக் கொல்லு தலில் வல்ல; பெருங் கூற்றம்—பெரிய கூற்றமானது; கோள் பார்ப்ப—உயிர் கொள்ளும் உபாயம் பார்த்துத் திரிய; ஈண்டை—இவ்விடத்து; வலை அகத்து—வலையாகிய மனைவாழ்க்கையின் கண்ணே; செம்மாப்பார்—(ஒழுகி அதன்கண் உண்டாகிய இன்பங்களை அனுபவித்து அதனை நிலையாகக் கருதிச்) செம்மாந் திருக்குமவர்; [1]மாண்பு—மாட்சிமை; கொலைஞர்—ஆமையைக் கொல்லுமவர்; உலை ஏற்றி—நீரை உலையாக வைத்து; தீ மடுப்ப—(அதனுள் ஆமையை இட்டுத்) தீயை மூட்ட; ஆமை—அவ் வாமையானது; நிலை அறியாது—மேல் தனக்கு வருகின்ற நிலைமை அறியாது; அ நீர் படிந்து—அந்நீரிலே முழுகி; [2]ஆடி

---

[1] மாண்பு என்றது இங்கே இழிவு கருதியது.

[2] ஆடி என்பது ஆடினல் என்ற வினையெச்சத்தின் திரிபு.

*பா-ம்:—' பெருங்கூற்றம்'—தருமர் & விளக்கவுரை.

அற்று—விளையாடினாற் போலும் என்றவாறு.

செம்மாத்தல்—மகிழ்ச்சியால் இறுமாந்திருத்தல்.

பதுமனார் :—என்றது. கொலைஞர் உலை ஏற்றி (அதனுள் ஆமையை இட்டுத்) தீயை மூட்ட, அவ்வாமை அந்நீரின்கண் மேல்வரும் நிலையை அறியாதே குளித்து விளையாடினாற் போலும், கொலையில் வல்ல பெருங்கூற்றம் தம்மை கொள்ளுங் கோளைப் பாரா நிற்ப, இவ்விடத்துள்ள (மனை வாழ்க்கையாகிய) வலையுள் அகப்பட்டு நின்று களிப்பாரது மாட்சி என்றவாறு.

நிலை—மேல் வரும் நிலை.

விளக்க உரை :—என்பது. கொலைஞர் உலை ஏற்றித் தீ மடுப்ப—ஆமையைக் கொல்லுமவர் நீரை உலையாக வைத்து அதனுள்ளே அந்த ஆமையை விட்டுத் தீயை மூட்ட; ஆமை நிலை அறியாது அந்நீர் படிந்து ஆடியற்றே—அந்த ஆமை மேல் தனக்கு வருகிற நிலைமையினை அறியாமல் அந்த நீரிலே மூழ்கி விளையாடினாற் போலும்; கொலைவல் பெருங் கூற்றம் கோள் பார்ப்ப—தம்மைக் கொல்லுகிற பெரிய கூற்றம் தமதுயிரைக் கொள்ளும் கோளினைப் பார்த்துத் திரிய; ஈண்டை வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு—இவ்விடத்து மனைவலையிலே அகப்பட்டு நின்று மனைவாழ்க்கையின் கண்ணே ஒழுகி, அதன்கண் உண்டாகிய இன்பங்களை அனுபவித்து, அதனை நிலையாகவே கருதிச் செம்மாந்திருக்குமவர் மாட்சிமையது போலும் என்றவாறு.

செம்மாப்பு என்பது மகிழ்ந்திறுமாந்திருத்தல்.

கருத்து :—தமக்கு மேல்வரும் துன்பத்தை அறியாது உலக வாழ்வில் மகிழ்வது பேதைமை யாகும்.

ஒப்புமைப் பகுதி :—

"வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க

மறிகுளகு உண்டன்ன மன்னு மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல்".

—நாலடி. 16.

(௧).

332. பெருங்கடல் ஆடிய சென்ருர் ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும் என்றற்ருல்
இற்செய் குறைவினை நீக்கி அறவினை
மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு.

தருமர் :—என்பது. இல் செய் குறைவினை நீக்கி—மனை வாழ்க்கையிற் செய்யவேண்டிய காரியங்களைக் குறைவற முடித்து; அறவினை—தன்ம காரியங்களை; மற்று அறிவாம்—பின்பு செய்வோம்; என்று இருப்பார் மாண்பு—என்று இருக்குமவர் மாட்சிமை; பெருங்கடல் ஆடிய சென்ருர்—பெரிய கடலிலே தீர்த்தமாடச் சென்றவர்; ஓசை [1]ஒருங்கு உடன் அவிந்தபின்— கடலின் ஓசை ஒருவழிப்பட்டு முழுவதும் அடங்கினபின்; ஆடுதும் [2]என்று அற்று—தீர்த்தமாடுவோம் என்று காத்திருந்த தன்மைத்து என்றவாறு. [ஆல்—அசை]

பேதைமையால் இத்தன்மையாக அறநெறியை இகழ்ந்திருந்து இம்மை மறுமை இரண்டினையும் இழப்பர் என்பதாம்.

பதுமனுர் :—என்றது. பெருங்கடலிலே நீராடவேண்டிச் சென்றவர், கடலின் ஓதை யெல்லாம் ஒருங்கே அவிந்தாற் பின்னை நீராடுவோம் என்று கருதி யிருந்தாற் போலும், மனைவாழ்க்கையி லுள்ள குறையை நிரம்ப முடித்து அறவினைகளைப் பின்பு செய்வோம் என்றிருப்பவரது மாட்சிமை என்றவாறு.

ஆடிய—ஆடவேண்டி. மற்று அறிவாம்—பின்பு செய்வோம்.

---

[1] ஒருங்கு உடன் என்பன ஒருபொருட் பன்மொழி.

[2] என்ருல் என்ற வினையெச்சம் என்று எனத் திரிந்தது.

விளக்க உரை :—என்பது. பெருங்கடல் ஆடிய சென்றார்—பெரிய கடலிலே தீர்த்தமாடச் சென்றவர்; ஒருங்குடன் ஓசை அவிந்தபின் ஆடுதும் என்றற்றால்—ஒருவழிப்பட ஓசை முழுதும் அடங்கினவற்றே ஆடுகிறோம் என்றிருந்த தன்மைத்து; இற்செய் குறைவினை நீக்கி—மனை வாழ்க்கையி லுள்ள காரியங்களைக் குறைவற முடித்து; அறவினை மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு—தன்ம காரியங்களைப் பின்பே செய்கிறோம் என்றிருக்குமவரது மாட்சிமை என்றவாறு.

கருத்து :—மனைவாழ்விற்குரிய காரியங்கள் ஓயாதவை ஆதலின் அறத்தைப் பின்பு செய்வோம் எனக் கருதுவது பேதைமை.

ஒப்புமைப் பகுதி :—

"திரை அவித்து நீராட லாகா உரைப்பார்
உரைஅவித்து ஒன்றுஞ்சொல் இல்லை—அரைசராய்ச்
செய்தும் அறமெனினும் ஆகா துளவரையால்
செய்தவற்கே ஆகும் திரு.

—*அறநெறிச்சாரம்*. 29.

"திரையவித் தாடார் கடல்".

—*பழமொழி நானூறு*. 317.

(உ).

333. குலந்தவங் கல்வி குடிமைமூப்(பு) ஐந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்—நலஞ்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றின் நேர்.

தருமர் :—என்பது. குலம்—நல்ல குலப் பிறப்பும்; தவம்—தவமும்; கல்வி—கல்வியுப்; குடிமை—குடி யொழுக்கமும்; மூப்பு—குண[1] நிரப்பமும்; ஐந்தும்—ஆகிய இவ்வைந்தும்; விலங்

---

[1] நிரப்பம்—நிறைவு.

காமல்—தப்பாமல்; எய்தியக் கண்ணும்-(ஒருவற்கு) உண்டான விடத்தும்; நலம் சான்ற—நன்மை அமைந்த; மை அறு—குற்ற மற்ற; தொல் சீர்—பழைய சீர்மையினையுடைய; உலகம் அறியாமை—உலக வழக்கத்தை அறியாமை; நெய் இலா பால் சோற்றின் நேர்—நெய்யில்லாத பாற்சோற்றினை ஒக்கும் என்றவாறு.

பாற் சோறு—பாயசம். சர்க்கரை முதலானவை பெற்றுனும் நெய் பெற்ருற்போல் இனிமை [பாற்சோற்றினுக்கு உண்டாகாமையால் அதிற் சாரமில்லை. இவ்வாறே] குல முதலான ஐந்தும் உண்டாயினும் உலக வழக்கம் அறியாமையால் அதிற் சாரமில்லை என்பதாம்.

மூப்பு—பல குணங்களினது நிரப்பம்.

பதுமனர்:—என்றது. குலமுந் தவமுங் கல்வியும் குடி ஒழுக்கமும் குணநிரப்பமும் என்று, சொல்லப்பட்ட இவ்வைந்தும் கெடாமல் ஒருவன் நிரம்பப் பெற்றவிடத்தும், நன்மையமைந்த குற்றமற்ற தொல் சீர்மையையுடைய உலக ஒழுக்கம் அறியாமை, நெய்யிலாப் பாற்சோற்ருேடு . ஒக்கும் என்றவாறு.

குடிமை-குலத்துக் கேற்ற ஒழுக்கம். மூப்பு-கல்வியாலும் அறிவாலும் மூத்தல்.

விளக்க உரை:—என்பது. குலந் தவங் கல்வி குடிமை மூப்பு ஐந்தும் விலங்காமல் எய்தியக்கண்ணும்—குல முதலாகிய இவ்வைந்தும் ஒருவர்க்குத் தப்பாமல் உண்டான விடத்தும்; நலஞ் சான்ற மையறு தொல்சீர் உலகம் அறியாமை—நன்மையமைந்த குற்றமற்ற பழைய சீர்மையினை யுடைய உலக வழக்கமறியாமை; நெய்யிலாப் பாற்சோற்றின் நேர்—நெய்யில்லாத பாற் சோற்றினுக்கு ஒக்கும் என்றவாறு.

சர்க்கரை முதலானவை பெற்ருலும் நெய் பெற்ருற்போல

நிரம்பிய இனிமை, பாற் சோற்றுக்கு உண்டாகாமையால் அதிற் சாரமில்லை என்பதாம்.

கருத்து:—எத்துணைச் சிறப்பினராயினும் தமக்கு உறுதிப் பொருளை அறியாமை பேதைமையாம்.

ஒப்புமைப் பகுதி :—

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்".

—குறள். 140.

"செய்யில்லா வுண்டி பாழ்".

—ஔவையார்.

குறிப்பு :—

உலகம் அறியாமை—வீட்டுலக நெறியினை அறியாமை எனினுமாம்; "நலஞ் சான்ற மையறு தொல்சீர்" என்ற அடைமொழியின் சிறப்பை ஆராயுமிடத்து இவ்வாறு பொருள் கோடலே ஏற்புடைத்தாம்.

(ந).

334. கன்னனி நல்ல கடையாய மாக்களின்
சொன்னனி தாம்உணரா வாயினும்—இன்னினியே
நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல்என்(று)
உற்றவர்க்குத் தாம்உதவ லான்.

தருமர் :—என்பது. கடை ஆய மாக்களின்—கடையாய குணங்களையுடைய மனிதரினும்; கல் நனி நல்ல—கல்லு மிகவும் நல்லதாயிருக்கும்; [ஏனெனில்] சொல்—ஒருவர் சொன்னவற்றை; நனி—மிகவும்; தாம் உணரா ஆயினும்—அந்தக்

கல்லானது அறிந்த தில்லையாயினும்; [1]இன்னினியே—இப்பொழுதே; [2]நிற்றல் —(அந்தக் கல்லை எடுத்து நிறுத்த வேண்டும் என்று இயற்றி நிறுத்தினவனுக்கு) நிற்றல்; இருத்தல்—இருத்தினவனுக்கு இருத்தல்; கிடத்தல்—கிடத்திவைத்தபடி கிடத்தல்; இயங்குதல்—இயங்குவித்தவனுக்கு இயங்குதல்; என்று உற்றவர்க்கு தாம் உதவலால்—என்று இப்படியும் மற்றும் தன்னை உற்றவர்க்கு உதவி செய்தலால் என்றவாறு.

மற்றும் உதவி செய்தலாவது கல், தன்னைப் படிமமாக வகுத்துப் [3]பிராணப் பிரதிட்டை பண்ணினர்க்குச் சொர்க்க மோட்சங்களைக் கொடுத்தும், மாணிக்கம் முதலான கல் தான் ஓரிடத்திலே விலையுண்டு தன்னைச் சேர்ந்தவர்க்கு உதவிசெய்தும், தன்மேற் பகைவர் செல்லில் ஒரு கல் எடுத்து எறிய அப்பகை மாற்றியும், மற்றும் பால முதலாயின தந்தும் உதவி செய்தலாம்.

பதுமனர்:—என்றது. கல்லு மிகவும் நல்லதாயிருக்கும் கடையாய குணத்தினையுடைய மாக்களினும்; அஃதெப்படி யென்னில் சொன்னவற்றை மிக அறிந்ததில்லை யாயினும், இப்பொழுதே எடுத்து நிறுத்தவேணும் என்று இயற்றி நிறுத்தினவனுக்கு நின்றும், இருத்தினவனுக்கு இருந்தும், மற்று கிடத்தல் இயங்குதல் என்று முயன்றவர்க்கு அவர் மனத்துக்கு வர உதவி செய்தலால் என்றவாறு.

தம்மைச் சேர்ந்தவர்க்குக் கல்லு மிகவும் உதவுகையாவது; ஒரு வடிவாக்கி நிறுத்திப் பிராணப் பிரதிட்டை செய்து வேண்டிக் கொள்ள அவன் நினைவின்படி கொடுக்கையாலும், மாணிக்கமாகிய சாதியான கல்லினைத் தன் கையிலே இருத்தி நோக்கிக் கொண்டு போந்தவனுக்கு, ஒரு தோட்டத்திலே தான் விலைப்

---

[1] இன்னினி—இனி இனி என்ற அடுக்கின் தொகுத்தல்.

[2] நிற்றல் முதலியவற்றிற்குக் கல்லின் மீது நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் எனப் பொருள் கூறுவாருமுளர்.

[3] உயிருள்ளது போன்று பேசவைத்து நிலைநாட்டுதலால் இங்ஙனம் கூறினர்.

பட்டு அநேகம் பொருளை வாங்கிக் கொடுத்து உதவி செய்தும், ஒரு வாய்க்காலுக்குப் பாலமாகப் படுக்க அதன்மேல் நடந்து போம்படி இப்படி உதவி செய்தும், தன்னை ஒரு பகைவன் தொடர்ந்து கொல்லவர ஒரு கல்லினை எடுத்தெறிய அவனைப் பிழைப்பித்து உதவி செய்தலுமாம்.

விளக்க உரை :—என்பது. கல் நனி நல்ல கடையாய மாக்களின்—கடையாய மனிதரைப் பார்க்க மிகவும் கல்லு நன்மையுடையதா யிருக்கும் அஃதெப்படி யென்னில்; சொல் நனி தாம் உணரா வாயினும்—சொன்னவற்றை மிக அறிந்த தில்லையாயினும்; இன்னினியே—இப்பொழுதே; நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல் என்று உற்றவர்க்குத் தாம் உதவலான்—எடுத்து நிறுத்த வேணுமென்று இயற்றி நிறுத்தியவனுக்கு நின்றும், இருத்தியவனுக்கு இருந்தும், மற்றும் கிடத்தல் இயங்குதல் என்று வேண்டுவார் மனத்திற்கு வர உதவி செய்தலாற் கல்லு மிகவும் நன்று என்றவாறு.

தம்மைச் சேர்ந்தவர்க்குக் கல்லுதவுகையாவது; வடிவமாக வகுத்து நின்று பேச வேணு மென்று பிராணப் பிரதிஷ்டை பண்ணினவனுக்குச் சுவர்க்க மோட்சங்களை யுதவியும், ஒரு வாய்க்காலுக்குப் பாலமாகப் படுக்க அவன் அந்த வாய்க்காலில் விழுந்து ஆழாமல் தன்மேலே நடந்து போம்படி கிடந்தும் உதவி செய்தலாம்.

கருத்து :—எவ்வகையிலும் பிறர்க்கு உதவி செய்யாமை பேதையோர் குணமாகும்.

ஒப்புமைப் பகுதி :-

"இன்னினியே செய்க அறவினை—இன்னினியே"

—நாலடி. 29.

(௪).

335. பெறுவதொன்(று) இன்றியும் †பெற்றாரே போலக்
கறுவுகொண்(டு) ஏலாதார் மாட்டும்—கறுவினாற்
கோத்தின்னா கூறி உரையாக்கால் பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுனைத்து.

தருமர்:—என்பது. பெறுவது ஒன்று இன்றியும்—தான் பெறுவது ஒன்றும் இல்லாதிருக்கவும்; பெற்றாரே போல—சில பெற்றவரைப் போல; ஏலாதார் மாட்டும்—தனக்கு மாட்டாதவரிடத்திலும்; கறுவு கொண்டு—சினங் கொண்டு; கறுவினால்—அந்தச் சினத்தினால்; இன்னா—அவருக்கு வேண்டுந் தாழ்வுகளை; கோத்து*கூறி உரையாக்கால்—(தொடர்ச்சி) உண்டாகக் கூறிக் கோபியாத போது; பேதைக்கு—அறிவில்லாதவனுக்கு; §நா—நாவானது; நல்ல சுனைத்து தின்னும்—(மிக்க) தினவு தின்னும் என்றவாறு.

எனவே பேதைமையின் குணங் கூறப்பட்டது. ஏலாதார் மாட்டும் என்ற உம்மையால் யாவரிடத்தும் இன்னா செய்தற்கு ஒருப்படுவர் என்று, அவர் அறிவின்மையை இழிவாக்கி உரைத்தது.

பதுமனார்:—என்றது. பெறுவதொரு பயனின்றியும் பெற்றானே போலச் சினங் கொண்டு, தன்னொடு மாறுபட்டு ஏலாதார் மாட்டும் சினத்தினாற் சென்று தலைப்பட்டு, இன்னாதவற்றைச் சொல்லாவிடில் பேதைக்கு நாத்தின்னும் மிகச் சுனைத்து என்றவாறு.

கறுவு கொண்டு ஏலாதார் மாட்டும்—சினங் கொண்டேலாதாரிடத்தும் சினத்தைத் தாம் கொண்டு கோத்து—இன்னாத

---

†பெற்றானே போல என்பதும் பாடம்.

*கூறி உரையாக்கால்—ஒருபொருட் பன்மொழி.

§'உண்டற் குரிய வல்லாப் பொருளை உண்டன போலக் கூறலும் மரபு' ஆதலின் 'நாத்தின்னும்' என்றார்.

வற்றைச் சேரக் கோத்து. சுனைத்து—மிகச்சுனைத்தெழுந்து.

விளக்க உரை :—என்பது. பெறுவது ஒன்று இன்றியும் பெற்றானே போல—தான் பெறுவது ஒன்றும் இல்லையாயினும் சில பெற்றான் போல; கறுவு கொண்டு ஏலாதார் மாட்டும்—சினங்கொண்டு தனக்கு மாட்டாதாரிடத்தும்; கறுவினால் கோத்து இன்னாகூறி உரையாக்கால்—அந்தச் சினத்தினால் அவனுக்கு வேண்டுந் தாழ்வுகளைத் தொடுத்துக் கூறிக் கோபியாத பொழுது; பேதைக்கு நா தின்னும் நல்ல சுனைத்து—அறியாத பேதையானவனுக்கு நா தழுதழுத்துத் தினவு தின்றிருக்கும் என்றவாறு.

கருத்து :—ஒரு பயனுமின்றி யாரையும் பழித்துப் பேசுவதே பேதையார் செயலாகும்.

குறிப்பு :—

தனது கோபம் செல்லமாட்டாத மேலோர்; செல்வம், பதவி, சிறப்பு, இவற்றால் மேலோர் என்க.

(ரு).

336. *தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குதும் என்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப!
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

தருமர் :—என்பது. நல் தளிர் புன்னை—நல்ல தளிரையுடைய புன்னை; மலரும் கடல் சேர்ப்ப !—மலர்ந்து மணங்கமழாநிற்கும் கடற்சேர்ப்பை உடையவனே !; தம் கண் மரபு இல்லார் பின்—(தம்மிடத்து) வரைவில்லாதார் பின்; தாம் சென்று—; அவரை எம்கண் வணக்குதும்—அவரை 'நம்மிடத்து

---

*இச்செய்யுளின் முறைவைப்பு சில பிரதிகளில் மாறுபட்டுள்ளது.

இளியராகப் பண்ணிக் கொள்ளவேண்டும்'; என்பவர்—என்று அவருக்கு இதமும் இட்டமும் சொல்லுமவர்; புல் கேண்மை—புல்லிய கெழுமுதல்; கல் கிள்ளி—கல்லைக் கிள்ளி; கை இழந் தற்று—கைக்கு நோவு பெற்றதுபோலும் என்றவாறு.

நல்லாரை நட்புக்கொள்ளாது வரைவில்லாதார் பின்சென்று திரிவது, உடம்புக்கு வருத்தமன்றி நன்னெறிப்பாடொன்றுமில்லை என்பது தோன்றக் 'கற்கிள்ளிக் கை இழந் தற்று' என்றார் ஆதலால் இது பேதைமைத் தொழில் ஆயிற்று.

பதுமனார் :—என்றது. தம்மாட்டு விருப்பமில்லாதார் பின் சென்று, மற்று அவரைத் தம்மாட்டு வணக்குவேம் என்று நினைப்பார் செய்கின்ற புல்லிய கேண்மை, நற்றளிர்ப் புன்னை மலரும் கடற் சேர்ப்பனே! தம் கைவருந்தக் கல்லைக்கிள்ளித் தம் கை இழந்தாற்போலும் என்றவாறு.

தங்கண் மரபில்லார்—தாம் மரபுடைமைதனைச் செய்து வழிபடவுந் தம்மை யடைந்தார் தமக்குச் செய்யும் முறைமை யில்லார். வணக்குதும்—வழிப்படுப்போம்.

விளக்க உரை :—என்பது. தங்கண் மரபில்லார் பின் சென்று—தம்மிடத்து நட்புப் பண்பில்லாதார் பின்பே சென்று; தாம் அவரை—அவரைத் தாம்; எங்கண் வணக்குதும் என்பவர் புன் கேண்மை—'எம்மிடத் தினிமையுடையராக வேணுமென்று இட்டமும் இதமும் சொல்லித் தம் வசத்தாக்கிக் கொள்ளக் கருதுகின்றவர் புல்லிய கெழுமுதல்; நல் தளிர்ப் புன்னை மலரும் கடல் சேர்ப்ப!—நல்ல தளிரையுடைய புன்னை மலர்ந்து மணங் கமழா நின்ற கடற்சேர்ப்பை யுடையவனே!; கல் கிள்ளி கை இழந்தற்று—கல்லைக் கிள்ளிக் கையினை இழந்தது போலும் என்றவாறு.

அவர் வசத்திலே திரிந்து உடம்புக்கு வருத்தத்தினைப் பெற்றார் என்பதாம்.

கருத்து:—பண்பிலாரைத் திருத்த முற்படுவது பேதைமையாம்.

ஒப்புமைப் பகுதி:—

"கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல்"

—பழமொழி. 36.

"நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"

—குறள். 307.

(சு).

337. ஆகா(து) எனினும் அகத்துநெய் †உண்டாகப்
போகா எறும்பு புறஞ்சுற்றி—யாதும்
கொடாஅர் எனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

தருமர்:—என்பது. ஆகாது எனினும்—தனக்கு நுகர்தற்கு இடமில்லாதிருக்கவும்; அகத்து நெய் உண்டு ஆக—ஒரு கலசத்துள்ளே நெய்யிருக்க; எறும்பு—எறும்புகள்; புறம்சுற்றி—அக்கலசத்தின் புறம்பெல்லாம் மொய்த்துக் கொண்டு; போகா—விட்டுப்போகா; (அதுபோல) யாதும் கொடார் எனினும்—யாதொன்றினையும் கொடுத்தாரில்லை யாயினும்; உடையாரை—செல்வமுடையாரை; உலகத்தவர்—உலகத்தார்; பற்றி—பற்றிக் கொண்டு; விடார்—விட்டுப்போகார் என்றவாறு.

தாஞ் சென்று கேட்கு முன்னே, வந்த காரியம் இது என அறிந்து உபசரித்துக் கொடுப்பாரிடத்துச் சென்று இரப்பது இழிவாயிருக்கவும், கொடாதவரைப் பற்றிக் கொண்டு விடாதிருப்பது அறிவின்மை யாதலால் இது பேதைமையுள் சேர்க்கப் பட்டது.

---

†'உண்டாகின்', போகா தெறும்பு புறஞ்சுற்றும்' என்றும் பாடம்.

‡செல்வமுடையாரை 'உடையார்' எனல் 'உடையார்முன் இல்லார்போல்' என்ற திருக்குறளிலும் காண்க.

பதுமனார்:—என்றது. உட்புக்குத் தமக்கு நுகர்தற்கு அரியதாயினும் ஒன்றினுள்ளே நெய் உளதாக அதன் புறத்தைச் சுற்றி (அதனை விட்டுப்) போகா எறும்புகள்; அதுபோல யாதொன்றும் உதவாராயினும் செல்வமுடையாரைச் சார்ந்து உலகத்தார் விடார் என்றவாறு.

ஆகாது எனினும்—உட்புக்குத் தமக்கு நுகர்தற்கு அரிதாயினும். அகத்து—ஒன்றனுள்ளே.

விளக்க உரை:—என்பது. ஆகாதெனினும்—தனக்கு நுகர்தற்கு ஆகாதாயினும்; அகத்து நெய் உண்டாக—உள்ளே நெய்யிருக்க; போகா எறும்பு புறஞ்சுற்றும்—அந்த நெய்யிருக்கிற கலசத்தைப் புறம்புவிடாமல் மொய்த்துக்கொண்டு அதனை விட்டுப்போகா; (அதுபோல) யாதுங் கொடார் எனினும்—யாதொன்றுங் கொடுத்தாரில்லையாயினும்; உடையாரைப் பற்றி விடார் உலகத்தவர்—செல்வமுடையாரைப்பற்றி,விட்டுப்போகார் உலகத்திலுள்ளார் என்றவாறு.

கருத்து:—பேதையோர் கொடாத செல்வரை வீணாகச் சுற்றித் திரிவர்.

ஒப்புமைப் பகுதி:—

"நெய்க்குடந்தன்னை எறும்பெனவே"

—*திருவாசகம்: திருச்சதகம்.* 24.

(எ).

338. நல்லவை நாள்தொறும் எய்தார் அறஞ்செய்யார்
இல்லாதார்க் கியாதொன்றும் ஈகலார்—எல்லாம்
இனியார்தோள் சேரார்; இசைபட வாழார்
முனியார்கொல்? தாம்வாழும் நாள்.

தருமர் :—என்பது. *நல்லவை—நல்ல நுகர்ச்சிகளை; நாள்தொறும் எய்தார்—நாள்கள் தோறும் நுகரப்பெறார்; அறம் செய்யார்—தமக்கு இம்மை மறுமைக்கு உறுதியான அறத்தினையும் செய்யார்; இல்லாதார்க்கு—வறுமியராய்த் தம்மை வந்தடைந்தவர்க்கு; யாதொன்றும் ஈகலார்—ஒன்றினையும் கொடார்; எல்லாம் இனியார் தோள் சேரார்—எல்லா நற்குணங்களாலும் (இனிய) மகளிரையும் சேரார்; இசைபட வாழார்—புகழுண்டாக வாழார்; [இத்தகைய பேதைகள்] தாம் வாழும் நாள்—தாம் உயிர் வாழும் நாட்களை; முனியார் கொல்?—உணரார் கொல்லோ? என்றவாறு.

நல்ல நுகர்ச்சி பெருமைக்குக் காரணம், அறம் செய்யார் எனவே தமது பேதைமையினால் சூது முதலாகிய விளையாட்டிலே தங்கி ஒழுகுதல். இனியார் தோள் சேரார் என்பது விடாமற் பரத்தையர்மாட்டே திரிந்து விடுவர் என்பது.

பதுமனார் :—என்றது. நாடோறும் நல்ல நுகர்ச்சிக்குக் காரணமாகிய பொருள்களைப் பெறார்; அறத்தை நினையார்; வறியார்க்கு யாதொன்றினையும் ஈயமாட்டார்; எல்லாம் இனியார் தோள்களைச் சேரார்; புகழ்பட வாழார்; ஆதலால் தாம் வாழ்கின்ற நாட்களை வெறார் கொல்லோ? என்றவாறு.

நல்லவை—நல்ல நுகர்ச்சிகள். வீட்டுநெறியை யடையத் துறவறஞ் செய்யார்; மறுமைக்கு உதவியாக இல்லாதார்க்கு ஒன்றும் ஈயார். எல்லாம் இனியார்—புலன்களால் நுகர்வன வெல்லாம் இனியார்.

விளக்க உரை :—என்பது. நல்லவை நாடோறும் எய்தார்—நல்ல நுகர்ச்சிகளை நாடோறும் எய்தார்; அறஞ் செய்யார்—அறத்தினையுஞ் செய்யார்; இல்லாதார்க்கு யாதொன்

---

*நல்லவை—நற்குண நற்செயல்கள் எனினுமாம். இனி நல் அவை எனப்பிரித்து சிறந்த அவைக்களம் என்றும் கூறலாம்.

றும் நகலார்—வறியவராய்த் தம்மை வந்தடைந்தவர்க்கு ஒன்றினை யுங் கொடார்; எல்லாம் இனியார் தோள் சேரார்—எல்லா நற் குணங்களாலும் நிறைவுடைய இனிய மகளிர் தோளும் சேரார்; இசைபட வாழார்—புகழுண்டாக வாழார்; முனியார் கொல்? தாம் வாழும் நாள்—தாம் உயிர் வாழும் நாளை முனியார் கொல்லோ? என்றவாறு.

நுகர்ச்சி பெருமைக்குக் காரணம் சூது முதலான விளையாட்டிலே தங்கி ஒழுகுதல். இனியார் தோள் சேரார் என்பது விடாமற் பரத்தையர் மாட்டே திரிவர் என்றவாறு.

கருத்து:—பேதையோர் தம்வாழ்நாளைப் பயனின்றிக் கழிப்பர்.

குறிப்பு:—

இத்தகைய பேதையார் இருத்தலும் இறத்தலும் ஒன்றே யாதலின் 'முனியார் கொல்' என்றார்.

(அ).

339. விழைந்தொருவர் தம்மை வியப்ப ஒருவர்
விழைந்திலம் என்றிருக்கும் கேண்மை
—தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினும் இன்னாதே
ஆய்நலம் இல்லாதார் மாட்டு.

தருமர்:—என்பது. *ஆய் நலம் இல்லாதார் மாட்டு— தெரிந்த(நல)மில்லாதாரிடத்து; ஒருவர் விழைந்து தம்மை வியப்ப— ஒருவர் விரும்பித் தம்மைக் கொண்டாட; விழைந்திலம் என்று இருக்கும் ஒருவர் கேண்மை—அந்த விருப்பத்தை அறியாதவ(ர், ஒருவருட)ன் கொண்ட கெழுமுதல்; தழங்குகுரல்—முழங்கா நின்ற ஓசையினையுடைய; பாய்திரை சூழ் வையம்—(பரந்த) கடல் சூழ்ந்த உலகமெல்லாம்; பயப்பினும்—பெறுவதாயினும்;

---

*ஆய்நலம்—நட்ப அறிவு என்றுங் கொள்ளலாம்.

இன்னாது—பொல்லாது என்றவாறு.

எனவே பேதைமையார் தம்மை விரும்பினர் இவர், அல்லார் இவர் என்று அறியும் தன்மையர் அல்லார் ஆதலால், அத் தன்மையார் நட்பு மிகவும் பொல்லாதது என்பது தோன்ற, உலகமெல்லாம் (பெறினும்) பொல்லாது என்று அவரறி வின்மையை இழிவாக்கிக் கூறியது.

பதுமனர்:—ஆய்நல மில்லாதார் மாட்டு ஒருவர் விரும்பி மதிப்ப; ஒருவர் விரும்பிற்றிலேம் என்றிருக்கும் கேண்மை தழங்குகுரல் பாய்திரை சூழ்ந்த வையம் பெறினும் இன்னாது என்றவாறு.

ஆய்நலம்—ஆராயப்பட்ட நலம்.

விளக்க உரை:—என்பது. விழைந்தொருவர் தம்மை வியப்ப—ஒருவர் தம்மை விரும்பிக் கொண்டாட; ஒருவர் விழைந்திலேம் என்றிருக்கும் கேண்மை—அந்த விருப்பத்தை அறியாதவனுடன் கொண்டகெழுமுதல்; தழங்கு குரல் பாய் திரைசூழ் வையம் பயப்பினும்—முழங்கா நின்ற ஓசையினை யுடைய பரந்த கடல் சூழ்ந்த வுலகம் பெற்றாராயினும்; ஆய் நலம் இல்லாதார் மாட்டு இன்னாது—தெரிந்த நலமில்லாதார் மாட்டுச் சென்றுறவு செய்கை பொல்லாது என்றவாறு.

கருத்து:—பேதையார் மதித்தற்குரியாரை மதிக்கமாட்டார்.

(கூ).

340. *கற்றவுங் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப்பா டெய்தும்—தாமுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென்(று) எள்ளப் படும்.

---

*'கற்றனவும்' என்றும் பாடம்.

தருமர்:—என்பது. கற்றவும்—கற்ற கல்வியும்; கண் அகன்ற சாயலும்—இடமுடைத்தாய மென்மையும்; இல்பிறப்பும்—குடிப்பிறப்பும்; பக்கத்தார் பாராட்ட—(அருகிலுள்ளார்) சொல்லிப் பாராட்டவே; பாடு எய்தும்—(பெருமையுண்டாகும் அல்)லது; தாம் உரைப்பின்—தம்மைத்தாமே புகழ்ந்து சொல்லிக் கொள்ளுவா ராயின்; ‡மைத்துனர் பல்கி—மைத்துனமார் பலரும் உண்டாய்; மருந்தின் தணியாத—ஓர் மருந்தினுந் தீராத; பித்தன் என்று எள்ளப்படும்—பித்தனுக்கு இணையாக இகழப்படுவர் என்றவாறு.

அறிவுடையோர் நன்னெறியின் ஒழுகலால் அவரது தன்மையை அயலார் பாராட்டுவர்; அறிவில்லார் நன்னெறியின் ஒழுகாமையால் அவரது தன்மையைப் பாராட்டுவார் இன்மையால், தம்மைத்தாமே புகழ்ந்து கூறுவது தமக்கு இழிவு என்பது தோன்றாமையால், பேதையார் அறிவின்மையை இழிவாக்கி மருந்திற் றீராத பித்தரெனக் கூறி வற்புறுத்தியது.

பதுமனார்:—என்றது. கற்ற கல்விகளையும், இடமகன்ற ஒளியையும், குடிப்பிறப்பினையும் அயலிருந்தார் புகழ, ஒருவன் பெருமையைப் பெறும்; அவன்றான் எடுத்துரைத்தானாயின் அவன்தன்னை நகைசெய்யும் மைத்துனர் பல்கி, ஒரு மருந்தாலுந் தணியாத பித்தன் இவன் என்று எள்ளப்படும் என்றவாறு.

மைத்துனர்—நகை செய்வார்.

விளக்க உரை:—என்பது. கற்றனவும்—தனக்குண்டான கல்வியும், கண்ணகன்ற சாயலும்—கண்ணிற் கினிமையுடைய அழகும்; இற்பிறப்பும்—குடிப்பிறப்பும்; பக்கத்தார் பாராட்ட—பிறத்தியார் பாராட்ட; பாடு எய்தும்—பெருமையுண்டாம்; தான் உரைப்பின்—தன்னைத் தானே மதித்துச்

---

‡மைத்துனர் பல்கி—மைத்துனர் பெருகி; மைத்துனராவார் அத்தை மகனும் மனையாளுடன் பிறந்தவனும் ஆவார்.

சொல்லுவானாயின்; மைத்துனர் பல்கி—எல்லாரும்மைத்துனராகி; மருந்தின் தணியாத—மருந்திலுந்தீராத; பித்தன் என்று எள்ளப் படும்—பித்தன் என்று பலராலும் இகழப்படுவன் என்றவாறு.

கருத்து:—தற்புகழ்ச்சி செய்து பரிகாசத்துக்கு இடமாகச் செய்வது பேதைமையாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

—குறள். 439.

"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்".

—குறள். 474.

"தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்"

—நீதிநெறிவிளக்கம். 19.

(ய).

---

35. *கீழ்மை.

தருமர்:—அஃதாவது குடியுங் குலமும் உடையாரும் ஒழிந்தி கீழ்மக்களுக்கும் இந்தக் குணம் உடைத்தாகில், அவர் கீழோர் என்று ஒரு சாதியாக நீக்கப்பட்டவராம். அக்குண மாவது பிறர் ஆக்கங்களைக் கண்டு அதனைப் பொறாமையும், அப் பொறாமையால் அவரைக் குடிப்பழிப்புச் சொல்லுதலும், அவர் செல்வங் கெடத்தக்க வினை கொள்ளுதலும், அவரைக் கண்டுழி அவர்க்குச் சிறந்தாரினும் இனிதாகி ஒழுகி அவர் செல்வத்துக்கு

---

*கீழோரினுடைய தன்மை.

இழிவு செய்தலும், சிறிது பொருள் பெற்றதுகொண்டே தம்மை வியந்து, நல்லாரையும் அவமதி பண்ணுதலும், ஒருவர் செய்த நன்றி சிதைத்தலுமாம்.

பதுமனார் :—அஃதாவது நால்வகைக் குலத்து அறமான தொழில்களு மின்றிக் குலத்தினாலுங் கீழ்மையுடையார், தமக்கு அமைந்ததோர் ஒழுக்கங்கள் இன்றி ஏற்றச் சுருக்கங்களாகும் ஒழுக்கங்களும், பலவான்களை ஒழிய........ அஞ்சிச் செய்பவே ஆசாரமாதலும், நல்லோர் விரும்பாத........கல்விகளும் (கொண்டு) கொலை களவுகள், காமம், பொய் ஆனவற்றிற்குக் கூசாராதலும், செய்யுந் தொழில்களாலும், உணவாலும், உடையாலும், நடையாலும், சொல்லாலும் தம் பிறப்புக் களையும்படியான இயல்புகளையுடைய(ராதலுமாம்.)

விளக்க உரை :—அஃதாவது குலமும் குடிமையும் உடையாரும், ஒழிந்த கீழ்மக்களும் இந்தக் கீழ்மை என்கிற குணமுடையாராகில் அவர் கீழோர் என்று ஒரு சாதியாக நீக்கப்பட்டவராம். கீழ்மையாவது, பிறர் ஆக்கங்களைக்கண்டு அதனைப் பொறாமையும், அந்தப் பொறாமையாலே அவர்க்குக் குடிப் பழுது சொல்லுதலும், அவர் செல்வங் கெடத்தக்க வினை கொளுவுதலும், அவரைக் கண்ட பொழுது அவர்க்குச் சிறந்தாரினும் இனிமையுடையராயிருத்தலும், அவருடன் வேறுபாடற்ற முறைமையினைப் பொருந்த ஒழுகி அவர் மனையாளுக்கும் அவர் செல்வத்திற்கும் அழிவு செய்தலும், சிறிது பொருள் பெற்றது கொண்டு தன்னை வியந்து நல்லாரையும் அவமதி பண்ணுதலும், ஒருவர் செய்த நன்றிகளைச் சிதைத்தலுமாம்.

341 கப்பி கடவதாக் காலைத்தன் [1]வாய்ப்பெயினும்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்—மிக்க

---

[1] 'வாய்ப்பெறினும்' என்றும் பாடம்.

கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும்
மனம் புரிந்த வாறே மிகும். [கீழ்தன்

தருமர் :—என்பது. கப்பி—நொய்யரிசியை; [1]கடவது ஆ—நாள் தோறும் ஒரு கடனாகக் கொண்டு; காலே—சிறுகாலையே; தன் வாய் பெயினும்—தன் வாயிற் பெய்யினும்; குப்பை கிளைப்பு—குப்பை கிளறுதலை; ஓவா—ஒழியாத; கோழிபோல்—கோழி போல; மிக்க [2]கனம் பொதிந்த—மிக்க தன்ம நெறியை உடன் கொண்டிருக்கின்ற; நூல்—நூல்களை; விரித்துக் காட்டினும்—விரித்துரைத்து அறிவித்தாலும்; கீழ்—கீழ் மக்களானவர்; தன் மனம் புரிந்த ஆறே—(அத்தன்ம நெறிப் பட்டொழுகுதலின்றித்) தன் மனத்துக்குப் பொருந்திய பொல்லாத நெறிப்பட்டு ஒழுகி அதனையே; மிகும்—தமக்கு மிகுதியாய் எண்ணிவிடுவர் என்றவாறு.

நூலுரைத்த முறைமை பிழைத்தலின் அவனைக் கீழ்மகன் என இழிவாக்கி அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. சிறுகாலே கடனாகவே கப்பியைத் தன் வாயின்கட் பெய்யினும் குப்பை கிளறுகை ஒழியாத கோழியைப்போல, மிக்க சீர்மையைப் பொதிந்த அறநூல்களை விரித்து உரைத்துப் பொருளைக் காட்டினும், கீழாயினான் தன் மனம் விரும்பிய நெறியின்கண்ணே மிக்குச் செல்லும் என்றவாறு.

பெயினும்—வலியவிடினும். புரிதல்—விரும்புதல்.

விளக்க உரை :—என்பது. கப்பி கடவதா காலைத் தன் வாய்ப்பெயினும்—கப்பியை நாடோறும் ஒருகடனாகக் கொண்டு சிறுகாலையே தன் வாயிற் பெய்யினும்; குப்பை

---

[1]கடவது—வேண்டும் அளவில் எனினுமாம்.

[2]கனம்—பெருமை; பெருமைமிக்க தன்மநெறிக்கு ஆயிற்று.

கிளைப்பு ஓவாக் கோழிபோல்—குப்பை கிளறுதலை ஒழியாத கோழிபோல; மிக்க கனம் பொதிந்த நூல் விரித்துக்காட்டினும்—மிக்க தன்மமாயின பொருளைக் கூடின ஆகம நூல்களை விரித்துச் சொல்லி அறிவிக்கினும்; கீழ் தன் மனம் புரிந்தவாறே மிகும்—கீழானவன் தன் மனதுக்கு ஏற்ற ஒழுக்கம் ஒழுகி அதிலே மிக்குவிடும் என்றவாறு.

கருத்து:—கீழோர் மெய்ப்பொருளை ஏற்காது பொய்ப் பொருளையே மேற்கொண்டு ஒழுகுவர்.

ஒப்புமைப் பகுதி :—

"பூத்தாலும் காயா மரமுள; மூத்தாலும்
நன்கறியார் தாமு நனியுளர்; பாத்தி
விதைத்தாலும் நாருத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் தோன்று துணர்வு".

—பழ. 399.

"பூத்தாலுங் காயா மரமுள; நன்றறியார்
மூத்தாலு மூவார்நூல் தேற்றார்—பாத்திப்
புதைத்தாலும் நாருத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு".

—சிறுபஞ்சமூலம். 23.

(க).

342. காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரல்
தாழாது போவாம் எனவுரைப்பின்—கீழ்தான்
உறங்குவாம் என்றெழுந்து போமாம்அஃ தன்றி
மறங்குமாம் மற்றொன் றுரைத்து.

தருமர் :—என்பது. [1]காழ் ஆய கொண்டு—[2]வெளி றில்லாத நூல்களைக் கற்று அதன் பொருளை உட்கொண்டிருக் கின்ற; கசடு அற்றார் தம் சாரல்—குற்றமற்ற பெரியோரிடத்துச் (சென்று அவரது தன்மைகண்டு ஒழுகுவதற்கு); தாழாது போவாம்—'தாமதியாது போக வேண்டும்'; என உரைப்பின்—என அறிவுடையார் சொல்(லில்; கீழ்தான்—கீழானவன்; உறங்குவாம் என்று எழுந்துபோம்—நித்திரை) கொள்ளவேண்டும் என்று சொல்லி எழுந்திருந்து போவன்; அஃது அன்றி—அது சொல்லிற்றிலனாயில்; மற்று ஒன்று உரைத்து—மற்றோர் இல்லாத நோயினைத் தனக்குண்டாக்கிக் கொண்டு; [3]மறங்கும்—செல்லாது [4]மறங்கி விடுவான். எ-று.

மறங்குதல்—குழைவற்றிருத்தல். நன்னெறி உரைக்கில் அதன்மேல் மனஞ் செல்லாது, தீயநெறியை உட்கொண்டு அதற்கு உடன்பட்டிருப்பர் எனக் கீழ்மையினது தன்மை கூறியவாறு. [ஆம் இரண்டும் அசை]

பதுமனார் :—என்றது. வெளிறு இல்லாத நூல்களைக் கற்று மனத்திற்கொண்டு, குற்றமற்றார் தம் பக்கத்தே போவோம் என ஒருவன் சொன்னால் கீழ்கள் தாம் உறங்குவாம் என்று சொல்லிப் போமாம்; சொல்லாதிருந்தால் மற்றொன்றை உரைத்து வசம் வாராது போமாம் என்றவாறு.

மறங்கு—இறங்கிப்போம். அவர்களுக்குக் குற்றம் சொல்லி.

விளக்க உரை :—என்பது. காழாய கொண்டு—

---

[1]காழ்—உறதி.

[2]வெளிறில்லாத நூல்—வெண்மையில்லாத நூல்; அஃதாவது நுண்ணிய நூல்கள்.

[3]மறங்கும்—மறந்துவிடுவான் என்றுரைப்பினும் ஆம்.

[4]மறங்கி—நிலைகலங்கி.

வெளிறின்றியிருக்கும் நூல்களைக் கற்று அதன் பொருளை உட் கொண்டிருக்கிற; கசடு அற்றார் தம் சாரல் தாழாது போவாம் என உரைப்பின்—குற்றமற்றவர் தம்மிடத்தே நீட்டியாது போகவேணுமென்று சொல்லில்; கீழ்தான்—கீழானவன்; உறங்குவாம் என்று எழுந்து போமாம்—நித்திரை கொள்ள வேணுமென்று சொல்லிப்போவன்; அஃதன்றி—அது சொல்லிற் றிலனாயில்; மறங்குமாம் மற்றென்று உரைத்து—மற்றொரு நோயினைத் தனக்கு இட்டுக்கொண்டு *பிறங்கி வாரான் என்ற வாறு.

மறங்குதல்—குழைவற்றிருத்தல்.

கருத்து:—தாமும் நல்வழிப்படாது பிறரையும் நல்வழியிற் போக ஒட்டாது செய்தல் கீழோர் இயல்பு.

(உ).

343. பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையாது
ஒருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட!
வற்றாம் ஒருநடை கீழ்.

தருமர்:—என்பது. பிறங்கு அருவி நல் நாட!—பெருத்து விழுகின்ற, அருவியையுடைய மலைநாடனே!; சான்றோர்—அமைந்தோர்; [1]பெருநடை தாம் பெறினும்—தாம் பெரிய செல்வத்தைப் பெற்றாராயினும்; பெற்றி பிழையாது—தம்முடைய தன்மை குன்றாது; ஒரு நடையர் ஆகுவர்—ஓர் ஒழுக்கத்திலே நடந்து போதுவர்; கீழ்—கீழாயினார்; பெருநடை பெற்றக் கடைத்தும்—பெரிய செல்வத்தைப் பெற்றாராயினும்; ஒருநடை வற்று ஆய்—மற்றுந் தான் செய்யுங் கீழ்மையினைச் செய்ய வற்றாகும் அல்லது அதனை ஒழியார் என்றவாறு.

---

*பிறங்கி வாரான்—தனது நிலை மாறி வாரான்.

[1]நடை—செல்வம், "நடைவழி ஒழுக்கம் செல்வம்" என்பது நிகண்டு.

அமைந்தோர் வறுமியரான காலத்தும், செல்வம் உண்டாய காலத்தும் தமது தன்மை பிழையார். கீழ்மக்கள் மிகுந்த செல்வத்தைப் பெற்ற விடத்தும் பெருமைக் குணம் உடையர் ஆகமாட்டார் என்பதாம்.

பதுமனார்:—என்றது. அரசரால் பெருஞ்சிறப்புத் தான் பெற்றாராயினும், முன்புள்ள தன்மையிற் பிறழாதே ஒரு செய்கையராவர் அமைவுடையார்; பெருஞ்சிறப்புப் பெற்ற பொழுதே தொடங்கி வேறே ஒரு செய்கை, கீழ் செய்ய வற்றாகும் பிறங்கு அருவி நாடனே! என்றவாறு.

விளக்க உரை:—என்பது. பெருநடை தாம் பெறினும்—பெரிய செல்வத்தைத் தாம் பெற்றாராயினும்; பெற்றி பிழையாது ஒருநடையர் ஆகுவர் சான்றோர்—தம்முடைய ஒழுக்கங் குன்றாமல் ஓரொழுக்கத்தில் நடந்து போதுவர் அமைந்தோர்; பெருநடை பெற்றக் கடைத்தும்—பெரிய செல்வத்தைப் பெற்றவிடத்தும்; பிறங்கு அருவி நல் நாட!—பெருத்து விழுகின்ற அருவியினை யுடைய மலைநாடனே!; வற்றாம் ஒரு நடை கீழ்—அப்பொழுதுந் தான் செய்யுங் கீழ்மையினைச் செய்ய வற்றாகுமல்லது செல்வ முடைமையாற் பெருமைக்குணம் உண்டாகாது கீழினுக்கு என்றவாறு.

கருத்து:—கீழோர் செல்வக்காலத்திலும் தமது சிறுமைக் குணம் மாறமாட்டார்.

(ரு).

344. தினையனைத்தே ஆயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்
—பனையனைத்(து)
என்றுஞ் செயினும் இலங்கருவி நன்னாட!
†நன்றில்லை நன்றறியார் மாட்டு.

தருமர்:—என்பது. இலங்கு அருவி நல் நாட!—மிகுந்த அருவியால் விளங்கா நின்ற நல்ல மலைநாடனே!; தினைஅனைத்தே ஆயினும்—தினையளவேனும்; *செய்த நன்று உண்டால்—ஒருவர் (செய்த) நன்றி (உண்டாயின்) [அதனை]; சான்றோர்—அமைந்தோர்; பனை அனைத்து ஆ—பனை அளவாக; உள்ளுவர்—நினைப்பர்; பனை அனைத்து—பனையின் அளவான நன்றிகளை; என்றும் செயினும்—எல்லா நாளுஞ் செய்தாலும்; நன்று அறியார் மாட்டு—நன்மையினை அறியாத கீழாயினரிடத்து; நன்று இல்லை—எல்லா நன்றிகளும் இல்லையாய்விடும் எ-று.

தினை அளவென்றும், பனை அளவென்றும் சிறுமை பெருமைக்கு இலக்குக் கூறினர்.

பதுமனர்:—என்றது. ஒருவன் செய்த நன்றி தினையளவே ஆயினும், தன்மனத்தின் கண்ணே என்றும் உண்டாம் வகை அதனைப் பனையின் அளவாக நினைப்பர் சான்றோர்; பனையின் அளவான நன்றியை எஞ்ஞான்றும் செய்யினும், இலங்கருவி நன்னடனே! நன்மையில்லாவாம் செய்த நன்றியை அறியாதார் மாட்டு என்றவாறு.

உண்டாக—மனத்திடத்து என்றும் உண்டாக.

விளக்க உரை:—என்பது. தினையனைத்தே ஆயினும்—தினையளவேயாயினும்; செய்த நன்று உண்டால்—ஒருவர் செய்த நன்றிகள் சிலவுளவா யிருப்பினும்; பனை அனைத்தா உள்ளுவர் சான்றோர்—பனையின் அளவு போல நினைத்துக் கொண்டிருப்பர் அமைந்தோர்; பனை அனைத்து என்றும் செயினும் இலங்கு அருவி நன்னட!—விளங்கும் அருவியினையுடைய மலைநாடனே! பனையளவு நன்றியினை எப்பொழுதுஞ் செய்தாலும்; நன்று இல† நன்றறியார் மாட்டு—ஒரு நன்மையினையும் அறியாத கீழாரிடத்து

---

†'நன்றில நன்றறியார் மாட்டு' என்றும் பாடம்.

*செய்தவுதவியைத் தாம் அநுபவித்தால் என்றும் பொருள்கொள்ளலாம்.

எல்லா நன்றிகளும் இல்லையாய் விடும் என்றவாறு.

கருத்து:—கீழோர் மிகப் பெரிய உதவியையும் மறந்துவிடும் தன்மையராவர்.

ஒப்புமைப் பகுதி:—

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்".

—குறள். 104.

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்".

—குறள். 433.

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்".

—குறள். 1282.

"தினைத்துணைய ராகித் தேசுள் ளடக்கிப்
பனைத் துணையார் பாடழிந்து வாழ்வர்.

—நாலடி. 105.

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே".

—திருவாசகம்.

"தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்".

—நாலடி. 38.

(௪).

345. பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற்(கு) இமையாது பார்த்திருக்கும்—அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறுபடும்.

தருமர் :—என்பது. பொன்கலத்து—பொன்னின் கலத்திலே; ஊட்டி—(தனக்குப் பாலுஞ்சோறும் இட்டு) ஊட்டி; புறந்தரினும்—பாதுகாப்பினும்; நாய்—நாயானது; பிறர் எச்சிற்கு இமையாது †பார்த்திருக்கும்—பிறர் எச்சிற்(சோற்றை) எப்போது போடுவார்கள் என்று இமையாமற் பார்த்திருக்கும்; அச்சீர்—அதுபோல; பெருமை உடைத்து ஆ கொளினும்—கீழாயினாரைப் பெருமையுடையராக மதித்துக் கொண்ட போதிலும்; கீழ் செய்யும் கருமங்கள்—அவர் செய்யுங்காரியங்கள்; வேறுபடும்—அந்தக் கீழ்மையன்றி வேறுபட்டுப் பெருமை உடைத்தாகாது என்றவாறு.

கீழ்மக்களைப் பெருமையுடைத்தாகச் செய்யினும் தங்குணம் வேறுபடாது என்பதற்கு நாயை உவமையாக்கி அவரது இழிவு கூறி அறிவுறுத்தியது.

பதுமனார் :—என்றது. பொற்கலத்தின்கண் ஊட்டித் தன்னைப் புறங்காப்பினும்; நாய் பிறர் எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும்; அதுபோலப் பெருமையுடைத்தாகக் கொண்டு ஒருவன் பேணினும் கீழ்செய்யுஞ் செய்கைகள் வேறுபட்டிருக்கும் என்றவாறு.

புறந்தரினும்—தன்னைப் பாதுகாப்பினும்; மிக்க சோறு போடப்படினும் என்றுமாம். அச்சீர்—அச்சீர்மை போல;

விளக்க உரை :—என்றது. பொற்கலத்து ஊட்டிப் புறந்தரினும்—பொன்னின் கலத்து வைத்தூட்டித் தனக்கு மெய்காவலாகக் கொண்டு தன்னைப் போற்றிப் பலரும் பாதுகாத்துக் கொள்ளினும், நாய் பிறர் எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும்—நாயானது பிறர் உண்ட எச்சிற் சோறு எப்பொழுது இடுவார்கள் என்று இமையாமற் பார்த்திருக்கும்; அச்சீர்—அதுபோல; பெருமை உடைத்தாக் கொளினும்—தம்மைப்

---

†பார்த்திருக்கும் என்பது காத்திருக்கும் என்னும் பொருட்டு.

பெருமையுடையராகப் பண்ணி மதித்துக்கொண்டபோதிலும்; கீழ் செய்யுங் கருமங்கள்—கீழானவன் செய்யுங் காரியங்கள்; வேறுபடும்—கீழ்மை ஒழிந்து வேறுபட்டிராது என்றவாறு.

கருத்து :—எவ்வளவு பெருமைப்படுத்தினாலும் கீழோரது இழி குணம் மாறாது.

ஒப்புமைப் பகுதி :—

"பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர; அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு"

—பழமொழி 105.

(ரு).

346. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்.

தருமர் :—என்பது. விழுமியோர்—சீரியோர்; *சக்கரன் செல்வம் பெறினும்—இந்திரனது செல்வத்தைப் பெற்றாராயினும்; மிகுதிச் சொல்—மிகையான வார்த்தையை; எக்காலும் சொல்லார்—ஒருக்காலுஞ் சொல்லார்; முந்திரிமேல் காணி மிகுவதேல்—முந்திரிகைப் பொன்னின் மேலே காணிப் பொன் மிகுதியாமாகில்; கீழ்—கீழானவன்; என்றும்—எல்லா நாளும்; தன்னை இந்திரன் ஆ எண்ணிவிடும்—தன்னை இந்திரனாக மதித்து மிகையான வார்த்தையைச் சொல்லுவன் என்றவாறு.

---

*இனி சக்கரச் செல்வம் என்பதற்கு பூவுலகச் செல்வம் என்றும், அரசச் செல்வம் என்றும் பொருள் கூறிலும் ஆம்.

கீழோர் தம்மைக் கூறும்பொருட்டுச் சக்கரச் செல்வம் என்று வியந்து கூறினர்.

பதுமனர்:—என்றது. இந்திரனுகச் செல்வம் பெறினும் விழுமியோர் எல்லா நாளுஞ் சொல்லார் முறைமை கடந்த சொல்லினை; முந்திரிகைப் பொன்னின்மேற் காணிப்பொன் மிகுமாயிற் கீழானவன் தன்னை இந்திரனுக எஞ்ஞான்றும் கருதும் என்றவாறு.

இந்திரன் செல்வம் என்றும், சக்கரவாளச் சக்கரத்திலுண் டான செல்வம் என்றுமாம். மிகுதிச் சொல்—முறைமை கடந்த சொல். முந்திரிமேல் காணி மிகுவதேல்—முந்திரிகைப் பொன் காணிப் பொன்னுகுமாயின்.

விளக்க உரை:—என்பது. சக்கரச் செல்வம் பெறினும்—இந்திரனது செல்வத்தைப் பெற்ருராயினும்; விழுமியோர்—சீரியராயினோர்; எக்காலுஞ் சொல்லார் மிகுதிச் சொல்—மிகையான வார்த்தைகளை ஒருநாளுஞ் சொல்லார்; எக்காலும் முந்திரிமேல் காணி மிகுவதேல்—எல்லா நாளும் முன்னடந்ததின் மேற் காணிப்பொன் மிகுமாகில்; கீழ்தன்னை இந்திரனு எண்ணி விடும்—கீழானவன் தன்னை இந்திரனுக மதித்துக்கொண் டிருப்பன் என்றவாறு.

கருத்து:—கீழோர் சிறிதளவு செல்வங் கூடினும் பெரிதும் செருக்கடைவர்.

குறிப்பு:—

முந்திரி என்பது மிகச் சிறிய அளவை; அஃதாவது முந்நூற்றிருபதில் ஒன்று; காணி என்பது முந்திரியின் மிக்க தோர் அளவை; அஃதாவது எண்பதில் ஒன்று; ஆகவே, 'முந்திரி மேற் காணி மிகுவதேல்' என்பதைவிட 'காணிமேல் முந்திரி மிகுவதேல்' என மாற்றிப் பொருள் கூறுவது ஏற்புடைத்தாகும்.

(சு).

347. மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்தி
செய்த(து) எனினும் செருப்புத்தன் காற்கேயாம்
எய்திய செல்வத்தார் ஆயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

தருமர் :—என்பது. மைதீர்—குற்றந் தீர்ந்த; பசும் பொன்மேல்—பசுத்த பொன்னின்மேலே; மாண்ட மணி அழுத்தி மாட்சிமையுடைய மாணிக்கம் முதலாகிய மணிகளை அழுத்தி; செய்தது எனினும்—அழகுபெறச் செய்ததாயினும்; செருப்பு—; தன் காற்கே ஆம்—தனது காலுக்கே ஆவதன்றி அதனை ஒரு பணியாகப் பூண்பாரில்லை; (அதுபோல) எய்திய செல்வத்தார் ஆயினும்—திரண்ட செல்வத்தை உடையராயினும்; கீழ்களை—கீழ்மக்களை; செய்தொழிலால் காணப்படும்—அவர் செய்யுந் தொழிலாலே அறியப்படும் என்றவாறு.

செல்வமுண்டாய வழியும் பெருமையுடையார்க்கு (நிகரர்) ஆகாமையால் அவரது செல்வத்தின் தன்மையும் அவரதுகுணங் களையும் அறியக்கூறுவார் செருப்பை உவமையாக்கி இழிவு கூறியது.

பதுமனார் :—என்றது. மாசற்ற பசும்பொன்மேலே மாட்சிமைப்பட்ட மணிகளை அழுத்திச் செய்யப்பட்டதாயினும் செருப்புத் தன் காற்கேயாம் அத்துணையதுபோல (நிரம்பப்) பெற்ற செல்வத்தாராயினும் கீழ்களாக இருப்பாரைச் செய் தொழிலாலே அறியப்படும் என்றவாறு.

மை—மாசு. மாண்ட—மாட்சிமைப்பட்ட. எய்திய—நிரம்பிய.

விளக்க உரை :—என்பது. மைதீர் பசும்பொன்மேல்—குற்றந்தீர்ந்த பசும்பொன்னின் மேலே; மாண்டமணி அழுத்தி—மாட்சிமையுடைய மாணிக்கமணி அழுத்தி; செய்தது எனினும்—செருப்புத் தன் காற்கேயாம்—இப்படி அழகு செய்யினும்

செருப்புத் தன் காலுக்காவதல்லது அதனை ஒரு பணியாகப் பூண்பாரில்லை அதுபோல; எய்திய செல்வத்தார் ஆயினும்—திரண்ட பெரிய செல்வத்தை உடையாராயினும்; கீழ்களைச் செய்தொழிலாற் காணப்படும்—கீழ்மக்களை அவர்கள் செய்கிற தொழிலாலே அறியப்படும் என்றவாறு.

கருத்து:—கீழோர் செல்வம் பெறினும் தமது கீழ்மைக் குணத்தில் வேறுபடார்.

ஒப்புமைப் பகுதி:—

"பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்".

—நாலடியார் : 35-5.

(எ).

348. கடுக்கெனச் சொல்வற்றாம், கண்ணோட்டம்
இன்றாம்,
இடுக்கண் பிறர்மாட்(டு) உவக்கும்—அடுத்தடுத்து
வேகம் உடைத்தாம், விறன்மலை நன்னாட!
ஏகுமாம் எள்ளுமாம் கீழ்.

தருமர்:—என்பது, விறல்மலை நல் நாட—(அரணினால் பிறர் அழிக்க வொண்ணாத) வெற்றியையுடைய (நல்ல) மலை நாட்டனே! கீழ்—கீழாயினான்; கடுக்கென சொல்வற்று [1] ஆம்—ஒருவனைப் பாராமல் கடுஞ் சொற்களைச் சொல்ல வல்லனாய் இருப்பான்; [2] கண்ணோட்டம் இன்று ஆம்—யாவரிடத்துங்

---

[1] 'ஆம்' என்பதனைத்தும் அசை.

[2] கண்ணோட்டம்—தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை; இஃது அவர் மேற்கண் சென்ற வழி நிகழ்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று. —திருக்குறள் : பரிமேலழகருரை.

கிருபையில்லையாய்இருப்பன்; [1]பிறர்மாட்டு இடுக்கண் உவக்கும்—பிறர்க்கு வந்த துன்பங்களுக்குத் தான் மகிழ்ந்திருப்பன்; அடுத்து அடுத்து வேகம் உடைத்து ஆம்—மேன் மேலும் கோபியாய் இருப்பன்; [2]ஏகும் ஆம் எள்ளும் ஆம்—ஒருவர் ஆற்றவுங் கோபம் ஆறாமல் அந்தக் கோபத்தின்மேலே மனம் உடையனாய் யாவரையும் இகழ்ச்சி சொல்ல வல்லவனாயிருப்பன் என்றவாறு.

ஏகுதல்—போகுதல். கீழ்மக்களது தன்மையை விளங்கக் கூறியவாறு.

பதுமனார்:—என்றது. வெய்தாகச் சொல்லவற்றாம்; கண்ணோட்டமின்றியிருக்கும்; பிறருக்கு வந்த இடுக்கண் கண்டால் மனம் மகிழும்; மேன்மேல் ஆன வெகுளியை உடைத்தாகும்; விறன் மலை நன்னாடனே! ஒருவன் மாட்டு நில்லாது ஏகும்; இகழ்ந்து சொல்லுங்கீழ் என்றவாறு.

கடுக்கென—வெய்தாக. ஏகுமாம்—எங்கும் போமாம்.

விளக்க உரை:—என்பது. கடுக்கெனச் சொல்வற்றாம்—ஒருவரைப் பாராமல் கடுகச் சொல்ல வல்லனாயிருப்பன்; கண்ணோட்டம் இன்றாம்—கண்ணோட்டமும் அற்றிருப்பன்; இடுக்கண் பிறர் மாட்டு உவக்கும்—பிறர்க்கு வந்த துன்பங்களுக்குத் தான் மகிழ்ந்திருப்பன்; அடுத்தடுத்து வேகம் உடைத்தாம்—மேன்மேலுங் கோபியாய் இருப்பன்; விறன் மலை நன்னாட—அரணினாற் பிறர் அழிக்கவொண்ணாத வெற்றியினை உடைய மலைநாடனே! ஏகுமாம் எள்ளுமாம் கீழ்—ஒருவர் ஆற்றவுங் கோபம் ஆறாமல் அந்தக் கோபத்தின்மேற்போய் இகழ்ந்து சொல்லுதலை உடையனாயிருப்பன் என்றவாறு.

---

[1]பிறர்மாட்டு என்பதனை ஏனைய இடத்தும் கூட்டலாம்.

[2]ஏகுமாம் எள்ளுமாம் என்பதற்குப் பிறரிடம் வலியச்சென்று இகழ்வான் எனினுமாம்.

கருத்து :—கடுஞ்சொற் கூறல், கண்ணோடாமை, பிறர் வேதனைக்கு மகிழ்தல், வேகங்கொள்ளல், இகழ்ந்துரைத்தல் இவை கீழோர் இயல்பாகும்.

(அ).

349. பழையர் இவரென்று பண்ணாட்பின் நிற்பின்
உழையினியர் ஆகுவர் சான்றோர்;—விழையாதே
கள்ளுயிர்க்கும் நெய்தற் கனைகடல் தண்சேர்ப்ப!
எள்ளுவர் கீழா யவர்.

தருமர் :—என்பது. கள் உயிர்க்கும்—மதுவைப் பொழிந்து மணங்கமழா நிற்கும்; நெய்தல்—நெய்தற் பூவினையுடைத்தாய; கனைகடல் தண் சேர்ப்ப—ஆரவாரத்தாற் சிறந்த குளிர்ந்த கடற் சேர்ப்பனே! சான்றோர்—அமைந்தோர்; இவர் பழையர் என்று பல்நாள் பின் நிற்பின்—இவர் பழையவர் என்று பலநாளுஞ் சென்று நிற்பின்; உழை—தம்மிடத்து; இனியர் ஆகுவர்—இனியராய் இருப்பர்; கீழாயவர்—கீழாயினார்; விழையாது—(அப்படிச் சென்று நிற்பின் அதற்கு) விருப்பம்உறாதே; எள்ளுவர்—இகழ்ந்துவிடுவர் என்றவாறு.

ஒருவர் ஒருநாட் சென்று நல்வார்த்தை சொன்னதே நட்பாகக் கொண்டு ஒழுகுவர் பெரியோர்; கீழாயினாரைப் பல நாள் அடுத்திருப்பினும் அவரை இகழ்வதன்றி நட்பாகக் கொள்ளார் என்று அவர் குணத்தீமை கூறியவாறு.

பதுமனார் :—என்றது. தம்மாட்டுச் சென்று பயின்று பலநாள் பின் நிற்பின் பழையோர் இவர் என்று கருதி அவர்க்கு இனியராய் ஒழுகுவர் சான்றோர்; கள் உயிர்க்கும் நெய்தல் கனைகடல் தண் சேர்ப்பனே! அவ்வாறு ஒழுகினால் விரும்பாதே இகழுவர் கீழாயினோர் என்றவாறு.

உழை—அவ்விடத்து. விழையாதே—விரும்பாதே. கள் உயிர்க்கும்—தேன் பொழியும்.

விளக்க உரை :—என்பது. பழையர் இவர் என்று பன்னாள் பின் நிற்பின்—இவர் பழையர் என்று கருதிப் பல நாளும் பின்சென்று நிற்பின்; உழை இனியர் ஆகுவர் சான்றோர்—தம்மிடத்து இனியராயிருப்பர் சான்றோர்; விழையாது—விரும்பாது; கள் உயிர்க்கும் நெய்தல் கனைகடல் தண் சேர்ப்ப!—மதுவைப் பொழிந்து மணங்கமழா நிற்கும் நெய்தற் பூவினை யுடைய ஆரவாரத்தாற் சிறந்த குளிர்ந்த கடற் சேர்ப்பை யுடையவனே! எள்ளுவர் கீழாயவர்—விரும்பாதே இகழ்ந்து விடுவர் கீழ்மக்கள் என்றவாறு.

கருத்து :—கீழோர் தம்மை விரும்புவாரையும் மதியாது இகழ்வர்.

(கூ).

350. கொய்புல் †குறைத்துக்கொடுத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை;—ஐய! கேள்
எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

தருமர் :—என்பது. ஐய கேள்—அய்யனே! கேளாய்; கொய்புல்—கொய்த புல்லைக்கொண்டுவந்து; [1]குறைத்துக் கொடுத்து—(பெரிய எருது தின்கிற புல்லைக்) குறைத்துக் (கொடுத்து); என்றும் [2]தீற்றினும்—எல்லா நாளுந் தீற்றினும்; [3]சிறுகுண்டை—சிற்றெருதானது; [4]வையம் பூண்கல்லா—வண்டியைப் பூணமாட்டாது; (அதுபோல) எய்திய செல்வத்தர்

---

†'கொடுத்துக் குறைத்து' என்றும் பாடம்.

[1] குறைத்து—அறுத்து எனப் பொருள் கூறினும் ஆம்.

[2] தீற்றினும்—தின்பித்தாலும்.

[3] சிறுகுண்டை—வளராத குறுகி முதிர்ந்த எருது.

[4] வையம்—தேர் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆயினும்—திரண்ட செல்வத்தையுடையராயினும்; கீழ்களை—கீழ் மக்களை; செய்தொழிலால் காணப்படும்—செய்யுந் தொழிலாலே அறியப்படும் என்றவாறு.

பெரியோர்க்குச் செய்த நன்றி பயன்படும் அன்றிக் கீழோர்க்குச் செய்த நன்றி பயன்படாது என்பது தோன்றச் சிறுகுண்டை வையம் பூண் கல்லா என்று உவமை கூறினர்.

பதுமனார்:—என்றது. கொய்த புல்லைக் குறைத்துக் கொடுத்து என்றுந் தீற்றினும் சிற்றெருதுகள் சகடத்தைப் பூணமாட்டா; அதுபோல ஐய கேள்! நிரம்பிய செல்வத்தர் ஆயினும் கீழாயினரைத் தம் செய்தொழிலினாலே கீழ்மைக் குணம் என்று அறியப்படும் என்றவாறு.

குறைத்துத் தின்னுமளவிலே குறைத்துப் பிடித்துத் தீற்றினும்........புரவி பூண்டு செலுத்துவதுபோலப் பெரிய தேரினைப் பூண்டு செலுத்தமாட்டாவாகும் என்றுமாம். கீழ்களைக் காணப் படும் என்றது கீழான செய்கை ஒழிய மேலான செய்கை பெற்றாலும் அது கொண்டு செலுத்தமாட்டாமையால்.

விளக்க உரை:—என்பது. கொய்புல் கொடுத்துக் குறைத்து என்றுந் தீற்றினும்—புல்லைக் கொய்து பெரிய எழுத்தினைக் குறைத்து எல்லா நாளும் கொடுத்துத்தீற்றினும்; வையம் பூண்கல்லா சிறுகுண்டை—பெரிய வண்டியைப் பூண மாட்டாது சிற்றெருது; ஐய கேள்—ஐயனே கேளாய்; எய்திய செல்வத்தர் ஆயினும்—திரண்ட செல்வத்தினையுடையராயினும்; கீழ்களைச் செய்தொழிலாற் காணப்படும்—கீழ்மக்களை அவர் செய்யுந் தொழிலாலே அறியப்படும் என்றவாறு.

கருத்து:—எவ்வளவு மேன்மைப் படுத்தினும் கீழோர் மற்றவர்க்கு உதவார்.

ஒப்புமைப் பகுதி :—

"எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்".

—நாலடியார் : 35:7.

(ல).

---

36. †கயமை.

தருமர் :— அஃதாவது குலத்தாலுங், குடியாலுங், கல்வியாலும், குறைவற்றிருக்கவும் இவற்றிலொரு பந்தமுமற்றுக் கீழாயினர் செய்கையராகிப் பிறர்க்கொரு கேடுவரில் தமக்கொரு செல்வம் வந்தாற் போலக் கருதியும், பிறர்க்கொரு செல்வம் வரில் தமக்கொரு கேடுவந்தாற்போல் அதற்கு வருந்தியும், தம்மை அடுத்து ஒருவர் சில நன்றி செய்திருக்கில் அந்நன்றி சிதையும்படி அவர்க்கொரு குறையுண்டாக்கியும் ஒருவர்பால் தமக்கொரு பயனுண்டாகில் அது பலிப்பித்துக் கொள்ளுமளவு மிக்க ஆசாரஞ்செய்தும் அது பலித்தபின் அவரை அன்னியரைப் போலக் கண்டுந் தம்மைத் தண்டிக்க வல்லார்க்குப் பயன்பட்டு ஆசாரஞ் செய்தும் வருவது.

பதுமனர் :— [அஃதாவது குணத்தாழ்வு; குணத்தினும் குடிப்பிறப்பினும் (குறைவற்றிருக்க) அக்குல அறமான ஒழுக்கத்தினும் ஆசாரத்தினும் கல்வியினும் ஒரு பந்தம் அற்றுக் கீழாயினர் செய்கையராகிப் பிறர்க்கு ஆக்கம் வரின் தமக்குக் கேடுவந்ததாகவும், பிறர்க்கு ஒரு கேடுவரின் தமக்கு ஆக்கம் வந்ததாகவும் கருதுதலும், அறக்கேடு சொல்லுதலும், பழிபாவம் பாராது தமக்கு வேண்டியவாறு செய்தலும் *ஆச்சரியமே

---

†கயவாது தன்மை.

*சுவடியிலுள்ளபடி எழுதப்பெற்றுள்ளது; கருத்து விளங்கவில்லை.

அறிந்து எல்லாம் அஞ்சத்தக்க சந்தோஷங்களை உடையராதலும் பிறவு மன்ன. இவ்வாறே தொழில்களாலுங் குணத்தாலுங் கீழ்ப்பட்ட கயவரது இயல்பு.]

குறிப்பு :—

'கயமை':—

பரிமே:—அஃதாவது மேல் அரசியலுள்ளும், அங்கவியலுள்ளும் சிறப்புவகையான் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினுல் யாவர்க்கும் எய்தவைத்தமையின் ஆண்டுக் குறிப்பால் கூறியனவும் ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மை அதனுல் இஃது எல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது.

மணக்:—கயமையாவது இழிகுணத்தாராகிய மாந்தரியல்பு கூறுதல். இவர் மேற்கூறப்பட்ட எல்லாரினும் இழிந்தாராதலின், இது பின் கூறப்பட்டது.

—குறள். அதி. 108.

மேலையதிகாரத்தில் கீழோரது தன்மையாகிய 'கீழ்மை'யைக் கூறியது முற்றுருமையால் அதனையே 'கயமை'என வேறு பெயரிட்டு இவ்வதிகாரத்திலும் கூறத் தொடங்கினுர்.

351. ஆர்த்த அறிவினர் ஆண்டிளைஞ ராயினுங்
காத்தோம்பித் தம்மை அடக்குப—மூத்தொறுந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தருர் புல்லறிவி னுர்.

தருமர் :—என்பது; ஆர்த்த அறிவினர்—பிணிப்போடு கூடிய அறிவினையுடையார்; [1]ஆண்டு இளைஞர் ஆயினும்—வயதிலே இளையராயிருப்பினும்; காத்து ஓம்பி—உலகத்துக்கு

[1] ஆண்டு—அவ்விடத்து என்பது விளக்கவுரைகாரர் பொருள்.

இயற்கையல்லாத வொழுக்கங்களைப் பாதுகாத்து; தம்மை அடக்குப—(தம்மை) அடங்கி ஒழுகச் செய்வர்; புல் அறிவினர்—புல்லிய அறிவினையுடைய கயவர்; மூத்தொறும்—வயதிலே மூப்புடையராந்தொறும்; தீத்தொழிலே கன்றி—தீய ஒழுக்கத்திலே ஒழுகி அதுவே செய்கையாகத் [1]தழும்பியிருந்து; திரிதந்து எருவைப்போல-மனக்கோட்டம் உடையராய்க் கழுகு போலத் திரிவதன்றி; போத்தறார்—எக்காலமும் புரையறார். எ-று.

இவை முற்றுவமையாகாமையால் வயதிலே மூப்புடையராக இருந்தும் தீயதொழில்களைச் செய்வதனால் கழுகு போல மூத்துந் தீய தொழில்களைச் செய்வதன்றிக் குற்றமறார் எனக் கூறியதாம். பொத்தறார் என்பதை போத்தறார் என்று விகாரப்படுத்திக் கூறினர். புல்லிய அறிவின்றி நிரம்பிய அறிவில்லாமையினால் அவர் நெஞ்சு [2]பொந்தெய..........அறிவினாலே புரை தீர்ந்து உறுதிப்பட்டதல்ல; அதனாற் புரையறார் என்றார். எனவே, வயதிலே இளைஞராயினும் நிரம்பிய அறிவுடையார் ஒழுக்கம் இவர் வயதிலே மூப்புடையராயினும் ஒழுகற்பாலரல்லர் எனக் கயமைக் குணங் கூறியவாறு.

பதுமனார்:—[என்றது. மனத்தின் கண் பிணிப்புண்ட அறிவினையுடையார் ஆண்டிளையராயினும் தம்மைக் காவல்செய்து போற்றித் தம் பொறிகளை அடக்குவர்; புல்லறிவினர் மூத்தொறுந் தீத்தொழிலின்கண்ணே தழும்பி ஒழுகி [3]வேழக்கோல் போல [4]உட்புரையறார் என்றவாறு.

ஆர்த்த—பிணித்த; ஆண்டு—ஆண்டால்; மூத்தொறஉம்—மூப்புண்டாகவும்; கன்றி—தழும்பி; திரிதந்து—ஒழுகி; எருவை போல; பொத்தறார் என்பது போத்தறார் என நீண்டது.]

---

[1] தழும்பி—

[2] இங்கே சில எழுத்துக்கள் சிதைந்துள்ளன.

[3] வேழக்கோல்—காணல்; எருவை என்பதற்கு இப்பொருளையே விளக்கவுரைக்காரரும் கொண்டனர்.

[4] உட்புரை—உள் துளை.

விளக்க உரை:—எ-து. ஆர்த்த அறிவினர் ஆண்டு இளைஞராயினும்—மிக்க அறிவினையுடையவர் அவ்விடத்து இளைஞராயிருப்பினும்; காத்தோம்பித் தம்மை அடக்குப— உலகத்தியற்கையல்லாத ஒழுக்கங்களைப் பாதுகாத்து அடங்கி ஒழுகுவர்; மூத்தொறூஉம்—மூத்தாராயினும்; தீத்தொழிலே கன்றி—தீத்தொழிலே விரும்பியிருந்து; திரிதந்து எருவைபோல்—மனக்கோட்டமுடையராய் வேழக்கோல் போல; போத்தறார் புல்லறிவினர்-எப்பொழுதும் புரையறார் புல்லிய அறிவினையுடைய கயவர் என்றவாறு.

கருத்து:—கயவர், தம் வாழ்நாள் முழுதும் தீய செயல்களையே செய்து காலங்கழிப்பர்.

மேற்கோள் பகுதி :—

யா. வி:—இரண்டாமடி ஒரூஉத் தொடையாய் ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர்.

—செ. சூ. 60.

யா—கா:—முதற் குறட்பாவின் இறுதிக்கண், ஓரசையான் ஆசிட்டு ஒருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை எடுத்துக் காட்டுவர்.

—சூ. 23.

மயிலை } நீட்டல் விகாரத்திற்கு 'பொத்தறார்' 'போத்தறார்'
சங்கர } என நீண்டதை உதாரணமாக காட்டுவர்.

—நன் : சூ. 154.
—நன்-சங். சூ. 155.

ஒப்புமைப் பகுதி :—

"உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்

சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்".

—பழமொழி. 21.

குறிப்பு :—

வேழக்கோல் மேற்புறத்தே பருத்திருப்பினும் உட்டுளை நீங்காதிருத்தல்போல அறிவில்லாதார் வயதில் மூத்திருப்பினும் நெஞ்சினுள்ளே குற்றம் நீங்கப்பெறார். என்க.

(க).

352. செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
†வழும்பறுக் கல்லாதாந் தேரை;—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி அரிது.

தருமர் :—என்பது. செழும்பெரும் பொய்கையுள்—வளம்பொருந்திய பெரிய பொய்கையில்; என்றும் வாழினும்—விடாமல் எப்பொழுதும் வாழினும்; தேரை—தேரையானது; வழும்பு அறுக்கல்லாது—தனக்குள்ள [1]வழும்பை அறுக்க மாட்டாது; (அதுபோல) வழும்பில்சீர்—குற்றமில்லாத சீர்மை யுடைய; நூல் கற்றக் கண்ணும்—நூல்களைக் கற்றாராயினும்; நுணுக்கம் ஒன்று இல்லாதார்—(அந்நூல் சொன்ன முறைமை யிலே ஒழுகுவதற்கு) நுண்ணிய அறிவொன்றும் இல்லாதவரை; தேர்கிற்கும் பெற்றி அரிது—(இவர் குடியிலேயும் பிறந்து நூலினையுங் கற்றவர் என்று) விசாரிக்கும் முறைமை ஒன்றுமில்லை என்றவாறு.

குடி குலத்துப் பிறந்து கல்வியுடையராயினும் கயவர்க்கு அறிவுண்டாகாது எனபதாம்.

---

†'வழும்பறுக்க கில்லாவாம்' என்றும் பாடம்.

[1] வழும்பு—வழுவழுப்பான அழுக்கு.

பதுமனர் :—[என்றது. வளவிய பொய்கையுள் வாழினும் என்றும் தம்மேலுள்ள வழும்பை நீக்கமாட்டாவாந் தேரைகள்; அதுபோலக் குற்றமில்லாத சீர்மையுடைய நூலைக் கற்றாலும் நுண்ணிய அறிவில்லாதார் அந்நூல்கள் சொன்ன பொருள்களை ஆராய வல்லராந் தன்மை அரிது என்றவாறு.

செழும் பெரும் பொய்கை—அழகிய நீரையுடைய பொய்கை. வழும்பு—தன் மேல் உள்ள வழும்பு. தேர்கிற்கும்—ஆராயும்.]

விளக்க உரை :—என்றது. செழும் பெரும் பொய்கையுள் வாழினும்—வளவிய பெரிய பொய்கையிலே விடாமல் எப்பொழுதும் வாழினும்; வறும்பறுக்க கல்லாதாம் தேரை—தனக்குள்ளதாகிய வழும்பறுக்கமாட்டாத தேரை; வழும்பில் சீர்—குற்றமற்ற சீர்மையுடைய; நூல் கற்றக்கண்ணும் நுணுக்கம் ஒன்று இல்லாதார்—நூலினைக் கற்றாராயினும் அந்தநூல் சொன்ன முறைமையிலே ஒழுகத்தக்க நுண்ணிமை ஒரு சற்றுமறியாதார்; தேர்கிற்கும் பெற்றி அரிது—குடியிலே பிறந்து நூலினையுங் கற்றவரென்று விசாரிக்கத்தக்க முறைமையானது ஒன்றுமில்லை என்றவாறு.

கருத்து :—நுண்ணறிவில்லாதார் மனம் எவ்வளவு நூல்களைக் கற்றாலும் பக்குவமடையாது.

மேற்கோள் பகுதி :—

நச் :—"விழுந்தோர் மாய்க்கும் குண்டுகயத்(து) அருகா வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி"-வீழ்ந்தோரை மறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகாக இடைமறைதற்குக் காரணமாகிய நுண்ணிய நீர்மையையுடைய பாசியினது குற்றம்; "வழும்பறுக்க கில்லாவாந் தேரை"

—'வழும்பில்சீர்' என்றார் பிறரும், என்பர்.

—மலைபடுகடாம். 220-21.

ஒப்புமைப் பகுதி:—

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்".

—குறள். 650.

"நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினும் செல்லாமை—நன்மொழியைச்
சிற்றின மல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்".

—திரி. 32.

"எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் என்னாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாம் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து".

—நீதிநெறி. 5.

"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரை யின்காய்".

—நாலடி. 117.

(உ)

353\. கணமலை நன்னாட! கண்ணின்(று) ஒருவர்
குணமேயுங் கூறற் கரிதால்—குணனழுங்கக்
குற்றம் உழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு
எற்றால் இயன்றதோ நா.

பதவுரை:—என்பது. கணம் மலை நல் நாட!—நெருங்கிய மலைகளால் பொலிவு பெற்ற நல்ல நாடனே!; ஒருவர் கண் நின்று—ஒருவர் முன்னே நின்று; குணமேயும் கூறற்கு அரிதால்—அவர் குணங்களையுஞ் சொல்லுதற் கரியதாயிருக்கும்; (அவ்வாறிருக்க) குணன் அழுங்க—குணங் கெடும்படி; குற்றம்—

குற்றமான வார்த்தையை; உழைநின்று—அவர் முன்பே நின்று; கூறும்—கண்ணோட்டமறச் சொல்லும்; சிறியவர்கட்கு—கயவர்க்கு; நா—நாவானது; எற்றால் இயன்றதோ—இரும்பி ஞலோ கல்லினலோ யாதினற் பண்ணப்பட்டதோ? என்ற வாறு. [ஆல்—அசை]

கயவரது குணத்தீமையை நாவிற் கேற்றி அவரை இழி வாகக் கூறியது. குணமேயுங் கூறற் கரிதால் எனவே ஒரு வருடைய நற்குணத்தையும் அவர் முன் நின்று கூறும் பொழுது அறிவுடையோர்க்கு அது மனம் பொருது அப்படி இருக்க முன் நின்று அவரைக் குற்றப்படச் சொல்வது எப்படியோ என்று உயர்ந்தோர் இரக்கமுற்று உரைத்தது.

பதுமனர்:—என்றது. கணமலை நன்னுடனே! எதிர் நின்று ஒருவர் குணத்தையுங் கூறுதற்கு அரிதாகும்; (அவ்வாறி ருக்க) அவரது குணங்கெடக் குற்றத்தை எதிர்நின்று சொல்லுங் கயவர்க்கு எற்றாற் செய்யப்பட்டதோ நா என்றவாறு.

கண மலை—திரண்ட மலை. அழுங்க—கெட. எற்றால்—எதனால். இயன்றது—செய்யப்பட்டது.

விளக்க உரை:—என்றது. கணமலை நன்னுட!—திரண்ட மலையையுடைய நல்ல நாடனே!; கண் நின்று ஒருவர் குணமேயும் கூறற்கு அரிதால்—முன்னே நின்று ஒருவரது குணத் தினையுஞ் சொல்லுதற் கரிதாயிருக்கும்; (அமைந்தோர்க்கு) குணன் அழுங்க—குணம் ஒழிய; குற்றம் உழை நின்று கூறும்—குற்ற மான வார்த்தை அவரிடத்திலே(பட) அவர் முன்பே நின்று கண்ணோட்டமறச் சொல்லும்; சிறியவர்கட்கு—கயவர்க்கு; எற்றால் இயன்றதோ நா—நாவானது கல்லினலோ இரும்பி ஞலோ யாதினற் பண்ணப்பட்டது என்றவாறு.

கருத்து:—ஒருவரது குற்றத்தையே ஆராய்ந்து அதனை நேரில் கூறுவது கயவரது இயல்பு.

மேற்கோள் பகுதி :—

சேனா :—அழுங்கல் அரவமேயன்றி இரக்கமும் கேடும் ஆகிய குறிப்பு உணர்த்தும் என்பதற்கு 'குணனழுங்கக் குற்றம் உழை நின்று கூறும் சிறியவர்கட்கு' என்ற பகுதியை எடுத்துக் காட்டுவர்.

—தொல். சொல். சூ. 350.

தெய்வச் :—அழுங்கல் என்னும் சொல் இரக்கம் என்பதன் பொருண்மையும் கேடு என்பதன் பொருண்மையும் படும் என்பார் கேட்டிற்கு, "குணனழுங்கக் குற்றமுழை நின்று கூறும்" என்றவடியை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். சொல். சூ. 345.

ஒப்புமைப் பகுதி :—

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்".

—குறள். 184.

"காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோ? அமிர்தோ?".

—சீவக சிந்தா. 1069

குறிப்பு.—

'கண்ணின்று' என்பதை, கண் நின்று என்றே பிரித்து தருமர், பதுமனார், விளக்க வுரைகாரர் மூவரும் பொருள் கூறினர். இனி கண் இன்று எனப் பிரித்துக் கண் முன் இன்றிப் புறத்தில் எனப் பொருள் கூறுவாரும் உளர்.

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க—முன்னின்று பின்னோக்காச் சொல்" என்ற குறளின்படி, ஒருவன் எதிரே நின்று இரக்கமறக் குற்றத்தைக் கூறினும், புறத்தே குற்றத்தைக் கூறிப் பழித்தல் கூடாது என்ற கருத்துக்கு இது மாறுபாடாகாதோ எனின் ..ஆகாது; மேலோராயின் கண்டுன்

குற்றத்தைக் கூறித் திருத்த முயல்வர்; கீழோராயின் இல்லாத குற்றத்தை ஏற்றிப் பழிக்க முயல்வர் ஆகலின் குற்றம் உழை நின்று கூறல் கூடாது என்றார் என்க.

(௩).

354. கோடேந்து அகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயல்தேற்றார்;—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பார் மற்றை யவர்.

தருமர் :—என்பது. கோடு ஏந்து அகல் அல்குல் [1]பெண்டிர்—இருமருங்கும் கரைபோன்று உயர்ந்து அகன்ற அல்குலையுடைய மகளிர்; தம் பெண் நீர்மை—தமது பெண்மையின் அழகை; சேடியர் போல—(ஏவல் செய்யும்) சேடியரைப் போல; செயல் தேற்றார்—புனைதல் செய்ய அறியார்; [2]மற்றையவர்—மற்றந்த ஒழுக்கமில்லாதவர்; கூடி [3]புதுப் பெருக்கம் போல—பலவிடத்து நீருங் கூடிப் பெருகுமாறு போல; தம் பெண் நீர்மை காட்டி—தமது பெண்மையினது அழகைப் பூமாலை முதலியவற்றால் ஒப்பித்துப் பலர்க்கும் (அறிவித்து) மதித்து இறப்பார்—தம்மை மதித்துக் கொண்டு செல்லா நிற்பர் என்றவாறு.

கற்புடைய மகளிர் இல்லறத்தினை வழுவாமற் செய்து தம் கொழுநன் மனமுவக்க ஒழுகில், உலகத்தார் தம்மைக் கொண்டாட இருக்கும் இயல்பே தமக்கு அழகாகக் கொள்வதன்றிப் புனைதல் செய்த அழகாயிருக்க வேண்டும் என்னும் விருப்பமுறார். அந்த ஒழுக்கமில்லா மகளிர் தமக்குச் செல்வம்

---

[1] பெண்டிர்—குலமகளிர்.

[2] மற்றையவர்—விலைமகளிர்.

[3] புதுப்பெருக்கம்—புதிய நீர் வெள்ளம்.

இலரர்யினும் உள்ள அளவு கொண்டு தம்மை ஒப்பித்து அழகு செய்துகொண்டு தாம் தூய்மை யுடையரென்று பிறர்க்கு அறிவித்துக் கொழுநன் மனத்துக்குப் பொருந்தாது ஒழுகுவர்; அவரைப் போலக் கயவரும் தமக்கு ஒன்றுமில்லை யாயினும் பெற்ற அளவிலே தானே அழகு செய்துகொண்டு அதனையே தமக்கு மிகுதியான செல்வமாக மதித்துப் பெரியோரை அவமதிப்புப் பண்ணியுந் தமக்கொரு துன்ப முற்றுழிப் புலையரிற் கடையான குறையுடையராகவும் செல்லா நிற்பர்.

ஆதலால், அமைந்தோரது தன்மையைக் கற்புடைய மகளிர் ஒழுக்கமென ஆக்கி, கயவர் தன்மையைக் கற்பில்லா தொழுகும் மகளிர் தன்மையாக இழிவாக்கிக் கூறியதாம்.

பதுமனர் :—என்றது. இருமருங்கும் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய மகளிர் தம் பெண்ணீர்மையைத் தம்மைப் பாராட்டுஞ் சேடியரைப் போலத் தாம் தம்மைப் புனைதல் செய்யார்; புதுப்புனல் வெள்ளம் போலத் தம் பெண்ணீர்மை வெளிப்படுத்துத் தம்மை வியந்து நீங்குவர் மற்றைப் பரத்தையர் என்றவாறு.

விளக்க உரை :—என்றது. கோடு ஏந்து அகல் அல்குல் பெண்டிர்—இருமருங்குங் கோடு கொண்டு உயர்ந்தகன்ற அல்குல்புடைய மகளிர்; தம் பெண்நீர்மை சேடியர்போலச் செயல் தேற்றார்—தம் பெண்மையினது அழகை ஏவற் சிலதி யரைப் போலப் புனைதல் செய்கையினைத் தெளியார்; கூடிப் புதுப் பெருக்கம் போல—பல விடத்தின் நீருங் கூடிய அப்பொழுது பெருகிப் பின் வடியுமாறு போல; தம் பெண் நீர்மை காட்டித்—தம் பெண்மையினது அழகைப் பூமாலை முதலியவற்றால் மிகவும் ஒப்பித்து அதனைப் பலர்க்கும் அறிவித்து; மதித்து இறப்பர் மற்றையவர்—இப்படித் தம்மை மதித்துக் கொண்டு விடுவர் மற்றந்த ஒழுக்கமில்லாதவர் என்றவாறு.

இது கயமையானது எப்படி என்னில், கற்புடை மகளிர் இல்லறத்தினை வழுவாமலும், தம்முடைய கணவன் மனத்துக்கு ஒவ்வ ஒழுகுதலும் உலகத்தார் தம்மைக் கொண்டாட இருக்கும் இயல்புமே தமக்கு அழகாகவும் (கொண்டு) பூச, முடிக்கப், பூண, உடுக்க, என்கிற இவைவயிற்றில் விருப்பம் வையாமல் தமக்கு ஏவல் செய்கிறவர்களுடன் வேற்றுமையற அழுக்கடைந் திருப்பர்; எத்தனை செல்வம் உண்டாகினும் அந்தக் குணமில்லாத மகளிர் செல்வமிலராயினும் தம்மை அழகு செய்து கொண்டு தாம் தூய்மையுடையர் என்னுமதனைப் பிறர்க்கு அறிவித்துத் தம்முடைய கணவன் மனத்துக்கு வாராமல் ஒழுகும் மகளிரைப் போலக் கயவரும் தமக்கு ஒன்றுமில்லை யாயினும் பெற்ற பெற்ற அளவுகளிலே தம்மை அழகு செய்து பெரியோரை அவமதிப்புப் பண்ணியும், தமக்கொரு துன்பம் வந்த காலத்துப் பறையிற் கடையான குறை(யுடையராகவும் செல்லா நிற்பர் என்றவாறு.)

கருத்து:—கயவர் வீண் ஆரவாரத்திற் கருத்துடையராயிருப்பர்.

ஒப்புமைப் பகுதி :—

"புதுப்புனலும்
மாரி யறவே அறுமே அவரன்பும்
வாரி யறவே அறும்".

—நாலடி. 370.

(ச).

355. தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா
உளிநீரர் மாதோ கயவர்;—அளிநீரார்க்(கு)
என்னானுஞ் செய்யார் எனைத்தானுஞ் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்.

தருமர்:—என்பது. தளிர்மேலே நிற்பினும்—(இளந்) தளிரின் மேலே நின்றாலும்; தட்டாமல்—[1]கொட்டுப் பிடி

---

[1]கொட்டுப்பிடி—கொட்டாப்புளி அல்லதாவது மரத்தாலான சுத்தியல்.

கொண்டதனைப் புடைத்தால் அல்லது; செல்லா—தானக அந்தத் தளிரைத் துனியாத; உளிநீரர் கயவர்—உளி போல் கயவர்; (ஏனெனில்) [1] அளி நீரார்க்கு—அளிக்கும் நீர்மை யுடையவர்க்கு; என்னனும் செய்யார்—அவர் ஏவல் சிறிதாயினுஞ் செய்யார்; இன்னங்கு செய்வார் பெறின்—தமக்கு இன்னதவற்றைச் செய்வாரைப் (பெற்ருல்) எனைத்தானும் செய்பவே—அவர் ஏவிய தொழில் இன்னது என்னமல் யாது தொழிலாயினுஞ் செய்வர் என்றவாறு. (மாதோ—அசை)

கயவர் நன்றி அறியார் என்பது தோன்றப் புடைத்தால் அன்றிச் செய்யாத உளியை உவமமாக்கி அவரிழிவு கூறியவாறு.

பதுமனர் :—என்றது. தளிர்மேலே நின்றதாயினும் ஒன்ருல் தட்டாவிடின் உறச் செல்லாத கல்லுளியின் தன்மை போல்வர் கயவர்; அளிக்கும் நீர்மை யுடையார்க்கு யாதானும் ஒரு பொருளைச் செய்யார்; தன்னை இன்னங்கு செய்வாரைப் பெறின் அவர்க்கு எல்லாம் செய்வர் என்றவாறு.

இன்னங்கு—[2] நெருக்கு.

விளக்க உரை :—என்பது. தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா—தளிரின் மேலே நின்ற தாகினும் ஒரு கொட்டாப்பினைக் கொண்டு தன்னைப் புடைத்தாலல்லது தானக அத்தளிரைத் துனியாத; உளி நீரர் கயவர்—உளி போல்வர் கயவரும்; அளிநீரார்க்கு என்னனும் செய்யார்—தம்மை அளிக்கத்தக்க நீர்மையுடையவர்க்கு யாதோர் ஏவல் தொழிலையுஞ் செய்யார்; என்னனும் செய்பவே இன்னங்கு செய்வார்ப்பெறின்—தம்மை அடர்த்து இன்னதவற்றைச் செய்பவரைப் பெறின்; அவர்க்கு இன்ன தொழில் என்னமல் எல்லாத் தொழிலும் செய்வர் என்றவாறு.

---

[1] அளிநீரர்—கருணைத்தன்மை யுடையவர்.

[2] நெருக்கு—துன்பம்.

கருத்து :—கயவர் எளியோர்க்கு உதவாது தம்மை வருத்து வார்க்கே உதவுவர்.

ஒப்புமைப் பகுதி :—

"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்".

—குறள். 1078.

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு".

—குறள். 1077.

"கிட்டுக் கருமம் செயவைத்த பின்னரும்
முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்
தொட்டக்கால் மாழ்கும் தவிர்மேலே நிற்பினும்
தட்டாமற் செல்லாது உளி".

—பழ. 279.

"பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டா—மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணங் கொடுத்தாலும் தாம்".

—நல்வழி. 18.

"துச்சனரைப் பொன்னைத் துடியைத் துரகதத்தை
அச்சமற முன்னிற்கும் ஆயிழையை—நச்சரவைக்
கண்டித்த எள்ளைக் கரும்பை இளநீரைத்
தண்டித்தார்க் கல்லோ சயம்".

"இட்டக் கடைத்தரார் ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார்—நட்ட
சூரிகையாற் காணும் சுலாக்கோலாற் காணும்
சொரிவதாம் ஆபோற் சுரந்து.

—அறநெறிச்சாரம். 183.

(ரு).

356. மலைநலம் உள்ளும் குறவன்; பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர்; கயந்தன்னை
வைததை உள்ளி விடும்.

தருமர் :—என்றது. குறவன்—குறவனானவன்; மலை நலம்—மலையினது நலத்தை; உள்ளும்—கருதியிருப்பன்; உழவன்—உழவனானவன்; பயந்த விளைநிலம்—(தனக்குப்) பயன்பட்ட விளைநிலத்தை; உள்ளும்—கருதியிருப்பன்; சான்றோர்—அமைந்தோரானவர்; ஒருவர் செய்த நன்று—ஒருவர் செய்த நன்றியை; [1]சிறந்து உள்ளுவர்—அது சிறிதாயினும் மிகுதியாகக் கருதியிருப்பர்; கயம்—கயவன்; தன்னை வைததை உள்ளிவிடும்—தன்னை ஒருவர் அறியாது வைததனையே கருதிச் சினங்கொண்டிருப்பன் என்றவாறு.

செய்த நன்றுள்ளுவர் சான்றோர் எனவே, தமக்கொருவர் மிகுதியான பொல்லாங்கு செய்தாராயினும் அவர் ஒரு நன்றி செய்திருப்பாராகில் அந்நன்றியையே மிகுதியாக எண்ணி அவர் செய்த பொல்லாங்குகளை மறந்துவிடுவர் அமைந்தோரானவர். கயம் தன்னை வைததனை உள்ளிவிடும் எனவே, தமக்கொருவர் மிகுதியான நன்றிகளைச் செய்து ஒருகாலத்து அறியாது ஒரு பொல்லாத வார்த்தை சொன்னாராயில் அந்நன்றிகளையெல்லாம் மறந்து அந்தப் பொல்லா வார்த்தையையே கருதிச் சினங் கொண்டிருப்பர் கயவர் என்று அவரது தன்மை கூறுவார் அமைந்தோர் தன்மையும் உடன் கூறினார்.

பதுமனார் :—[என்றது. மலையின் வளத்தை நினைக்கும் குறவன்; பயன்பட்ட விளைநிலத்தை நினைக்கும் உழவன்; ஒருவன் செய்த நன்றியை நினைப்பர் சான்றோர்; கயவன் தன்னை வைததையே நினைக்கும் என்றவாறு.]

---

[1] சிறந்து—சிறக்க.

விளக்க உரை.:—என்பது. மலைநலம் உள்ளும் குறவன்—மலையினது நலத்தைக் கருதியிருப்பன் குறவன்; பயந்த விளைநிலம் உள்ளும் உழவன்—பயன்படத்தக்க விளை நிலத்தைக்கருதியிருப்பன் உழவன்; சிறந்து ஒருவர் செய்த நன்று உள்ளுவர் சான்ேறார்—ஒருவர் செய்த நன்றியினை மிகவும் கருதியிருப்பர் அமைந்தோர்; கயம் தன்னை வைதகை உள்ளிவிடும்—கயவன் தன்னை வைததனைக் கருதியிருப்பன் அல்லது நன்றிகளை மறந்து விடுவன் என்றவாறு.

கருத்து:—கயவர் பிறரது பழிப்புரையையே எண்ணிப் பகைமையை பாராட்டுவர்.

(கூ).

357. ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்;-கயவர்க்(கு)
†ஒருநூறு நன்றிசெய்து ஒன்றுதீதாகில்
ஒருநூறுந் தீதாய் விடும்.

தருமர்:—என்பது. ஒரு நன்றி செய்தவர்க்கு—ஒரு நாளிலே ஒரு நன்றியைச் செய்தவர்க்கு; ஒன்றி எழுந்த பிழை நூறும்—இது குற்றம் எனத்தக்கதாகப் (பொருந்திய) பிழை எத்தனை செய்தாலும் அவையெல்லாம்; சான்றோர் பொறுப்பர்—அமைந்தோர் பொறுப்பர்; கயவர்க்கு—கயவரானவர்க்கு; ஒரு நூறு நன்றி செய்து—அநேக நன்றிகளைச் செய்து; ஒன்று தீது ஆகில்—தம்மையறியாது ஒரு தீங்கு வருமாகில்; ஒரு நூறும் தீதாய் விடும்—அந்த நன்றிகளெல்லாம் பொல்லாதாய்விடும் என்றவாறு.

பதுமனார்:—[என்றது. நன்மை யொன்றை முன் செய்தவர்க்குப் பொருந்தியுளவாய நூறு பழிகளைப் பொறுப்பர்

---

†'எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்—எழுநூறுந் தீதாய் விடும்' என்றும் பாடம்.

அமைந்தோர்; கயவர்க்கு எழுநூறு நன்றியைச் செய்து ஒன்று தீதாகச் செய்யின் முன்பு செய்த எழுநூறு நன்றிகளும் தீதாய் விடும் என்றவாறு.]

விளக்க உரை :—என்பது. ஒரு நன்றி செய்தவர்க்கு ஒன்றி எழுந்த பிழை நூறும்—ஒரு நாளிலே ஒரு நன்றியைச் செய்தவர் தமக்கு இது பிழை என்னத்தக்க பிழையாக மிகப் பொருந்திய பிழைகள் எண்ணிறந்தவையெல்லாம் சான்றோர் பொறுப்பர்—(அமைந்தோர்) பொறுப்பர்; கயவர்க்கு எழுநூறு நன்றி செய்து ஒன்று தீது ஆயின்—கயவர்க்கு எழுநூறு நன்றிகளைச் செய்து ஒரு தீங்கினைச் செய்யில்; எழுநூறும் தீதாய்விடும்—அந்த நன்றிகள் எழுநூறும் தீதாய்விடும் என்றவாறு.

கருத்து :—ஒரு தீமையைக் கருதிப் பல நன்றியையும் மறந்து விடுவது கயவர் இயல்பு.

மேற்கோள் பகுதி :—

நச் :—கட்டளைப் பொழிப்பு முரணுக்கு "எழுநூறு நன்றி செய் தொன்றுதீ தாயின்" என்றவடியை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 95.

ஒப்புமைப் பகுதி :—

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்".

—குறள். 109.

"ஒன்றுதவி செய்யினுமவ் வுதவிமற வாமற்
பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்
நன்றிபல வாகவொரு நவைபுரிவ ரேனும்
கன்றிடுவ தன்றிமுது கயவர்நினை யாரே"

—வில்லி பாரதம்.

(எ).

358. ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்;-கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணுய் பன்றி
செயிர்வேழம் ஆகுதல் இன்று.

தருமர் :—என்பது. வாள் கண்ணுய்—வாள் போன்ற கண்ணிணையுடையவளே; இல் பிறந்தார்—(உயர்) குடிப் பிறந்தார்; ஏட்டைப் பருவத்தும்—வறுமைக்காலத்தும்; செய்வன—செய்யும் உதவிகளை; முழுமக்கள்—அறிவு புகும் நெறியில்லாத திண்ணியரானவர்; [1]மோட்டிடத்தும்—தமக்கு மிகுந்த செல்வமுண்டாகிய காலத்தும்; செய்யார்—செய்யமாட்டார்; (அஃது என் போலவென்னில்) கோட்டை வயிரம் செறிப்பினும்—வயிரஞ் செறிந்த கொம்பை உடையதாயினும்; பன்றி—பன்றியானது; செயிர் வேழம் ஆகுதல் இன்று—போர் செய்யும் யானையாகமாட்டாதது அதுபோலும் என்றவாறு.

கயவர், குடி குலம் உடையராயினும் அவர் ஒழுக்கத்தினுல் குடி குலம் இல்லாதது தோன்ற அறிவுடையோரை இற்பிறந்தார் செய்வன என்றுயர்த்திக் கூறினுராதலால் வறுவியராயினும் உதவிசெய்வது அறிவுடைமையாயிற்று. ஏட்டைப் பருவம்—இளமைப்பருவம்; மோட்டிடம்—முதிர்ந்த பருவம் (எனினுமாம்). இளமைப் பருவமாய் வறுமையும் ஆனவிடத்து உதவிசெய்வது அரிதாகலின் ஏட்டைப் பருவம் என்ருர். இளமையும் வறுமையும் ஆனுலும் உதவிசெய்வது இற்பிறந்தார்க்கு இயற்கையாயிற்று.

பதுமனுர் :—[என்றது. வறுமைக் காலத்தும் குடிப் பிறந்தார் செய்வன மோட்டிடத்தும் செய்யமாட்டார் கயவர்; கொம்பினைக் கிம்புரி செறிப்பினும் வாட்கண்ணுய் பூசலைச் செய்யும் வேழமாகமாட்டாது பன்றி என்றவாறு.

---

[1] மோடு—உயர்ச்சி; ஈண்டுச் செல்வத்தைக் கருதிற்று.

ஏட்டைப்பருவம்—இளமைப் பருவம்; மோட்டிடத்தும்—முதிரவளர்ந்தவிடத்தும் எனினுமாம். முழுமக்கள்—அறமாகிய ஒளி இல்லாத மக்கள். கோட்டை வயிரம் செறிப்பினும்—[1]கோட்டைத் திட்பமுடைய வச்சிரஞ் செறிப்பினும் (எனினுமாம்).]

விளக்க உரை:—என்றது. ஏட்டைப் பருவத்தும்—வறுமையுற்ற காலத்தும்; இற்பிறந்தார் செய்வன—குடிப் பிறந்தார் செய்யும் உதவிகளை; மோட்டிடத்தும்-பெரிய செல்வம் உண்டானவிடத்தும்; செய்யார் முழுமக்கள்—செய்யமாட்டார் அறிவு புரையற்ற திண்ணியார்; கோட்டை வயிரம் செறிப்பினும்—கொம்பை வயிரம் ஊறினும்; வாள் கண்ணாய்—வாள் போலுங் கண்ணையுடையவளே!; பன்றி செயிர் வேழம் ஆகுதல் இன்று—பன்றியானது பூசலைச் செய்யும் யானையாகமாட்டாது என்றவாறு.

ஏட்டைப் பருவம்—இளமைப் பருவம். மோட்டிடத்தும்—முதிர வளர்ந்த விடத்தும்.

கருத்து:—செல்வக்காலத்தும் கயவர் நல்லன செய்யமாட்டார்.

ஒப்புமைப் பகுதி:—

"செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்தும் செய்யார். சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ஆற்றுத லின்று.

—நாலடி, 149,
(அ).

---

[1]கொம்பினை,

359. *நீருட் பிறந்து நிறம்பசிய தாயினும்
ஈரம் கிடையகத் தில்லாகும்—ஒரும்
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்
அறைப்பெருங்க லன்னுர் உடைத்து.

தருமர் :—என்பது. நீருள் பிறந்து—நீருள்ளே பிறந்து; நிறம் பசியது ஆயினும்—நிறம் பசுத்திருந்தாலும்; கிடை அகத்து —[1]கிடைச்சுக்குகள்; ஈரம் இல் ஆகும்—ஈரம் இல்லையாகும்; (அதுபோல) நிறை பெரு செல்வத்து நின்றக்கடைத்தும்—நிறைந்த பெரிய செல்வத்துள்ளே நின்றவிடத்தும்; [2]அறை பெரு கல் அன்னுர் உடைத்து—பெரிய பாறைக் கல்லைப் போல்வார் உளர் என்றவாறு.

கயவர்க்குக் கிருபையில்லை என்பது தோன்ற அவரைப் பாறைக்கல் போல்வார் என்று உவமையாற்கூறினர். மிகுந்த செல்வமுடையராயும் ஒருவர்க்கு ஒன்றினைக் கொடுக்கும் மன விரக்கம் இல்லாமையிஞற் கிடைச்சு உவமையாயிற்று.

ஒரும் என்பது இடைச்சொல்.

பதுமனர் :—[என்றது. நீருள்ளே தோன்றி நிறமும் பச்சையாய் இருந்ததாயினும் கிடையகத்து ஈரமில்லையாகும் அதுபோல நிறைந்த செல்வத்து நின்றவிடத்தும் பாறைப் பெருங்கல் போலப் பயன்படமாட்டாதாரையுடைத்து இவ் வுலகம் என்றவாறு.

கிடை—கிடைச்சு; அறை—பாறை.]

விளக்க உரை :—என்பது. நீருள் பிறந்து நிறம் பசிய

---

*இதுவும் அடுத்த செய்யுளும் முறைவைப்பில் மாறியுள்ளன,

[1] கிடைச்சு—நெட்டி,

[2] அறை—அறுப்புடைய—கற்பாறை,

தாயினும்—நீருட் பிறந்து நிறம் பசுத்திருப்பினும்; ஈரம் கிடையகத்து இல்லாகும்—கிடைச்சுக்குள் ஈரமில்லையாகும்; (அதுபோல) நிறைப் பெருஞ் செல்வத்து நின்றக்கடைத்தும்—நிறைந்த பெரிய செல்வத்துள்ளே நின்றவிடத்தும்; அறை பெருங்கல் அன்னார் உடைத்து – பாறையாகிய பெரிய கல்லைப் போல்வார் உண்டு என்றவாறு.

ஒரும்—என்றது இடைச்சொல்.

கருத்து:—கயவர் நிறைந்த செல்வத்துடன் கூடியிருப்பினும் இளகிய மனத்தவர் ஆகார்.

ஒப்புமைப் பகுதி :—

"வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு.

—நாலடி,
(சுா).

360. இன்றுதும் இந்நிலையே ஆதும் இனிச்சிறிது
நின்றுதும் என்று நினைத்திருந்(து)—ஒன்றி
உரையின் மகிழ்ந்துதம் உள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

தருமர்:—என்பது. இன்று ஆதும்—இன்றைப் பொழுதிலே ஆகின்றோம்; இந்நிலையே ஆதும்—இங்கு நின்ற நிலைவிட்டுத்திரிவதன் முன்னே ஆகின்றோம்; இனி சிறிது நின்று ஆதும்—அல்லது இன்னுஞ் சிறிது நாளைக்குப் பின்பாயினும் ஆகின்றோம்; என்று நினைத்து இருந்து—என்று தமக்கு எய்தாத செல்வத்திலே ஆசைப்பட்டு அதனைக் கருதி; ஒன்றி உரையின் மகிழ்ந்து—பொருந்திய வார்த்தை மாத்திரத்திலே மகிழ்ந்திருந்து;

தம் உள்ளம் வேறு ஆகி—பின்பு அது கூடாதபடியினலே தமது நெஞ்சு வேறுபட்டு; [1]மரை இலையின் மாய்ந்தார் பலர்—தாமரை இலை போல மாய்ந்து போனவர் பலர் என்றவாறு.

உள்ளது கொண்டு அறஞ்செய்யாமல் மறுமையும் இழந்து தமக்கு எய்தாத செல்வத்துக்கு ஆசையுற்று யாவராலும் இகழப்பட்டு இம்மையும் இழப்பர் எனக் கயவரது தன்மை கூறியது.

பதுமனர்:—[என்றது செல்வத்தை இன்று பெறுதும் (இப்பொழுதே பெறுதும்) இனிமேற் சிறிது பொழுது கழித்துப் பெறுதும்; என்று கருதியிருந்து மேவிப் பிறரோடு இப்பெற்றி கூறுகின்ற உரையினல் மகிழ்ந்து பின்பு தம் துணிபு வேறுபட்டுத் தாமரையிலைபோல மாய்ந்து போயினர் பலர் என்றவாறு.]

விளக்க உரை:—என்பது. இன்றுதும் இங்நிலையே ஆதும்—இற்றைப் பொழுதிலே ஆகிறேம்; இங்கு நின்ற நிலை விட்டுத் திரிவதன் முன்பு ஆகிறேம்; இனிச் சிறிது நின்று ஆதும்—அல்லவாகில் இனிச் சிறிது நாளுக்குப் பின்பாகிலும் ஆகிறேம்; என்று நினைத்திருந்து—என்று தமக்கு எய்தாத செல்வத்திலே ஆசைப்பட்டு—அதனைக் கருதியிருந்து; ஒன்றி உரையின் மகிழ்ந்து—பொருந்தின வார்த்தை மாத்திரத்திலே இனிமையுற்றிருந்து; தம் உள்ளம் வேருகி—பின்பு கூடாதபடியாலே தமது நெஞ்சு வேறுபட்டு; மரை இலையின் மாய்ந்தார் பலர்—தாமரை இலை போலே மாய்ந்து போனவர் பலர் என்றவாறு.

உள்ளது கொண்டு அறஞ்செய்யாமல் மறுமைக்கு உறுதியையும் இகழ்ந்து தனக்குத்தகாத செல்வத்திலே ஆசை

---

[1]மரை—தாமரை என்பதன் முதற்குறை; இனி மரை என்பதற்கு மான் எனப் பொருள்கொண்டு மான்களால் மேயப்பட்ட இலைபோன்று இருந்தவிடந் தெரியாமல் மாய்ந்தவர் பலர் எனப்பொருள் கூறுவாரும் உளர்,

மிக்கு யாவராலும் இகழப்பட்டு இம்மைப்பயனும் இழந்து விடுவன் கயவன் என்பதாம்.

கருத்து:—கயவர் வீண்கற்பனையும் ஆரவாரமும் கொண்டு, பயன்பெறாது மடிவர்.

ஒப்புமைப் பகுதி:—

"மரையிலைபோல அமர்ந்திசினோர் பலரே".

—புறம், 27-6,

(ம).

---

7. பன்னெறி.

37. பன்னெறி.

தருமர்:—அஃதாவது இந்த நூலை அதிகாரஅடைவு செய்த பதுமனார் மேல் அதிகாரங்களிலே மிகுந்த பாட்டையெடுத்துப் பல்நெறிகளையும் சேர்த்து பன்னெறி என்று ஓரதிகாரமாகக் (கொண்டமையால்) பொருட்பாலிலே சேர்க்கப்பட்டதாம்.

பதுமனார்:—[அஃதாவது முன் சொற்ற அதிகாரமான வற்றுள் அடங்காது பலர் மேலவாகிய வெண்பாக்களையும் ஓரதிகாரமாகச் சேர்த்தலால் பன்னெறி என்று கூறப்பட்டது.]

361. மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம்?—
விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு.

தருமர் :—என்பது. மழை திளைக்கும் மாடம் ஆய்—மேகங்கள் தவழும் உயரத்தையுடைய, மாளிகையாய், மாண்பு அமைந்த காப்பு ஆய்—மாட்சிமைப்பட்ட காவலையுடையதாய்; இழை விளக்கு நின்று இமைப்பின்—அம்மாடத்தில் செய்த அணிகளே விளக்காக நின்று [1]பாடஞ் செய்யினும்; என் ஆம்?—என்ன பயனுடைத்தாம்?; விழைதக்க—விருப்பமுள்ள; மாண்ட மனையாளை-மாட்சிமைப்பட்ட மனையாளை; இல்லாதான் இல்லாதவனது; இல்லகம்—இல்லானது; காண்டற்கு அரியதோர் காடு—அச்சமிகுதியினாற் காண்பதற்கும் அரிதாகிய காடு என்றவாறு.

சென்று பார்க்குமவர்க்குக் காண்பதற்கு அரிது என அச்சங்கூறவே, பேய்வாழுங் காடாயிற்று.

பதுமனார் :—[என்றது. [2]முகில் தழுவும் மாடமாய் அழகுடைய காவலையுடைத்தாய்ப் பொற்கலன்களாகிய விளக்கு நின்று விளங்கினும் என்னாம்? விரும்பத்தக்க மாட்சிமையுடைய மனையாளை இல்லாதானுடைய இல்லகம் காணற்கரியதோர் [3]புறங்காடு போலும் என்றவாறு.

மழைதிளைக்கும்—முகில் தழுவும்; இழை விளக்கு—பொற்பணியான விளக்கு. நின்று இமைப்பின்—இராப்பகல் வீயாது நின்று விளங்கின்; விழைதக்க—விரும்பத்தக்க; மாண்ட—மாட்சிமையுடைய; காடு—மனிதரில்லாக் காடு என்றுமாம்.]

விளக்க உரை :—என்பது. மழை திளைக்கும் மாடமாய்—[4]மஞ்சு தவழும் மாளிகையுமாய்; மாண்பமைந்த காப்பாய்—நன்மையமைந்த காவலையும் உடைத்தாய்; இழை விளக்கு நின்று

[1] பாடம்—ஒளி.

[2] முகில்—மேகம்.

[3] புறங்காடு—சுடுகாடு.

[4] மஞ்சு—மேகம்.

இமைப்பின்—அணிகலன்களில் விளக்கிட்டு விளங்கச் செய்தா லும்; என்னும்?—என்ன பயன் உடைத்து?; விழைதக்க மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்—விரும்பத்தக்க (மாண்புள்ள) மனையாளை இல்லாதான் மனையகம்; காண்டற்கரிய தோர் காடு—அச்சமிகுதியினாற் காண்கைக் கரியதொரு காடு என்றவாறு.

கருத்து:—நல்ல மனையாளைப் பெறாத மனை செல்வத்தால் மேம்பட்டிருப்பினும் பயனில்லை.

ஒப்புமைப் பகுதி:—

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை."

—குறள். 53.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்".

—குறள். 52.

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்".

—மூதுரை. 21.

"தாரம் மாணாதது வாழ்க்கை யன்று"

—முதுமொழிக். 42.

"மனைக்கு விளக்கம் மடவாள்".

"மனைக்குப் பாழ் வாள்நுதல் இன்மை"

"மனைக்குவிளக் காகிய வாள்நுதல்".

—புறம். 314.

(க).

362\. வழுக்கெனைத்தும் இல்லாத வாள்வாய்க்கிடந்தும்
இழுக்கினைத் †தாம் பெறுவ ராயின்—
இழுக்கெனைத்தும்
செய்குறுப் பாணி சிறியே,அச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

தருமர்:—என்பது. வழுக்கு எனைத்தும் இல்லாத—காவற் [1]சோத்நியம் சற்றுமில்லாத; வாள் வாய்க் கிடந்தும்—வாளின் [2]தாரை போலும் கூரிய காவலுள்ளே இருந்தும்; இழுக்கினை தாம் பெறுவர் ஆயின்—காவற் சோத்தியத்தை மகளிர் (சிறிது) பெறுவராயில்; இழுக்கு எனைத்தும் செய்குறு—ஒரு இழுக்காகிலும் செய்யாமல் கற்புடன் அநேக காலம் இருப்பினும் அவையெல்லாம் தேய்ந்து தாம் இழுக்குச் செய்யாத; பாணி—காலம்; சிறிதே—சிறிதேயுள்ளது எனப் படும்; அ சில் மொழியார்—மெத்தென்ற வார்த்தையுடைய அந்த மகளிர்; [3]கை உறுப் பாணி—அந்த இழுக்கைத் தவிர்ந்து கற்பாக ஒழுகுவதைத் தாம் கைக்கொள்ளாத காலம். பெரிது—பெரிது எனப்படும் என்றவாறு.

பாணி என்பது காலம்; தம் ஆயுசு பரியந்தமும் கற்பாக ஒழுகி ஒரு பொழுதாகிலும் சோரம் உடையராகில் எல்லா நாளும் சோரமே செய்ததாய் முடியும் என்பதாயிற்று.

ஆதலால் மகளிர் தம் மனமே காவலாய் ஒழுகுவதன்றி எத்துணைக் கூர்மையாய்க் காவல் செய்யினும் அக்காவலால் பயனில்லை என்பதாம்.

---

†'தாம் பெறு ராயின்' என்றும் பாடம்.

[1]சோத்தியம்—குற்றம்.

[2]தாரை—கூர்மை.

[3]கை—ஒழுக்கம்; இப்பொருட்டாதலை 'கைதான் நெகிழவிடேன்' (திருவாசகம்: திருச்சதகம்.) என்புழிக் காண்க.

பதுமனார் :—[என்றது. தப்பொன்றுமில்லாதவாள் வாய் போன்ற காவலுள் தங்கியும், சிறிது காவற் சோர்வு பெற்றாரின், எனைத்தானுங் குற்றஞ் செய்யத் தொடங்காத காலம் சிற்றே; அச்சின் மொழியார் ஒழுக்கத்தை மேவாத காலம் பெரிது என்றவாறு.]

விளக்க உரை :—என்பது. வழுக்கெனைத்தும் இல்லாத வாள் வாய்க் கிடந்தும்—காவற் சோற்றி சற்றுமில்லாத வாளிற் றுரை போலும் காவலுக்குள்ளே இருப்பினும்; இழுக்கினைத் தாம் பெறுவராயின்—காவற் சோற்றியினைத் தாம் சிறிது பெறுவராயின்; இழுக்கு எனைத்தும் செய்குறுப் பாணி சிறிதே—எவ்வளவாயினும் சொற்று *செய்யாத காலம் சிறிது; அ சின் மொழியார் கையுறுப் பாணி பெரிது—அந்த மெத்தென்ற வார்த்தையினையுடைய மகளிர் ஒழுக்கமில்லாத காலமே பெரிது என்றவாறு.

கருத்து :—மகளிர் தமது கற்பால் தம்மைப் பாதுகாத்தலே சிறந்தது.

ஒப்புமைப் பகுதி :—

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை".

—குறள். 57.

(உ.)

363. எறியென்று எதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

---

*சுவடியில் உள்ளவாறு எழுதப்பெற்றது.

தருமர்:—என்பது. எறி என்று எதிர் நிற்பாள்—(காதலன் முனிவுக்கு அஞ்சாதே) 'அடி' என்று எதிர் நின்று தான் சொல்லுவாள்; கூற்றம்—கூற்றத்தோடு ஒக்கும்; [1]சிறு காலை அட்டில் புகாதாள்—சிறுகாலையே 'அடுகின்ற இல்லில் புகுந்து அடுவது அடாதாள்; அரும் பிணி—தீராத நோயோ டொக்கும்; அட்டதனை—ஆக்கியவதனை; உண்டி—காதலனுக்கு உணவாக; உதவாதாள்—விருப்புடன் ஊட்டுதற்கு ஒருப் படாதாள்; *இல்வாழ் பேய்—இல்லின்கண் வாழ்கின்ற பேயோடு ஒக்கும்; இ மூவர்—இக்குணம் மூன்றும் உடைய மகளிர்; கொண்டானைக் கொல்லும் படை—தம் காதலனைக் கொல்லும் படையோடு ஒப்பர் என்றவாறு.

அட்டில் என்பது அடுக்களை. இக்குணங்களுடைய பெண்டிரைப் படைத்தார்க்கு இல்லறஞ் சிதையும் ஆதலால் சிதைவுக்கு ஏற்புடைத்தாய் அவரைக் கொல்லும்படை என்றார்.

பதுமனார்:—[என்றது. காதலன் முனிவிற்கு அஞ்சாதே எறி என்று கூறி எதிர் நிற்பாள் கூற்றத்தோடொக்கும்; சிறு காலையே அட்டில் புகாதாள் பொறுத்தற்கரிய நோயோடு ஒக்கும்; அட்டதனைக் காதலன் விரும்பி உண்டற்கு உதவாதாள் இல்வாழ் பேயோடொக்கும்; இப்பெண்டிர் மூவரும் கொண் டானைக் கொல்லும் படையொப்பர் எ-து.

அட்டில்—அடுக்களை. அரும்பிணி—தீர்தற்கரிய பிணி; படை—வாள்.]

விளக்க உரை:—என்பது. எறி என்று எதிர் நிற்பாள் கூற்றம்—காதலன் முனிவுக்கு அஞ்சாதே எறி என்று எதிரே நிற்பாள் கூற்றத்தோ டொக்கும்; சிறுகாலை அட்டில் புகாதாள் அரும்பிணி—சிறுகாலையே அடுக்களையிற் புகாதாள் மருந்தில்

---

*பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் என்றார் பிறரும் (திரிகடுகம். 60)

[1] சிறுகாலை—உதய காலம்.

தீர்தற்கரிய நோயோடு ஒக்கும்; அட்டதனை உண்டி உதவாதாள்— ஆக்கி வைத்ததனைக் காதலனை விரும்பி உண்டற்கு உதவாதாள் குடிவாழ்க்கைப் பேயோடொக்கும்; இம் மூவர் கொண்டானைக் கொல்லும் படை—இந்தப் பெண்டிர் மூவரும் கொண்டானைக் கொல்லும் படையோடொப்பர்.

அட்டில் என்பது அடுக்களை.

கருத்து :—வாழ்க்கைத்துணைவி அடக்கமும் சுறுசுறுப்பும் அன்பும் உடையவளாய் இருத்தல் வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

..............................."கூற்றமே
இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண்".

—மூதுரை. 27.

குறிப்பு .—

கணவனுக்குச் சினமூட்டி அவனுயிரை வாங்குதற்குக் காரணமாயிருத்தலால் 'கூற்றம்' எனவும், காலமறிந்து உண விடாமையால் நோயுண்டாகும் ஆதலால் 'பிணி' எனவும், பெரும் பசியுடன் தான் முன் உண்பதால் 'பேய்' எனவும் கூறினர்.

(௩).

364. கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
ஆர்ப்பது கேட்டும் அதுதெளியான்-பேர்த்துமோர்
இற்கொண் டினிதிருஉம் ஏமுறுதல் என்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

தருமர் :—என்பது. கடி எனக் கேட்டும்—மணத்தைக் கடி என்று அறிவுடையோர் சொல்லக்கேட்டும்; கடியான்—

அப்பாசம் விடுகிற்றிலன்; [1]வெடிபட—வெடிவிடும் ஓசைபோல; ஆர்ப்பது கேட்டும்—ஆரவாரிக்கும் சாப்பறையினது ஓசை கேட்டும்; அது தெளியான்—தன் நிலைமையைத் தெளிகிற்றிலன்; பேர்த்தும் ஓர் இல்கொண்டு—மறித்தும் ஒரு மனையாளைக் கொண்டு; இனிது [2]இருஉம் ஏமுறுதல்—அதனை நம்பி மகிழ்ந் திருந்து (மயங்குதல்) கல்கொண்டு எறியுந் தவறு என்ப—பித்தர் கல்லைக்கொண்டு எறியுந் தவறுபோல்வது என்பர் என்றவாறு.

கற்கொண்டெறியுந் தவறு என்வே பித்தன் எறிந்த கல் ஒருவர்மேற், படும் படாது என்னும் உறுதியில்லை. அதுபோலுந் தனது மனைவாழ்க்கையின் நிலையும் நிலையாமையும் என்பதாம். ஆதலால் இவையிற்றின் நிலைமை இது என ஓர்ந்து இளமைப் பருவத்திலே நன்னெறிப்படுதற்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:—[என்றது கடி என்னும் நாமத்தைக்கேட்டும் கடியப்படுவதொன்று என்று கடியான்; வெருவும்படி பல்லியங் களானவை முழங்கக்கேட்டும் இதுவே பிணப்பறையுமாய் ஒலிக்கும் என்று அதனைத் தெளியான்; மீளவும் தான் ஓர் இல்லாளைக்கொண்டு மயங்குதலைக் கற்கொண்டு எறியும் பித்த ராகச் சொல்லுவர் அறிவுடையார் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. கடி எனக் கேட்டும் கடியான்—மணத்தைக் கடி என்று சொல்லக் கேட்டும் விடுகிற் றிலன்; வெடிபட ஆர்ப்பது கேட்டும் அது தெளியான்—வெடி விடும் ஓசைபோலச் சாப்பறையினது ஆரவாரத்தைக் கேட்டும் தெளிகிற்றிலன்; பேர்த்தும் ஓர் இற்கொண்டு இனிது இருஉம் ஏமுறுதல்—மறித்துமொரு மனையாளைக் கொண்டு அதனை நம்பி மகிழ்ந்திருத்தல்; கற்கொண்டு எறியுந்தவறு என்பவே—பித்தர் போலத் தன்னைக் கல்லைக்கொண்டெறியுந் தவறு என்பர் அறிஞர் என்றவாறு.

---

[1] அச்சம் உண்டாக என்றும் பொருள்கொள்ளலாம்.

[2] இருவும் என்பது இருஉம் என விகாரப்பட்டது.

கற்கொண்டெறியுந் தவறு என்பது பித்தன் எறியுங் கல் ஒருவன்மேற் படாதாகிலும் பட்டதில்லையாயினும் அதுபோலும் மனைவாழ்க்கையின் நிலையும் நிலையாமையும் என்பதாம். பித்தன் எறியுங் கற் குறித்து எறியாத கல்.

கருத்து:—மனைவாழ்க்கையின் துன்பத்தை அறிந்தும் துறவாமல் மீண்டும் மனைவாழ்க்கையிற் புகுதல் பெருந் துன்பமாகும்.

மேற்கோள் பகுதி:—

நச்:—நல்லவை உணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய கிளவி செவிலிக்கேயன்றி அறிவர்க்குமுரிய என்பார், அல்லவை கடிதலுக்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். பொருள். கற்பியல். 13.

ஒப்புமைப் பகுதி:—

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்".

—குறள். 348.

"மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றங் கவர்க்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமாம் மாண்டார் மனம்".

—நாலடி. 23.

"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி யாய்க்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும் பயனை [கழியக்
உணர்வுடையார் பெறுவர் உணர் வொன்றுமிலார்க்
கொன்றுமிலை"

—திருவிளையாடல்: பழி அஞ்சின. 40.

(௪).

365. தலையே தவமுயன்று வாழ்தல், ஒருவர்க்கு[1]
இடையே இனியார்கண் தங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருள் நசையால்
உணரார்பின் சென்று நிலை. [தம்மை

தருமர் :—என்பது. ஒருவர்க்கு—; தலையே தவம் முயன்று வாழ்தல்—தவத்திலே முயன்று வாழ்தலே தலைமையான காரியம்; [1] இனியார்கண் தங்கல்—இனிய மகளிருடனே தங்கி வாழ்தல்; இடையே—இடையான காரியமாவது; புணராது என்று எண்ணி—(பொருள்) கூடுகின்றதில்லை என்று கருதி; பொருள் நசையால்—அந்தப் பொருளாசையாலே; தம்மை உணரார் பின் சென்று நிலை—தமது நிலைமை உணரமாட்டாதாரைப் பின் சென்று நிற்பது; கடையே—கடையான காரியமாவது என்றவாறு.

மனைவாழ்க்கையும் இல்லறம் என்று அறத்திற் பொருந்திய அதனால் அதனை இடையாய காரியம் என்று சிறிது வியப்பாகக் கூறினர்; தம்மை அறியார் எனவே, தமது குடி, குலம், கல்வி, முதலாகிய சரீர சுபாவம் அறியாதாரைப் பின் சென்று பயன் பெறுவோம் என்பது இழிவு ஆதலால் அதனைக் கடையான காரியம் என்று இழிவாக்கியது. தமக்கு வறுமையாய காலத்துத் துறந்து தவம் பண்ணுவதன்றித் தமது மேன்மை அறியாதாரைப் பின் சென்று இரத்தல் ஆகாது என்பதாயிற்று.

பதுமனார் :—[என்றது. ஒருவர்க்குத் தலைமையாவது தவத்தின்கண்ணே முயன்று வாழ்தல்; ஒருவர்க்கு இடையாகிய குணமாவது தமக்கு இனியாரோடு இன்புற்று வாழ்தல்; ஒருவர்க்குக் கடையாகிய குணமாவது தமக்குப் பொருள் கூடுவதில்லையென்று அப்பொருள்மேல் ஆசையால் தம்மை அறியாதார் பின் சென்று நிற்றல் என்றவாறு.

---

[1] இனியார்கண் தங்கல் என்பதற்கு இனிய நற்குணமுடையாருடன் கூடி வாழ்தல் என்றுரைப்பாரும் உளர்.

இனியார்—மகளிர்; புணராது—பொருள் கூடாது; தம்மை உணராதார்—தமது பெருமையை அறியாதார்].

விளக்க உரை:—என்பது. தலையே தவமுயன்று வாழ்தல்—ஒருவர்க்குத் தலையான காரியம் தவத்திலே முயன்று வாழ்தல்; ஒருவர்க்கு இடையே இனியார்கண் தங்கல்—ஒருவர்க்கு இடையான காரியம் இனிய மகளிருடனே தங்கி வாழ்தல்; கடையே—ஒருவர்க்குக் கடையான காரியம்; புணராது என்று எண்ணிப் பொருள் நசையால் தம்மை உணரார் பின் சென்று நிலை—பொருள் கூடுகின்றதில்லையென்று கருதி அந்த ஆசையாலே தம்மை அறியாதார் பின்பே சென்று நிற்கும் நிலை என்றவாறு.

தம்மை யறியாதார் என்பது குடியும், குணனும், கல்வியும், முதலாகிய சரீர சுபாவம் அறியாமல் (இருப்பார்).

கருத்து:—துறவற வாழ்வே சிறந்தது; அடுத்தது இல்லற வாழ்வு; இவற்றைவிட்டு அடிமை வாழ்வை மேற்கொள்ளல் இழிவானதாம்.

(ரு).

366. கல்லாக் கழிப்பர் தலையாயார்; நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள்; கடைகள்
இனிதுண்ணேம் ஆரப் பெறேமியாம் என்னும்
முனிவினாற் கண்பா டிலர்.

கருமர்:—என்பது. தலையாயார்—தலையாய அறிவுடையவர்; [1]கல்லா கழிப்பர்—பல நூல்களையுங் கற்றுப் பொழுதைப் போக்குவர்; இடைகள்—இடையாய குணம் உடையவர்; நல்லவை துவ்வா கழிப்பர்—நல்ல நுகர்ச்சிகளை இனிதாக நுகர்ந்து பொழுதைப்போக்குவர்; கடைகள்—கடையாய குணம் உடைய

---

[1]செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.

வர்; யாம்—; இனிது உண்ணேம்—இனிதாக உண்ணப் பெற்றிலேம்; ஆரப்பெறேம் என்னும்—பொருளினை நிறையப் பெற்றிலேம் என்னும்; முனிவினால்—வெறுப்பினாலே; கண்பாடு இலர்—கண்ணுறக்கமற்று வருந்துவர் என்றவாறு.

வறுமையுற்ற காலத்து நிலையாத யாக்கையின் பொருட்டு இரவிற்பட்டு வருந்துவது என் என உணர்ந்து யாக்கை கழியா முன் மறுமைக்கு ஏற்புடைய துறவிற் புகுதற்குத் துணியாது அறிவின்மையால் வருந்துவதனால் அவரைக் கடைகள் என்று இழிவாகக் கூறுவார் கல்வியையும் ஈகையையும் உடன் கூறினார்.

பதுமனார்:—[என்றது. நூல்களைக் கற்று மனைவாழ்க்கையின்கட் செல்லாது துறப்பர் தலையாய அறிவுடையார்; மனைவாழ்க்கையினின்று நல்லவற்றை நுகர்ந்தே மறுமைக்கு உறுதி இன்று என்று துறப்பர் இடையாய அறிவுடையார்; இனிதாக உண்ணப் பெறேம் நிறையச் செல்வம் பெறேம் யாம் என; நினைத்துக் கண் துயிலல் இலர் கடையாய அறிவுடையார் என்றவாறு.

கழிப்பர்—பொழுதைக் கழிப்பர் என்றுமாம்; துவ்வா—நுகர்ந்து; முனிவு—வெறுப்பு.]

விளக்க உரை:—என்பது. கல்லாக் கழிப்பர் தலையாயார்—பல நூல்களையுங் கற்றுப்பொழுது போக்குவர் தலையாய அறிவுடையோர்; நல்லவை துவ்வாக் கழிப்பர் இடைகள்—நல்ல நுகர்ச்சிகளை இனிதாக நுகர்ந்து பொழுதுபோக்குவர் இடையானவர்; கடைகள்—கடையானவர்; இனிதுண்ணேம் ஆரப் பெறேம் யாம் என்னும் முனிவினால்—இனிதாக உண்ணப் பெற்றிலேம் பொருளினை நிறையப் பெற்றிலேம் என்னும் வெறுப்பினாலே; [1]கண்பாடு இலர்—கண்ணுறக்கமற்று வருந்துவர் என்றவாறு.

---

[1] கண்படு என்பது கண்பாடு எனத் திரிந்தது.

கருத்து :—உலகப் பொருள்களின் நிலையுணர்ந்து ஞான நூல்களால் தெளிவு பெறுபவரே உயர்ந்தோர் ஆவர்.

மேற்கோள் பகுதி :—

மயிலை.
சங்கர. } செய்யா என்ற வாய்ப்பாட்டெச்சம் வினைமுதல் கொண்டதற்குக் "கல்லாக் கழிப்பர் தலையாயார்". என்பதனை மேற்கோள் காட்டுவர்.

—நன். மயிலை. சூ. 347.
—நன். சங்கர. சூ. 344.

நச் :—"........'கல்லாக் கழிப்பர்'..........எனவும் ஆகாரம் வினையெச்சமாய் வருதல் "செய்யாவென்னும் வினையெஞ்சு கிளவியு மவ்வியறிரியா வென்மனார் புலவர்" என்பதனாற் பெறப் படும்" என உரை கூறிப்போவர்.

—தொல். சொல். சூ. 230.

(சா).

367. செந்நெல்லா லாய செழுமுளை மற்றும் அச்
செந்நெல்லே ஆகி விளைதலால்—அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர!
மகனறிவு தந்தை அறிவு.

தருமர் :—என்பது. [1]செந்நெல்லால் ஆய—சிறந்த நெல்லினால் உண்டாகிய; செழு முளை—வளம்பட்ட முளையானது; மற்றும் அ செந்நெல்லே ஆகி விளைதலால்—மற்றும் அந்தச் செந்நெல்லினது தன்மை தப்பாமல் விளைதலினாலே; அ நெல்—அச் செந்நெல்லே; வயல் நிறையக் காய்க்கும்—(வயல்கள்) எங்கும் மிகுதியாக விளையும்; வளம்—வளப்பமுள்ள; வயல் ஊர—வயல்களாற் பொலிவு பெற்ற ஊரனே! தந்தை அறிவு—பிதாவின் அறிவே; மகன் அறிவு—பிள்ளைக்கு மறிவு என்றவாறு.

---

[1] செந்நெல்—செஞ்சாலி எனப்படும் உயர்ந்த நெல்.

பிதா அறிவோடுங் கூடி நன்னெறியின் ஒழுகின், அவர் பிள்ளைக்கும் அத்தன்மை ஆம்; இது இயற்கையாகிய தன்மை. இதுவன்றிப் பிள்ளைக்கு நற்குணமுடைத்தாய்ப் பிதாவுக்குத் துர்க்குணம் உண்டாவதும், பிதாவுக்கு நற்குணமுடைத்தாய்ப் பிள்ளைக்குத் துர்க்குணம் உண்டாவதும் இயற்கை அல்ல. ஆதலால் இத்தன்மை குடி குலம் உடைய ஒழுக்கமுடைமைக்கு ஏற்புடைத்தாய்க் கூறியதாம்.

பதுமனார் :—[என்றது. செந்நெல்லாலே ஆக்கப்பட்ட வளவிய முளை பின்னும் அச்செந்நெல்லின் தன்மையே ஆகி விளைதலால், அந்நெல் வயல் நிறையக் காய்க்கும் வள வயல் ஊரனே! தந்தையறிவே மகனறிவு என்றவாறு.

செழுமுளை—வளவிய முளை. தந்தையறிவு மகனறிவு (என்க.)]

விளக்க உரை :—என்பது. செந்நெல்லால் ஆய செழு முளை—செந்நெல்லால் உண்டாகிய வளவிய முளை; மற்றும் அச் செந்நெல்லே ஆகி விளைதலால்—மற்றந்தச் செந்நெல்லினது தன்மையாகி விளைதலால்; அந்நெல் வயல் நிறையக் காய்க்கும் வள வயல் ஊர—அந்தச் செந்நெல் வயல் முழுதும் நிறைந்த வளப்பத்தினையுடைய வயலூரனே! மகனறிவு தந்தையறிவு—பிதாவின் அறிவே பிள்ளைக்கும் அறிவு என்றவாறு.

இதனால் வித்தின் வழியல்லது பாத்திர விசேடமில்லை என்பதாம்.

கருத்து :—மகன் அறிவொழுக்கமுடையனாதற்குத் தந்தை அறிவொழுக்க முடையனாக வேண்டும்.

ஒப்புமைப் பகுதி :—

"நோக்கி அறிகல்லாத் தம்முருப்புக் கண்ணாடி
நோக்கி அறிப அதுவே போல்—நோக்கி

முகனறிவார் முன்னம் அறிப அதுவே
மகனறிவு தந்தை அறிவு.

—பழமொழி. 149.

"மகனுரைக்கும் தந்தை நலத்தை"

—நான்மணி. 70.

(எ).

368. உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோரும் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகிக்
கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கும் உலகு.

தருமர் :—என்பது. உடை பெருஞ் செல்வரும்—பெரிய செல்வமுடையாரும்; சான்றோரும்—அமைதியுடையோரும்; கெட்டு—(நிலை) கெட்டு; புடை பெண்டிர் மக்களும்—கற்புடைய மகளிரல்லாத புறப்பெண்டிரது மக்களும்; கீழும்—கீழ்மையான குணமுடையோரும்; பெருகி—மிகுதியாய்; கடைக்கால் தலைக் கண்ணது ஆகி—கடையாய தன்மையுடையாரெல்லாம் தலையாய தன்மையராய்த் தலையாய தன்மையாரெல்லாம் கடையாய தன்மையராய்; குடைக்கால் போல்—குடையின் கால் போல; உலகு—உலக இயற்கை; கீழ்மேல் ஆய் நிற்கும்—கீழ் மேலாம் என்றவாறு.

அரசனது கோல் கோடின் உலகம் இத்தன்மையாம். அதனால் அரசனது கோல் கோடாது நூன்முறை நடத்த வேண்டும் எனப் பன்னெறியாதலிற் கொடுங்கோன்மை கூறிய தாம்.

பதுமனார் :—[என்பது. பொருளுடைய செல்வரும் அமைந்தாரும் கெட்டுப் [1]புடைப் பெண்டிர் மக்களும் கீழும்

---

[1] பொருளுடையார் பக்கம் சாரும் விலைமகளிர்.

பெருகி கடைக்கண்ணது தலைக்கண்ணதாகி உலகியற்கைக் குடைக்காம்பு கீழாய் நிற்கற் பாலது மேலாய் நின்றாற் போல வாம் என்றவாறு.

உடைப் பெருஞ் செல்வர்—பொருளுடைய செல்வர்; புடை—பக்கம். குடைக்கால் கீழாய் நிற்கற்பாலது மேலாய் நின்றாற் போல. (என்க.)

விளக்க உரை :—என்பது. உடைப் பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டு—உடைமையுடைய பெரிய செல்வரும் அமைவுடையோரும் கெட்டு; புடைப் பெண்டிர் மக்களும் கீழும் பெருகி—புடைப் பெண்டிரது மக்களும்; கீழ் மக்களும் பெருத்துக் கடைக் கண்ணது தலைக்கண்ணதாய்க் குடைக்கால் போலக் கீழ்மேலாய் நிற்கும் உலகம் என்றவாறு.

கருத்து :—உலகியற்கையின் மாறுபாடு கொண்டு மக்களை மதித்தல் கூடாது.

ஒப்புமைப் பகுதி :—

"புணர்கடல் சூழ்வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ துடையார் இருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வாரே
பட்டுந் துகிலும் உடுத்து".

—நாலடி. 264.

(அ).

369. இனியார்தம் நெஞ்சத்து நோயுரைப்ப அந்நோய்
தணியாத வுள்ள முடையார்—மணிவரன்றி
வீழும் அருவி விறல்மலை நன்னாட!
வாழ்வின் வரைபாய்தல் நன்று.

தருமர் :—என்பது. மணி வரன்றி—மணியைக் [1]கொழித்து; வீழும் அருவி—விழுகின்ற அருவியையுடைத்தாய; [2]விறல் மலை நல் நாட—பகைவராற் சேரப்படாத வளனுடைத்தாய வெற்றியுடைய மலையினாற் பொலிவு பெற்ற நல்ல நாடனே! இனியார்—தமக்கு இனியராகிய நட்டார்; தம் நெஞ்சத்து நோய் உரைப்ப—தம் மனத்துள் இடும்பையைச் சொல்ல; அந்நோய் தணியாத—அந்தத் துன்பத்தை மாற்றாத; உள்ளம் உடையார்—நெஞ்சையுடையார்; வாழ்வின்—உயிர் வாழ்வதிலும்; வரை பாய்தல் நன்று—வரையின் ஏறிப் பாய்தலே நன்மை என்றவாறு.

'முட்டுற்ற போழ்தின் முடுகி என் ஆருயிரை நட்டான் ஒருவன் கை நீட்டேனேல்' என்றாற்போல இதுவும் கூடா நட்பாய் ஒழுகுமவன் மனம் வேறு உரை வேறாகக் கூறியதாம்.

பதுமனார் :—[என்றது. தமக்கு இனியராகிய நட்டார் தம் மனத்துள் இடும்பை கூறினால் அவ்விடும்பையை மாற்றாத உள்ள முடையார் மணி வரன்றி வீழும் அருவி விறல்மலை நன்னாடனே; வாழ்தலின் வரை பாய்ந்து சாதலே நன்று. என்றவாறு.

வரன்றி—கொழித்து.

விளக்க உரை :—என்பது. இனியார் தம் நெஞ்சத்து நோய் உரைப்ப—தமக்கு இனியராகிய நட்டார் மனத்துள் இடும்பையைச் சொல்ல; அந்நோய் தணியாத உள்ளமுடையார்—அந்த இடும்பையை மாற்றாத உள்ளத்தை உடையார்; மணி வரன்றி வீழும் அருவி விறல்மலை நல்நாட—மணியைக் கொழித்து விழும் அருவியினையுடைய வெற்றிமலை நாடனே! வாழ்வின் வரை பாய்தல் நன்று—உயிர் வாழ்வதிலும் வரையினேறிப் பாய்தல் நன்று என்றவாறு.

---

[1] வாரிக் கொண்டு.

[2] விறல்—வெற்றி.

கருத்து:—நண்பரது குறையைப் போக்காதவர் இருப்பதும் இறப்பதும் ஒன்றேயாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்".

—குறள். 214.

(கூ).

370. புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல—புதுப்புனலும்
மாரி அறவே அறுமே, அவரன்பும்
வாரி அறவே அறும்.

தருமர்:—என்பது. புதுபுனலும்—புதிய நீரும்; பூ குழையார் நட்பும்—குழைகளாற் பொலிவு பெற்ற மகளிருடைய நட்பும்; இரண்டும்—இவையிரண்டும்; [1]விதுப்பு அற நாடின்—மயக்கமற ஆராயுங் காலத்து; வேறு அல்ல—வேற்றுமை இல்லை. [எங்ஙனம் எனின்] புதுப் புனல்—புதுப்புனலானது; மாரி அறவே அறும்—மழையில்லையாயின் இல்லையாம்; அவர் அன்பும்—அந்த மகளிர் அன்பானதும்; வாரி அறவே அறும்—பொருள் வருவாய் இல்லையாயின் இல்லையாய்விடும் என்றவாறு.

பல அதிகாரங்களிலும் மிகுந்தது பன்னெறி என்னும் அதிகாரம் ஆகையால் பொதுமகளிரது தன்மையும் உடன் கூறப்பட்டது.

பதுமனார்:—[ஆற்றுள் வரும் புதுப்புனலும் பூங்குழையாராகிய புன்மகளிர் நட்பும் என இரண்டினையும் துளக்கற

---

[1] விருப்பின்றி ஆராயுமிடத்து என்று பொருள் கூறினுமாம்.

ஆராயின் ஒப்புமையுடைய; புதுப்புனலும் மழை அறவே அறும்; அதுபோலப் பூங்குழையார் நட்பும் கொடுக்குமவனது வளமை அறவே அறும் என்றவாறு.

விதுப்புற நாடின்—விரைவுற ஆராயின். வாரி—பெருகின பகுதி.]

விளக்க உரை:—என்பது. புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்—புதிய நீரும் பொலிவினையுடைய மகரக் குழையாற் சிறந்த மகளிருடைய நட்பும் இவை இரண்டும்; விதுப்பற நாடின் வேறல்ல—துளக்கற விளங்க ஆராயுங்காலத்து வேற்றுமையில்லை; புதுப்புனலும் வாரி அறவே அறுமே—புதுப்புனலும் மழையில்லையாகில் இல்லையாம்; அவர் அன்பும் வாரி அறவே அறும்—அந்த மகளிருடைய அன்பும் பொருள் வரவில்லையாயின் அப்பொழுதே இல்லையாய்விடும் என்றவாறு.

கருத்து:—பொருளாளரைக் கருதாது பொருளையே கருதும் விலைமகளிரது நட்பை விரும்பலாகாது.

(ம).

பொருட்பால் முற்றிற்ற.

*காமத்துப்பால்.

1. †இன்ப துன்ப வியல்.

38. பொது மகளிர்.

தருமர் :— அஃதாவது. நல்லவர் தீயவர் என்னுமல் வரைவின்றிப் பொருள் கொடுப்பார் எல்லார்க்கும் பொதுப்பட்ட உடம்பினை உடையராகிக் குணத்தினலன்றி வடிவினற் பெண்டிர் என்னும் வடிவையுடையவர் குணத்தினது இழிவு கூறப் பட்டதாம்.

பதுமனர் :—[அஃதாவது நல்லர் தீயர் என்னும் வரைவு இன்றிப்பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய வுடம்பினை யுடையராய் குணத்தினலன்றி வடிவினற் பெண் தன்மையுடைய பரத்தையர்களது இயல்பு.]

குறிப்பு :—

'வரைவின் மகளிர்',—

பரிமே :—அஃதாவது தந்நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரால் வருங் குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.

மணக் :—வரைவின் மகளிராவது கணிகையரோடு கலந் தொழுகினல் வரும் குற்றம் கூறுதல். முயக்கத்தில் வரைவின்மையால், வரைவின் மகளிரென்று கூறப்பட்டது.

---

*இன்பத்தைப்பற்றிய பகுதி.

†ஒருவகையில் இன்பத்தையும் மற்றொரு வகையில் துன்பத்தையும் ஆக்கும் தன்மைபற்றிய பிரிவு.

ப்ரிப் :—மேல் மனைவியர்மாட்டு மிக்க காதலினல் வரும் குற்றம் கூறினர்; இது கணிகையர் காமத்தினல் வரும் குற்றம் கூறுதலின் பின் கூறப்பட்டது.

பரிதி :—வரைவின் மகளிராவது பொதுமகள் இயற்கை கூறல் என்றவாறு.

—குறள். அதி. 92.

371. விளக்கொளியும் வேசியர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே அவரன்பும்
§கையற்ற போதே அறும்.

தருமர் :—என்பது. விளக்கு ஒளியும்—விளக்கினது ஒளியும்; வேசியர் நட்பும்—பரத்தையர் உறவும்; இரண்டும்—இவையிரண்டும்; [1] துளக்கு அற நாடின்—குற்றமற ஆராயுங் காலத்து; வேறு அல்ல—வேறுபட்டன அல்ல; [எங்ஙனம் எனின்] விளக்கு ஒளியும்—விளக்கினது ஒளியும்; நெய் அற்ற கண்ணே அறுமே—நெய்யில்லையாயின் இல்லையாம்; அவர் அன்பும்—அந்த வேசியர் நட்பும்; கை அற்ற போதே அறும்—கையிற் பொருள் வறண்ட பொழுதே இல்லையாம் என்றவாறு.

கையிற் பொருள் உள்ள காலத்தில் அவர்கட்கு அன்பு உண்டோ என்னில் அப்பொழுது அப்பொருளாசையாலே மனம் வேறு செய்கை வேருய் அன்பு செய்வர் அன்றி உள்ளுரிமையால் அன்பு செய்பவர் அல்லர் என்பதாயிற்று.

---

§கையற்ற கண்ணே என்றும் பாடம்.

[1] துளக்கு—சஞ்சலம் எனினுமாம்.

பதுமனூர் :—[என்றது. விளக்காகிய ஒளியும் பரத்தையர் நட்பும் ஆகிய இரண்டும் ஐயமற ஆராயின் ஒப்புமையுடைய; நெய்யற்ற கண்ணே விளக்கொளியும் அறும்; கைப்பொருள் அற்ற பொழுதே அவர் நட்பும் அறும் ஆதலான் என்றவாறு.

கை—கையிற் கொண்டுள்ள பொருள்].

விளக்க உரை :—என்பது. விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்—விளக்கினதொளியும் பரத்தையர் உறவும் இவையிரண்டும்; துளக்கற நாடின் [1]வேறல்ல—குற்றமற ஆராயுங் காலத்து வேறுபாடில்லை; விளக்கொளியும் நெய்யற்ற கண்ணே அறுமே—விளக்கின் ஒளியும் நெய்யில்லையாயின் இல்லையாம்; அவர் அன்பும் கையற்ற கண்ணே அறும்—அவரன்பும் கையிற் பொருள் இல்லையாயின் இல்லை என்றவாறு.

கருத்து :—வேசையர் அன்பு விலைப் பொருளின் மேலேயே யுள்ளதாகலின் அவரது போகம் இனியதன்று.

ஒப்புமைப் பகுதி :—

"புதுப் புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல—புதுப்புனலும்
மாரி யறவே அறுமே அவரன்பும்
வாரி அறவே அறும்".

—நாலடி. 370.

"பருகு வாரிற் புல்லிப் பயங்கண்மாறத் துறக்கு
முருகு விம்மு குழலார் போல"

—சீவக. 1415.

---

[1] விளக்கொளி நெய்யிருக்குமளவும் நின்று அது வற்றியபோது நீங்குதல் போல வேசையர் நட்பு. பொருளிருக்குமளவும் நின்று அது வறண்ட போது நீங்கிவிடுதலால் 'வேறல்ல' என்றார்.

"நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினையொழி காலைத் திருவின் செல்வி
யனையே மாகி யாடவர்த் துறப்பேம்".

—மணி. 18 : 19-22.

"வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை"

—மணி. 18 : 119.

(க).

372. அங்கோட்டு அகலல்குல் ஆயிழையாள் நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன்—
செங்கோட்டின்
மேற்காணம் இன்மையான் மேவாது ஒழிந்தாளே
காற் கால்நோய் காட்டிக் கலுழ்ந்து.

தருமர் :—என்பது. [1]அம் கோடு அகல் அல்குல் ஆய் இழையாள்—அழகிய [இருமருங்குங் கரைபோன்று] புடை பரந்த அல்குலாலும் தெரிந்த அணிகளாலும் பொலிவுபெற்றவள்; நம்மோடு—முன்பு நம்முடனே கூட; செங்கோடு [2]பாய்தும்—மலைக்குவடேறிப் பாய்வோம்; என்றாள்—என்று சொன்னாள்; காணம் இன்மையான்—[இப்பொழுது நம்முடைய கையிற்] பொருள் இல்லாமை அறிந்தமையால்; கால் [3]கால் நோய் காட்டிக் கலுழ்ந்து—(தனது) காலுக்கு வாதநோயைக் (காரணம்) காட்டி அழுது; செங்கோட்டின் மேல் மேவாது ஒழிந்தாள்—மலைக்குவட்டின் மேலேறி விழுகைக்குப் பொருந்துதலைத் தவிர்ந்தாள் என்றவாறு.

---

[1]'அங்கோட்டகல் அல்குல்' இயற்கையழகையும், 'ஆயிழை' செயற்கை யழகையும் புலப்படுத்தின.

[2]பாய்தும்—முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை 'நீயும் நானும்' என்றபடி.

[3]கால் நோய்—வாயு நோய்; அஃதாவது வாதநோய்.

அழுவது என்னெனில், பின்னும் பொருளுடையரானாலும் வரவேண்டும் என்பது கொண்டு அழுததாம். வரை பாய்தலாவது மானிகள் வரைபாய்ந்து உயிர்விட்டால் இப்பொழுது கருதியது மறுமைக்கண் எய்துவர் என்னும் விதியால்; மறுமைக்கண்ணும் பிரியாமல் இருக்கைக்குப் பொருள் உளவாதல் கூறினார் என்பது குறிப்பாற் கொள்ளப்பட்டது.

பதுமனார்:—[என்றது. அழகிய புடை பரந்த அல்குலையுடையாள் நம்மோடு மலைக்குவடேறிப் பாய்தும் என்று சொன்னாள்; இப்பொழுது மலைக்குவட்டின்மேல் ஒரு பொருளில்லாமையால் நம்மோடு மேலாது ஒழிந்தாள்; தன் காலுக்கு வாத நோய் உண்டென்று காட்டிக் கலுழ்ந்து பிரியா நின்று என்றவாறு.]

விளக்க உரை:—என்பது. அங்கோட்டு அகலல்குல் ஆயிழையாள்—அழகிய புடைபரந்த அல்குலினையுடைய ஆயிழையாள்; நம்மோடு செங்கோடு பாய்துமே என்றாள்—முன்பு நம்முடனே மலைக்குவடேறிப் பாய்தும் என்றுஞ் சொன்னாள்; செங்கோட்டின்மேல் காணம் இன்மையான் மேவாது ஒழிந்தாள்—இப்பொழுது மலைக்குவட்டின் மேலேறி விழுகைக்கு நம்முடைய கையிற் பொருளில்லாமை யறிந்து அதற்குப் பொருந்துதலைத் தவிர்த்தாள்; கால் கால் நோய் காட்டிக் கலுழ்ந்து—காலுக்கு வாத நோயைக்காட்டி அழுது என்றவாறு.

அழுதது யாதென்னில் பின்பும் பொருளுடையரானாலும் அவர் வேணும் என்பதுகொண்டு வரை பாய்தல் என்பது மானிகள் வரைபாய்ந்து உயிர்விட்டால் அப்பொழுது கருதியது மறுமைக் கண்ணே பெறுவர் என்னும் விதியினான் மறுமைக் கண்ணும் பிரியாமலிருக்கைக்குப் பொருளுள்ள காலம் சொன்னார் என்பதாம்.

கருத்து:—வேசையர் உள்ளன்பு கொள்ளாது அன்புடையார் போல் நடித்துப் பொருள் பறிப்பர்.

ஒப்புமைப் பகுதி :—

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்".

—குறள். 911.

"தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே"

—புறம். 73.

"நாவார வேண்டும் விதஞ்சொல்லுவார் உனை நான்பிரிந்தால்
சாவேனென் றேயிருந் தொக்கவுண் பார்கள்கை தான்
வறண்டால்
போய்வாரும் என்று நடுத்தலைக்கே குட்டும் பூவையர்
....

(உ).

373. அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மால் ஆயினும் ஆகமன்—தங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

தருமர் :—என்பது. அம் கண் விசும்பின்—அழகிய இடத்தையுடைய சுவர்க்கத்தின்; [1] அமரர்—தேவர்களால்; தொழப்படும்—தொழப்படுகிற; செம் கண் மால் ஆயினும் ஆக—சிவந்த கண்களையுடைய] இந்திரனேயானாலும் ஆகுக; தம் கை கொடுப்பது ஒன்று இல்லாரை—மற்றுந் தம்முடைய கையிற் கொடுக்க ஒரு பொருளும் இல்லாதவரை; கொய் தளிர் அன்னார்—கொய்யுந் தளிர் போன்ற நியத்தினையுடைய விலைமாதர்; தம்

---

[1] அமரர் தொழப்படும் செங்கண்மால் என்பதற்குத் திருமால் என்பது பதுமனார் கொண்ட பொருள்; எனவே பெருமையும் உருவும் செல்வாக்கும் உணர்த்தியவாறும்.

கையால் தொழுது—தம்முடைய கைகளால் தொழுது; விடுப்பர்—தம்மிடத்தினின்றும் போகச்சொல்லிவிடுப்பர் என்றவாறு. [மன்—அசை.]

தொழுது விடுதல்—பொருளுடையராய்ப் பின்பும் வருதற் பொருட்டாம் அன்றியும் பொருளில்லாரைக் கையால் தொழுது விடுவர். பொருளுடையராய் வருவாரையும் தொழுது தம் அகத்திற் புக விடுவர். பொருளுடையாரையும் பொருளில்லாரையும் தொழுது விடுவர் என்பது குறிப்பாற் கொள்ளப்பட்டது.

பதுமனார்:—[என்றது. அழகிய இடத்தையுடைய [1] துறக்கத்துள் தேவரால் தொழப்படும் செங்கண்மாலாயினும் ஆகுக; அவன் கையில் பொருளில்லையேயாயின் (அவரை) கொய்தளிர் போலும் மேனியையுடைய பரத்தையர் தமது கையால் தொழுது போக்குவர் என்றவாறு.

தொழுது விடுப்பது—பொருள் பெற்றால் கொண்டு வருதற்கு.]

விளக்க உரை:—என்பது, அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்—அழகிய இடத்தையுடைய துறக்கத்தில் தேவர்களால் தொழப்பட்ட; செங்கண்மால் ஆயினும் ஆக-தேவேந்திரனாகிலும் ஆகுக; தம் கைகொடுப்ப தொன்றில்லாரை—மற்றுந் தம்முடைய கையிற் கொடுக்க ஒரு பொருளில்லாராயின் அவரை; கொய்தளிர் அன்னார்—கொய் தளிர்போலும் நிறத்தினை உடையவர்; விடுப்பர் தம் கையால் தொழுது—தம்மிடத்தினின்றும் போகச் சொல்லிவிடுவர் தம் கையால் தொழுது என்றவாறு.

கையால் தொழுது என்பது பொருளுடையாரானாலும் பின்பும் வருதற்பொருட்டு என்பதாம்.

---

[1] துறக்கம்—சுவர்க்கம்.

கருத்து :—வேசையர் விலைப் பொருளைத்தவிர வேறு தகுதிகளை விரும்பமாட்டார்.

(ரு).

374. ஆணமில் நெஞ்சத்(து) அணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடுவனையர்;—காணவே
†செக்கூர்ந்து கொண்டானும் செய்த
அக்காரம் அன்னார் அவர்க்கு. [பொருளுடையார்

தருமர்:—என்பது. ஆணம் இல் நெஞ்சத்து—[I]ஈரபாகம் இல்லாத நெஞ்சினையுடையராய; அணி நீலம் கண்ணார்க்கு—அழகிய நீலோற்பலம் போன்ற கண்களையுடையார்க்கு; காணம் இல்லாதார்—பொருளில்லாதார்; [எத்துணை உயர்ந்தோராயினும்] கடு அனையர்—நஞ்சினோடு ஒப்பர்; காணவே—எல்லோரும் அறிய; செக்கு ஊர்ந்து கொண்டானும் செய்த பொருள் உடையார்—செக்கை ஆட்டியாவது கூலி பெற்றுப் பொருள் செய்திருப்பின் அப்பொருளுடையார்; அவர்க்கு—அப்பொது மகளிர்க்கு; அக்காரம் அன்னார்—சர்க்கரை போலே இனிமையுடையராக இருப்பர் என்றவாறு.

செக்கு ஊர்வது மிகவும் இழிவு. ஆதலால் பொருட் பெண்டிர்க்கு நல்லவர் தீயவர் என்னும் வரையில்லை என்பது தோன்றச் செக்கூர்வாரைக் கூறி அவர் இழிபுரைத்தது. காணவே என்பது நல்(லோர்) இருக்கப் பொருள் நசையால் (யாவர்) பாலும் விருப்பமுறுவார் தன்மையைக் காணக்கடவதோ என அதிசயித்துரைத்ததுமாம்.

பதுமனார் :—[என்றது. ஈரமில்லாத நெஞ்சினையுடைய அழகிய நீலக் கண்ணார்க்குப் பொருளில்லாதார் நஞ்சோடு

---

†செக்கூர்ந்து கொண்டாரும் என்றும் பாடம்.
[I]ஈரம்—அன்பு.

ஒப்பர்; நட்புலனுகவே செக்கை ஊர்ந்து கொண்டாரயினும் செய்த பொருளுடையராயின் அவர்க்கு அக்காரம் போல்வர் என்றவாறு.

ஆணமில் நெஞ்சு—பசையிலா நெஞ்சு; காணம்—பொன். கடு—நஞ்சு. காணவே – தான் காணவே.]

விளக்க உரை :—என்பது. ஆணமில் நெஞ்சத்து அணி நீலக் கண்ணார்க்கு—நன்மையில்லாத நெஞ்சினையுடைய அழகிய நீலோற்பலம் போலும் கண்ணினையுடையார்க்கு; காணம் இல்லாதார் கடு அனையர்–பொருளில்லாதார் நஞ்சோடு ஒப்பர்; காணவே செக்கூர்ந்து கொண்டாலும் செய்த பொருளுடையார் —எல்லாரும் அறியச் செக்கை ஆடியும் பொருளுடையரா யிருப்பின் அவர்; அக்காரம் அன்னார் அவர்க்கு—அவருக்குச் சர்க்கரை போலே இனிமையும் உடையராயிருப்பர் என்றவாறு.

கருத்து :—விலைமகளிர் பொருளுடையார் இழிந்தோராயினும் அவரையே விரும்புவார்.

ஒப்புமைப் பகுதி :—

“இழிபவர் உயர்ந்தோர் மூத்தோர் இளையவர் கழியா நோயாற்
கழிபவர் யாவரேனும் கண்வலைப் பட்டு நெஞ்சம்
அழிபவர் பொருள்கொண் டெள்ளுக்கு எண்ணெய்போ
லளந்துகாட்டிப்
பழிபடு போகம் விற்பார்”

—திருவிளையாடல். ௪௧. 46.

(௪).

375. பாம்பிற்கு ஒருதலை காட்டி ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும்—அங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.

தருமர் :—என்பது. பாம்பிற்கு ஒரு தலை காட்டி—ஒரு தலையினை பாம்பிற்கு காட்டி; ஒரு தலை—ஒரு தலையாகிய வால் புறத்தை; தேம்படு தெண்கயத்து—தேன் பொருந்திய பூக்களினாற் பொலிவு பெற்ற தெளிந்த நீரையுடைய பொய்கையில்; மீன் காட்டும்—மீனுக்குக் காட்டுகிற; மலங்கு அன்ன செய்கை—விலாங்கு மீனது செய்கைபோலுங் குணமுடைய; மகளிர் தோள் சேர்வார்—விலை மாதர் தோள் சேர்பவர்; விலங்கு அன்ன †வெள் அறிவினர்— மிருகங்களினது அறிவு போலும் வெளிறுன அறிவை உடையவர் என்றவாறு. [அங்கு—அசை.]

மலங்கன்ன செய்கை எனவே அவர் மனங்கொள்ளும்படி மனம் வேறு செய்கை வேருக அன்பு செய்வர் என்பதாம். அத் தன்மையராய்ச் சேருதல் அறிவுடையார்க்குப் பொருந்திய தல்லாமையால் அச்செய்கையிற்படுவார்க்கு ஞான அறிவில்லை என்பது தோன்ற விலங்கன்ன வெள்ளறிவினர் என்ருர்.

பதுமனர் :—[என்பது. ஒரு தலை பாம்பிற்குக் காட்டி; ஒரு தலை தேம்படு தெண் கயத்து மீனிற்குக் காட்டும் மகளிர் தோள்களைச் சேர்வார் விலங்கோடு ஒப்பர்; வெள்ளறிவுடையார் என்றவாறு.

அவரவர்க்கு வேற்றுமை காட்டாமல் இனஞ் சேர்ந்து நின்று அன்பு காட்டுதல்; விலங்கு—மிருகம்.]

விளக்க உரை :—என்பது. பாம்பிற்கு ஒருதலை காட்டி —ஒரு தலையைப் பாம்பிற்குக் காட்டி; ஒரு தலை தேம்படு தெண் கயத்து [1]மீன் காட்டும்—ஒருதலையைத் தேன். பொருந்தின

---

†வெள்ளறிவினர்—தாம் அறிவு முதிர்ச்சிபெருது பெற்ருர் போன்று தம்மைத்தாமே மதிக்கும் பயனற்ற அறிவினர். "வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை—உடையம் யாம் என்னும் செருக்கு"—என்ற திருக்குறளும் காண்க. [குறள். புல்-844].

[1] மீன்காட்டும்—நான்காம் வேற்றுமைத் தொகை.

பூக்களையுடைய தெளிந்த பொய்கையின் மீனுக்குக் காட்டுகிற; மலங்கன்ன செய்கை மகளிர் தோள் சேர்வார்—மலங்கினது செய்கை போலுஞ் செய்கையையுடைய மகளிர் தோளினைச் சேர்வார்; விலங்கன்ன வெள்ளறிவினர்—விலங்கோடொப்ப வெளிறான அறிவுடையார் என்றவாறு.

மலங்கு என்பது விலாங்கு என்னும் மீன். மலங்கன்ன செய்கை யென்பது..................கொள்ளும்படி வேறு பாடற அன்பு செய்கையாம்.

கருத்து :—வேசையர் பலர்க்கும் ஆசைகாட்டி மயக்குபவர் ஆதலின் அவருடன் சேரலாகாது.

குறிப்பு :—

தலைப்புறம் பாம்பு போன்றும் வாற்புறம் மீன் போன்றும் இருக்கும் ஒருவகை மீன் விலாங்கு மீன் எனப்படும். இது பெரும் பாம்பு தன்னை மீன் என்று பிடிக்க வருகையில் அதற்குத் தலைப்புறத்தைக் காட்டியும், பெரு மீன், தன்னைப் பாம்பென்று பிடிக்க வருகையில் அதற்கு வாற் புறத்தைக் காட்டியும் இனம் போன்று உலவி வஞ்சித்து வாழவல்லது. இவ்வாறே வேசையர் பொருளுடையார் பொருளிலார் யாவரிடத்தும் விருப்புற்றும் வெறுப்புறுதும் இனம் போன்று ஒழுகி வஞ்சித்துப் பொருள் பறித்து வாழ்பவர் என்க. இவ்வஞ்சனை அறிந்தால் அவர்களது இன்பம் வெறுக்கப்படும். வெறாமல் இன்பம் நுகர்வார் அவ் வஞ்சனை அறியாதவர் ஆதலின் வெள்ளறிவினர் என்றார்.

(ரு).

376. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா அன்றிலும்
†நிச்சலும் நம்மைப்பிரியலம் என்றுரைத்த[போ(ல்)
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாள்
நிற்றியோ போதியோ நீ. [நன்னெஞ்சே!

---

†'நித்தலும்' பாடபேதம்.

தருமர் :—என்பது. நல் நெஞ்சே—என்னுடைய நல்ல நெஞ்சமே! பொத்த—[1]பொதுத்த; நூல் கல்லும்—நூலிற் கோக்கப்பட்ட மணியும்; புணர் பிரியா அன்றிலும்—இணை பிரியாத [2]அன்றிலும்; போல்-போல; நிச்சலும்—எப்பொழுதும்; நம்மை பிரியலம்—'நம்மைப் பிரியோம்' என்று உரைத்த—என்று [முன்பு] சொன்ன; பொன் தொடியும்—பொன்னின் தொடியை உடையவளும்; போர் தகர் கோடு ஆயினள்—[இப்போது] பொருகின்ற கிடாயினது (கொம்பு) போலத் [3]திருகி நின்றாள். நீ—; நிற்றியோ—இன்னும் இவளை இன்புற்று நிற்கின்றாயோ; போதியோ—என்னுடன் பொருந்தி வருதற்கு உரியையோ? என்றவாறு.

பொத்த நூற் கல் என்பதைப் [4]பணையார் கடையுஞ்சாணை என்று பொருளாக்கிச் சாணையிற்பண்ணப்பட்ட அரக்குமணலுங் கூடத் தேய்வது போல அவன் கெட்டபோது கெடவும் வாழ்ந்த போது வாழ்வுமாகச் சொன்ன பரத்தையர் நெஞ்சில் திண்மை சொன்னதாம். பொருளற்ற வேறுபாடானது கண்டு அவர் மனக்கொடுமை கூறியதுமாம்.

பதுமனார் :—[என்றது. பொதுத்த நூலிலே கோர்க்கப் பட்ட மணியுந் துணையைப் பிரியாத அன்றிலும் போல நாள் தோறும் நம்மைப் பிரியலம் என்றுரைத்த பொற்றொடியை உடையாளும் போர்த்தகர்க் கோடுபோல் ஆயினள். நல்ல நெஞ்சமே! நீ இவள்மாட்டே நிற்றியோ? என்னோடே போதியோ என்றவாறு.

---

[1]பொதுத்த—துளைத்த.

[2]அன்றில்—ஒருவகைப் பறவை; இதன் ஆணும் பெண்ணும் என்றும் இணைபிரியாதிருக்கும்; ஒன்றைவிட்டு ஒன்று பிரியினும் அத்துன்பந் தாங்காமல் கூவிக் கூவி அழைத்துக் கூடாவிடின் உயிர்விடும்.

[3]திருகிநிற்றலாவது—குணம் மாறுபட்டு நின்றல்.

[4]சாணைக்கல் செய்வோர்.

பொத்த நூற் கல்லுப் பணியார் சாணை என்றுமாம்.' தகர்க் கோடு பின்பு திருகி நிற்றலின் நீ இவள் மாட்டு நிற்றியோ என்னுடனே போதியோ என்றது. சாணை அரக்கு மணலும் சேரச் செய்தது; உவமம்.]

விளக்க உரை:—என்பது. பொத்த நூற் கல்லும் புணர் பிரியா அன்றிலும் போல்—பொத்து நூல் சேர்க்கப்பட்ட மலியும் புணர்ந்து பிரியாத அன்றிலும் போல; நிச்சலும் நம்மைப் [1]பிரியலம் என்றுரைத்த—எப்பொழுதும் நம்மைப் பிரியோம் என்று சொன்ன; பொற்றொடியும் போர்த்தகர்க் கோடாயினள்—பொற்றொடியை உடையாளும் பொருகின்ற கிடாயின் கொம்புபோலத் திருகிவிட்டாள்; நன்னெஞ்சே—நல்ல நெஞ்சமே! நிற்றியோ போதியோ நீ—இன்னமும் இவ்வளவிலே நிற்க ஆசையுடையையோ நம்முடனே பொருந்தி வருதற்கு உரியையோ என்றவாறு.

பொத்தநூற் கல் என்பது [2]பணியார் கடையுஞ் சாணை என்று பொருள் சொல்லி அரக்கு மணலுங் கூடத் தேய்வது போல அவன் கெட்டபோது கெடவும் வாழ்ந்தபோது வாழவு மான பரத்தையர் நெஞ்சில் திண்மை சொன்னதாம். பணியார் சாணை அரக்கும் மணலுங் கூட்டிப் பண்ணப்படும்.

கருத்து:—சொல்வேறு செயல் வேறான வேசையர் வழிச் செல்லாமல் மனத்தை அடக்கவேண்டும்.

(சுு).

---

[1]பிரியலம்—ஆயத்தாரையும் உட்படுத்திய தன்மைப் பன்மை.

[2]சாணைக்கல்—அரக்கும் மணலும் கூட்டிச் செய்யப்பெறுவது இக் கல்லில் இரத்தினங்களைத் தேய்க்கையில் மணலும் கூடத்தேயும்; அது போல அவன் கெட்டபோது தானும் கெடவும் வாழ்ந்தபோது தானும் வாழவும் இவ்விதம் வஞ்சனையாகக் கூறிய வேசையர் மனத்திண்மை நோக்கிச் சாணைக்கல்லை உவமையாக்கினர்.

377. ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை
ஏமாந்து எமதென்று இருந்தார் பெறுபவே
தாமாம் பலரால் நகை.

தருமர் :—என்பது. ஆமாபோல் நக்கி—காட்டுப் பசுவானது நக்குமதுபோலக் குழைவு செய்து; அவர் கைப் பொருள் கொண்டு—அவர் கையிலுள்ள பொருளெல்லாம்கையுறக் கொண்டு; சேமா போல் குப்புறும்—(பின்பு) பொலியெருது போலக் குப்புற்றுக் கொள்ளும்; சில்லைக் கண் அன்பினை—[1]சில்வீடு போன்ற நொய்தாய குணமுடைய பரத்தையரிடத் தன்பினை; ஏமாந்து—உட்கொண்டு (மயங்கி); எமது என்று இருப்பார்—'இவர் நம் வயத்தவர்' என்று இறுமாந்திருப்பவர்; பலரால் நகை பெறுப—பிறர் நகைக்கும் நகையைப் பெறுவர் என்றவாறு. [தாம், ஆம் அசைகள்].

பலரால் நகையெனவே, கைப்பொருள் அறு முன்னம் பரத்தையர் வயத்தனுய் இருப்பானை நோக்கி, இப்பொருள் உள்ளளவும், காட்டுப் பசு நக்குவது போல மனங்கொள்ள ஒழுகி அப்பொருள் கைக்கொண்டபின், சேமா குப்புறுவது போல மாறுபாடாவர் இவர் என்பது அறியாது அவ்வரைத் தம் வயத்தராக எண்ணி இறுமாந்திருப்பது இவர் அறிவின்மை யல்லவோ என்று பழித்து நகையாடியதாம். காட்டுப் பசு நக்கும் போது உணர்வுகெடும். பரத்தையரும் தம் உபாயத்தினுல் உணர்வு கெடச் செய்து பொருள் கொண்டெனவே, சொக்குப் பொடி போட்டுப் பொருள் கொள்வாரைப் போலக் கொண்டதாம்.

---

[2]சிள்வண்டு; இதன் குணமாவது தேனுள்ள பூக்களைத் தேடிச்சென்று தேனை உண்டு நீங்குதலாம்; இவ்வாறே வேசையரும் செல்வமுள்ள மக்களைத் தேடிச்சென்று செல்வத்தைப் பறித்து நீங்குவர்; "நயனில் கானல—வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்" என்ற மணிமேகலையும் காண்க.

பதுமனார்:—என்றது. ஆமாபோல் அன்புற நுகர்ந்து அவர் கைப்பொருளை அறக்கொண்டு சேவாகிய மாப்போற் குதித்தோடும் சீரியரல்லாத கணிகையர் நண்பினை, ஏமமாகக் காதலிப்போம் என்று இருந்தார் பெறுவர் தாம் பலரால் நகைக்கும் நகையை என்றவாறு.

நக்கி—அவர் இன்புற நுகர்ந்து; குப்புறும்—குதித்தோடும்; சில்லையர்—சீர்மையில்லாதவர்; ஏமார்வலம்—ஏமமாகக் காதலிப் போம்.

விளக்க உரை:—என்பது. ஆமாபோல் நக்கி அவர் கைப்பொருள் கொண்டு—ஆமாவைப்போல் நக்கி அவர் கைப் பொருளை வாங்கிக் கொண்டு; சேமா போல் குப்புறும்—சேமா போலக் குதித்துப்போம்; [1]சில்லைக்கண் அன்பினை—சிச்சிலி போலும் அன்பினையுடையார் மகிழ்ச்சியினை; ஏமாந்து எமது என்று இருப்பார்—மெய்யென்று இறுமாந்து தஞ்சமென்று இருப்பார்; பெறுபவே தாமாம் பலரால் நகை—பின் தாம் பலரும் சிரிக்கும் சிரிப்பினைப் பெறுவர் என்றவாறு.

ஆமா போல் நக்குதல்—அன்பொத்த காலத்தில் நாவினால் நுகரும் வசிகரணம். ஆமா என்பது நக்கி உயிரினை வாங்குமது போலக் கைப்பொருள் உள்ளது வாங்கி அவனைக்கெடுத்துவிடுவர் என்பதாம்.

கருத்து:—வேசையர் உறவு முதலில் மகிழ்ச்சியூட்டினும், பின்பு இகழ்ச்சிக் கிடமான பல தீமைகளையும் உண்டாக்கும்.

ஒப்புமைப் பகுதி:—

"தீதிலார் திளைப்பினுமான் செல்வமே பெரிது மொத்தார்"-

—சீவக. 1:189-4.

---

[1] சில்லை—தீயொழுக்கம் உடையாள் என்றுரைப்பினுமாம்.

"நாவின் புறநக்கிக் கொல்லுங் கவயமாபோல்"

—நீதிநெறி. 75.

(எ).

378. ஏமாந்த போழ்தின் இனியார் போன்று இன்னாராய்த்
தாமாழ்ந்த போதே தகர்க்கோடாம்—மானோக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்தும்என் பார்.

தருமர்:—என்பது. [1]செம்நெறி சேர்தும் என்பார்—மேற்செல்வத்துக்கு உறுதியாய நல்ல நெறிகளைச் சேரவேண்டும் (என்று கருதுபவர்,) ஏமாந்த போழ்தின் செல்வமுண்டாகிய போழ்தின்; இனியார் போன்று—அவர் மேல் இனிமையுடையார் போன்று; இன்னாராய்-(மனத்திற்) பொல்லாங்குடையராய்; தாம் ஆழ்ந்த போதே—அவர் தாழ்ந்த காலத்திலே; தகர் கோடு ஆம்—கிடாய்க் கொம்பு போலத் திருகிநிற்கும்; மான் நோக்கின்—மான் போன்ற நோக்கத்தையுடைய; தம் நெறி பெண்டிர்—தமது (களவு) நெறியில் திரியாத பொது மகளிரது; [2]தடமுலை சேரார்—தடமுலையிற் சேரார் என்றவாறு.

தந்நெறிப் பெண்டிராவது தாம் பொருள் கொள்வதற்கு ஏற்புடைத்தாய் ஒழுகும் நெறியே அன்றித் தரும நெறியை உணராதவர் என்பதாம்.

பதுமனார்:—[என்றது. காமுகராற் பொருள் பெற்று மகிழ்ச்சி எய்தினபோது இனியார் போன்று அவர் பொருளை அறக்கொண்டு தாம் நிறைந்த பொழுது இன்னாராய்த் தகர்க் கோடுபோல் அம் மான் நோக்கின் தம் களவு நெறியின்கண்

---

[1]செந்நெறி—செவ்விய வீட்டு நெறி.

[2]தடமுலை—பெரிய முலை.

கின்றொழுகும் பெண்டிர் தடமுலையைச் சேரார் நல்ல நெறியைச் சேர்தும் என்று கருதுவார் என்றவாறு.

ஏமாந்த போழ்தின்—காமுகரால் பொருள் பெற்று மகிழ்ச்சி எய்தினபொழுது; இன்னாராய்த் தாம் ஆர்ந்தபோதே —பொருளை அறக்கொண்டு தாம் நிறைந்தபொழுதே; இன்னாராய், தம் நெறி—பொதுமகளிர் தாம் செய்யும் களவு நெறி. செந்நெறி —செவ்விய நன்னெறி.]

விளக்க உரை :—என்பது. ஏமாந்த போழ்தின் இனியார் போன்று—காமுகரால் பொருள் பெற்று மகிழ்ந்த பொழுது அவர்க்கு இனிமையுடையராய்; இன்னாராய்த் தாமார்ந்த பொழுதே—அவரது பொருளை அறக்கொண்டு தாம் நிறைந்த பொழுது; இன்னாராய்—அவர்க்கு இன்னாதவராய்; தகர்க்கோடு ஆம்—கிடாயின் கொம்புபோலத் திருகலையுடையராம்; மான் நோக்கின்—மான்போலும் பார்வையுடையராய; தம் நெறிப் பெண்டிர்—தமது களவு வழியைத் தப்பாமல் நிற்கும் பொதுமகளிருடைய; தடமுலை சேராரே செந்நெறிச் சேர்தும் என்பார்—முலையைச் சேரார் நல்ல நெறியைச் சேர்தும் என்று கருதுவார் என்றவாறு.

கருத்து :—அருள் ஒழுக்கமுடையார் பொருட் பெண்டிரை விரும்பிக் கூடமாட்டார்.

ஒப்புமைப் பகுதி :—

"பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்".

—குறள். 914.

"பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்".

—குறள். 915.

"அம்மி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம்—இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

—நல்வழி. 20.

(அ).

379. ஊறுசெய் நெஞ்சந்தம் உள்ளடக்கி ஒண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி
எமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னார்.

தருமர் :—என்பது. ஒள் [1] நுதலார்—ஒள்ளிய நுதலினை யுடையார்; ஊறு செய் நெஞ்சம்—(தம்மை விரும்பினவர்க்குத் தாம் பின்பு) வருத்தஞ் செய்யும் மனத்தினை; தம் உள் அடக்கி—புலப்படாமல் தம்முள்ளே அடக்கிக்கொண்டு; தேற மொழிந்த மொழிகேட்டு—தெளியச் சொல்லிய வார்த்தையைக் கேட்டு; தேறி—அதனை நம்பி; எமர் என்று கொள்வாரும் கொள்பவே—எமக்கு இவர் தஞ்சம் என்று உட்கொண்டு திரிபவர் கோட்பாடும் ஒரு கோட்பாடோ; தம் உடம்பினர்—தம்முடம்பைத் தமக்கே உரித்ததாகவுடைய விலைமாதர்; யார்க்கும் தமர் அல்லர் யாவர்க்கும் உறவல்லர். என்றவாறு.

தமரல்லர் என்பது குடி குலத்தாலும் அழகினாலும் பொருளினாலுந் தம் முபாயத்தினாலும் வசிப்பிக்க வல்லவர்க்கும் பொருள் கொள்ளும் அளவும் உறவாய் இருப்பதன்றி உள் உரிமையால் உறவாகார் என்பதாம். வயமாக்குவார்க்கு வயமாகாது தம் மனங்கொண்டவாறே தம்முடம்பைத் தமக்கே உரிமையாக ஒழுகலால் அவரைத் தம்முடம்பினர் என்றார். இத் தன்மையாரை விரும்பி அவர் வயமாவது அறிவின்மையல்லவோ என்று உயர்ந்தோர் இரக்கமுற்று உரைத்ததாம்.

---

[1] நுதலார்—நெற்றியையுடைய வேசையர்.

பதுமனார்:—என்றது. குற்றஞ் செய்யும் நெஞ்சினைத் தம்முள்ளே கரந்தொடுக்கி ஒள்ளிய நுதலையுடையார் தமக்கு அன்புடைமையைத் தேற மொழிந்த மொழியைக் கேட்டு அதனை மெய் என்று துணிந்து மற்றவரை எமர் என்று கொள்வாருங் கொள்வர் யாவர்க்குந் தமரல்லர் [1]தமக்குரிய உடம்பினை யுடையார் என்றவாறு.

ஊறு—பொருளற்றார் செய்யுங் குற்றம். தேற—அன்புடையர் என்று தேறும்படி; தம் உடம்பு—தமக்கே உரிய வுடம்பு.

விளக்க உரை:—என்பது. ஒண்ணுதலார்—ஒள்ளிய நுதலினையுடையார்; ஊறுசெய் நெஞ்சந் தம்முள்ளடக்கி—தாம் பின்பு அவர்க்கு வருத்தஞ் செய்யும் நெஞ்சினைப் புலப்படாமல் உள்ளே அடக்கிக் கொண்டு; தேற மொழிந்த மொழி கேட்டுத் தேறி—தேறச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நம்பி; எமரென்று கொள்வாரும் கொள்பவே—எமக்கிவர் தஞ்சம் என்று மனங்கொண்டு திரிபவரது கோட்பாடு ஒரு கோட்பாடோ? யார்க்கும் தமரல்லர் தம்முடம்பினர்—யாவர்க்கும் தமரல்லாத தம்முடம்பைத் தமக்குரித்தாக வுடையவர். என்றவாறு.

யார்க்குந் தமரல்லர் என்பது குலத்தாலும் பொருளாலும் வடிவழகாலும் சம்போக கரண விதிகளாலும் வசிப்பிக்க வல்லவர்க்கும் தமரல்லர் என்பதாம்.

கருத்து:—வேசையர் தமது உடம்பைப் பிறர்க்கு உரிமை யாக்காது தமக்கே உரித்தாக வுடையவராவர்.

(கூ).

---

[1] அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பவாகலின் அன்பில்லாதவரான இவ்வேசையர் தமக்கே உரித்தான உடம்பையுடையவர் என்பது கொண்டு 'தம்முடம்பினர்' என்றார்.

380. உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாம்—தெள்ளி
அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்
செறிந்த வுடம்பி னவர்.

தருமர்:—என்பது. உள்ளம் ஒருவன் உழையது ஆ—தமது உள்ளம் ஒருவனிடத்திலே தங்கியிருக்க; ஒண்ணுதலார்—ஒள்ளிய நுதலினையுடையார்; கள்ளத்தால் செய்யும் கருத்து எல்லாம்—களவான அன்பினைச் செய்யும் நினைவுகளெல்லாம்; தெள்ளி அறிந்த இடத்தும்—கொழித்தறிந்தவிடத்தும்; பாவம் செறிந்த உடம்பினவர்—தீ வினை கள் நிரம்பிய உடம்பினையுடையவர்; அறியார்—அறியாதவராவர். என்றவாறு. [ஆம்—அசை.]

கள்ளத்தாற் செய்யுங் கருத்தாவது பொருள் கொடுப்பவர் மனங்கொள்ளும்படி கரண உத்திகளாலே சம்போகத்தை முடிய நடத்தி ஒக்க முடித்தலாம். அதனைத் தெள்ளி அறிதலாவது சம்போகத்தில் அமுதகலை, விஷகலையாகிய, குறிப்புக்களால் தோஷம் இது குணம் இது என்று நியமித்தறிதலாம். கொழித்தல்—ஆராய்தல்.

பதுமனார்:—என்றது. உள்ளம் வேறொருவன் மாட்டதாக ஒள்ளிய நுதலையுடையார் களவினாலே அன்புடையார் போலச் செய்யுங் கருத்தெல்லாம் கொழித்தறிந்தவிடத்தும் அறியாராவர் தீவினை செறிந்த வுடம்பினையுடையார் என்றவாறு.

இதற்கு, தம்முடைய உள்ளம் ஒருவன்மாட்டுத் தங்குமதாகப் பாவித்து விளங்கின நுதலையுடையார் களவினாலே அன்புடையார் செய்கைகளைக் கற்று வைத்துச் செய்யுங் கருத்தையெல்லாம் வேறுபட அறிந்தவிடத்தும் இவள் மற்றைக் கணிகையரைப்போல விரகுடையாளல்லள் எனக்கு அன்புடையள் என்று தன் அன்பினாலே மயங்குபவள் கருத்தறியாராம் பாவத்தினாலே செறிந்து இன்பமல்லாததனை இன்பமென்று மேல் விழும்

உடம்பை யுடையார் [என்றுரைப்பாரும் உளர்.]

அன்புடையார் செய்கை—நினைவை அறிந்து அதற்கு ஈடாகத் தாழவொழுகுதல். கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாம் தெள்ளி அறிந்தவிடத்தும்—காமத்திறத்தாற் சொல்லப்பட்டன வெல்லாம் தனித்தனியே வேறுபடுத்து அறிந்தவிடத்தும்.

விளக்க உரை :—என்பது. ஒண்ணுதலார்—ஒள்ளிய நுதலையுடையார்; உள்ளம் ஒருவன் உழையதா—தமதுள்ளம் ஒருவனிடத்திலே யிருப்ப; கள்ளத்தாற் செய்யும் கருத்தெல்லாம்—கள்ளமான அன்பினைச் செய்யும் நினைவுகள் எல்லாம்; தெள்ளி அறிந்தவிடத்தும்—கொழித்தறிந்தவிடத்தும்; அறியாராம் பாவஞ் செறிந்த உடம்பினவர்—அறியாதாராவர் தீவினை செறிந்த வுடம்பினர் என்றவாறு.

கள்ளத்தாற் செய்யுங் கருத்தாவது அவர் மனங்கொள்ளும் படி கரணவித்திகளாலே சம்போகத்தை முடிய நடத்தி ஒக்க முடித்தல். அதனைத் தெள்ளி அறிகையாவது அந்தச் சம்போக காலத்தில் [1] அமிர்தகலை, விஷகலையாகிய குறிப்புகளையறிந்து இது தோஷம் இது குணம் என்று நியமித்தறிதலாம்.

கருத்து :—வேசையரது கள்ளத்தை அறிந்தாலும் பாவிகள் மனம் அவர் மீதேயே செல்லும்.

ஒப்புமைப் பகுதி :—

"நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்".

—குறள். 917.

(ய).

---

[1] அமிர்தகலை—சந்திரகலை. "அமிர்தகலையினீரை மாந்தி"
—(சிலப். 5, 208. உரை.)

2. *இன்ப வியல்.

39. †கற்புடை மகளிர்.

தருமர் :— அஃதாவது. கற்பியல் மகளிர்; அக் குல மகளிர்க்கு இயல்பாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கினும் உள்ள நிறைவுடைமையும், கடைப் பிடியும் கன்னிகையான காலமே தொடங்கித் தமக்கு இயற்கை யான அறிவுடைமையுமாம்.

பதுமனார் :— அஃதாவது. குல மகளிராய்த் தமக்கு இயல்பாகவுடனே வளரும் நாணம், மடம், அச்சங்களினும் விழுமிதாகக் காக்கப்பட்ட கற்பினைச் சிறிதும் வழுவாமல் உடைய மகளிரது தன்மை கன்னிகையான காலத்துளதாகிய சுதந்திரத் திலும் தேவதன்மங்களினும் கருத்துப் பிறவாமலும் பர்த்தாவே சகல தெய்வங்களும், சகல தன்மங்களும், அவனுக்கான தொழில் செய்வதே சகல விரதங்களுமாகப் புத்தி பண்ணுதலும், தன்னலந் தீங்குகளினும் அவன் [1] சந்நிதியில்லாதவிடத்தும் அவனையே புத்தி பண்ணியிருத்தலும் தந்தை, தாய், சுற்றத்தவர்கள் முறைப் பெயரானவையே அறிந்தாற்போல உலகத்து வேறுள்ளபேரையும் மனிதர் என்னும் மாத்திரமே அறிந்து தன் புருடனைப்போல இவர்களும் புருடர் என்று அவர்கள்மேற் புருட பக்தி பிறவா மலும், அவன் கரணுதிகள், அவன் கருத்துவழி நிகழ்ந்தாற்போலத் தான் அநுகூலமாய் ஒழுகுதலுமாகிப் பதிவிரதா பாவ மதனை வழுவாமல் உடைய மகளிரது தன்மை கூறுகின்றது.

குறிப்பு :—

'வாழ்க்கைத் துணைநலம்' :—

பரிமே :—அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய

---

*இன்பத்தைப்பற்றிக் கூறும் பிரிவு.

†கணவன் கற்பித்த நெறியில் நிற்கும் குலமகளிரது தன்மை.

[1] சந்நிதி—முன்பு.

இல்லாளது நன்மை. அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

மணக் :—வாழ்க்கைத் துணைநலமாவது வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல்.

பரிதி ;—வாழ்க்கைத் துணைநலமாவது இல்லறம் நடத்தும் போது பதிவிரதை வேணுமென்னும் முறையாலே உணர்த்துதல்.
—குறள். அதி. 6.

381. அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பார் இன்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை.

தருமர் :—என்பது. அரும் பெறல் கற்பின்—பெறுதற் கரிய கற்பினையுடைய; அயிராணி அன்ன—இந்திராணிபோலும்; பெரும் பெயர்ப் பெண்டிர் எனினும்—(செல்வச் செருக்காற்) பெரிய பெயரினையுடைய பெண்டிராயினும்; விரும்பிப் பெறு நசையால்—தம்மை ஒருவர் விரும்பிப் [நுகரும் வேட்கையால்] பின் நிற்பார் இன்மையே—இரந்து குறையுறுவார் இல்லாமையை; பேணும்—பாதுகாக்கும்; நறு நுதலாள்—நறுவிய நுதலினை உடையாளே; நன்மை துணை—காதலன் நன்மைக்குத் துணை யாவள் என்றவாறு.

இரந்து குறையுறுவார் இல்லாமல் பாதுகாப்பது தன்னை அழகு செய்து பலரறியப் போதாமல் அழுக்கடைந் தடங்கி யிருத்தலாம்.

பதுமனார் :—என்றது. பெறுதற்கரிய கற்பினையுடைய அயிராணியே போன்ற பெரும் பெயரையுடைய பெண்டிரே எனினும் விரும்பித் தம்மை நுகரும் [1]நசையால் தம்மைப்

[1] நசை—விருப்பம்.

பின்னிரந்து குறையுறுவாரில்லாமை தமக்குண்டாக வேணும் என்று அதற்குத் தக்க ஒழுக்கத்தைப் பேணும் நறுநுதலாள் காதலர் பெறும் நன்மைக்குத் துணையாவள் என்றவாறு.

பொருள் நசையாற் பிறர் இரந்து பின் நிற்பார் இன்மையைப் பாதுகாக்கும் நறுநுதலார் என்றுமாம். அயிராணி —இந்திராணி.

விளக்க உரை :—என்பது. அரும் பெறற் கற்பின் அயிராணி அன்ன—பெறுதற்கரிய கற்பினையுடைய இந்திரன் தேவிபோலும்; பெரும் பெயர்ப் பெண்டிர் எனினும்—செல்வச் செருக்கையுடைய பெரிய பெயரினையுடைய பெண்டிராயினும்; விரும்பிப் பெறுநசையால் பின் நிற்பார் இன்மையே பேணும்—மதைவிரும்பி யிரந்தும் குறையுறுவார் இல்லாமையைப் பாது காக்கும்; நறுநுதலாள் நன்மைதுணை—நறுவிய நுதலினை யுடையாள் அக்காதலர் நன்மைக்குத் துணையாவாள் என்றவாறு.

இரந்து குறையுறுவார் இல்லாதபடி பரிகரித்தலாவது தன்னை அழகு செய்யாமல் அழுக்கடைந்திருத்தல் என்பதாம்.

கருத்து :—தன்னை விரும்புவார்க்கு இடங்கொடாத கற்புடை மகளே நாயகனுக்கு உற்ற துணையாவாள்.

மேற்கோள் பகுதி :—

நச் :—"காமஞ்சான்ற கடைக்கோட் காலை...... இறந்ததன் பயனே" என்ற சூத்திரம் காஞ்சியாகாது என்பார், அதற்கு இச்செய்யுளை உதாரணம் காட்டி, "இதனுள் அருந்ததியைப் போலுந் தமக்குப் பெரும் பொருள்களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையே விரும்பிப் பாதுகாத்து, அவர்க்கு வேண்டுவன கொடுக்கும் மகளிர், நாஞ்செல்கின்ற வானப்பிரத்தம் காருகத் திற்குத், துணையாவரெனத் தலைவன் கூறவே தலைவியும் பொருள் களிற் பற்றற்றாளாய் யாமுந் துறவறத்தின்மேற் செல்வாமெனக் கூறியவாறு காண்க" என்று உரைகூறிப் போவர்.

—தொல். பொருள். சூ. 192.

குறிப்பு :—

கற்பாவது—தன் கணவன் கற்பித்த அறநெறியில் வழுவாது அவன்மாட்டு அன்புடையளாய் ஒழுகுதல்.

நகுஷன் இந்திரபதவி பெற்றுத் தன்பால் ஆசைமிக்கு வந்த போதும் தன் கணவனாகிய முன்னைய இந்திரன்மாட்டே அன்பு கொண்டு கற்புநெறி வழுவாது நின்றமையால் இந்திராணியை உவமையாக்கினர்.

பின்னிற்பார் இன்மையே பேணும் என்பதற்குத் தன் மனைக்கு வந்த விருந்தினர் குறிப்புணர்ந்து அவரை இரவலராகச் செய்யாமல் ஏற்று உபசரித்து ஒழுகுதலை மேற்கொள்ளும் என்று பொருள் கொள்வாரும் உளர்.

(க).

382. குடநீரட்டு உண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

தருமர் :—என்பது. குடம் நீர் அட்டு உண்ணும்—ஒரு குட நீராலே ஆக்கி உண்ணுகிற; இடுக்கண் பொழுதும்—மிடி வந்துற்ற காலத்தும்; கடல் நீர் அற உண்ணும் கேளிர்வரினும் —கடலினது நீரை அறவுண்பர் என்னும்படி மிகுதியாக உறவின் முறையார்வரினும்; கடல் நீர்மை—அந்தக் கடலினது நீர்மையை; கை ஆறு ஆ கொள்ளும்—ஒழுக்கமாகக் கொள்ளும்; மடமொழி மாதர்—மெத்தென்ற மொழியினையுடைய மகளிர்; மனைமாட்சி யாள்—மனைவாழ்க்கைக்கு மாட்சிமையுடையளாம். என்றவாறு.

கடல் நீர்மை கையாறுக் கொள்ளுதலாவது: விருந்தினர் மிகவும் வந்தார் என்று அதற்கு வருந்தாமல் என்றும் ஒரு நெறியாய்க் கடலினது தன்மை போலப் பெருமையுடைத்தாய் அடங்கியிருத்தலாம்.

பதுமனார் :—என்றது. ஒரு குடத்து நீராலே அட்டுண்டு வாழும் வறுமை வந்தவிடத்தும் கடலின் நீர் அறவிட்டு ஊட்டல் வேண்டும் கேளிர் பலர்வரினும் கடப்பாட்டினையே ஒழுக்க நெறியாகக் கொள்ளும் மடமொழி மாதராள் மனைவாழ்க்கை மாட்சிமையுடையாள் என்றவாறு.

விளக்க உரை :—என்பது. குடநீர் அட்டுண்ணும் இடுக்கட்பொழுதும்—ஒரு குட நீராலே ஆக்கியுண்ணும் மிடி வந்த காலத்தும்; [1]கடல் நீர் அறவுண்ணும் கேளிர்வரினும்—கடல் நீரை அறவுண்ணத்தக்க உறவின் முறையார் மிகவும் வரினும்; கடல் நீர்மை கையாருக் கொள்ளும்—அந்தக் கடலின் நீர்மையை ஒழுக்க நெறியாகக்கொள்ளும்; மடமொழி மாதர் மனை மாட்சியாள்—மெத்தென்ற மொழியினையுடைய மகளிர் மனைக்கு மாட்சிமையுடையாளாம் என்றவாறு.

ஒழுக்க நெறியாகக் கொள்ளுகையாவது விருந்தினர் மிகவும் வந்தார்கள் என்பதற்கு வருந்தாமல் அதற்கு முன்னாள் நடந்த தன்மை போல. இன்றும் அந்த இயல்பால் அல்லோ வந்தது என்று ஒருதன்மையாய் இருத்தல்.

கருத்து :—வறுமைக் காலத்தும் தளராது தன் கடமைகளை நிறைவேற்றுபவளே மனைமாட்சியுடையவளாவாள்.

மேற்கோள் பகுதி :—

நச் :—"நன்னெறிப் படரும் தொல்நலப் பொருளினும்—இல்லறத்திற்கு ஓதிய நெறியின்கண் தலைவி கல்லாமற் பாகம்பட ஒழுகுந் தொன்னலஞ் சான்ற பொருளின்கண்ணும்; பொருள் வருவாய் இல்லாத காலமும் இல்லற நிகழ்த்துதல் இயல்பாக விருத்தற்குத் தொன்னலமென்றார்.

உ-ம் :—"குட நீரட் டுண்ணும்........மனைமாட்சி யாள்"

---

[1] கடல்நீர் அறவுண்ணும் என்றது உறவினரின்மிகுதியை உணர்த்தியது.

இஃது ஒருகுடம் நீரால் சோறமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் மனைக்கு மாட்சிமையுடையாள் கடல் நீரை வற்ற உண்ணுங் கேளிர்வரினும் இல்லற நிகழ்த்துதலைக் கைக்கு நெறியாகக் கொள்ளுமெனத் தலைவன் வியந்து கூறினன்" என்பர்.

—தொல். பொருள். சூ. 146.

ஒப்புமைப் பகுதி :—

"இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவச்சிறி தாயினும் மிகப்பல ரென்னாள்
நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும்
இற்பொலி மகடூஉப் போல".

—புறம். 331. 6-9.

குறிப்பு :—

வாழ்க்கைத் துணைவியின் கடமைகளாவன :— துறவோர்ப் பேணல், விருந்தெதிர் கோடல், சுற்றந் தழுவல், வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தல் முதலியன.

(உ).

383. நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்
இல்லாள் அமைந்ததே யில்.

தருமர் :—என்பது. நால் ஆறும் ஆறு ஆய்—தானிருக்கும் இல்லானது நாலு திக்கும் வழியாய்; நனி சிறிதாய்—மிகவுஞ் சிறியதாய்; எப்புறனும்—எல்லாப் புறமும்; மேல் ஆறு—மேலே நின்று; மேல் உறை சோரினும்—மழை பெய்கிற நீர் மேலே தங்காமல் ஒழுக இப்படி வருத்தமுற்றிருப்பினும்; மேல் ஆய வள்ளாள் ஆய்—மேலான குணத்தைத் [1]தகையவிடாது ஒழுக

---

[1] தகையவிடாது—தளரவிடாமல்.

வல்லாளாய்; வாழும் ஊர்—தான் வாழும் ஊரார்தாமே; தன் புகழும்—தன்னைப் புகழும்படியாக; மாண் கற்பின் இல்லாள்—மிகுந்த கற்பினையுடைய மனையாள்; அமைந்ததே இல்—இருந்த இல்லே இல்லாவது என்றவாறு.

இவை கற்பு மிகுதியும் அறிவுடைமையுங் கூறியதாயிற்று.

பதுமனார் :—என்றது. நான்கு திக்கும் வழியாய் மிகவுஞ் சிறிதாய் எப்புறனும் நெறியாலே மழைநீர் தம் மேலே சொரியினும் மேலாய ஒப்புரவு செய்ய வல்லளாய்த் தான் வாழ்கின்ற ஊரினுள்ளாரால் தான் புகழப்படும் மாட்சிமைப் பட்ட கற்புடையாளாகிய மனையாளால் அமைவுடைத்தே மனையாவது என்றவாறு.

விளக்க உரை :—என்பது நாலாறும் ஆறய் நனி சிறிதாய்—நாலுதிக்கும் வழியாய் மிகவுஞ் சிறிதாய்; எப்புறனும் மேலாறு மேலுறை சோரினும்—எல்லாப் புறமும் மேலே பெய்கிற நீர் கீழே ஒழுகினும்; மேலாய வல்லாளாய்—மேலாய குணத்தை வல்லளாய்; வாழும் ஊர் தற்புகழும் மாண்கற்பின்—தாம் வாழும் ஊர்தாமே தன்னைப் புகழும் நல்ல கற்பினையுடைய; இல்லாள் அமைந்ததே இல்—மனையாள் இருந்த வீடே வீடாவது என்றவாறு.

கருத்து :—என்றும் தன் ஒழுக்கத்தில் தவறாத கற்புமிக்க மனையாளைப் பெற்ற வீடே வீடாவதாம்.

மேற்கோள் பகுதி :—

நச் :—“பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலையிக் குற்றஞ் சான்ற பொருள் எடுத்து உரைப்பினும்—தலைவி அங்ஙனம் உரிமைசான்ற இடத்து அவனைப் பெருமையின் கண்ணே நிறுத்திக் குற்றமமைந்த களவொழுக்கத்தை வழுவியமைந்த பொருளாகக் கேளிர்க்காயினும் பிறர்க்காயினும் உரைப்பினும்;

அது களவொழுக்கத்தையுந் தீய ஒரையுள்ளுந் துறவாது ஒழுகிய குற்றத்தையும் உட்கொண்டும் அதனைத் தீதென்னுமற் கூறுதலாம்.

உ-ம் :—"நாலாறு மாறாய்........அமைந்ததே யில்" இதனுள் மனைவி அமைந்துநின்ற இல்லிலேயே இல்லறமாவதெனவே யாம் முன்னரொழுகிய ஒழுக்கமும் இத்துணை நன்மையாயிற்று என்றா ராயிற்று. இது குறிப்பெச்சம்" என்பர்.

—தொல். பொருள். சூ. 146.

நச் :—"நாலாறு மாறாய்........அமைந்ததே யில்" என்னும் வெண்பா விருந்து புறந்தருதல் கூறியதுமாம்'' என்பர்.

—தொல். பொருள். சூ. 153.

ஒப்புமைப் பகுதி :—

"உள்ளது
தவச்சிறி தாயினும் மிகப்பலர் என்னாள்
நீள்நெடும் பந்தர் ஊண்முறை யூட்டும்
இற்பொலி மகடூஉ"

—புறநானூறு. 331.

'நனிசிறிதாய்' :—

"இடம்பட வீடிடேல்"

—ஆத்திசூடி.

"சிறுகக் கட்டிப் பெருகவாழ்"

—பழமொழி.

குறிப்பு :—

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற் காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற குறளுரையில் 'தன் மாட்டுப் புகழாவது—வாழுமூர் கற்பால் தன்னைப் புகழ்வது' என்று பரிமேலழகர் குறிப்பிட்டது இங்கே நினைவுகூர்தற் குரியது.

(௩).

384. கட்கினியாள் காதலன் காதல் வகை புனைவாள்
உட்குடையாள் †ஊராண் இயல்பினாள்—உட்கி
இடனறிந் தூடி இனிதாய் உணரும்
மடமொழி மாதராள் பெண்.

தருமர்:—என்பது. கட்கு இனியாள்—தன் காதலன் கண்ணுக்கு இனியவளாய்; காதலன் காதல் வகை—அக்காதலன் காதலிக்கத் தக்க வகையாக; புனைவாள்—தன்னை அழகு செய்ய வல்லவளுமாய்; உட்கு உடையாள்–பிறர் அஞ்சத்தக்க மதிப்பை உடையவளுமாய்; ஊராண் இயல்பினாள்—ஒப்புரவுடையளுமாய்; உட்கி—காதலன்பால் அச்சமுடையளாய்; இடன் அறிந்து ஊடி—அவனது செவ்வியறிந்து ஊடி; இனிதாய் உணரும்—அந்த ஊடலை அவன் தீர்க்குமிடத்து நீட்டியாமல் இனிதாகக் கோப மாறவல்ல; மடமொழி மாதராள் பெண்—மெத்தென்றவார்த்தை யுடையவளே இல்வாழ்க்கைக்குப் பெண்ணாவள் என்றவாறு.

கற்புடைமகளிர் அழகுசெய்யிற் பிறர் விரும்புவர் என்று சொல்லி ஈண்டு அழகு செய்ய வல்லவள் என்பது எப்படியோ எனின், ஆண்டுக் கற்பைப் பொதுவகையாய்க் கூறி ஈண்டுக் கலவி கூறியதாகலின் பிறர் அறிய அழகு செய்யாது தன் காதலன் காதலிக்கும்படி அழகு செய்ய வல்லவள் எனக் கலவிக்கு ஏற்புடைத்தாய்ச் சிறப்பித்துக் கூறியதாம்.

பதுமனார்:—என்றது. கண்ணுக்கு இனியளாய்க் காதலன் காதலித்த வேட்கை புனைவாளாய்ப், பிறரால் கூசப்படும் இயல்பினையுடையாளாய், ஒப்புரவு செய்யும் தன்மையளாய்க், காதலனை அஞ்சி இடனறிந்து புலர்ந்து அப்புலவியை இனிதாகத்

---

†ஊர் நாண் இயல்பினாள் என்று பாடங்கொண்டு ஊரிலுள்ள மகளிர் தன்னைக் கண்டு நாணுமாறு நல்லொழுக்கமுடையாள் என்று பொருள் கூறுவாரும் உளர்.

தீரும் மடமொழியை யுடைய மாதரான், பெண்ணுவாள் என்ற வாறு.

கட்கினியாள்—ஏற்றச் சுருக்கமான சரீரமும், விபரீதமான கண், கை, கால், விரல்களும், துன்முகமுமாய் இருத்தலும், பூமி அதிர நடத்தலும், கொடிய வார்த்தை கூறலும், எப்பொழுதும் கொட்டாவி நெட்டை முறித்தல் முதலான சேட்டைகளும் உண்டாயிருத்தலும், விவாதம் பண்ணலும், [1]அங்கிய கிரகத்திலே போயிருத்தலும், [2]அத்தாவேசமும், ஆகார மிகுதியும், [3]துரா சாரமும், அழுக்கும், அசுத்தமும், என்று இத்தோஷங்களையுடைய ளாயிருத்தலும் அன்றி உத்தமமாக எண்ணப்பட்ட இலக்கணங் களை யுடையளாகிச் சுத்தையாய் சுகையாய் இருத்தலுமாம்.

காதலன் காதல் வகை புனைவாள்—நேரிதாய நீண்ட வெண் சோறு, பருப்புச் சோறு, பாற் சோறு, அப்பம், [4]அக்காரம் என்னும் ஐந்தும், கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல், [‡நாறல், காறல், என்னும் எட்டு ரசங் களும்] ஒன்றுக்கொன்று கூடும் §ரசவாயங்கள் அறிந்து கூட்டு தலுமாகி உண்பன, தின்பன, நக்குவன, சுவைப்பன, பருகுவன, ஆகிய ஐவகையுங் கூடின பஞ்ச பக்குவான்னங்களையும் ஒன்றை யொன்றுவ்வாதபடி [5]மகாரங்களாகச் சமைக்கும் அர்த்த [6]கௌசல்யமும், பர்த்தாவாலே †பிரதிபத்தி பண்ணப்பட்ட [7]யிஷஒவ பிதிர், தேவர், சுற்றத்தார், அதிதிகள், என்னும்

---

[1] அங்கிய கிரகம்—பிறர்மனை.

[2] கரம் நீட்டிச் சினமுறல்.

[3] துராசாரம்—தீயொழுக்கம்.

[4] அக்காரம்—சர்க்கரையன்னம்.

‡நாறல், காறல், இதனுள் அடங்கா.

§'ரசவாயங்கள்' என்றிருத்தல் பொருந்தும்.

[5] சிதைவு ஏற்பட்டிருத்தல் கூடும்.

[6] கௌசல்யம்—திறமை.

†பிரதிபத்தி—நம்பிக்கை; பிரீதி என்றிருத்தல்கூடும்.

[7] (சிதைந்துளது) ரிஷி என்றிருத்தல் பொருந்தும்.

இவர்களையும் அவன் தன்னையும், புசிக்குமிடத்து அனுகூலையாகியும் சிரத்தையாகியும் அவனடியைப் பிடித்துப் பின்னே துஞ்சலும் முன்னே [1]உணர்தலும் உடையளாயிருத்தலுமாம்.

உட்குடையாள்—[2]ஸ்ரீ புமான்கள் எல்லாரும் தன்னைக் கண்டு கூசும்படி பதிவிரதா பாவம் உடையவளாய் இருத்தலாம். ஊராண் இயல்பினள்—தனக்கிடமதாகிய கருமமாயிருப்பினும் அயலார்க்கு ஒத்த ஒப்புரவுகளிற் குறையாத இயல்பினையுடையளா யிருத்தலாம்; உட்கி—பர்த்தாவுக்கு எப்போதும் அஞ்சுதலை யுடையளாயிருத்தலாம். இடன் அறிந்து ஊடி—பர்த்தாவுக்குப் பலராக ஸ்திரிகள் உண்டானாலும், பரத்தையர்களிடத்து ஒழுக்கம் உண்டானாலும், தான் அதற்கு இடனறிந்து [3]கலாவித்தலாம். இனிதின் உணரும் மடமொழி மாதராள் பெண்—அக் கலாவத்தை அவன் தீர்க்க அன்னியனும்படி உணர்தலும் உடைய மடமொழி மாதராள் பெண்மையுடையாள் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. கட்கினியாள் காதலன் காதல் வகை புனைவாள்—கண்ணுக்கு இனியாளுமாய்க் காதலன் காதலிக்கத்தக்க வகை தன்னை அழகு செய்ய வல்லளுமாய்; உட்குடையாள் ஊராண் இயல்பினள்—பிறர் அஞ்சத்தக்க மதிப்புடையளுமாய், ஒப்புரவுடையளுமாய்ப், பண்புடையளு மாய்; உட்கி இடனறிந்து ஊடி—அச்சமுடைமையாற் காதலன் செவ்வியறிந்து காதலித்து; இனிதின் உணரும்—அந்த வூடலை அவன் தீர்க்க நீட்டியாமல் இனிதாகக் கோபமாறவல்ல; மட மொழி மாதராள் பெண்—மெத்தென்ற மொழியினையுடைய மாதராள் இல்வாழ்க்கைப் பெண்ணாவாள் என்றவாறு.

கருத்து:—இனிய காட்சியும், நல்லொழுக்கமும், அன்பும் உடைய பெண்ணே வாழ்க்கைத் துணையாதற் குரியாள்.

---

[1] உணர்தல்—துயிலெழுதல்.

[2] ஸ்ரீ புமான்—மகளிர் ஆடவர்.

[3] கலாவித்தல்—சிறுகோபங் கொள்ளல்.

ஒப்புமைப் பகுதி :—

"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்".

—குறள்.

"ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு".

—குறள்.

மேற்கோள் பகுதி :—

நச் :—"கழிவினும் வரவினும் நிகழ்வினும் தத்தங்குலத்திற்கு ஏற்கும்படியாக முற்கூறிய கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும், காம நுகர்ந்த இன்பமாகிய கற்பிற்குத் தீயவற்றைக் கடிதலும் செவிலித்தாய்க்கு உரியவாகுமென்று கூறுவர் புலவர்" என்று உரைகூறி அதற்கு உதாரணமாக இச்செய்யுளை எடுத்துக் காட்டுவர். "கட்கினியாள், இதுகாமம்; வகைபுனைவாள், இது கற்பு; உட்குடையாள், இஃது ஒழுக்கம்; ஊராண்மை, இது சுற்றமோம்பல்; ஊடியுணர்தல், அல்லவைகடிதல்" என்பர்.

—தொல். பொருள். சூ. 153.

நச் :—ஆண்மையாவது ஆளுந்தன்மை. அஃது "ஆயிடையிரு பெயராண்மை செய்த பூசல்" என இருபாலையும் உணர்த்திற்று..........."உட்குடையாள் ஊராண் இயல்பினள்" எனவும் விகாரமாயும் நிற்கும்" என்பர்.

—தொல். சொல். சூ. 57.

மயிலை :—ஒருருபு அடுக்கித் தமக்கேற்ற ஒரு பெயரும் ஒரு வினையும் இறுதிவர முடிந்ததற்கு இச்செய்யுளை எடுத்துக் காட்டுவர்.

—நன். பொது. சூ. 4.

பரிமே :—"நின் உண்கண் சிவப்பிற்கு அஞ்சுவான் அவனுக்குத் துனிநீங்கி அவனொடு விளையாடலைத் தொடங்கு; இவ்வாறு துனியின்கண் மிகுவையாயின் அவன் காமவின்பங் கெடும்; அதற்குக் காரணமாகிய மகள் இவன் சொல்லிய பேதைப் பருவத்தாள்; இவனைக் காய்ந்து இவன் நெஞ்சின்கண்

அல்லாப்பை இறுகப் பூட்டுதலால் நீ பெ........ண் இருட் பொழுதினில் நீங்கற்பாலை யல்லை; நீங்கன் 'இடனறிந்து ஊடி இனிதின் உணரும்' ஒழுக்கத்திற்குப் பிழையாமென்று அவளை அக்குடியின் முதிர்பெண்டிர் கழற" என உரை கூறிப் போவர்.

—பரிபாடல். 6. 96-100.

(ச).

385. *எஞ்ஞான்றும் எங்கணவர் எந்தோள்மேற்
சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்—
எஞ்ஞான்றும்
என்னை கெழீஇனர் கொல்லோ பொருள்நசையாற்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

தருமர்:—என்பது எஞ்ஞான்றும்—எல்லாநாளும்; எம் கணவர்—எம்முடைய கணவர்; எம் தோள் மேல் சேர்ந்து எழினும்—எமது தோளினைப் பொருந்தி ஒழுகினும்; அ ஞான்று—மணஞ் செய்த அன்று; கண்டேம் போல்—கண்டாற்போல; நாணுதும்—இன்றும் யாம் நாணுதலையுடைடோம்; [இங்ஙனம் இருக்க] எ ஞான்றும்—எல்லா நாளும்; பொருள் நசையால்—பொருளின் மேல் ஆசையுற்றதனால்; பல் மார்பு சேர்ந்து ஒழுகு வார்—பலர் மார்பும் சேர்ந்தொழுகும் பொதுமகளிர்; என்னை [1]கெழீஇனர் கொல்லோ—என்ன கெழுதகைமையையுடையாரோ என்றவாறு. [ஆல்—கொல் அசைகள்].

கெழுதகைமை—பழகிய உரிமையால் எண்ணாது செய்வது. தலைவன்பாற் சேரிப் பரத்தையர் குறி கண்டு மனமழுங்கிய தலைவி கூற்றாயிற்று.

பதுமனார்:—[என்றது. நாடோறும் எம் கொழுநன்

---

* இச்செய்யுள் ஒரு குலமகள் பொதுமகளிரது நிலைகண்டு வியந்து கூறுமாறு அமைந்துள்ளது.

[1] கெழுவினர் கெழீயினர் என அளபெடுத்தது.

எம்முடைய தோள்மேற் சேர்ந்தொழுகினும்; முதல் நாள் கண்டாற்போல நாணுதும்; நாடோறும் என்ன கெழுதகைமைய ராயினர் கொல்லோ பொருள் நசையாற் பலருடைய மார்புகளைச் சேர்ந்து ஒழுகுமவர் என்றவாறு.

அஞ்ஞான்று—முதல் நாள். கெழீஇனர்—கெழுதகைமை யுடையராயினர். நசை—ஆசை.]

விளக்க உரை :—என்பது. எஞ்ஞான்றும் எங்கணவர் எந்தோள் மேல் சேர்ந்து எழினும்—எல்லா நாளும் எம்முடைய கணவர் எமது தோளைப் பொருந்தி ஒழுகினும்; அஞ்ஞான்று கண்டேம் போல் நாணுதமால்—மணஞ்செய்த அன்று கண்டாற் போல யாம் நாணுதலையுடையோம்; எஞ்ஞான்றும் என்னை கெழீயினர் கொல்லோ—எல்லா நாளும் என்னை கெழுதகைமையை உடையார் கொல்லோ; பொருள் நசையால் பன் மார்பு சேர்ந்து ஒழுகுவார்-பொருள்மேலுள்ள ஆசையால் பலருடைய மார்பைச் சேர்ந்து ஒழுகுவார் என்றவாறு.

கருத்து :—பொதுமகளிர் நாணமின்றி நடத்தல் போலக் குல மகளிர் நடவார்.

ஒப்புமைப் பகுதி :—

'எஞ்ஞான்றும்........நாணுதுமால்' :—

"நலத்தோ டளவிய நாணணிந் தோரும்"

—பரிபாடல். 'வானுரெழிலி,-39ஆம் அடி.

(ரு).

386. உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள் —தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

தருமர்:—என்பது. வள்ளன்மை பூண்டான்கண்—கொடை பூண்டவன் கையிலுள்ள; ஒள் பொருள்—ஒள்ளிய பொருளானது; உள்ளத்து உணர்வுடையான்—மனத்தினால் ஆராய்ந்தறியும் இயற்கையான அறிவுடையவன்; ஓதிய நூல் அற்று—கற்ற நூலோடு ஒக்கும்; நாண் உடையாள் பெற்ற நலம்—நாணமுடையவளுக்குண்டாகிய நட்புப் பண்பு; தெள்ளிய ஆண்மகன் கையில்—தெள்ளிதான ஆண்மைத் தன்மையைப் பூண்டவன் கையிலுள்ள; அயில்வாள் அனைத்து—கூரிய வாளோடு ஒக்கும் என்றவாறு. [ஆல் அரோ அசைகள்]

இயற்கை யறிவுடையவன் ஓதிய நூல் பிறர்க்குப் பயன் படுமாறு போலக் கொடைபூண்டான் கைப்பொருள் பிறர்க்குப் பயன்படும் என்பதாம். ஆண் மகன் கையில் வாள்போல நாணமுடையவளுக்குள்ள நலமும் யாவராலும் மதிக்கப் படுவதாம். அல்லதூஉம் உணர்வுடையான் ஓதிய நூலும் கொடையுடையான் செல்வமும் புகழை விளைக்கும் என்பதாம். ஆண்மகன் கையில் வாள் போல நாணமுடையாள் நலமும் தன்னை மதியாரைக் கெடுக்குந் தன்மையதாம். நலமானது கற்புஞ் சத்தியமுடைமையுமாம். அதனால் அதுவே மதியா தாரைக் கெடுக்கும் என்றார். வாளற்றுநூல்அற்று, என்னும் இரண்டும் **இடைநிலைத் தீபமாகப்** பொருளுரைக்க.

பதுமனார்:—என்றது. இயல்பாக மதியுடையவன் ஓதிய நூல் பிறர்க்குப் பயன்படுமாறு போற் கொடை பூண்டான் கையில் ஒண்பொருளும் பிறர்க்குப் பயன்படும்; திண்மையினை யுடைய ஆண்மகன் கையிற் கூரியவாள் போல நன்கு மதிக்கப் படும் நாணுடையாள் பெற்ற நலம் என்றவாறு.

உள்ளத்துணர்வுடையான் ஓதிய நூல்போல மிக்க விளக்கஞ் செய்தலும், வண்மை பூண்டாளிடத்துள்ள ஒண் பொருள் போலப் புகழ் விளைத்தலும், தெள்ளிய ஆண் மகன் கையிற் கூரிய வாள் போல மதியாதார்க்கு அச்சத்தைக் கொடுத்தலும்

ஆகிய நன்மைகளால் மதிக்கப்படும் நாணுடையாள் பெற்ற நட்பு நலம் என்றவாறு.

அற்று என்பதனை **மத்திம தீபமாக்கி** நூலகத்தும், பொருளகத்தும், கூட்டுக. முன்னடி யிரண்டும் ஒன்றாகப் பொருளுரைப்பது கூடாது. அற்று என்பதும் ஆல் என்பதும் இடைச்சொல். அனைத்து என்பது ஈண்டு உவமத்தின்கண் வந்தது.

விளக்க உரை :—என்பது. உள்ளத்து உணர்வுடையான் ஓதிய நூல் அற்றால்—மனத்தில் ஆராய்ந்தறியும் இயற்கையான அறிவுடையவன் கற்றநூல் போலும்; வள்ளன்மை பூண்டான் கண் ஒண்பொருள்—கொடைக்கடனைப் பூண்டவன் கையில் ஒள்ளிய பொருள்கள்; தெள்ளிய ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்து—தெளிந்த ஆண்மைத் தன்மையுடையவன் கையிற் கூரிய வாளொக்கும்; நாணுடையாள் பெற்ற நலம்—நாணமுடையவளுக்குண்டாகிய நட்புப் பண்புடைமை என்றவாறு.

இயல்பான் மதியுடையவன் ஓதிய நூலும் பிறர்க்குப் பயன்படுமாப் போலக் கொடை பூண்டான் கைபிற் பொருளும் பிறர்க்குப் பயன்படும் என்பதாம். ஆண்மையுள்ளவன் கையில் வாளும் பழுதுபடாமல் [எல்லாராலும்] மதிக்கப்படும்; அதுபோல நாணமுடையவளுக்குண்டான கற்பும் எல்லாராலும் கொண்டாடப்படும் என்பதாம். அதுவன்றியும் ஆண்மகன் கையில் வாள்போல நாணமுடையாளை மதியாதாரை அவள் கற்பென்னும் வாள் அறுக்கும் என்பதாம். [அற்று என்பதனை] நூல், வாள், இரண்டுக்கும் **இடைநிலைத் தீபமாகக்** கொண்டு பொருளுரைக்க.

கருத்து :—நாணம் முதலிய பெண்ணியல்புகளாலே பிற நலங்களும் பெருமை பெறும்.

மேற்கோள் பகுதி :—

நச் :—"அஞ்சவந்த உரிமைக் கண்ணும்-தலைவனும் பிறரும் அஞ்சும்படி தலைவிக்கட்டோன்றிய உரிமைகளிடத்தும்;

அவை இல்லறம் நிகழ்த்துமாறு தன் மனத்தாற் பல வகையாகக் காணலும், பிறர்க்குத் தான் கொடுத்தலும், கற்புச் சிறத்தலுமாம்.

உ-ம் :—"உள்ளத் துணர்வுடையான்........பெற்ற நலம்" இதனுள் நலமென்றது இம்மூன்றினையும். தலைவி இல்லறப் பகுதியை நிகழ்த்துமாறு பலவகையாகக் காணும் தன்மை உணர்வுடையோன் ஓதியநூல் விரியுமாறுபோல விரியா நிற்பதெனவும், இவள் கொடைநலம் வள்ளன்மை பூண்டான் பொருளனைத்தெனவும், இவளது கற்புச் சிறப்புப் பிறர்க்கு அச்சஞ் செய்தலின் வாளனைத்தெனவும், தலைவன் அவளுரிமைகளை வியந்து கூறியவாறு காண்க" என்பர்.

—தொல். பொருள். சூ. 146.

(சூ).

387. *கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்று
ஒருங்கொப்பக் கொண்டானும் ஊரன்—ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது
என்னையுந் தோய வரும்.

தருமர் :—என்பது. கருங்கொள்ளும்—மடித்த கொள்ளையும், செங்கொள்ளும்—நலமுடைய கொள்ளையும்; [1] தூணிப் பதக்கு என்று—தூணிப் பதக்காக; ஒருங்கு ஒப்ப கொண்டான் ஆம் ஊரன்—ஒரு விலையாகக் கொண்டவன் தன்மையை ஒக்கும் நமது தலைவர் தன்மையும்; [அஃதேன் எனில்] ஒருங்கு

---

*அகப்பொருட் களவித்துறை :—
உலாவப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது.

[1] தூணி—நான்கு மரக்கால். பதக்கு—இரண்டு மரக்கால்.

ஒவ்வா—ஒரு குணத்தாலும் நேர் ஒவ்வாத; நல் நுதலார்—நல்ல நுதலினையுடைய பொதுமகளிரை; தோய்ந்த வரை மார்பன்—பொருந்திய [மலைபோலும்] மார்பினையுடைய தலைவர்; நீராடாது என்னையும் தோய வரும்—நீராடாதே என்னையும் பொருந்துவதாக வருவர் ஆதலால் என்றவாறு.

கருங்கொள் என்பதைக் கருவேலம் விரை என்பாரும் உளர். கருங்கொள்ளும் செங்கொள்ளும் எனவே பரத்தையர் குணத்தின் நன்மை தீமை அறியாமல் பெண் என்னும் மாத்திரமே உட்கொண்டார் என்பதாம். பரத்தையரொடு நோக்கித் தன்னைத் தோய வருந் தலைவனது தன்மை இதுவாயிருந்தது. நீராட்டல் அப்பரத்தையரைத் தோய்ந்த பாவம் [1]ம................ந்தி யாடி வருவதாம். பரத்தையரிடமிருந்து வந்த தலைவனை ஊடிப் பாங்கியொடு தலைவி கூறியதாம்.

பதுமனார்:—என்றது. கருங்கொள்ளையும் செங்கொள்ளையும் ஒன்றற்குச் சிறப்புக் கொடாதே தூணிப்பதக்காக உலக ஒக்கக் கொண்டாற்போல ஊரன் எம்மோடு ஒருங்கு ஒவ்வாத நன்னுதலாரைத் தோய்ந்த வரைமார்பன் நீராடாமலே என்னையுந் தோய வரும் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கு என்று—கருங்கொள்ளையும் செங்கொள்ளையும் தூணிப்பதக்காக; ஒருங்கு ஒப்பக் கொண்டானும் ஊரன்—ஒரு தன்மையாக விலைகொண்டான் ஊரன்; ஒருங்கு ஒவ்வா நன்னுதலார்த் தோய்ந்த வரை மார்பன்—ஒரு குணத்தினாலும் நேரொவ்வாத நல்ல நுதலினை யுடையாரைத் தோய்ந்த வரை மார்பன்; நீராடாது என்னையும் தோயவரும்—நீராடாதே என்னையும் பொருந்துதற்கு வரும் என்றவாறு.

குணத்தின் நன்மை தின்மை பாராமற் பெண் என்னும்

---

[1] எழுத்துக்கள் சிதைந்துளது.

மாத்திரமே உட்கொண்டான் என்பதாம். கருங்கொள் என்பது மடித்த கொள்ளு. செங்கொள் என்பது கொள்ளுச் சுபாவமான செவ்வியுடைமை. அல்லதூஉம் கருங்கொள் என்பது கருவேலம் விதை என்பாரும் உளர்.

கருத்து :—குலமகளிர் தூய மனப்பாங்குடையவராவர்.

குறிப்பு.—

கருங்கொள்ளையும் செங்கொள்ளையும் உவமையாக்கியது பரத்தையரது இழிவையும் குலமகளிரது உயர்வையும் புலப்படுத்தற்கு என்க. தலைவன் தன்னையும் பரத்தையையும் ஒரு நிகராகக் கருதிய பிழையையும் தலைமகள் பொறுத்து நீராடி வந்தாலாவது கூடலாம் என்று கருதினமையால் குலமகளிரது தூய மனப்பாங்கு பெறப்படும். "பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்—நண்ணேன் பரத்த நின் மார்பு". என்ற திருக்குறளை ஈண்டு நினைத்தல் தகும்.

(எ).

388. *கொடியவை கூறுதி பாண! நீ கூறின்
அடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்
வலக்கண் அனையார்க்கு உரை.

தருமர் :—என்பது. [1]பாண—பாணனே; [2]கொடியவை கூறுதி—கொடிய வார்த்தைகளைச் சொல்லாதே கொள்; நீ கூறின்

---

*அகப்பொருட் கிளவித்துறை :—

தலைவனது பிரிவுணர்த்திய பாணனை நோக்கித் தலைவி மறுத்துக் கூறியது.

[1]பாணன்—இசைப்பாட்டுப்பாடிப் பிழைக்கும் இழிகுலத்தான்; தலைவன் தலைவியர்க்குத் தூது போதல் இவன் தொழில்.

[2]கொடியவை. என்றது தலைமகன் பிரிவுபற்றிய செய்தியை; 'செல்லாமை யுண்டேல் எனக்குரை' என்பது குறிப்பு.

—நீ கூறுவையாகில்; யாம்—; ஊரற்கு—நமது தலைவற்கு; [1] துடியின் [2] இடக்கண் அனையம்—துடியினது இடக்கண்போல் பயன்படாதேம்; அதனால்—ஆதலால்; அடி பைய விட்டு ஒதுங்கிச் சென்று—அடியை மெல்ல வைத்து ஒதுங்கிச் சென்று; வலக்கண் அனையார்க்கு—துடியினது வலக்கண் போலப் பயன்படும் பரத்தையர்க்கு; உரை—இந்த வார்த்தையைச் சொல்லுவாயாக என்றவாறு.

அடி பைய விட்டொதுங்கிச் சென்று எனவே பரத்தையர் பாற் செல்லும்பொழுது அவர் மனம் பொருந்தும்படி அடியை மெள்ள வைத்துத் தாழ்ச்சியுடனே வாய்புதைத்துச் சொல்லுவாய் என ஊடல் தீர்க்கும் பாணனைத் தலைவி பழித்துரையாடியதாம்.

பதுமனார் :—என்றது. கொடிய உரைகளைக் கூறு தொழிவாயாக பாணனே! யாம் ஊரற்குத் துடியின் இடக்கண் போலப் பயன் படேம் ஆதலாற் கூறுவாயாயின் அடியை விரையாது இட்டு நடந்து சென்று துடியின் வலக்கண்போல ஊரற்குப் பயன்படும் பரத்தையர்க்குக் கூறுவாயாக என்றவாறு.

இடக்கண் போலப் பயன் படேம் யாம்; பயன்படும் வலக்கண் அனையார்க்கு உரை.

விளக்க உரை :—என்பது. கொடியவை கூறுதி பாண—கொடிய வார்த்தையினைச் சொல்லாதே கொள்ளு பாணனே; நீ கூறின்—நீ சொல்லுவையாயின்; அடி பையவிட்டு ஒதுங்கிச் சென்று—அடியை மெள்ள வைத்துத் தாழ்ச்சியுடனே ஒதுங்கச் சென்று; இடக்கண் அனையம் யாம் ஊரற்கு அதனால்—தலைவற்கு யாம் துடியின் இடக்கண் போலப் [பயன்படாதேம்] ஆதலால்,

---

[1] துடி—உடுக்கை.

[2] உடுக்கைக்குக் கண்ணாவது—அடிதாக்கப்படும் இடம்: உடுக்கை வலப்புறம் மட்டுமே அடிபட்டும்; இடப்புறம் அடிபடாதும் இருத்தலின் அதனை உவமையாக்கினர்.

வலக்கண் அனையார்க்கு உரை—வலக்கண் போலும் பரத்தை யர்க்குச் சொல்லுவாயாக என்றவாறு.

கருத்து:—குலமகளிர் தமது ஊடலால் இன்பம் மிகும்படி செய்யவல்லவர்.

ஒப்புமைப் பகுதி:—

"அரும்பவிழ் தாரினன் எம்மருளும் என்று
பெரும்பொய் யுரையாதி பாண!—கரும்பின்
கடைக்கண் அனையம்நாம் ஊரற் கதனால்
இடைக்கண் அனையார்க் குரை.

—நாலடியார். 390.

(அ).

389. *†சாய்ப்பறிப்ப நீர்திகழும் தண்வய லூரன்மேல்
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்;—தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தன்சாந் தணியகலம்
நோக்கி யிருந்தேனும் யான்.

தருமர்:—என்பது. [1]சாய் பறிப்ப—கோரையைப் பிடுங்கவே; நீர் திகழும்—வேகத்துடனே வரும் நீரால் துலங்கிய; தண் வயல் ஊரன் மேல்—குளிர்ந்த வயலையுடைய நமது தலைவர் மேலே; ஈ பறக்க நொந்தேனும் யானே- மன்[முன்பு] ஈப்பறக்கு மதோ என்று அதற்கு மனம் மிக வருந்தியவளும் யான்; தீ பறக்க தாக்கி—[இப்பொழுது] தீப்பொறி பறக்கும்படியாகத்

---

*அகப்பொருட் கிளவித்துறை:—

'பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

†சாய்ப்பறிக்க என்றும் பாடம்.

[1] சாய்—ஒருவகைக் கோரைப்புல்.

தாக்கி; முலை பொருத—[பரத்தையர் தமது] முலையால் பொருத; தண் சாந்து அணி அகலம்—குளர்ந்த சாந்தணிந்த மார்பத்தை; நோக்கி—பார்த்தும்; இருந்தேனும் யான்—வலிய நெஞ்சினை யுடையளாகப் பொறுத்திருந்தேனும் யான் என்றவாறு.

நோக்கியிருந்தேனும் யான் எனவே, தலைவர் தன்னைவிட்டுப் பிரிந்து பரத்தையர்பாற் சென்றார் என்றவுடனே உயிரைத் துறப்பதே இயல்பு. அது தவிர்ந்து அவர் கலவியிற்பட்ட குறி யோடுஞ் சென்ற தலைவர் மார்பிற் சந்தனக்குறி முதலிய அடையாளங்களைக் கண்டு பின்னும் உயிர் துறவாமல் தரித்திருந்த போதே என்னைப்போல வலிய நெஞ்சுடையார் வேறில்லை எனத் தன்னை இகழ்ந்து வெகுண்டு உரையாடியதாம். அதுவே யன்றியும் அவர் பிரிவுழி அவர் செல்லுமிடத்து அவர்க்கு ஏதேனும் துன்பங்கள் உறுவதாகுமோ என அதற்கு வருந்தி இருந்ததுமாம். இத்தன்மையாய தலைவி தலைவனைப் பரத்தையிற் பிரியக்கண்டும் அதற்குப் பொறுத்திருந்தாள் எனவே கற்புடை மகளிரது ஒழுக்கங் கூறியதாம்.

பதுமனார் :—என்றது. கோரைப்புல்லைப் பிடுங்கவே நீரெழப்பட்ட தண் வயலூரான் மீது ஈப்பறக்க நொந்தேனும் யானே; இப்பொழுது பரத்தையர் தீப்பறக்க முலையால் தாக்கிப் பொருத தண்சாந்து அணி அகலத்தைக் கண்டிருந்தேனும் யானே என்றவாறு.

சாய்ப்பறிக்க—கோரைப்புல்லைப் பறிக்க; தீ பறக்க—பொறி எழ.

விளக்க உரை :—என்பது. சாய்ப்பறிக்க நீர் திகழும் தண் வயல் ஊரன்மேல்—கோரையைப் பிடுங்க நீர் தோன்றுங்

---

[1] சாய்ப்பறிக்க நீர் திகழும் என்றது நீர்வளத்தைக் குறித்தது.

குளிர்ந்த வயலையுடைய வூரன்மேலே; ஈப்பறக்க நொந்தேனும் யானே மன்—ஈப்பறக்குமதோ என்று அதற்கு மிக வருந்தி யிருந்தேனும் யான்; தீப்பறக்கத் தாக்கி முலைபொருத தண் சாந்து அணி அகலம்—தீப்பறக்கத் தாக்கி முலையாற் பொருத குளிர்ந்த சாந்தணிந்த மார்பத்தை; நோக்கியிருந்தேனும் யான்— பார்த்துப் பொறுத்திருந்தேனும் யான் என்றவாறு.

இப்படித் தலைவன் பரத்தையர் மாட்டுப் பிரியவும் ஆற்றி யிருத்தல் கொண்டு இது கற்புடைய மகளிர் ஒழுக்கம் என்று கூறப்பட்டது.

கருத்து :—குலமகளிர் தம் கொழுநரது தகாத ஒழுக்கம் கண்ட விடத்தும் அவர் மீது அன்பு குன்றப்பெறார்.

ஒப்புமைப் பகுதி :—

"சாய்க் கொழுதிப் பாவை தந்தனைத்தற்கோ"

—கலித். 76, 7.

"இரும்பனை வெளிற்றின் புன்சாயன்ன"

—திருமுருகு. 312.

(சு).

390. *அரும்பவிழ்த் தாரினன் எம் அருளும் என்று
பெரும்பொய் †யுரையலோ பாண—கரும்பின்
கடைக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்
இடைக்கண் அனையார்க் குரை.

தருமர் :—என்பது. பாண—பாணனே! அரும்பு அவிழ் தாரினன்—மலரும் பருவத்தையுடைய அரும்பால் தொடுக்கப்

---

*அகப்பொருட் கிளவித்துறை :—
தலைவி பாணனோடு வெகுளல்.
†உரையாதி என்றும் பாடம்.

பட்ட மாலை மார்பமுடைய தலைவர்; எம் அருளும் என்று—எமக்கு அருள் செய்வர் என்று. பெரும் பொய் உரையல்—மிகவும் பொய்களைச் சொல்லாதேகொள்; [ஏன் எனில்] யாம்—நாம்; ஊரற்கு—தலைவற்கு; கரும்பின் கடைக்கண் அனையம்—கரும்பினது கொழுத்தாடைக் கணுப் போல இனிமை [யில்லாதேம்] அதனால்—ஆதலால்; இடைக்கண் அனையார்க்கு உரை—[கரும்பின் இடைக்கண் போல] இனிமையுடைய பரத்தையர்க்கு இவ்வார்த்தைகளைச் சொல்லுவாயாக என்றவாறு.

இதுவும் ஊடல் தீர்க்கும் பாணனைப் பழித்துரையாடியது.

பதுமனார் :—[என்றது. அரும்பவிழ்தாரான் எமக்கு அருளும் என்று பெரும் பொய் உரையாதொழிக பாணனே! யாம் ஊரற்குக் கரும்பின் கடைக்கண்போல இனியேமல்லேம்; அதனால் கரும்பின் இடைக்கண்போல இனியார்க்குக் கூறுவாயாக. என்றவாறு.

உரையலோ பாண—உரையாதொழிக பாணனே.

விளக்க உரை :—என்பது. அரும்பு அவிழ் தாரினன் எம் அருளும் என்று—கட்டவிழும் அரும்பினால் தொடுக்கப்பட்ட மாலையினையுடையான் எமக்கு அருள் செய்வன் என்று; பெரும் பொய்யைச் சொல்லாதே கேள் பாணனே; கரும்பின் கடைக் கண் போலும் யாம் ஊரற்கு ஆதலால், இடைக்கண் அனையார்க்கு உரை—இடைக்கண் போலப் பயன்படும் பரத்தையர்க்குச் சொல்வாயாக.

கடைக்கண்—கொழுத்தாடை.

கருத்து :—குலமகளிர் தம் கொழுநர் வரவு நோக்கி இனிமையுடையராயிருப்பர்.

(ய).

40. †காமநுதலியல்.

தருமர் :— அஃதாவது. இன்பத்தின் முறைமையைச் சொல்லியதாம். முன்பே இன்பஞ் சொல்லிப் பின்பே உலக முறைமையான பொருட்பால் சொல்லி, அதன்பின் அறப் பகுதியினைச் சொல்லி வீடுபேற்றிலே முற்றுவிக்க வேண்டாவோ என்னில் அங்ஙனமன்று. இளமைப் பருவத்திலே அறத்துக்குக் காரணமான நூலைக் கற்பித்து அதிலுள்ள முறைமையினை உணர்த்திப், பின்பு மனைவாழ்க்கையாகிய மணஞ் செய்வித்து அவ்வறநூலின் முறைமைக்குத் தக ஒழுகும்படி அறப்பகுதி முற்கூறிக் கல்வி, கேள்வி, முதலியவற்றால் [1]மனநூலின் இயல்பை வழுவாமல் நடத்துதலால் உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் இரட்சைப்படுதல் காரணமாகப் பொருட்பகுதியினைச் சொல்லிப் பின் இன்பத்தைச் சொல்லியதாம்.

பின்பு வீடுபேறு சொல்லவேண்டாவோ எனில் முன் சொன்ன முறைமையிலே வழுவாது நடந்து இன்ப துன்பந் துய்த்து அறுபது வயதிலே, முற்றுந் துறந்து பின்பு உண்மைப் பொருளை அறிந்து அவாவற்றுவிடவே வீடுபெறும் ஆதலின், அதற்கொரு பகுதி உரைக்கவேண்டாம் என்பதாம்.

பதுமனார் :— அஃதாவது. செல்வநிலையாமை முதலாகத் தீவினையச்சம் ஈறாகப் பதின்மூன்றதிகாரமும், அறப்பகுதி யாகவும், கல்வி முதலாகக் கற்புடைமகளிர் ஈறாக இருபத்தாறு அதிகாரமும், பொருட்பகுதியாகவும், காமநுதலியல் ஓரதிகாரமும், இன்பப்பகுதியாகவும், இவ்வதிகாரம் நாற்பதினுள்ளும் ஒழுக்க மல்லாதன அறிந்து அவற்றை ஒழிந்து களையும், அறங்களையும், இவ் யாக்கைநிலையின் பொல்லாங்குகளையும், அறிந்து துறத்தலும், சினமில்லாமையும், பொறையுடைமையும், பழவினை பலிக்கும்

---

†காம இன்பத்தின் தன்மைகளைக் கூறும் பிரிவு.

[1] மனுநூல். என்றிருத்தல் பொருந்தும்.

என்பதும், வினை அஞ்சுதலும் உடையராய் மேன்மையாலும் கல்வியாலும், அறிவுடைமையாலும், நன்னெறியடைதலை வீட்டின் பகுதியாகவும், கூறினவற்றுள் இது இன்பத்தின் இயல்பு கூறுகின்றது.

391. *முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கால் உப்பின்றாங் காமம்;—†வயங்கோதை
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோர் ஆறு.

தருமர்:—என்பது. வயங்கு ஓதை—விளக்கத்தினையுடைய கடலோசை; நில்லா—அடங்காமல்; திரை அலைக்கும்—திரைகளானவை; (கரையைப் பொரும்); நீள் கழி தண் சேர்ப்ப—நீண்ட கழிகளின் குளிர்ந்த சேர்ப்பையுடையவனே! முயங்காக்கால்—[1]புல்லாதபொழுது; பசலை பாயும்—மேனி பசலையாகும்; ஊடி உயங்காக்கால்—ஊடி வருந்தாதவிடத்து; காமம் உப்பு இன்றாம்—காம நுகர்ச்சி இனிமையுண்டாகாது. (ஆதலால்) புல்லா புலப்பது—முன் முயங்கிப் பின் ஊடுவது; ஓர் ஆறு—(இனிமைக்கு) நெறி என்றவாறு.

இது தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகள் புலவி நீங்கச் சொல்லியது.

பதுமனார்:—என்றது. தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகள் புலவி நீங்கச் சொல்லியது.

புல்லாத பொழுது பசலை பரக்கும்; ஊடி வருந்தாத இடத்துக் காம நுகர்ச்சி சுவையுண்டாகாது; ஆதலால் வயங்கு

---

*அகப்பொருட் கிளவித்துறை:—
தலைமகற்கு வாயில்நேர்ந்த தோழி தலைமகள் புலவி நீங்கச்சொல்லியது.
†வயங்கோதம் என்றும் பாடம்.
[1]புல்லாதபொழுது—தழுவாதபோது.

ஓதம் நில்லாத் திரை அலைக்கும் நீள்கழித் தண் சேர்ப்பனே முயங்கி ஊடுவதே நல்ல வழி என்றவாறு.

உயங்குதல்—வருந்துதல். உப்பு—இனிமை. புல்லாப் புலப்பது—முயங்கி ஊடுவது. வயங்குதல்—விளங்குதல்.

விளக்க உரை:—என்பது. முயங்காக்கால் பாயும் பசலை—புல்லாதபொழுது மேனி பசலை பரக்கும்; ஊடி உயங்காக் கால் உப்பின்றும் காமம்—ஊடி வருந்தாதவிடத்துக் காமநுகர்ச்சி இனிமையுண்டாகாது. வயங்கு ஓதை நில்லாத் திரை அலைக்கும்—விளக்கத்தினையுடைய கடலோசை அடங்காமல் திரைகளானவை கரையைப் பொருகின்ற; நீள்கழித் தண் சேர்ப்ப—நீண்ட கழிச் சேர்ப்பையுடையவனே! புல்லாப் புலப்பது ஓர் ஆறு—முயங்கி ஊடுவதே வழி, என்றவாறு.

இது தலைமகன் வாசலிலே புகுதற்குப் பொருந்தின தோழி தலைமகள் புல்லாவகைக்குக் காரணமாகத் தலைமகனைப் பார்த்துப் பொதுப் பெறச் சொன்னதாம்.

கருத்து:—ஊடுதலும், கூடுதலும், இல்லையேல் காமம் சிறவாது.

ஒப்புமைப் பகுதி:—

"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்."

—குறள். 1109.

"துனியும் புலவியும் இல்லாயிற் காமம்
கனியும் கருக்காயும் அற்று."

—குறள். 1306.

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்".

—குறள். 1330.

(க).

392. *தம்மமர் காதலர் தார்சூழ் அணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்கு—இம்மெனப்
பெய்ய எழிலி முழங்குந் திசையெல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து.

தருமர் :—என்பது. தம் அமர் காதலர்—தம்மால் விரும்பப் பட்ட காதலரது; தார் சூழ் அணி அகலம்—மாலை சூழ்ந்த அழகிய மார்பை; விம்ம முயங்கும் துணை—இறுகத் தழுவும் அளவுகள்; இல்லார்க்கு—இல்லாத [பிரிந்த] மகளிர்க்கு; †இம் மென பெய்ய—இம்மென்னும் ஓசையுடைத்தாய் மிகுதியாய்ப் பெய்யவேண்டி; எழிலி முழங்கும்—முகில் முழங்கா நிற்கும்; திசை அனைத்தும்—திக்குகள் எல்லாம்; நெய்தல்—நெய்தற் பறை; அறைந்து அன்ன நீர்த்து—அறைந்தாற்போலும் நீர்மையாம் என்றவாறு.

நெய்தற் பறையாவது—சாப்பறை. இவை பருவங்கண்டு ஆற்றாத தலைவி தோழிக்குரைத்தது.

பதுமனார் :—என்றது. தம்மால் விரும்பப்பட்ட காதலரது தார் சூழ்ந்த அணியகலத்தை இறுக முயங்கும் அளவில்லாதார்க்கு இம்மென்று ஒலிபெருகப் பெய்வான் வேண்டி அழகிய முகில் முழங்காநின்ற திசையெல்லாம் முழக்கம் நெய்தற்பறை அறைந் தாற்போலும் நீர்மையையுடைத்து என்றவாறு.

தம் அமர்—தம்மால் விரும்பப்பட்ட; நெய்தல்—இம்மென்று ஒலிக்கும் நெய்தல் நிலத்துப் பறை; சாக்காட்டுப்பறை. நீர்த்து—நீர்மையை யுடைத்து.

---

*அகப்பொருட் கிளவித்துறை :—
பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்குச் சொல்லியது.
†இம் எனல் ஓர் ஒலிக்குறிப்பு.

விளக்க உரை :—என்பது. தம் அமர் காதலர் தார்சூழ் அணி அகலம்—தம்மால் விரும்பப்பட்ட காதலரது தார்சூழ்ந்த அழகிய மார்பினை; விம்ம முயங்கும் துணை இல்லார்க்கு—நம் அளவில் இறுகத் தழுவும் அளவுகள் இல்லாதவர்க்கு; இம் மெனப் பெய்ய எழிலி முழங்கும் திசையெல்லாம்—இம் என்னும் ஓசையுடைத்தாய் மிகவும் பெய்வான்வேண்டி முகில் முழங்கா நின்ற திக்குகளெல்லாம்; நெய்தல் அறைந்தன்ன நீர்த்து—அந்த முழக்கம் நெய்தற்பறை அறைந்தாற்போலும் நீர்மைத்தா யிருக்கும்.

நெய்தற்பறை என்பது சாக்காட்டுப் பறை.

கருத்து :—பிரிவுத்துன்பம் உணர்ந்து அன்பு செய்யில் இன்பஞ் சிறக்கும்.

(உ).

393. *†கம்மஞ்செய் மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர்கொள் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை இட்டும் கலுழ்ந்தாள் துணையில்லார்க்கு
இம்மாலை என்செய்வ தென்று.

தருமர் :—என்பது. கம்மம் செய் மாக்கள்—தொழில் செய்யும் மனிதர்; [1]கருவி ஒடுக்கிய—தமது கருவிகளை ஒடுக்குதற் குரிய; மம்மர்கொள் மாலை—மயங்கித் தெரியாத மாலைக்காலத்து; மலர் ஆய்ந்து பூ தொடுப்பாள்—மலரைத் தெரிந்து மாலை தொடுக்குமவள்; துணை இல்லார்க்கு—துணைவரை இல்லாதவர்க்கு;

---

*அகப்பொருட் கிளவித்துறை :—
தலைமகள் செலவுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.
†கம்மம்—கம்மியர் தொழில்.
[1]கருவி ஒடுக்கிய மாலை என்றது பகலெல்லாம் வேலை செய்த தொழிலாளரும் தம் வேலையை நிறுத்தித் தத்தம் காதலியரிடம் செல்லுங் காலம் என்பதைக் குறித்தற்கு.

இ மாலை என் செய்வது என்று—இந்த மாலை என்ன பயனைச் செய்யவற்றோ என வுயிர்த்து; கை மாலை இட்டு—கையின் மாலையைப் போட்டு; கலுழ்ந்தாள்—அழுதாள்.

இது தலைவி மாலையம் பொழுது கண்டு வருந்தியவதனைக் கூறியதாயிற்று.

பதுமனார்:—என்றது. தொழில் செய்யும் மக்கள் தாம் தொழில் செய்யுங் கருவிகளை ஒடுக்கிய மயக்கங்கொண்ட மாலைப் பொழுது மலராகிய பூக்களை ஆராய்ந்து தொடுக்கின்றவள் தன் கை மாலையைப் போகட்டு அழுதாள்; தந்துணைவரை யில்லா தார்க்கு இம்மாலை என்ன பயன் செய்வது என்று என்றவாறு

கலுழ்தல்—அழுதல்.

விளக்க உரை:—என்பது. கம்மஞ் செய் மாக்கள் கருவி ஒடுக்கிய—தொழில் செய்யும் மக்கள் தமது கருவிகளை ஒடுக்கிய; மம்மர் கொள் மாலை—மயங்கித் தெரியாத மாலைக் காலத்து; மலர் ஆய்ந்து பூ தொடுப்பாள்—மலரைத் தெரிந்து பூவைத் தொடுப்பவள்; கைமாலை இட்டுக் கலுழ்ந்தாள்-கையின் மாலையை போட்டு அழுதாள்; துணை இல்லார்க்கு இம் மாலை என் செய்வது என்று—துணைவரை இல்லாதவர்க்கு இம்மாலை என்ன பயன் செய்வது என்று என்றவாறு.

இது தலைமகள் பிரிவுடன் படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கருத்து:—மாலைப்பொழுது பிரிந்த காதலர்க்குத் துன்ப முண்டாக்கும்.

மேற்கோள் பகுதி:—

மயிலை:—"கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தாள் துணை யில்லார்க்கு, இம்மாலை யென் செய்வதென்று" எனவரும் இது

இம்மாலை என் செய்வதென்று சொல்லியென சொல்லென்பது கொண்டு முடிதலின், சொல்லெச்சமாயிற்று.

—நன். சூ. 359.

(௫).

394. *செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலின்
†நாளிட்டு நம்குற்றம் எண்ணுங்கொல்
தோள்வைத் தணைமேற் கிடந்து. [அந்தோதன்

தருமர்:—என்பது. செல்சுடர் நோக்கி—படுகின்ற ஞாயிற்றைப் பார்த்து; சிதர் அரி கண் கொண்ட நீர்—சிதறிய செவ்வரிகளையுடைய கண்களில் மல்கிய நீரை; மெல் விரல்—மெல்லிய விரலினாலே; ஊழ் தெறியா—முறையாக வாங்கித் தெறித்து; விம்மி—பொருமி; தன் மெல் விரலின்—மற்றுந் தன்னுடைய மெல்லிய விரலினாலே; நாள் இட்டு—நாம் பிரிந்த நாட்களை வைத்து எண்ணி; [1]அணைமேல் தன் தோள் வைத்து கிடந்து—அணைமீது தனது தோளை வைத்துக்கிடந்து; நம் குற்றம் எண்ணுங்கொல்—நம்முடைய குற்றங்களை நினைக்குங் கொல்லோ; அந்தோ—ஐயோ என்றவாறு.

அணைமேல் தோள் வைத்துக் கிடப்பது—தலைவரைப் பிரியாதாள் ஆதலின் தனக்கு அணையே பகையாகக் கிடந்தாள் என அவள் வருத்தங் கூறியதாம். இது வினைமுற்றி மீளுந் தலைவன் தனது தேரை விரைவிற் கடாவுவது பயனாக அச் சொல்லை உட்கொண்டு பாகனோடு சொல்லாததுபோல அவன் கடவத் தன்னுள்ளே சொல்லியது.

---

*அகப்பொருட் கிளவித்துறை:—
வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகன் கேட்பச் சொல்லியது.

†நாள்வைத்து என்றும் பாடம்.

[1] அணை—படுக்கை.

பதுமனார்:—என்றது. வினைமுற்றிய தலைமகன் பாகன் கேட்பச் சொல்லியது.

படுகின்ற [1]ஞாயிற்றைப் பார்த்துச் சிந்திய வரியையுடைய கண்கள் கொண்ட நீரை மெல்விரலாலே முறை முறையால் தெறித்துப் பொருமித் தன் விரலால் நாம் பிரிந்த நாட்களை வைத்து எண்ணி நம் குற்றங்களை நினைக்குங் கொல்லோ அணை மேலே தன் தோளை வைத்துக்கிடந்து என்றவாறு.

விளக்க உரை:—என்பது. செல்சுடர் நோக்கி—படுகின்ற ஞாயிற்றைப் பார்த்து; சிதர் அரிக்கண் கொண்டநீர்—சிதறின செவ்வரிகளையுடைய கண்களில் மல்கிய நீரை; மெல் விரலின் ஊழ் தெறியா விம்மி—மெல்லிய விரலினாலே அந்தக் கண்ணீரை முறைமையாக வாங்கித் தெறித்துப் பொருமி; தன் மெல் விரலின் நாள் வைத்து நம் குற்றம் எண்ணுங்கொல்—தன் மெல்லிய விரலினாலே நாம் பிரிந்த நாளை வைத்து எண்ணி நம் குற்றங்களை நினைக்குங் கொல்லோ; அந்தோ தன் தோள் வைத்து அணைமேல் கிடந்து—ஐயோ தன் தோளை அணைமேல் வைத்துக் கிடந்து தான் என்றவாறு.

என்வே பாகன்தேரை விரையக் கடவுவது பயன் என்பதாம்.

கருத்து:—பிரிவு காதலர்க்கு இரக்கத்தை மிகுதிப்படுத்தும்.

ஒப்புமைப் பகுதி:—

"நாள்எண் ணீர்மையின் நிலனும் குழியும்
விரலிட் டறவே."

—குறுந்தொகை. 46.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்".

—குறள். 1261.

(சு).

---

[1] ஞாயிறு—சூரியன்.

395. *கண்கயல் என்னுங் கருத்தினுல் காதலி
பின்சென்றது அம்ம சிறுசிரல்—பின்சென்றும்
ஊக்கி எழுந்ததும் எறிகல்லா ஒண்புருவம்
கோட்டிய வில்வாக் கறிந்து.

தருமர்:—என்பது. சிறுசிரல்—சிறிய [1]சிச்சிலிக் குருவியானது; கண்—(காதலையுடையாள்) கண்களை; கயல் என்னும் கருத்தினுல்—கயல் மீன் என்று உட்கொண்டதனுல்; காதலி பின் சென்றது அம்ம—அவள் பின்னே தொடர்ந்து சென்றது; பின் சென்றும்—பின்னே சென்றும்; ஊக்கி எழுந்தும்—முயன்றெழுந்தும்; ஒள் புருவம் கோட்டிய வில் வாக்கு அறிந்து—ஒள்ளிய புருவத்தினது முறிவையும் கண்ணையும் நிரம்பின வில்லும் அம்புமாகக் கருதி; எறிகல்லா(து)—எறியமாட்டாமல் மீண்டது என்றவாறு.

அம்ம என்றது சிச்சிலியானது எறிவதற்கு உன்னிப் பறந்ததும் கயலின் பகுதிபோய் வில்லும் அம்புமானது அதிசயம் என்பதாம். சிறிய என்றது அதன் அறியாமை கூறியதாம். எறிவது—குத்துவது; சிச்சிலி—மீன் கொத்திக் குருவி; இது பாங்கற்கு உற்றதுரைத்தது அல்லதூஉம் பின்சென்ற செவிலிக்கு மருதநிலத்து எதிர்ந்தார் கூறியதுமாம்.

பதுமனுர்:—என்றது. தலைமகன் பாங்கற்குச் சொல்லியது.

காதலையுடையாள் கண்ணைக் கயல் என்னுங் கருத்தினுல் அவள் பின்னே சென்றது சிறுசிரல்; பின்னே சென்று முயன்றெழுந்தும் எறியமாட்டுகின்றதில்லை அவள் ஒள்ளிய புருவத்தைக்

*அகப்பொருட் களவித்துறை:—
தலைமகன் தானுற்றதைப் பாங்கற்குச் சொல்லியது; அல்லதூஉம் பின் சென்ற செவிலிக்கு மருத நிலத்தெதிர்ந்தார் சொல்லியதூஉமாம்.

[1] மீன்குத்திப் பறவை.

கொடிய [1]வில்வாக்காக அறிந்து என்றவாறு.

சிறுசிரல்—சிச்சிலி. ஊக்கி எழுந்தும் எறிகல்லாது—முயன்றெழுந்தும் எறிய மாட்டுகின்றதில்லை. இது செவிலிக்கு மருதநிலத்து எதிர்ந்தார் சொல்லியதுமாம்.

விளக்க உரை:—என்பது. கண்கயல் என்னும் கருத்தினால்—காதலியுடைய கண்ணைக் கயல் என்னுங் கருத்தினால்; காதலி பின் சென்றது அம்ம சிறுசிரல்—காதலி பின்னே தொடர்ந்து சென்றது சிறிய சிச்சிலி; பின்சென்றும் ஊக்கி எழுந்தும் எறிகல்லா—பின்னே சென்று முயன்றெழுந்தும் எறியமாட்டிற்றில்லை. ஒண் புருவம் கோட்டிய வில் வாக்கு அறிந்து—ஒள்ளிய புருவத்தினது முறிவையும் கண்ணையும் கண்டு நிரம்பின வில்லும் அம்புமாகக் கருதி என்றவாறு.

கருத்து:—நலம் புனைந்துரைத்தல் இன்பம் மிகுதற்கு ஏது வாகும்.

மேற்கோள் பகுதி:—

சங்கர:—ஏழாம் வேற்றுமைக்குரிய கண்ணுருபின் பரியாய உருபான ‘பின்’ என்பதற்குக் காதலி பின் சென்றதம்ம’ என்ற பகுதியை மேற்கோள் காட்டுவர்.

—நன். சங்கர. சூ. 302.

(ரு).

396. *அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற் கன்னோ
பரற்கானம் ஆற்றின கொல்லோ—அரக்கார்ந்த

---

[1] வில்வாக்கு—வில்லின் வளைவு. வாங்கு என்பது வாக்கு எனத்திரிந்தது.

*அகப்பொருட் கிளவித்துறை:—

நற்றாய் தன்மகள் சென்ற சுரத்தருமைகூறி இரங்கியது; அல்லதூஉம் மகட்போக்கிய தாயர் சொல்லியது.

பஞ்சிகொண்டு ஊட்டினும் பையெனப் பையென
அஞ்சிப்பின் வாங்கும் அடி. [வென்று

தருமர் :—என்பது. அரக்கு ஆம்பல் நாறும் வாய்—சிவந்த ஆம்பல் போல மணங்கமழும் வாயையும்; அம்மருங்கிற்கு—அழகிய மருங்குலேயும் உடையாளுக்கு; அன்னே—அய்யோ; அரக்கு ஆர்ந்த பஞ்சி கொண்டு ஊட்டினும்-செய்மை பொருந்திய செம்பஞ் சூட்டினும் (அது பொருமல்); பை என பை என என்று—மெள்ள மெள்ள என்று, சொல்லி; அஞ்சி—நொந்து விடப்போகிறதென்று அஞ்சி; பின் வாங்கும் அடி—குறைத்து வாங்கும் அடிகளானவை; பரல் கானம் ஆற்றின கொல்லோ—பருக்கைகளையுடைய காட்டு வழியையும் பொறுத்தனவோ.

அடிகள் கொடிய நிலத்திலே செல்லத் துணிந்தது எவ்வகைத்தோ என்றவாறு. இது மகட் போக்கியதாய், கருதி யுரைத்தது.

பருமனர் :—என்றது. அரக்காம்பலே போலும் நாறும் வாயையும் நுண்ணிய இடையையும் உடையாட்கு அப்பாலே யுடைய சுரத்தின்கண் செல்ல அந்தோ ஆற்றின கொல்லோ முன்பு அரக்கார்ந்த செம்பஞ்சினைக்கொண்டு ஊட்டினும் மெல்லென, மெல்லென, என்று அதற்கு அஞ்சிப் பின்னே வாங்கும் அடி என்றவாறு.

ஸ்ரீ மருங்கு—அழகிய இடையை யுடையாள்; என்றுமாம். அன்னே—ஐயோ. அரக்கு ஆர்ந்த பஞ்சு—செவ்வரக்குக் கூட்டின பஞ்சு.

விளக்க உரை :—இது மகட் போக்கிய தாய் சொல்லியது.

என்பது. அரக்காம்பல் நாறும் வாய் அம்மருங்கிற்கு—

அரக்காம்பல்போல மணம் நாறும் வாயையும் அழகிய மருங் குலினையும் உடையாளுக்கு; அன்னோ—ஐயோ; பரல் கானம் ஆற்றின கொல்லோ—பருக்கையையுடைய காட்டுவழி பொறுத்தது ஏதோ; அரக்கு ஆர்ந்த பஞ்சி கொண்டு ஊட்டினும் —அரக்குத் தோய்த்த செம்பஞ்சினைக் கொண்டு எழுதி அழகு செய்யினும்; பையென பையென என்று அஞ்சி—அதற்கு நொந்து மெள்ள என்று தான் சொல்லி அஞ்சி; பின் வாங்கும் அடி—குறைத்து வாங்கும் அடி என்றவாறு.

கருத்து :—கற்புடை மகளிர் எத்துணைத் துன்பத்தையும் தாங்கி வல்லவராவர்.

மேற்கோள் பகுதி :—

யா. வி :—வெண்பா அளவடியான் வந்ததற்கு இச் செய்யுளை மேற்கோள் காட்டுவர்.

—அடியோ. சூ. 27.

மயிலை. } அன்னோ என்னும் இடைச்சொல் இரங்குதற்
சங்கர. } பொருள்தந்ததற்கு "அரக்காம்பல் நாறும் வாய் அம்மருங்கிற்கன்னோ, பரற்கான மாற்றின கொல்லோ" என்ற அடியினை மேற்கோள் காட்டுவர்.

—நன். மயிலை. சூ. 420.
—நன். சங்கர. சூ. 421.

ஒப்புமைப் பகுதி :—

"ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்".

—சிலப். 4-73.

(கூ).

397. *ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுது மணந்தார்—பிரிவுள்ளி
மாலை பரிந்திட்டு அழுதாள்; வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

தருமர் :—என்பது. ஓலை கணக்கர்—பள்ளி ஓதுமவர்கள்; ஒலி அடங்கு—வாசிக்கின்ற ஓசையடங்கும்படியான; புல் செக்கர்—புற்கென்ற நிறத்தையுடைய செக்கர் வானம் சிறந்த; மாலைப்பொழுது—மாலைக்காலத்து; (தலைமகள்) மணந்தார் பிரிவு உள்ளி—காதலர் பிரிவை நினைத்து; மாலை பரிந்து இட்டு—மாலையினையும் அறுத்துப் போட்டு; வனம் முலைமேல்—அழகிய முலைகளின்மேல்; [1]கோலம் செய் சாந்தம் திமிர்ந்து—கோலஞ் செய்திருக்கிற சாந்தினையும் அழித்திட்டு; அழுதாள்—; என்றவாறு.

இது தலைமகள் பிரிவுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.

பதுமனார் :—என்றது. தலைமகள் பிரிவுடன்படாமையைத் தோழி தலைமகற்குச் சொல்லியது.

ஓலையெழுதுங் கணக்கர் ஓசையடங்கும் புற்கென்ற செம்மையையுடைய அந்திப் பொழுதில் காதலர் பிரிவை நினைத்துப் பூமாலையைப் பரிந்திட்டு மென்முலைமேற் கோலமாகச் செய்த சாந்தையும் திமிர்ந்திட்டு அழுதாள் என்றவாறு.

விளக்க உரை :—இது தலைமகள் பிரிவுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது.

---

* அகப்பொருட் கிளவித்துறை :—
தலைமகள் பிரிவுடன்படாமையைத் தோழி தலைமகற்குச் சொல்லியது.

1 சந்தனத்தால் அழகுபெற எழுதிய தொய்யில் கொடி.

என்பது. ஓலைக்கணக்கர் ஒலி அடங்கு—பள்ளி ஓதுமவர்கள் மாலைப்பொழுதில் வாசிக்கிற ஓசை அடங்கும்; புன் செக்கர் மாலைப்பொழுது—புற்கென்ற செக்கர் வானத்தையுடைய மாலைக் காலத்து; மணந்தார் பிரிவுள்ளி—காதலர் பிரிவை நினைந்து; மாலை பரிந்திட்டு அழுதாள்—மாலையினையும் அறுத்துப் போட்டு அழுதாள்; வனமுலைமேற் கோலஞ் செய் சாந்தம் திமிர்ந்து—அழகிய முலைமேற் கோலஞ் செய்த சாந்தத்தினையும் அழித்து என்றவாறு.

கருத்து :—காதலர் பிரிவு குலமகளிர் உள்ளத்தைச் சுடுவதாகும். (எ).

398. *கடக்கருங் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ என்றி;—[1]சுடர்த்தொடீஇ
பெற்றான் ஒருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரும் ஆறு.

தருமர் :—என்பது.; சுடர் தொடீஇ—விளங்கா நின்ற [2]தொடிகளையுடையாய்; கடக்க அரும் கானத்து—கடக்க அருமையாய சுரத்தையுடைய காட்டிலே; காளை பின்—(காளை போன்ற) தலைவர் பிறகே; நாளை நடக்கவும் வல்லையோ—நாளை நடந்து போகவும் வல்லையோ; என்றி—என்றாய்; பெருங் குதிரை—பெரிய குதிரையினை; பெற்றான் ஒருவன்—தனக் குண்டாகப் பெற்றான் ஒருவன்; அ நிலையே—இப்பொழுதே; அஃது ஊரும் ஆறு கற்றான்—அதனைச் செலுத்தும் முறைமையை யும் வல்லவனாவன் என்றவாறு.

---

*அகப்பொருட் கிளவித்துறை :—
உடன்போக்குக்குப் பொருந்தின தலைமகள் தோழிக்குக் கூறியது.

[1] ‘சுடர்த்தொடீஇ’ என்பது ‘சுடர்த்தொடீஇ கேளாய்’ என்னும் கலித். 51-ன் அடி ஒற்றி நிற்றல் காண்க.

[2] தொடி—வளையல்.

குதிரையைக் கொடுப்பித்த நல்வினை அதனை ஏறவும் வல்லவனுக்கும் என்பதாம்.

இது உடன்போக்குப் பொருந்திய தலைமகள் தோழிக்கு உரைத்தது.

பதுமனார் :—என்றது. உடன் போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அருஞ் சுரத்தையுடைய கானகத்துக் காதலனாகிய காளை பின்னே நாளை நடக்கவும் வல்லையோ என்று என்னை வினவுதி; சுடர்த் தொடீஇ! ஒருவன் சிறப்புடைய குதிரையைப் பெற்றால் அப்பொழுதே அதனைச் செலுத்துமாறும் கற்றானும் அதுபோலக் காதலன் பின்னே சேறற்கு அருமையில்லை என்றவாறு.

குதிரையைப் பெறுவதான நல்வினை ஏறி முயலவும் கொடுக்கும்.

விளக்க உரை :—என்றது. உடன்போக்குப் பொருந்தின தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கடக்கருங் கானத்துக் காளை பின்—கடத்தற்கு அருஞ் சுரத்தையுடைய காட்டிலே காளையின் பிறகே, நாளை நடக்கவும் வல்லையோ என்றி—நாளை நடந்துபோகவல்லையோ என்றாய்; சுடர்த்தொடீஇ—விளங்கிய தொடியுடையாய்!; பெருங்குதிரை பெற்றான் ஒருவன்—பெரிய குதிரையைப் பெற்றான் ஒருவன்; அஃது ஊருமாறு அங்கிலையே கற்றான்—அதனைச் செலுத்தும் முறைமையினையும் அப்பொழுதே வல்லவனவன் என்றவாறு.

குதிரை கொடுப்பித்த நல்வினை அதனை ஏறவும் வல்லவனுக்கும்.

கருத்து :—காதலர் மனம் உறுதியான ஆற்றலுடன் விளங்குவதாம்.

(அ).

399. *மூலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலும்என்
பூம்பாவை செய்த குறி.

தருமர் :—என்பது. மூலை கண்ணும் (நெருநல் என் மகள்) என் மூலைக் கண்ணினையும்; முத்தும்—முத்தையும்; முழு மெய்யும்—தன் மெய்யெல்லாம்; புல்லும் இலக்கணம்—அழுந்தத் தழுவிக் கொண்ட (உண்மைதனை) யாதும் அறியேன்—அப்பொழுது யாதும் அறிந்திலேன்; என் பூ பாவை செய்த குறி—யான் பெற்ற பொலிவினையுடைய பாவை செய்த குறி; கலை கணம்—கூட்டமான [1]கலைகள்; வேங்கை வெரூஉம்—வேங்கைப் புலிக்கு அஞ்சித் திரியும்; நெறி செலிய போலும்—காட்டு வழியே துணிந்து போகைக்குப் போலும் என்றவாறு.

மூலைக்கண்ணும் முத்தும் தன் மெய்யிலே அழுந்த ஆரத் தழுவிக்கொண்டபோதே என்னைப் பிரிந்து போவதாகச் (செய்த குறி என்னுமது இப்பொழுது அறிந்தேன்) என்று சொல்லியது.

பதுமனார் :—என்றது. மகட்போக்கிய தாய் கவன்று சொல்லியது.

நெருநல் என் மூலைக்கண்ணையும் முத்தும் முழுமெய்யையும் புல்லுங்குறியான் அப்பொழுது யாதும் அறிந்திலேன்; இப்பொழுது அறிந்தேன்; கலைக் கணங்கள் புலியை வெருவும் சுர நெறி செல்வான்போலும் என் பூம்பாவை செய்த குறி என்றவாறு.

---

*அகப்பொருட் கிளவித்துறை :—
மகளைப் போக்கிய நற்றாய் கவன்று கூறியது.

[1] கலைகள்—மான்கள்.

விளக்க உரை :—இது மகட்போக்கிய தாய் கவன்று கூறியது.

என்பது. முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்—நெருநல் என் முலைக் கண்ணினையும் முத்தினையும் முழு மெய்யிலே அழுந்த நிரம்பத் தழுவிக்கொண்ட; இலக்கணம் யாதும் அறியேன்—(அடையாளம்) யாதும் அப்பொழுதறிந் திலேன்; [என்னைப் பிரிந்து போகைக்குச் செய்த குறி என்னுமது இப்பொழுதறிந்தேன்.] கலைக்கணம் வேங்கை வெரூஉம் நெறி செலிய போலும்—கலைத்திரள் வேங்கைப் புலிக்கு அஞ்சித் திரியும் வழிப்போகைக்குப் போலும்; என் பூம்பாவை செய்த குறி—யான் பெற்ற பொலிவினையுடைய பாவை செய்த குறி என்றவாறு.

கருத்து :—காதல் அன்பு தாயன்பையும் மறக்கச் செய்யும் தன்மையது.

(கூ).

400. *கண்மூன் றுடையானும் காக்கையும் பையரவும்
என்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய்! பொருள்வயின்
பாங்கனூர் சென்ற நெறி.

தருமர் :—என்பது. பொன் ஈன்ற கோங்கு அரும்பு அன்ன முலையாய்—பொன் சிதர்ந்து அழகு பெற்ற முலையினை யுடையாய்! கண் மூன்று உடையானும்—மூன்று கண்ணை யுடைய சிவனும்; காக்கையும்—காகமும்; பை அரவும்—படத்தையுடைய பாம்பும்; என் ஈன்ற யாயும்—என்னைப் பெற்ற

---

*அகப்பொருட் கிளவித்துறை :...
தலைமகள் பிரிவாற்றாமையைத் தோழிக்குச் சொல்லியது,

தாயும்; பிழைத்தது என்—யான் வருந்தச் செய்த குற்றமில்லை; பொருள் வயின் பாங்கனர் சென்ற நெறி—பொருள் வயிற் பிரிந்த தலைவர் சென்ற வழியே (நம்மை வருத்தஞ் செய்தது) என்றவாறு.

கண் மூன்றுடையான் பிழைத்தலாவது காமனை உருவழித்தவன் பின்பும் அவனை உளனாக்கினன் என்பதால். காக்கை பிழைத்தற்குக் காரணம் குயில் முட்டையிட அதனைத் தான் வளர்த்துக் கூவுவித்ததாம். பை அரவு பிழைத்தல்—தான் விழுங்கிய மதியைச் செரிப்பித்துவிடாமல் அதனை மீளவும் [1]கான்று அதனால் வருத்துவித்ததாம். தாய் பிழைத்தது தன்னைப் பெற்று இப்படி வருந்தும்படி வைத்தலால். இவற்றால் வருத்தஞ் செய்தில்லை எனவே, இவ்வகையால் வருந்தியவதனையுட்கொண்டு தலைவர் சென்றவழி என்று அதன்மேல் அவரைச் செலுத்தலாகிய வழி இல்லையாயின் இவைகளாற் செய்யும் வருத்தமும் இல்லை என்றவாறு.

நமது தலைவரால் வந்த வருத்தமன்றி இவ்வகையாலாய வருத்தம் அல்ல என்று கூறாததுபோற் கூறியதாம். இது பிரிவாற்றாத தலைமகள் தோழிக்கு உரைத்தது.

ஓராதே யானுரைத்தேன் ஆயினும் ஒன்பொருளை
ஆராய்ந்து கொள்வர் அறிவுடையார்—சீராய்ந்து,
மிக்க களைந்து குறைபெயர்ந்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

தருமர் உரை முற்றும்.

---

[1] கான்று—உமிழ்ந்து.

பதுமனார்:—என்றது. காமனை உருவழித்துப் பின்னும் அவனை உளனாக்கின கண் மூன்றுடையானும், குயிலை வளர்த்து விட்ட காக்கையும், மதியை விழுங்கிப் பின்பும் உளதாக விட்ட பாம்பும், இத்துன்பமுறுதற்கு என்னை ஈன்ற தாயும் எனக்குப் பிழைத்தது என்னை? நம்முடைய நண்பனார் நம்மைப் பிரிந்து பொருள்வயிற் போயினர் நெறியன்றோ பிழைத்தது பொன்னீன்ற கோங்கரும்பன்ன முலையாய் என்றவாறு.

ஞாலத் துழிதரு நற்பாட்டே கொண்டடக்கி
நாலடி நானூறெனப் பெயரால்—வாலிதின்
ஈட்டித் தொகுத்தான் இசைசால் பதுமனே
கூட்டமைந்த மூன்றுபாற் கொண்டு.

நல்லோர் அருள்செய்த நாலடி நானூற்றின்
சொல்லோர் பொருளனைத்துந் தோன்றியதே—கல்வி
வரும்பத நூல் கொண்ட மதிவரன்றன் வாக்கால்
அரும்பத மிட்ட அழகு.

ஆலின் அரசின் அசோகின் அணியிருளின்
மேலை மறையின் விரிந்தபொருள்—நாலடியாம்
வெள்ளாஅன் வேதத்தின் இன்னுரையைக் கண்டக்காற்
கொள்ளாரோ நல்லோர் குறித்து.

பதுமனார் உரை முற்றும்.

விளக்க உரை :—இது தலைமகள் பிரிவாற்றாமையைத் தோழிக்குச் சொல்லியது.

என்பது. கண்மூன்றுடையானும்—மூன்று கண்ணை யுடைய ஈசனும்; காக்கையும்—; பையரவும்—படத்தினையுடைய பாம்பும்; என் ஈன்ற யாயும்—என்னைப்பெற்றதாயும்; பிழைத்தது என்—யான் வருந்தச் செய்ததால்; தங்கள்....................மில்லை; பொன் ஈன்ற கோங்கரும் பன்ன முலையாய்—பொன் போலுங் கோங்கரும்பினையொத்த முலையினையுடையாய்! பொருள் வயின் பாங்கனார் ;சென்ற நெறி—பொருள் வயிற் பிரிந்து போன தலைவர் சென்ற வழியே (நம்மை வருத்தஞ் செய்தது) என்றவாறு.

கண் மூன்றுடையான் பிழைத்தலாவது காமனை உரு வழித்துப் பின்பும் அவனை உளனாக்கினன் என்பதுகொண்டு, காகம் வருத்தஞ் செய்தற்குக் காரணம் குயில் முட்டையிடவும் அதனை வளர்த்துக் கூவி வருந்துவித்ததாம். பையரவு வருத்தற்குக் காரணமாதல். விழுங்கிய மதியைச் செரிப்பித்துவிடாமல் அதனைக் கான்று பிழைப்பித்துவிட்டது என்பதாம். தாய் வருத்தஞ் செய்யக் காரணம் தன்னைப் பெற்று இப்படி வருந்தும் படி வைத்தாள் என்பதாம். தலைவர் பிரிவதன் முன்னமும் அந்தக் காமனும், குயிலும், சந்திரனும், தாயும் இல்லையல்ல. அவைஇற்றை வெறுக்கத் தக்கது ஒன்றுமில்லை. தலைவர் பொருள் தேடப் போவதாக நம்மைப் பிரிந்துபோன முறைமையே வருத்தினது என்பதாம்.

விளக்கவுரை முற்றும்.

கருத்து :—காதல் மிகுதியால் யாவும் நல்லனவென்று கருதும் தன்மை ஏற்படும்.

(ம).

நாலடியார் உரைவளம் முற்றும்.

நாலடியார்

பிற்பகுதி (201—400 பாடல்கள்)

செய்யுள் முதற்குறிப்பு அகராதி.

அ

அங்கண் விசும்பின் 361
அங்கோட்டு 359
அடுக்கல்மலைநாட 7
அத்திட்டகூறை 180
அரக்காம்பல் 410
அருகலதாக 136
அரும்பெறற்கற்பின் 378
அருளின் அற 261
அவ்வியம் 263
அழல் மண்டு 4
அள்ளிக்கொல் 138

ஆ

ஆகாது எனினும் 291
ஆணமில் நெஞ்சத் 363
ஆமாபோல் நக்கி 369
ஆர்த்த அறிவினர் 316
ஆர்த்த பொறிய 198
ஆன்படுநெய் 80

இ

இட்டாற்றுப் 191
இம்மையும் 206
இமைக்கும் அளவில் 265
இரவலர்கன் 174
இல்லாமை 224
இலங்குநீர் 59
இழித்தக்க 221
இற்பிறப்பு எண்ணி 25
இறப்பவே தீய 51
இன்னர் இளையர் 10
இன்னா இயைக 228
இன்னா செயினும் 55
இன்னாசெயினும் விடுதற் 57
இன்னாதம் 335
இனியார்தம் 352

ஈ

ஈட்டலுந் துன் 177

உ

உடைப்பெரும் 351
உண்டாய போழ்தின் 187
உணர உணரும் 101
உருவிற்கு 82
உலகறிய 8
உள்கூர்பசி 195
உள்ளத்துணர்வுடை 386
உள்ளம் ஒருவன் 375
உளநாள் 266

ஊ

ஊறுசெய் 373

எ

எஞ்ஞான்றும் 385
எத்துணையானும் 160
எங்நிலத்துவித் 89
எய்தி இருந்த 268
எறி நீர் 167
எறி யென்று 341
என்பாய் உகினும் 202
என்றும் புதியார் 229
என்னே மற்று 276
எனதெனது 169

ஒ

ஒரு நன்றி 330
ஒரு நீர்ப்பிறந்து 76
ஒருவர் ஒருவரை 233

ஓ

ஓதியும் ஓதார் 155
ஓலைக் கணக்கர் 413

க

கட்கினியாள் 384
கடக்கரும் 414
கடகஞ் செறிந்த 193
கடமான் 216
கடல்சார்ந்தும் 93
கடிஎனக்கேட் 343
கடுக்கென 310
கடையெலாம் 211
கடையாயர் 34
கயல் 409
கண்மூன்று 417
கணமலை நன்னாட! 321
கப்பி கடவதா 298
கம்மஞ்செய் 405
கரவாததிண் 225
கருத்துணர்ந்து 23
கருமமுன் 111
கருமவரிசை 109
கல்லாக்கழிப்பர் 347
கல்லாது 123
கல்லென்று 121
கல்லோங்கு 184
கழுநீரும் 37
கற்றதூஉம் 246
கற்றவும் 295
கற்றறிந்த நாவினர் 126
கற்றார் உரைக்கும் 134
கன்னனிநல்ல 285

கா

காழாய கொண்டு 300

கு

குடநீரட்டுண்ணும் 380
குலந்தவங்கல்வி 283
குற்றமும் ஏனை 64

கொ

கொடுத்தலுந் துய்த்த 164

கொய்புல் 313
கொலைஞர் 280

கோ

கோட்டுப்பூப் போல் 31
கோடேந்து 324

ச

சக்கரச்செல்வம் 307

சி

சிறுகாலை 272

சீ

சீரியார்கேண்மை 69

செ

செங்கோலாலய 349
செய்யாத செய்தும் 74
செல்சுடர் 407
செழும் பெரும் 319
செறிப்பில 68
செறுத்தோறு 48

சொ

சொற்றுற்று 245

த

தங்கண் மரபு 289
தம்மமா 404
தமரென்று 63
தலையேதவமு 346
தளிர்மேலே 326
தனதாகத் 173

தா

தமேயும் இன்பு 271

தி

திருத்தன்னைநீ 235
திருமது கையாக 201
தினைஅனைத்தே 303

து

துய்த்துக்கழி 162

தெ

தெளிவிலார் 41

ந

நச்சியார் 214
நட்டார்க்கும் 157
நம்மாலே 220
நயவார்கண் 148
நல்லவைநாள் 292
நல்லார்என 47
நல்லார்நயவர் 145

ந

நல்லர்பெரிதளியர் 213
நளிகடல் 87
நறுமலர் 18
நன்னிலைக்கண் 103

நா

நாப்பாடஞ்சொல்லி 242

நாய்க்கால் 39
நாலாறு மாறாய் 382
நாள்வாய்ப் 13
நாறுத் தகடேபோல் 147

நீ

நீர்மையே 196
நீரினும்நுண் 182
நீருட்பிறந்து 334

நு

நுண்ணுணர்வி 71
நுண்ணுணர்வு 115

ப

பகைவர்பணி 91
பராரைப் 99
பல்லான்ற கேள்வி 118
பலநாளும் 29
பழமைகந்தாக 237
பழையர் இவரென்று 312
பன்றிக்கூழ் 128

பா

பாடமே ஓதிப் 251
பாம்பிற்கு ஒரு 364
பாலாற் கழீஇப் 131
பாவமும் என 208

பு

புணர்கடல்சூழ் 142
புத்தகமேசால் 255
புதுப்புனலும் 354
புல்லாப்புன் 124
புறத்துத்தன் 231

பி

பிறந்தகுலமாயும் 189

பெ

பெருகுவது 73
பெருங்கடல் ஆடிய 282
பெருநடை 302
பெருவதொன்று 288
பெறுவது கொள்வர் 253

பொ

பொத்தநூல் 366
பொழிந்தினிது 132
பொழிப்பகலம் 256
பொற்கலத்துப் 11
பொற்கலத்தூட்டி 305
பொன்னிறச் 153

ம

மடிதிரை 53
மரீஇப்பலரோடு 42
மல்குதிரைய 140
மல்லல்மாஞா 210
மலைநலம் 329
மழைதிளைக்கும் 337

மு

முட்டிகை 16

முட்டுற்ற 83
மூலக்கண்ணும் 416
முற்றல் சிறுமந்தி 78
முயங்காக்கால் 402

மூ

மூப்புமேல் 269

மெ

மெய்ஞ்ஞானம் 240

மை

மைதீர்பசும்பொன் 309

யா

யாமாயின் 205
யானை அனையவர் 27

வ

வயாவும் 2
வலவைகள் 151
வழங்காதசொல் 171
வழுக்கெனைத்தும் 340

வி

விருப்பிலார் 20
விழைந்தொருவர் 294
விளக்கொளியும் 357

வெ

வெறுமை இடத்தும் 275
வென்றிப்பொருட் 248

வே

வேம்பின் இலை 97

விசேடக் குறிப்புகள்.

அணிவகைகள் :—

அருங்கலம் 40; அணிகலம் 242; கண்ணவாத்தக்க கலம் 157; கடகம் 287; பொற்றொடி 376; தொடி 11.

அக்கு (சங்கு மணி) 123; கணமணி 127, 146, 369, மாண்டமணி 347; முத்து 146, 399; வான்கதிர் முத்தம் 224; பொத்த நூற்கல் 376.

அளவைப் பெயர்கள் :—

தினைத்துணை 104, 323; தினையனைத்து 344; பனைத்துணை 104; பனையனைத்து 344; ஐந்தையனைத்து 329; எத்துணை 109; இம்மியரிசி துணை 94; ஒன்று 286, 357; மூன்று 114, 250; நான்கு 82, 319; ஐந்து 333; எட்டு 281; ஒன்பது 47; பத்து 281; நூறு 357; எழுநூறு 357; ஆயிரவர் 284; ஒருவர் 284; மூவர் 363; நால் பொருள் 82; நால் 383; காதம் 100; யோசனை 100; முந்திரி 346; காணி 346; தூணி 387; பதக்கு 387; நாழி 7.

ஆயுத வகைகள் :—

உழுபடை 178; உளி 355; குறடு 208; சுட்டுக்கோல் 208; முட்டிகை 208.

இசைக் கருவிகள் :—

கடிப்பு இடு கண்முரசம் 100; தண்ணம் 6; பறை 24, 25, 86; பிணப்பறை 23; மணப்பறை 23.

இட வகை:—

அவை 325; இல் 13, 383, 198; பேரில் 147; நல்லில் 225; இல்லம் 55, 207; வீடு 59, 274.

உலகு 15, 74, 185, 368; உலகம் 97, 119, 273; மையறு தொல்சீ ருலகம் 333; பொங்குநீர் ஞாலம் 72; அங்கண்மா ஞாலம் 148; மல்லன்மா ஞாலம் 296; வான் கவிந்த வையகம் 80; குண்டு நீர் வையம் 94; ஈண்டு நீர் வையம் 109; வடுவிலா வையம் 114; நெடுமொழி வையம் 240; புணர்கடல் சூழ் வையம் 264; தழங்கு குரற் பாய் திரைசூழ் வையம் 339; அறைகடல் சூழ் வையம் 230; நெடுமொழி வையம் 240; வையம் 350.

ஊர் 90, 175, 241, 383, 384; நடுவூர் 96; கடற் கோடு 263; கரும்பார் கழனி 122; காடு 361; இடுகாடு 96; சுடுகாடு 121; புறங்காடு 45; சுரும்பார்க்குங்காடு 122; பரற் கானம் 396; கடக்கருங்கானம் 398; கானல் 291; புன்னை விறற்பூங்கமழ் கானல் 117; சுரம் 5; தண்வயல் 389; தீப்புலவன் கோட்டி 312; புன்கோட்டி 260; பொருளில் வறுங் கோட்டி ....; தொல்லை இரும்புனம் 178; எறிபுனம் 180; நிலம் 22; நீணிலம் 27; களர்நிலம் 133; விளைநிலம் 133, 356; நெடுங்கடை 15 6; புறங்கடை 293, 31.

பட்டினம் 250; பனிபடுசோலை 17; பிலம் (சுரங்கம்) 160; மன்றம் 23; மாடம் 361; மெய்ஞ்ஞானக்கோட்டி 311; வடதிசை 242; விடர் 164; வெறியயர் வெங்களம் 16; வேதிகை 96; வான் 10, 38; வானம் 113; அகல் வானம் 137; மின்னொளிர் வானம் 269; வானகம் 300; அங்கண் விசும்பு 151, 373; விண் 226; புல்செக்கர் 397.

உணவு வகை:—

அக்காரம் 206, 374; அறுசுவையுண்டி 1; அடகு 207, 287; காரடகு 217; அமிழ்து 210, 217; உப்பிலிப்புற்கை 206;

தயங்குநீர்த்தண் புற்கை 210; உப்பிலிவெந்தை 287; கருனை 268; வெங்கருனை 207, 210; கருனைச்சோறு 200; குய்த்துவை ஆர் வெண்சோறு 217; நெய்யிலாப் பாற்சோறு 333; கூழ் 1, 2, பால்கூழ் 321; துற்று 190; சோறு 293; பால்சோறு 322; வல்சி 328; வான்புழுக்கல் 206; ஊன்இரை 193.

பால் 116; 177, 206, 239, 258; ஆபயந்த பால் 118; நெய் 116, 124, 337, 371; ஆன்படுநெய் 238; வேம்படு நெய் 238; தயிர் 116; தேன் 239; 259; கள் 349; தேமா 257; காயம் 116.

நெல் 133, 179, 221; பொன்னிறச் செந்நெல் 269, 367; கருங்கொள், செங்கொள், 387; உப்பு 116, 244; களர் நிலத்துப் பிறந்த உப்பு 133.

உடலுறுப்புக்கள் :—

தலை 14, 43, 49, 61, 257, 375; வெண்டலை 50; சென்னி கண் 44, 47, 226, 305, 395; குழிந்தாழ்ந்த கண் 49, 59; வெருக்குக்கண் 210; இடக்கண், வலக்கண் 388; கடைக்கண், இடைக்கண் 390; சிதரரிக்கண் 394; மூக்கு 59; செவி 59; 257, 322; வாய் 8, 59, 63, 396; முகம் 303; ஒண்புருவம் 395; விற்புருவம் 297; நன்னுதல் 381; நறுநுதல் 381; நெஞ்சு 32, 49, 55; நெஞ்சம் 310, 379; உள்ளம் 62, 106, 317, 380, 386; அகம் 303; மனம் 23 கால் 84; கை 14, 98, 226, 227, 386; அங்கை 123, பாணி 16; விரல் 123; மெல் விரல் 394; தோள் 85, 312, 317, 375, 385, 394; அகலம் 392; மார்பு 385; கவான் 201; முலை 389; கொம்மைவரிமுலை 85; தடமுலை 378; வனமுலை 397; முலைக்கண் 399; வயிறு 121; நா 335, 338; கோடேந்து அகலல்குல் 354; அங்கோட் டகலல்குல் 354.

தோல் 41, 46; கருந்தோல் 47, 322; துளை 42; என்பு 45, 46, 210, 292; குடர் 46; கொழு 46; குருதி 46; தொடர் 46; நரம்பு 46; தடி 46; வழும்பு 46; அடி 396, 388; பீள் 20;

உடம்பு 10, 34, 35, 37, 40, 42, 80, 120, 379; நோவா உடம்பு 258; முடங்குடம்பு 173; யாக்கை 18, 27, 28, 41; அரும்பெறல் யாக்கை 34; மெய் 59, 399; பண்டம் 10, 48; கும்பம் 47; முடைச்சாகாடு 48; உயிர் 50, 62, 324; ஆருயிர் 240, 330; இன்னுயிர் 323; கூத்தன் 26; புக்கில் 41; இளமை 17, 53, 55, 102; மன்னுவிளமை 11; நரை 11; மூப்பு 52, 55, 92, 326; சாக்காடு 52; பிணம் 25; செத்த பிணம் 281.

உடை வகை :—

அத்திட்டகூறை 281; உடுக்கை 141; பட்டும் துகிலும் உடுத்தல் 264; கொடுந்தானை 131; கோடு 131.

உவமைகள் :—

அறத்துப்பால்.

1 பிறப்பினதியல்பை அறிய முடியாமைக்கு வானிடுவில்லின் வரவறியா முடியாமை உவமை

2 செல்வத்துக்குச் சகடக்கால் 2.

3 செல்வங் கெடுகைக்குக் கரியமேகத்தினது மின்னொளி 8.

4 உலோபிகள் செல்வம் இழத்தலுக்குத் தேனீ 10.

5 சுற்றத்தார் அழுகிற ஓசைக்கு ஆழுமரக்கலத்தினிடத் துண்டாகுமொலி 12.

6 நிலையில்லா மகிழ்ச்சிக்கு மறிகுளகுண்டன்ன மகிழ்ச்சி 16.

7 இளமை நிலையாமைக்கு முற்றியிருந்த கனியொழியத் தீவளியால் நற்காயுதிர்தல் 19.

8 யாக்கைக்குப் படுமழை மொக்குள் 27.

9 யாக்கை நிலையாமைக்கு மலையாடு மஞ்சு 28.

10 யாக்கை நிலையாமைக்குப் புன்னுனிமேல் நீர் 29.

11 உடலைவிட்டு உயிர் நீங்குகைக்கு மரத்திலே வைத்த கூட்டை விட்டுத் தூரத்திலே பறந்துபோகிற பறவை 30.

12 உடம்பிற்குக் கரும்பினது கோது 34.

13 அறப்பயனுக்குக் கரும்பூர்ந்தசாறு 34.

14 அறப்பயனுக்கு ஆலம் வித்து 38.

15 மாதர் கண்களுக்குத் தெண்ணீர்க் குவளையும், கயலும், வேலும் 44.

16 முறுவலுக்கு முல்லை முகையும் முத்தும் 45.

17 உடம்பிற்குச் சகடை 48, உயிர்க்குச் சகடை 48.

18 தவத்தின் முன் பாவம் நில்லாமைக்கு விளக்குப் புக விருள் போதல் 51.

19 நல்வினை தீர்விடத்து தீது நிற்பதற்கு விளக்குநெய் தேய் விடத்துச் சென்று இருள் பாய்தல் 51.

20 கயவர்வாய் இன்னாச்சொல்லுக்குக் கல்லெறிதல் 66.

21 சான்றோர் சினம் தணிதற்கு நீர்கொண்ட வெப்பம் தணிதல் 68.

22 பிறனில் விழைவான் நுகரும் நுகர்ச்சிக்குப் பாம்பின் தலை நக்குதல் 87.

23 பலர்நச்ச வாழ்வாருக்குப் படுபனை 96.

24 குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்களுக்கு இடுகாட்டுள் ஏற்றுப்பனை 96.

25 பழவினைக்குப் பசுவினது கன்று 101.

26 அனுபவிக்கும் பகுதியான தீவினைகளை நீக்குதல் முனிவராலும் ஆகாது என்பதற்கு மழை மறுத்தகாலத்தில் பெய்விப்பார் ஒருவருமில்லையாதல் 103.

27 பெறும்பகுதியான நல்வினைப் பயனை ஒருவராலும் நீக்குதலியலாது என்பதற்கு மழை மிகப் பெய்யுங்காலத்து அதனை நிறுத்துவார் ஒருவருமில்லையாதல் 103.

28 செல்வர் வாய்ச்சொற் செல்லுதலுக்கு நல்லாவின் கன்று விலை போதல் 115.

29 நல்கூர்ந்தார் சொல் செல்லாமைக்குப் புல்லீரப் போழ்தின் உழவு 115.

30 அடங்காதார்க்குப் பேய்ச்சுரையின் காய் 116.

31 அறநெறிக்கு ஆபயந்த பால் 118.

32 சமயங்களுக்குப் பசுக்களினது பல வண்ணங்கள் 118.

33 தீவினையாளரைச் சேர்ந்தார்கெடுதற்கு நெருப்பழற் சேர்ந்த நெய்போல் வதூஉம் எரிப்பச் சுடுதல் 124.

34 பெரியோரது கேண்மைக்குப் பிறை 125.

35 சிறியார் நட்பிற்கு மதியம் 125.

36 சான்றோரெனக் கருதிச் சாரப்பட்டாரிடத்து சான்றாண்மை இல்லாததற்குச் செப்பிலே சாந்திருக்கிறதென்று செப்பைத் திறந்து அதனுள் பாம்பைக்காணல் 126.

பொருட்பால்.

1 ஆராய்ந்து அமைவுடைய கற்பதற்கு நீரொழியப் பாலுண் குருகு 135.

2 நூல்களைக் கற்றறிந்தார் நட்பிற்கு நுனியே தொடங்கிக் கரும்பினைத் தின்னல் 138.

3 பண்பும் நயமு மில்லாதாருடன் கொண்ட நட்பிற்குக் கரும்பினை யடியே தொடங்கித் தின்னல் 138.

4 கல்லார் கற்றாரோடு சேர்ந்தொழுகி நல்லறிவுகளையுடையவ ராதலுக்குப் பாதிரிப்பூவைச்சேர்ந்த புத்தோடு தண்ணீர்க்கு வாசத்தைக் கொடுத்தல் 139.

5 குடிப்பிறந்தார் இடுக்கணுற்றகாலத்தும் தம்மொழுக்கத்தில் குறையாராதலுக்கு அரிமா பசித்த காலத்தும் கொடிப் புல்லைத் தின்னாதது 141.

6 குடிப்பிறந்தார் துன்பமுற்ற காலத்தும் ஒப்புரவு செய் தலுக்குப் பெரியமனையினிடத்தே அதன் உறுப்புக்கள் செல்லரித்து குலைந்து கிடந்தாலும் ஒரு பக்கத்தே மழைக்கு ஒழுகாத ஓரிடமிருத்தல் 147.

7 குடிப்பிறந்தார் வறுமையுற்ற காலத்திலும் ஒப்புரவு செய்தலுக்கு ஒருபுடை பாம்புகொள மற்றொரு பக்கத்தால் பிரகாசித்து ஒளி செய்யும் மதியம் 148.

8 குற்றந்தோன்ற வைதவிடத்தும் குடிப்பிறந்தார் அவரைத் தம் வாயினாற் சிதையக் கூறாமைக்குக் கரும்பினை ஆலை வாயிலே வைத்து நெருக்கிச் சாறு கொள்ளினும் இனிமை கொடுத்தல் 156.

9 மேன்மக்களைச் சார்தலுக்கு எல்லாச் செல்வத்தையுமுடைய சுரங்கத்தையடைதல் 160.

10 அருமையுடைத்தாகிய அரணைச்சேர்ந்தாராயினும் மேன் மக்களது வெகுளியினின்றும் பிழையாமைக்கு விரிகிற நாகம் தாழ்ந்த வளையிலே கிடந்தாலும் இடிக்கு அஞ்சுதல் 164.

11 சிறியவர் நட்பிற்கு முன்பகல் நிழல் 166.

12 பெரியோர் நட்பிற்குப் பின்பகல் நிழல் 166.

13 அரசருடைய செல்வமும் மகளிருடைய அழகினது நலமும் அவரையடைந்தார் நுகர்தலுக்குக் கவிந்த நிழலையுங் குளிர்ச்சியுமுடைய மரங்களெல்லாம் அதனிடத்துச் சென்றடைந்தபேர்க்கு நிழலைக் கொடுத்தல் 167.

14 நல்வினைஞ்சார நல்ல நெறியில்லாத பாவங்கள் கெடுமென்பதற்கு வெயில் மிகுந்தோறும் புல்லின்மேற் பற்றியிருந்த பனிநீர் விட்டொழிதல் 171.

15 பெரியாரைச் சார்ந்த சிறியார் உயர்ந்து தோன்றுதற்கு ஊரங்கணநீர் உரவுநீரைச் சேர்ந்து தீர்த்தமெனப் பேர் பெறல் 175.

16 பெரியாரை நட்புக்கொண்ட சிறியார் சீர்மையராவர் என்பதற்குத் திங்களைச் சேர்ந்த முயல் யாவராலும் தொழப்படுதல் 176.

17 பெரியாரைச் சார்ந்தவிடத்துச் சிறியாரது சிறுமைக்குணம் தோன்ருதென்பதற்குப் பாலோடு அளாய நீர் 177.

18 வலி இல்லாராயினும் நல்சார்வு சார்ந்தார்மேல் பகைவர் சினம் செல்லாமைக்குக் கொல்லை நிலத்துப் பெரிய புனத்தின்கணின்ற மரக்கட்டையை அடைந்துநின்ற புல் உழவர் உழுபடைக்கு அசையாவாதல் 178.

19 சான்ருேர் குலநலத்தான் ஆகுவரென்பதற்கு நில நலத்தால் நந்திய நெல் 179.

20 சான்றாண்மை தீயினஞ் சேரக் கெடுமென்பதற்கு மரக் கலத்தை தீக்காற்றுச்சென்று சிதைத்தல் 179.

21 ஒருவர் தம்மனத்தால் குற்றமிலராயினும்சேர்ந்த இனத்தால் கெடுவரென்பதற்கு வெட்டிய புனந்தீப்பட்ட காலத்து வேங்கையும் சந்தனமும் ஒக்க எரிதல் 180.

22 மேன்மக்கள் செல்வமிழந்த காலத்தும் ஒப்புரவுசெய்தலுக்கு ஆறு வற்றியவிடத்தும் தோண்டுமிடத்து ஊற்றுக்குழியால் நீர் சுரத்தல் 185.

23 பெரியோரிடத்துண்டாகிய ஒரு தீமை விளங்கித்தோன்று தலுக்கு வெள்ளெருத்தின் மேலுள்ள சூட்டின் வடு 186.

24 துளக்கமிலாதவர், பிறர் தம்மிடத்து வந்து நட்டோன் மேல் மிக்க கோளைச் சொல்லி மயக்கிவிடினும் நட்பினைச் சிறிதும் பிரித்தலில்லாமலிருப்பதற்கு விளக்கினுளேற்றிய ஒண் சுடர் 189.

25 உறவினனொருவன் ஈயுமுணவை உண்டு வாழும் கிளை களுக்குக் குளத்தின் நீரைக்கொண்டு வளரும் பயிர்கள் 191.

26 சோம்பாமல் உலாவுகின்ற தாளாளர்க்கு நாடகப் பெண்க ளுடைய கண்கள் 191.

27 ஒருவன் முயற்சியுடைமையினால் வாழும் வாழ்க்கைக்குத் துவளுகின்ற கொம்பாக வழியில் நின்ற மரக்கன்று உள் வயிரங்கொண்டவிடத்து யானையைக் கட்டுவதற்குரிய தறியாதல் 192.

28 சிறுதொழிலும் மேற்றொழிலாக மிகுமென்பதற்கு வலி மிகுந்த புலியும் இரை கிடைக்கப்பெறாதகாலத்து சிறு தேரையைப் பிடித்துத் தின்னல் 193.

29 தந்தையின்கண் தோன்றிய குற்றம் புதல்வன் மறைப்ப கெடுதற்குச் செல்லினால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதனது விழுது தாங்குதல் 197.

30 உயர்குடியில் பிறந்தாரிடத்துப் பெயர்பொறிக்கும் பேராண்மை இல்லாததற்குத் தீங்கரும்பீன்ற திரண்ட தாளினையும் மென்மயிர்போற் கற்றையுமுடைய மலர்க்கு வாசனையில்லாதிருத்தல் 199.

31 ஒருவன் தனிமையினானுற்ற வருத்தம் கேளிரைக் காணக் கெடுதற்குக் கருக்கொள்ளுங் காலத்துண்டாகிய மசக்கை நோயும், அக்கருவாகிய பாரம் பொறுத்துத் திரியும் துன்பமும், ஈனுங்காலத்துண்டாகிய வருத்தமுமாகிய இவை தான் பெற்ற மகவைக் கண்டவிடத்துத் தாய் மறத்தல் 201.

32 சுற்றத்தாரைத் தாங்குதற்கு நிழல் மரம் 202.

33 சுற்றத்தாருக்குத் தன்பயனை அளிப்பதற்குப் பழுமரம் 202.

34 பெரியோர் தம்மை அடைந்தாரைத் தாங்குதற்குப் பல பல காய்களைத் தாங்குகின்ற மரக்கொம்பு 203.

35 வெண்சோற்றிற்குப் புலிநகம் 206.

36 நெருங்கி நட்புப் பூண்டிருப்பார்க்கு முட்டிகை 208.

37 நட்பினருக்கு இடுக்கணுற்றகாலத்து விலகி விடுவார்க்குக் குறடு 208.

38 நட்பினருடன் இடுக்கணுற்றகாலத்தும் நட்புப் பூண்டு அவரைத் தாங்குவார்க்குச் சுட்டுக்கோல் 208.

39 வெம்மையுடைய பொரிக்கறிக்குப் பூனைக்கண் 210.

40 கற்றறிந்தார் நட்பிற்கு நுனிதொடங்கி தின்னப்படும் கரும்பு 211.

41 மனநயமில்லார் நட்பிற்கு அடிதொடங்கி தின்னப்படும் கரும்பு 211.

42 மனந்தூயார் நட்பிற்கு நாய் 213.

43 குடியானுயர்ந்து மனத்தூய்மையில்லார் நட்பிற்கு யானை 213.

44 என்றும் விடாத நட்பிற்குக் கோட்டுப்பூ 215.

45 நட்டுப் பிறகு நட்பு முறிப்பாருக்குக் கயப்பூ 215.

46 கடையாயர் நட்பிற்குக் கமுகு 216.

47 இடையாயர் நட்பிற்குத் தெங்கு 216.

48 தலையாயர் நட்பிற்கு எண்ணரும்பெண்ணை 216.

49 மிகவும் நெருங்கி இருத்தற்கு நாய்க்காற் சிறுவிரல் 218.

50 தூரத்திலிருந்தும் உதவுவார்க்கு வயலை விளைவிக்கும் வாய்க்கால் 218.

51 வெறுப்ப வெறுப்பப்பிழைகளைச் செய்யினும் தாம் விரும்பிக் கொண்டாருடைய பிழைகளைப் பொறுத்தலுக்கு அடைக்குந் தோறும் உடைத்தோடுகின்ற நீர் 222.

52 இன்னுசெயினும் விடற்பாலரல்லாரை நட்பு விடாது போற்றுதற்கு இல்சிதைத்த தீயை நாள்தோறும் நாடுதல் 225.

53 இன்னுதவற்றைச் செய்யினும் நட்பினரைக் கைவிடப் படாமைக்குக் கண்ணைக் குத்திய கை 226.

54 சீரியார் நட்பிற்கு மாரி 232.

55 சீரிலார் நட்பிற்கு மாரி வறண்ட தன்மை 232.

56 நுண்ணிய அறிவினை உடையாரோடு கூடி நட்புறுதற்கு விண்ணுலகு 233.

57 நுண்ணூல் உணர்விலாரோடு கூடி நட்புறுதற்கு நரகம் 233.

58 மனப்பிணிப்பு இல்லாதாருடன் கொண்ட நட்பிற்கு வைக்கோலில் பற்றிய தீ 234.

59 மிக்க நீர்மையுடையாருடனே உறவுகொள்ளினும் நற்குண மில்லாதார் காரியங்கள் வேறுபட்டிருத்தலுக்கு ஒரு தடாகத்திலே தோன்றிவளர்ந்த குவளையும், ஆம்பலும் 236.

60 நயமுள்ளவர் உறவைவிட்டு புல்லறிவினையுடையாரோடு, நட்புப் பூணுதற்குப் பசுவின்நெய் வார்க்கும் பானையில் அது களைந்து வேப்பெண்ணெய் பெய்தல் 238.

61 வடிவிற்கமைந்தவனிடத்து ஒப்புரவில்லாமைக்குப் பருகற் கமைந்த பாலிலே நீரையூற்றல் 239.

62 அறிவுடையார் தீயினத்தைச் சேர்ந்து கெடுதற்கு நாகம் விரிபெண்டயோடு கூடிக் கெடுதல் 239.

63 தக்க அறிவுடையார் பகைவர் தளர்ந்துழி அவர்மேற் செல்லாமைக்குத் திங்கள் இளம்பிறையானகாலத்து வலிமை யினையுடைய நாகம் செல்லாமை 243.

64 இனம் தீதாயினும் அறிவுடையார் மனம் தீதாகுதலில்லை என்பதற்கு வேம்பின் இலையுள் கனிந்த வாழை 245.

65 கல்லாத ஒருவன் நல்லோர் அவையில் இருத்தலுக்கு நாயிருத்தல் 254.

66 கல்லாத ஒருவன் நல்லோர் அவையில் ஏதொன்று சொல்லு தற்கு நாய் குரைத்தல் 254.

67 கற்றறிந்தார் விரைந்து யாதொன்றும் சொல்லாதிருத்தலுக்கு ஒலியில்லாத பச்சோலை 256.

68 கல்லாதார் விரைந்தொன்றைச் சொல்லுதற்கு வற்றிய பனையோலை 256.

69 நன்றியறியா மனிதர்க்கு அறத்தினது வழியைச் சொல்லு தற்குப் பன்றிக்குக் கூழ் வார்க்கிற தோணியிலே தேமாங் கனியைப் பிழிதல் 257.

70 நன்மையை யறியாத மனிதர் செவியில் அறத்தின துவழியைச் சொல்லுதல் எருமைக்குக் குன்றின்மேலே புடைக்கின்ற தறி 257.

71 புண்ணியமில்லாதவனுக்கு அறிவு புகமாட்டாததற்குப் பாலால் கழுவி உலர்த்தப்பட்ட கரி 258.

72 இழிவான குணங்களையுடைய நெஞ்சினர்க்குப் பெரியோர் கூறும் தெளிவுடைய சொற்கள் எருமைக்கு மணமிகும் பூவினது தேனை நுகராது துர்க்கந்தங்களை விரும்பிச் செல்லும் ஈ 259.

73 செல்வத்தை உடையராயினும் கீழ்மக்களை அறிவுடையார் நட்புக்கொள்ளாமைக்குக் கள்ளிப்பூ 262.

74 அணித்தே செல்வத்தையுடையராயினும் அவரை நீங்கி தூரத்திலேயுள்ள உதவுவார்கண்ணே விருப்பமுறப் பெறுதற்குக் கடற்கரையிலே இருந்தாராயினும் உப்பில்லாக் கிணற்றின் நீரை உண்ணல் 263.

75 அறிவில்லாதார்க்கு வட்டும் வழுதுணையும் 264.

76 செந்நெல்லுக்குப் பொன் 269.

77 அறிவில்லாதார் செல்வம் பயனின்றிப் போதற்குச்செந்நெற் பயிர்வாடக் கடலில் பெய்கின்ற மேகம் 269.

78 உலோபிகளது செல்வம் அயலானால் நுகரப்படுதற்கு இல்லத்து உருவுடைக் கன்னியர் 274.

79 உலோபிகளது செல்வத்தினும் சான்றோரது வறுமையே தலைமையுடைத்து என்பதற்குக் கடலையடுத்திருந்தும் நீரற்ற கிணற்றில் ஊறும் நீரை யுண்ணல் 275.

80 இரவலர்க்கு பசுவினது கன்று 279.

81 ஈவார்க்குப் பசு 279.

82 கீழோரது ஈகைக்கு உறுப்பிடங்களிலே கருவிகளைவைத்துத் துன்புறுத்தக் கறக்கும் பசு 279.

83 பொருளில்லார்க்கு உறவினரில்லையாதற்குக் காந்தட்பூ மலராதகாலத்து அதனிடத்துச் செல்லாத வண்டினம் 283.

84 செல்வமுண்டாய காலத்து பலருண்டாதற்கு யாக்கை ஒழிந்த காலத்து திரண்டுவரும் காகங்கள் 284.

85 செல்வமற்றுத் திரிவார்க்கு வண்டு 284.

86 செல்வமில்லாதாரை உறவினர் தேடிச் செல்லாமைக்கு பூத்தொழிந்த கொம்பின்மேல் செல்லா வண்டினம் 290.

87 செல்வ வலியினல் கயவர் செய்யும் வரம்புகடந்த செய்கைக் குக் கொதிக்கும் மானமுடையார் மனத்துக்குக் காட்டிலே பற்றிப்படர்ந்து மிகுந்தெரியும் தீ 291.

88 செல்வமுடையாருடைய சிறுமையான பார்வை கண்டு கொதிக்கும் சான்றோர் மனத்துக்குக் கொல்லன் உலைக் களத்தில் ஊதியெழுப்புந்தீ 298.

89 சீரியோர் தமக்கு மானங்கெடுவதனல் உலகம் பெறுவ தாயினுமதனை வேண்டாமைக்கு இடப்பக்கம் விழுந்த மானை உண்ணாத வேங்கை 300.

90 பல்லிற்குச் சுரை வித்து 315.

91 நூல்களுக்குப் பரத்தையரது தோள் 317.

92 நூல்களின் பொருள்களுக்குப் பரத்தையரது உள்ளம் 317.

93 அறிவுடையார் சொல்லைப் புறக்கணிக்கும் புல்லறி வாளனுக்குப் பாற்கூழின் சுவையுணரா்த அகப்பை 321.

94 அறிவுடையார் கூறும் அறநெறியை மனத்தில் கொள்ளாத புல்லறிவாளர்க்குப் பாற்சோற்றின் நயமறியாத குணுங்கு நாய் 322.

95 உலக வாழ்வில் மகிழ்ந்திருக்கும் பேதையார்க்குத் தீயை மூட்டப்பட்ட உலையிலிடப்பட்ட ஆமை 331.

96 மனைவாழ்க்கையிலுள்ள காரியங்களைக் குறைவற முடித்து தன்மகாரியங்களைப் பின்செய்வாம் என்றிருப்பார்க்குக் கடலில் ஓசையடங்கியபின் கடலில் நீராடவிருப்பார் 332.

97 குலம், தவம் முதலியவற்ருன் நிறைந்து உலக வழக்கம் அறியாதார்க்கு நெய்யில்லாத பாற்சோறு 333.

98 உலோபிகளாயினும் செல்வமுடையாரைச் சுற்றி நீங்கா திருக்கும் வறியவர்க்கு நெய்யுள்ள பாத்திரத்தின் வெளியே சுற்ருநிற்கும் எறும்புகள் 336.

99 நல்லொழுக்கமில்லார் ஒருவரைச் சென்று நல்லொழுக்கத் தில் இசைவிப்போமென்று முயல்வது செயலுக்குக் கற்கிள்ளிக் கைவலி பெறுதல் 337.

100 கீழ்மகன், அறிவுடையார் தெளிந்த நூற்பொருளை எடுத்துச்சொல்லித் தெளிவித்தாலும், தன்மனம் விரும்பிய வாறே ஒழுகுதலுக்கு நொய்யரிசியை மிகுதியாக இடினும் குப்பை கிளறுதலை ஒழியாத கோழி 341.

101 கீழ்மகனைப் பெருமையுடையோனுகக்கொள்ளினும் அவனது செயல்கள் வேறுபடுதற்குப் பொற்கலத்து உண்பிப்பினும் பிறர் எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும் நாய் 345.

102 மிகுந்த செல்வத்தையுடையோராயினும் அவர் செய்யும் செயல்களால் கீழ்மகனுகக் காணப்படுதற்குப் பசும் பொன்னல் செய்யப்பட்டு அதன்மேல் மணியழுத்திய செருப்பு 347.

103 மிகுந்த செல்வத்தையுடையோராயினும் அவர் செய்யும் செயல்களால் கீழ்மகனுகக் காணப்படுமென்பதற்கு

இளமை தொடங்கியே புல்லைத்தின்பித்து நீர்பருகுவித்து வரினும் இரதத்தை இழுக்க அறியா எருமைகள் 350.

104 பெருநூல்களைக் கற்றாராயினும் கூரிய அறிவு சிறிது மில்லாதவர் ஆராய்ந்துதுணியும் பெற்றிஇலராவதற்கு நீரிலே வாழினும் தம்முடலில் வழுக்குதலாகிய அழுக்கை நீக்கிக்கொள்ள வலியற்ற தேரை 352.

105 பரத்தையர் தமது பெண்மைக்குரிய அலங்காரத்தைக் காட்டுதற்குப் புதுப்பெருக்கம் 354.

106 பெண்மைக்குரிய அலங்காரத்தைச் செய்தலில் தேர்ந்தார்க் குச் சேடியர் 354.

107 இனிய குணமுடையார்க்குதவாது தன்னை இடுக்கண் செய்வார்க்கே உதவும் கயவர்க்குத் தட்டாமல் இறங்காத உளி 355.

108 கீழ்மக்கள் செல்வமுள்ள காலத்திலும், நற்குடிப்பிறந்தார் வறியகாலத்தும் செய்யும் ஒப்புரவுகளைச் செய்யாமைக்கு வைரமடைந்த கொம்பையுடைய பன்றி வேழமாகாமை 358

109 மகனறிவு தந்தையறிவு என்பதற்குச் செந்நெல்லால் ஆய செழுமுளை 367.

110 கீழ் மேலாதற்குக் குடைக்கால் 368.

111 வேசியர் நட்புக்குப் புதுப்புனல் 370.

காமத்துப்பால்.

1 மகளிர்க்குக் கொய்தளிர் 373.

2 கண்ணுக்கு நீலமலர் 374.

3 பொதுமகளிர்க்கு மலங்கு 375.

4 என்றும் நீங்காதிருப்பதற்கு நூலொடு தொளைத்த மணியும், புணர்பிரியாவன்றிலும் 376.

5 பரத்தை மயக்கிப் பொருள் கொள்ளுதலுக்கு ஆமா 377.

6 பொருள் வறந்தகாலத்துப் பொதுமகளிர் காட்டும் அன்பிற்குச் சேமா 377.

7 பரத்தையருடைய வேறுபட்ட மனத்திற்கு ஆட்டின் கொம்பு 378.

8 பொதுமகளிர் பார்வைக்கு மான் 378.

9 கற்பிற்கு அயிராணி 381.

10 ஈகையாளன் கையிலுள்ள செல்வத்திற்கு மனத்தின்கண் நல்லறிவுடையான் கற்றுத் தேர்ந்த நூல் 386.

11 நாணமுடையளாகிய குலமகள் அடைந்தவழகுக்கு ஆண் மகன் கையிலுள்ள கூரிய வாள் 386.

12 தலைமகளுக்குத் துடியின் இடக்கண் 388.

13 பரத்தையர்க்குத் துடியின் வலக் கண் 388.

14 கணவரைப் பிரிந்த மகளிர் நிலைக்குச் சாப்பறை 392.

15 கண்ணுக்குக் கயல் 395.

16 மகளிரது வாய்க்குச் செவ்வாம்பல் 396.

17 கொங்கைக்கு கோங்கரும்பு 400.

உலகங்கள் :—

ஞாயிறு—தோற்றஞ்சால் ஞாயிறு 7; அவிர்கதிர் ஞாயிறு 89; திங்கள் 148, 151, 241, 243; மலைமிசை தோன்று மதியம் 21; வானூர்மதியம் 125; ஒண்கதிர் வான்மதியம் 176; அங்கண் விசும்பின் அகனிலா 151; இளம்பிறை 241; வானத்து மேலாடுமீன் 113; நிரயம் 233; எரிவாய் நரகம் 58; கும்பி 81; சுவர்க்கம் 243; உம்பர் உறைவார்பதி 137; விண்ணுலகு 233; வயங்கொளி மண்டிலம் 22.

உலோக வகை :—

பொன் 162, 225, 307; மைதீர் பசும்பொன் 347; இரும்பு 122; நாரு தகடு 266.

உறவுப் பெயர்கள் :—

கேள் 29; கிளைகள் 30; கிளைஞர் 113, 206; சுற்றத்தார் 25; துன்னருங்கேளிர் 9, 201; எமர் 205; தமர் 77, 229, 87, 207, 283, 290; தாயத்தவர் 278.

தந்தை 197, 237, 253, 367; தாய் 15, 20, 101, 201, 237; சான்றாள் 316; புதல்வன் 197; பிள்ளை 20; மகன் 201, 367; மைத்துனர் 340; குழவி 11.

ஊர்திகள் :—

கலம் 250; ஆழ்கலம் 12; தோணி 136; நாவாய் 224; வையம் (இரதம்) 350; சகடம் 2.

ஊர்வன :—

எறும்பு 336; சிதல் 147, 197; நாகம் 66, 164, 239; பாம்பு 87, 126, 148, 200, 375; பையரவு 400; அரா 243; விரிபெடை 239.

ஒலிக் குறிப்பு :—

ஒல் 77; கல் 25; கலகல 140, 255; தழீஇந்தழீஇம் 6; தொண்டொண்டொடு 25.

காலப் பெயர்கள் :—

ஒரு நாள் 54; பல நாள் 54, 214; சில நாள் 214; சாநாள் 92; இழைத்தநாள் 6; உள்நாள் 324; வாழ் நாள் 4, 32, 39; நாள் 6, 7, 135; நெடுங்காலம் 68; கெடுங்காலம் 68; இறுகாலம் 110; சிலபகல் 204; அழல் மண்டுபோழ்து 202; மம்மர்கொள் மாலை 393; முட்டுற்றபோழ்து 240; அபராணப் போழ்து 207; மாலைப்பொழுது 397; விழித்திமைக்கும் மாத்திரை 302; அறியாப்பருவம் 171; நிச்சம் 81; எக்காலும் 83; இரவு—எல் 8; வைகல் 7, 39; ஊழி 130.

சிறு குறிப்புகள் :—

(1) கூற்றுவன் பாசக்கயிற்றுற் பிடித்துக்கொண்டு செல்வன் 5; (2) இடிநீற்றுற் நாகம் படமொடுங்கி அடங்கும் 66; (3) இம்மை அலியாகி யாடி உண்பதற்கு முன்னைப்பிறர் மனைவியை விரும்பிச் சேர்ந்த பாவம் 85; (4) விரிபெடையோடு கூடிய நாகத்திற்கு ஆயுள்கெடும் 239; (5) நீரினும் நுண்ணிது நெய்; நெய்யினும் புகை நுட்பம் 282; (6) வான வில்லின் தோற்றமு மறைவும் அறிதலரிது க. வா. (7) பல பசுக்களிடையில் கன்றைவிடினும் அதன் தாயைக் கண்டு கொள்ளும் 101; (8) நாகம் இடிக்கு அஞ்சும் 104; (9) புலி நேரையையும் தின்னும் 193; (10) வௌவால்கள் விளாமரத்தைச் சென்றடையாது 261; (11) காட்டுப்பசுவைக்கொன்ற வேங்கை அது இடது பக்கம் வீழின் உண்ணாது போய்விடும் 300; (12) விலாங்குமீன் தன்னைப் பிடிக்கவரும் பாம்பிற்கு ஒருபுறத்தைக் காட்டி மற்றொருபுறத்தை மீனுக்குக்காட்டும் 375; (13) அன்றில் இணைபிரியாது 376.

சூளுரை :—

(1) மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க 230; (2) நட்டான் கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க 240.

தெய்வப் பெயர்கள் :—

காவிலங்தோயாக் கடவுள் க. வா; அமரர் 373; தெய்வம் 304, 309; கண்மூன்றுடையான் 400; இந்திரன் 346; செங்கண்மால் 373; கூற்று 105, 188; கோடில்தீகூற்று 4; ஆட்பார்த்துழலும் அருளில் கூற்று 20; கூற்றம் 5, 6, 7, 35, 36, 120, 172, 330, 331, 363; நாவின் கிழத்தி 252; பூவின் கிழத்தி 252; அயிராணி 381.

தொகைச் சொற்கள் :—

அறுசுவை 1; அடுக்கிய மூவுலகம் 100; இருதலை 114; இருமை 129; ஐவாய் வேட்கை 59; ஒன்பதுவாய்ப் புலன் 47; முக்குற்றம் 190.

நீர் நிலைகள் :—

நீர் 68, 90, 177, 221, 239; இன்னீர் 244; உரவு நீர் 175; அங்கண நீர் 175; கழுநீர் 217; ஒரு நீர் (தடாகம்) 236; நீர்த்தம் 175; உறுபுனல் 185; செம்புனல் 222; புதுப்புனல் 370; ஆறு 136, 185; அகல்யாறு 150; கேணி 184; வல்லூற்று உவரில் கிணறு 263; ஊற்று 150, 184; அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல் 275; குளம் 191; தேம்படு தெண்கயம் 375; வாய்க்கால் 218; செழும்பெரும் பொய்கை 352; நீர்த்தருவி 290; ஒல்லென் அருவி 77; ஓங்கருவி 79; ஆர்க்குமருவி 161; கறங்கருவி 228, 285; பொங்கருவி 231; வாலருவி 232; பாயருவி 307; பிறங்கருவி 343; இலங்கருவி 344; கடல் 244, 269; எறிநீர்ப்பெருங்கடல் 275; பெருங்கடல் 332; பொருகடல் 97; மலிகடல் 98; அலை கடல் 106; நீள்கடல் 108; கனைகடல் 138, 349; நளிகடல்

166, 242; அறைகடல் 230; எறிகடல் 245; படுகடல் 246; ஒலிகடல் 249; புணர்கடல் 264; குண்டுநீர் 94; ஈண்டு நீர் 109; வீங்குநீர் 117; உவரி 244; நுரை 221.

நீர் வாழ்வன :—

அலவன் 123; அன்றில் 376; அன்னம் 106; ஆமை 331; 114–உரை; கயல் 44, 97, 395; குருகு 135; தேரை 193, 352; மலங்கு 375; மீன் 375.

நூல்கள் :—

அறிவு நூல் 140; உலக நூல் 140; மிக்க கனம் பொதிந்த நூல் 341; நூல் 136, 319, 320, 352, 386; எழுத்தோலை 253; சத்தம் 52; சோதிடம் 52; நுண்ணூல் 233.

நோய்கள் :—

நோய் 52; துக்கத் தொழுநோய் 125; எவ்வநோய் 124; படர்நோய் 168; அருநோய் 219; கால்நோய் 372; பிணி 55, 92; ஈன்றக்கால் நோவு 201; வயா 201.

பறவை வகை :—

புள் 30, 121, 212; கழுகு 48; காக்கை 41, 284, 400; கிளி 283; கோழி 341; குறும்பூழ் (காடை) 122; சிவல் (கவுதாரி) 122; சிரல் 395; வாவல் 261; வண்டு 73, 283, 284, 290; சுரும்பு 122, 223; பெடை 48; சேவல் 48; ஈ 41, 218, 259, 389; தேனீ 10.

பாத்திர வகை :—

கலம் 250, 287; பெய்கலன் 238; பொற்கலம் 206, 345; குடம் 382; தவசி கடிஞை 99.

பிற்பொருள்கள் :—

அடுப்பு 94; அரக்கு 396; இருந்தை (கரி) 258; இழை விளக்கு 361; உலை 114, 331, 298; எருவை (கொறுக்கைத் தண்டு) 351; ஐந்தை (கடுகு) 329; கடு (விஷம்) 374; கதவு 91, 271; புதவு 99; கந்து 192; தறி 257; கப்பி (தானியக் கப்பி) 341; கருவி 398; கவறு 153; குஞ்சி 131; குடைக் கால் 368; குடை, குப்பை 341; குற்றி 178; கோல் 11, 13, 41, 152, 253, 258; சந்தனம் 234; வெறிகமழ் சந்தனம் 180; சாந்தம் 397; சாந்து 126; படுசாந்து 48; தண் சாந்து 389; செக்கு 374; செப்பு 126; செருப்பு 347; சேறு 105, 231; தக்கோலம் 43; தண்டு 14; தூண் 64; தோள்கோப்பு 20, 328; நார் 26, 153; நானம் 294; பகடு 2; பஞ்சி 396; பத்தர் 257; பயின் 267; பருமம் 149; பழங் கூரை 231; பை 26; மஞ்சள் 131; மாலை 397; அரும்பு அவிழ்தார் 390; மூழை 321; வட்டு 264; வலை 331; விளக்கு 51, 189, 371.

போர்க் கருவிகள் :—

அம்பு 89, 152; ஒள் வாள் 129; வாள் 362, 358; அயில்வாள் 386; வில் 297; வேல் 213, 297.

மக்கட் பெயர்கள் :—

அரசர் 134; கோ 81; மன்னர் 167; தவசி 99; உறுவர் 104; துறவோர் 273; உரவோர் 57, 88; தோணி யியக்குவான் 136; அலி 85; புலவர் 255, 318, 321; கொலைஞர் 331; ஆமை கொல்வார் 331; செக்கூர்ந்து கொண்டார் 374; கம்மஞ்செய் மாக்கள் 398; பாகன் 213; கொல்லன் 298; வேன்மகன் 16; கணக்காயர் 314; ஓலைக் கணக்கர் 397; சேனைத்தலைவர் 3; குறவன் 356; உழவன் 356; உழவர் 178; பெருமுத்தரையர் 200, 296; பாங்கனார் 400; குறுங்கர் 322; பெண்ணவாய் ஆணிழந்த பேடி 251; வாளாடு

கூத்தியர் 191; முறிபுரை மேனியர் 317; தொழுத்தை 326; சில்லை (வேசை) 377; சேடியர் 354; புடைப்பெண்டிர் 368; வேசியர் 371.

இவையன்றியும் நல்லார், நன்மக்கள், உணர்வுடையார், மாண்டார், தக்கார், தலையாயர், ஆன்றவிந்தார், சான்றோர், சான்றவர், விழுமியோர், விழுமியார், குடிப்பிறந்தார், மேன் மக்கள், பெரியார், தெரிவுடையார், பண்புடையார், புரை தீர்ந்தார், பெருமையுடையார், தொல்புகழாளர், தொன்மை யுடையார், வடித்த நூலார், சீரியார், மிகைமக்கள், ஒண்மை யுடையார், வடுவறுகாட்சியார், நயமுணர்வார், நுண்ணுணர் வினர், நயவார், நயவர், உடையார், ஈவார், கொடுத்தார், செல்வர், பல்லார், தென்னாட்டவர், குணனுடைமாந்தர், கழுமியார், பெருநீரார், கழுமியார், சொன்னளர், தாளாளர், எனவும்,

நலமில் அறிவினவர், கல்லார், பேடிலார், கீழ், கீழ்மக்கள், புன்மக்கள், உணர்விலார், திண்ணறிவில்லாதார், இரவலர், காரறிவாளர், பேதை, மூடர், இடுக்குடை உள்ளத்தான், வறியர், புல்லறிவாளர், வெள்ளறிவினர், உணராதார், கண்ணில் புன்மாக்கள், பித்தர், ஏழையார், கயவர், கயம், புல்லறிவினர், சிற்றறிவினர், கல்லாதார், சிறியார், நல்கூர்ந்தார், சிறியவர், கடையாயர், சீரிலார், பந்தமிலாளர், நல்கூர்ந்தமாக்கள், நேரல்லார் எனவும்,

ஆண் மகன், வரைமார்பன், மக்கள், நட்டார், ஏதிலான், மாற்றார், ஒன்னார், செற்றார், ஒல்லார், நள்ளாதார், மேவாதார், பகைவர், மகிழ்ந்தார், நட்பினர், மூங்கை, செவிடன், குருடன், எனவும்,

இல்லாள், மனையாள், மகளிர், மெல்லியர், காதன்மனையாள், ஏதின் மனையாள், நல்லார், உருவுடைக்கன்னியர், ஈர்ங் கோதையாள், பெருந்தோளி, காதலார், கொய்தளிரன்னர், அணிநீலக்கண்ணர், ஒண்ணுதலார், அசின்மொழியார், பூங்குழையார், மடமொழிமாதர், நறுநுதலாள், பூம்பாவை, எனவும் மக்களில் பல்வகுப்பினரும் குறிப்பிடப்படுகின்றனர்.

மர முதலியன :—

பயன்மரம் 17; நிழல் மரம் 202; குளிர்மரம் 167; பழுமரம் 202; மரம் 30; ஆல்மரம் 197; எற்றுபனை 96; படுபனை 96; எண்ணரும்பெண்ணை 216; கமுகு 216; தெங்கு 216, 242; புன்னை 111; பனை 66; கோங்கு 223; விளவு 261; கரும்பு 34, 35, 138, 156, 199 முதலியனவும்,

காஞ்சிரங்காய் 217; காஞ்சிரங்காழ் 242; களங்கனி 107; விளங்காய் 107; புளிவிளங்காய் 328; பேய்ச்சுரையின்காய் 116; தேமா 257; வேம்பு 112; வாழை 245; வழுதுணை 264; சுரைவித்து 315; ஆலம்வித்து 38; பனநுங்கு 44; மரை இலை 360; வேம்பின் இலை 245; முதலியனவும்,

கனி 17, 19; காய் 19; வன்காய் 203; கொம்பு 203; கிளைகள் 30; புல் 29, 171, 178; கொடிப்புல் 141; கொய்புல் 350; தளிர் 355; கொய்தளிர் 373; குழை 167; புல்லிதழ் 221; செழுமுளை 367; வற்றிய ஓலை, பச்சோலை 256; கண்டல் 194; முறியார்நறுங்கண்ணி 16; கோது 34, 105; துரும்பு 35; வீழ் 197; வை 234; நெற்று 237; முதலியனவும் குறிக்கப் படுகின்றன.

மலை :—

மலை 28, 244, 356; குன்று 257, 90; கல் 66, 334; அறைப்பெருங்கல் 359; பால் 396; கல்லோங்குயர் வரை 283; உயர்வரை 77, 223; நல்வரை 154, நீள்வரை 226; ஈர்ங் குன்றம் 113; பூங்குன்றம் 128, 212; கறைக்குன்றம் 231; நெடுங்குன்றம் 319; விறன்மலை 369; அணிமலை 161; செங்கோடு 372.

ப.ற்றும் தீவளி 19, 179, படுமழை மொக்குள் 27; மஞ்சு 28; கருங்கொண்மூ 8; மின் 8; அழல் 89; உரு கெழுசெந்தீ 90; மழை 97, 361; மாரி 103, 232; நெருப்

பழல் 124; வெயில்; 171 தீ 150, 224, 225, 234, 291, 298, 310, 331; உறைப்பு 154; ஒண்சுடர் 189; வானிடுவில் க. வா. முதலியனவும் குறிக்கப்படுகின்றன.

வழக்கங்கள் :—

(1) நிலஞ்சென்னியுற கடவுளை வணங்கல் க. வா. 2) செல்வர் மறுசிகை நீக்கி யுண்ணல் 1; (3) இல்லாள் ஊட்டுதல் 1; (4) பிணத்தை முக்காலைக் கொட்டினுள் மூடித் தீக்கொண்டெழுதல் 24; (5) பிணத்தை நார்தொடுத்து ஈர்க்கல் 26; (6) பிணத்தை நன்ருய்ந்து அடக்கல் 26; (7) பிணத்தைப் பார்க்குழிப் பெய்யல் 26; (8) புரண்டுரம் விழைந்தார்க்குக்கால் குறைத்தல்; (9) ஆமையைக் கொதிக்கும் உலையிலிட்டுக் கொல்லுதல் 114, 331; (10) ஆடுகளைப் பலியிடு வோர் கையிலே தளிராற் சேர்ந்த மாலையைப் பிடித்துக் கொண்டிருப்பர் 16; (11) காதலனைப் பிரிந்த மகளிர் தங் காதலர் பிரிந்த நாள்களை தங்கள் மெல்லிய விரல்களால் எண்ணுவர் 394.

விலங்கு வகை :—

யானை 3, 198, 213; களிறு 192; கடமா 300; வேழம் 358; அரிமா 141, 152, 198; வேங்கை 180, 300, 399; புலி 193, 206; பரிமா 149; குதிரை 398; புல்வாய் 149; மான் 378; கலைக்கணம் 399; தகர் 376. 378; மறி 16; நாய் 70, 213, 254, 322, 345; மந்தி 237; பன்றி 257, 358; முயல் 176; ஆ 101, 108; ஆமா 319, 377; குழக்கன்று 101; ஆவின்கன்று 115, 279; காளை 398; சேமா 377; குண்டை 350; விலங்கு 76, 121; கருநரை (வெள்ளெருது) 186.

ஐம்பத்து மூன்று செய்யுட்களில் ஆடூஉ முன்னிலைகளும், பதின்மூன்று செய்யுட்களில் மகடூஉ முன்னிலைகளும் வந்துள்ளன அவற்றுள்,

ஆடூஉ முன்னிலை :—

வரை நாட, மலைநாட, குன்றநாட, சாரல் நாட என விளித்தவை :—

1 வான்தோய் மலைநாட—நாலடி 10.

2 கோதை அருவிக் குளிர் வரை நன்னாட 71.

3 ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட 77.

4 ஓங்கருவி நாட 79.

5 ஈர்ங்குன்ற நாட 113.

6 சாரல் கனமணி நின்றிமைக்கு நாட 127.

7 புனல் செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட 128.

8 வான்தோயும் மைதவழ் வெற்ப 142.

9 நல்வரை நாட 154.

10 ஆர்க்கு மருவி அணிமலை நன்னாட 161.

11 பெருவரை நாட 186.

12 அடுக்கல் மலைநாட 203.

13 பொற்கேழ் புனல் ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்றநாட 212.

14 நிறக்கோங்கு உருவ வண்டார்க்கும் உயர்வரை நாட 223.

15 துன்னருஞ்சீர் விண்குத்து நீள்வரை வெற்ப 226.

16 கறங்கருவி நாட 228.

17 கறைக்குன்றம் பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட 231.

18 வாலருவி நாட 232.

19 சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட 234.

20 முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை நெற்றுக்கண் டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக் குற்றிப்பறிக்கும் மலைநாட 237.

21 தேம்படு நல்வரை நாட 238.

22 கறங்கருவி கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட 285.

23 நீர்த்தருவி தாழாவுயர் சிறப்பின் தண்குன்ற நன்னாட 290

24 குன்றின் பரப்பெல்லாம் பொன்னொழுகும் பாயருவிநாட. 306.

25 பழிப்பில் நிரைஆமா சேர்க்கும் நெடுங்குன்றநாட 319.

26 பிறங்கருவி நன்னாட 343.

27 இலங்கருவி நன்னாட 344.

28 விறன்மலை நன்னாட 348.

29 கணமலை நன்னாட 353.

30 மணி வரன்றி வீழும் அருவி விறல்மலை—நன்னாட 369.

சேர்ப்ப என விளித்தவை:—

1 போதெலாம் மாதர் வண்டார்க்கு மலிகடல் தண்சேர்ப்ப 73.

2 கயற்புலால் புன்னைகடியும் பொருகடல் தண்சேர்ப்ப 97.

3 மலிகடல் தண்சேர்ப்ப 98.

4 அடப்பம்பூ அன்னங்கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப 106

5 நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப 108.

6 புன்னை விறற்பூங்கமழ் கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப 117.

7 கனைகடல் தண்சேர்ப்ப 138.

8 கனமணி முத்தோடு இமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப 146.

9 நளிகடற் றண்சேர்ப்ப 166.

10 பெரிய உலவா இருங்கழிச் சேர்ப்ப 168.

11 கண்டல் திரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப 194.

12 மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம் கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப 224.

13 இலங்குநீர்த் தண்சேர்ப்ப 227.

14 நளிகடல் தண்சேர்ப்ப 241.

15 எறிகடல் தண்சேர்ப்ப 244.

16 பராஅரைப் புன்னை படுகடல் தண்சேர்ப்ப 246.

17 நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப 337.

18 கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப 349.

19 வயங்கோத நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப 391.

கானக நாட என விளித்தவை :—

1 கானக நாட 76.

2 கொல்லைக் கலாஅல் கிளிகடியும் கானக நாட 283.

ஊர என விளித்தவை :—

1 அந்நெல் வயல்நிறையக் காய்க்கும் வளவயலூர் 367.

ஐய என விளித்தது :—

1 ஐய கேள் 350.

2 அருமரபின் ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப 249.

மகடூஉ முன்னிலை :—

1 திரைதொடீஇ 111.

2 தடங்கண்ணாய் 116.

3 நறுமலர்த் தண்கோதாய் 209.

4 பொன்னன்னுய் 225.

5 வேல்நெடுங் கண்ணுய் 265.

6 நாருத் தக்கடேபோற் நன்மலர்மேற் பொற்பாவாய் 226.

7 வேற்கண்ணுய் 267.

8 கூர்மையின் முல்லை அலைக்கும் எயிற்ருய் 289.

9 செம்மையி ஞனங் கமழுங் கதுப்பினுய் 294.

10 புடைபரந்த விற்புருவ வேனெடுங் கண்ணுய் 297.

11 வாட் கண்ணுய் 358.

12 சுடர்த்தொடீஇ 398.

13 பொன்னீன்ற கோங்கரும் பன்ன முலையாய் 400.

உ

இந்நூலில் எடுத்தாண்ட உரை ஆசிரியர்கள்.

1. அடியார்க்கு நல்லார்.
2. அரும்பத வுரைஆசிரியர்.
3. இளம்பூரணர்.
4. கல்லாடர்.
5. காளிங்கர்.
6. குணசாகரர்.
7. சங்கரநமச்சிவாயப் புலவர்.
8. சாமிநாத தேசிகர்.
9. சிவஞான முனிவர்.
10. குருகூர்—சுப்பிரமணிய தீக்ஷிதர்.
11. சேனாவரையர்.
12. சொக்கப்ப நாவலர்.
13. தண்டி அலங்கார உரை ஆசிரியர்.
14. நச்சினார்க்கினியர்,
15. பரிப்பெருமாள்.

16. பரிமேலழகர்.

17. பெருங்கதை உரைஆசிரியர்.

18. பெருந்தேவனார்.

19. பேராசிரியர்.

20. மணக்குடவர்.

21. மயிலைநாதர்.

22. மயிலேறும்பெருமாள்பிள்ளை.

23. மாறனலங்கார உரைஆசிரியர்.

24. முத்துவீரியம் உரைஆசிரியர்.

25. யாப்பருங்கலவிருத்தி உரைஆசிரியர்.

26. வைத்தியநாத தேசிகர் (இலக்கண விளக்கம்)